பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு

(THE DEVELOPMENT OF ECONOMIC DOCTRINE)

ஆசிரியர்

அலெக்சாண்டர் கிர், எம். ஏ.

தமிழாக்கம்

க. முத்தையன், எம். ஏ.

பொருளாதார விரிவுரையாளர்,

ஸ்ரீ தியாகராயர் கல்லூரி,

சென்னை-31.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு • அரசாங்கம்

A 331 403910
2 Volumes A

...ருளாதாரக் கோட்பாடு ...ளர்ந்த வரலாறு

ஆசிரியர்
அலெக்ஸாண்டர் க்ரே
தமிழாக்கம்
க.முத்தையன்

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ் நாடு - அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வெளியீடு—34

பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு

(The Development of Economic Doctrine)

ஆசிரியர்
அலெக்சாண்டர் கிரே, எம். ஏ.,
அரசியல் பொருளாதாரப் பேராசிரியர்,
எடின்பர்க் பல்கலைக்கழகம்.

தமிழாக்கம்
க. முத்தையன், எம். ஏ.,
பொருளாதார விரிவுரையாளர்,
சர் தியாகராயர் கல்லூரி,
சென்னை-21.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—February, 1964.

B. T. P. No. 34.

The Development of Economic Doctrine

Alexander Gray

Translation

K. Muthaiyan

© Bureau of Tamil Publications

Price Rs. 7.

This translation of
The Development of Economic Doctrine
by Alexander Gray
is Published by arrangement with
Messers Longmans Green & Co. Ltd.,
London.

Printed by
Shanmugam press (P) Ltd.,
Madras-1.

அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பீ. ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்லமெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன் வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத்திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு என்ற இந்நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 84-வது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 69 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளையெல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ் வன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லையாதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்.

முன்னுரை

நூல் எழுதும் ஒருவர் தம் நூல்மூலம் இல்லாத எந்த ஒன்றினை இட்டு நிரப்புகிறார் என்பதை முதற்கண் எடுத்து விளக்க வேண்டும். புத்தக உலகில் உள்ள தேவைக்கும் அதைப் பூர்த்திசெய்ய வெளியிடப்படும் புத்தகங்களின் அளவுக்கும் நேர் மாறுன வீதம் நெருக்கிக்கொண்டிருக்கும் நிலையை மேலும் அதிக ரிப்பவர் எவரும் தகுந்த முறையில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்பது நடைமுறையும் பழக்கமும் ஆம். அதுவும் இதுபோன்ற பாடப்புத்தகம் ஒன்றினை எழுதும் எவரும் மன்னிப்புக் கேட்க மறத்தல் ஆகாது.

இப்புத்தகத்தின் நோக்கம் எளிமையானதே. இதன் தலைப்பிலேயே முதல்நோக்கு என்று குறித்துள்ளமையின் இந் நூலில் எதையும் ஓரளவே விளக்கமுடியும் என்பதை எவரும் புரிந்துகொள்வர். அறியாமை நிலையினின்று நீங்குவதும், பின்னர் அறியவேண்டியவை அனைத்தையும் அறியத் தூண்டு வதும், இதுகூடத் தெரியவில்லையே என்று ஏங்காமல் இருக்கச் செய்வதும் இந்நூல் எழுதப்படுவதன் நோக்கமாகும்.

பொருளாதாரத் துறையில் கசடறக் கற்றிடும் ஆவலோடு முதலடி எடுத்துவைத்து நுழைபவர்கள் தங்கள் பாடப் புத்தகங்க ளுடன் இதையும் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகவே இந்நூல் இயற்றப்பெற்றுள்ளது. உலகத்தார் ஏற்றுக்கொண்ட நடைமுறைக் கொள்கைகளுடன் அவற்றின் பின்னணியாக உள்ள எண்ணங்களையும் கருத்து வளர்ச்சியையும் இணைத்துக் கூறுவோமானால், அவற்றின் சுவையும், பயனும், தெளிவும் மிகும் என்பது என் அனுபவம். பொருளாதாரத்தை அறிய வணிக வாதிகள் (Mercantalists), இயற்கை வாதிகள் (Physiocrats) ஸ்மித், மால்தஸ், லிஸ்ட் போன்றோரின் கருத்துகளை நேரமும் நினைப்பும் வாய்க்கும்போதெல்லாம் பொருளாதார முதலாண்டு மாணவன் கற்றிடவேண்டும் என்பது உண்மையானால், பொருளா தாரக் கொள்கை வளர்ச்சி குறித்துத் தான் அறிந்துகொள்ள விரும்புகின்றவற்றை விளக்கும் புத்தகம் ஒன்றினை எப்போதும் தன்னுடனேயே வைத்திருப்பது அம்மாணவனுக்கு நலம் பயக்கும். இதுவே நான் இட்டு நிரப்பும் முறை. எத்தனையோ

பேர் எவ்வளவோ புத்தகங்கள் எழுதியுள்ளனர் என்றாலும், இத்தகைய புத்தகம் இதுவரை வெளிவராததே நான் இப் புத்தகத்தை எழுத முன்வந்ததற்குரிய காரணம்.

பொருளாதாரக் கொள்கை வரலாற்றை விளக்கும் எவ் வளவோ நூல்கள் எத்தனையோ விதமாக வெளிவந்துவிட்டன. இவற்றிலே பொருளாதாரக் கொள்கைகள் விரிவாக அலசி ஆராயப்பட்டிருக்கும் நூல்கள் சிறப்பு வகுப்பில் படிக்கும் மாணவ னுக்கே மிக ஏற்றவை. புதிதாகப் பொருளாதாரத் துறையில் காலடி எடுத்துவைக்கும் மாணவனுக்கு இந்த நூல்களால் அதிகப் பயன் விளையாது. இவற்றை அவன் படிக்க ஆரம் பித்தால் பொருளாதாரக் காட்டில் கண்ணைக் கட்டிவிட்டது போலிருக்கும். எதுவும் சரியாகப் புரியாத நிலையில் செய்வ தறியாது மயங்கி நிற்பான். எல்லாவற்றையும்பற்றி ஏதாவது அவற்றில் சொல்லியிருந்தால் எதைக் கொள்வது, எதைத் தள்ளுவது என்று அறியாமல் ஆரம்ப மாணவன் திகைத்து நிற்பான். எனவே, பொருளாதார வல்லுநர்கள் அனைவரையும் பற்றி விரிவாக ஆராயாமல் பொருளாதாரக் கொள்கைகளின் பொதுக் கருத்துகள் யாவை, யார் யார் தலைசிறந்தவர்கள், அவர்கள் கூறுவது என்ன என்று மட்டும் பார்த்தோமானால் அவற்றை மட்டும் எழுதி வைப்பது ஆரம்ப மாணவனுக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கும். விரிவான துறையில் பொதுப்படப் புரிந்துகொள்வதே அந்த மாணவனுக்கு நல்லது.

எனவே, நான் இப்புத்தகத்தை ஆரம்ப மாணவனுக்கென்றே எழுதியுள்ளேன். ஓர் எழுத்தாளர் தாம் கொண்ட கொள்கைகள் யாவை என்பதைப் புரியும் வகையில் எழுத இடம் கிடைத்தா லொழிய, அவற்றைப்பற்றி இதில் குறிப்பீடு எதுவும் இருக்காது. இந்த முறையை நான் வேண்டுமென்றே பின்பற்றியுள்ளேன். என்வே, தேர்ந்தெடுத்த சில எழுத்தாளர்களை மட்டுமே இந்த நூலில் குறிப்பிட்டுள்ளேன். முக்கியமான வர்கள் சிலரை நான் வேண்டுமென்றே குறிப்பிடாமல் விட்டுள்ளேன். ஒவ்வொரு காலத்தையும் எடுத்துக்கொண்டு, அக்காலத்துத் தலைசிறந்த எழுத்தாளர்களை மட்டுமே ஆராய்ந்துள்ளேன். இடைக் காலத்தை ஆராயும்போது அர்ச். தாமஸ்அக்வினஸ் பற்றிய ஆராய்ச்சியோடு மட்டும் நிறுத்திக்கொள்கிறேன். அவ்வாறே இயற்கை வாதிகளை ஆராயும்போது துர்கோவைப்பற்றிய சிறு குறிப்பீடுதவிர, குவெஸ்னே கூறும் கருத்துகளுக்கே பெரிதும் முக்கியத்துவம் அளித்துள்ளேன். அவ்வாறே பிந்திய காலத்தை எடுத்துக்கொண்டாலும் ஆரம்ப மாணவனுக்கு அறிமுகம் ஆகக்கூடிய எழுத்தாளர்களை மட்டுமே நான் கவனித்துள்ளேன்.

இவ்வாறு செய்வதால் எனக்கு மகிழ்ச்சியில்லை. மன வருத்தத்துடன்தான் இதைச் செய்துள்ளேன். என்ருலும், எவ்வித உணர்வுக்கும் ஆட்படாமல் மக்குல்லக்கையும் (McCulloch) மூத்த மில்லையும் (Mill) அசட்டை செய்துள்ளேன். ஜெர்மானியப் பொருளாதார ஆசிரியர்களைப்பற்றிக் குறிப்பிடாதது குறித்து நான் மன வருத்தம் கொள்ளவில்லை. 'முறை' பற்றிய பழைய விவாதம் ஏனை இப்போது எடுபடவில்லை. அது இப்போது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை. பழைய தலைமுறையினருக்கு அது முக்கியமானதாக இருந்திருக்கலாம்; இப்போது அதன் அவசியம் குறைந்துபோய்விட்டதால், அச் சர்ச்சையில் ஈடுபட்டவர்களை இப்போது குறிப்பிடவேண்டியதில்லை. ஆனல், கான்டிலானை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென நான் பெரிதும் விரும்பினேன். அந்த ஆசை இதில் நிறைவேறவில்லை. இதன் அடுத்த் பதிப்பு வெளிவரும் போது அதில் அவர் கட்டாயம் இடம் பெறுவார். சிறந்த தேச பக்தன் என்ற முறையில், நான் ஜான்லாவை இதில் சேர்த்துக் கொள்ள முயன்றேன். பொருளாதார வல்லுநர் என்ற முறையில் அவருக்கு வெளிநாடுகளில் உள்ள பெயர் உள்நாட்டில் இல்லை. அவருடைய சொந்த நாட்டில் அவர் நிதித்துறையில் வல்லடி வம்பராகவே கருதப்படுகிறர். இவ்வாறே கூர்னேயை இதில் சேர்க்க இடம் கிடைத்திருந்தால் நான் மகிழ்ந்திருப்பேன். இவரைப் பொருளாதாரக் கணிதத்தின் தந்தையென்றே கூறலாம். ஆனல், உடையக்கூடிய எந்த மரக்கலத்துக்கும் சுமை வரம்பு ஒன்று இருப்பதைப்போலவே, அறிமுகம் செய்துவைக்கும் பொருளாதாரப் புத்தகத்தில் எழுத்தாளர்களைச் சேர்ப்பதற்கும் ஒரு வரையறை இருக்கிறது. இத்துறையின் எல்லா எழுத்தாளர்களையும் இதில் சேர்த்துவிட முடியாது. எனவே, இவர்களை எல்லாம் சேர்த்தால் பெருங்கப்பல் என்ற இப்புத்தகம் எங்குப் பாரம் தாங்காது மூழ்கி மறைந்துவிடுமோ என்ற பயத்தால், மதிப்புமிக்க வேலிகள் போன்ற இந்த எழுத்தாளர்களையெல்லாம் இதில் சேர்க்காது கரையிலேயே விட்டுவைத்துள்ளேன். சேர்த்துள்ளவர்களை முழுதும் விளக்கவேண்டும் என்றே பலரைச் சேர்க்காது விட்டிருக்கும் கொள்கையைப்பற்றி நான் பெருமைப்படுகிறேன். பொருளாதாரக் கொள்கை வரலாற்றை விளக்க முற்படுவதாகக் கூறிக்கொள்ளும் வேறெந்தப் புத்தகத்திலும் இவ்வளவு சிறந்த எழுத்தாளர்கள் இந்த அளவு சேர்க்கப்படாமல் விடப்பட்டிருக்க மாட்டார்கள் என்பதைப் பற்றியும் நான் மகிழ்கின்றேன்.

சென்ற தலைமுறைகளில் இருந்ததைவிட இத் தலைமுறையில் ஆங்கிலம் வழங்கும் நாடுகளில் பொருளாதாரக் கொள்கை

வரலாற்றினைப் படிப்பதற்கு ஆர்வம் மிகுந்திருக்கக் காண்கிறேன். புகழத்தக்க போக்கு என நான் கருதுவதை மேலும் ஆதரிப்பதற்கு இச்சிறு நூல் பயன்படுமென நான் நினைக்கிறேன். ஹேனே, கைடு, ரிஸ்ட் போன்றோர் விரிவாக எழுதியுள்ள பொருளாதார நூல்களைப் படிப்பதற்கு இச்சிறு நூல் சாதனமாகப் பயன்படுமெனவும் நான் நம்புகிறேன்.

மரிஷல் கல்லூரி,
அபர்டீன்
மார்ச், 1931

அலெக்சாண்டர் கிரே

தமிழாக்கியோன் முன்னுரை

பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாற்றைத் திட்பமுடையதாகவும், நுட்பம் நிறைந்ததாகவும் எழுதிய முதல் நூல் ஆசிரியர், உயர் திரு. அலெக்சாண்டர் கிரே, பொருளாதார வல்லுனர்; ஆழம் நிறைந்த சிந்தனை ஓட்டம் உடையவர். தம் நூல், பொருளாதார வரலாறு, இலக்கிய உலகக் காவியமா, என்று படிப்போரின் உள்ளத்தில் திகைப்பும் வியப்பும் எழச்செய்யும் திறன் மிக்க எழுத்தாளர். அவரது தெளிந்த நீரோடை போன்ற ஆங்கில நடையை மொழிபெயர்க்கும்போது மூழ்கி எழுந்து வெற்றி பெற்றதாக எண்ணி மகிழ்ந்த நான், அதைத் தொடர்ந்து காட்டாறெனக் கருத்து வெள்ளம் ஓடிவரும் இடங்களில் எதிர் நீச்சல் போடும் ஆற்றலிழந்து தவித்தேன் என்பதைப் பெருமையோடு ஒப்புக்கொள்கிறேன்.

தமிழக அரசினரின் 'தமிழ் வெளியீட்டுக் கழகம்' ஆங்கில மொழி நல்லறிஞர் நூல்களை மொழிபெயர்த்துத் தமிழ் மக்களுற்றுய் வெளியிடும் பெருமுயற்சியில் எனக்கும் ஓர் எளிய இனிய பங்கு அளித்து ஊக்குவித்தமை குறித்துச் சென்னை அரசினர் தமிழ் வெளியீட்டுக் கழகத்திற்கும், பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களுக்கும் நான் கடப்பாடுடையேன்.

இதனை அழகுற அச்சிட்டுத் தந்த சண்முகம் அச்சகத்தாருக்கும், தோன்றுத் துணையாய் என்றென்றும் நிலைநிற்கும் தமிழகத்து அறிஞர்க்கும் என் நன்றி என்றும் உரியதாகும்.

சென்னை-21
18—2—64

க. முத்தையன்

உள்ளுறை

		பக்கம்
	முன்னுரை ...	iv
1.	கிரீசும் ரோமும் ...	1
2.	இடைக் காலம்: அர்ச். தாமஸ் அக்வினஸ், ஒரேஸ்மே ...	31
3.	மெர்க்கன்டலிசம் ...	55
4.	இயற்கை வாதிகள் (பிசியோ கிராட்கள்) குவெஸ்னே-துர்கோ ...	87
5.	ஆடம் ஸ்மித் ...	109
6.	மால்தஸ்—ரிகார்டோ ...	146
7.	லாடர்டேல், ரே, சிஸ்மாண்டி ...	181
8.	முல்லர், லிஸ்ட், வான்துனன் ...	209
9.	நன்னம்பிக்கையாளர்கள் ...	240
10.	தொன்மைப் பொருளாதார மரபு ...	258
11.	காரல் மார்க்ஸ் ...	286
12.	ஆஸ்திரியக் கருத்துப் பள்ளி— இறுதிநிலைக் கோட்பாடு ...	325
	முடிவுரை ...	359
	மேற்கொண்டு படிக்கவேண்டியவை ...	367
	அட்டவணை ...	372

1. கிரீசும் ரோமும்

மனித சமுதாய சிந்தனை வரலாற்றில் வரன்முறையான பொருளாதாரக் கோட்பாடு அண்மைக் காலத்தில்தான் அரும்பி மலர்ந்தது. இக் கோட்பாடுபற்றி நினைவுகூர்தலும், ஆழ்ந்த யோசனையை மேற்கொள்வதும் மனிதன் எண்ணத் தொடங்கிய காலந்தொட்டே இயைந்துவந்த பழமையுடையதாகும். பொருளாதாரம் என்பது, மனிதனது எளிய வாழ்வின் அன்றாடச் செயல்களை ஆய்வதாகும். இத்தகைய பொருளாதார விளக்கத்தை நாம் ஏற்பதானால், மனித சமுதாயம் நினைவாற்றல் பெறத் தொடங்கிய அன்று முதற்கொண்டு, காலங் காலமாக மனித சிந்தனை என்ற பெருங்கடலின் திரைகளோடு திரைகளாகப் பொருளாதார எண்ண அலைகளும் அவ்வப்போது வீசிக்கொண்டே யிருந்தன.

எனவே, எவரேனும் முயற்சியெடுத்துப் பழைய இலக்கியங்களைத் துருவித் துருவி ஆராய்ந்தால், அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பொருளாதாரக் கருத்துக்கள்-ஆடம் ஸ்மித் கொள்கையின் கருப்பொருளோ அன்றி, பிசியோகிராட்ஸ் தத்துவத்தின் விழுமிய பொருளோ-விரவிக் கிடப்பதைக் கண்கூடாகக் காணலாம். மேலும், இலக்கிய மேதைகளும் தத்துவ அறிஞர்களும் ஏனைய கருத்துக்களுடன் கூறிப்போந்தவைகளிலும், நெறிமுறைகள், நிறுவனங்கள், சட்டதிட்டங்கள் ஆகிய இவைகளிலும் அடிப்படையாக ஏதாவது பொருளாதாரக் கருத்து இலை மறை காயாக இருந்து வருகிறது. இவை தெள்ளத் தெளிய விளக்கப்பட்டிராவிட்டாலும், ஏதோ ஒரு விதத்தில் கூறப்பட்டிருப்பது உண்மையே.

வட்டி வாங்கும் தக்க முறையையே மறுக்கும் வகையில் வட்டித் தடைச்சட்டம் விதிக்கப்பட்டதன் நோக்கம், தரிசு நிலம் போல் பயனற்ற தன்மையுடையது பணம் என்ற கருத்தை வலிந்து

கொண்டதனாலாகும். வாரிசு உரிமையை ஏற்பது அல்லது ஏற்காததுபற்றிய வழக்காறு தனியார் உடைமை குறித்த கொள்கைகளை விளக்குகின்றன. ஹம்மூரபி விதித்தொகுப்பு, படகு வாடகை, ஆட்டுத் தவணைப்பணம், தையல்காரர், நவரத்தினக் கல் வெட்டுவோர், ஏனைய வினைஞர்களின் கூலி முதலியவற்றை நிர்ணயிக்கிறது. இது நியாய விலைபற்றியும், தரமான கூலி பற்றியும் ஏதோ ஒரு கொள்கையைக் கூறுவதல்லால் வேறென்ன? மொசேயிக் சட்டம் ஏழ்மையினின்று எல்லோரையும் பாதுகாக்க வகை செய்கிறது. இரப்போர் பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ள அரசாங்கத்தையே இது குறிக்கிறதல்லவா?

இதிலிருந்து இரண்டு முடிவுகள் பெறப்படுகின்றன. முதலாவதாக, பொருளாதாரக் கோட்பாட்டை ஒரு சமுதாயத்தின் சட்டதிட்டங்கள், வழக்காறுகள், நடைமுறைகள் இவைகளுக்கான பரிகாரங்கள் என்று கொள்ளினும், கற்பனாவாதியின் கருத்துக் கசண்டு என்று தள்ளினும், அது அந்தந்தக் காலத்துச் சமுதாயத்தை அப்படியே சித்திரித்துக் காட்டுகிறது என்பது தெளிவு. எனவே, அவ்வப்பொழுதின் அரசியலை ஆய்ந்து நோக்கின், அதாவது சமுதாயத்தின் மாறிவரும் அமைப்பை துருவிக்காணின் பொருளாதாரக் கோட்பாடு என்ன வகையில் வளர்ச்சியடைந்திருந்தது என்பது ஒருவகையில் தெரியவரும். பொருளாதார வரலாறும் எவ்வகையானும் சிறப்புக் குன்றியதன்று என்பதும் தெற்றென விளங்கும். மக்கள் தொகை பல்கிப் பெருகிய காலத்தில்தான் மால்தஸ் மக்கள் தொகை குறித்து எழுதினார்.

செலாவணி முறை சிக்கல்பட்டுக் கிடந்த நேரத்தில்தான் அதன் பிரச்சினைகளை ரிகார்டோ ஆராய்ந்து அறிவித்தார். இவையெல்லாம் தற்செயலாக நேரிட்டவை அல்ல. ஒன்றன் காரணமாகவே மற்றொன்று ஏற்பட்டுள்ளது. எனவே, அனுதிகாலந் தொட்டே அரசியல், பொருளாதாரம் அப்போதைய சமூக அமைப்பின் நான்கு சுவர்களுக்குள் சமுதாயம் எவ்வாறு எக் கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டது என்பதை ஒல்லும்வகை விளக்க முயன்று வந்துள்ளது.

எடுத்த எடுப்பில் இரண்டாவது முடிவு சிறிது அவநம்பிக்கை தொனிக்கும் வகையில் தோன்றலாம். பொருளாதாரக் கொள்கை எதுவும் ஓரளவே செல்திறன் உள்ளது என்பதே இம் முடிவு. பழக்க வழக்கம், பெருமை நிலை, சமூகாய வகுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சமுதாயத்துக்கு ஏற்ற 'பொருளாதார

விதிகள்' கடும் போட்டித் தொழில்மயமான நவீன சமுதாயத்துக்குப் பயன்படத்தக்க நியதிகளினின்றும் முற்றிலும் வேறுபாடானவை. இன்றைய அறிவியல் பொருளாதார அறிஞன் இடைக் கால சமுதாயத்தில் வாழ்ந்திருந்தால், நிலப் பிரபுத்துவம் (படை மான்யம்) குறித்தும், பழம் பண்ணைமுறை (Manor) குறித்தும் அவனுடைய கொள்கை முடிவுகள் வேருனவையாயிருந்திருக்கும். அடிமைத் தொழிலமைப்பில் வேர்விட்டு மலர்ந்த பண்பாடு அமைந்த கிரேக்க நகரக் குடியாட்சியில் வாழ்ந்திருந்தால், அவன் கொண்டுள்ள முடிவுகள் மாறுபட்டிருந்திருக்கும். தேனீக்கள் போலக் கட்டுப்பாடுகள் நிரம்பிய வாழ்க்கை அடிப்படையில் கொடூரத்தின் சின்னமாக அமைந்த இன்காசு நாட்டில் வாழ்ந்திருந்தால், அவனுடைய கொள்கை முடிவுகள் இவற்றிற்கு முற்றிலும் வேறுபட்டவையாயிருந்திருக்கும்.

பொருளாதாரத்தை ஓர் அறிவியலெனக் கருதுவோமாயின், அது மற்ற அறிவியல்களிலிருந்து எவ்வாறு மாறுபடுகின்றது என்பது அறிதல் அவசியம். மற்ற அறிவியல்களில் ஒரு முறை உண்மையென நிரூபிக்கப்பட்டது, அதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்றைத் தெளிவாக, ஐயமற நிரூபித்தாலொழியப் பழைய உண்மையே நிலவும். ஆனால், பொருளாதார அறிவியலில் கோட்பாடு ஒன்று கூறப்பட்டால், அதற்கு மாறுபாடான கோட்பாடு ஒன்றைக் கண்டு, பழைய கோட்பாட்டை முழுவதும் பொய்ப்பிக்கக்கூடியதான வழியோ, அதை எக் காலத்திற்கும் நிலைநிறுத்தக்கூடிய முறையோ எதுவும் காணப்படவில்லை.

ஆகவே, உண்மையென ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு முறை எல்லாக் காலத்திற்கும் அவசியம் உண்மையாக இருக்க வேண்டுமென எண்ணி, பொருளாதாரத்தில் இதற்கு மாருக உள்ள கொள்கைகளைக் குழப்புகிற வகையில் பொருத்திப் பார்ப்பது நல்லதல்ல. பொருளாதாரக் கோட்பாடு வரலாற்றில் எது நமக்கு இப்போது மிக நகைப்புக் குரியதாகத் தோன்றுகிறதோ அது அதன் காலத்தில் அவ்வளவு அறிவுக்கு ஒவ்வாததாக இருக்கவில்லை. எக் கொள்கையையும் தகுதுாக்க முடியாமல் தீர்த்துக் கட்டித் தவிடுபொடி செய்துவிட்டதாகக் கூற முடியாது. பழைய கொள்கைகள் என்றும் சாவதில்லை; அவை புகைப் படலமாக மறைந்து போகின்றன; வேண்டிய வசதியான சூழ்நிலை அமைந்தால், அவை மீண்டும் தோன்றும். ஒரு காலத்தில் மிகப் புகழ்பெற்றிருந்த ஒரு கொள்கை, அக் காலத்தில் அதற்கென தனித்தன்மை கொண்டிருந்ததாகக் கருதப்பட்டாலும், ஆராய்ந்து பார்த்தால், அது அதற்கு முந்திய கால ஏண்ண அலைகளின்

சிதறலாகவே இருப்பது தெரியவரும். ஒப்பிய, தொன்றுதொட்டு வழங்கும் கொள்கைக்கு புதிய விளக்கம் தருபவன், சுவையூட்டும் ஒரு கருத்தைச் சேர்ப்பதன்மூலம், அடுத்த தலைமுறையினருக்கு மனித எண்ணக் கடலில் ஆர்த்தெழும்பிய பிறிதோர் அலை யாகவே காட்சியளிக்கச் செய்கிறான்.

கிரேக்கம்

பொருளாதாரக் கருத்துக்களை முதன்முதலில் திட்ட வட்டமாக வெளியிட்டவர்கள் கிரேக்க எழுத்தாளர்களே. பொருளாதாரக் கொள்கை என்ற வகையில் அவை உருவெடுக்கா விட்டாலும், அவை பொருளாதார எண்ண அலைகளாக மலர்ந்தன. ஆனால், பண்டைய உலகம் ஏதென்ஸைப் பிரதி நிதியாகக் கொண்டாலும், பொருளாதாரக் கருத்து வளர்வதற்குப் பல வழிகளில் ஏற்ற நிலமல்ல. எனவே, எல்லாம் பழங்காலத்தில் இருந்தன என்ற கொள்கையை விடாப்பிடியாகக் கொண்டி ருக்கும் ஒரு சிலரைத் தவிர, கிரேக்க நாட்டிலே பொருளாதாரக் கொள்கை திட்டவட்டமாக வளர்ந்திருந்தது எனக் கூறுவதற் கில்லை. அவை அங்கு இடைநிகழ் பொருள்களாக, மேலும் நல்ல முடிவுகளை நாடிப் போகையில், இடையில் கிடைக்கும் செய்திகளாகவே அமைந்தன. மற்றத் துறைகளில் கிரேக்கம் மிக முன்னேறியிருந்துங்கூட, பொருளாதாரக் கொள்கை அளவில் அதிக வளர்ச்சியடையாதிருந்ததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவதாக, புராதன நாடு ஒரு விரிவான நிறுவனமாகும். அதில் மனிதன் யார், குடிமகன் யார் என்பது தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தது. அரசியலும் சமயமும் இரண்டறக் கலந்திருந்தன. ஒழுக்கமும் அரசியலும் ஒன்றோடொன்று பின்னிக்கிடந்தன. பொருளாதாரத் துறையை அறவே புறக்கணித்து ஒதுக்க முடியாவிட்டால், பொதுவான ஒழுக்க விசாரணையின் அங்கமாக அது கருதப்பட்டது. இரண் டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் ஆடம் ஸ்மித்தும் இவ்வாறே கருதினர். கிளாச்கோவில் ஒழுக்கத் தத்துவ வகுப்பில் அவர் 'நாட்டுவளம்' பற்றிப் போதித்தார். ஆனால், பொருளாதாரத் திற்கு ஆடம் ஸ்மித் காலத்தில் இருந்த சுதந்திரம் கிரேக்க நாட்டில் இருக்கவில்லை; இருக்கவும் முடியாது. பொருளாதாரம் ஒழுக்கவியலின் வெறும் ஊன்றுகோலாக, வேலைக்காரியாக மட்டும் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை; கிரேக்க நாட்டில் முதலிடம் தரப்பட்ட மூத்தவளால் இளையவள் (பொருளாதாரம்) புறக்கணிக்கப்பட்டு, கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு அடிச்சுவடு தெரியாமல் அழிக்கப்பட்டாள். பின்னர் வந்த பொருளாதார

வல்லுநர்கள் கிரேக்க நாட்டில் பொருளாதாரக் கொள்கையின் மூலாதாரத்தைத் தேடிப் பார்க்கும்போது அவர்களுக்கு அதன் முழு உருவம் கிடைக்கவில்லை; கிடைத்ததெல்லாம் அதன் சின்னபின்னப்படுத்தப்பட்ட, உருக்குலைந்த பகுதிகள் மட்டுமே.

பொருளாதாரக் கொள்கைபற்றிய தொடர்பான அமைப்பு இல்லாதிருப்பதற்குரிய இரண்டாவது காரணம் இன்னும் ஆழமானது. பண்டைய உலகம் ஒட்டறுத்துக்கொள்ளும் சமுதாய வகுப்பு அடிப்படையில் இயங்கி வந்தது. ஏதென்சும் இதன் கொடூர விளைவுகளினின்றும் தப்ப முடியவில்லை. நகரங்களினுடைய ஆட்சி அமைப்பின் அடித்தளமே அடிமைகள் தாம். அடிமைகள் என்ற தனி வகுப்பினர் இருக்கும்போது, அவர்கள் செய்யும் வேலையும் இழிவாகிச் சிறப்பிழந்துவிடுகிறது. பழங்காலத்தில் கிரேக்கம் உட்பட எல்லா இடங்களிலும் கைவினைஞர் தொழில் பெருமைக்குரிய தன்று என்றே கருதப்பட்டது. பழைய கிரேக்க நாட்டவன் இப்போது மீண்டும் உயிர்பெற்று எழுவானேல், இற்றை நாள் சமுதாயத்தின் பெரும் பான்மையான வேலைகள் மதிப்பற்றவையாகவும் இழிவுக்குரியதாகவும் அவனுக்குப் புலப்படும். வேலைசெய்ய அடிமைகள் இருக்கும்போது, வேலையே அடிமையின் சின்னமாகி விடுகிறது. பல காரணங்களை முன்னிட்டு வேளாண்மைமட்டும் போற்றற்குரிய தொழிலாகக் கருதப்பட்டது. அதை எவரும் தாழ்வுக்குரியதாக எண்ணவில்லை. கிரேக்க, ரோம எழுத்தாளர்களின் கண்டனக் கணைகளிலிருந்து இது தப்பிப் பிழைத்தது. மேலும், பண்டைய எழுத்தாளர்கள் விவசாயப் பொருளாதாரத்தையே நன்கு விளக்க முயன்றுள்ளனர். ஆனால், மற்றைய 'எளிய வாழ்க்கைத் தொழில்' நிந்திக்கப்படும்போது, அதைப் போற்றி ஆராய்ச்சி செய்ய எவரே முன்வருவர்?

பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்த வரையில், பிளேடோ (Plato) காலத்தில்தான் கிரேக்க எண்ணம் ஓரளவு தொடர்புள்ளதாக அமைந்தது. ஹெசாய்டும் (Hesoid) மற்றவர்களும் கூறியுள்ள பொன்மொழிகளைவிட, பிளேடோ கூறியுள்ள பொருளாதாரக் கொள்கையே தொடர்புள்ளதாக அமைந்திருக்கிறதென்றுலுங்கூட, பொருளாதாரம் என்பது ஒழுக்கம், அரசியல் ஆகியவற்றின் ஒரு சிறு உட்பிரிவே எனக் கருதும் பண்டைய கிரேக்கப் போக்குக்குப் பிளேடோவே சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார். பெரும் அளவு 'குடியரசிலும்' (The Republic), ஓரளவு 'நியதிகளிலும்' (The Laws) பிளேடோ 'ஆணவ விளையாட்டில்' ஈடுபட்டுள்ளார். இவற்றில்தான் பொருளாதாரக்

கேள்விகளை ஆராய்கிறார். குடியரசு என்ற நூல் பெரிதும் நீதி விசாரணையாகும். கிட்டப் பார்வை உள்ளவர்கள் கொட்டை எழுத்துக்களை எளிதில் படிக்க முடிவதைப்போல, நீதியின் இயல்பான தன்மை அரசாங்கத்தில்தான் எளிதில் புலப்படும். எனவே, இரண்டாவது புத்தகத்தில் அரசாங்கம், அதன் தோற்றம் ஆகியவை விளக்கப்படுகின்றன. அடித்தளத்திலிருந்து இலட்சிய அரசியல் அமைப்பு கட்டப்படுகிறது. அரசாங்கம் ஏற்படுவதற்குரிய மூலகாரணமே பொருளாதாரம்தான் என்று கூறப்படுகிற கருத்து கவனிக்கத் தக்கது. 'மனிதன் தேவை காரணமாக அரசாங்கம் அமைகிறது; எந்த ஒரு மனிதனும் தன்னிறைவு உள்ளவனாக இருக்க முடியாது; நம் அனைவருக்கும் பல தேவைகள் இருக்கின்றன.[1] அரசாங்கம் ஏற்பட்டதற்கு வேறு காரணம் எதையும் கற்பனை செய்வதற்கில்லையென பிளேடோ கூறுகிறார். இந்த வாதத்தைத் தொடர்ந்து மனிதனின் முக்கியத் தேவைகளை ஆராய்ந்து பார்த்தபின், தொழில் பிரிவினை குறித்துப் பிளேடோ விவாதிக்கிறார். இவருடைய தொழில்முறைப் பகுப்பு விவாதம் ஆடம் ஸ்மித்தின் முக்கிய அதிகாரத்துடன் ஒப்பிடப்படுகிறது. உண்டி, உடை, உறையுள் ஆகிய மூன்றே மனிதனின் முக்கியத் தேவைகள். மிகக் குறைந்த சமூக அமைப்பில் குறைந்தது நாலைந்து பேர்களேனும் இருக்க வேண்டும். ஒரு விவசாயி, ஒரு கட்டடக்காரன், ஒரு நெசவாளி ஒரு சக்கிலி அல்லது வேறு இது போன்ற தொழிலின் பிரதிநிதி. இதில் ஒவ்வொருவரும் தம் தொழிலை மட்டுமே கவனித்தல் வேண்டும். தொழில்முறைப் பகுப்பு அடிப்படை பிளேடோ கருத்தில் வருமாறு: முதற்கண், 'வெவ்வேறான தொழில்களைக் கைக்கொள்ளும் முறையில் இயற்கை வேறுபாடுகள் நம்மிடை உள்ளன.' இரண்டாவதாக, 'தன் இயல்புக்கேற்ற தொழிலை ஒருவன் உரிய நேரத்தில் கடைப்பிடித்து மற்றவற்றைச் செய்யாமல் விடுவானேயாகில், இதன் விளைவாக எல்லாப் பொருள்களும் அளவுக்கு அதிகமாக நல்ல முறையில் உற்பத்தியாகும்.' இக் கொள்கையை முழுமையுறச்செய்ய, பின்னர் பிளேடோ தன் ஆட்சி அமைப்பில் மாலுமிகள், வர்த்தகர்கள், சில்லறை வியாபாரிகள் போன்றவர்களையும் சேர்த்துக்கொள்கிறார்.

இப்போது ஆடம் ஸ்மித் கூறியதோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இவ்வடிப்படைப் பிரச்சினையைப் பிளேடோ வேறு கோணத்திலிருந்து அணுகுவது தெரியவரும். இங்கு ஆரம்ப இடமே ஒழுங்குதான். மனிதர்கள் பலவகை; ஒவ்வொருவரும் தம்

[1] குடியரசு, ஜோவட் மொழிபெயர்ப்பு, பக்கம்-49.

இயல்புக்கேற்றதையே செய்யவேண்டும். ஓரளவுவரை தொழில் பிரிவினைக்கு இது தகுந்த விளக்கமாக இருக்கும். புதிய கால நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பெருமளவு உற்பத்தித் துறையில் இருக்கும் சிறப்புத் தேர்ச்சியைப் பொருத்திப் பார்த்தால், ஒருவருடைய வேலை அவருடைய இயல்புக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் எனக் கூறுவது பொருளற்றதாகத் தோன்றும். தொழில் பிரிவினையை ஆடம் ஸ்மித் பொருத்தமில்லாத முறையில் துவக்கி அதைப் புரியும் வகையில் விளக்குகிறார். ஒன்றைக் கொடுத்துவிட்டு மற்றொன்றைப் பெற்றுக்கொள்ள விரும்பும் மனிதனின் தன்மை தொழில்முறைப் பகுப்பிற்கு மூலகாரணம் எனக் கூறுகிறார் ஆடம் ஸ்மித். குழந்தைகள், விளையாட்டுப் பிள்ளைகள் தங்களிடம் வைத்திருப்பதை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வதைப் போல பெரியவர்களும் செய்ய ஆசைப் படுவதன் விளைவே தொழில் பிரிவினை. ஆனால், இந்த விசித்திரக் கொள்கை அவர் எழுதியுள்ள அடுத்த பகுதியிலேயே மாறி விடுகிறது. பிளேடோ கூறுவதைப் போலவே, தன் தோழர்களிட மிருந்து உதவிபெற மனிதனுக்கு அதிக வாய்ப்பிருப்பதாக ஆடம் ஸ்மித் கருதுகிறார். ஆனால், அதைக் கைம்மாறு கருதாப் பயனுக எதிர்பார்ப்பது வீண் எனக் கருதுவதால் பிளேடோவிடமிருந்து வேறுபடுகிறார். எனவே, ஸ்மித் கருத்தில் தொழில்முறைப் பகுப்பு என்பது நல்ல பேரம் செய்வதற்குச் சிறந்த வாய்ப்பாக அமைகிறது. இதன்படி கசாப்புக்கடைக்காரனிடமிருந்து நாம் நல்விருந்து எதிர்பார்க்கலாம். கைம்மாறு எதிர்பார்க்காமல் அவன் தருவதாகக் கருதாமல், தன் சொந்த நலனை முன்னிட்டே இதைச் செய்வதாகக் கொள்ளவேண்டும்.

இக் கருத்தில் பிளேடோவுக்கும் ஆடம் ஸ்மித்துக்கும் உள்ள வேற்றுமை தெளிவாகப் புலப்படுகின்றது. பிளேடோ கருத்தில் தொழில்முறைப் பகுப்பே சமூக அமைப்பின் வேராகும். நகரம் தொழில்முறைப் பகுப்பின் அடிப்படையிலேயே கட்டப் பட்டுள்ளது. ஒவ்வொருவனும் தன்னிறைவு உள்ளவனாக இருந்தால் அரசாங்கத்துக்கே இடமில்லை என்பது இதிலிருந்து பெறப்படுகிறது. அதனால், ஸ்மித் கருத்தில் தொழில்முறைப் பகுப்பு அத் தொழில் செய்பவர்களின் நன்மைக்கே ஆதாரமாக அமைந்துள்ளது. பேரம் பேசுவதற்கு அவர்களுடைய சக்தி இதனால் அதிகரிக்கிறது. பிளேடோ இதைத் தெளிவாகக் கூறிவிட்டாலும், மார்க்கெட்டின் அளவைப் பொறுத்தே தொழில் முறைப் பகுப்பு அமையும் என்ற ஆடம் ஸ்மித்தின் புகழ்பெற்ற கருத்தைப் பிளேடோ தன் குடியரசில் தலைகீழாக மாற்றிக் கூறி யுள்ளார். தொழில்முறைப் பகுப்பு மேற்கொள்வதன் அவசியத்

தைப் பொறுத்தே மார்க்கெட் அளவு நிர்ணயிக்கப்படுவதாகத் குடியரசில் கூறுகிறார். ஒவ்வொருவரும் தம் இயல்புக்கு ஏற்றதைச் செய்யும் அளவுக்கு நகரம் பெரிதாயிருக்க வேண்டும். இதையே வேறு வகையில் குறிப்பிடுவதானால், ஸ்மித் கருத்துப்படி தொழில்முறைப் பகுப்பு முடிவாகப் பல வேலை வாய்ப்புக்களாகப் பரிணமிக்கிறது; பிளேடோ கருத்துப்படி வேறுபாடு ஏற்கெனவே இருப்பதால் தொழில்முறைப் பகுப்பு ஏற்படுகின்றது.

தமது இலட்சிய அமைப்பில் பொதுவுடைமைக்கு இடம் தந்துள்ளதே பிளேடோ அடிக்கடி மேற்கோள் காட்டப் படுபவரானதற்குரிய காரணமாகும். பிளேடோ தந்த பொது வுடைமையின் சிறப்பியல்புகளை உணர்ந்து போற்றவேண்டு மானால், இந்தப் பொதுவுடைமை நிறுவனங்களின் (1) விசாலம் (2) நோக்கம் ஆகியவற்றை ஆராய்வது அவசியமாகும். பிளேடோவின் வாதத்தைத் தொடர்ந்து பார்த்தோமானால் இது நன்கு புலப்படும். மூன்றாவது புத்தகத்தின் முடிவில் புகழ் மிக்க பொதுவுடைமைக் கொள்கையைப் பிளேடோ விளக்கி யுள்ளார். தொழில்முறைப் பகுப்புக் கோட்பாடு காரணமாக நகரம் விரிவடைந்ததைக் கண்டோம். அப்போதுதான் வியாபாரிகள், இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், சில்லறை விற்பனை யாளர்கள், தரகர்கள் கொண்ட நாணய முறையை ஏற்றுள்ள மார்க்கெட் அமைப்பு ஆகியவை அதில் இடம் பெற முடியும். இங்கே பிளேடோ விவாதம் கொஞ்சம் நிற்கிறது. இந்த நிலையில் பூரணத்துவமுள்ள, நிறைவெய்திய ஆட்சி அமைப்பை அடைந்து விட்டோம். இதை சாக்ரடீஸ் வானளாவப் புகழ்கிறார். அங்குள்ள மக்களின் எளிய வாழ்க்கையை ஏற்றிப் போற்றுகிறார். இதைச் சாதாரண வாழ்க்கை வசதியற்ற 'பன்றி நகரம்' என்று க்ளாகன் நிந்திக்கும்போதுதான் விவாதத்தில் தீவிரம் ஏற்படுகிறது. இப்பொழுது 'வசதி நிரம்பிய, ஏக போக்கிய' ஆட்சி அமைப்பை ஆராயலாம். இது இலட்சிய அமைப்பாகும். சாக்ரடீஸ் கூறுவதாவது: 'நான் குறிப்பிடுவதே உண்மையான, திடமான ஆட்சி அமைப்பாகும்.' அது க்ளாகன் கூறிய பன்றி நகரமே. இதன் பின், க்ளாகன் விருப்பப்படி பல வசதிகள் ஏற்படும் காரணத்தால், நடிகர்கள், கூத்தர்கள், நாவிதர்கள், இனிப்புப் பண்டம் செய்பவர்கள், சமையல் செய்பவர்கள், மருத்து வர்கள் ஆகியவர்கள் இச் சமூகத்தில் இடம்பெற வேண்டும். இப்போது இந்த நாட்டுக்கு அடுத்த நாட்டின் ஒரு பகுதி தேவைப் படும். இவ்வாறு மற்றைய நாட்டுக்கும் தேவை ஏற்படும். மிக அவசியமான வசதிகள் என்ற நிலைமை மாறி 'வரையறை யற்ற செல்வம் சேகரித்தல்' என்ற நிலைக்கு மனிதன் வந்து

விட்டதே இதற்குக் காரணம். இதனால் மக்கள் தொகை அதிகரிக்கும்.

நாடு என்று இருந்தால், பாதுகாவலர்கள் இருத்தல் வேண்டும். இவர்கள் வேறெந்தத் தொழிலையும் கவனிக்கக் கூடாது. ஏனெனில், ஒரு மனிதன் பல காரியங்களை வெற்றியுடன் நிறைவேற்ற முடியாது. பாதுகாவலர்களைப் பொறுப்புடன் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களுக்குக் கவனமுடன் கல்வியளிக்க வேண்டும். இவர்களிடம் முரணன குணங்கள் அமைந்திருக்கவேண்டும். அவை எதிரிகளுக்கு அபாயமாகவும், நண்பர்களுக்கு நன்மையாகவும் இருக்கவேண்டும். பாதுகாவலர்க்கு அளிக்கப்படும் கல்வியை விளக்கிக் கூற இது ஏற்ற இடமல்ல. முழுப்பொருளில் 'பாதுகாவலர்கள்' (உண்மையான ஆட்சியாளர்கள்) என்பவர்க்கும் துணையாளர்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை விளக்குவதற்கும் இது தகுந்த இடமல்ல. பொதுவுடைமையைக் குறிக்கும் மொழிகள் முக்கியமானவையாகும். நிர்ணயிக்கப்படும் பொதுவுடைமையின் போக்கையும் நோக்கத்தையும் அவை குறிக்கின்றன. உட்பகையை ஒறுக்கவும், வெளிப்பகையை வேரறுக்கவும் ஏற்ற இடம் ஒன்றைப் பாதுகாவலர்கள் தேர்ந்தெடுத்து அங்குத் தங்கியிருக்க வேண்டும். இவர்கள் குடிமக்களின் பாதுகாவலர்களாக இருப்பதைவிட்டுப் பாதகர்களாக மாறுமலிருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு, இவர்கள் வாழ்க்கை முறையையே மாற்றியமைக்க வேண்டும். எளிய வாழ்க்கை வாழவும், பிறர் பொருளை இச்சிக்காதிருக்கவும் இவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. இதன் விளைவாக, இவர்கள் துறவற வாழ்க்கை மேற்கொள்கிறார்கள். அவசியமான அளவுக்கு மேற்பட்டு அவர்களுக்கு சொத்திருக்கலாகாது ; அவர்களுடைய குறைந்தபட்ச செலவுகளுக்குப் போதுமான ஊதியம் ஒரு குறிப்பிட்ட அளவுதான் கொடுக்கப்படும். 'எப்போதேனும் தங்களுக்கென சொந்தத்தில் வீடோ, நிலமோ, பணமோ இருக்க வேண்டுமென அவர்கள் நினைத்தால், குடிமக்களின் நண்பர்களாக இருப்பதற்குப் பதிலாக, அவர்களுடைய விரோதிகளாகவும் கொடுங்கோலர்களாகவும் மாறிவிடுவர்.[1]

முதற்கண் பிளேடோ கூறும் பொதுவுடைமையின் வரம்பைப் பார்ப்போம். இது பாதுகாவலர்களுக்கு மட்டுமே உத்தேசிக்கப்பட்டது என்பது கீழ்க்கண்ட வாதத்திலிருந்து நன்கு தெரியவரும். இவர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதும்

[1] குடியரசு, புத்தகம் III, பக்கம்–106.

கட்டுப்பாட்டுடனேயே வாழவேண்டும். இதை முகாம் பொதுவுடைமை என்றே கூறலாம். குடியரசை மேலெழுந்த வாரியாகப் படித்துப் பார்த்தால், இந்த மேல்பிரிவு மக்களுக்கு மட்டுமே பிளேடோ பொதுவுடைமை நிர்ணயித்துள்ளார் எனத் தோன்றும்[2] என ஒருவர் கூறியுள்ளார். இவ்வாறு மேலெழுந்த வாரியாகப் படித்தவர்களில் அரிஸ்டாடிலும் ஒருவர் போலும்! இந்த நெறிமுறைகள் பாதுகாவலருக்கு உத்தேசிக்கப்பட்டவை எனப் பிளேடோவே கூறியுள்ளார். . பாதுகாவலர்கள் பொதுவுடைமை வாழ்வு முறையிலிருந்து வழுவி நடந்தால், அவர்கள் இல்லறத்தார்களாகவும் விவசாயிகளாகவும் மாறிவிடுவார்கள் என அவர் கூறியுள்ளது இதை ஐயந்திரிபுக்கு இடமின்றி விளக்குகிறது.

இரண்டாவதாகப் பாதுகாவலர்களுடைய பொதுவுடைமையின் நோக்கத்தை எடுத்துக்கொண்டோமானால், மற்றக் கனவு காணும் பொதுவுடைமை வாதிகளின் கருத்தினின்றும் இரு துருவங்களாகப் பிளேடோவும் மற்றவரும் மாறுபட்டிருப்பது தெரியவரும். உலகத்திலுள்ள பொறுக்க முடியாத, கொடுமை நிறைந்த வர்க்க பேதத்தாலும், சகிக்க முடியாத அநீதியாலும் பொதுவுடைமைக் கூப்பாடு மற்ற இடங்களில் எழுந்தது. ஆனால், பிளேடோ அக் கருத்துக் கொள்ளவில்லை. அவர் கூறும் பாதுகாவலர்களுக்கோ பொதுவுடைமை என்பது துறவற வாழ்க்கை மேற்கொள்ளுதலாகும். அவ்வாறு வாழ்வது ஒன்றே அவர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்ய வழியாகும். இவ்வுலக ஆசாபாசங்களிலும் பந்தங்களிலும் கட்டுண்டு உழலாமல் இருந்தால்தான் அவர்கள் தங்கள் முக்கிய வேலையைத் திறம்படச் செய்ய முடியும். எனவே, நோக்கத்தைப் பொறுத்த வரையில் இவர் கூறும் பொதுவுடைமை ரோம் கத்தோலிக்க குருமார் கடைப்பிடிக்கவேண்டிய மணம்புரியா வாழ்க்கையை ஒத்துள்ளது. பிளேடோ பொதுவுடைமையின் நோக்கம் அனைவருக்கும் சமமாக அனுபவிக்கும் உரிமை வழங்குவதன்று. ஆனால், சிறப்பான பொறுப்புள்ள ஒரு வகுப்பினர் பொதுமக்களின் நன்மைக்காகக் கொடுத்துத் தீரவேண்டிய விலையாகும் அது. ஒரு சில கருத்துக்களைப் பார்க்கும்போது இப் பாதுகாவலர்கள் சாதாரண வாழ்க்கைத் துன்பங்களினின்றும் விடுதலைபெற்றிருப்பது தெரியவரும். பெண் பாதுகாவலருக்குக் குழந்தை இருந்தால், அவர் தம் குழந்தைக்குப் பாலூட்ட அதிக நேரம் எடுத்துக்கொள்ளக்கூடாது. 'இத் தாய்மார்கள் இரவில் பாலூட்டுவதற்கு எழுந்

[2] பீர், தொன்மைச் சமூகச் சச்சரவுகள், பக்கம்-97.

திருக்க வேண்டியதில்லை. இவ் வேலைகளையெல்லாம் தாதியருக்கும் துணையாளர்களுக்கும் கொடுத்துவிடவேண்டும்.' [1]

குடியரசு கூறும் போதனைக்குத் துணையாக நியதிகள் கூறுவதையும் ஓரளவு கவனிக்கவேண்டும். தீவிர சக்தி குன்றிய முதுபெருங் கிழவனின் படைப்பாகும் நியதிகள். தம் இளமை மாயையினின்றும் பிளேடோ விடுபட்ட நிலை இதில் காணப்படுவதாகச் சிலர் சொல்கின்றனர் என்றாலுங்கூட, இங்கும் பிளேடோ தன் பழைய கொள்கையையே வலியுறுத்துகிறார். 'நண்பர்கள் எல்லாவற்றையும் பொதுவாகப் பகிர்ந்துகொள்கின்றனர்' என்ற பழமொழியே தலைசிறந்த ஆட்சி அமைப்பைப் பெற்ற அரசாங்கத்தினுடைய சட்டத்தின் பெருநிலையாகும். இந்த நிலை எங்கும் இருப்பதே இதன் சிறப்பு.[2] ஆனால், இத்தகைய நாடு கடவுளருக்கும், கடவுள் குழந்தைகளுக்கும் உரியதாகும். 'இத்தகைய நாட்டினை ஏற்படுத்திவிட்டால் அமரத்துவம் வந்துவிடும். அதுவே இரண்டாவது இடம் பெறும் ஒரே நாடாக இருக்கும்' என்று வருணிக்கிறார். இந்த நாட்டில் 5,040 குடியிருப்புகள் இருக்கும். ஏனெனில், ஒரு நகரம் மிக விரிவாயிருக்கக் கூடாது. அங்குள்ள குடிமக்கள் ஒருவருக்கொருவர் தெரிந்தவர்களாகவே இருக்கவேண்டும். இந்த இலக்கம் நிருவாக வசதியுள்ளது. இதைப் பத்துவரையில் எந்த எண்ணாலும் வகுக்க முடியும். இங்கே பொதுவுடைமைப் பிரச்சினை எழாது. ஏனெனில், சமுதாயப் பொருள்களின்மூலம் வளர்ச்சி கல்விக்கு அப்பாலும் போகிறது. 'போதுமென்ற வாழ்வே பொன்செய்யும் மருந்து'; உள்ளதைக் கொண்டு திருப்தியடையும் மனநிலை ஏற்படும் நடுநிலை வாழ்க்கையே இந்த நெறிமுறைகளின் நோக்கம். 'மனிதன் அளவிறந்த ஆசை கொள்வதன் விளைவே ஏழ்மை; அது அவன் சொத்துக் குறைவதால் ஏற்படுவது அல்ல' என்ற கொள்கையின் அடிப்படையில் இது அமைந்துள்ளது. அன்றாட உபயோகத்துக்காக நாணயமாகப் பயன்படுத்துவதற்கன்றி வேறெதற்கும் பொன்னையோ, வெள்ளியையோ எவரும் வைத்திருக்கலாகாது. அந்த நாட்டு நாணயம் உள்நாட்டில் மட்டும் புழங்கவேண்டும். வெளிநாட்டில் அது வழங்குவதற்கு ஏற்றதாக இருத்தல் ஆகாது. ஆனால், ஒருவருக்கொருவர் சமநிலையற்ற ஏற்ற இறக்க நிலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. ஆயினும், மிதமிஞ்சிய வறுமையோ, அளவிறந்த செல்வக்கொழிப்போ ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். இதற்காக மக்கள் தொகையை நான்கு வகுப்பாகப் பிரிக்கவேண்டும். ஏழ்மையின்

[1] குடியரசு, ஜாவட் மொழிபெயர்ப்பு, பக்கம்-154.
[2] நியதிகள், ஜாவட் மொழிபெயர்ப்பு, பக்கம்-121.

வரையறையை ஒரு கூருகக் கொண்டு அதைக் கெடாமல் பாதுகாத்து வரவேண்டும். ஒருவர் உயர்ந்த அளவு வைத்திருக்கக்கூடிய செல்வம் அதைப் போல் நான்கு கூறுகளாக இருக்கவேண்டும். அதற்குமேல் இருப்பது அரசாங்கத்துக்குப் பறிமுதலாக வேண்டும்.[1] 'வட்டிக்குப் பணம் கடனுகக் கொடுக்கக் கூடாது. அப்படியே கொடுத்தாலும், அசலைத் திருப்பித் தரவேண்டிய கட்டாயமில்லை. இது விசித்திரமான நிலைதான். அச் சமூகத்தில் ஒருவருக்கொருவர் சகோதரர்களாக இருப்பார்கள் என்பதைக் கொண்டும், ஒருவர் வைத்திருக்கக் கூடிய செல்வத்துக்குத் திட்டமான வரையறை இருக்கிறது என்பதைக் கொண்டும் இந்த நிலையைப் புரிந்துகொள்ள முடியும்.[2]

சில பழைய கட்டுப்பாடுகள் அப்படியே இருக்கும். குடிமகன் எவனும் கைவினைக் கலைகளில் ஈடுபடலாகாது. ஏனெனில் 'குடிமை என்பது ஒரு கலையாகும். இதற்கு அதிகம் படிக்க வேண்டும்; பலதரப்பட்ட அறிவு வேண்டும். இதை இரண்டாம் தொழிலாகக் கொள்வதற்கில்லை.' எவரும் இரு தொழில்கள் செய்யக்கூடாது. இந்த நெறிமுறையின் காரியத்துக்குக் குடிமை என்பது ஒரு தொழிலாகக் கொள்ளப்படும். ஒழுக்க நல்முயற்சி முழுநேரத் தொழிலாகும்.

குறிப்பிடத்தக்க மற்ற அமிசங்களாவன: இரண்டாவது தரமான தலைசிறந்த நாட்டில் சுயேச்சை வணிகம் இருக்கும். இறக்குமதி, ஏற்றுமதி தீர்வைகள் இரா. நாட்டுக்குத் தேவையற்ற போகப் பொருள்களின் இறக்குமதியும், நாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் ஏற்றுமதியும் தடுக்கப்படும்.[3] சில்லறைத் தொழில் தடுக்கப்படும். நகரத்தின் ஒழுக்கத்தையும் தூய்மையையும் பாதுகாக்க, நகரத்தைக் கடற் பகுதியிலிருந்து வெகுதூரம் தள்ளி உட்பகுதியில் அமைக்கவும் முயற்சி மேற் கொள்ளப்படுகிறது. ஏனெனில், 'அன்ருடத் தோழனுக இருப்பதற்குக் கடல் ஏற்றதுதான் என்ருலும், அதன் உவர்ப்புக் குணம் எங்கே போகும்? கடல் அருகே இருந்தால், நகர வீதிகளில் மாலுமிகளும் கடைக்காரர்களும் நிரம்பி வழிவர். மனிதர்களின் மனக் குரங்கு நிச்சயமற்ற, சலன வழிகளில் பிரவேசிக்கும்.'[4] நியதிகளில் உத்தேசித்துள்ள நாட்டில்

[1] நியதிகள், ஜாவட் மொழிபெயர்ப்பு, பக்கம்-127.
[2] அதே ஏடு, பக்கம்-124.
[3] அதே ஏடு, பக்கம்-230.
[4] அதே ஏடு, பக்கம்-87.

இருக்கக்கூடிய வெறுப்பும் கனிப்பும் மூட்டும் விவரங்களை இங்கே விவரிக்க வேண்டியதில்லை.

நாம் இப்போது அரிஸ்டாடிலைக் கவனிப்போம். பண்டைய காலத்தில் பொருளாதார விஞ்ஞானம் என்ற தனிப் பிரிவை ஏற்படுத்துவதற்கு இவரைவிட வழிகோலியவர்கள் வேறு எவரும் இலர். எதையும் நுணுகி அலசிப் பார்க்கும் தன் போக்கால் இவர் இத் துறையில் வெகு தூரம் முன்னேறியுள்ளார். இவருடைய அரசியல் கொள்கைகளைக் கடைபரப்ப இதுவன்று ஏற்ற இடம். மனிதன் இயல்பிலேயே அரசியல் பிராணியாக இருக்கிறான் என இவர் ஆரம்பித்துள்ள வகையாலேயே இவர் அரசியல் கண் கொண்டு பார்த்தார். இவர் கூறும் இரண்டு அமிசங்களில் பொருளாதார வல்லுநருக்கு அக்கறையுண்டு. அரசியல் இரண்டாவது புத்தகத்தில் பிளேடோவின் பொதுவுடைமையைத் தகர்க்கும் வகையில் கண்டனக் கணைகள் தொடுத்திருப்பது முதல் அமிசம். இரண்டாவது அமிசம், குடும்பத் தலைக்கட்டை அலசிப் பார்த்து சமுதாயத்தின் பொருளாதார அடிப்படைகளை விவாதித்திருப்பதுதான். முதற்கண் கூறிய கருத்துபற்றிக் காலம் காலமாய் நடைபெற்ற வாதங்கள் நம் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கையில், அரிஸ்டாடிலின் கருத்துக்கள் மிகச் சாதாரணமானவையே எனத் தோன்றலாம். சமுதாயத்திற்குப் பொதுவாக மனிவியர் வைத்துக்கொள்வதின் கேலிக்கூத்துக் குறித்து அவர் கூறுவதை நாம் செவிசாய்க்க இங்கே நிற்க வேண்டியதில்லை. அது எப்போதும் அவசரப் பிரச்சினையாக இருக்கவில்லை. (இப்போதும் அப்படியே என்று நம்புவோமாக). சொத்தினைப் பொதுவுடைமையாக வைத்துக்கொள்வது குறித்து அவர் கூறும் வாதங்கள் கிறித்துவ சகாப்த ஆரம்பத்திலிருந்தே இருப்பவையாகக் கொள்ளலாம். 'தங்கள் சொந்தச் சொத்தில் மக்கள் மிகவும் அக்கறையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஓரளவே பங்குள்ள சொத்தில் அவர்கள் அவ்வளவு பொறுப்புள்ளவர்களாக இருப்பதில்லை'[1] என்பது இன்றும் உண்மையே. இதற்கு உதாரணமாக, பொதுமக்கள் பொதுப் பூங்காக்களிலுள்ள இருக்கைகளில் சித்திரங்கள் வரைந்து அவற்றின் அழகைக் கெடுப்பதையும், தங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ளவற்றில் இவ்வாறு கிறுக்காமல் அழகுற வைத்திருப்பதையும் குறிப்பிடலாம்.

அரிஸ்டாடிலின் வாதங்கள் நடைமுறைக்கு மிக ஒத்தவையாய் இருக்கின்றன. பொதுவுடைமை அமைப்பு சரியாகச் செயல்

[2] அரசியல், புத்தகம் II, அதிகாரம் 3, வெல்டன் மொழிபெயர்ப்பு, பக்கம்-43.

படாதது மாத்திரமல்ல, இயல்பான மனித உணர்வுகளுக்கும் விரோதமாக இருக்கிறது. அதிக வேலைசெய்து குறைவாக ஊதியம் பெறுபவர்களுக்கும், குறைந்த வேலைசெய்து அதிகமாக ஊதியம் பெறுபவர்களுக்கும் இடையில் எப்போதும் தகராறுகள் இருந்துகொண்டே இருக்கும்.[1] நோஞ்சான்களுக்கும், நச்சரிப் பாளர்களுக்கும், சந்தேகப் பிராணிகளுக்கும் பங்கிட்டுக் கொடுக் கும் துன்பம் எப்போதும் இருந்தே தீரும். பொதுவுடைமையின் மேல் கட்டப்பட்ட ஒற்றுமை வெறும் கற்பனைக் கோட்டைதான்; அது மண் குதிரைக்கு ஒப்பாகும். அதை நம்பி வாழ்க்கை என்னும் ஆற்றில் எவ்வாறு இறங்க முடியும்? பொதுச் சொத்து என்றிருந்தால் அற்ப காரணங்களுக்கெல்லாம் தகராறு முளைக்கும். மேலும், தனியார் சொத்து இருந்தால் அதில் பெருத்த அனுகூல மிருக்கிறது; அது இயற்கை உணர்வுகளுக்கு ஒத்திருக்கிறது. 'ஒருவன் தன்மேல் செலுத்தும் அன்பு வியர்த்தமானதல்ல' என்று அரிஸ்டாடில் கூறுவது ஆடம் ஸ்மித் கூறுவதைப் போலவே இருக்கிறது. இப்போதும் வழங்குகிற வாதத்தை மேற்கொண்டு, சொத்து பொதுவுடைமையாக இருந்தால், அது தயாளம் என்ற பெருங்குணத்தை நசுக்கிவிடும் என வலியுறுத்து கிறார். என்றாலும், இவருடைய நிலை எதிர்மறையாகத்தான் இருக்கிறது. அவசர அவசரமாய் மாற்றம் வேண்டுமெனப் பல்லாண்டு பாடும் சீர்திருத்தக்காரர்களுக்கு எதிராக அரிஸ் டாடில் கூறுவதாவது: இத் தீமைகள் இந்த (தனிவுடைமை) நிறுவனத்தால் ஏற்பட்டவை அல்ல. மனித இயல்பில் உள்ள குறைபாடுகள் காரணமாகவே இத் தவறுகள் ஏற்படுகின்றன. இந்த இயல்பை மாற்றினாலொழிய, இந்த நிறுவனத்தை ஒழிப்ப தால் என்ன பயன்? இந்த நிறுவனத்தை நன்மைக்கும் பயன் படுத்தலாம்; தீமைக்கும் பயன்படுத்தலாம். 'இப்போதுள்ள அமைப்பை அதன் கீழ் வாழ்கிறவர்கள் ஒழுக்க நெறியாலும் விவேகச் சட்டங்களாலும் அழகுபடுத்தினால், இதைவிடச் சிறந்த அமைப்பு வேறு ஏது?'[2] எனவே, அரிஸ்டாடில் சுட்டிக் காட்டும் இலட்சியம் தனிவுடைமையும் பொது நன்மையும் ஆகும். இதையே இந்நாள் மொழியில் கூறுவதானால், தருமகர்த்தா ஆட்சி முறை அமைப்பே சிறந்ததாகும். தனிவுடைமை இருக்கலாம்; அவ்வாறிருந்தால், ஒருவர் மிகவும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். மற்றவர்களின் நன்மைக்காகவே தம் சொத்துப் பயன்படவேண்டும் என்ற உயர்வான எண்ணம் செல்வர் களிடம் இருக்கவேண்டும். இந்த நிலை கிறித்துவ சமதர்மவாதி களின் நிலையைப் பெரிதும் ஒத்திருக்கிறது.

[1] அதே ஏடு, புத்தகம் II, அதிகாரம் 5, பக்கம்-48.
[2] அதே ஏடு, புத்தகம் II, அதிகாரம் 5, பக்கம்-49.

பொதுவுடைமைபற்றிய தகராறு போக, அரிஸ்டாடிலின் பொருளாதாரப் போதனையின் முக்கியப் பகுதியை அரசியல் (Politics) முதல் புத்தகத்தில் காணலாம். அவர் கூறும் பொதுவான நாட்டுக்கொள்கையினின்றும் பொருளாதார விவாதம் இடம் பிடித்துக்கொள்கிறது. இயல்பாகவே இருக்கும் தன்மை அரசாங்க அமைப்புக்கு இருக்கிறது. குடும்பம், கிராமம் ஆகியவற்றின் முழு வளர்ச்சியே இது. எனவே, தருக்க ரீதியாக அரிஸ்டாடில் முதற்கண் குடும்பப் பொருளாதாரத்தை ஆராயத் தொடங்குகிறார். குடும்பம் என்ற அடிப்படையான மூன்று உறவு முறைகளை மனத்தில் கொள்ளவேண்டும். ஆண்டான் அடிமை உறவு முறை, கணவன் மனைவி உறவு முறை, பெற்றோர் குழந்தை உறவு முறை என மூவகை. குடும்பப் பொருளாதாரத்தின் நான்காவது இறுதிப் பகுதி நிதிக்கலையாகும். இதைக் குடும்பப் பொருளாதாரத்துடன் குழப்பிக்கொள்ளக் கூடாது. வசதி செய்து கொடுப்பதே நிதியின் தொழில்; கொடுத்த வசதியைப் பயன்படுத்துவதே குடும்பப் பொருளாதாரத்தின் தொழில்.[1]

'ஆண்டான் அடிமை'[2] உறவுநிலையை விளக்குகின்ற பிரிவில் அரிஸ்டாடில் அடிமைகள் இருக்கவேண்டுமென வாதம் புரிகிறார். இது இக்கால மக்களின் காதுகளில் நாராசமாய் ஒலிக்கிறது. ஆள்வது, ஆளப்படுவது என்ற கொள்கை தவிர்க்க முடியாதது, பயனுள்ளது என அரிஸ்டாடில் கூறுகிறார். 'இயல்பிலேயே அடிமைகள்' இருப்பதாகவும் சொல்கிறார். மனிதனுக்கும் மிருகத்துக்கும், உடலுக்கும் உயிருக்கும் உயர்வு தாழ்வு இருப்பதைப் போலவே, இந்த அடிமைகள் மிகத் தாழ்ந்திருப்பதாகச் செப்புகிறார். இவற்றில் அடிமை வாழ்வு அனுகூலமானது. இதற்கு இருக்கக் கூடிய எதிர்ப்பையும் அரிஸ்டாடில் உணர்கிறார். 'இயற்கையின் உத்தேசத்துக்கு மாறுக, உடல்கட்டு உள்ளவர்கள் சுதந்திரத் தாகமுள்ள மனவுறுதி அற்றவர்களாக இருக்கலாம்; உள்ள உறுதியுள்ளவர்கள் உடல்கட்டில்லாதவர்களாக இருக்கலாம்.'[3] 'இயல்பான அடிமைகள்' இருப்பதாக ஒப்புக்கொண்டாலும், ஏதோ ஒரு காலத்தில் 'இயல்பான அடிமை' என்ற அடிப்படையில் மக்களை அடிமைகளாகவும் ஆண்டான்களாகவும் இயற்கை பிரித்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்வதற்கு மிக்க நம்பிக்கை வேண்டும். இது மிகக் கடினம். எனவேதான், அரிஸ்டாடில்

[1] அதே ஏடு, புத்தகம் I, அதிகாரங்கள் 3, 8.
[2] அதே ஏடு, புத்தகம் I, அதிகாரங்கள் 5, 6.
[3] அதே ஏடு, புத்தகம் I, அதிகாரம் 6, வெல்டன் மொழிபெயர்ப்பு, பக்கம்-13.

இயல்பான அடிமைகள், சட்டரீதியான அடிமைகள் என வேறு படுத்திக் கூறுகிறார். சட்டம் என்பது வழக்காறே. இதன்படி போரில் வெற்றியால் கொண்டவை எல்லாம் வென்றவரின் சொத்தாகும். இந்த விவாதம் முழுவதுமே விசித்திரமாகவும் நம்பிக்கை ஏற்படுத்தா வகையிலும் உள்ளது. அடிமைகள் நன்முக நடத்தப்படுகிறார்கள்; அடிமைத் தனம் இல்லாவிட்டால், அந்த அடிமைகள் நிலை மேலும் மோசமாயிருக்கும் என்ற கருத்தின் பிரதிபலிப்பாகவே இதைக் கொள்ளவேண்டும்.

சொத்து அடைதல் அல்லது செல்வம் சேர்த்தல்[1] என்ற பிரச்சினையை எடுத்துக்கொண்டோமானால், அது எந்த அளவு குடும்பப் பொருளாதாரத்தின் அங்கம் என்பதைக் காட்டுவதில் அரிஸ்டாடில் அக்கறையுள்ளவராயிருக்கிறார். செல்வம் சேர்க்கும் ஒரு பகுதி குடும்பப் பொருளாதாரத்தைச் சேர்ந்ததென்பது தெளிவு; அவசியமான பொருள்கள் ஏற்கெனவே இராவிட்டால், அவற்றைக் குடும்பத்துக்கு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இதிலிருந்து விசித்திர வேறுபாடு ஒன்று ஏற்படுகிறது. உண்மையான செல்வம் என்றும், போலியான செல்வம் என்றும் இருவகைச் செல்வங்கள் இருக்கின்றன. உண்மையான செல்வத்திற்கு வரையறை இருக்கிறது. போலியான செல்வத்திற்கு வரையறையில்லை. மனிதனின் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை இயற்கை அளிக்கிறது. இவை பல வழிகளில் கிடைக்கின்றன. எனவே, மனிதனின் வாழ்வை, நாடோடி, விவசாயி, கொள்ளைக்காரன், மீனவன், வேட்டைக்காரன் என வகைப்படுத்தலாம். இவ்வாறு கிடைக்கிற சொத்து 'இயற்கை அளிப்பதாகும்.' இச் சொத்து மட்டுமே உண்மையான செல்வம் ஆகும். இக் கூட்டத்தில் கொள்ளைக்காரனைச் சேர்த்திருப்பதைத் தவிர, இந்த வகைப்பாடு பிசியோகிராட்ஸ் வகைப்பாட்டுக்கு முன்னோடியாக இருக்கிறது. இங்குக் கூட உண்மையான செல்வத்தைப் பொறுத்தும், வாழ்க்கைத் தேவையைப் பொறுத்தும் குறித்த வரையறை இருக்கிறது. குடும்பம், நாடு ஆகியவற்றின் தேவைகளையும் காரியங்களையும் பொறுத்துச் செல்வம் வரையறைக்கு உட்பட்டே இருக்க வேண்டும்.

இதற்கு மாறுக வேறொரு வகை நிதி[2] இருக்கிறது. இதற்கு இயல்பாக இருக்கும் தன்மையில்லை. பயன்பாட்டு மதிப்புக்கும், பண்டமாற்று மதிப்புக்கும் உள்ள வேற்றுமையின் அடிப்படையில் இது உள்ளது. ஒவ்வொரு பொருளுக்கும் இருவகைப் பயன்

[1] அதே ஏடு, புத்தகம் I, அதிகாரம் 8.
[2] அதே ஏடு, புத்தகம் I, அதிகாரம் 9.

உண்டு. காலணி காலுக்குப் பாதுகாப்பாக உள்ளது. இது ஒரு வகைப் பயன். காலணியைக் கொடுத்துவிட்டு வேறு பொருளை வாங்கிக்கொள்ளலாம். இது மற்றொரு வகைப் பயன். நாம் பண்டைய பண்டமாற்று நிலையில் இருக்கும்வரையில் இயல்பானதைப் பற்றிமட்டுமே நமக்கு அக்கறை யுண்டு. சில்லறை வியாபாரம் ஏற்பட்டவுடன் இந்த நிலை மாறிவிட்டது. இப்போது பண்டமாற்று 'தேவையைப் பூர்த்திசெய்வது என்ற நிலையைக் கடந்து அப்பாலும் போய்விட்டது.' உண்மைத் தேவையைப் பூர்த்திசெய்வதற் குரிய எளிய பண்டமாற்றிலிருந்து வர்த்தகத் துறையில் நிதி எப்போது புகுந்ததோ அப்போதே தீமையும் இயல்பாகவே ஏற்பட்டுவிட்டது. நாணயச் செலாவணி அமலுக்கு வந்ததும் இந்த நிலை படிப்படியாக முன்னேறியுள்ளது. இது ஜெவான் பாடப் புத்தகத்தில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இயல்பான பொருளில் நிதி என்பது வீட்டுப் பொருளாதாரத்தின் ஓர் அங்கமாகும். இயல் பற்ற நிதி அவ்வாறல்ல. அது பரிமாறுவதுமூலம் பணத்தை உற்பத்தி செய்கிறது. இங்குச் செல்வம் வரையறை யற்றதாகும். ஒன்று நல்லது, மற்றது கெட்டது. வாழ்க்கைத் தேவையைப் பெறுவது, 'இயற்கை ஏற்படுத்தவேண்டிய வசதிகளைப் பெறுவது' நல்லது. மற்றது வெறும் பண உற்பத்தி மட்டுமே. முன்னதைப் போற்றிப் புகழலாம். பின்னதால் ஒருவர் வாழ்வு மற்றவர் அழிவில் முடியும். நிதியின் கொடிய அமிசங்களில் மிகக் கொடுமையானது கடும் வட்டி வாங்குதலே யாகும். இங்குப் பணம் இலாபத்தையே உற்பத்தி செய்கிறது. எதற்கு உத்தேசிக்கப்பட்டதோ அதிலிருந்து வழுவி வேறு காரியத்துக்குப் பயன்படுகிறது.

நல்வகை நிதி வீட்டுப் பொருளாதாரத்தைச் சேர்ந்தது. விவசாயம், தேனீ வளர்த்தல், கால்நடை வளர்ப்பு முதலியன இதன் பாற்படும். இயல்பற்ற நிதி வணிகத்தைச் சேர்ந்தது. வியாபாரம், கடும் வட்டிக் கடன், கூலிக்கு மாரடிக்கும் தொழில் ஆகியவை இதன்பாற்படும். இவை தவிர, மூன்றுவது வகை நிதி இருப்பதாகவும் அரிஸ்டாடில் குறிப்பிடுகிறார். இது இடைநிலைப்பட்டதாகும். மற்ற இரண்டிற்கும் பொதுவான அமிசங்கள் இதில் இருக்கும். இவ்வகை மண்ணிலிருந்து கிடைக்கிற சுரங்கப் பொருள் போன்றவற்றைக் குறிக்கிறது. மரம் அறுத்தலும், சுரங்கம் வெட்டுதலும் இதன்பாற்படும். இத் தொழில்களை இப்போது நாம் வெட்டியெடுக்கும் தொழில்கள் எனக் குறிப்பிடுகின்றோம்.

அரசியல் (Politics) தவிர, நிகோமஷேன் ஒழுக்க நெறி (Nicomachaean Ethics) யிலும் (புத்தகம்-V, அத்தியாயங்கள்

7, 8) உள்ள வாசகம் ஓரளவு பொருளாதார முக்கியத்துவம் உள்ளதாகும். தனிப்பட்ட விவகாரங்களில் நீதிக்குப் பாடுபடுகிறார் அரிஸ்டாடில். இவருடைய கொள்கை கணக்கு வீதாசார அடிப்படையில் அமைந்துள்ளது. இவருடைய போதனையின் சாராம்சமாவது, 'மனிதர்கள் தங்களிடம் உள்ளதைப் பரிமாறிக் கொண்ட பிறகு, முன் வைத்திருந்த மதிப்புள்ளவற்றையே இப் போதும் வைத்திருந்தால், குறைவோ மிகுதியோ இல்லாதிருந் தால், அவர்களுக்குச் சொந்தமானதை அவர்கள் வைத் திருப்பதாகக் கருதப்படுவார்கள். அதனால் அவர்கள் நஷ்ட மடையவுமில்லை, இலாபமடையவுமில்லை.'[1] இக் கொள்கையை எவ்வாறு நிறைவேற்றுவது ? பண்டமாற்று இருக்கவேண்டு மானால் பொருள்களுக்கு மதிப்பிருக்கவேண்டும். இந்த மதிப்பை ஒப்பிட்டுப்பார்க்க வகையிருக்கவேண்டும். இதற் காகவே பணம் படைக்கப்பட்டது. அதன்மூலம் அனைத்தையும் மதிப்பிட முடியும். உதாரணமாக, சக்கிலியையும் வீடு கட்டு வோனையும் எடுத்துக்கொண்டால், எத்தனை செருப்புகள் ஒரு வீட்டுக்குச் சமம் என்பதைப் பணம் நிர்ணயிக்கிறது. 'எத்தனை சக்கிலி இத்தனை வீடு கட்டுவோன் என்பதைப்போல, எத்தனை செருப்புகள் ஒரு வீட்டுக்கு அல்லது உணவுக்குச் சமம் என்பது பெறப்படும்.' பரஸ்பர சேவையின் தேவையே மக்களைப் பின்னிப் பிணைத்து ஒரு சமுதாயமாக்கி வைத்துள்ளது. பணமே இத் தேவையின் அங்கீகாரப் பிரதிநிதியாகும். இங்கு அரிஸ்டாடில் கூறுவதாவது, இயல்பாக இருக்கும் தன்மை பணத்திற்கு இல்லை. வழக்காறாக இருக்கும் தன்மையே அதற்கு உள்ளது. எனவேதான், அதைப் பணம் என வழங்குகிறோம்.[2] அதை மாற்றவும், பயனற்றதாக்கவும் நமக்குச் சக்தி உண்டு. இக் கொள்கை 'பணம் செயற்கைச் சட்டத்தால் படைக்கப்பட்டது' என்ற 'நாப்' கொள்கைக்கு ஒத்திருக்கிறது. எதிர் காலப் பரிமாற் றங்களுக்குப் பணம் பயன்படும். ஒரு பொருளை நாம் இப்போது விரும்பாவிட்டாலும், அதை நாம் விரும்பும்போது அதைப் பெறு வதற்குப் பணம் உறுதுணையாக இருக்கிறது. பணத்தின் மதிப்பு எப்போதும் ஒரே மாதிரியானதாக இராவிட்டாலும், மற்றவற்றை விட அது அநேகமாக ஒரே மதிப்புள்ள தன்மை உடையதாக இருக்க முயலுகிறது. பணத்தின் தன்மை, அதன் அலுவல்கள் குறித்த சில பழம்பெரும் கொள்கைகளை அரிஸ்டாடில் அறிந்தே இருக்கிறார்.

[1] ஒழுக்க நெறிகள், புத்தகம் V, அத்தியாயம் 5, வெல்டன் மொழிபெயர்ப்பு, பக்கம்-149.

[2] அதே ஏடு, பக்கம்-153.

மெக்கானிக்பற்றிய அரிஸ்டாடில் கருத்தும் பண்டைய எழுத்தாளர்களின் கருத்தை ஒத்தேயிருக்கிறது. இதையும் இங்குக் குறிப்பிடுவது அவசியம். ஒரு நாடு இருப்பதற்கு இன்றியமை யாதவர்கள் அனைவரும் அதன் குடிமக்களாகக் கருத முடியாது. தலைசிறந்த நாட்டிலே (வேறு எங்கு எப்படியிருப்பினும்) குடிமை உரிமை மெக்கானிக்குக்கு வழங்கப்படமாட்டாது.[1] எக்லிஸியாஸ் டிகஸ் புத்தகத்தில் (Book of Ecclesiasticus) கைவினைஞர்களைப் போற்றிப் புகழ்பாடும் வாசகம் ஒன்று இருக்கிறது. இது அதை ஒத்திருக்கிறது. 'இவர்கள் இல்லையேல்' நகரத்தில் எவரும் குடியிருக்க முடியாது. என்றாலும் 'இவர்களுக்குப் பொதுச்சபை களில் இடம் இருக்கக் கூடாது.'[2]

பொருளாதாரக் கொள்கையை திட்டவட்டமான வடிவில் தொடர்பான முறையில் சமைப்பதற்கு அரிஸ்டாடில் பெரிதும் முயன்றுள்ளார். எனவே, எந்த அளவு வெற்றி பெற்றுள்ளார் என் பதை இங்கே சுருக்கவகையில் குறிப்பிடுவது நல்லது. நிதிக்கும் வீட்டுப் பொருளாதாரத்துக்கும் உள்ள உறவு குறித்து இவருடைய ஆரம்ப விவாதம் மெய்யான செல்வம் ஏற்படுத்துவதில் இயற் கையின் உயர் இடம்பற்றிய பிசியோக்ராட்ஸ் கொள்கையின் அடிப்படையில் ஓரளவு அமைந்துள்ளது. இங்குச் செல்வம்

[1] அரசியல் புத்தகம் III, அதிகாரம் 5, வெல்டன் மொழிபெயர்ப்பு, பக்கம்-113.

[2] எக்லிஸியாஸ்டிகஸ் (Ecclesiasticus) XXXVIII, V, 32, 33. இதே பொருள் பற்றி ஃஸெனோபனில் (Xenophon) உள்ள நிகரான கருத்து (பொருளாதாரம் - Economicus IV 2, 3, சுவாரசியமானது. கீழ்த்தரக் கலைகளை வெறுப்பதன் காரணங் களை இவர் இங்கே விளக்குகிறார். 'இவை தொழிலாளர்களின், நிர்வாகிகளின் உடலைப் பாழாக்குகின்றன. உட்கார்ந்த நிலையிலும், உட்புறப் பகுதிகளிலும் பெரும்பாலும் வாழ வேண்டிய நிலை ஏற்படுகிறது. சில வேலைகளில் தெருப்பின் முன் நின்றே நாளைக் கழிக்க வேண்டி வருகிறது. இதனால் மக்களின் உடல் சோம்பிவிடுகிறது. உற்சாகம் குன்றிவிடு கிறது. அவர்களுடைய மனம் நோய்வாய்ப்படுகிறது. அரு வருக்கத்தக்க இத் தொழில்கள் காரணமாக ஓய்வே கிடைப்ப தில்லை. சமூக வாழ்வு இவர்களுக்கு இல்லை. எனவே, இத்தகைய மனிதர்கள் கெட்ட நண்பர்கள் ஆகிவிடுகின்றனர். அவர்கள் தங்கள் நாட்டின் சுதந்திரத்தைக் கட்டிக்காப்பதில் அக்கறை யில்லாதவர்களாகிவிடுகின்றனர். எப்போதும் போர் புரிவதையே வழக்கமாகக்கொண்ட சில நாடுகளில் பரி பூரண குடிமகன் எவனும் இத்தகைய இழிதொழில் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.' (லெயிஸ்ட்னர் மொழிபெயர்ப்பு, கிரேக்க நாட்டுப் பொருளாதாரம்-பக்கங்கள். 39, 40. லோப் பதிப்பையும் பார்க்கவும். பக்கம் 391.)

என்பது ஒழுக்க முக்கியத்துவமுள்ளது. உண்மையில் உணரப் படும் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கே இது சம்பந்தப்படுகிறது. இயல்பற்ற நிதியை அல்லது வெறும் பணச் சேர்க்கையை இவர் கண்டிப்பது பயன்பாட்டு மதிப்புக்கும் பண்டமாற்று மதிப்புக்கும் உள்ள வேற்றுமையைத் தீவிரமாக ஆராய்ந்ததன் அடிப்படையில் அமைந்துள்ளது. இவர் நீதியை நன்கு அலசி ஆராய்ந்துள்ளார். பண வளர்ச்சியையும், அதன் அலுவல்களையும் ஆராய்ந்துள்ளார். பணத்திற்கும் செல்வத்திற்கும் உள்ள வேற்றுமையை நன்கு உணர்ந்துள்ளார். இவர் கருத்தில் பணம் என்பது பண்டமாற் றுக்குப் பயன்படும் பொருள்மட்டுமே. இதனால்தான், கடும் வட்டி வாங்குவதை அவர் கண்டிக்கிறார். அதே போல், மூல தனத்தின் தன்மையை அவர் உணர்ந்தாரில்லை. வெறும் பண மாற்றம் பயனற்றதே. முடிவாகவும் இலட்சிய நீதியாகவும் சம மதிப்புள்ள பொருள்களின் வெறும் பரிமாற்றமேயாகும். இயல் பற்ற நிதி குறித்து இவர் கூறும் கருத்துக்கள் வெறும் பொருள் சேர்க்கையின் முயற்சி என்ற நிலையில் பார்த்தால், மார்க்ஸ் கருத் துக்களோடு ஒத்துவருகின்றன. உபரி மதிப்புப் பெற மூலதனத் துக்குள்ள அகோரப் பசியையே இவை குறிக்கின்றன. மதிப்பு விஷயத்தில்கூட, உட்பொருள் விளக்கம் தேடுபவர்கள் வரிசை யில்தான் அரிஸ்டாடில் இருக்கிறார். பரஸ்பர சேவைத் தேவை யில்தான் மதிப்பு ஏற்படுகிறது. இத் தேவைக் கொள்கைதான் சமுதாயத்தைப் பின்னிப் பிணைத்து வைத்துள்ளது. பொருளா தாரக் கொள்கைபற்றிய அரிஸ்டாடில் சித்தாந்தத்தின் முக்கிய அமிசங்கள் இவையேயாகும்.

பொருளாதார விஞ்ஞானத்துக்குச் சில கரு அமிசங்களை நல் கிய மூன்றாவது கிரேக்க எழுத்தாளர் ஃஸெனோபன் (Xenophon) ஆவார். இவர் எல்லா விஷயங்களையும் பிரத்தியட்ச உணர்வுடன் அணுகினார். இவருடைய சாதனை பொதுவாக அங்கீகரிக்கப் பட்டுள்ளதைவிட அதிகமாகும். இவருடைய அனுமானம் மிகக் குழப்பமானதா யிருந்தபோதிலும் (அது பரவாயில்லை என்றே சொல்லவேண்டும். ஒரு பிரச்சினைக்குத் தவறான தீர்வு கொடுத்தபோதிலும்) பிரச்சினை இருக்கிறதென்று உணர்ந்த வரையில் அது முன்னேற்றந்தானே! எஸ்டேட் நிர்வாகக் கொள்கைகள் பொருளாதாரத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன. இதில் ரஸ்கின் முறையிலேயே செல்வம்பற்றிய ஆராய்ச்சி ஆரம்பிக்கப்படுகிறது. செல்வம் என்பது பயன்படுத்துபவருக்கு மட்டுந்தான் செல்வம். எப்படிப் பயன்படுத்துவது எனத் தெரிந் திருக்கிற பொருள்கள்மட்டுமே பயனுள்ள பொருள்கள். எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியாதவனிடத்தில் செல்வம் இருந்து

என்ன பயன்?[1] மேலும், தேவைகளின் அடிப்படையில் செல்வத்துக்குப் பொருள் விளக்கம் கொள்ளவேண்டும். ஒருவன் ஏழையாயிருக்கலாம்; மற்றொருவன் பணக்காரனுயிருக்கலாம்; என்றுலும், முன்னவன் தேவைகள் குறைவாகவும், போதும் என்ற மனமுள்ளவனுகவும் இருந்து, பின்னவன் தேவைகள் அதிகமாகவும், ஊதாரியாகவும் இருந்தால் உண்மையில் அந்த ஏழையே செல்வனுவான். 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற தத்துவம் இதில் பொதிந்திருக்கிறது. முக்கியமாக, ஃஸெனேபன் விவசாய எழுத்தாளர் ஆவார். பல நூற்ருண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்த குவாசினே, பிசியோக்ராட்ஸ் வழியினருக்கு முன்னேடியாகத் திகழ்வது வியக்கத்தக்க நிலையே! 'வேளாண்மை கொழித்தால் மற்றெல்லாக் கலைகளும் செழிக்கும். ஆனுல், நிலமகள் வறிதே கிடந்தால் மற்றக் கலைகளெல்லாம் நசித்துப்போகும்.[2] வேளாண்மையை இவர் புகழ்ந்திருப்பது பிசியோக்ராட்சின் கருத்தைப் போலவே உள்ளது. வேளாண்மை பயில்வதற்கு எளிது. ஒருவன் கவனமுடன் பாடுபடுவானுனுல் நிலமடந்தையைவிட வேறு யார் அதிகப் பலன்தர முடியும்? நிலத்திலிருந்து எல்லாம் கிடைக்கின்றன. வேளாண்மைக் கலையே சிறப்பான கலை. வேலையாட்களுக்குப் பிடித்தமானது; மனைவிக்கு மன மகிழ்வு ஏற்படுவது; சிறுவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்க வல்லது; நண்பர்கள் ஒப்பியது[3]. இதைவிடச் சிறந்தது வேறு எந்தக் கலை? இக் கலையே எல்லோருக்கும் இனியது. நிலத்தையும் தொழிலாளரையும் முதன்முதல் சமமாக அங்கீகரித்தவர் ஃஸெனேபன் எனக் கூறப்படுகிறது. வேளாண்மை அல்லது நிலம் நற்பொருள்களை வரையாது வாரி வழங்குகிறதென்றுலும் 'உழைத்தால்தான் இப் பயன் கிட்டும்.'[4] உழைப்பிற்கேற்ற ஊதியம் வாராக் கொள்கையையும் ஃஸெனேபன் தொட்டுச் செல்வதாகத் தெரிகின்றது. தங்கள் பண்ணைக்கு எத்தனை இணை காளைமாடுகள் வேண்டும்; எத்தனை தொழிலாளர்கள் வேண்டும் என்பதை நிலக்கிழார்கள் எளிதில் கூற முடியும். எவரேனும் உரிய அளவுக்குமேல் இவற்றைப் பயன்படுத்தினுல், அவர்கள் அதனுல் இழப்புற வேண்டிவரும்.[5]

'ஏதென்சு நகர வருவாயைப் பெருக்கும் வழிகள்' என்ற கட்டுரையில்[6] ஃஸெனேபன் திறமையுள்ளவராகவும், கற்றறிந்

[1] லோப் மொழிபெயர்ப்பு, பக்கங்கள்-367, 409.
[2] அதே ஏடு, பக்கம்-405.
[3] அதே ஏடு, பக்கம்-517.
[4] அதே ஏடு, பக்கம்-401.
[5] லெயிஸ்ட்னர் கிரேக்கப் பொருளாதாரம் பக்கம்-16; வழி வகைகள் முதலியன,
[6] லெயிஸ்ட்னரில் அச்சிட்டுள்ளது. கிரேக்கப் பொருளாதாரம்,

தவராகவும், அதே சமயத்தில் குழப்பமுள்ளவராகவும் காணப் படுகிறார். 'குடிமக்களின் வறுமைக்குப் பரிகாரம்' காணவே இவர் இங்கு முயற்சிசெய்கிறார். எனவே, அரசாங்க வரவு செலவை இங்கு ஓரளவு ஆராய்கிறார்; வழக்கமா யிருப்பதைவிட இந்த இடத்தில் தாராளக் கருத்து உடையவராகக் காணப் படுகிறார். அந்நிய நாட்டிலிருந்து வந்து தங்கியிருப்பவர்கள் வருமானத்திற்கு மூலகாரணமாகக் கருதப்படுகிறார்கள். இவ் வகுப் பினருக்குள்ள தகவின்மைகள் அனைத்தையும் நீக்கவேண்டு மென ஃஸெனே வாதிக்கிறார். ஏராளமான அந்நியர்கள்-வசதியுள்ள அந்நியர்கள்-ஏதென்சில் குடியேற வேண்டுமென அவர் விரும்புகிறார். இக் கொள்கையை அனுசரிக்க வியாபாரி களுக்கு அவர் சலுகைகள் காட்டத் தயாராயுள்ளார். திருவிழாக் களில் இலவச இருக்கையும், விருந்துகளுக்கு வரவேற்பிதழும் அந்நியர்களுக்கு வாரிவழங்க வேண்டுமென ஃஸெனே பின்பு கூறுகிறார். வியாபாரிகளுக்கும் கடைகளுக்கும் . இடவசதி ஏற்படுத்தவும், சில்லறை விற்பனையாளர்களுக்கு வீட்டுவசதி அளிக்கவும் தனி நிதி திரட்டவேண்டுமென அவர் ஆலோசனை கூறுகிறார். சமாதானம் நீடித்துள்ள நகரங்களே செல்வச் செழிப்புடன் இருக்கின்றன. போரினால் அளவற்ற செல்வம் கிடைத்தாலும் அமைதி கொலுவீற்றிருக்கும் காலத்தில்தான் செல்வம் கிடைக்கும்.

வெள்ளிச் சுரங்கம் குறித்து ஃஸெனே பின்பு கூறும் கருத்துக்கள் விசித்திரமாய் இருக்கின்றன. இத் தொழிலில் ஏறுமுக நியதி பயன்படுகிறது. எவ்வளவுக் கெவ்வளவு அதிகத் தொழிலாளர்களை இத் தொழிலில் ஈடுபடுத்துகிறோமோ அவ்வள வுக் கவ்வளவு வெள்ளி உற்பத்தி அதிகரிக்கும். வேறு தொழிலில் தொழிலதிபர்கள் ஏராளமாக இருந்தால், அவர்கள் தொழில் முடங்கி திவாலாகிவிடுவார்கள். பொருள்கள் அதிகமாகக் குவிந்தால் விலை குறைந்துபோகும். ஆனால், வெள்ளியின் தேவை குறையவே குறையாது. 'வெள்ளிச் சுரங்கத்தில் வெள்ளி இல்லாது போகாது; வெள்ளியின் மதிப்பு ஒருபோதும் குறையாது.' இந்த அபிசம் தங்கத்திடம் இல்லை. 'ஏராளமான தங்கம் கிடைத்தால் அதன் மதிப்புக் குறைந்துபோகிறது. இதனால் வெள்ளியின் விலை ஏறுகிறது' எனவே, நகரங்கள் அடிமைகளை விலைக்கு வாங்கி அவர்களை வெள்ளிச் சுரங்கத்தில் வேலைசெய்யச் சொல்லவேண்டும். ஏராளமான வெள்ளிச் சுரங்கங்கள் ஏற்படுத்துவதில் உள்ள தீங்கைத் தவிர்ப்பதற்காகப் பலர் ஒன்றுகூடிக் கூட்டுத்தொழில் புரியவேண்டுமென ஃஸெனேபன் கூறுகிறார்.

ஃஸெனோபன் எழுதியுள்ளவற்றை ஓரளவே கவனிப்பது என்று வைத்துக்கொண்டாலும், சைரோபீடியாவில் (Cyropaedia) வரும் வாசகத்தைக் கவனிப்பது அவசியமாகும். இதையே மார்க்சும் மற்றவர்களும் மேற்கோள் காட்டுவதால், இது பொருளாதார இலக்கியத்தில் தனி இடம் பெற்றுள்ளது. சமையற் கூடத்தில் தொழில் பிரிவினைக் குறித்து இதில் சொல்லப்பட்டு இருக்கிறது. ஒருவர் மீனை வேகவைக்கவேண்டும். மற்றவர் அதைப் பொரிக்கவேண்டும். இங்கே பல நூற்றாண்டுகள் ஆனபோதிலும் நிலைமை பிற்போக்கில்தான் உள்ளது.[1]

[1] பெரிய நகரங்களில் மற்றக் கலைகள் அபிவிருத்தி செய்யப் பட்டிருப்பதைப் போலவே அரண்மனையில் உணவு வகைகள் சிறப்பாகத் தயாரிக்கப்படுகின்றன. சிறு நகரங்களில் ஒரே தொழிலாளி நாற்காலி, கதவுகள், பெஞ்சுகள், மேசைகள் செய்பவனுகவும், வீடு கட்டுபவனுகவும் இருந்தபோதிலும், தன் வாழ்வுக்கு வேண்டிய வேலை கிடைப்பது அரிதா யிருக்கிறது. ஒருவன் பல தொழில்கள் செய்தால், அவன் எத் தொழிலிலும் நிபுணனுயிருக்க முடியாது. இதற்கு மாருக பெரிய நகரங்களில் பலருக்கும் பல தேவைகள் இருக்கின்றன. எனவே, ஒருவன் ஒரு தொழிலை மட்டும், ஏன் ஒரு தொழிலின் பகுதியை மட்டும் செய்தால் அதுவே அவனுக்குப் போது மானதாகும். ஒருவன் ஆண்களுக்குச் செருப்புத் தைத்தால், மற்றவன் பெண்களுக்குச் செருப்புத் தைக்கலாம். ஒருவன் செருப்புத் தைக்கலாம்; வேருெருவன் அதற்கு வேண்டிய தோல் வெட்டிக் கொடுக்கலாம். மற்ருெருவன் மேல்பகுதி களைப் பொருத்தித் தைக்கலாம்; பிறிதொருவன் இவற்றில் எதையும் செய்யாமல், பகுதிகளை இணைக்கும் வேலையை மட்டும் செய்யலாம். ஒருபகுதித் தொழில்மட்டும் சிறப்பாகச் செய்பவன் எவன்? தனக்கெனக் குறித்த பகுதியைத் தேர்ந்தெடுத்து அதில்மட்டும் ஈடுபடுபவனே அத் தொழிலைச் சிறப்பாகச் செய்ய முடியும். இதே வாதம் சமையற்கட்டுக்கும் பொருந்தும். ஒருவனே சமையல் வேலையையும் கவனித்துக்கொண்டு, சாப்பாட்டு மேசை சரியாகப் போடுவது, ரொட்டி சுடுவது, புதுப்புது உணவு வகைகளைச் சமைப்பது ஆகிய அனைத்தையும் செய்வானேயாகில், அவன் எந்த வேலையைச் சரியாகக் கவனிக்க முடியும்? அவன் எதையும் செய்ய முடியாது தவிப் பான். இதற்குப் பதிலாக, ஒருவன் இறைச்சியை வேக வைக்க, மற்ருெருவன் அதை வதக்கலாம். ஒருவன் மீனை வேகவைக்கப் பிறிதொருவன் அதை வறுக்கலாம்; வேருெருவன் ரொட்டி சுட்டு, அதிலும் பிரத்தியேக வகைகளை மட்டும் கவனித்துக்கொள்ளலாம். இப்படிச் சமையல் தொழிலைப் பங்குபோட்டுக்கொண்டால், எவனெவன் எதில் திறமையுள்ளவனை அவனவன் அதைமட்டும் செய்து முடித்தால், அச் சமையற்கூடத்தில் தயாரிக்கப்பட்டவை அனைத்தும் முதல்தரமாயிருக்கும். சைரோபீடியா, புத்தகம்-VIII, ii, 5-6; லோப் மொழிபெயர்ப்பு, பக்கங்கள் 333-335.

கிரீஸ் பொருளாதார எண்ணத்தை வெளிப்படுத்திய இம் மும்மூர்த்திகளைத் தவிர, எரிக்ஸியாஸ் என்ற உரையாடலையும் குறிப்பிட வேண்டும். இது செல்வத்தைப் பரிசீலனை செய்வதாக அமைந்துள்ளது. இங்கே பொருட் செல்வமும், பொருள் ரூபமாயிராத செல்வமும் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. எனவே, 'மனிதர்கள் தங்களிடம் உள்ள கலையைப் பயன்படுத்தித் தங்கள் வாழ்க்கைத் தேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.'[1] அரிஸ்டோபேனஸ் எழுதிய எக்லிஸியாசுஸே பற்றியும் இங்கே குறிப்பிடவேண்டும். இது பொதுவுடைமைபற்றிய சிறு ஆராய்ச்சிக் கட்டுரையாகும். மகளிருக்கு வாக்குரிமை வேண்டும் என இக் கட்டுரையில் வற்புறுத்தப்படுகிறது. இக் கட்டுரையில் பல புதிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

ரோம்

ரோம் நாட்டுப் பொருளாதாரக் கொள்கையைச் சுருக்கமாகவே குறிப்பிட்டுவிடலாம். சமூகப் போராட்டத்தில் ரோம் வரலாறு மிக முக்கியத்துவம் உள்ளதாக இருக்கிறது. ஆனால், கொள்கை அளவில் ரோம் அளித்த பங்கு மிகக் குறைவே. ஏதேனும் கொள்கை தந்துள்ளபோதிலும், அதுவும் கிரேக்க நாட்டுக் கொள்கையின் பிரதிபலிப்பாக, எதிரொலியாகவே இருக்கிறது. ரோம் மக்களின் மேதாவிலாசப்படி அவர்களுடைய கொள்கைகள் அவர்களின் நடைமுறைகளில் பொதிந்துள்ளன. அவர்களுடைய சட்டங்களிலும் நீதி முறையிலும் அவை விரவிக் கிடக்கின்றன. அறிவியல் வாதிகளின் கூற்றில் அவை வெளிப் படையாகத் தெரிவதில்லை. ரோமாபுரியில் மிகப் பிரத்தியட்ச உணர்வுள்ள மனிதனே பொருளாதாரக் கருத்துக்களில் மிக அக்கறையுள்ளவனாக இருக்கிறான் என்று ரோஷர் கூறியது மிகப் பொருத்தமாயிருக்கிறது. பொருளாதார முறைகளில் அவர்கள் செல்வாக்குக் கருத்துக்கள் அரசாங்கப் பணியாளர், நியாய மன்றங்கள் குறித்தவையே யாகும். இக் கருத்தும் சம்பிரதாய முறையில் திட்டவட்டமாக அமைக்கப்படவில்லை.

ரோமாபுரி அளிக்கிற பொருளாதாரக் கருத்துச் சிதறல்களின் மற்றோர் அம்சம் ரோமாபுரியின் பெருமை குன்றிய காலத்தில் வெளிப்பட்டமைதான். ரோமாபுரியின் அழிவுநாள் விரைந்து நெருங்குவதை அப்போதே தீர்க்கதரிசிகள் ஊகித்து உணர்ந்து விட்டனர். எனவே, இப் பொருளாதாரக் கருத்துக்களின் அழிவு

[1] லெயிஸ்ட்னர், பக்கம்-41.

நாள் நெருங்கிவிட்டது என்ற சோகக் குரலும், எளிய வாழ்வு மறைந்தொழிவதுபற்றிய புலம்பலும் கலந்துள்ளன. எனவே, ஒருபுறம் அக்காலக் குறைபாடு கண்டிக்கப்படுகிறது; பண்டைய கருத்தின் பொதுஅமிசமாகிய வேளாண்மை போற்றலும், எளிய இனிய வாழ்வு மறைந்தது குறித்துப் பெருமூச்செறிவதும், வரட்டுக் கௌரவம், பேராசை ஆகியவற்றைக் கண்டிப்பதும் மறு புறத்தில் காணப்படுகிறது.

பொருளாதாரக் கருத்துக்களை—இவற்றைக் கொள்கை எனக் கூற முடியாவிட்டாலும்—வாதிப்பதில் ரோமாபுரி நல்கிய பங்கு மூன்று பிரிவுகளாக இருக்கிறது. தத்துவ மேதைகள், வேளாண்மை எழுத்தாளர்கள், சட்ட வல்லுநர்கள் ஆகிய முப்பிரிவினர்கள் இருந்தனர். ஒவ்வொரு பிரிவினர் குறித்தும் சில கருத்துக்களை இங்கே குறிப்பிடலாம்.

தத்துவ மேதைகளை எடுத்துக்கொண்டால், இவர்களுடைய பிரதிநிதிகளாக சிசரோ, செனகா, பிளினி ஆகியவர்களைக் குறிப்பிடலாம். இவர்களை ஒழுக்கநெறிப் போதனையாளர்கள் எனக் கூறவேண்டுமே யன்றிப் பொருளாதார ஆசிரியர்கள் எனக் கூறுவதற்கில்லை. ஏனெனில், அவர்கள் போகபோக்கியத்தைக் கண்டித்தார்கள்; எளிய வாழ்வை ஏற்றிப் போற்றினார்கள்; செல்வத்தை நல்ல வழிகளில் பயன்படுத்தவேண்டுமென வலியுறுத்தினார்கள். இவற்றைக் கூறி முடிப்பதிலேயே அவர்கள் காலங் கழிந்தது. மற்றக் கருத்துக்கள் குறித்து அவர்கள் சொல்லியதில் புதுமை ஒன்றும் இல்லை. சிசரோ, தாம் எழுதிய தொழில்களில் வேளாண்மைத் தொழிலை மிகப் புகழ்ந்துள்ளார். மற்றத் தொழில்களை மிக நிந்தித்துள்ளார்.[1] பண்டைக் கால

[1] 'வாழ்க்கை வசதி தேடுதற்குரிய பல தொழில்களை எடுத்துக்கொண்டோமானால், கனவான்களுக்கு ஏற்ற தொழில்கள் எவை என்றும், இழிவான தொழில்கள் எவை என்றும் நாம் கற்பிக்கப்பட்டுள்ளோம். மக்களின் வெறுப்புக்குப் பாத்திரமாகும் தொழில்கள் இழிதொழில்களென ஒதுக்கப்பட்டுள்ளன; வரி வசூலிக்கும் தொழிலும், கடும் வட்டி வாங்கும் தொழிலும் உதாரணங்களாகும். கூலிக்குமாரடிக்கும் தொழிலும் கனவான்களுக்கு ஏற்றதல்ல; அத் தொழில் இழிவானதாகும். அவர்களுடைய உடல் உழைப்புக்கு ஊதியம் தருகிறோமேயன்றி, அவர்களுடைய கலைத்திறமைக்கல்ல. ஏனெனில், அவர்கள் பெறும் கூலியே அவர்களைக் கொத்தடிமையாக்குகிறது. மொத்த வியாபாரிகளிடம் பொருள்களை விலைக்கு வாங்கி உடனே சில்லறையில் விற்கும் தொழிலும் இழிவானதே. ஏனெனில், பச்சைப் புளுகு இன்றி அவர்கள்

உணர்ச்சி பொருளாதாரக் கொள்கையை ஏன் உருவாக்க முடிய வில்லை என்பதை இவ் வாசகம் நன்கு விளக்குகிறது. ஒரு தொழில் மதிப்பிற் குரியதா என்றுதான் சிசரோ கவனிக்கிறாரே யொழிய அதன் உற்பத்தியைப்பற்றி அவர் கவலைப்படுவதில்லை. மொத்த விற்பனைத் தொழிலை அவர் பாராட்டுவது குறிப்பிடத்தக்க அமிச மாகும். அதுவும் அத் தொழில்மூலம் உள்நாட்டு மாளிகையில் குடியேற முடியுமானால், அது சிறந்த தொழிலாகும். கடும் வட்டி வாங்கும் தொழில் மக்களின் அதிருப்தியை, வெறுப்பைப் பெறு கிறது என்ற சொத்தைக் காரணத்தை முன்னிட்டே இங்கு நிந்திக்கப்படுகிறது. என்றாலும், சிசரோவினால்தான் காட்டோ அடியிற்கண்ட சுருக்கெனத் தைக்கும் விடையிறுத்தார்: 'கடும்

> பெருத்த இலாபம் பெற முடியாது. பொய்கூறுவதைவிடப் பேரிழிவு வேறென்ன வேண்டும்? பொறியியல் திறனாளர்கள் (மெக்கானிக்குகள்) அனைவரும் இழிவான தொழிலில்தான் ஈடுபட்டுள்ளனர். ஏனெனில், வேலைச்சாலை எதுவும் கண் ணியம் உள்ளதாக இருக்க முடியாது. புலன் இன்பங்களுக்குத் துணைபோகும் தொழில்கள் மிக இழிந்தவை.
>
> 'மீன் விற்பவர்கள், கசாப்புக்கடைக்காரர்கள், சமையற் காரர்கள். கோழி வளர்ப்பவர்கள், மீனவர்கள்,' இத்தகைய வர்கள் இழிதொழில்புரிவதாக டெரன்ஸ் கூறுகிறார். வாசனைப் பொருள் விற்பவர்கள், கூத்தாடிகள் முதலியவர்களையும் இப் பிரிவில் சேர்க்கலாம்.
>
> புத்திக்கூர்மை அதிகம் வேண்டியுள்ள சமுதாயத்திற்குப் பெரும்பயன் விளைவிக்கிற தொழில்கள், உதாரணமாக, மருத் துவத் தொழில், கட்டடக் கலை, ஆசிரியத் தொழில் போன்றவை உயர்வானவையாகும். அவற்றைச் செய் பவர்கள் அவற்றால் பெருமையடைகிறார்கள். வியாபாரம், வர்த்தகம் சிறு அளவில் இருந்தால் அது இழிவானதாகும். அதுவே பெருத்த அளவில் மொத்த வியாபாரமாக நடந்தால், அதை இழித்துக் கூற முடியாது. உலகின் பல பாகங்களி லிருந்தும் பல பொருள்களை இறக்குமதிசெய்து வல்லடி வழக்கு, பொய் முதலியவை இன்றிப் பலருக்கும் அவற்றை விற்பனைசெய்தால், அது இழிவானதல்ல. இத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் மனமகிழ்ச்சியுற்று, தாங்கள் ஈட்டிய செல்வம் போதும் எனத் திருப்தியுற்றுக் கடற்பகுதியை விட்டு உள்நாட்டுப் பகுதியில் பெரிய மாளி கையில் குடிபுகுவார்களானால், அத் தொழிலை மிகவும் புகழ வேண்டும். ஆனால், இவை எல்லாவற்றையும்விட வேளாண்மைத் தொழிலே தலைசிறந்ததாகும். அதைவிட இலாபம் தரும் தொழில் வேறு எது? இத் தொழில் மனமகிழ்வு அளிப்பதைப்போல் வேறு எத்தொழில் அளிக்கிறது? சுதந்திர மக்களுக்கு இதுவே மிகப் பிடித்த மான, விருப்பமான தொழில் (தொழில்கள், புத்தகம் I, xiii, லோப் மொழிபெயர்ப்பு, பக்கங்கள் 153-155).

வட்டி வாங்கும் தொழில் எப்படி?' எனக் கேட்ட ஒருவருக்கு 'கொலைத்தொழில் எப்படி?' எனச் சுடச்சுடப் பதிலடி கொடுத்தார்.[1]

'பொருளாதாரக் கருத்துக்கள் குறித்த சேனகாவின் கருத்துக்கள் அவ்வளவு சுவையானவையல்ல. பணமே (பண ஆசை மட்டுமல்ல) எல்லாத் தீங்குகளுக்கும் ஆணிவேர். பொருமையும் பேராசையும் அநீதியின் வித்துக்கள்.[2] இத் தகைய எண்ண அலைகள் உண்மையானவையாகவும் நல்ல முறையில் சொல்லப்பட்டிருப்பவையாகவும் இருந்தபோதிலும், அவற்றை முதலில் கூறியவர் இவரல்ல. என்றாலும், இவர் கூறிய ஒரு கருத்து முக்கியமானதாகும். உலகத்தின் பல பகுதிகளிலும் பல பொருள்கள் விளைகின்றன. இயற்கையன்னை ஆங்காங்கே ஒருவகைச் செல்வத்தை வாரி வழங்கியிருக்கிறாள். எனவே, உலகின் பல பகுதிகளிலும் வாழும் மக்கள் ஒருவரோடொருவர் கலந்து உறவாடித் தங்கள் தேவைகளை ஒருவருக்கொருவர் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்.[3]

பிளினி எழுதிய **இயற்கை வரலாறு** என்ற சிக்கலான நூலில் பணம்பற்றிய சில சுவையான பகுதிகள் இருக்கின்றன. இவர் இங்கு சூஸோவைப் பின்பற்றுகிறார். முதன் முதலாகத் தங்க நகை அணிந்துகொண்டவனே மக்கள் கூட்டத்துக்குப் பெருந்தீங்கு செய்தவனுவான்.[4] இவனைவிடப் பெருங்குற்றம் புரிந்தவன் எவனுமில்லை. 'மனித சமூகத்தின் அழிவுக்காகவே தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது' எனக் காரசாரமாகத் தங்கத்தைத் தாக்குகிறார் பிளினி. பண்ட மாற்று இருந்த எளிய இனிய காலம் எவ்வளவு ஆனந்தமய மானது!

தங்கம் தலைசிறந்ததானதற்குரிய காரணங்களையும் பிளினி கோவையாக எடுத்துரைப்பதில் சளைக்கவில்லை. தீயில் இட்டுப் பொசுக்கினும் தங்கம் தன் குணம் மாறாது. புடமிட்ட பசும்பொன் மாற்றுக் குறையாது. தங்கம் எளிதில் தேயாது. உருக்கி வார்ப்பதற்கு இதைவிடச் சிறந்த உலோகம் இல்லை. இதை எப்படி வேண்டுமானாலும் இழுத்து வளைக்கலாம். இதில் துரு

[1] "Et cum ille, qui quaesierat, dixisset: 'Quid fae nerari?' tum Cato: 'Quid hominem,' inquit, 'occidere.'" (De Officiis, Book II, xxv; Loeb, p. 266.)
[2] De Ira, III, 32, 33.
[3] Ad Helviam Matrem de Consolatione, chap. 9.
[4] பிளினி, புத்தகம் xxxiii, அதிகாரங்கள் 3, 4.

ஏருது.[1] அடுத்தடுத்து மேற்கோள் காட்டப்படுகின்ற பிளினியின் மற்றொரு கருத்து, பண்ணை அளவு பற்றியதாகும். வெர்ஜில் கூறிய பொன்மொழியை இவரும் ஆதரிக்கின்றார். 'பெரும் பண்ணையைப் புகழ்ந்து பாடு. சிறு பண்ணையைச் சாகுபடி செய்' என்பதே இந்தத் தாரக மந்திரம். இத்தாலி அழிந்ததற்கு அதன் பெரும் பண்ணைகள்தாம் காரணம் என அவர் கூறியுள்ளார். 'பெரும் பண்ணையால் அழிந்தது இத்தாலி.'[2]

விவசாய எழுத்தாளர்களை இங்கு அவ்வளவாகக் குறிப்பிட வேண்டியதில்லை. பழங்காலத்தில் வேளாண்மை வகித்த உன்னத நிலைக்கு இவர்கள் எழுதிப்போந்தவையே பெருஞ் சான்று. வேளாண்மைத் தொழிலைத்தான் அவர்கள் நன்கு ஆராய்ந்துள்ளனர். இந்த எழுத்தாளர்களில் காட்டோ, வர்ரோ, கொலுமெல்லா ஆகியவர்கள் முக்கியமானவர்கள். பிளினியைப் பற்றிச் சொல்லவேண்டியதே யில்லை. அவர் புகுந்து புறப்படாத செய்தியே யில்லை.

வேளாண்மை முறைபற்றியே பலரும் எழுதியுள்ளார்களே யன்றி வேறல்ல. அவற்றின் தொடர்பாகவே வேளாண்மைப் பொருளாதாரம் பற்றியும் கருத்தறிவித்துள்ளனர். மேலும், எதிலும் பண்ணை நிர்வாகம் பற்றியே பேசப்படுகிறது. இலாபத்துக் காக நடத்தப்படும் தொழிலாக வேளாண்மை கருதப்படவில்லை. அரிஸ்டாடிலின் சொற்களில் இதைக் கூறுவதனால் இப் பிரச்சினை வீட்டுப் பொருளாதாரம் பற்றியதாகும். நிதியைக் குறித்தல்ல. சிறப்புக்குரிய எழுத்தாளர்கள் வேளாண்மையைப் புகழ்ந்து பாடும்போது, அழிவை நோக்கிச் செல்லும் ரோமாபுரியின் மீட்சிக்கான வழியாகவே அதைப் போற்றிப் புகழ்கிறார்கள். பல நூற்றாண்டுகட்குப் பின்னர் பிசியோக்ராட்ஸ் கூறியதைப் போலவே நெருங்கிவரும் வீழ்ச்சியின் சாயலில் மீட்சிக்கு வேளாண்மையின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது.

வேளாண்மை வானளாவப் புகழப்படுகிறது. 'வேளாண்மை செய்வது மேதாவிலாசத்தைக் குறிக்கிறது' எனக் கொலுமெல்லா கூறுகிறார். இது ஒருபுறமிருக்க, இந்த எழுத்தாளர்கள் அடிமைத் தொழில் திறமையற்றதென நிந்திக்கின்றனர். பிளினி கூறுவதை இக் கருத்துக்கு மேல்வரிச் சட்டமாகக் கொள்ளலாம். 'திருத்தப் பள்ளியிலிருந்து வெளியே அனுப்பப்பட்ட அடிமைகளை வைத்து வேளாண்மை செய்வது மிக மட்டம். நம்பிக்கையற்ற நிலையில்

[1] பிளினி, புத்தகம் xxxiii, அதிகாரம் 19.
[2] பிளினி, புத்தகம் xviii, அதிகாரம் 7.

வாழ்பவர்களை வைத்து எதைச் செய்தாலும் அது உருப்படாது.'[1] வேளாண்மைப் பெருங்குடி மக்கள் தலைசிறந்தவர்கள் என்று காட்டோ கூறுகிறார். எவனொருவன் தான் வாரிசாக அடைந்த சொத்தினைவிட அதிக அளவுள்ள சொத்தினைத் தான் இறக்கும் போது தன் வாரிசுகட்கு விட்டுச்செல்லுகிறானே, அவனே சமூகப் பரோபகாரியாவான் என்ற காட்டோ கருத்து அப்போது மிக்க புகழ்பெற்றது. ஆனால், முக்கியமாகச் சொல்லப்போனால், இந்த எழுத்தாளர்கள் அக்கறைகொண்ட நோக்கங்கள் அடியிற் கண்டவையே: நிலக்கிழாருக்கும், அவருடைய இல்லக்கிழத்திக்கும் காணிக்கை தருதல், மரங்களைத் தறிப்பதற்குரிய வழி வகைகள், உடுப்புகள் வாங்குமிடம், முட்டைக்கோசின் மருந்துப் பொருள்கள், உப்புக்கண்டம் தயாரிக்கும் முறை.

நீதித் துறைக்கு ரோமாபுரி செய்திருக்கும் சேவை மூன்றுவது மகத்தான காரியமாகும். இதைப்பற்றி நாம் இங்கு ஓரளவே குறிப்பிட முடியும். ரோமாபுரி நீதி உலகெங்கும் பரவியது. ரோமாபுரிச் சட்டதிட்டங்கள்தாம் இப்போதைக்குள்ள சட்ட திட்டங்களுக்கு அடிப்படை. பின்னர் பொருளாதாரப் பிரச்சினைகளை அணுகும் முறையும் இவற்றின் செல்வாக்கின் கீழ் வந்தது. நாகரிக உலகத்துக்கு ரோமாபுரி வழங்கிய பெருஞ் செல்வம், அதன் சட்டதிட்டங்கள்தாம் என்று வாதிக்கலாம். இப்போது உலக விவகாரங்களில் பெரும்பான்மையானவை ரோமாபுரிச் சட்ட முறைகளை, அவற்றில் விதித்துள்ள கொள்கைகளை அனுசரித்தே நடைபெறுகின்றன. இரண்டு துறைகளில் இவற்றின் செல்வாக்கை ஆராய்வது நமக்குப் போதுமானதாகும். பண்டைய நாட்களிலிருந்தே ரோம் பல நாடுகளுடனும் தொடர்பு கொண்டிருந்தது. அந்தந்த நாட்டுச் சட்ட முறைகளையும் அறிந்திருந்தது. சின்னஞ் சிறு நாடாயிருந்த காலந்தொட்டுப் பெரு வல்லரசான காலம்வரை இந்நிலை தொடர்ந்திருந்தது. அதன் பொருளாதார, நிதி, வணிக அமைப்பு சிக்கல் நிறைந்து பலதரப்பட்டதாயிருந்தது. ஒப்பந்தம் செய்வதென்றால் என்ன வென்று அவர்களுக்குத் தெரியும்; வங்கி முறையும் கடன் முறையும் அவர்கள் அறிந்தவையே. முதல் துறை வளர்ச்சியின் விளைவாக ரோமன் வழக்குரைஞர்கள் 'பொது உரிமை' என்ற கருத்தை உருவாக்கினர்.

இது அவ்வளவாகப் பொருளாதார முக்கியத்துவமுள்ள கருத்தல்ல என்றாலும், இது பின்னர் பொருளாதார எண்ண

[1] பிளினி, புத்தகம் xviii, அதிகாரம் 7.

வளர்ச்சியைத் தூண்டுகிறது. 'பொது உரிமை' என்ற சட்ட திட்டங்கள் பல நாடுகளுக்கும் பொதுவானவை மாத்திரமல்ல, இயல்பானதும் ஆகும். எனவே, சட்டமன்றம் தயாரித்த சட்ட திட்டங்களைவிட இதற்கு மதிப்பு அதிகம். இக் கோட்பாடு ஒருபோதும் மறையாது. இதன் பொருள் மாறுபடுமே தவிர, கருத்து வீண்போகாது. சில பொருள்கள் 'இயல்பானவை' என்ற அடிப்படையிலேயே ஆடம் ஸ்மித்தும், பிசியோக்ராட்சும் தம் வாதங்களை எழுதியுள்ளனர். இது ஏனைய துறைவளர்ச்சிப் பொருளாதாரக் கொள்கைக்கு வழிகோலவில்லை என்றாலும், ஒப்பந்தம், சொத்தின் தன்மை போன்ற சில பொருளாதாரக் கருத்துக்களைக் கவனமுடன் ஆராய்வதற்கு வழிவகுத்தது. இங்கு ரோமன் சட்டத்தின் விளைவாகத் தனியுரிமை வாதம் கிளர்ந்தெழுந்தது. அவனவன் சொத்தினை, அவனவன் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். தனி உடைமை என்ற சித்தாந்தத்தில் சொத்துச் சேர்க்கவும், சேர்த்த சொத்தினை அனுபவிக்க மட்டுமன்றி, அச் சொத்தினைத் தன் இச்சைப்படி பாழடிக்கவும், எவருக்கு வேண்டுமானாலும் வாரிவழங்கவும் உரிமை இருக்கிறது. இந்த உரிமை ரோமாபுரி நீதித் துறையினரின் சட்ட வல்லுநர்களின் செல்வாக்கால் ஏற்பட்டதே யாகும்.

தனி உடைமை, ஒப்பந்தம் செய்வதற்குப் பரிபூரண உரிமை என்ற இருபெருங் கொள்கைகளை ரோமாபுரி உலகுக்கு வழங்கியுள்ளது. எனவே, கட்டுப்பாடற்ற, பொறுப்பற்ற தனி நபர் உரிமை வாதத்துக்கு ரோமாபுரி வழிகோலியுள்ளது. ஆனால், குடும்பம், சாதி, இனம் ஆகியவற்றின் பாத்தியதைகளைச் செவிமடுக்கவில்லை ரோமாபுரிச் சட்டதிட்டங்கள்.

2. இடைக் காலம்
அர்ச். தாமஸ் அக்வினஸ், ஒரேஸ்மே

அர்ச். தாமஸ் அக்வினஸ்

இடைக் காலத்தில் வழங்கிவந்த பொருளாதாரக் கொள்கைகளை ஒருசில பக்கங்களில் தொகுத்துத் தருவதாகக் கூறும் எவனும், அவனுக்கு மனச்சாட்சி என்று ஒன்று இருந்தால், அது எளிதான காரியம் அல்ல என்பதை உணரவே செய்வான்; அது இயல்பிலே இல்லாத ஒன்றை இருப்பதாகக் கற்பனை செய்வதாகும். 'இடைக் காலம்' (Middle Ages) என்று எதைக் குறிப்பிடுவது என்பதை வரலாற்று ஆசிரியர்களுக்கே விட்டுவிடுவோம். இந்த இடைக் காலம் எப்போதாவது ஒரு சமயத்தில் தொடங்கியிருக்க வேண்டும். அது எப்போது தொடங்கியது என்பதை அறுதியிட்டுக் கூறுவதற் கில்லை. கான்ஸ்டான்டிநோபிள் வீழ்ச்சியடைந்து, அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டவுடன் இந்த இடைக் காலம் முடிவுற்றது. இந்த இடைக் காலம் இதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே முடிவடைந்துவிட்டது என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர். பின்னர் பன்னிரண்டாவது, பதிமூன்றாவது நூற்றாண்டுகளை ஆராயும்பொழுது, பன்னெடுங்காலம் ஐரோப்பா தேக்கநிலையிலேயே இருந்தது; மந்தநிலை தொடர்ந்து இருந்தது என்று கூறுவது மிக எளிதாகும். பன்னெடுங்காலம் பெருந்துயிலில் ஆழ்ந்து அழகரசி போன்றிருந்த ஐரோப்பா மறுமலர்ச்சியின் திருப்பள்ளியெழுச்சியைக் கேட்ட பிறகே, இளங்காலைப் போழ்தில் துயில் நீங்கி எழுந்ததாகக் கூறலாம்.

இடைக் காலத்தை ஓட்டமில்லா மந்தக் காலம் எனக் கூறுவது பொருத்தமில்லை என்றாலும், இடைக் காலத்தின் பொருளாதாரக் கொள்கைகளை விரிவாகப் பார்ப்பதும், நிச்சயமற்ற இச் சிறு கால

அளவை நிர்ணயிக்காமல் விட்டுவிடுவதும் ஓரளவு பயன்தரும். அக் காலத்தில் பொருளாதாரக் கோட்பாடுகளில் கருத்து வளர்ச்சி ஏற்பட்டது மறுக்கவொண்ணாதது. பன்னெடுங்காலம் நிலவி வந்தனவும், சில மாறுதல்களுக்கு உட்பட்டு, பன்னிரண்டாவது, பதின்மூன்றாவது நூற்றாண்டுகளில் செல்வாக்குப் பெற்றனவுமான கருத்துக்கள் அர்ச். தாமஸ் அக்வினஸ் (1225-1274) எழுத்துக்களில் மிகத் தெளிவாகவுள்ளன.

இக் கருத்து வளர்ச்சியடைந்ததையும், மாறுதலுக்குட்பட்டதையும் பற்றி ஆராயப் புகாமல், இடைக்காலத்துக் கருத்துக்களே இங்குப் பெரிதும் ஆராயப்படும். இக் கண்ணோட்டத்தின் பிரதிநிதியாக அர்ச். தாமஸ் அக்வினஸ் கருத்துக்கள் ஒரு சகாப்தத்தையே ஆட்டிப்படைத்ததால், அக் கருத்துக்கள் இங்கு ஆராயப்படும். மற்ற இடங்களைப் போலவே இங்கும் இக் கொள்கை மனித வாழ்வின் நிலைமைகளையும் சந்தர்ப்பங்களையும் பிரதிபலிக்கிறது. இடைக் காலக் கருத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், இக் கருத்தைக் கொள்கை எனக் கூறுவதற்கில்லை. அக்காலச் சமுதாய அமைப்பின் சிறப்பியல்புகளைக் கருத்தில் கொள்ளவேண்டும். சமயத் துறையிலும் மற்றத் துறையிலும் உள்ள சமயச் சார்பற்ற முறையில் இடைக் காலம் என்பதைப் பலர் நிலப்பிரபுத்துவம் என்றே கொள்கின்றனர். நிலப்பிரபுத்துவம் நடைமுறையில் எவ்வாறு செயற்பட்டது என்பதை ஆராயவேண்டியதில்லை. அதே சமயத்தில், அதை ஏற்றிப் போற்ற வேண்டியதுமில்லை. கொள்கையளவில் நிலப்பிரபுத்துவத்தை ஆராய்ந்தால், ஒருவருக் கொருவர் இயைந்த பொறுப்புகள், பணிகள் என்ற யாவும் சமூக அமைப்பில் இயைந்து இருப்பதைக் காணலாம். எனவே, சமூக அமைப்பில் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு. மற்றவருக்கு உதவி செய்வது, மற்றவரிடமிருந்து உதவி பெறுவது என்ற நிலை இருந்தது.

தொழில் கூட்டுறவுகளும், கைவினைத் தொழிற் சங்கங்களும் வளர்ச்சி அடைந்தபோதும் இந்த நிலை நீடித்தது. தொழிலாளர்கள் பொதுமக்களுக்கு நற்பணி புரியக் கடமைப்பட்டவர்கள். அதே போல் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்பவர்களாயிருக்கவேண்டும். எனவே, இவர்கள் வாய்ப்புகளையும் பொறுப்புகளையும் சமமாகப் பகிர்ந்துகொள்ளவேண்டும். சமூகத்திலுள்ள ஒரு சாரார் மற்றொரு சாராருக்கு இயைந்த நற்பணி ஆற்றும்வரையில், அச்சமூகத்தில் அவர்களுடைய நிலைக்குக் குந்தகமில்லை. எனவே, தகுதி என்ற அடிப்படையின்மீதே இச் சமூகம் அமைந்துள்ளது. எவ்வகைத் தகுதியுள்ளவர்களாயினும்

அவர்களுக்குப் பொறுப்பும் உண்டு, உரிமையும் உண்டு. ஒவ்வொருவரும் தமக்குள்ள பொறுப்புக்களை நிறைவேற்றினால் மட்டும் போதாது; அவர்தம் தகுதிக் கேற்றவாறு வாழவும் வேண்டும். இடைக் காலத்தில் 'இயல்பான பொருளாதார' நிலையே மிகுந்திருந்தது. பெரு வணிகம் என்ற பேச்சுப் பெரிதுபடுத்திக் கூறப்பட்டதே யன்றி, உண்மையில் நடந்த வணிகம் பெருமளவில் அல்ல. மனிதர்கள் சிறு சிறு பிரிவினராக வசித்தனர். பெரிய நகரங்கள் இல்லை; இச் சிறு பகுதிகள் ஒவ்வொன்றும் தன்னிறைவு உள்ளதாக இருந்தன. அமெரிக்காவில் வெள்ளிச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்படுகிற வரையில், அதாவது இடைக்காலம் முடிவடைந்து நவீன காலம் ஆரம்பமாகிற வரையில், ஐரோப்பா எங்கணும் பணத்தட்டுப்பாடு இருந்தே வந்தது. எனவே, பண விவகாரங்களும் குறைந்த அளவிலேயே நடைபெற்றன. தொழில் முயற்சிக்கு அதிக வாய்ப்பில்லாதிருந்தது. எனவே, இத்தகைய சமுதாயத்தில் மக்கள் ஒருவருக்கொருவர் சேவை செய்தே தங்கள் நிலையைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். இத்தகைய சமுதாயத்தில் பெருமளவு இலாபம் சம்பாதிப்பது முயற்கொம்பாகவே இருந்தது.

மதத்துறையிலே பார்த்தோமானால், மாதா கோவிலிலே பூரண ஆதிக்கம் செலுத்தப்பெற்றது. இதன் போதனையால் ஏற்பட்ட விளைவுகளைப் பின்னரே விரிவாக ஆராயவேண்டும். இங்கு அடியிற் கண்டவற்றைக் குறிப்பிடுவது போதுமானதாகும். முதலாவதாக, மனித உறவு முறைகளை மாதா கோவில் முறைப்படுத்த முயன்றது; இவ்வுலக வாழ்க்கை, அவ்வுலக வாழ்க்கைக்கு முன்னேடியாக விளங்குகிறது. மோட்சம் பெறுவதே பேருண்மை; இரண்டாவதாக, மாதா கோவில் பல இன மக்கள் குழுமிய நிறுவனமாகும். மெர்க்கன்டைல் காலத்தின் கருத்துக்கு முற்றும் முரணுக இடைக்காலத்தில் இன வேற்றுமையின்றி, அனைவரும் நம்மவரே என்ற உயரிய கருத்து உலவி வந்ததென்றால், மாதா கோவிலின் மத போதனையே இதற்கு முழுமுதற் காரணமாகும். இதனால் ஐரோப்பாவிலே ஒருவித ஒற்றுமை யுணர்ச்சி உண்டாயிற்று. பின்புதான் அதிகாரங்கள் குவிக்கப்பட்ட ஒரு நாடு, மற்ற நாட்டின் துயரத்தில் மகிழ்வடையத் துவங்கியது. இடைக்காலத்தில் கற்றறிந்த மக்கள் அனைவரும் லத்தீன் மொழி அறிந்தவர்களாகவே இருந்தனர். இதனால் தான், ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் சிலுவைப் போரில் பங்கு கொள்ள முடிந்தது. கற்றறிந்தவர்கள் ஆக்ஸ்போர்டுக்குச் சென்றாலும், பாரிசுக்குப் போனாலும், படுவாவில் கூடினாலும், கொலோ

னில் திரண்டாலும் ஒருவரோடொருவர் உரையாடி, கருத்தைப் பரிமாறிக்கொள்ள முடிந்தது லத்தீன் மொழியால்தான்.

பொருளாதார விஷயங்களில் இடைக்காலக் கருத்தை விளக்குவதற்கு இவையே போதுமானவையாகும். இடைக்காலக் கருத்தை எடுத்து விளக்கியவர்களைப் பார்த்தோமானால், அவர்கள் இரு பெருஞ் செல்வாக்குகளுக்கு உட்பட்டிருப்பது தெரியவரும். ஒன்று, அரிஸ்டாடிலின் செல்வாக்கு; மற்றது, கிறித்துவ மத போதனையால் விளைந்த மாற்றம். இது கிறித்துவ மத மூலாதாரத்தில் மட்டுமன்றி, ஆரம்ப கால கிறித்துவப் பாதிரிகள் எழுதிவைத்தவற்றிலுலும் புலப்படுகிறது. பைபிள், அரிஸ்டாடில், கிறித்துவப் பாதிரிகள் ஆகிய மூன்றையும் அர்ச். தாமஸ் சமமாக அர்ச்சிக்கிறார். இவை மூன்றினிடத்தும் அவருக்குப் பெருமதிப்பு உண்டு. கற்றறிந்த கனவானுகிய அர்ச். தாமஸ் செய்ய முயன்ற தெல்லாம் கிறித்துவ மதக் கொள்கைகள், அரிஸ்டாடில் கொள்கை யுடன் இணைந்தன என்ற பழங்கருத்துச் சரியென்றே தோன்று கிறது. பணத்தின் தன்மை, அதன் அலுவல்கள், கடு வட்டி வாங்குவதன் கொடுமை, பரிவர்த்தனை முதலியவற்றையும், நீதியின் தன்மையையும் முறைப்படுத்தும் அடிப்படைக் கொள்கைகள் ஆகியவை காரணமாக, இடைக்காலக் கருத்தை அரிஸ்டாடில் உருவாக்கினார். இவற்றிலெல்லாம் அரிஸ்டாடில் கூறியவற்றையே, கிறித்துவ மத மெய்ப்பாட்டு விளக்கங் களுடன் அர்ச். தாமஸ் எடுத்துரைக்கிறார்.

கிரேக்கக் கருத்துக்கள் சில முற்றிலும் வேறுபட்டவைகளாக அமைந்துள்ளன. இது பற்றிய கருத்துக்களிலும், இடைக் காலத்தில் கிறித்துவ மத போதனைகளின் செல்வாக்கினைக் கண்கூடாகக் காணலாம். கிறித்துவ மத போதனைகளின் விளைவுகள் இடைக்கால வாழ்வின் சில பகுதிகளைப் பாதிக்கவில்லை யென்று கூறலாமென்றாலும், இவை புறநடையாகுமேயன்றி, பொது விதியாகாது. இங்கும் வாழ்க்கையின் அடிப்படையான சில பொருளாதார முறைகள் பற்றிய இடைக்காலக் கருத்தினை. இவை பெரிதும் மாற்றியமைக்க முயல்கின்றன.

முதலாவதாக, ஜூடாயிசத்திலிருந்து பெறப்பட்ட ஓரினக் கொள்கைக்கும் மேலாக, கிறித்துவ மதத்தால் விவரித்துக் கூறப்பட்ட எல்லா மக்களும் ஒரே தந்தையின் புதல்வர்களாயின், அனைவரும் சகோதரர்களாகிவிடுவர். இக் கொள்கையைக் கொண்டால், முடிவில் வர்க்க பேதம் எல்லாம் ஒழிந்துபோகும். அடிமை போன்று, சேசிய வேறுபாடே இல்லாதுபோம். இந்தக்

கொள்கையை ஒப்புக்கொண்டால், அடிமைகள் என்ற தனி வகுப்பினர் இருக்கவேண்டும் என்பதை ஆதரிப்பதற்கில்லை. என்றாலும், அர்ச். தாமஸ் இங்கும் அரிஸ்டாடில் கூறியவற்றை அப்படியே கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றத் தயாராயிருக்கிறார். ஒவ்வொருவரும் அழியாத ஆத்மாவின் பிரதிநிதியாகத் திகழ்கிறார்கள்; ஆகையால் சம மதிப்பைப் பெறுகிறார்கள். இப் பிரச்சினையின் மறுபுறமும் சம முக்கியத்துவம் வாய்ந்ததே. மனித கவுரவம், கடவுளின் கண்முன் அனைவரும் சமமே, மக்கள் அனைவரும் சகோதரர்களே என்ற கருத்து இங்கே உறுதிப் படுகிறது. மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற கருத்திலிருந்து, இருப்பவர்கள் இல்லாதாருக்கு இடவேண்டும் என்ற வாதம் பிறக்கிறது. ஐயம் இடுதலின், ஈகையின் சிறப்பு வலியுறுத்தப்படுகிறது; இது மோட்சத்திற்கு வழி அமைக்கிறது.

இரண்டாவதாக, கிறித்துவ மத போதனையில் மாயாவாதம் இடம் பெறுகிறது. இதனால் மற்றக் கிறித்துவக் கொள்கையின் முடிவுகளிலிருந்து பெறப்படுவது முக்கியமற்றுப் போகிறது. வாழ்வே அநித்தியம்; இவ்வுலகில் இருப்பது எதுவும் நிலையானதல்ல; பரம பிதாவின் மோட்ச மண்டலத்தை அடைவதற்கு முன்னேடியாகவே இவ்வுலகத்தில் வாழ்கிறோம்; எனவே, பரலோகத்தில் நல்ல கதி கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் ஒவ்வொருவரும் பயபக்தியுடன் நடந்துகொள்வதானால், மற்ற எல்லாம் முக்கியத்துவம் அற்றுப்போகின்றன; உலக வாழ்வின் ஆசாபாசங்கள் முக்கியத்துவம் இழக்கின்றன; மோட்ச உலகின் திறவு கோலாகவே இவ்வுலக வாழ்க்கையைக் கருதவேண்டும். இவ்வுலக பந்த பாசங்களில் கட்டுண்டு வாழக்கூடாது. மேலுலகம் என்ற கோணத்திலிருந்து ஆராய்ந்து பார்த்தால், இவ்வுலகில் சாரம் உள்ளது மிகக் குறைவே; எதுவும் முக்கியம் அல்ல என்றாகிவிடுகிறது. அடிமை வாழ்வு குறித்து, அர்ச். தாமஸ் அக்வினஸ் கொண்ட கருத்துக்கு உரிய விளக்கம் இதில்தான் பொதிந்து கிடக்கிறது. அடிமையும் நற்கதி அடையலாம். பரம பிதாவின் மோட்ச மண்டலத்தில் அவனுக்கும் இடம் உண்டு. இவ்வுலகம் இருப்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை அவ்வுலகம் இருப்பதும். பரம பிதாவின் பரமண்டலம் சாசுவதமானது என்று கருதுபவர்கள் இவ்வுலக வாழ்வில் தாமரை இலைமேல் உள்ள தண்ணீர்போல் பற்றற்று இருப்பார்கள்; எதிலும் ஆசாபாசம் வைக்கமாட்டார்கள். இவ்வாறு பற்றற்று இருப்பதனால், எது எப்படி இருந்தால் என்ன என்ற உணர்வு ஏற்பட்டுவிடுகிறது. எதையும் சகித்துக்கொள்ளும் தன்மை உண்டாகிவிடுகிறது. இடைக்காலக் கிறித்துவ மதக் கொள்கைப்

படி இவ்வுலகில் எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஒரு நிறை என்ற நிலை ஏற்பட்டிருக்கவேண்டும். என்றாலும், சமுதாய ஏற்றத் தாழ்வுகளை அது அங்கீகரித்தே உள்ளது. எல்லாம் இறைவனின் திருவுள்ளம்; 'அவனன்றி ஓரணுவும் அசையாது; எல்லாம் அவனவன் தலைவிதிப்படி நடக்கிறது' என்ற கருத்தே இதற்குக் காரணம். பரலோகத்தில் இடம் பெறுவதற்கான முன்னேடி வாழ்வே இவ்வுலக வாழ்வு என்ற நம்பிக்கை இருப்பதால் எதையும் சாசுவத நிலையின் கோணத்திலிருந்து ஆராயவேண்டும். ஒவ்வொன்றின் தரா தரத்தையும், அநித்திய நிலையையும், முக்கியமற்ற தன்மையை யும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மூன்றாவதாக, மற்றோர் அமிசத்திலும் கிறித்துவ மதம் புராதன கிரேக்கக் கொள்கையினின்றும் பெரிதும் மாறுபடுகின்றது. கிறித்துவ மதம் உழைப்பின் பெருமையை உயர்த்திக் கூறுகிறது. அடிமை உழைப்பின் அடிப்படையில் அமைந்த நாட்டில் இக்கருத்து முரணானதாயிருக்கும். அங்கே உழைப்பே அடிமை யின் சின்னமாக இருப்பதால் உழைப்புக்கு மதிப்பேது? பெருமை யேது? ஒவ்வொருவரும் தம் கையால் உழைத்துப் பிழைக்க வேண்டும் என்று புதிய ஏற்பாடு தூண்டுகிறது. 'மற்றவர் களுக்குச் சுமையாக இல்லாதிருப்பதற்காக நான் இரவு பகலாக உழைக்கிறேன்' என்று பெருமையுடன் கூறிக்கொள்கிறார் அர்ச். பால் அவர்கள். எனவே, 'உழைக்காதவனுக்கு உணவில்லை' என்ற பொது விதியை இவர் வகுத்துள்ளார். ஒரு சிலரைத் தவிரக் கடவுளின் தூதர்கள் அனைவரும் தொழில் புரிந்தவர்களாகவே இருக்கின்றனர். கடவுளே வேலையை விதித்துள்ளார். மன் பதைக்கு ஏற்பட்ட சர்பத்தின் அங்கமாக வேலை இருந்த போதிலும், இதன் மூலமே மன்பதை மீட்சி பெறவேண்டும். தாம் எப்போதும் உழைத்துக்கொண்டிருப்பதாக கிறிஸ்து கூறி உள்ளார். மனித வரலாற்றுப் புத்தகமாகிய விவிலிய வேதத்தைப் பார்த்தோமானால், கடவுள் ஆறு நாள் உழைத்துவிட்டு, ஏழாம் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையன்றே ஓய்வு கொள்வது தெரிய வரும். எனவே, வேலை செய்வது கௌரவமே; உழைப்பின் மேன்மையே மேன்மை என்பது மட்டுமன்றி, உழைப்புத் தவிர்க்க முடியாதது என்ற புதுக்கருத்தும் இதனால் ஏற்பட்டுள்ளது. இது கிறித்துவ மத போதனையின் விளைவே.

இடைக்கால அமைப்பைப் பார்த்தோமானால், அக்காலத்தில் பொருளாதார இலக்கியம் இருக்கவேண்டுமென எதிர்பார்ப்பதற் கில்லை என்பது நன்கு விளங்கும். பொருளாதார விஷயம்

அவ்வளவு முக்கியமானதல்ல; மற்றவற்றிற்கே முதலிடம் தரவேண்டும் என்பதே இடைக்காலக் கொள்கையாகும். கிரேக்க நாட்டிலே பொருளாதாரம் என்பது, ஒழுக்க உயர் நெறி, அரசியல் நெறி நாடிப் போகையில் ஏற்பட்ட இடைநிகழ் பொருளே; அதுவும் அவ்வளவு முக்கியமற்ற உபபொருளே. இதைப் போன்ற கருத்தே இடைக்காலத்திலும் நிலவி வந்தது. ஒழுக்க நெறியை ஒட்டியே பொருளாதார விஷயங்கள் ஆராயப் படுகின்றன. மேலும், மாதா கோவில் சமுதாயத்தின் உயர் ஒழுக்க வாழ்க்கை முழுவதையும் தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்துவிட்டது. சமயச் சார்பற்ற கோணத்திலிருந்து பார்த்தால், மாதா கோவிலும் அதாவது கிறித்துவ சமயமும் திறமையான நிருவாக அமைப்புள்ளதே யாகும். மாதா கோவிலின் நெறிமுறையைக் கட்டிக் காப்பதில் அது திறனுள்ளதாகவே இருக்கின்றது. 'நியாய விலை,' 'கடு வட்டி வாங்குவதற்குத் தடை' ஆகிய இரண்டுமே இடைக்காலத்தின் முக்கியமான இரண்டு பொருளாதாரக் கொள்கைகளாகும். இந்த இரு விஷயங்கள் குறித்தே பெருஞ் சர்ச்சை எழுந்துள்ளது. இவ்வாறு கருதுவது மேற்பரப்பில் மட்டுமே சரியாயிருக்கும். இவை அடிப்படையான கொள்கைகளுமல்ல; சுதந்திரமான கொள்கைகளுமல்ல. விரிவான, ஆழ்ந்த கொள்கையின் இரு அமிசங்களே இவை. இடைக்காலப் பொருளாதார போதனையின் சகல அமிசங்களையும் 'நீதி' என்ற ஒரே சொல்லில் அடக்கி விடலாம். இந்த 'நீதி' என்பது 'விலையுடன்' சேர்த்தே குறிப்பிடப்படுகிறது. மக்கள் அனைவரும் சகோதரர்கள். எனவே, நாம் சகோதரர்களாகவே பழக வேண்டும். ஒவ்வொருவரும் மற்றவரின் உரிமைகளையும் நிலையையும் மதித்து நடக்க வேண்டும். ஒவ்வொருவரும் தமக்கு உரித்தாயுள்ளதைப் பெற்றுக் கொள்ளவேண்டும். ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட வேண்டும். எவரும் எந்த நிலையிலும் மற்றவருக்கு அநீதி இழைக்கக் கூடாது. மற்றவருடைய நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. இதுவே இடைக்காலப் பொருளாதாரக் கொள்கையின் சாராம்சமாகும்.

இடைக்காலத்தின் இந்த இரு பொருளாதாரக் கொள்கைகள் மிக்க புகழ் பெற்றவை. இவை இரண்டும் இடைக்காலப் பொருளாதார போதனையுடன் எவ்வாறு தொடர்புகொண்டுள்ளன என்பதை 'அர்ச். தாமஸ் அக்வினஸ்' எழுதியுள்ளவற்றிலிருந்து அறிந்துகொள்ளலாம். தனியார் சொத்து வைத்துக் கொள்வது பற்றி இவர் கூறியவற்றையும், பொதுவுடைமை அமைப்பு இருப்பதன் அறிவியல் ரீதியான விரும்பத்தக்க நிலை

குறித்து இவர் கூறியவற்றையும் ஆராய்வதே சிறந்த வழியாகும். எனினும், இங்கு நிலைமை குழப்பத்துக்கு இடமளிப்பதாக இருக்கிறது. இது பற்றிய பழைய வரலாறு மிகுதியாக இருக்கிறது. ஜெருசலத்திலுள்ள பழங்கால கிறித்துவ மாதா கோவிலும் கிறித்துவப் பாதிரிகளும் பொதுவுடைமை அமைப்பை எந்த அளவு ஆதரித்துள்ளனர் என்பது குறித்து முடிவற்ற வாக்குவாதங்கள் நடந்துள்ளன. செல்வம் ஒரு சறுக்குப் பாறை. அது ஒரு சிலந்தி வலை என்னும் பேருண்மையை வேதங்கள் பறைசாற்றுகின்றன. 'ஊசியின் காது வழியே ஒட்டகம் நுழைந்தாலும் நுழையலாம்; பரம பிதாவின் பரமண்டலத்தில் பணக்காரன் நுழையவே முடியாது' என்று விவிலிய வேதத்தில் கூறப்பட்டுள்ள தல்லவா? அணைத்தையும் துறந்து, அவற்றை ஏழைகளுக்கு வாரி வழங்குவதே தூய்மை நெறிக்கு வழியாகும். என்ருலுங்கூட, பொதுவுடைமை வாதத்திற்கு ஆதரவாகக் கிறித்துவின் எந்தக் கூற்றையும் குறிப்பிடுவதற்கில்லை. ஜெருசலத்திலுள்ள மாதா கோவிலில் ஆரம்ப அழைப்பிற்கு மிக முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. 'இங்கு மக்கள் அனைவரும் அனைத்தையும் பொதுவில் வைத்திருந்தனர்' (நடவடிக்கைகள் 32) என்ருலும், இவ் வாசகத்தைக் கவனமுடன் படித்துப் பார்த்தால், வரையறையற்ற தாராளம், அதுவே சுயேச்சையானதாக இருந்ததாகவே தெரிகிறது.[1]

இனி, கிறித்துவப் பாதிரிகள் கூறியுள்ளவற்றைக் காண்போம். இவர்கள் கூறியுள்ளவற்றிலிருந்து சில கருத்துக்களைப் பார்த்தால், மாஸ்கோதான் இவர்களுடைய புண்ணிய பூமியோ என நினைக்கத் தோன்றும். இவர்கள் செல்வத்தைப் பழிக்கிருர்கள்; பணக்காரனைத் திருடன் என்றே தயக்கமின்றிக் குறிப்பிடுகின்றனர். என்ருலும், தனியார் சொத்தினை நியாய வகையில் பயன்படுத்துவதற்கு ஆதரவாக இவர்களுடைய எழுத்துக்களிலிருந்து பல மேற்கோள்கள் காட்டமுடியும். இவர்கள் ஓரளவு விவேகமற்ற மக்களைப் போலச் சொற் காத்தலின்றித் தவிக்கின்றனர் என்பது உண்மையே. தங்கள் எண்ணங்களைச் சரியான முறையில், தகுந்த சொற்களில் வடிக்கரது விட்டதே இவர்கள் செய்த பிழை. மேற்கோள் காட்டப்படுகிற இவர்களுடைய கருத்துக்களிலிருந்து பெறப்படுவ தாவது: செல்வத்தைத் தவருன வழியில் பயன்படுத்தக்கூடாது;

[1] இப்படி இல்லாவிட்டால், அனனியசை பீட்டர் கேட்ட கேள்விக்குப் பொருளின்றிப் போகிறது. 'அது இருக்கும்போது அது உன்னதே அல்லவா?' தனி நபர் உரிமைத்தியாகி அல்ல அனனியஸ். அனனியசையும் சஃபிராவையும் பிச்சைப் பொய்யர்களெனப் பொதுமக்கள் கருதுவது சரிதான்.

செல்வம் ஏமாற்றத்திற்கு அடிகோலுவது. இதற்காகச் சில சொற்றொடர்களைப் பிரித்துப் பார்த்தால், பாதிரிகள் பொதுவுடைமைவாதிகள் என்றே நினைக்கத் தோன்றும். எல்லாரும் எல்லாவற்றையும் பொதுவில் வைத்திருப்பது என்பதே இவர்களது இலட்சியமாகும். இந்த இலட்சியத்தைப் பலரும் போற்றுவர் என்பதில் ஐயமில்லை. ஆனால் இவ்வாறு மேற்கோள் காட்டப்படுகிற பகுதிகள் பொதுவுடைமை அமைப்பை ஏற்படுத்துவதற்குரிய கட்டளையென எந்த அளவு கொள்ள முடியும்? இப்போதுள்ள நிலைமைகளில் பொதுவுடைமை சாத்தியம் என்பதற்கான வாதமாக இவை எந்த அளவு பயன் படக்கூடும்? மக்கள் அனைத்தையும் பொதுவாக வைத்திருப்பதில்லையென்பது மனிதனின் சீர்கேட்டைக் குறிக்கலாம். என்றாலும், மனித வீழ்ச்சியுடன், மனித சீர்கேட்டையும் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும். பொதுவுடைமை வாதத்தைப் போற்றுவதென்பது, கிறித்துவப் பாதிரிமார்களின் கருத்தில், மனிதன் தன் பாவச் செயலால் இழந்துவிட்ட பேரின்ப நிலையைப் போற்றுவதேயாகும். இதுவே கிறித்துவப் பாதிரிகள் கூறிய பொதுவுடைமையின் பெரு நோக்கமாகும்.[1]

இப்பொருள் விளக்கம் சரியென்றால், தனியார் சொத்துப் பற்றிய விஷயத்தில், அர்ச். தாமஸ் அக்வினஸ் கொண்ட கருத்திற்கும் கிறித்துவப் பாதிரிகள் கொண்ட கருத்திற்கும் முரண்பாடுள்ளது என்று ஒரு சிலர் கூறும் வாதம் பொய்த்துப் போகின்றது. அடிப்படையில் பார்க்கப் போனால், புறவாழ்க்கைச் சாதனங்கள் மனிதனின் நல்ல கதிக்கே ஆதாரமாக அமைய வேண்டும். நிறை இருப்பதால்தான் குறையும் இருக்கிறது.[2] ஆனால் புறவாழ்க்கைச் சாதனங்களைப் பொறுத்த வரையில், அரிஸ்டாடிலைப் போலவே அர்ச். தாமஸ் அவர்களும் உடைமை என்பது மனிதனுக்கே இயல்பானது என்ற கருத்தையே தெரிவிக்கிறார். அனைத்தையும் பொதுவுடைமையாக வைத்திருப்பதற்கு இயல்பான சட்டத்தில் ஆதரவு தேடுகிற வாதத்திற்கெதிராகத் தாமஸ் கூறுவதாவது: 'எல்லாவற்றையும் பொதுவுடைமையாக வைத்திருக்க வேண்டுமென இயல்பான சட்டம் கேட்கவில்லை. இந்த வாதத்திலிருந்து பெறக்கூடியதெல்லாம் எதிர்மறைப் பொருள்தான். இயல்பான சட்டப்படி பார்த்தோமானால், உடைமை வேறுபாட்டுக்கு நியாயம் இருப்பதற்கில்லை என்று எதிர்மறையிலேயே இக்கருத்தைக் கூறவேண்டும்.

[1] இவை அனைத்தின் விஷயமாகவும் 'ஓபிரியன்' எழுதியுள்ள 'இடைக்காலப் பொருளாதார போதனை'க் கட்டுரையைக் காண்க.

[2] மத நூல் II/II, கேள்வி 66, பகுதி 1.

ஆனால், இது மனிதர்கள் செய்துகொள்ளும் உடன்படிக்கையின்மேல் எழுந்துள்ளது. எனவே, தனியார் சொத்து இயல்பான சட்டத்துக்கு முரணானதல்ல. மனித நியாயம் என்ற பகுத்தறிவும் இதில் சேர்வதால், இது இயல்பான சட்டத்துக்கு உறுதுணையாகவே அமைகிறது.[1]

சொத்துடைமை நியாயம் என ஏற்பட்ட பிறகு, மனிதத் தன்மைக்கு ஏற்ப, மனிதர்களுக்குப் பொருள்கள்மீது இருக்கக் கூடிய இருவகை உரிமைகளை அர்ச். தாமஸ் வேறுபடுத்திக் கூறுகிறார். முதல் உரிமை, சொத்து அடைவதற்கும் நிருவகிப்பதற்கும் உள்ளதாகும், இங்குத் தனியார் சொத்தின் முழு உரிமையும் அரிஸ்டாடில் கூறிய வழிகளிலேயே அமைந்துள்ளது. ஒவ்வொருவரும் தமக்கென்று எதையும் வைத்துக்கொண்டிருக்கையில், மிகக் கவனமுடனும், மிக மிக ஒழுங்குடனும், மிகுந்த திருப்தியுடனும் இருப்பார்கள். சொத்தினைப் பொதுவாக வைத்திருப்பதில் ஏற்படும் தகராறுகள் இதனால் தவிர்க்கப்படுகின்றன. பொருள்கள்மீதுள்ள இரண்டாவது உரிமை பயன்பாட்டு உரிமையாகும். இது வேறு விஷயம். இங்குப் பொருள்கள் பொதுவாக இருக்கவேண்டும். தேவையாயிருப்பவர்கள் அவற்றைப் பயன்படுத்தவேண்டும். இது அரிஸ்டாடில் கண்ட முடிபே; அதாவது சொத்துத் தனி உடைமையாக இருக்க வேண்டும்; ஆனால், அதைப் பொதுவில் பயன்படுத்தவேண்டும்.

எனவே, சொத்துரிமை அப்படியே வைத்துக்கொள்ளப் படுகிறது. ரோமானியர்கள் கண்ட கொடுரமே இங்குத் தவிர்க்கப் படுகிறது. சொத்தின் சொந்தக்காரன் தன் சொத்தினைப் பொது நலனுக்குப் பயன்படுத்த வேண்டும். தர்மகர்த்தா தத்துவமே இதில் அடங்கியுள்ளது. சொத்தினை நிருவகிப்பது அந்தந்தத் தனி மனிதனின் பொறுப்புக்கு விடப்பட்டுள்ளது. என்றாலும், ஒவ்வொருவரும் பொது நலனில் நாட்டமுள்ளவர்களாக இருக்க வேண்டும். 'மிக்க அவசியம் ஏற்பட்டால், மனிதன் திருடவும் செய்யலாம்' என அர்ச். தாமஸ் அனுமதிப்பதைப் பார்க்கும் போது, இக் கொள்கையின் அடிப்படையில் அவர் எந்த அளவு போகத் தயாராயுள்ளார் என்பது தெற்றெனத் தெரிகிறது.[2] மனிதச் சட்டம் இயல்பான சட்டத்தையோ, தெய்வீகச் சட்டத்தையோ குறைத்துவிடுவதற்கில்லை. மனிதன் தேவைக்குப் பயன்படுவதற்காகவே, தாழ்ந்த பொருள்களும் இறைவனால் படைக்கப்பட்

[1] இத்தாலிய மொழியிலுள்ள அடிக் குறிப்பு மொழிபெயர்ப்பு, பக்கம் 49.
[2] II/II கேள்வி 66, பிரிவு 7.

டுள்ளன. எனவே, அளவுக்கு அதிகமாக வைத்திருப்பது இயல்பான சட்டத்தின்படி ஏழைகளுக்காகவே வைத்திருக்க வேண்டும்.

இங்கு எது 'அவசியம்' என்பது குறித்து நாம் அக்கறை கொள்ளவேண்டியதில்லை. 'அளவுக்கு மேற்பட்டது' எது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. ஆனால், அந்தஸ்துக்கு மதிப்புத் தரப்படுகிறது என்பது மிக முக்கியமாகும். ஈகையெல்லாம், தான தருமமெல்லாம் தன் அந்தஸ்திற்கு ஏற்ற வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய நிதி வசதியை வைத்துக்கொண்டதற்குப் பின்னர்தான். 'தனக்கு மிஞ்சியே தான தருமம்' என்ற கொள்கை இங்குத் தலைதூக்கி நிற்கிறது (லத்தீன் மொழியில் உள்ளது).[1]

இப்பொதுக் கொள்கைகளை அனுசரித்தே அர்ச். தாமஸ் இவ்வுலகப் பொருள்களை மதிப்பிடுகிறார். இவ்வுலகில் மனிதர் வாழ்வதற்கேற்பவே சொர்க்கத்தில் வாழ்வு கிட்டும். எனவே, பரலோகப் பிராப்திக்கேற்ற முறையில் உள்ளதா என்பதை அனுசரித்தே இவ்வுலக வாழ்வினிலே நற்பொருள்கள் மதிப்பிடப்படுகின்றன. செல்வம் நல்லதே; ஆனால், அதுவே முடிவல்ல. அது ஒரு சாதனம் மாத்திரமே. நல்வாழ்வு நடத்துவதற்குப் பயன்பட்டால் செல்வம் நல்லதே. செல்வத்தால் சிக்கிக்கொள்ளும் பல சிக்கல்களினின்றும் மனிதனை விடுவிப்பதாயிருந்தால் ஏழ்மையும் நல்லதே. ஆனால், வறுமையே செம்மையானது என்று கூறிவிடவும் முடியாது. மனிதனின் ஆத்மீக வாழ்வுக்குத் தடையாயுள்ளதை நீக்கும் வரையில்தான் வறுமை நல்லது. வறுமையோ, செல்வமோ, பிற பொருள் எதுவுமோ, வேறு எந்த உயிரினமோ, அர்ச். பால் சொற்படி, சுயமாக நன்மை பயப்பனவல்ல. ஒரு பொருள் தீமைக்குப் பயன்படுகிறது என்பதைத் தவிர, அப்பொருளே தீமையான தல்ல. எதையும் அசட்டை செய்யும் இடைக்காலத் தன்மை இதில் நன்கு புலப்படுகிறது.[2]

தனி உடைமை இருக்கலாம் என்று வைத்துக்கொண்ட பிறகு, பரிவர்த்தனையை முறைப்படுத்த வேண்டிய கொள்கைகள் யாவை என்ற பிரச்சினை தலை தூக்குகிறது. மனித உறவுகள் 'நியாயத்தால்' முறைப்படுத்த வேண்டும். எனவே

[1] II/II கேள்வி 32, பிரிவு 6.
[2] Summa Contra Gentiles, புத்தகம் III, முக்கியமாக அதிகாரம் 133, "Quomodo paupertas sit bona."

தான், 'நியாய விலை' என்ற மையக்கருத்து ஏற்பட்டது. நியாயம் எதுவென்ற இடைக்காலக் கருத்தாராய்ச்சியையும், அரிஸ்டாடில் கூறிய இருவகை நியாயத்தைப் பற்றிய ஆராய்வு களையும் இங்கு விரிவாக மேற்கொள்ள வேண்டியதில்லை. ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் உள்ள உறவை முறைப்படுத்து வது ஒரு வகை நியாயம்; ஒரு பகுதிக்கும் அதன் முழுமைக் கும் உள்ள உறவை முறைப்படுத்துவது மற்றொரு வகை நியாயம். இது சிறப்பாகப் பரிவர்த்தனை நியாயமே. இதுவே நியாய விலையை முறைப்படுத்துகிறது. ஒவ்வொருவருக்கும் உரியதை அவரவருக் குக் கொடுப்பதே நியாயமாகும். சமநிலை இருந்தால்தான் நியாயம் இருக்க முடியும். எனவே, பரிவர்த்தனையிலும் சமநிலை இருக்க வேண்டும். பரிவர்த்தனை செய்வதற்கு ஓர் அளவீடு வேண்டும். இதற்காகவே பணம் படைக்கப்பட்டது. எனவே, பணம் என்பது பொருளின் மதிப்பறிவதற்குரிய சாதனமேயாகும். ஒரு பொருளின் விலை அதன் மதிப்புக்கு மேற்பட்டால், அல்லது ஒரு பொருளின் மதிப்பு அப்பொருளின் விலையை விட அதிகமாய் இருந்தால் நியாயம் தவறி விடுகிறது. எனவே, ஒரு பொருளின் மதிப்பைவிட அதிக விலைக்கு விற்பதோ, குறைந்த விலைக்கு வாங்குவதோ நியாயமல்ல; அதை அனுமதிப்பதற்கில்லை.

மதிப்புக் கொள்கை என்னும் முயல் குதித்தோடிக்கொண் டிருக்கிறது. எந்த விதமான மூச்சுத்திணறலுமின்றி, மேட்டுப் பாங்கான நிலத்தில் இம் முயல் நான்கு கால் பாய்ச்சலில் ஓடிக் கொண்டிருக்கின்றது. பொருளாதார வல்லுநர்கள், அகப் பொருளறிஞர்கள் போன்ற பெருமூச்சுவாங்கும் வேட்டைக் காரர்கள் இதைத் துரத்திப் பிடித்து அடித்துக் கொல்ல முயலு கின்றனர். ஆனால், அர்ச். தாமஸ் இந்த வேட்டைக் குழுவில் ஒருவராகக் கலந்துகொள்ளவில்லை. இந்த முயல் இவருடைய உற்பத்தியுமல்ல; இவரால் இம் முயல் ஓடவுமில்லை. நியாய விலைக் குப் பின்னணியில் இருக்கும் மதிப்புக் கருத்தினை அர்ச். தாமஸ் முழுமையாக ஆராயவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். மதிப்பு என்பது ஒவ்வொரு பொருளிலும் இயற்கையிலேயே அமைந்துள்ளது என்று கூறலாம். அது என்னவென்பது நமக்கு நன்கு தெரியுமென அர்ச். தாமஸ் அனுமானிக்கிறார். குறிப்பிட்ட விஷயத்தில் மதிப்பை நாம் எவ்வாறு நிருணயிப்பது என்பதை அவர் விளக்கவில்லை. இவர் கூறியுள்ளவற்றையெல்லாம் படித்துப் பார்த்தால், உற்பத்திச் செலவுக் கொள்கையும், தொழிலாளர் ஊதியம் பற்றிய கருத்துக்களும் பின்னணியில் இருப்பது நன்கு தெரியவரும். ஒரு பொருளின் அவசியம், அதன் பயன் ஆகியவை இடைக்காலக் கொள்கையில் இடம் பெற்றுள்ளன. தனிப்பட்ட

நபரின் அவசியம் இங்கு அதிக முக்கியத்துவம் பெறவில்லை ; பொதுப் பயன்பாடு பற்றிய 'பொது மதிப்பீட்டுக்' கருத்தே எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது.

நியாய விலை என்பது பெரும்பாலும் வழக்கமான விலையே. வழக்கத்தின் அடிப்படையாகக் கொண்ட காலத்தில் இக் கொள்கை இயல்பானதாகவே இருந்தது. நேர்மையான உற்பத்தியாளரின் மனச்சாட்சியின் அடிப்படையிலேயே நியாய விலை நிச்சயிக்கப்படுகின்றது. வேறு அமிசங்களால் அல்ல என்று திரு. கோனர்டு கூறியுள்ளதை ஈண்டுக் கவனிக்கவேண்டும். ஆஸ்திரேலியக் கூலி நிருணயிப்புச் சட்டத்தின் 'பிரசித்தி பெற்ற தொழிலதிபர்' இந்த நேர்மையான உற்பத்தியாளராகக் கொள்ளப் பட்டார்.

நியாய விலை வெளிப்படையானது என்றாலும், புற நிலைகளால் அது மாறுபடும் என்பதும் உண்மையே. ஒருவர், தாம் அதிகமாக பயன்படுத்துகின்ற ஒரு பொருளைக் கொடுத்துவிட்டு, வேறு ஒரு பொருளை வாங்கிக்கொள்வதாக வைத்துக்கொள்வோம். அப் பொருளைக் குறித்துமட்டுமன்றி (அதன் இயல்பான 'நியாய விலை'யை மட்டுமன்றி), அதை விற்பவர் அதை இழப்பதால் அவருக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தினையும் கருத்தில் கொள்ள வேண்டும். வாங்குகின்றவர்க்கு அப் பொருள் மிகவும் தேவையாயிருந்து, அதை விற்பவர் அதை இழப்பதால் அவ்வளவாக வருத்தமடையமாட்டார் என்று வைத்துக்கொண்டாலும், அந்த நிலைமையிலும் நியாய விலையை அதிகரிக்கலாம் என்பதை இடைக்கால வாதிகள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இவற்றையெல்லாம் கருதிப் பார்க்கும்போது, நியாய விலை ஓரளவு நீக்குப் போக்கு உள்ளதாய் இருக்கவேண்டுமெனத் தெரிகிறது. இது இப்படித்தான் இருக்கும்; நிலை மாறுது என்று அர்ச். தாமஸ் கூறுவதை நாம் ஏற்பதற்கில்லை. இது மதிப்பீட்டு முறையைப் பொறுத்துள்ளது. எனவே, இந்த விலை ஓரளவு அதிகமானாலோ, அன்றிக் குறைந்தாலோ சமநீதி கெட்டு விட்டதாகப் புலம்ப வேண்டியதில்லை. விற்பனை செய்பவர் தம் பொருளில் குற்றங் குறைகள் இருந்தால், அப்பொருளை வாங்குபவரிடம் எடுத்துக் கூறவேண்டும் என்பது இடைக்காலக் கருத்தாகும். ஒருவருக்கு அப் பொருள் தேவைப்படுகிறது என்பதற்காக, அதை மற்றவர் அவருக்குப் பிரதிகூலமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பது இடைக்கால அடிப்படைக் கருத்தாகும். எனவே, சோதரனையாகவுள்ள இந்த மண்ணுலக வாழ்விலே மக்கள் அனைவரும் சகோதரர்களாகப் பழகவேண்டும். மற்றவர்கள் நம்

மிடம் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோமோ, அவ்வாறே நாமும் மற்றவர்களிடம் நடந்துகொள்ள வேண்டும்.

'நியாய விலை' என்னும் கொள்கையில் 'கூலி' என்ற கருத்தும் அடங்கியுள்ளது என்பது தெளிவு. அர்ச். தாமஸ் சம நீதிக்குப் பாடுபடுவதால், உழைத்த தொழிலாளர்க்கும் நியாயம் வழங்கப்படவேண்டும். நியாய விலை வேண்டுமென எந்த அளவு அடித்துக் கூறுகிறாரோ, அதே அளவு முக்கியத்துவம் நியாயக் கூலிக்கும் கொடுக்கிறார் அர்ச். தாமஸ். நியாயக் கூலியின் அடிப்படையிலேயே நியாய விலை வாதம் எழுப்பப்பட்டிருப்பதாகவும் கூறலாம். தொழிலாளிக்கு ஏற்ற கூலி கொடுக்க வேண்டும் என்பது இடைக்காலக் கொள்கையின் ஜீவ நாடியாகும். நியாய விலைக் கருத்து, உற்பத்திச் செலவுக் கொள்கையைக் குறிக்கிறதென்றால், அப் பொருளின் விலையை நிருணயிப்பதில் தொழிலாளர் கூலி பெரும்பங்கு கொள்கிறது. தொழிலாளி தன் நிலைக்கேற்ப வாழ வழி செய்து கொடுப்பதே நியாயமான கூலியாகும். எனவே, இத்தகைய கூலி, தொழிலின் முதல் பொறுப்பாகிறது. தொழிலாளர் கூலி நிருணயிப்பு மன்றங்களும், வர்த்தக சபைகளும் மிகுந்த இக்காலத்தில், இடைக்காலக் கொள்கைகளாகிய நியாய விலையும் நியாயக் கூலியும் புதுமையாக இருக்கின்றன.

இடைக்காலப் பொருளாதாரக் கொள்கையின் அடுத்த முக்கிய அமிசம் கடுவட்டி வாங்குவதற்குள்ள தடைதான். இதுவும் நியாய விலையின் ஒரு வாதமாகவே விளங்குகிறது. கடுவட்டி வாங்குவது என்பது, இடைக்கால வாதிகளின் கருத்தில் வெறும் வட்டி மட்டும் அல்ல; தொழிலில் ஏற்படும் அபாயம், நியாய விலையில் ஏற்படும் குந்தகம் ஆகியவையும் இதில் அடங்கும். அரிஸ்டாடில் இதைப் பெருங் குற்றமாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார். கடன் கொடுத்ததிலிருந்து பெறும் இலாபமே வட்டியாகும்; பேராசையின் பெரு விளைவே கடு வட்டி; இக் கருத்து இடைக்கால வாதிகள் கருத்தை ஒத்துள்ளது. பணத்தின் வெறுமையை அடிப்படையாகக் கொண்டு அரிஸ்டாடில் கடுவட்டியைக் கண்டித்துள்ளார். பணம் என்பது பொருள்களை மாற்றிக்கொள்வதற்குரிய ஒரு சாதனம் மட்டுமே. அதையே, மேலும் பணம் ஈட்டுவதற்குப் பயன்படுத்தினால், அது இயல்புக்கு விரோதமானதாகும். அதைக் கண்டிக்கவேண்டும். கடு வட்டி வாங்குவது விவிலிய வேதத்தில் தடுக்கப்பட்டுள்ளது. 'சகோதரனிடமிருந்து கடு வட்டி வாங்குவதற்கு இத்தடை எந்த

அளவு பயன்பட்டதென்று நாம் இங்கு ஆராயவேண்டியதில்லை. பணத்தைக் கடு வட்டிக்கு விடக்கூடாது என்று விவிலிய வேதத்தில் கூறியுள்ளதையே நாம் கண்டு உணரவேண்டும்' (Ps. XV. 5). கிறிஸ்தவர்கள் எதையும் எதிர்பார்த்துக் கடன் கொடுக்கக்கூடாது. அதோடு பணம் திரும்பி வருமா என்ற நினைப்பே கூடாது (லூக் vi 35).[1]

கடு வட்டி வாங்குவது குறித்துச் சட்டம் என்ன சொல் கிறது என்பதை ஆராய்வதற்கு முன், வேறு இரண்டு விஷயங் களைக் கவனிக்கவேண்டும். அர்ச். லூக்கில் என்ன சொல்லி பிருப்பினும், கிறித்துவப் பாதிரிகள் இடையே என்ன கூறியிருப் பினும், மாதா கோவில் முதலில் இதை அவ்வளவாகக் கண்டிக்கவில்லை. பல காலம் சென்ற பின்னரே அவ்வாறு கண் டிக்க ஆரம்பித்தது. இப் பிரச்சினை முதற்கண் எழுந்தபோது, சமயத் துறையில் ஈடுபட்டவர்கள் மட்டுமே கடு வட்டி வாங்கக் கூடாதெனக் கூறப்பட்டது. பன்னெடுங்காலம் சென்ற பின்னரே எவரும் கடு வட்டி வாங்கக் கூடாதென்ற தடை ஏற்பட்டது. கடு வட்டி வாங்குவது அக்காலத்தில் பெருங் குற்றமாகக் கருதப் பட்டது. இடைக்காலத்தில் தொழிலில் வளர்ச்சி அவ்வளவாக ஏற்பட்டிருக்கவில்லை; வாழ்க்கையில் கஷ்டப்படுகிறவர்களே கடன் வாங்கினர்கள். இதைக் கருத்தினில் கொண்டால்தான் கடு வட்டி வாங்குவது குறித்து இடைக்கால வாதிகளின் கருத்தினைப் புரிந்துகொள்ள முடியும். எனவே, அக் காலத்தில் பெருந்தீ, வெள்ளம், இயற்கையின் சீற்றத்தால் பருவ மழை தவறி, விளைச்சல் குறைவு ஆகிய காரணங்களினால் துன்பமுற்று வாழ்விழந்தவர்களுக்கே முக்கியமாகக் கடன் கொடுக்கப்பட்டது. மேலும், தெரிந்தவர்களுக்கே கடன் கொடுக்கப்பட்டது. அக் காலத்தில் பலவகை விவகாரங்கள் இருந்திருக்கும். என்றாலும், இடைக்காலக் கடன், பொருள் உற்பத்திக் காரியங்களுக்காக இல்லாமல், வாழ்க்கையில் துன்பமுற்றவர்களுக்கே பெரிதும் கொடுக்கப்பட்டதாகக் கொள்ளவேண்டும். தங்களுடைய கஷ்டம் நீங்கும் வரையில் வாழ்க்கை நடத்துவதற்கே அவர் களுக்குக் கடன் கொடுக்கப்பட்டது. மேலும், துன்பப்படுபவரின் நண்பரே அவருக்குக் கடன் கொடுத்தார். இத்தகைய நிலையில் அவரிடமிருந்து கடு வட்டி வாங்குவது எவ்வாறு பொருந்தும்?

[1] 'எதையும் எதிர்பார்த்துக் கடன் கொடுக்கக்கூடாது;' 'பணம் திரும்பி வருமா' என்ற கவலையே கூடாது. முன்னதே சரியென வைத்துக்கொண்டாலும், கடன் கொடுத்தவன் வட்டி எதிர்பார்க்காவிட்டாலும், அசல் திரும்பி வரவேண்டும் என்று கூடவா எதிர்பார்க்கக்கூடாது? இடைக்காலத்தில் அதிகார பூர்வமாக ஆட்சியி லிருந்த இக்கருத்துக் குறித்துப் பின்னுளில் பல சந்தேகங்கள் ஏற்பட்டது விசித்திரமே. இதைக் குறித்து ஓ' பிரியன் எழுதியுள்ளதையும் காணவும்.

அவ்வாறு வாங்குவது இயற்கைக்கு முரணானதல்லவா? அவ்வாறு வாங்குவது, 'பிறர் துன்பத்தைத் தன்னுடைய நலனுக்குப் பயன் படுத்திக்கொள்வதல்லவா?' வெனிஸ் வணிகனும் இதையே கூறுகின்றான் : 'ஒருவன் தன் நண்பனிடமிருந்து வட்டிப் பணத்தை வாங்குவது நட்புக்கு அழகாமோ?'

பண்டைக் காலத்தில் கடு வட்டித் தடை ஏற்பட்டதற்கான அடிப்படையே விவிலிய வேதமும், அரிஸ்டாடிலுமேயாகும். பணம் உற்பத்தித் தன்மை வாய்ந்ததல்லவென அரிஸ்டாடில் கூறியுள்ளார். ஏழைகள் பெருந் துன்பத்திலிருக்கும்போது அவர்களிடமிருந்து கடு வட்டி வாங்குவது அவர்களை மேலும் கசக்கிப் பிழிவதாகவே கொள்ளலாம். கடு வட்டி வாங்குவதை அர்ச். தாமஸ் அக்வினஸ் கடுமையாகக் கண்டிக்கிறார். கடு வட்டி வாங்குவது நியாயத்திற்கு எதிராக இழைக்கப்படும் குற்றமாக மாறிவிடுகிறது இவரது வாதத் திறமையால். இந்த வாதம் பயன் படுத்துதல், உட்கொள்ளுதல் ஆகிய இரண்டிற்கும் உள்ள உறவின் அடிப்படையில் எழுந்துள்ளது. சிலவற்றில் இவை இரண்டும் ஒன்றுக நிகழும். வேறு சில துறைகளில் இவை தனித்தனியே நிகழும். மது, ரொட்டி ஆகியவற்றின் விஷயத்தில் இவை இரண்டும் ஒருங்கே நிகழும். அவற்றை உட்கொள்ளாது பயன்படுத்த முடியாது. இதைப் பயன்படுத்த அனுமதிக்கும் போது, அதை எடுத்துக்கொள்ளவும் நாம் அனுமதிப்பதாகவே பொருள்படும்.

நாம் ரொட்டியைப் பயன்படுத்த ஒருவனுக்கு அனுமதி அளிக்கும்போது, அந்த ரொட்டியை அவனுக்குக் கொடுக்காமல் இருப்பது எப்படி? அவன் அதைப் பயன்படுத்திய பிறகு, அந்த ரொட்டி திரும்பி வரும் என எவ்வாறு எதிர்பார்ப்பது? வேறு சில விஷயங்களில் இவை இரண்டும் ஒருங்கே நிகழாதிருக்கும். ஒருவன் ஒரு வீட்டைப் பாழாக்காமல் பயன்படுத்த முடியும். ஒருவனுக்கு ஒரு வீட்டைப் பத்து ஆண்டுகள் பயன்படுத்தக் கொடுப்பதாக வைத்துக்கொள்வோம். பத்தாண்டுகள் கழிந்த பின்னர் அவன் அதை உரியவரிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். இதையே இப்போது மேற்கொண்ட வாதத்தின் அடிப்படையில் கூறுவதானால், ஒருவனுக்கு ஒரு வீட்டை விற்கவும் செய்யலாம்; அவ்வீட்டைப் பயன்படுத்துவதை விற்கவும் செய்யலாம். இவை இரண்டும் தனித்தனியானவை. ஆனால், ரொட்டி விஷயத்தில் இந்நிலை பொருந்தாது. ரொட்டியைப் பயன்படுத்துவது என்றாலே, உட்கொள்வது என்றுதான் பொருள். ரொட்டியைத் தனியாகவும், அதன் பயன்பாட்டினைத்

தனியாகவும் விற்பது எப்படி? இப்போது பண விஷயத்தை எடுத்துக்கொண்டு, பணம் என்பதற்கு அரிஸ்டாடில் கூறிய பொருளைப் பார்ப்போம்: பொருள்களை மாற்றிக் கொள்வதற்குரிய சாதனமே பணம். இருப்பவனிடமிருந்து செல்வதே செல்வத்தின் குணம். அதைப் பயன்படுத்தினால், அதனுடன் அது முடிந்து விடவேண்டும். பயன்பாட்டினால் அழிந்துபடும் பொருளே பணம். இதன் விஷயத்திலும், பயன்படுத்தலும் உட்கொள்ளுதலும் வெவ்வேறான வையல்ல. இவை இரண்டும் ஒருங்கே நிகழும்.

பயன்படுத்தும் பொருளைக் கடனாகக் கொடுத்தோமானால் அது விற்பனையே; அப் பொருள் மீண்டும் வராது என்பதே அர்த்தம். தாமஸின் வாதம். ஒருவனுக்கு ரொட்டியை விற்கும்போதே, அவன் அதைப் பயன்படுத்துவதற்கு அவனிடமிருந்து கட்டணம் வசூலிப்பது என்பது பொருந்தாக் கூற்று. அதைப்போலவே, ஒருவனிடம் பணத்தை விற்றுவிட்டு, அதை அவன் பயன்படுத்துவதனால் அவனிடமிருந்து வட்டிப் பணம் பெறுவதும் தவறே. இடைக்காலக் கொள்கைப்படி, கடனைத் திருப்பித் தருவதே முறையான செயலாகும். அதைப் பயன்படுத்துவதற்காக வட்டி வாங்குவது பகற்கொள்ளையாகும். இத்தகைய நிலையில், கடு வட்டி வாங்குபவரின் குற்றம் யாது? மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டால், இதற்குப் பல வகைகளில் பதிலிக் கூறலாம். இல்லாத தொன்றை அவன் விற்பனை செய்வதாகக் கூறலாம். (பயன்படுத்தலும் உட்கொள்ளலும் ஒன்றாக இருக்கும்போது, அவன் அவற்றைத் தனித்தனியே விற்க முயல்வது, இல்லாததை விற்பனை செய்வதுதானே). அவன் ஒரே பொருளுக்கு இரு முறை கட்டணம் வாங்குவதாகவும் கொள்ளலாம். காலம் கடந்ததால், அவன் வட்டி வாங்குவதாகக் கொண்டால், அவன் காலத்தை விற்பதாக ஏற்படுகின்றது. காலம் கடவுளின் வரப்பிரசாதமாகும். அதை விற்பதற்கு மனிதனுக்கு உரிமை யேது? எந்த மனிதனும் அதற்குச் சொந்தம் கொண்டாட முடியாது.

கடு வட்டி பற்றிய இடைக்காலக் கொள்கை அரிஸ்டாடிலின் பணக் கொள்கையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. பொருள்களை மாற்றிக் கொள்வதற்குரிய சாதனமே பணம். எனவே, அதற்கெனத் தனி உற்பத்தித் தன்மை இல்லை. பயன்பாட்டினால் அழிந்துபடும் பொருளே பணம். எனவே, கடன் கொடுத்தலைப் பண உரிமை மாற்றமாகவே அக்காலத்தவர் கருதினர் என்பதே உண்மைக்கு ஏற்ப இருக்கும். பணத்தைப்

பயனுள்ள வகையில் உபயோகப்படுத்த முடியும் என்பதை அவர்கள் உணர்ந்து ஒப்புக்கொண்டார்கள் என்றாலும், தொழிலாளருடன் கூட்டுச் சேர்ந்தால்தான் பணம் பயன் விளைவிக்கும் என அவர்கள் நம்பினார்கள். எனவே, உற்பத்தி என்பது கடன் வாங்கியவரின் உழைப்பினாலேயே ஏற்படுகிறது. அப் பணத்தைப் பயன்படுத்தும் முழு உரிமையும் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த நிலையிலிருந்து பார்த்தால், கொடுத்த கடனுக்குக் கடு வட்டி வாங்குபவன் மற்றொருவன் உழைப்பின் மீது சுங்கம் வசூலிப்பதாகவே ஏற்படுகிறது. கொடுத்த முன் பணத்துக்குரிய நியாய விலை, அசல் திரும்பக் கிடைப்பதுதான். இதற்கு மேலே எதிர்பார்ப்பது அநீதியாகும்; அப்படி எதிர்பார்த்தால், கடன் கொடுத்தார் கலங்க வேண்டியதுதான்.

கடு வட்டிக் கொள்கை வளர்ச்சியும், படிப்படியாக அக் கொள்கை நயம் பெற்றதும் பொருளாதாரச் சொல்லிலும் செயலிலும் சுவை மிக்க அத்தியாயங்களுள் ஒன்றாகும். அதை இங்கு மேலோட்டமாகவே பார்க்கவேண்டும். விரிவாக ஆராய்வதற்கில்லை. இடைக்கால சமநீதிக் கொள்கையின்படி எவரும் நஷ்டப்படக்கூடாது. கடன் கொடுத்தவனும் அதனால் துயருறக் கூடாது. இத்தகைய விஷயத்தில் கடனின் அசல் தொகையை மட்டும் திருப்பிக் கொடுப்பது போதுமானதாகாது. இதனால் கடன் கொடுத்தவருக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்குக் கடன் வாங்கியவர் பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு பல மாறுதல்கள் ஏற்பட்டன. இவை நடைமுறையில் கடு வட்டித் தடையை உடைத்தெறிந்தன. ஆனால், கொள்கை என்ற அளவில் பார்த்தோமானால், பரிபூரண நியாயம் ஏற்பட இவை அவசியமான மாறுதல்களாகும். கடன் கொடுத்தவருக்கு அதனால் நஷ்டமேற்பட்டுள்ளது; அல்லது இலாபம் வரும்வழி அதனால் அடைபட்டுள்ளது என்று கடன் கொடுத்தவர் எண்பிக்க முடியுமானால், அவருக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் கடன் வாங்கியவர் ஈடு செய்ய வேண்டும் என்பதே நீதி. கால வரையறைக் கடன் இதிலிருந்து ஓரளவு வேறுபட்டதாகும். இதன்படி, குறித்த நாளில் கடனைக் கொடுத்தவருக்கு அப் பணத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் குறித்த நாளில் ஏற்படக்கூடும். அந்த நாளில் அவருக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுக்காவிட்டால், அவர் நஷ்டப்படவேண்டி வரும். இதனால் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டத்துக்கு ஈடு செய்யும் வகையில் கடன் கொடுத்தவருக்கு அசல் தொகையுடன் கூடுதல் தொகை கொடுக்கவேண்டும். பணம் திரும்பி வருமா, வராதா என்ற நிலையும் இருப்பதால், பணம் திரும்பி வரும் என்ற உறுதி இராததால், அத்தகைய

விஷயத்தில் துணிந்து கடன் கொடுப்பதற்காக, அவருக்கு ஓரளவு ஈட்டுத்தொகை கொடுக்கவேண்டும். இவற்றின் பயனுக இரண்டு முடிவுகள் பெறப்படுகின்றன. முதலாவதாக, இம் மாறுதல்களின் பயனுகக் கடு வட்டிக்கிருந்த தடை உடைபட்டுப் போகிறது. தொழிலபிவிருத்தியும், நிதி உத்திகளும் மேம்பட்டுள்ள வாதலால், இந்த நிலே மிகப் பொருந்தும். கடன் கொடுப்பவர் தம் பணத் தைத் தாமே பயன்படுத்த முடியாது என்ற அனுமானம் இவற்றில் பொதிந்திருக்கிறது. முதலீடு செய்யவும், தொழில் தொடங்கவும் பெருத்த வாய்ப்பிருக்கும் பொருளாதார அமைப்பில், கடன் கொடுப்பவர் மேற்கூறிய இரண்டு வாதங்களுள் ஒன்றிலே நிச்சயம் பயன்படுத்த முடியும். கடன் கொடுத்ததால், தமக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவோ, அதனுல் இலாபம் கிடைக்கும் வேறு வழி அடைபட்டிருப்பதாகவோ அவர் வாதிக்கலாம். இரண்டாவதாக, இந்த விலக்குகள் கொள்கை அளவில் விலக்கு கள் அல்ல. பணம் பறிபோகும்; அதாவது கொடுத்த பணம் திரும்பி வராது என்ற பயம் இல்லாதபோது, நஷ்டம் ஏற்படாத போது, வசதிக் குறை விளையாதபோது, கொடுத்த பணத்திற்கு வட்டி வாங்குவது இடைக்கால வாதிகளின் கண்ணோட்டத்தில் இன்னும் கொடூரமாகவே இருக்கிறது. இந்த அமிசங்கள் மொத்த வட்டிக்கும், பொருளாதார வட்டிக்கும் உள்ள வேறுபாட்டினையே குறிக்கின்றன. பொருளாதார வட்டி, அதாவது பணத்தைப் பயன்படுத்தத் தொகை செலுத்துவது முறையல்ல எனத் தொடர்ந்து கருதப்பட்டது.

இதனுல், நாம் இடைக்காலத்தைக் குறித்துத் தவருன கருத்துக் கொள்ளக்கூடாது. ஏனெனில், இடைக்காலக் கொள்கை முதலீட்டை நிந்திக்கவில்லே. இந்த முதலீடு கூட்டுப் பங்குதாரர்கள் என்ற முறையில் இருக்கவேண்டும். கூட்டுப் பங்குதாரர், அத் தொழிலின் கஷ்ட நஷ்டங்களில் பங்கு கொள் பவராயிருக்கவேண்டும். பரஸ்பர நம்பிக்கையில் ஏற்பட்ட கூட்டுப் பங்கு அமைப்பு நேர்மையானதென்றே எல்லாக் காலத் திலும் கருதப்பட்டது. இதில் ஒருவர் பணம் போடும் பங்குதார ராயிருக்கலாம்; மற்றொருவர் உழைக்கும் பங்குதாரராயிருக்கலாம். பணம் போடும் பங்குதாரரும் அத்தொழிலில் கிடைக்கும் இலாபத்தில் மட்டும் பங்கு பெற்றுக்கொண்டு, அத் தொழிலில் நேரடியாக ஈடுபடாதிருக்கலாம். எனினும், இவ் விஷயத்தில் அவர் தம் பணம் முழுவதையும் திரும்பிப் பெறும் உரிமையற்றவராக இருப்பது அவசியம். ஏனெனில், இத்தகைய உரிமையிருந்தால், அது கடு வட்டி வாங்குவதில் முடியும். அவர் தம் பணத்தை மற்றொருவரிடம் பங்கு முறையில்

ஒப்படைக்க மட்டுமே செய்தால், அந்தப் பணம் அவருடையதாகவே இருக்கிறது. 'இதனால், வணிகர் அதை வைத்துக் கொண்டு, சொந்தக்காரரின் நஷ்டப் பொறுப்பில் வணிகம் செய்கிறார்; கைவினைஞர் இவ்விதமே தொழில் நடத்துகிறார்.' எனவே, பணத்தின் மூலச் சொந்தக்காரர், தம் பணம் பயன்பட்டதால் விளைந்த இலாபத்தில் ஒரு பகுதிக்கு உரிமை கொண்டாடலாம். அது மற்றவரிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும், அவருடைய சுவாதீனத்தை விட்டுப் போனதாகக் கூறிவிட முடியாது. திரு. டானி பொருத்தமாகக் கூறியிருப்பது போல, இடைக்காலக் கொள்கை, அரசாங்கக் கடன் பத்திரங்கள் வைத்திருப்பவர்களையே கண்டிக்கிறது. ஏனெனில் இவருக்கு நஷ்டம் ஏற்படும் என்ற பயமேயில்லை. இவருடைய பணம் பத்திரமாக இருக்கிறது. என்றாலும், இவரும் தம் பணம் குட்டி போட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்றால் இதை என்னென்று கூறுவது?

அர்ச். தாமஸ் அக்வினஸ் விளக்கிக் கூறிய இடைக்காலக் கொள்கையின் ஓர் அமிசத்தைக் கடைசியாக இப்போது எடுத்துக் கொள்வோம். மனிதனின் சமூகத் தன்மை பற்றிய அரிஸ்டாடிலின் கொள்கை அடிப்படையில் இடைக்கால வாதிகள் தொழில் பிரிவினைக் கொள்கையை அமைத்துக்கொண்டனர். ஆனால், சமுதாயமாகச் சேர்ந்து வாழ்வதாயிருந்தால், அவர்கள் பல விஷயங்களைச் செய்வது மூலம் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கவேண்டும். (எனவேதான், பேசுந்திறன் மக்களுக்குள்ள பெருஞ் செல்வமாகக் கருதப்படுகிறது. இதனால் தங்கள் தேவைகளையும், தாங்கள் அடைந்தவைகளையும் ஒருவருக்கொருவர் கூறிக்கொள்ள முடியும் அல்லவா?)[1] பல தொழில்கள் இருப்பது அவசியமே. ஆனால், தொழில்களனைத்தும் சம கௌரவம் உள்ளவை ஆகிவிடுமா? இதில் ஓர் அமிசத்தை மட்டும், அதாவது வர்த்தகம் பற்றிய கருத்தை மட்டும் இங்குக் கவனித்தால் போதுமானதாகும். ஒரு தொழில் பிரசித்தியானதா என்பது அத் தொழில் சமுதாயத்துக்கு எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்பதைப் பொறுத்துள்ளது. தனியார் இலாபம் ஒரு வகையில் பொதுச் சேவைக்கு முரணானதாகும். எனவே, தனியாருக்கு இலாபம் அளிக்கவல்ல தொழில்கள் அபாயகரமானவை; அவை மிக மோசமானவை. வியாபாரியைக் கடவுள் விரும்ப மாட்டார் என்ற கருத்தே முதலில் பரவலாக இருந்தது. ஆனால், அர்ச். தாமஸ் அக்வினஸ் காலத்தில் வணிகம் பாவம் என்ற கருத்து மறைந்து

[1] ஆட்சிக் கொள்கைகள் புத்தகம் I, அதிகாரம் 1.

உ. ப. நி.
எண் 48462

விட்டது. என்றாலும் இத் தொழிலில் பாவம் செய்வதற்குப் பல வாய்ப்புக்கள் இருப்பதால், தனது ஆத்மாவைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ள விரும்புவோன் எவனும் இத்தொழிலைப் புறக் கணிக்கவே செய்வான். முதலாவதாக, வியாபாரி என்பவன் யார்? பின்னர் அதிக விலைக்கு விற்கவேண்டும் என்ற நோக்கத்துடன் பொருளை முன்னதாக வாங்குபவனே வியாபாரியாவான். பின்னர் அதிக விலைக்கு விற்கவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல், ஒருவன் ஒரு பொருளை வாங்கியிருந்தால், பின்னர் அவன் அப் பொருளை எதேச்சையாக அதிக விலைக்கு விற்றுவுங்கூட, அவன் வியாபாரி ஆகமாட்டான். உயர்ந்த விலைக்கு ஒரு பொருளை விற்பதற்குக் கூறப்பட்டுள்ள காரணங்களைக் கவனித்தால், நியாய விலைக் கொள்கை, குழப்பம் என்ற மூடுபனியில் மறைந்திருப்பது தெரியவரும். பொருளை வாங்கியவன் அதை அபிவிருத்தி செய் திருந்தால் அதிக விலைக்கு விற்கலாம். இட மாற்றத்தால் அல்லது கால மாற்றத்தால் விலை ஏறலாம். போக்குவரத்தில் உள்ள அபாயத்தால் அப்பொருளின் விலை ஏறலாம். இயல்பான மாற் றத்திற்கும், இயல்பற்ற மாற்றத்திற்கும் உள்ள வேறுபாட்டினை அரிஸ்டாட்டில் எடுத்துக் காட்டியது போலவே, அர்ச். தாமஸ் அக்வினசும் அபாயகரமான முறையில் எடுத்துக் காட்டுகிறார். இயல்பற்ற மாற்றத்தால், பரிவர்த்தனையால் வாழ்க்கைத் தேவை பூர்த்தியாகாது; இலாபம் மட்டுமே ஏற்படும். எனவே, இத்தகைய பரிவர்த்தனை கௌரவமானதல்ல. ஆனால், இதில் கௌரவம் இல்லையென்றாலும், இது பாவம் என்றும் கூறிவிடுவதற்கில்லை. எனவே, இலாபத்தை விட இலாபம் எவ்வாறு பயன்படுத்தப்படு கிறது என்பதே இப்போது முக்கியத்துவம் பெறுகிறது. அர்ச் தாமஸ் கருத்துப்படி, பொதுநலனை முன்னிட்டு ஒருவன் வணிகத்தில் ஈடுபடலாம். அவன் தன் முயற்சிக்கு ஊதிய மாகவே இலாபத்தை எதிர்பார்க்கிறான். இலாபமே அவன் குறிக் கோள் அல்ல. எனவே, இலாபம் நியாயமானதாயிருந்தால், அது ஒருவகை ஊதியமாகவே கருதப்படும்.

ஆட்சிக் கொள்கைகளில் அர்ச். தாமஸ் கூறியுள்ள ஒரு கருத்து சுவை மிக்கதாக உள்ளது. இது அவ்வளவாக எதிர்மறையில் இல்லை. ஒரு நாடு தனக்கு வேண்டியதை இரு வழிகளில் பெற லாமென தாமஸ் கூறுகிறார். இயல்பான முயற்சியால் அதை அடையலாம்; வணிகத்தின் மூலமாகவும் அதை அடையலாம். இந்த வாதம் ஒரு நாடு தன்னிறைவு உள்ளதாக இருக்கவேண்டும் என்பதற்குச் சாதகமாகவே இருக்கிறது. தன்னிறைவு வேண்டும் என்ற வணிக வாத ஆதாரத்தின் மீதும், வணிகக் குழுவினரின் தீய செல்வாக்காலும் இக்கருத்துத் தலையெடுக்கிறது என்றாலும்,

நமக்குக் கிடைக்கும் முடிவு வணிகர்கள் நாட்டுக்குத் தேவை என்பதுதான். ஒரு நாடு எல்லாவற்றிலும் தன்னிறைவு உள்ள தாக இருப்பது மிகக் கடினமான காரியம். எனவே, எந்த நாட் டிலும் வணிகர் இருப்பர். இலட்சிய நாடு, வியாபாரிகளைத் தன் தேவைக்கு வேண்டியமட்டும் பயன்படுத்திக்கொள்ளும்.

ஒரேஸ்மே

இடைக்காலப் பொருளாதாரக் கருத்துக்களின் ஆய்வுரையில் நிகொலஸ் ஒரேஸ்மே எழுதிய கட்டுரையைச் சேர்க்காவிட்டால் அது நிறைவு பெறாது. நிகொலஸ் ஒரேஸ்மே லிசியோ பிஷப் ஆவார் (1320-1382). இவர் தமது புத்தகத்தை இருபத்தாறு சிறு அதிகாரங்களாகத் தொகுத்தார். இப் புத்தகத்தை ரோஷர் வானளாவப் புகழ்கிறார். இன்றைக்கும் இப்பணக் கொள்கை செல்திறன் உள்ளதாகச் செப்புகிறார். இவ்வளவு புகழ் பெறுவ தற்கு இதற்கு உரிமை இல்லை என்றாலும், இவருடைய கட்டுரை குறிப்பிடத்தக்கதாகும். பிற்கால விஞ்ஞான நீதியில், விருப்பு வெறுப்பு இன்றி எப்பொருளையும் ஆராயும் பிற்கால மனப்பான்மையில் இக்கட்டுரை அமைந்துள்ளது. உண்மையில் சொல்லப்போனால், இதைப் பணக்கொள்கை எனக் கூறுவதை விட, நாணய அமைப்பை மாற்றியமைக்க அரசனுக்கு உள்ள உரிமைகளை இது பலமாக மறுத்துரைப்பதாகவே கூறவேண்டும். இவரும் முதற்கண் தம் கருத்துக்களைப் புராதன வழியிலேயே சொல்லத் தொடங்குகிறார்; பழங்கால பண்டமாற்றத்தையும், அதில் உள்ள கஷ்டங்களையும் எடுத்துச் சொல்லுகிறார். அதன் பின் பணம் படைக்கப்பட்ட வரலாற்றை எடுத்துரைக்கிறார். பொருள்களை மாற்றிக்கொள்வதற்குரிய சிறந்த சாதனமாகவே பணம் படைக்கப்பட்டது. எனவே, பணம் என்பது செயற்கைச் செல்வமே. ஒருவனுக்கு ஏராளமான செல்வம் இருந்தபோதிலும், அவன் பட்டினியால் இறக்க நேரிடலாம். இதற்குக் குரோசசே உதாரணம். செல்வம் உருண்டோடுவதற்கான சாதனமே பணம். இப்போது நாம் கூறுவதைப்போல, பணம் என்பது பொருள்களை மாற்றிக் கொள்வதற்குரிய சாதனமே.

ஒரேஸ்மே கூறிய இரண்டு கருத்துக்கள் சிறப்பாகக் குறிப் பிடத் தக்கனவாம். பரிவர்த்தனை சாதனம் என்ற முறையில் சில பொருள்கள் அடங்கியிருக்கவேண்டும். பெருத்த பரிவர்த்தனைக் கும், சிறு பரிவர்த்தனைக்கும் வசதியான ஒரு பொருளைக் கண்டு பிடிப்பது கடினமாய் இருந்ததால், ஒரேஸ்மே இரண்டு உலோகங்

களில் நாணயம் வெளியிடப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார். அக்கசாலை வீதாசாரத்துக்கும், அங்காடி வீதாசாரத்துக்கும் வேறுபாடு இருப்பதால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை அவர் தெளிவாக உணர்ந்துள்ளார். அங்காடி வீதாசாரத்தையே அக்க சாலை வீதாசாரம் பின்பற்றவேண்டுமென அவர் திட்டவட்ட மாகக் கூறியுள்ளார். 'அதிக மதிப்புத் தரப்பட்ட உலோகம், குறைந்த மதிப்புத் தரப்பட்ட உலோகத்தைப் புழக்கத்திலிருந்து விரட்டிவிடும்' என்ற கிரேஷாம் நியதியும் ஒரேஸ்மேவுக்குத் தெரி யும். எனவே, அரசன் தன்னிச்சையாக வீதாசாரத்தை நிச்ச யிக்கவுங் கூடாது, மாற்றவுங்கூடாது. அவ்வாறு செய்வதால், பல தில்லு முல்லுகள் ஏற்பட வழி உண்டாகும். பொன்னைக் கொண்டு ஒரு வீதாசாரப்படி வெள்ளி வாங்கும் வழக்கமும், அதனால் வீதாசாரம் மாறிப் போவதும், பின்னர் வெள்ளியைக் கொண்டு பொன் வாங்கும் பழக்கமும் இதனால் ஏற்படக்கூடும்.

நாணயம் விஷயமாய் அரசன் எந்த அளவு தலையிடலாம் என்பதை ஒரேஸ்மே திட்டவட்டமாக வரையறுத்துள்ளார். இதிலிருந்து அவர் பல விஷயங்களை உய்த்துணருகிறார். எல்லோரும் நாணயம் அச்சிட்டு வெளியிட முடியாது. சமுதாயத்தின் சார்பில் எவராவது பொதுமனிதர்தாம் இக் காரி யத்தைச் செய்யவேண்டும். சமுதாயப் பொதுமனிதன் அரசன் தான். எனவே, அரசன்தான் நாணயம் அச்சிட்டு வெளியிடு வதற்கு வகை செய்யவேண்டும். ஆனால், பொது மக்களின் பிரதிநிதி என்ற முறையில்தான், அரசன் இதைச் செய்ய வேண்டும். இதற்குத் தனி உரிமை கொண்டாடக்கூடாது. பொது மக்களின் பிரதிநிதி என்ற முறையில்தான் அரசன் அக் காரியத் தைச் செய்கிறான். எனவே, அவ்வாறு அச்சிட்ட நாணயம் அரசனுக்குச் சொந்தமாகிவிடாது.

பணத்தை மாற்றக்கூடிய, திருத்தக்கூடிய, தரம் குறைக்கக் கூடிய பலவழிகளை ஒரேஸ்மே ஆராயும்போது இக்கொள்கை மிக முக்கியத்துவம் பெறுகிறது. பெயர் குறிப்பீடு, எடை, உள்ளடக்கம் போன்ற பல வகைகளாக இதைப் பிரித்துப் பார்க்க வேண்டிய தில்லை. நாணயத்தின் தரத்தைக் குறைப்பதை ஒரேஸ்மே மிக மூர்த்தன்னியமாக, முழு மூச்சுடன் தாக்குகிறார். நாணயத்தின் தரத்தைக் குறைக்கிற அரசன் பொய்யன், பித்தலாட்டக்காரன், பொய்க்காரி கூறுவோன் ஆகிறான். நாணயம் பொன்னால் ஆனதாயிராதபோது, அதைப் பொன் நாணயம் என அரசன் உறுதி கூறுவானாகில், அதனால், அவன் எவ்வளவு இழிந்தவன் ஆகிறான்! அதனால், அவனுக்குக் கிடைப்பது அவப் பெயரே.

ஒரு நாணயம் ஒரு ராத்தல் நிறையில்லாதபோது, அதை ராத்தல் நிறையுள்ள நாணயம் எனக் கூறுவதும் இத்தன்மை வாய்ந்ததே. இத்தகைய இழிசெயல்களால் ஏற்படும் இலாபம் அயோக்கியத் தனத்தின் விளைவே யாகும். அது இயற்கைக்கு மாறுனதாகும். பணமாற்றம், கடு வட்டி, நாணயத்தின் தரம் குறைத்தல் ஆகியவை அனைத்தும் அரிஸ்டாடில், தாமஸ் கருத்துப்படி ஒரே தன்மை வாய்ந்த ஒரு கூடைச் செங்கற்கள்தாம். இயற்கை மீறிய முறைகளில் பணத்திலிருந்து இலாபம் சம்பாதிக்கும் வழிகளே இவை. இவையெல்லாம் ஒன்றையொன்று விஞ்சும் இழிவான செயல்களே. நாணயத்தின் தரம் குறைப்பது யதேச்சாதிகாரம் தலைவிரித்தாடுவதற்கு வழிகோலும் என ஒரேஸ்மே கூறுவதால், முடிவில் இவர் கருத்து அரசியல் சேற்றிலும் கால் வைக்கிறது. நேர்வழியை விட்டு விலகிவிட்டால், பின்னர் அதற்கு முடிவேது? நாணயத் தரம் குறைவது அடுத்தடுத்து நிகழும். செல்வமெல்லாம் மக்களிடமிருந்து மன்னனிடம் சரணடையும். இதனால் மக்களெல்லாம் அரசனின் அடிமைகள் என்ற நிலைக்கு வந்துவிடுவர். நாணயத் தரம் குறைவதால் ஏற்படும் தீய விளைவுகளை ஒரேஸ்மே நன்குணர்ந்து உரைத்துள்ளார். இதனால் சமுதாயம் சீர்கேடுறும்; பணம் வேறிடத்துக்குப் பறந்து போகும்; வெளிநாட்டு வாணிகம் நின்றுபோகும். ஒரேஸ்மேயிடம் எல்லாவற்றையும் எதிர்பார்த்தால் நாம் ஏமாந்து போவோம் என்பது உண்மையென்றாலும், பதினான்காம் நூற்றாண்டிலேயே ஒரேஸ்மே பல பிரச்சினைகளையும் பிரத்தியட்ச உணர்வுடன் அணுகி ஆராய்ந்தார். நடைமுறைக்கேற்ற கருத்துக்களையே எடுத்துரைத்தார் என்று கூறுவது மிகையாகாது.

3. மெர்க்கன்டலிசம்

1. வரலாற்றுப் பின்னணி

'மெர்க்கன்டலிசக் (Mercantilism) கோட்பாடு' (வணிக வாதம்), 'மெர்க்கன்டலிசக் கொள்கை' என்று பலபடப் பேசுவது வழக்கமாகிவிட்டது. என்றாலும், மெர்க்கன்டலிசம் என்பதை விளக்குவது எளிதல்ல. இது தவருன பொருள் தரும் ஏமாற்றுச் சொற்றொடராகும். மெர்க்கன்டலிசத்தைக் குறிப்பிட்ட காலத்தில் தொகுதியாகவுள்ள சில எழுத்தாளர்கள் உருவாக்கி வெளியிட்டார்கள் என்று சொல்வதானால், அது பொய்யுரைக் கதையாகவே இருக்கும். வழி வழி வந்த எந்தப் பழங்கொள்கைக் குள்ளும் மெர்க்கன்டலிசக் கோட்பாட்டைக் கட்டுப்படுத்த முடியாது. பின்னர் வந்த பிசியாகிரட்ஸ் (இயற்கை வாதிகள்) மெர்க்கன்டலிசத்தைத் தகர்த்தெறிய, அதன் பின்னர் வந்த ஆடம் ஸ்மித், இவை இரண்டையும் மீறி மறுத்திட, இவற்றிற்கு முன்னால் அன்று நிலவிய மரபு, வழிவழிக் கொள்கை மெர்க் கன்டலிசம் (இக்கருத்தை இன்றும் சிலர் கொண்டிருக்கலாம்) எனக் குறிப்பிடுவதும் தவறே. இது மெர்க்கன்டலிசம் பரவி யிருந்த பிரதேசத்தையும், நிலவியிருந்த காலத்தையும் நோக்கி னால் நன்கு தெரியவரும். மெர்க்கன்டலிசம் என ஒன்றிருப்பதாக ஒப்புக்கொண்டால், அது மூன்று நூற்றாண்டுகள் அரியணையில் அமர்ந்திருந்தது. இந்த வாதத்தை அனுசரித்தே ஐரோப்பிய நாடுகளின் சொல்லும், அதைவிடச் செயலும் இருந்தன. இடைக்காலம் முடிவடைகிறது என்பதற்கு அறிகுறியாகப் புரட்சி கரமான மாறுதல்களின் பயனாக ஐரோப்பா எங்கணும் சில கருத்துக்கள் தலைதூக்க ஆரம்பித்தன. இவை ஆங்காங்கே தனித் தனியாக ஏற்பட்டபோதிலும், ஆச்சரியப்படத்தக்க வகையில் இவை ஒரே மாதிரியாக இருந்தன. பொதுவான சில அனுமானங் களின் அடிப்படையிலேயே இக் கருத்துக்கள் ஏற்பட்டன. இக்

கருத்துக்கள் அர்ச். தாமஸ் அக்வினஸ் கொண்ட கருத்துக்களுக்கு நேர் மாறுனவை. அர்ச். தாமஸ் தனித் தேசீயக் கருத்துக்குப் புறம்பாக இருந்தார்; உயர் ஒழுக்க நெறியாளராகத் திகழ்ந்தார்; பாரமார்த்திகக் கருத்தே கொண்டிருந்தார்; பரலோக நிஜவே பெருநிஜவாக இருந்தார். வணிக வாதக் கொள்கைகள் இவற்றிற் கெல்லாம் மாருனவை. இக் கருத்துக்கள் பதினான்காவது நூற் ருண்டின் துவக்கத்தில் தலையெடுக்க ஆரம்பித்தன. இக் கருத் துக்கள் திருத்தத்திற்கும் மாறுதல்களுக்கும் உட்பட்டு உருமாறின. என்ருலும், பதினெட்டாவது நூற்ருண்டின் பிற்பகுதிவரையில் இக் கருத்துக்கள் தொடர்பு விட்டுப் போகவில்லை. இப்போதுங் கூட, வணிக வாதம் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறது. இது மீண்டும் தலைதூக்கும் என்பதற்குரிய அறிகுறிகள் தென்படு கின்றன. எந்தக் கொள்கையும் மூன்று நூற்ருண்டுகள் மாறுபடாமல், அன்று கண்ட மேனிக்கு அழிவின்றி இருக்க முடியாது. வணிகக் கொள்கை என வழங்கப்படுகிற வாதம் பிரான்சு, இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் மட்டுமன்றி ஸ்காட்லந்து, ஸ்பெயின், ரஷ்யா ஆகிய நாடுகளிலும் வழங்கி வந்தது என்பதை நிஜவு கூரும்போது, இது தெளிவாகப் புலப்படும்.

எனவே, வணிகவாதம் நாட்டுக்குநாடு, சந்தர்ப்பத்திற் கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப மாறுபட்டது. பழமையான முழு மெர்க்கன்டலிச வாதியை எங்கும் காண முடியாது என்ருலும் இக் கொள்கையால் பல நன்மைகள் ஏற்பட்டன. அந்தந்தக் காலத்திற் கும் நாட்டிற்கும் உள்ள நிலைமைகளுக்கு ஏற்ப, பொருளாதாரக் கருத்துக்கள் தலைதூக்குகின்றன. பதினைந்தாவது நூற்ருண்டு இறுதியிலிருந்து வளர்ந்த ஐரோப்பாவின் நிலைக்குப் பன் னிரண்டாவது, பதின் மூன்ருவது நூற்ருண்டில் இருந்த ஐரோப்பா முற்றிலும் மாறுபட்டது. மெர்க்கன்டலிச வாதிகளிடையே கருத்து மாறுபாடுகள் இருந்தன. அங்ஙனம் இருந்தன என்ருல், பெரு மளவு அவர்கள் அவ்வப்போது நிலவிய பொதுவான அடிப்படை களின்மீதே தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இந்த அடிப்படைகள் இடைக்காலத்திற்குப் பிறகு ஐரோப்பாவின் மாறிய நிலைமைகளால் ஏற்பட்டவையே.

(கட்டுரை எழுதச் சொல்லவும், கேள்வித் தாள்கள் புனையவும் உரிய தலைப்புக்களான) மறுமலர்ச்சி, சீர்திருத்த இயக்கங்கள், அச்சுப் பொறி புதிதாக அமைத்தல், அமெரிக்கக் கண்டுபிடிப்பு ஆகியவற்றின் காரணமாக ஐரோப்பா பெரிதும் மாறிவிட்டது. இடைநிலை மாறுபாட்டுக் காலத்தைக் குறிக்கும் சில மாறுதல்களைச்

சற்றே ஆராய்ந்து பார்த்தோமானால், மெர்க்கன்டலிசத்திற்கும், அக்கால அரசியல் எண்ண உலகில் ஆட்சி செய்த கருத்துக் களுக்கும் உள்ள நெருங்கிய உறவு தெரியவரும். அரசியல் மாற்றமே அடிப்படையான முதல் மாற்றம். இந்த இடத்தில் வரலாற்று ஆராய்ச்சியை நாம் மேற்கொள்ள வேண்டியதில்லை. வரலாற்று நிகழ்ச்சிகளின் காரண காரியங்களை நாம் ஆராய்ந்து கொண்டிருக்கவும் தேவையில்லை. மிகவும் சிறப்பு வாய்ந்த பெரும்பாலான நாடுகளில், மத்திய காலத்தில் போர் வெறி கொண்ட கிளர்ச்சிக்காரர்களான பிரபுக்களுக்கும், செல்வமும் வலிமையும் மிக்க குடிமக்களுக்கிடை அதிக பலமுள்ள அரசனுக்கும் ஏற்பட்ட மோதல்களினால் சில நேரங் களில் பலமான இத்தகைய நாட்டில் செம்மையான, செயல் திறனுள்ள மத்திய அரசு ஏற்பட வழி ஏற்பட்டது. ஆங்கில நாட்டு வரலாற்றின் திருப்பு முனை, ட்யூடர் வமிச அரசர் களுடன் தொடங்கியது. அரசனின் அதிகாரம் வலுவுள்ளதாக மட்டுமன்றி விரிவடையவும் செய்தது. இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின் ஆகிய நாடுகள் பூகோள ரீதியில் வெறும் பிரதேசங்கள் என்றிருப்பதற்குப் பதிலாக, தனித்தன்மை வாய்ந்த நாடுகளாக மாறின. நிலப்பிரபுத்துவ முறையில் சில உரிமைகள், பொறுப் புக்கள் ஆகியவற்றுல் பின்னிப் பிணைக்கப்பட்டு, அண்டை யிடம் பக்தி விசுவாசத்துடன் இருப்பதே முதல் பொறுப்பாக இருந்தமையின், இத்தகைய அமைப்புத் தேசீய ஒருமைப்பாடு ஏற்படுவதைத் தடுத்தது. பிரபுக்களின் கொட்டம் அடக்கப் பட்டு, அவர்களுக்குரிய இடத்தில் அமர்த்தப்பட்டுள்ள அரசன், கொள்கை அளவில், 'மக்களின் தந்தை'யாக, 'மன்னன் உயிர்த்தே மலர்தலே உலகம்' என்பது உணரப்பட்டது. இங்கிலாந்திற்காகவும், இங்கிலாந்தில் வாழ்பவர்களுக்காகவும் சில பொதுவான பற்றுக்களையும் உரிமைகளையும் கட்டிக் காப்பதில் அரசனும் அரசாங்கமும் கவனமுடன் இருத்தல்வேண்டும் என்பது அறியப்பட்டது. இங்கிலாந்து, ஃபிரான்சு போன்ற நாடுகள் இவ்வாறு தனித்தனிப் பற்றுள்ளவைகளாகி, தனித்தன்மை உள்ளவைகளாகிவிட்டதால், அவை ஒன்றுக்கொன்று அடிக்கடி போர்செய்யாவிட்டாலும், எதிரி என்ற உணர்வு வளரத் தலைப் பட்டது. அவற்றின் பற்றுக்கள் ஒன்றுக்கொன்று முரணுகிக் கொண்டே சென்றன. இடைக்காலத்தில் நிலவிய தனிச் சார்பற்ற உணர்வு, எல்லோரும் ஓரினம் என்ற தனித் தேசீயம் சாரா உணர்வு மறைந்தொழிந்துவிட்டது. ஒன்றுபடுத்தப் பட்ட அரசுகள் உருவாயின ; அமைதியான காலத்தில் இவை பங்கமை பாராட்டின ; நேரம் வந்தால், ஒன்றுக்கொன்று போர்க்களத்தில் சந்திக்கத் தயாராய் இருந்தன. பழங்காலத்தில் போர்கள்

நிகழ்ந்தன என்பதில் ஐயமில்லை என்றாலும், நிலப்பிரபுத்துவ அமைப்பின் சிக்கலான தன்மை காரணமாக எவ்வளவு போர்கள் நிகழ்ந்தன என்பது கவனிக்கத்தக்கது. இங்கிலாந்து மன்னன், ஃபிரெஞ்சு அரசனுடன் வேறுபாடு கொண்டால், நார்மண்டியின் பிரபு என்ற முறையிலேயே படையெடுத்துச் சென்றான் என்று சொல்ல முடியாது. ஆங்கிலேயனின் கருத்தில் ஸ்காட்லாந்து விடுதலைப்போர் என்பது, கீழ்ப்பட்ட நிலப்பிரபு ஒருவரை அடக்கி ஒழுங்குபடுத்துவது என்றே கொள்ளப்பட்டது. ஆனால், புதிய நிலைமைகளில் பற்றுக்களின் முரண்பாடே அரசுகட்கும் தேசிய இனங்கட்கும் இடையில் முளைவிட்டதாகும்.

முன்னேற்றத்திற்கு விளக்கம் தருவதாயும், ஊக்கமளிப்பதாயும் உள்ள அரசியல் சிந்தனையும் இதே போக்கிலேயே சார்ந்து சென்றது. அரசியல் வளர்ச்சிக்கும், மொக்கன்டலிசத்தின் அடிப்படைக்கும் உள்ள தொடர்பை விளக்கியவர்களில் இரு எழுத்தாளர்கள் மறைமுகமாக மிக முக்கியமானவர்கள். 'அரசன்' (The Prince) என்னும் நூல் எழுதிய மெக்கியவல்லி (Machiavelli 1469-1527) இவர்களில் ஒருவராவார். இவர் பற்றற்ற வியத்தகு தனி நிலையில் அரசியல் கருத்துக்களை, அறிவியல் முறைப்படி ஒழுக்க நெறிகளை ஒதுக்கித் தள்ளி, தன் நாளில் இத்தாலியில் 'நகர நாடு' (சிற்றரசு) (Principality) ஒன்றினை நிறுவி நிலை நிறுத்துவது எவ்வாறு என்பதைச் சிறந்த முறையில் விளக்கியுள்ளார். குறிப்பிட்ட ஒரு காரியத்துக்காக எழுதப்பட்ட நூல் இத்தாலிக்கு அப்பாலும் (மற்ற இடங்களிலும்) பயன்படத்தக்கதாயிருந்தது. அந்தக் காலத்துக்கு வலிமை பொருந்திய அரசனே தேவை எனக் கருதிய மெக்கியவல்லி, வல்லரசு ஒன்றை ஏற்படுத்துவதற்குரிய வழிவகைகளைத் தம்முடைய நூலில் விளக்கியுள்ளார். அவ்வாறு வல்லரசு ஏற்படுத்த வேண்டுமென்றால், நியாயம், மனச்சாட்சி, நேர்மை எதையும் கவனித்தல் கூடாது என்று கூறி, தீவினைக்கஞ்சாது எதேச்சாதிகார அதிகாரத்தைக் கைப்பற்றுவது எப்படி என்பதை மெக்கியவல்லி தம் நூலில் எடுத்துரைத்துள்ளார். முதலாவதாக, நன்னெறி, ஒழுக்கம் ஆகியவற்றிலிருந்து, அரசியலை அநேகமாகக் கெட்ட எண்ணத்தோடு விடுதலைசெய்துள்ளார். இரண்டாவதாக, இவர் தம் நூலை இத்தாலிய நகர நாட்டினை உத்தேசித்தே எழுதினரென்றாலும், அது பற்பல இடங்களிலும் கொடுங்கோலாட்சி ஏற்படுத்துவதற்கு வழிகோலியது.

இரண்டாவது எழுத்தாளர் ஜீன் போடின் (Jean Bodin 1520-1596) ஆவார். இவர் அரசியல் கருத்தாற்றல்களை ஆராயும்

போக்கில் இறைமைக் (Sovereignty) கருத்தின் சிறப்பை உலகுக்கு எடுத்தளித்தார். அக் கருத்து தற்காலத் தலைமுறையினர் வரையில் எல்லா அரசியல் சிந்தனையிலும் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. இப்போது ஓரளவு இக்கொள்கையில் பிளவு ஏற் படத் தொடங்கியுள்ளது. இவ்விறைமைக் கொள்கையின் பல் வேறு உருவங்களின் சாராம்சமாவது: ஒவ்வொரு நாட்டிலும் தலை யாய சக்தி ஒன்று உண்டு. அது அந்த நாட்டில் வேறெதற்கும் கட்டுப்பட்டதல்ல. அந்த நாட்டிலுள்ள அனைத்தும் இதற்குக் கட்டுப்பட்டவையே. எனவே, இத்தலைமைச் சக்தி இறைமைக் கொள்கையை மிகக் கவனமுடன் கையாளாவிட்டால், திட்ட வட்டமாகவும் நயம்படவும் எடுத்துரைக்காவிட்டால், அது பல மான மத்தியப் பேரரசுக்கு வழிகோலிவிடும். அத்தகைய இறைமை சக்தி பெற்ற வல்லரசின் வலிமையையே அது வலி யுறுத்துவதாகிவிடும். இதனால் தலைமைச் சக்தியிடம் பொறுப் பற்ற தன்மையும் ஏற்பட்டு விடுகிறது. மேலும் இது சர்வதேச சட்டமிலா ஒழுங்கின்மையில், இறைமையோடு இறைமையை மோத விட்டுவிடும்.

மெர்க்கன்டலிசம் (வணிக வாதம்) என்பது மெக்கியவல்லி, போடின் இவர்களின் அரசியல் கருத்தைப் போன்ற, பொருளாதார வாதமெனப் பொருத்தமில்லாமல் எண்ணுதல் கூடாது. ஒவ்வொரு நாட்டிலும் தலைமைச் சக்தி ஒன்று இருப்பதாகப் போடின் அனு மானித்துள்ளார். வல்லரசு வேண்டுமானால், செய்யத் தக்கவை யாவை, விலக்கத் தக்கவை யாவை என்பதை மெக்கியவல்லி விளக்கிக் கூறியுள்ளார். அக் காலத்தில் வல்லரசுகள் தேவைப் பட்டன. மெர்க்கன்டலிஸ்டுகள் நடைமுறை நேரடிக் கண் ணோட்டமுள்ளவர்கள். நல்ல முறையில், நடை முறைக்கேற்ற வகையில் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் நல்லறிவுவாதி-களாவர் அவர்கள். நாட்டினை வல்லரசாக்கும் பிரச்சினையே அவர்கள் முன் இருந்தது. சக்மாலர் (Schmoller) கூறியது போல மெர்க்கன்டலிசம் என்பது 'அரசினை உருவாக்கும்' வழி தான் என்றாலும், பொருளாதாரத் துறையின் மூலம் அரசினை உருவாக்குவதே அதன் வேலை. இதிலிருந்து பெறப்படுவது யாதெனின் மெர்க்கன்டலிசக் கோட்பாட்டினை வெவ்வேறு கோணங்களில் விளக்க வேண்டியது அவசியமாகும். வணிக வாதம் ஒரு சாதனமே யன்றி முடிவல்ல. இதன் இலக்கு அரசியல் தன்மை வாய்ந்ததாகும். அஃதாவது, வல்லரசை உருவாக்குவ தாகும்; இந் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பொருளாதாரத் துறையில் செய்யவேண்டியவையே மெர்க்கன்டலிசப் பணிகள் ஆகும். நோக்கம் ஒன்றானாலும், அதை அடையும் வழிகள் பலவா

யிருக்கலாம். இவை இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப மாறுபடும். வணிக வாதமும் இவ்வாறே காலத்தாலும் நிலையாலும் மாறுபட்டிருப்பதைக் காண்கின்றோம்.

இவை வணிக வாதத்தின் அடிப்படைக் கருத்துக்களை ஓரளவு விளக்குகின்றன. வணிக வாதத்தை மேலும் ஆராய்வோமானால், இப்பிரச்சினையின் இரு வேறு கூறுகள் புலனாகும். முதல் கூறு, அரசனின் நிலையான தேவைகளையும் வறுமையையும் மையமாக வைத்து எழுந்துள்ளது. இரண்டாவது கூறு, அமெரிக்காவில் புதிய வெள்ளிச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் பயனால், ஐரோப்பிய நிதித் துறையில் ஏற்பட்ட விளைவுகளை மையமாகக் கொண்டுள்ளது. இந்த இரு கருத்துக்களுமே வணிக வாதத்தின் கருப்பொருளாகும். இவற்றைச் சுற்றியே மற்றக் கருத்துக்கள் வெளிப்பட்டன. இவை இரண்டும் சேர்ந்து வணிக வாதத்தின் வெளி இயல்புகளை விளக்கிக் கூறின.

நாட்டின் தந்தை என்ற முறையில் தேசிய நலன்களை அரசனே பேணி வளர்க்க வேண்டும். அவனே நாட்டின் புரவலன். பழங்காலத்தில் அரசன் தன் வாழ்வுக்கு நாட்டை நம்பியிருக்கக் கூடாது. தன் சொந்தச் சொத்திலிருந்தே வாழ்க்கையை நடத்தவேண்டும் என்ற கருத்து நிலவியது. இதனால் அதிக வரி விதிப்புக்கு வாய்ப்பு இல்லாது போயிற்று. மற்றப் பிரபுக்கள் செய்வதைப் போல அரசனும் தன் சொந்த வருவாயைக் கொண்டே வாழ வேண்டும். இந்த நோக்கத்தில் அவன் கோமகன்களைப் போலவே வாழ்க்கை நடத்தவேண்டும் என்பது அக்கால நிலைமைக்கு ஏற்ப இருந்தது. ஆனால், வணிக வாத காலத்தில் நிலைமைகள் மாறிவிட்டன. அரசன் தன் நாட்டின் நலனையும் பாதுகாப்பையும் கட்டிக் காக்க வேண்டியவனாகி விட்டான். அத்தகைய நிலையில் மேலே கூறியுள்ள கருத்து எவ்வாறு பொருந்தும்? பழங்காலத்தில் அரசன் எப்பொழுதாவது தான் வரி விதித்துத் தன் செல்வ நிலையை மேம்படுத்திக்கொண்டான். அரசன் பழங்காலத்தில், போர் நேரிடும் காலத்தில் படை திரட்டினால் போதும். நிலையான பெரும்படை தேவையில்லை. படையினருக்கும் ஊதியம் பண்டங்களாகவே வழங்கப்பட்டது. ஆனால், தற்பொழுதோ, நாட்டுக்கு நிலையான படை தேவை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. அரசாங்கத்தில் காரியங்கள் அனைத்திற்கும் அரசனுக்குப் பணம் தேவைதான். இத் தேவையைப் பூர்த்தி செய்ய நிலையான வருவாய் வேண்டும். அவ் வருவாயும் தேவைக்கேற்ப அதிகரித்துக்கொண்டே போகவேண்டும்.

வருவாயை எப்படிப் பெருக்குவது என்பதே நாடாள்வோரின் முக்கிய, முதன்மையான எண்ணமாக இருந்தது.

வரி விதிப்பின் மூலம் வருவாய் தேடலாம் என்ற நிச்சய நிலையே புதிய உலகம் கண்டுபிடிக்கப்பட்டதன் ஒரு காரண மாகும். முக்கியமாக, 'அமெரிக்கா' கண்டுபிடிக்கப்பட்டதும் இந்த நோக்கத்தில்தான். அமெரிக்காவில் வெள்ளிச் சுரங் கங்களும், மற்ற உயர் ரக உலோகங்களும் இருக்கின்றன என்பதே அந்த நாட்டின்மீது ஐரோப்பியனை அக்கறை கொள்ளச் செய்தது. ஏராளமாக வெள்ளி கிடைக்கப் பெற்ற தால் ஐரோப்பாவில் வர்த்தகம், வணிகம், நிதி ஆகியவற்றில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டன. அமெரிக்காவில் வெள்ளிச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் ஐரோப்பிய விலைவாசியின் விளைவுகள் மகத்தானவை. இவை பண அள வீட்டுக் கொள்கையை அளவிட்டுக் கூறுவதற்கு உதாரணமாகத் திகழ்ந்தன. ஆடு, கோழி போன்றவைகளின் (பணவிலை) விலை வாசி ஏறியது ஒருபுற மிருக்க, இயற்கைப் பொருளாதாரம் இப்போது பணப் பொருளாதாரமாக மாறிவிட்டது. முன்னர் பண்டமாற்றின் அடிப்படையில் பொருளாதாரம் இருந்தது. இயற்கைப் பொருளாதாரத்தில் வரி விதிப்பதற்கு அதிக வாய்ப் பில்லை. ஆனால், எல்லாம் பணத்தின் அடிப்படையில் நடைபெறும் போது, பணமே அனைத்திற்கும் உயிர்நாடியாக விளங்கும்போது, எல்லா விவகாரங்களிலும் பணம் பயன்படுத்தப்படும்போது வரி விதிப்புக்கு அதிக வாய்ப்பும் வசதியும் ஏற்படுகின்றன. இவ்வாறு வரி விதிப்புக்குப் புதிய வாய்ப்புக் கிடைத்ததால், அரச நிருவாகமும் வணிகர்களின் வியாபாரத்தைப் போன்றே ஆகி விட்டது. வரவும் செலவும் பண அடிப்படையில் கணக்கிடப் பட்டன. செலவை விட வரவு அதிகமிருந்தால்தான் அரசனின் அதிகார ஆற்றல் அதிகரிக்கும். இதற்குப் புதுப்புது வருமான ஆதாரங்களைக் கண்டுபிடிக்கும் அவசியம் ஏற்பட்டது. புதிய வருமான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப் பெரு முயற்சி மேற் கொள்ளப்பட்டது.

எனவே, செல்வமே நாட்டின் சக்திக்கு அடிப்படையாகி விட்டது. பண வடிவிலுள்ள செல்வம், நீடித்து நிற்கும் செல்வம், பல வகைகளிலும் பல நோக்கங்களுக்கும் பயன்படுத்தக்கூடிய செல்வம், எதையும் நம் விருப்பப்படி ஆட்டிப்படைக்கும் சக்தி அளிக்கும் செல்வம், பாதாளம்வரை பாயக்கூடிய செல்வம் மதிப்புள்ளதாகிவிட்டது. பணத்தை அனைவரும் கௌரவித் தனர்; மதித்து நடத்தினர். தனி மனிதனின் கருத்து மாற்றத்தை

யும் இங்குக் குறிப்பிடவேண்டும். ஒவ்வொரு நாடும் திரைகடல் ஓடியும் திரவியம் தேடவேண்டும். வளத்தைப் பெருக்கி வல்லரசாகவேண்டும்; புதுப்புது குடியேற்ற நாடுகளைத் தன் குடையின் கீழ்க் கொண்டுவரவேண்டும் என்ற கொள்கைகள் ஏற்பட்டவுடன், சிக்கனமாக மனிதன் வாழவேண்டும் என்ற இடைக்காலக் கருத்து எடுபடாது போயிற்று. இப்போது மனிதன் சிக்கனமாக இருக்க வேண்டியதில்லை. ஒவ்வொரு மனிதனும் இயன்ற அளவு செல்வம் சேர்க்க வேண்டும். முன்னர் செல்வம் சேர்ப்பது பாவமெனக் கருதப்பட்டது. இயற்கைப் பொருளாதாரத்தில் செல்வம் சேகரித்தல் இயற்கைக்கு முரணானதாயிருந்தது. பணப் பொருளாதார அமைப்பில் செல்வம் சேர்த்தல் கௌரவமானதாகி விட்டது; புகழுக்குரியதாகிவிட்டது. பொருளில்லார்க்கு இவ் வுலகம் ஏது? இல்லாளே இல்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாயும் வேண்டாள் அல்லவா? இதுவரை வணிகனைக் கடவுள் விரும்பமாட்டார் என்றே கருதப்பட்டு வந்தது. இப்போது இக் கருத்து மாறத் தலைப்பட்டது. வாணிகத்தின் மூலம் இலாபம் ஈட்ட முடியுமானால், வாணிகம் நியாயமானதே என்ற கருத்து வலுப் பெற்றது. மறுமலர்ச்சியின் பலனாக வாழ்வில் புது உற்சாகமும் ஆர்வமும் கரைபுரண்டு ஓடின. ஆனந்த வாழ்வை மக்கள் ஆராதிக்கத் தொடங்கினர். நேற்றிருந்தது பொய்; நாளை என்பது எப்படியோ? இன்றிருப்பதே மெய்.

எனவே, இன்றைய வாழ்வை வயிறார உண்பதிலும், உலகியல் இன்பங்களைத் துய்ப்பதிலும் கழிக்க வேண்டும். இம் மறுமலர்ச்சிக் கருத்து ராபிலே (Rabelain) தத்துவங்களில் பொதிந்து கிடக்கிறது. இக் கருத்துக்கும், அர்ச். தாமஸ் அக்வினஸ் (St. Thomas Aquinas) கருத்துக்கும் எத்தனை வேறுபாடு? இக்காலத்தில் அவர் கருத்துத் தலைகீழாக மாறிவிட்டது. இன்பம் துய்ப்பதே இப்போது வாழ்வின் குறிக்கோள் ஆகிவிட்டது. தனி மனிதனின் சுயேச்சை உரிமை இதில் தெளிவாகத் தெரிகிறது. இடைக்காலத்தில் தனி மனிதன் தன் சமுதாயத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தான். இப்போது இத்தளையினின்றும் விடுபட்டு, விருப்பம் போல் இன்பம் துய்க்கும் சுகபோகியாகிவிட்டான். இப்போது இடைக்காலத்தில் இருந்ததைப்போல் தன் நிலைமைக் கேற்ற பொறுப்புக்களும் உரிமைகளும் அவனுக்கு இல்லை. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கருத்து, இன்ப வாழ்வே இனிய வாழ்வு என்ற கருத்தாக அரியணையில் ஏறியது.

சீர்திருத்தத்தின் சில அமைப்புக்கள் புலனடக்க வாழ்வை ஏற்றிப் போற்றியது உண்மைதான். ஆனால், இங்கும் செல்வம்

சேர்ப்பது தீமையெனக் கருதப்படவில்லை. நவீன கால முத லாளித்துவம் கால்வினிஸ்ட் (Calvinistic) மத போதனையின் அடிப்படையிலேயே எழுந்துள்ளதென்ற கருத்தை மாக்ஸ் வெபர் (Max Weber) நம்மிடையே வேரூன்றச் செய்துள்ளார். பிராடஸ்டென்டு மதக் கொள்கை கால்வினிஸ்ட் அமைப்பில் தனி மனித உரிமைக்கே முதலிடம் தந்தது. முக்தி பெறுவது என்பது தனி மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள விவகாரம். பொருளாதாரத் துறையில் கால்வின் இரு முக்கியக் கோட்பாடுகளை விதித்திருப்பதாக வெபர் கூறுகிறார். முதலாவதாக, ஒவ்வொரு வரும், அவரவர் செயல்களில் கருத்துடன் முனைந்து முயலுதல் வேண்டும். இரண்டாவதாக, புலன் இன்பம் துய்ப்பதற்காகச் செல்வத்தைப் பயன்படுத்தாதிருக்க வேண்டும். வரையறை யின்றி வேலை செய்து, பொருள் ஈட்டி, ஈட்டிய பொருளைப் பல வகைகளிலும் செலவிட்டு இன்பம் துய்க்கும் போக்கு இல்லா திருந்தால், செல்வம் சேர்வது உறுதி. இன்னும் சொல்லப் போனால், ஆண்டவனின் அருள் வீச்சு அதிகமிருப்பதாலேயே ஒருவன் செல்வனாக இருக்கிறான் என்ற கருத்து வலுப்பெற்றது. எனவே, கடவுள் புகழ் பாடி, செல்வனாக முடியும் என்ற வெபரின் வாதம் எவ்வளவு தூரம் உண்மை என்பதை ஆராய்வது இங்கு இயலாத காரியம். பிராடஸ்டென்ட் புலனடக்க வாழ்வு, இடைக்காலப் புலனடக்க வாழ்வைவிடச் செல்வம் சேர்ப்பதை அனுமதித்தது; இடைக்காலத்தில் இருந்ததைப் போல் அதை எதிர்க்கவில்லையென ஈண்டுக் கூறுவது போதுமானதாகும்.

இடைக்காலம் முடிவுற்று, நவீனகாலம் நிகழ்காலமாக மாறிய போது, பல காரணங்களால் ஐரோப்பிய நாடுகள் வல்லரசுகளாக மாற ஆரம்பித்தன. இவை ஒன்றுக்கொன்று கடும் போட்டி போடும் நாடுகளாக, ஒன்றைவிட மற்றொன்று வலிமை பெற முயலும் நாடுகளாக விளங்கின. அக்கால நிலைமைகளால் செல் வத்துக்குப் புதிய முக்கியத்துவம் ஏற்பட்டது. எவ்வித மானக் கேடும், அவப்பெயரும் இன்றித் தனி மனிதன் செல்வம் சேர்க்கலாம் என்ற கொள்கையையே ஐரோப்பிய நாடுகளும் பின்பற்றின. பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை; செல்வமே வலிமைக்கு நாற்றங்கால்; வளமான வாழ்வுக்குச் செல்வமே உறு துணை என்பதை இந்த நாடுகள் நன்கு புரிந்துகொண்டன. இந்த நிலைமைகளினின்றும் மெர்க்கன்டலிசம் (வணிக வாதம்) முளை விட்டது.

2. மெர்க்கன்டலிசக் கொள்கையின் பொது விவரமும் முறைகளும்

மெர்க்கன்டலிசம் என்ற அடிப்படையில் உள்ள வழி முறைகள் அனைத்தையும் இதன் கொள்கை விற்பன்னர்கள் அப்படியே ஆதரித்தனரெனக் கூறுதற்கில்லை. முழு வணிக வாதி என்றுமே, எங்குமே இருந்ததில்லை. இக் கருத்தில் பார்த் தோமானால், வணிக வாதத்தைப் பொதுப்படையாகக் கூறுவது தவருக முடியும் என்றாலும், வணிக வாத அமைப்பைப் படம் பிடித்துக் காட்டுவது அவசியமாகும். வணிக வாதம் என்பது தனி ஒரு மனிதனின் கருத்தல்ல; ஒரே நாட்டைச் சேர்ந்த வணிக வாதிகளின் கருத்து மட்டும் அல்ல; உலகெங்கும் உள்ள வணிக வாதிகள் கூட்டியோ, குறைத்தோ ஒப்புக்கொண்ட பொதுக் கருத்துக்களே வணிக வாதம். இங்கு மற்றுமோர் எச்சரிக்கை விடுவதும் அவசியமாகும். வணிக வாதம் என்பது நடைமுறையிலேயே பெரிதும் வேறுன்றியுள்ளது. இது இங்கி லாந்தில் காலங்கடந்தே தலைதூக்கியது. இதன் மூலத்தையும் தன்மையையும் பார்த்தோமானால், வணிக வாதம் என்பது குறிப் பிட்ட அமைப்பு அல்லவென்பது நன்கு விளங்கும். அரசியல் வித்தகர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள், அக்கால வணிகப் பெருமக்கள் தங்கள் சிறந்த அனுபவத்தின் அடிப்படையில் வகுத்த வழிவகைகளே வணிக வாதம். ஆரம்ப காலத்தில் வணிக வாதம் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் ஏற்பட்டிருக்க லாம். சட்டம் வகுப்போர் மற்றவைகளுடன் கூட இடைநிகழ் பொருளாகப் பாராளுமன்றச் சட்டத்தின் தோற்றுவாயில் கூறிய தாகவும் இது இருக்கலாம். குறிப்பிட்ட நிருவாகப் பிரச்சினையை ஆராயுங்கால், அரசாங்கக் குறிப்பில் வெளியிடப்பட்டதாகவும் வணிக வாதம் இருக்கலாம். வணிக வாதத்தின் விழுமிய கருத்துக்களைப் பொதுவாகக் கூறத் தொடங்குங்கால், இக் கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு, அவற்றை அனுசரித்து இதன் கூறுகளை விளக்குவது அறிவுடைமையாகும்.

தன் நாடு வல்லரசாக விளங்க வேண்டும் என்பதே வணிக வாதியின் உயிர்மூச்சு. இப்பெரு நோக்கம் தவிர, மற்றதெல்லாம் இதற்கு உட்பட்டே, இதை அனுசரித்தே இருக்க வேண்டும். தன் நாட்டின் வளத்தையும் வலிமையையும் வணிகவாதி நினைத்துப் பார்க்கும்போது ஒரு தரத்தின் அடிப்படையை மனத்தில் வைத்துக்கொண்டு, அதனுடன் ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்க்கிறான். அவனுடைய கருத்துப்படி, அவனுடைய நாடு மற்ற

நாடுகளுடன் பெரும் போட்டியில் ஈடுபட்டுள்ளது. அது இப் போட்டியில் தோல்வி முகம் காணக் கூடாது. எடுத்த காரியம் யாவற்றிலும் வெற்றி என்ற நிலையே தன் நாட்டுக்கு என்றும் இருக்க வேண்டும். ஒரு நாட்டுக்கு வளமையின் அடிப்படை எதுவென வணிகவாதி ஆராயும்போது செல்வச் செழிப்பே நாட்டு வலிமைக்கு அடிப்படை எனக் கண்டான். வெள்ளியிலும் பொன்னிலும் நுட்பம் இருப்பதாக வணிகவாதி திடமாக நம்பினான். தனி மனித நியதியை வணிகவாதி தன் நாட்டுக்கே பொருத்திவிட்டான். செல்வத்தால் தனி மனிதன் மேம்பாடடைய முடியுமென்றால், ஒரு நாடு செல்வம் சேர்த்து ஏன் நலம் பெற முடியாது? ஒருவன் செல்வனு, வறியனு என்பதும், ஒருவனால் ஒரு காரியம் முடியுமா, முடியாதா என்பதும், எடுத்த காரியம் யாவற்றிலும் வெற்றி ஏற்படுமா, ஏற்படாதா என்பதும் அவனவன் பாங்கு இருப்பால் காணப்படும். பொருள் உள்ளார்க்கு இவ் வுலகில் எதுதான் இல்லை? அவ்வண்ணமே பெருநிதி இருப்புள்ள அரசனே பெரும்படை திரட்டி வர முடியும். அத்தகைய அரசனே பலமான நாவாய்ப் படை வைத்து வர முடியும். எனவேதான், வணிகவாதி செல்வத்தை ஏற்றிப் போற்றினான். பொன், வெள்ளிக் கட்டிகளை எவரும் ஏற்றுக்கொள்வராதலால், அவையே உண்மையான செல்வம். ஆகவே, இவற்றிற்கே வணிகவாதி பெருமுக்கியத்துவம் அளித்தான். வணிகவாதி செல்வத்தையும் பணத்தையும் போட்டு ஒன்றுக்கொன்று குழப்பிக் கொள்வதாக நிலவிவந்த கருத்துக்கு ஆடம் ஸ்மித்தே பொறுப் பாளி. வணிகவாதிகளை ஆடம் ஸ்மித், பொருளாதார மண்டு களாக, கடைந்தெடுத்த முட்டாள்தனத்தின் பிரதிநிதிகளாக வருணித்துள்ளார். ஆடம் ஸ்மித் வணிகவாதிகளுக்கு நியாயம் செய்திருப்பதாகத் தோன்றவில்லை. வணிகவாதிகள் சில இடங் களில் கவனக் குறைவுடன் கருத்துத் தெரிவித்துள்ளனர் என்றாலும், அவர்களின் பணத்தையும், வெள்ளி, பொன் கட்டி களையும் செல்வத்தின் சின்னமாகக் கருதினர் என்பதே உண்மைக்குப் பொருந்தும் கூற்றாக இருக்கும். இத்தகைய செல்வாதாரம் இருந்தால்தான் நாட்டிலே பொருளாதார நடவடிக்கை மும்மரமாக இருக்கும் என்பதனாலேயே அவர்கள் அவ்வாறு கருதினர். செல்வமின்றிப் பொருளாதாரச் செழிப்பேது? நாட்டின் பொருளாதாரம் வளமாக இருக்கவேண்டுமானால் இச் செல்வம் அந்த நாட்டில் ஏராளமாக இருக்கவேண்டும்.

வெள்ளியும், தங்கக் கட்டிகளும் (bullion) செல்வத்துட் சிறந்த செல்வம் எனக் கொண்டாலும், அவற்றைப் பெறுவ தெப்படி? ஒரு நாட்டில் இச் சுரங்கங்கள் இருக்குமானால்

இவற்றைப் பெறுவதெப்படி என்ற கவலை வேண்டியதில்லை. அப்போது அந்த நாடு செய்ய வேண்டியதெல்லாம், வெள்ளியும் தங்கமும் அந்த நாட்டினைவிட்டு வெளி நாடுகளுக்குப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். இதற்கு வேண்டிய 'கிளர்ச்சி மிக்க சட்டங்கள்' (ஆடம் ஸ்மித் சொற்படி) இயற்றுவது மூலமாகவும் இவ்வாறு பார்த்துக்கொள்ள முடியும். ஆனால், ஒரு நாட்டில் இச் சுரங்கங்கள் இல்லை என வைத்துக்கொள்வோம். அப்போது வணிகம் மூலமே தேவையான வெள்ளியையும் பொன்னையும் பெற முடியும். தங்கமும் வெள்ளியும் வெளி நாடு களிலிருந்து இந்த நாட்டுக்கு வரும் வகையில் வாணிபம் நடத்த வேண்டும். ஒரு நாடு ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு விலையாக முடிவில் தங்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அது இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு விலையாக முடிவில் தங்கத்தைக் கொடுக்க வேண்டும் என்பது அனைவரும் அறிந்த கொள்கையே. ஏற்றுமதி என்றால் பண வருவாய்; இறக்குமதி என்றால் பணச் செலவு. ஒரு நாட்டில் இருக்கும் தங்க அளவை அதிகரிக்க வேண்டுமானால், அந்த நாட்டின் ஏற்றுமதி, இறக்கு மதியைவிட அதிகமாக இருக்கவேண்டும். அதாவது, சாதக வணிகக் கொடுப்பு நிலை இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான், வெளி நாடுகளிலிருந்து இந்த நாட்டுக்குத் தங்கம் வந்து சேரும். எனவே, வேறொரு நாட்டுடன் சாதக வணிகநிலை வேண்டுமானால், அந்த நாட்டுக்கு ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்; பாதக வணிக நிலை வேண்டுமானால், ஏற்றுமதியைக் குறைத்து இறக்குமதியை அதிகரிக்க வேண்டும். ஆக, ஏற்றுமதி நல்லது; விரும்பத்தக்கது. இறக்குமதி கெட்டது; வெறுக்கத் தக்கது. எனவே, இலட்சிய வணிகவாதியின் அடிப்படைக் கொள்கை ஏற்றுமதியை மிகவும் அதிகரிப்பதாகவும், இறக்கு மதியைப் பெருமளவு குறைப்பதாகவும் இருக்கும்.

சாதக வணிகக் கொடுப்பு நிலைக் கொள்கை வணிக வாதத் துடன் இரண்டறக் கலந்துவிட்டது. இக் கொள்கையைப் போலவே இதன் விளைவுகளும் முக்கியமானவை. ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும் என்றால், ஏற்றுமதிக்குரிய பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களையும் ஆதரிக்க வேண்டும். அவற் றிலே அதிக உற்பத்திக்குப் பாடுபட வேண்டும். அவ்வாறே, இறக்குமதியைக் குறைக்க வேண்டும் என்றால், வெளிநாட்டுப் பொருள்களைக் கூடியவரையில் விலக்க வேண்டும். வெளிநாடு களிலிருந்து அப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக, உள்நாட்டிலேயே அப்பொருள்களை உற்பத்தி செய்வதற்கு முடிந்த அளவு பாடுபடவேண்டும். எனவே, ஒவ்வொரு நாடும்

தேனீக்களைப் போலத் தொழிலில் ஈடுபட வேண்டும். மற்ற நாடுகளின் தேவைகளை அறிந்து, அவற்றிற்கேற்ற பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். பொருள்களை வீணுக்கக் கூடாது. பொருள்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்; அப்போது தான் ஏற்றுமதிக்கு அதிகப் பொருள்கள் கிடைக்கும். நாட்டின் சகல ஆதாரங்களையும் பயன்படுத்த வேண்டும். நாட்டின் வாழ்வைச் சீர்படுத்த வேண்டும். முடிந்தவரையில் சிக்கனத் தைக் கையாள வேண்டும். இலாபம் கிடைக்கும் வாய்ப்புகள் எதனையும் அசட்டை செய்யக் கூடாது.

சாதக வணிகக் கொடுப்பு நிலைக் கொள்கையின் மற்றொரு விளைவாகப் பல தொழில்கள் தழைக்கின்றன. இவற்றில் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தது விவசாயம். விவசாயமே மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கிறது என்பது உண்மை தான். வறிதே கிடக்கும் ஒவ்வொரு துண்டு நிலத்தையும் பண்படுத்திப் பயன்படுத்தினால்—முக்கியமாக வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்யப்படும் புகையிலை போன்ற பயிர்களை விளைவிக்கப் பயன்படுத்தினால்—சில இறக்குமதிகளைத் தவிர்க்க முடியும். ஆனால், உள்நாட்டுத் தொழில், வணிகம் போன்று விவசாயத்தால் அந்த நாட்டுக்கு வெளிநாட்டிலிருந்து பணம் வருவதில்லை. எனவே, வணிக வாதத்தின்படி விவசாயம் ஒரு நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதில்லை. தொழில்களும் தயாரிப்புப் பொருள்களும் ஒரு நாட்டின் செல்வ முன்னேற்றத் திற்கு முக்கியமானவை. வெளி நாடுகளின் தேவைகளுக்கு ஏற்ப இவற்றின் உற்பத்தியை எளிதில் அதிகரிக்கச் செய்ய முடியும். எனவே, இவற்றை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால், உற்பத்தி செய்த நாட்டுக்குப் பெருத்த இலாபம் ஏற்படுகிறது. எனினும், வணிகமே ஒரு நாட்டிற்கு இன்றியமையாதது. இடைக் காலத்தில் கடவுளின் கண்முன் வணிகன் ஏற்றவனைக் கருதப் படவில்லை. இப்போது வணிகனே பெருமுக்கியத்துவம் பெற்று விட்டான். வணிகனே ஒரு நாட்டின் முதுகெலும்பாகிவிட்டான். ஒரு வண்டிக்கு அச்சாணி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமுள்ளவனாகிவிட்டான் வணிகன் ஒரு நாட்டிற்கு.

இவையே வணிகவாதியின் கருத்துக்கள். வணிகவாதியின் வேலைத் திட்டமே இதுதான். இந்த வேலைத் திட்டத்தை நிறை வேற்றுவதற்குரிய சாதனமும் முக்கியத்துவமும் உள்ளதாக இருக்கிறது. வணிகவாதியின் திட்டத்தில் அரசாங்கத்துக்கு நல்ல இடம் உண்டு. தேவைப்பட்ட இடத்தில் எல்லாம் அர சாங்கம் தலையிட்டு நல்லது செய்யும். கண்களை இமை காப்பது

போல், நாட்டு மக்களின் நலன்களை அரசாங்கம் கட்டிக்காக்கும். வணிகவாதக் கொள்கையின்படி அரசாங்கம் எப்போதும் விறு விறுப்பாக நாட்டு மக்களின் நலன்களுக்காகப் பணியாற்றிக் கொண்டே இருக்கும். அரசாங்கம் செய்யக்கூடாதது எதுவும் இல்லை. அதனால் செய்ய முடியாதது எதுவுமில்லை. நாட்டு மக்களின் நலனைக் கருதி அரசாங்கம் எதையும் செய்தல் வேண்டும். இறக்குமதியைக் குறைத்து, ஏற்றுமதியை ஊக்கு விக்க இறக்குமதிப் பொருள்களுக்குத் தீர்வை விதிக்கவேண்டும். ஏற்றுமதிப் பொருள்களுக்குப் போனஸ் அளிக்கவேண்டும். சாதக வணிக நிலையை ஏற்படுத்த, உள்நாட்டுத் தொழில் களை ஆதரிப்பதற்குப் பல வழிவகைகள் இருக்கின்றன. புதிய தயாரிப்பு முறையில் ஏகபோக உரிமை அளித்தல், புதிய தொழில் ஏற்படுத்த வெளி நாடுகளிலிருந்து தொழில் விற்னர்களை வர வழைத்தல், விலைகளையும் ஊதியங்களையும் நிர்ணயித்தல், கப்பல் போக்குவரத்தையும் நாவாய்த் தொழிலையும் ஆதரித்தல், மீன் உட்கொள்ளும் நாட்களை நிர்ணயித்தல், சிறப்புரிமை பெற்ற கம்பெனிகளை ஏற்படுத்தல், கச்சாப் பொருள்கள் தாராளமாகக் கிடைப்பதற்காக மலைத் தோட்டங்களை வளர்த்தல், வேலை நிறைவுபெற்ற பொருள்களுக்குச் சந்தை ஏற்படுத்தல் போன்ற பல வழிமுறைகளை இதற்காகக் கையாளலாம். வணிகவாதத்தின் அடிப்படையில் இத்தகைய முறைகளை மேற்கொண்டால் அரசன் செல்வனுவான், நாடு செழிக்கும், வளங்கொழிக்கும், வல்லரசாகும். சில அமிசங்களில் வணிகவாதம் மக்கள் தொகைப் பெருக்கத்தை ஆதரிக்கிறது. மக்கள்தொகை பெருகினால் தரைப்படை, கப்பல்படை வீரர்களின் எண்ணிக்கை பெருகும்; பொருள் உற்பத்தியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களின் எண் ணிக்கை பெருகும். எனவே, மக்கள் தொகைப் பெருக்கத்தை ஆதரிப்பது வணிகவாதத்தின் முக்கிய அங்கமாக விளங்குகிறது.

அரசாங்க அலுவல்கள் குறித்து வணிகவாதமும் அரசாங்கச் சமதர்மமும் ஒரேவிதமான கொள்கைகளைக் கொண்டுள்ளன. நாட்டின் வளத்தைப் பெருக்க அரசாங்கமே ஏற்ற சாதனம் என வணிகவாதி கருதினான். நாடு ஓர் அலகு (யூனிட்) என்பதே வணிகவாதியின் கருத்து. நாட்டின் பொதுநலனையே பேணி வளர்க்கவேண்டும்; குறிப்பிட்ட சமூகத்தின் அல்லது தனிப்பட்ட நபர்களின் நலத்தை அல்ல. இன்னும் சொல்லப்போனால், நாட்டின் நலன் தனிப்பட்டவர்களின் நலனுக்கு முரணுயிருக்கக் கூடும். அத்தகைய சமயத்தில் நாட்டு நலனையே கருத்தில் கொள்ளவேண்டும். சமுதாயத்தின் தேவைகளை வணிகவாதம் விரிந்த அடிப்படையில் பார்த்தது. இத் தேவைகளைப் பூர்த்தி

செய்வதற்கு ஏற்ற சாதனம் அரசாங்கமே என வணிகவாதம் கருதியது.

அண்மைக் காலம் வரையில் வணிகவாதிகள் ஆடம் ஸ்மித் போட்ட புகை மூட்டத்தில் மறைந்து போயிருந்தனர். இப்போது தான் இவர்களுக்கு மீண்டும் மதிப்பு ஏற்பட ஆரம்பித்துள்ளது. இவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கருதப்பட்டதுபோல வடித்தெடுத்த முட்டாள்கள் அல்ல. இரண்டு தவறான கருத்துக்கள் காரணமாகவே இவர்கள் இவ்வாறு மதிப்பிடப்பட்டனர். சாதக வணிகக் கொடுப்பு நிலையே இவர்களுடைய முழுமுதற் கொள்கை என எண்ணியது முதல் தவறு. சாதக வணிகக் கொடுப்பு நிலை என்பது மாபெருங் கொள்கையின் ஓர் அங்கம் மட்டுமே; அதுவே முடிவல்ல. இரண்டாவதாக, குரோசஸ் (Croesus) செய்த தவற்றையே இவர்களும் செய்வதாகக் கருதப் பட்டார்கள். செல்வம் என்பது பொன்னும் வெள்ளியுமே; அவற்றுல் கிடைக்கும் பொருள்கள் அல்ல என இவர்கள் கருதுவதாகத் தப்புக் கணக்குப் போட்டனர். இது இரண்டாவது தவறு. ஆற்றலும் வலிமையும் பெறப் பொன்னும் வெள்ளியுமே அடிப்படை என வணிகவாதிகள் கருதியதாகக் கொள்வது உண்மை நிலைக்குப் பொருந்தியதாக இருக்கும். அவர்களுடைய கருத்து அக்கால நிலைமைகளுக்குப் பொருத்தமாக இருந்ததா என் பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அக் கருத்து அக் காலத்துக்கு ஏற்றதாக இருந்தபோதிலும், இவர்கள் முடிவுகளை யும் வழிமுறைகளையும் ஓரளவு குழப்பிக்கொண்டனர் என்பது உண்மையே. தங்கத்திலும் வெள்ளியிலும் ஏதோ மாய சக்தி இருப்பதுபோலவும், அவற்றை அடைவதே நாட்டின் தாரக மந்திரமாய் இருக்கவேண்டும் எனவும் அவர்கள் கூறியது அவ் வளவு சரியல்ல. வேறு இரண்டு காரணங்களை முன்னிட்டும் வணிகவாதிகளைக் கண்டிக்கலாம். தேசிய உற்பத்தியைப் பெரு மளவு பெருக்கவேண்டும் என்ற இவர்களுடைய ஆர்வத்தைப் பார்க்கும்போதும், எல்லாவற்றையும் முடிந்த அளவு பயன்படுத்த வேண்டும் என்ற இவர்கள் கருத்தைக் கருதும்போதும், செல்வம் சேர்ப்பதே மனிதன் தொழில்; செல்வம் சேர்க்கவே, அதற்காக உழைக்கவே மனிதன் இருக்கிறான் என இவர்கள் கருதுகிறார்களோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. உழைப்பது நிம்மதியாக வாழ்வதற்குத்தான். செல்வம் மனிதனுக்காக உள்ளதேயன்றி, மனிதன் செல்வத்திற்காக இருக்கவில்லை. இறைவன் புகழ் பாடி பேரின்பம் பெறுவதே மனிதனின் சிறப்பு. வணிகவாதியின் செல்வம் சேர்க்கும் ஒரே பெருநோக்கத்தில் இவற்றையெல்லாம் மறந்துபோக நேரிடுகிறது. இரண்டாவது

குறைபாடு என்னவெனில், வணிகவாதிகள் தங்கள் கொள்கைகளின் முடிவு என்ன என்பதை எண்ணிப் பார்க்கவில்லை என்பதே. ஒரு நாடு இலாபமடைந்தால் மற்ற நாடு நட்டமடையும் என்பதே இவர்களுடைய கருத்தின் சாராம்சம். இரு நாடுகளுக்கும் ஒருசேரப் பயனுள்ள வணிகம் இருக்க முடியும் என்பது இவர்களுடைய அறிவிற்கு அப்பாற்பட்ட தாயிருந்தது. சாதக வணிகக் கொடுப்புநிலை என்பது மற்ற நாடு நட்டமடையவேண்டும் என்ற கருத்திலேயே எழுந்தது. எல்லா நாடுகளும் ஒரே சமயத்தில் சாதக வணிகக் கொடுப்புநிலை பெறுவது எப்படி? இதை எல்லா நாடுகளும் பெற முயன்றன என்றாலும், இதை எல்லா நாடுகளுக்கும் பொதுவாக்குவதற்கில்லை. ஒரு நாடு வணிகவாதக் கொள்கைகளின் வழி முறைகளின் அடிப்படையில், பொன்னாலும் வெள்ளியாலும் நிரம்பி வழிந்த பிறகு என்ன ஏற்படும் என்பதை இவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. நிரம்பி வழிந்த பொன்னும் வெள்ளியும் வெளியேறுதிருப்பதற்குரிய வழி வகைகளையும் வணிகவாதிகள் எண்ணிப் பார்க்கவில்லை. வணிகவாதிகள் நடைமுறை நேரடி நோக்குள்ளவர்கள்; பொருளாதாரவாதிகள் அவ்வாறு அல்ல என்ற முடிவையே நாம் மீண்டும் வலியுறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

3. வணிகவாதப் பிரதிநிதிகள் நால்வர்

இல்லாத ஒன்றைப்பற்றி, அதாவது முழு வணிகவாதியைப் பற்றிச் சென்ற பிரிவில் ஓரளவு ஆராய்ந்தோம். பல வணிகவாதிகளின் ஒருங்கிணைந்த பிம்பமே முழு வணிகவாதி. பல வணிகவாதிகள் கொண்ட பல கருத்துக்களையும் ஒன்று சேர்த்து ஒரு மொத்தமாகப் பார்த்தால்தான் முழு வணிகவாதம் கிடைக்கும். இந்த வணிகவாதிகள் பலரும் தத்தம் காலத்துப் பிரச்சினைகளின் வெவ்வேறு அமிசங்களை வற்புறுத்தியுள்ளனர். இவ்வாறு மொத்தமாகப் பார்க்காமல், நான்கு தேசங்களை பிரதிநிதிக்கிற நான்கு வணிகவாதிகளை எடுத்துக்கொள்வோம். இவர்களே தலைசிறந்த வணிகவாதிகள்; வேறு எவரும் இலர் எனக் கருதக்கூடாது. இன்னும் ஏராளமானவர்களை எடுத்துக் கொண்டு ஆராய முடியும். புற்றீசல்போலப் பல வணிகவாதிகள் இருக்கையில் மேற்கண்ட கருத்துக்களைச் சுருக்கமான வழியில் தெளிவாக எடுத்துக்கூறவே மேற்கூறிய நால்வரும் உதாரணங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ளனர்.

மான்சிரிடீன் (Montchretien)

ஃபிரான்சு தேசப் பிரதிநிதியாக அன்டாயின்-டி-மான்சிரிடீன்[1] (Antonie de Montchretien 1576-1621) எடுத்துக் கொள்வோம். இவர் 1615 ஆம் ஆண்டில் தம் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளை (Traicte del ' Economie Politique) அரசனுக்கும், அரசியின் அன்னைக்கும் சமர்ப்பித்தார். இதில்தான் 'அரசியல் பொருளாதாரம்' என்ற சொற்றொடர் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுவதால், இப் புத்தகத்தில் மக்கள் அதிக அக்கறைகொண்டனர். ஆனால், புத்தகத்தின் தலைப்பைப் படித்துவிட்டு, இந்த ஆசிரியர் நவீனக் கருத்தில் அரசியல் பொருளாதாரத்தை விளக்கிக் கூறுவார் என்று எவரும் எண்ணி ஏமாற வேண்டியதில்லை. இவர் ஃபிரெஞ்சு நாட்டுத் தொழில்களைப்பற்றிய ஆராய்ச்சியாகவே இப் புத்தகத்தை எழுதினர். தேசப்பற்றின் எழுச்சி மிக்க ஆர்வத் தால்தான் இவர் இதை எழுதினர். எவ்வாறு நிலைமையை அபிவிருத்தி செய்வது என இவர் இப் புத்தகத்தில் இடை யிடையே அரசனுக்கு அறிவுரைகள் வாரி வழங்குகிறார். இப் புத்தகம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இவர் முறையே தயாரிப்பாளர்கள், ஃபிரெஞ்சு வணிகம், கப்பற் கலை, அரசனின் முக்கியப் பொறுப்புகள் ஆகியவற்றை விவரித் துள்ளார். இவர் ஆராய்ந்துள்ள தொழில்களில் வேளாண்மை முதலிடம் பெற்றிருப்பது வியக்கத்தக்கதே. இது வணிக வாதத்துக்கு ஏற்ப இல்லை. இங்கு ஆசிரியர் இயற்கைவாதிகளின் ஆர்வத்துடன் வேளாண்மை குறித்து எழுதியுள்ளார். வேளாண்மை எல்லாச் செல்வத்துக்கும் முதற் செல்வமென இயம்புவதுடன் இக் கருத்துக்கு ஆதரவாக அரிஸ்டாடிலையும் காட்டோவையும் (Cato) மேற்கோள் காட்டுகிறார்.[2] விவசாயம் வளரவில்லை யென்றால் அது மண்ணின் குற்றமல்ல. (மண்ணின் குற்றமெனக் கூறுவது பிறந்த பொன்னூட்டினைப் பழிப்ப தாகாதா?) தொழிலாளரின் வறுமையே அதற்குக் காரணம். இவ்வாறு இவர் கூறியுள்ளபோதிலும், மற்றத் தொழில்களிலேயே இவர் மிகுந்த அக்கறை காட்டியுள்ளார்.

ஒவ்வொருவரும் உழைக்கவேண்டும். சோம்பலே கெடு தல்கள் அனைத்திற்கும், தீமைகள் பலவற்றிற்கும் முதற் காரணம்.[3]

[1] பலேனில் (Fallaise) 1576 ஆம் ஆண்டு வாக்கில் பிறந்தார். வீரதீர வாழ்வு நடத்தினர். துன்பியல் கவிஞராகத் திகழ்ந்தார். இரும்புச் சாமான் தயாரிப்பாள ராக இருந்தார். ஒரு சிறிய போரில் 1621 ஆம் ஆண்டில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

[2] 1889 மறுபதிப்பு; பனிக் ப்ரென்டானே பதிப்பித்தது, பக்கம் 41.

[3] அதே ஏடு. பக்கங்கள் 21–22.

இக் கொள்கைக்கு மான்சிரிடீன் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார். இதில் இவர் உண்மை வணிகவாதியாகத் திகழ்கிறார். தொடர்ந்து உழைக்கவே, தொழில் செய்யவே மனிதன் பிறந்துள்ளான்; மக்களில் எவரும் சோம்பிக் கிடக்காது பார்த்துக் கொள்வதே அரசின் கடமையாக இருக்கவேண்டும். பன்னெடுங் காலத்துக்கு முன் ஏவாள் செய்த பிழையால் வழிவழி ஆட் செய்வதே மனிதனின் கடமையாக இருக்கிறது. வாழ்வு என்றாலே வேலை செய்வது என்றே பொருள். இரண்டும் தனித் தனியே பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளன. சோம்பல் என்றாலே இந்த ஆசிரியர் கனன்றெழுகிறார். எங்குக் கண்டாலும் அதைச் சாடத் தவறவில்லை மான்சிரிடீன். வேலை யற்றுக் கிடப்போர் எளிதில் தீங்கிழைக்க ஆரம்பித்துவிடு கின்றனர். வேலையின்றிச் சோம்பிக் கிடப்பது ஆணின் ஊக்கத் தையும் உற்சாகத்தையும் குலைத்து விடுகிறது. பெண்கள் வாழ்க் கையில் வழுக்கி விழுவதற்குச் சோம்பலே காரணம். வேலையற்ற மனமே சாத்தானின் இருப்பிடம். சோம்பிக்கிடக்கும் நாடு என்றும் உருப்படாது. வளங்கொழித்த நாடு கெட்டுக் குட்டிச் சுவராவதற்குச் சோம்பித் திரியும் மக்களே காரணம். சோம்பலே தீமைகளின் பிறப்பிடம். பாவத்திற்கெல்லாம் மூலகாரணம் சோம்பலே.[1] எனவே, நாடு வளம் பெறவேண்டுமானால், நாட்டிலே உயர் வொழுக்கநெறி இருக்கவேண்டுமானால், மக்கள் அனைவரும் தேனீக்களைப்போல இடைவிடாது சுறுசுறுப் புடன் தொழில் புரியவேண்டும். மனிதனது மகிழ்ச்சிக்குச் செல்வமே அடிப்படை என்றால், உழைப்பே செல்வத்திற்கு அடிப்படையாகத் திகழ்கிறது.

மான்சிரிடீனின் இரண்டாவது சிறப்பியல்பு ஃபிரான்சு நாட்டினை ஏற்றிப் போற்றுவதுதான். ஃபிரான்சுக்கு ஈடான நாடேதும் பாரினில் இல்லை. ஃபிரான்சில் இயற்கைச் செல்வம் வற்றாத செல்வமாக இருத்தலால், ஃபிரான்சு நாட்டினை ஒப்புயர்வற்ற நாடாக, உலகத்திற்கே ஒரு புதுமை நாடாக மாற்றுவதே ஃபிரெஞ்சு அரசர்களின் கடமையாக இருக்க வேண்டும்.[2] பெருமையுள்ள தன்னிறைவே இவருடைய முடிவான நோக்கமாகும். ஃபிரான்சே ஒரு தனி உலகம்; கேடறியா, கெட்ட விடத்தும் வளங்குன்றா நாடன்றோ ஃபிரான்சு நாடு. தன்னிகரில்லாத் தனிப்புகழ் நாடு ஃபிரான்சு நாடு. ஃபிரான்சிலே இல்லாத பொருளில்லை. வெளிநாட்டிலிருந்து

[1] அதே ஏடு, பக்கங்கள் 65, 74, 101.
[2] அதே ஏடு, பக்கம் 28.

எப்பொருளும் வரவழைக்கவேண்டியதில்லை. எல்லாம் தன்னிடத்தே உள்ளதால் வெளிநாட்டினை ஃபிரான்சு நம்பியிருக்க வேண்டியதில்லை. ஆனால், அண்டை அயலிலுள்ள நாடுகள் ஃபிரான்சு இல்லாவிட்டால் வளம்பெற்று வாழ முடியாது. வற்றுத செல்வமுண்டு ஃபிரான்சு நாட்டில். புதைபொருள் செல்வம் மிகுதியும் உண்டு. கனிவளம் நிறைந்த நாடு. இயற்கை அன்னை ஃபிரான்சு நாட்டின்மீது பற்றும் பாசமுங்கொண்டு தன்னிடமுள்ள செல்வங்களை யெல்லாம் அந் நாட்டில் கொட்டிக் குவித்துள்ளாள். [1]

தன்னையே நம்பி வாழும், பிறர் தயவு வேண்டியிராத தனி உலகமான ஃபிரான்சு தன் மக்களைப் பராமரிக்கக்கூடிய நிலையில் இருக்கவேண்டும் அல்லவா? 'ஃபிரான்சிலே பிறந்த மக்கள் அங்கேயே வாழும் உரிமை பெற்றவர்கள் அல்லவா?' ஆனால், வாழ்க்கைக்கு வேண்டிய உணவு கிடைக்காவிட்டால், வாழ வழியற்றவர்களாகிவிட்டால், அவர்கள் ஃபிரான்சு நாட்டில் வாழ்வதெப்படி?[2] வணிகம் வெளிநாட்டான் கையில் போய் விட்டதே என்று மான்சிரிடீன் பெரும்பாலும் புலம்பித் தீர்த்துள்ளார். வெளிநாட்டு வணிகன் ஃபிரெஞ்சுத் தொழில்களின் குரல்வளையைப் பிடித்து நசுக்குவதாகக் கூக்குரலிடுகிறார் மான்சிரிடீன். ஃபிரான்சு நாட்டில் அந்நியர்கள் சுதந்திரம் அனைத்தும் உள்ளவர்களாய் இன்பத்தில் புரள்கிறார்களே என்று குமுறிக் குமைகிறார் மான்சிரிடீன். ஆனால், வெளிநாட்டில் ஃபிரெஞ்சுக்காரர்களுக்குச் சுதந்திர உரிமைகள் இல்லையே, கட்டுப்பாடுகள் உள்ளனவே என்றும் கதறுகிறார். ஃபிரான்சு நாடு தன் தேவைக்குமேல் மிகுந்துள்ளவற்றையே ஏற்றுமதி செய்யவேண்டும் என்பதே இவர் இலட்சியம். சொந்த நாட்டில் உற்பத்தி செய்யக்கூடியவற்றை வெளிநாட்டிலிருந்து அதிக விலை கொடுத்து வரவழைப்பது அறிவீனமல்லவா? சொந்த முயற்சியால் உள்நாட்டிலேயே தயாரிக்கக்கூடியவற்றை, கையிலுள்ள பணத்தைக் கரைத்து வெளிநாட்டிலிருந்து ஏன் வரவழைக்கவேண்டும்? இந்த வாதத்தை மான்சிரிடீன் காரசாரமாக எடுத்துரைக்கிறார்.

Premierement je represente āvos Majestez que toute la quinquaillerie à la fabrique de laquelle sont occupez, tant dedans que dehors le royaume, non des villes seules,

[1] அதே ஏடு, பக்கம் 24.
[2] அதே ஏடு, பக்கம் 73.

mais des provinces entiēres, se peut faire abondamment et ā prix tres raissonable dans le pays de vos Seigneuries, que d'y en admettre et recevoir d'estrangere c'est oter la vie ā plusieurs milliers de vos subjects dont ceste industrie est l'heritage et ce travail le fonds de leur revenu; c'est diminuer d'autant vostre propre richesse, laquelle se fait et s'augmente de celle de vos peuples' [1]

'Faites-nous donc jouissance du fruict de nostre industrie; c'est ā dire, rendez nous ā nous mesmes.' மேற்கண்ட முறையில் மன்னரைப் போற்றியுள்ளார். தேசீயத் தன் நிறைவுத் தத்துவத்தின் பெருமை இதுதான். 'மான்சிரிடீன்' முறையிட்டுள்ள இந்தச் சொற்கள் இக்காலத்தில் தாழ்வாகக் கருதப்படலாம். 'பெண்களின் பெருமூச்சும், குழந்தைகளின் பரிதாபத்திற்குரிய அழுகையும் எங்கே கேட்கிறது எனில், யார் அயல்நாட்டு வாணிபப் போட்டியினால் தொல்லையுற்றுத் தாழ்வுற்றனரோ அவர்களின் இல்லங்களில்தாம்.'

வெளிநாட்டுக்காரன் பித்தலாட்டக்காரன், பொய்யன், ஏமாற்றுக்காரன் என வர்ணிக்கின்றார் மான்சிரிடீன். 'அந்நிய நாட்டைச் சேர்ந்தது எதுவும் நம்மைக் கெடுத்துவிடும்; குறிப்பாக, வெளிநாட்டுப் புத்தகங்கள் 'நமது மனத்தைக் கெடுத்துவிடுகின்றன. நமது மரியாதை முறைகளை மாய்த்து விடுகின்றன. எனவே, அவற்றின் இறக்குமதியைத் தடை செய்யவேண்டும்.' எல்லா வகையிலும் தேசீய தனித் தன்மையை மான்சிரிடீன் பெரிதும் ஆதரிக்கிறார். ஒவ்வொரு நாட்டிலும், அதன் பகுதியிலும் உள்ள பொருள்களை ஆங்காங்கே வாழும் மக்களே துய்க்கவேண்டுமென்பது இயற்கையின் நியதி. இதுவே கடவுள் விதித்துள்ள சட்டம். லயான்ஸ் நகரை உதாரணமாக இவர் சுட்டிக்காட்டுகிறார். 'ஒவ்வொரு நகரமும் ஒவ்வொரு துறையில் புகழ் பெற்றிருக்கவேண்டும். அப்போது தான் அந்த நகரக் குழந்தைகள் எதிர் காலத்தில் தொடர்ந்து நல்வாழ்வு வாழ முடியும்.'

வேறு சில கருத்துக்களிலும் மான்சிரிடீன் வணிகவாதக் கொள்கையினின்றும் வேறுபடுகிறார். இவருடைய திட்டத்தை அனுசரித்துப் பார்த்தால் சர்வதேச வணிகம் நசித்துவிடும். எனவே, சாதக வணிக நிலை என்பது மான்சிரிடீன் வாதத்தில் இல்லை. உள்நாட்டு வணிகத்தின் முக்கியத்துவத்தை அவர்

பெரிதும் உணர்ந்துள்ளார். உள்நாட்டு வணிகம் முழுவதும் ஃபிரான்சு நாட்டில், ஃபிரெஞ்சுக்காரர்கள் கையிலேயே இருக்குமானால், உள்நாட்டுத் தேவைக்குப்போக எஞ்சியதை ஏற்றுமதி செய்வது என்று வெளிநாட்டு வணிகத்தை வைத்துக்கொண்டால், மகிழ்ச்சியிலும், செல்வத்திலும், புகழிலும் ஃபிரெஞ்சு நாட்டினை விஞ்சக்கூடிய நாடு எதுவும் இப் பூவுலகில் உண்டோ? உள்நாட்டு வணிகத்தால் நாடு சீர்கேடடையாது. அந்த நாட்டு மக்களிடையே மட்டும் வணிகம் நடக்குமானால் வெளிநாட்டுக்குப் பணம் போக வழி யேது?

நாட்டில் ஏற்படும் கடன், ஒருவருடைய ஒரு பையிலிருந்து மற்றொரு பைக்குப் போவது என்ற உவமானத்தை இங்குப் பொருத்திப் பார்த்தால், உள்நாட்டு வணிகம் என்பது, ஒருவன் தன் கையிலுள்ள ஜாடிகளில் பாலை மாற்றி மாற்றி ஊற்றுவதே யாகும். மான்சிரிடீன் கருத்தில் வெளிநாட்டு வணிகம் பெருஞ் சூதாட்டமாகும். அது புதை குழியாகும்; அதில் ஈடுபட்டால் நட்டமே ஏற்படும். உள்நாட்டு வணிகத்தில் இத் தீங்கு இல்லை.

பணமே உயிர்நாடி என்ற தத்துவம் மான்சிரிடீன் கொள்கையில் அதிகம் ஒளிவிடவில்லை. இரும்பைவிட பொன்னே வலிமையுள்ளது என்பதை இவர் ஓரிடத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார். என்றாலும், இவர் இப் பிரச்சினையில் கண்மூடித்தனமாக நடந்துகொள்ளவில்லை. ஓரிடத்தில் இவர் வணிகவாதக் கொள்கைகளை எதிர்த்து எதிர்நீச்சுப்போடுகிறார்; 'பொன், வெள்ளி, முத்து, இரத்தினம் ஆகியவை ஒரு நாட்டின் உண்மையான செல்வங்களல்ல. இவை காரணமாக ஒரு நாடு வளங்கொழிப்பதில்லை. வாழ்க்கை வசதி நிறைந்த நாடே வளமுள்ள நாடு. இவை நிறைந்துள்ளவர்கள் வளஞ் சிறந்தவர்கள்' என்கிறார். ஆறுவது சார்லஸ் காலத்தில் பணம் கிடைப்பது அரிதாயிருந்தாலும் விலைவாசிகள் குறைவாயிருந்தன. இந்த நிலையை ஒப்பிட்டு இவர் கூறியதாவது: 'முன்பிருந்ததைவிட இப்போது பொன்னும் வெள்ளியும் நம்மிடம் ஏராளமாக உள்ளன என்பது உண்மைதான்; இதனாலேயே நம் வாழ்க்கை வசதிகள் அதிகரித்து விட்டனவாகவோ, உண்மையில் நாம் செல்வர்களாகி விட்டோமென்றே கூறிவிட முடியுமா?[1] எனவே, வணிகவாதிகள் அனைவரும் ஒத்த கருத்து உள்ளவர்களாயில்லை என்பதற்கு இதுவே உதாரணம். வணிகவாதிகள் அனைவரும் ஒரே கருத்தைக் கொண்டவர்களாக இருந்தனர் எனக் கூறுவது

[1] அதே ஏடு, பக்கம் 241.

முட்டாள்தனமாகும். மான்சிரிடீன் அதிதீவிர தேசியவாதி. மற்ற நாட்டு மக்களைத் துச்சமாக மதிக்கிறார். இவருடைய இலட்சியப்படி ஃபிரான்சு தனித்திருக்கவேண்டும்; ஒப்பாரும் மிக்காரும் இன்றித் தன்னிகரில்லாத் தனி நாடாகத் திகழவேண்டும்; அது தன்னிறைவு உள்ளதாக இருக்கவேண்டும். தன் தேவை போக, வெளிநாட்டுக்கு ஓரளவு ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் இருக்கவேண்டும். எனவே, இவர் கருத்துப்படி, வணிகம் ஒருவழித் தன்மையுள்ளதாக இருக்கவேண்டும். ஏற்றுமதி இருக்கலாம், இறக்குமதி கூடாது. உள்நாட்டில் அனைவரும் அயர்வு சோர்வின்றி அல்லும் பகலும் உழைக்க வேண்டும். சோம்பலை வெளிநாட்டுக்கு துரத்தியடிக்க வேண்டும். சோம்பல் வெளிநாட்டில் தீமை பயக்காது என இவர் கருதுகிறார் போலும்!

தாமஸ் மன்

ஆங்கில வணிகவாத எழுத்தாளர்கள் ஏராளம். என்றாலும், இவர்களில் தலைசிறந்தவர் தாமஸ் மன்[1] (Thomas Mun, 1571-1641) என்பது அனைவரும் ஒப்பிய முடிவு. வணிகவாதக் கொள்கைகளை இவர் திட்டவட்டமாக எடுத்துரைத்துள்ளார்; வணிகவாதம் பிளவுச் சக்திகளால் பெரிதும் பாதிக்கப்படாத காலத்திலேயே இவர் தம் கருத்துகளை வெளியிட்டார் என்பது மேலும் சிறப்புக்குரியதாகும். மன் அவர்கள் பெருமளவு முழு வணிகவாதி எனக் கூறலாம். வணிகவாதக் கொள்கைகள் முரணான கொள்கைகள் என்பதை இவரே உணர்ந்துள்ளார். இப்படி உணர்ந்தபோதிலும், இவரும் சில இடங்களில் முன்னுக்குப் பின் முரணான கருத்துகளை வெளியிட்டுள்ளார். வணிகவாதிகள், தங்கள் கொள்கைகளின் முடிவுகள் எங்கே போகின்றன என்பதை எண்ணிப் பார்க்க மறுப்பதால், இந்த நிலை ஏற்படுகிறது போலும்.

இவர் தம் மகனை நல்ல முறையில் வளர்ப்பதற்காகவே தமது புத்தகத்தை எழுதினார். இவர் இறந்த பிறகே இப் புத்தகம் 1664-ல் வெளியிடப்பட்டது. இதன் தலைப்பிலேயே வணிக வாதச் சுருக்கம் அடங்கியுள்ளது. வெளிநாட்டு வணிகமூலம் இங்கிலாந்தில் செல்வப் பெருக்கம்; சாதக வணிக நிலை நம் செல்வத்

[1] 1571-ல் லண்டனில் (London) பிறந்தார்; இத்தாலியிலும் லவான்டிலும் வணிக விவகாரங்களிலேயே தன் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்தார்; இவர் கிழக்கிந்தியக் கம்பெனிக் குழுவில் ஓர் உறுப்பினராயிருந்தார்; 1641-ல் இறந்தார்.

துக்கு ஆதாரம் என்பதே இத் தலைப்பு. இவர் ஆரம்பத்திலேயே சாதக வணிகநிலைக் கொள்கையைத் தகராறுக்கிடமின்றித் திட்டவட்டமாக விளக்கியுள்ளார். நம் செல்வத்தை எப்போதும் வளர்க்க அடியிற்கண்ட விதியை அல்லும் பகலும் பின்பற்ற வேண்டும். 'நாம் வெளிநாட்டிலிருந்து ஆண்டுதோறும் இறக்குமதி செய்வதைவிட அதிகமாகப் பொருள்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும்'[1] வணிக அளவு திட்ட வட்டமாகத் தெரிந்தால், இங்கிலாந்துக்கு எவ்வளவு பொன் வருகிறது, அல்லது இங்கிலாந்திலிருந்து எவ்வளவு பொன் வருகிறது என்பது துல்லியமாகத் தெரியும். ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 22,00,000 ஆகவும், இறக்குமதியின் மதிப்பு ரூ. 2,00,000 ஆகவும் இருந்தால், 'ஒவ்வோர் ஆண்டும் இந்த நாடு 20,00,000 ரூபாய் என்ற அளவில் செல்வம் சேரும் நாடாக விளங்கும் என்பதில் ஐயப்பாடு இல்லை. இதனால், நமது பொன்னும் வெள்ளி யும் பெருகும். விற்பனையான சரக்குகளுக்கு வெளிநாடுகளி லிருந்து பொன்னும் வெள்ளியும் வந்துதானே ஆகவேண்டும்.'[2]

இந்த நிலையில், இறக்குமதியைக் குறைப்பதும் ஏற்றுமதியை ஊக்குவிப்பதும் செல்வம் சேர்ப்பதற்குரிய வழியாகும். விரும்பத் தக்க இந்த விளைவைப் பன்னிரண்டு வழிவகைகளில் அடையலாம் என மன் விவரித்துக் கூறும் அதிகாரமே முக்கியமான அதிகார மாகும். இந்த அதிகாரத்தில் (நெ. 3) வணிகவாத வழிமுறை களெல்லாம் திறம்பட எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவர் காலத்தில் வணிகவாதத்தை நன்கு தெரிந்துகொள்ள வேண்டு மானால் இவற்றைப் படித்துப் பார்ப்பதே போதுமானதாயிருக்கும். அவற்றின் முக்கிய அம்சங்கள் வருமாறு :

முதலாவதாக, ஊசி முனை அளவு நிலங்கூட வறிதே கிடக்க விடக்கூடாது (களர் நிலம் வரையறையின்றி இருப்பதாக மன் கூறுகிறார்). இத்தகைய களர் நிலத்தை விளை நிலமாக்கும்போது, அதில் புதியன பயிரிடவேண்டும். ஏற்கெனவே சாகுபடி செய்யும் நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைப் பாதிக்கும் வகையில் புதிய நிலத்தில் பயிரிடக்கூடாது. புதிய நிலத்தில் சணல், புளிச்சை, புகையிலை போன்ற பொருள்களை விளைவித்து அவற்றின் இறக்குமதியை நிறுத்திவிடலாம்.

இரண்டாவதாக, வெளிநாட்டுப் பொருள்களை அதிகம் பயன்படுத்தக்கூடாது. வெளிநாட்டு நாகரிகத்தில் மயக்கம்

[1] இங்கிலாந்தில் செல்வப் பெருக்கம், அதிகாரம் 2.
[2] அதே ஏடு, அதிகாரம் 2.

கொள்ளும் நிலை எப்போதையும்விட இப்போது அதிகமிருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும். அந்நியப் பொருள்களைப் பெருமளவு பயன்படுத்தாதிருக்கவேண்டும்.

மூன்றுவதாக, 'வெளி நாட்டவருக்கு என்னென்ன பொருள்கள் தேவை' என்பதை ஆராய்ந்து அறிந்து, அப் பொருள்களை அந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும். அவர்களுக்கு வேண்டிய பொருள்கள் வேறிடத்தில் கிடைக்காவிட்டால், நாம் அவர்களுக்கு அவற்றை அதிக விலைக்கு விற்கவேண்டும். தங்களுக்கு வேண்டிய பொருள்களை அவர்கள் வேறிடத்தில் வாங்கிக்கொள்ள முடியுமானால், 'நாம் அப் பொருள்களை அவர்களுக்கு மிகக் குறைந்த விலையில் விற்கவேண்டும். வெளிநாட்டு வணிகத்தை இழக்கக்கூடாது.'

நான்காவதாக, ஏற்றுமதிப் பொருள்களைச் சொந்த நாட்டுக் கப்பல்களில் ஏற்றியனுப்புவதன்மூலம் அவற்றின் மதிப்பை அதிகரிக்க முடியும். அவ்வாறு செய்வதால் மற்றவர்களுக்குக் கப்பற் கூலி கொடுக்கவேண்டியதில்லை. நமது பொருள்களுக்குரிய விலை கிடைப்பதுடன் வணிக இலாபமும் நமக்கே கிடைக்கும். இதுவே நவீனக் கொள்கை கூறும் மறைவு ஊதியம் ஆகும்.

ஐந்தாவதாக, நாட்டின் உற்பத்திப் பொருள்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும். அப்போதுதான் ஏற்றுமதிக்கு அதிகப் பொருள்கள் இருக்க முடியும். நம் நாட்டுத் தயாரிப்பாளர்கள் சிக்கனமாக இருந்தால், நம் நாட்டு ஏழை மக்களை அதிக அளவில் வேலைக்கு வைத்துக்கொள்ள முடியும். இதுமன் அவர்கள் கருத்தில் இரண்டாந்தரந்தான். நம் நாட்டு ஏழைகளை நம் நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களிடம் வேலைக்கு வைப்பது மிகச் சிறந்த முதல்தர ஏற்பாடாகும்.

ஆறுவதாக, அண்டை அயலுள்ள கடலில் மீன்பிடிப்பைப் பெருக்கவேண்டும். நம் நாட்டு மீன்களை டச்சுக்காரர்கள் பிடித்துச் செல்வதை அனுமதிக்கக்கூடாது.

ஏழாவதாக, வெளிநாட்டு வாணிபத்தை விருத்திசெய்ய வணிகக் கிடங்கு ஒன்றை அமைக்கவேண்டும். இங்குப் பொருள்களைப் பல பகுதிகளிலிருந்தும் வரவழைத்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான், நம் நாட்டுக் கப்பற் கூலியும், வாணிபமும், அரசனுக்குக் கிடைக்கும் சுங்கவரித் தொகையும் பெருகும்.

எட்டாவதாக, பின்னர் ஸ்மித் கூறுவதற்கு மாறுகத் தொலை தூர நாடுகளுடன் நம் வணிகத்தைப் பெருக்கவேண்டுமென மன் கூறுகிறார். இந்திய நாட்டில் மிளகு வாங்கிப் பாரிசில் விற்றால் அண்டை நாடுகளில் நம் வணிகம்மூலம் கிடைக்கும் இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்கும். மிளகு ராத்தல் 20 ரூபாய் என்று லண்டனிலும், 12 ரூபாய் என்று ஆம்ஸ்டர் டாமிலும், 1 ரூபாய் என்று கொச்சியிலும் விற்பதாக வைத்துக் கொள்வோம். ஆம்ஸ்டர்டாமில் வாங்கி விற்பதைவிடக் கொச்சியில் மிளகை வாங்கிப் பாரிசில் விற்பது நமக்கு மிக அனுகூலமாயிருக்கும்.

ஒன்பதாவது வழிமுறை ஏற்றுக்கொண்ட கொள்கைக்கு முரணானது. எனவே, இதை வெளியிட மன் தயாராகிறார். சில விஷயங்களில் தங்கத்தை ஏற்றுமதி செய்வது அனுகூலமாயிருக்கும் என்பதே இவ் வாதம்; இதை இவர் பின்னர் விரிவாக ஆராய்கிறார்.

பத்தாவது, பதினொன்றாவது அம்சங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை; ஏறக்குறைய ஒரேமாதிரியானவை. வெல்வெட்டு, பட்டுப் போன்ற பொருள்களை ஏற்றுமதித் தீர்வையின்றி ஏற்றுமதி செய்ய அனுமதிக்கவேண்டும். இவ்வாறு செய்தால் வேலை வாய்ப்பு வசதி பெருகும்; ஏற்றுமதி அதிகரிக்கும். தயாரிப்புக்கான மூலப்பொருள்களை இறக்குமதி செய்வதால் தீர்வைமூலம் அரசாங்க வருவாயும் அதிகரிக்கும். உள்நாட்டில் தயாரிக்கும் பொருள்களுக்கு அதிகத் தீர்வை விதிக்கக்கூடாது. அவ்வாறு விதித்தால், அவற்றின் விலை ஏறுவதுடன் ஏற்றுமதியும் குறைந்துபோகும். ஏற்றுமதியை ஊக்குவித்தல் போனஸ் கொடுப்பதில்தான் முடியும்.

பன்னிரண்டாவது வழிமுறை விளக்கமில்லாதது; இது விரிவானது. நாம் நம் நாட்டில் இருப்பதை வைத்துக்கொண்டு சிறந்த முறையில் பயன்படுத்தவேண்டும். இவையே தாமஸ் மன்னின் வழிமுறைகள். இவற்றை மொத்தமாகப் பார்த்தால், சிக்கனமாகச் செலவு செய்யவேண்டும்; பொருள்களை வீணுக்கக் கூடாது; இலாபம் தரும் எந்த வழியையும் அசட்டை செய்யக் கூடாது; வணிகத்தால் கிடைக்கும் பயனை நாம் பெறுவதாயிருந்தால், இந் நாட்டிலுள்ள வெளிநாட்டார் வாழ்க்கையை அனுபவித்துப்போகட்டுமே.

இதில் ஒன்பதாவது வழிமுறை தவிர, மற்றவை யெல்லாம் வணிகவாதத்துக்குப் பொருந்தியவையே. பொன், வெள்ளியை ஏற்றுமதி செய்வது என்பதில்மட்டும் மற்ற வணிகவாதிகளைப் போல் அல்லாமல் மன் அவர்கள் மாறுபட்ட கருத்துக்கொண்டுள்ளார். 'பணம் வணிகத்தை வளர்க்கும். வணிகம் செல்வத்தைப் பெருக்கும்'[1] என்பதே இவருடைய வாதம். நாட்டிலே பணத்தை வைத்திருப்பதால் மட்டும் வணிகம் வளர்ந்து நாடு செழித்துவிடாது. நம் நாட்டுப் பொருள்களுக்கு அயல் நாடுகளில் தேவை இருக்கிறதா என்பதைப் பொறுத்தே நம் வணிகம் வளரும். அதிகப் பணம் புழங்கினால் பொருள்களின் விலை ஏறும் என்பதை மன் உணர்ந்துள்ளார். விலையேறிய பொருள்கள் எளிதில் விற்பனையாகா; எனவே, பொருள்கள் முடங்கிக் கிடக்கும்; வணிகம் குறைந்துபோகும். எனவே, வணிகத்தின் வாயிலாக நாம் அனுப்பும் பணம் மீண்டும் நம்மை வந்தடையும் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும்.

மற்ற வணிகவாதிகளைப் போலவே மன்னும் சோம்பலை மிகக் கண்டிக்கிறார். வெளிநாட்டான், முக்கியமாக டச்சுக்காரன் இடைவிடாமல் உழைப்பதைச் சுட்டிக்காட்டி, டச்சுக்காரர்களே ஐரோப்பாவில் நல்ல உழைப்பாளிகள் எனச் சான்றிதழ் தருகிறார். அவர்களை ஒப்பிட்டுப்பார்க்கையில், 'நாம் சோம்பித் திரிகிறோம்; படிப்பையும் தொழிலையும் விட்டுவிட்டு, உடலின்பத்தை நாடிப் போகிறோம். குடியிலும், லாகிரிப் பொருள்களைப் பயன்படுத்துவதிலும் வாணாள் வீணுக்குகிறோம். புலன் ஐந்தும் பொறிகலங்கி, நெறி மயங்கி, அறிவழிந்திட்டு, ஐமேலுந்திட அலமந்து போகிற வரையில், அதாவது சாவின் கொடிய கரங்கள் நம்மைப் பிடித்துப் பிணிக்கிறவரையில் தொழில் ஏதும் செய்யாமல் போக வாழ்க்கையில் புரண்டுகொண்டிருக்கிறோம்'[2] எனக் குறிப்பிடுகிறார் மன்.

வணிகவாதக் கோட்டையிலும் அங்கும் இங்கும் சில வெடிப்புகள் ஏற்பட்டிருப்பதை மன் எடுத்துக் காட்டுகிறார். இதுவே இவருடைய தனிச் சிறப்பு. மூன்றாவது அதிகாரத்தில் கூறியுள்ளவைகளுக்கு மாறுகப் பின்னர், அவர் சில போக போக்கியங்களை ஏற்றுக்கொள்ளுகிறார். எல்லாவற்றையும் தவிர்க்கவேண்டும் என்பது பொருளல்ல எனவும் கூறுகிறார். வெளிநாட்டுப் பொருள்களையே பயன்படுத்தாவிட்டால், 'நம்

[1] அதே ஏடு, அதிகாரம் 4.
[2] அதே ஏடு, அதிகாரம் 19.

நாட்டுப் பொருள்களை நாம் ஏற்றுமதி செய்வது எப்படி? நம் நாட்டுக் கப்பல்களும், மாலுமிகளும், சுங்குலப் பொருள்களும், கைவினைஞர்களும், மற்றவர்களும் என்ன ஆவது? நம் நாட்டுப் பொருள்களை வெளிநாட்டார் பணம் கொடுத்து வாங்கிக்கொள்ளுவார்கள்; தங்கள் நாட்டுப் பொருள்களைப் பண்டமாற்று முறையில் நம்மிடம் விற்கமாட்டார்கள்; அவர்களுடைய பொருள்களைப் பணம் கொடுத்து வாங்குமாறு நம்மைக் கேட்கமாட்டார்கள் என எதிர்பார்ப்பது அறிவுடைமை ஆகுமா?' [1]

இக் கேள்விகள் ஆணித்தரமானவை. இவற்றிற்குப் பதில் கூற வணிகவாதிகள் ஆத்ம பரிசோதனை செய்துகொள்ளவேண்டும். தங்கள் உள்ளத்தைத் துருவித் துருவி ஆராயவேண்டும்.

மற்றுமோர் அடிப்படைக் கொள்கையில் மன் கூறுவதாவது: 'செல்வமே போருக்கு வேண்டிய சாதனங்களுக்கெல்லாம் அடிப்படை என்று கூறப்படுகின்றது. மனித சக்தியைச் செல்வமே ஒருங்கு திரட்டுகின்றது. ஆள், படை, அம்பு, போர்ப் படைக்கலங்கள் ஆகியவை வேண்டும்போது அவற்றைத் திரட்டுவது செல்வமே என்றாலும், இப் பொருள்கள், சாதனங்கள் கிடைக்காவிட்டால் செல்வத்தால் என்ன பயன்? எனவே, செல்வம் இருந்துவிட்டால் மட்டும் போதாது. பிற சாதனங்களும் இருக்க வேண்டும்.' [2]

'நாம் செல்வத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது?' இக் கேள்விக்கு வணிகவாதிகள் விடை இறுக்கவில்லையெனச் சிலர் கூறுவர். இந்தக் கேள்விக்கு விடையிறுக்கப் புகுந்தால், தங்கள் வணிகவாதக் கட்டுக்கோப்புச் சீர்குலையும் என அவர்கள் அறிந்திருந்தனர் போலும். ஆனால், இத்தகைய கேள்வியை மன் எழுப்பியுள்ளார் என்பதை நோக்குங்கால், நாம் நினைப்பதுபோல வணிகவாதிகள் வடிகட்டிய மடையர்களாக இருக்கமுடியுமா?

பிற்காலத்தில் வாழ்ந்த ஆங்கில வணிகவாதப் பிரதிநிதிகளை இங்கே ஆராய்வதற்கில்லை. நாடு வலிமை பொருந்தியதாக இருக்கவேண்டும் என்ற கொள்கை இன்னும் இருக்கிறதென்றாலும், மூல வணிகவாதக் கருத்துகள் குறித்து இப்போது ஐயந்திரிபுகள் ஏற்பட்டுள்ளன. ஜோசையா சைல்டு (1630—1699) சாதக வணிகநிலைபற்றிய வணிகவாதக் கொள்கையைச் சரிவர விளக்கிக் கூறிய பிறகு, இச் சாதக நிலையை அறிவதிலுள்ள

[1] அதே ஏடு, அத்தியாயம் 15.
[2] அதே ஏடு, அதிகாரம் 18.

நடைமுறைத் துன்பங்களைச் சுட்டிக் காட்டுகின்றார். பொது வணிகம்பற்றிய கருத்து ஐயப்பாட்டிற்கு இடமளிப்பதாகவும், உறுதியற்ற நிலையில் இருப்பதாகவும் குறிப்பிடுகின்றார். குறிப் பிட்ட சில வர்த்தக முறையால் இக் கொள்கை தவருனதாகவும் பொருளற்றதாகவும் இருப்பதாக எடுத்துரைக்கின்றார். வணிகம் வளர்ந்துள்ளதா? இல்லையா? என்பது கப்பற் கலை வளர்ச்சி யிலிருந்து நன்கு தெரியும்.

செர்ரா

வணிகவாதிகளைப்பற்றி விரிவாக ஆராய்வதற்காக மற்றொரு பிரதிநிதியைப் பார்ப்போம். இவர் இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர். மன்னைப் போலவே அன்டோனியோ செர்ராவும் (Serra) தமது சிறு நூலின் தலைப்பிலேயே வணிகவாதக் கொள்கையைச் சுருக்கிக் கூறிவிடுகின்றார். பொன், வெள்ளிச் சுரங்கங்கள் இல்லாத நாட்டில், பொன்னையும் வெள்ளியையும் அபரிமிதமாகப் பெருக்குவதற்குரிய வழிவகைகளையும் காரணங்களை யும்பற்றிய சிறு விளக்க நூல்[1] என்ற தலைப்பின்கீழ், இவர் தம் சிறு நூலை 1613-ல் வெளியிட்டார்.

நாட்டிலே பொன்னும் வெள்ளியும் ஏராளமாக இருக்க வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்ற அனுமானத்தின்மீதே இவர் தம் வாதத்தை ஆரம்பிக்கிறார். இதற்கு மாறுன கருத்துப் பைத்தியக்காரத்தனமானதாகும். பொன், வெள்ளிச் சுரங்கங்கள் இருக்கும் பெருவாய்ப்பினைப் பெற் றுள்ள சில நாடுகள் நீங்கலாக, மற்ற நாடுகளில் இவை தொடர் பான காரணங்கள்பற்றியே இருக்கும். ஒருசில காரணங்கள் குறிப் பிட்ட நாடுகளுக்கே பொருந்துவதாக இருக்கலாம். நாடு அமைந்துள்ள கேந்திர இடமும் ஒரு காரணமாய் இருக்கலாம். மற்றப்படி, நாட்டிலே பொன்னும் வெள்ளியும் ஏராளமாக இருப் பதற்கு நான்கு காரணங்கள் உள என்று செர்ரா கூறுகிறார். தொழிலின் அளவு, மக்கள் தொகையின் இலட்சணம், விரிவான வர்த்தக நடவடிக்கைகள், அரசு விதிக்கும் ஒழுங்கு முறைகள் ஆகியவையே இக் காரணங்களாகும். முதல் அம்

[1] மன்றே எழுதிய 'ஆரம்பகாலப் பொருளாதார எண்ணங்கள்' என்ற நூலில் இது இடம்பெற்றுள்ளது. இச் சிறு நூல் கிராஸியானி பதிப்பித்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. செர்ராவைப்பற்றி நாம் அறிந்ததெல்லாம் அவர் சிறையிலிருக்கும்போது (1613) பணத்தைப் பெருக்குவது எப்படி என்ற நூலை எழுதினார் என்பதுதான். கள்ள நாணயம் அச்சடித்து வெளியிட்டதற்காக அவர் சிறையிலடைக்கப்பட்டார். பிற்கால நகைச்சுவையாளன் இத்தகைய கதையை நயம்பட புனைந்துரைத்தானோ என்னவோ? யார் அறிவார்.

சத்தை எடுத்துக்கொண்டால், வணிகவாதி விவசாயத்தைவிடத் தொழில்களை விரும்புவதற்குரிய காரணங்களை சேர்ரா விளக்கிக் கூறுகிறார். முதலாவதாக, அது பத்திரமானது. விவசாயியை விடத் தொழிலாளிக்கு நிச்சயமாக இலாபம் கிடைக்கும். விவசாயி பருவநிலையை நம்பியிருக்கவேண்டியுள்ளது. எனவே, விவசாயி உழைத்தாலும் முடிவில் நஷ்டப்படவேண்டிவரும். ஆனால், தொழிலில் நிச்சயமாக இலாபம் கிடைக்கும். தொழிலாளி உழைக்க உழைக்க இலாபம் அதிகரிக்கும். இன்று இது சாதாரண கருத்தாகத் தோன்றுகின்றது. இரண்டாவதாக, தொழிலில் பொருளின் உற்பத்தியை எவ்வளவு வேண்டுமானாலும் அதிகரிக்க முடியும். பொருள்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப் பட்டால், உற்பத்திச் செலவும் குறையும் (con minor proporzione di spesa). தொழிற்சாலைப் பொருள்களுக்கு நிச்சயமாகச் சந்தை இருக்கும்; மூன்றுவது காரணம் விவசாய விளை பொருள்களை வைத்துக் காப்பாற்றுவதும் கடினம். தொழிற்சாலைப் பொருள் களைப் பல காலம் கெடாமல் வைத்திருக்க முடியும். எனவே, விலை ஏறிவரும் வரையில் இப் பொருள்களைக் கிடங்கில் வைத் திருக்கலாம் அல்லது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் (பழவகைகளைப் பதப்படுத்தி டப்பாவில் அடைத்து நீண்ட காலம் வைத்திருப்பதைச் சேர்ரா அறியார்போலும்)! கடைசி யாக விவசாயப் பொருள்களைவிடத் தொழிற்சாலைப் பொருள்கள் மூலமாகவே அதிக இலாபம் கிடைக்கின்றது. பொன்னும் வெள்ளியும் ஒரு நாட்டில் ஏராளமாக இருப்பதற்குரிய மற்றக் காரணங்களைச் சுருக்க வகையில் குறிப்பிடலாம். குடிமக்கள் விடாமுயற்சி உள்ளவர்களாக இருக்கவேண்டும். உள்நாட் டிலும் வெளிநாட்டிலும் வணிகத்தை வளர்ப்பதில் விருப்பமுள்ள வர்களாக இருக்கவேண்டும். வெளிநாட்டுப் பொருள்களிலேயே அதிக வணிகம் நடத்தவேண்டும். அரசு விதிக்கவேண்டிய ஒழுங்கு முறைகளைச் 'சேர்ரா' அதிகம் விவரிக்காது விட்டுவிடு கின்றார். வணிகவாதத்தில் இதுவே முக்கியமான கொள்கை. 'இவற்றை எவ்வாறு அமைப்பது எனத் தெரியவில்லை' எனக் கூறுவது உண்மைக்கு உறைவிடமாக இருக்கலாம். ஆனால், அதனால் நமக்கு என்ன இலாபம்? ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களை நாம் கவனிக்கவேண்டிவரலாம். ஒரே காரணம் வெவ்வேறு முறைகளில் வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்தலாம் (சன்னமான குரலில் சீட்டியடித்தால் நாய்கள் சீறிப் பாயும், குதிரைகள் அடங்கி நிற்கும்). இவற்றுள் எல்லாம் உயர் சிவில் அதிகாரியை உற்பத்தி செய்துவிடமுடியுமா? நிதி அமைச்சர் சன்னக் குரலில் சீட்டியடிக்கும்போது நாய்கள் யார்? குதிரைகள் யார்? வெனிஸ் நகரில் பொன்னும் மணியும் ஏன்

குவிந்து கிடக்கின்றன ? நேபில்ஸ் ஏன் வறுமையில் வாடுகின்றது ? என்பவற்றை செர்ரா எழுதிய சிறு நூலின் எஞ்சிய பகுதியில் காணலாம். இது இத்தாலிய வணிகவாதத்தின் சிறப்பியல் பாகும். மன்னைப்போலவே செர்ராவும் பண ஏற்றுமதிக்கு விதிக்கப்படும் தடையை எதிர்க்கிறார். ஒரு நோக்கத்தை மனத்திற்கொண்டே பொன்னையும் வெள்ளியையும் ஏற்றுமதி செய்கின்றோம். பணம் ஏற்றுமதியானால், ஏற்றுமதி செய்த நாட்டுக்கே அது இலாபத்துடன் திரும்பி வரவேண்டும். இது வெறும் அனுமானமேயாகும். வணிகவாதம் வெறும் வாய் வீச்சே என்கின்ற முடிவுக்கு நாம் வரவேண்டியுள்ளது.

வான் ஹார்னிக்

சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல், இப்போது இன்னொரு வணிகவாதியைக் காண்போம். பிலிப் வான் ஹார்னிக் [1] (Philip von Hornick, 1638—1712) ஆஸ்திரிய நாட்டவர். இவருடைய கொள்கை விளக்கம் எளிதாயிருக்கிறது. இது வணிகவாதத்தின் சுவையான விளக்கமாகும். ஒரு நாட்டிலே பொன்னும் வெள்ளியும் ஏராளமாக இருந்தால்தான் அது வல்லரசாக இயங்க இயலும். வாழ்வுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் அந் நாட்டில் நிரம்பியிருக்கவேண்டும். இவற்றிற்கு அந் நாடு வெளிநாட்டினை நம்பியிருக்கக்கூடாது. தன்னிறைவு உள்ளதாக இருக்கவேண்டும். இந்த நோக்கம் நிறைவேற மன்னைப் போலவே ஹார்னிக்கும் பல விதிமுறைகளை வகுத்துள்ளார். இவை பெரிதும் பயன்படத்தக்கவை. இத்தகைய ஒன்பது விதிகள் இருக்கின்றன. இவை மன் கூறிய வழிமுறைகளைப் பெரிதும் ஒத்துள்ளன. ஆனால், முக்கியத்துவத்தை வலியுறுத்துவதில் இவை ஓரளவிற்கு வேறுபடுகின்றன. இவற்றை இப்போது சுருக்க வகையில் காணலாம் : (1) நாட்டின் நில வளத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஊசி முனை அளவு நிலத்தைக்கூடப் பயன்படுத்தாமல் விட்டுவைக்கக் கூடாது. எல்லா வகையான தாவரங்களையும் வளர்க்க வேண்டும். பொன், வெள்ளி எங்குக் கிடைக்கும் எனத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும். (2) பொருள்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யவேண்டும். (3) மக்கள் தொகை பெருகுவதை ஆதரிக்கவேண்டும்; மக்கள் சோம்பித் திரிவதை அனுமதிக்கக்

[1] மெயின்ஸ் (Mainz) என்னுமிடத்தில் 1638-ல் பிறந்தார்; சட்டம் படித்தார்; வியன்னாவில் வழக்கறிஞராகப் பணியாற்றினார்; பாசாவிலுள்ள கார்டினலிடம் பின்னர் பணி புரிந்தார்.

கூடாது (மக்கள் தொகை அம்சம், ஜெர்மனி வணிகவாதத்தின் சிறப்பியல்பு என்பதை இங்கே குறிப்பிடலாம்). (4) நாட்டிற்குள் வந்த பொன்னையும் வெள்ளியையும் எக் காரணம்பற்றியும் வெளி நாட்டிற்கு அனுப்பக்கூடாது. இவற்றைப் பயன்படுத்தாமல் பதுக்கிவைக்கவுங்கூடாது. இவை எப்போதும் பழக்கத்திலிருக்க வேண்டும். (5) குடிமக்கள் கூடியவரையில் உள்நாட்டுப் பொருள்களையே பயன்படுத்தவேண்டும்; வெளிநாட்டுப் பொருள்களை முடிந்தவரை தவிர்க்கவேண்டும். (6) வெளி நாட்டிலிருந்து எப் பொருள்களையேனும் இறக்குமதி செய்வது மிக அவசியமாக இருந்தால், அவற்றிற்கு வேறு பொருள்களைக் கொடுத்துவிட்டு அப் பொருள்களைப் பண்டமாற்று முறையில் பெற்றுக்கொள்ளவேண்டும். அவற்றை வாங்கப் பொன்னையோ வெள்ளியையோ ஏற்றுமதி செய்யக்கூடாது. (7) வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்வது தவிர்க்க முடியாவிட்டால், வேலை நிறைவுபெறுத பொருள்களையே இறக்குமதி செய்ய வேண்டும். உள்நாட்டில்தான் அவற்றை வேலை நிறைவு செய்ய வேண்டும். (8) இதற்கு மாறுக (Per contra), உபரிப் பொருள் களை வெளி நாடுகளுக்கு விற்க அல்லும் பகலும் அனவரதமும் வாய்ப்புத் தேடிக்கொண்டேயிருக்கவேண்டும். இவற்றையும் வேலை நிறைவுபெற்ற நிலையிலேயே விற்கவேண்டும். அதுவும் இவற்றின் விலையாகப் பொன்னையும் வெள்ளியையுமே பெற்றுக் கொள்ளவேண்டும். (9) உள்நாட்டில் ஒரு பொருள் கிடைப்பதா யிருந்தால், அதை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதை அனுமதிக்கக்கூடாது. உள்நாட்டுப் பொருள் தரத்தில் மட்ட மானதாகவும், அதிக விலையுள்ளதாகவும் இருந்தபோதிலும் வெளிநாட்டுப் பொருளை இறக்குமதி செய்யக்கூடாது.

இவ் வேலைத் திட்டத்தைச் சுருக்கித் தருவது வீண் வேலை யாகிவிடாது; கூறியது கூறல் என்ற குற்றத்தின்பாற்பட்டது. 8-வது கொள்கையை 6-வது, 7-வது கொள்கைகளுடன் இணைத் துப் பார்த்தால், வணிகத்தின் ஒரு சார்புத்தன்மை தெரியவரும். ஹார்னிக்கின் வாதப்படி நடக்கின்ற ஒரு நாட்டுக்கு எதிராக, மன்னின் வாதப்படி நடக்கின்ற நாடு மோதக்கூடும் என்பதை வணிகவாதிகள் எண்ணிப்பார்க்கவில்லை. ஹார்னிக் தமது வாதத்தின் ஐந்தாவது கொள்கையை மிக முக்கியமானதெனக் கருதுகின்றார். இதிலிருந்தே மற்றவை எல்லாம் பெறப்படுவதாக வும் கூறுகின்றார். தன்னிறைவு என்ற பெருநோக்கு நிறைவேற வேண்டுமானால், வெளிநாட்டுப் பொருள்கள் நான்கின் இறக்கு மதியை—பட்டு, கம்பளி, நார்ப்பட்டு, ஃபிரெஞ்சுப் பொருள்கள் ஆகியவற்றின் இறக்குமதியை—முக்கியமாகத் தடை செய்ய

வேண்டுமென ஹார்னிக் சிபாரிசு செய்கின்ருர். இந்த நான்கு பொருள்களை இறக்குமதி செய்வதில் மட்டும் ஆஸ்திரியா ஆண்டுதோறும் ஒரு கோடி தேலர்களை (ஆஸ்திரிய நாணயம்) வீணுக்குகின்றது. ஓராண்டாகிலும் இவ்வளவு தொகையை மிச்சம்பிடிக்க முடியுமானுல், ஆஸ்திரியா மீண்டும் ஜீவகளையுடனும், உயிர்த் துடிப்புடனும் உல்லாச நடை போடாதா ? வளம் குன்றிக் கிடக்கும் ஆஸ்திரியா வளம் பெற்றுவிடாதா? இவ்வாறு, இருபது ஆண்டுகள் மிச்சம் பிடித்தால், ஐரோப்பாவில் ஆஸ்திரியா தன்னேரில்லாத் தனிப்புகழ் நாடாகத் திகழாதா ? ஒரு பொருளுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தாலும் உள்நாட்டுப் பொருள்களையே வாங்கவேண்டும். ஒரு ரூபாய்க்கு வெளிநாட்டுப் பொருள் கிடைப்பதாயிருந்தாலும் அதை வாங்கக்கூடாது. அப்போதுதான் ஆஸ்திரியப் பணம் ஆஸ்திரியாவிலேயே இருக்கும் ; வெளிநாட்டிற்குப் போகாது. வெளிநாட்டிற்குச் சென்றுவிட்ட பணம் யாளை வாய்ச் சென்ற கரும்பின் கதியையே அடையும். ஒரு முறை வெளியே சென்றுவிட்டால் மறு முறை திரும்பியே வராது. இதை ஏற்றுக்கொண்டோமானுல், மற்றக் கொள்கைகளை நாமே அனுசரிக்க ஆரம்பித்துவிடுவோம். உதாரணமாக, மக்கள் தொகை விஷயத்தை எடுத்துக்கொள்வோம். இப் பொருள்களின் இறக்குமதியைத் தடை செய்தால் வெளிநாட்டார் வேலை இழப்பர். பிழைப்புக் கிடைக்கும் இடத்தையே தொழிலாளர் நாடி வருவர். எனவே, தொழில் கிடைக்கும் ஆஸ்திரியா நாட்டிற்கு அவர்கள் வந்துதான் ஆக வேண்டும். இதனுல், மக்கள் தொகைப் பிரச்சினை தீர்ந்து விடுகின்றது. மற்ற விஷயங்களிலும் ஹார்னிக் வணிக வாதப் பிரதிநிதியாகவே திகழ்கின்ருர். வெளிநாட்டுப் பொருள்கள் போட்டி போடுவதற்கு இராவிட்டால், உள்நாட்டுப் பொருள்கள் குதிரை விலை, ஆளை விலையாகிவிட்டால் என்ன செய்வது என்கின்ற பயம் வேண்டுவதில்லை. விலைவாசி ஏருதிருக்கும்படி அரசு பார்த்துக்கொள்ளும். வெளிநாட்டானிடம் ஏமாறுவதை விட உள்நாட்டானிடம் ஏமாறுவது மேலானதெனத் தத்துவ விசாரணையாளர்கள் கூறக்கூடும். மற்ற நாடுகளில் உடுப்பதைப்போல நாமும் புதுவித உடை உடுத்த வேண்டாமா என்ற கேள்விக்கு ஹார்னிக் அளிக்கும் பதிலுடன் இவ் அதிகாரத்தை முடிப்பது பொருத்தமாக இருக்கும். 'புதுமை என்ற நவ நாகரிகக் கன்னியைப் பெற்றெடுத்த தந்தையாகிய சாத்தானிடமே அவளை அனுப்பிவிடுவது நல்லது.'

4. இயற்கை வாதிகள் (பிசியோகிராட்கள்) குவெஸ்னே–துர்கோ

குவெஸ்னே

பொருளாதாரக் கொள்கை வரலாற்றில் பிராங்குவா குவெஸ்னே[1] (Francois Quesnay, 1694-1774) வகிக்கும் நிலை பல வகையிலும் குறிப்பிடத்தக்கது. தனி மனிதர் என்ற முறையில் பார்த்தாலும் குவெஸ்னே ஆர்வம் மிக்கவராகவும், தன்னிடம் எவரையும் ஈடுபாடு கொள்ளச் செய்யும் குண நலன்களையுடையவராகவும் திகழ்ந்தார். ஆஸ்தான மருத்துவராக வெற்றி நடை போட்டார் குவெஸ்னே. மருத்துவத் துறையின் பல பிரிவுகளிலும் இவர் வல்லவராகத் திகழ்ந்தார். பின்னர், 62 ஆம் வயதில் திடீரெனப் பொருளாதாரத் துறைக்குள் புகுந்தார். முதியவரான பின்னரே இவர் பொருளாதாரத் துறையில் காலடி வைத்தார் என்றாலும், கட்டுக்கோப்பான முறையில், திட்டவட்டமான வகையில் பொருளாதாரக் கருத்துகளை உருவாக்கி வெளியிட்ட ஒரு பெரும் பிரிவுக்கு இவர் தனிப் பெருந் தலைவரானார். எண்பதாவது வயதில் இவர் இறந்த போது பொருளாதாரத் துறையில் இவரைப் பின்பற்றுவோர்கள் ஏராளமானவர்களாயிருந்தனர். அக் காலத்தில் அவர்கள் அவருக்குச் சூட்டிய புகழ்மாலையைக் கவனிக்கும்போது, நவீன காலத்தின் தலைவர்களுக்குச் சூட்டும் புகழ்மாலை உறைபோடக் காணாது என்றே கூறவேண்டும். இக் காலத்தில் புகழ்வது ஒரு கலையாகவே வளர்ந்துள்ளது என்றாலும், அக் காலத்தில் குவெஸ்

[1] 1694-ல் மேரேயில் (Mere) பிறந்தார். கிராமவாசியாக வளர்ந்தார்; சொந்த முயற்சியிலேயே கல்வி கற்றார்; பலகாலம் சிறந்த மருத்துவராகப் பணியாற்றிய பின்னர், 1749-ல் பாம்படார் சீமாட்டிக்கும், 1755-ல் பாம்படார் அரசருக்கும் சொந்த மருத்துவர் ஆனார்.

னேவின் சீடர்கள் அவருக்குச் சூட்டிய புகழ்மாலையைக் காணும் போது, அவர்களல்லவா புகழ்ச்சிக் கலைப் பண்டிதர்கள் எனக் கூறத் தூண்டுகிறது. குவெஸ்னே தம் வாழ்நாளில் மிகத் தாமத மாகவே பொருளாதாரத் துறையில் கவனம் செலுத்தினர். எனவே, இத் துறையில் இவர் அதிகம் எழுதிக் குவித்திருக்க முடியாது. சிலர் கூறுவது போல, இவர் சிறிதளவே எழுதினர் என்பதும் உண்மையல்ல. ஆனால், இவர் எழுதியவை ஒன்றுக் கொன்று தொடர்பின்றி இருக்கின்றன. அக் காலத்தில் வெளி வந்த கலைக் களஞ்சியங்களிலும், பத்திரிகைகளிலும், சஞ்சிகை களிலும் இவர் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். ஆனால், இவர் எதையும் தம் சொந்தப் பெயரில் எழுதவில்லை.

பொருளாதார வல்லுநர்கள் வரிசையில் இவரும் இடம் பெற்றார். இவர்களைப் பின்னர் வந்த மக்கள் இயற்கைவாதிகள் (பிசியோகிராட்கள்) என அழைத்தனர். இயற்கைவாதிகள் அனைவரும் கருத்தொருமித்தவர்களாயிருந்தனர். எதிலும் கருத்து வேற்றுமை கொள்ளவில்லை என்று கூறுவதற்கில்லை. ஒவ்வோர் இயற்கைவாதியும் ஒவ்வொன்றை முக்கியமாகக் கருதினர். அதையே வலியுறுத்தினர் என்றாலும், மக்கள் இவர்களை இயற்கைவாதிகள் என ஒரு தொகுதியினராக்கும் அளவுக்குப் பொதுவான கருத்துகளை இவர்கள் கொண்டிருந் தனர். இந்த வரிசையில் இருக்கும் சிறு சிறு பிரிவுகளைப் பொது மக்கள் எண்ணிப் பார்க்கவில்லை என்றாலும், இத் தொகுதி யினருள் குவெஸ்னேதான் ஏறு நடையுடன் முன்வரிசையில் வருகிறார். இயற்கைவாதக் கொள்கையின் சிறப்பியல்புகளெல் லாம் இவருடைய எழுத்துகளிலேயே மலிந்துள்ளன. இயற்கை வாதிகள் அனைவருக்கும் குவெஸ்னே தனிப் பெரும் பிரதிநிதியாக இருப்பதால், இப் பிரிவு முழுவதும் அநேகமாக இவரைப்பற்றிய ஆராய்ச்சியே மிகுந்திருக்கும்.

குவெஸ்னே எழுதியுள்ளவற்றைப் படிக்கும் எவரும் பொதுத் தன்மை வாய்ந்த மூன்று கருத்துகளை அவற்றில் காணவே செய்வர். முதலாவதாக, பொருளாதாரக் கொள்கை விரிவான மற்றொன்றின் விளைவாகவே உள்ளது. இயற்கை வாதிகள் அனைவரையும் போலவே குவெஸ்னேவிற்கும் பொருளாதாரம் என்பது இப் பரந்த உலகில் சிறிய அங்கமே. உலகம் முழுவதை யும் நோக்கும் ஒரே பார்வையில் பொருளாதாரமும் கட்புலனு கிறது. குவெஸ்னே உயர் ஒழுக்க நெறியாளரே. இப் பிரபஞ்சம் முழுவதுமே இயற்கை நியதியின் ஆளுகைக்கு உட்பட் டிருக்கிறது. இவ்வாறு இவர்கள் கருதியதால்தான் இவர்கள்

இயற்கை வாதிகளென அழைக்கப்பட்டனர். எனவே, இயற்கை வாத அமைப்பில் பொருளாதாரப் பகுதிகளைப் பிரித்தெடுப்பது அவசியமாகும். இரண்டாவது பகுதி வருமாறு: ஒன்றுக்கொன்று முரணான கருத்துகள் ஒன்றுக்கு கூடியிருப்பினும், நவீனக் கருத்தில் அரசியல் பொருளாதாரத்தின் தந்தை குவெஸ்னேதான். இவ்வாறு போற்றுவதற்குரிய தகுதிகள் அவரிடத்தில் இருக்கின்றன. சோதனையில் தேறித் தெளிவது, எதையும் சோதித்தறிவது என்ற நிலை மாறிவிட்டது. செல்வத்தின் தன்மை, அதன் உற்பத்தி நிபந்தனைகள், பங்கீட்டு நியதிகள் ஆகியவை குறித்துப் பொதுவான உண்மைகளைக் கண்டறிய விஞ்ஞான வழிகளையும், நியாய வாதத்தையும் நல்ல முறையில் பயன்படுத்த முடியுமெனச் சரியாகவோ, தவருகவோ, குவெஸ்னே திடமாக நம்பினார். இவை பற்றிய ஆய்வுரையும் விளக்கமும் மூன்றாவது பகுதியாக இருக்கிறது. இதில் குவெஸ்னே ஆடம் ஸ்மித்துக்கு எந்த அளவு முன்னோடியாக இருக்கிறார் என்பது விளங்கும். இவர்கள் இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் அதிகம் இருந்தன என்பது உண்மைதான். ஸ்மித்தே இவற்றை வெளிப்படையாக வலியுறுத்திக் கூறியுள்ளார். ஆனால், இவர்களுக்குள் இருக்கும் ஒற்றுமை அம்சங்கள் குறிப்பிடத்தக்கனவாய் அமைந்துள்ளன. குவெஸ்னேவிற்கும் ஸ்மித்துக்கும் இத் துறையில் உள்ள உறவு முறை குறித்து ஏராளமான வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன. ஆடம் ஸ்மித் ஃபிரான்சுக்குச் சென்றபோது குவெஸ்னேவுடன் பொருளாதாரக் கருத்துகளைப்பற்றி அளவளாவிய காரணத்தால், ஆடம் ஸ்மித், குவெஸ்னேவின் அடிச்சுவட்டிலேயே செல்வதாகச் சிலர் சில காலம் கருதினர். இது உண்மையல்லவென இப்போது நமக்குத் தெரியும். ஆடம் ஸ்மித் கிளாஸ்கோவில் பேராசிரியராக இருந்த காலத்திலேயே தாம் கொண்டுள்ள பொருளாதாரக் கருத்துகளின் பொது விவரத்தை வெளியிட்டுவிட்டார். எனவே, இவர் கிளாஸ்கோவில் குவெஸ்னேவைப்பற்றி அறியாமலிருக்கும்போதே, அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பது எவ்வாறு இயலும்? இருவரும் பல கருத்துகளில் ஒத்த எண்ணம் உள்ளவர்களாக இருக்கின்றனரென்றால், அது பலகாலும் இருந்துவரும் இயல்பான உண்மையையே காண்பிக்கிறது. ஒரு பிரச்சினையை வெவ்வேறு இடங்களிலிருந்து பலர் தனித்தனியே ஆராயுங்கால், அவர்களில் ஒரு சிலர் ஒரே சமயத்தில் ஒரே முடிவுக்கு வருகின்றனர். இப் பொது உண்மையே இவர்கள் கருத்திலும் பொருந்தும்.

முதலாவதாக, இயற்கை நியதி என்ற அடிப்படை அம்சத்தை எடுத்துக்கொள்வோம். இயற்கை ஒரு நியதியின்கீழ்

இயங்குவதுபோல், மனித நடவடிக்கைகளுக்கும் ஓர் இயற்கை நியதி உண்டு என்று நம்புகிறார் குவெஸ்னே. இந்த இயற்கை நியதிக்கு அனுசரணையாக உள்ள சமுதாய அமைப்பைக் கண்டு பிடிப்பதுதான் நம் முன்னுள்ள பிரச்சினை. 'இயற்கை உரிமை' என்பது என்ன? இது ஒருவருக்கும் சரிவரப் புரியாத நிலையிலுள்ளது. இது 'கிரம உரிமை' என்பதிலிருந்து வேறுபடுகிறதாகும். 'கிரம உரிமை' என்பது மனிதன் செய்த சட்டத்தால் பெறப்படுவதாகும். நியாயத்தின் ஒளிவீச்சில் அங்கீகரிக்கப்படுகிற சாட்சியத்தின் பலத்தில் நிற்கிற உரிமையே 'இயற்கை உரிமை.' வலுக்கட்டாயம் எதுவுமின்றியே இது ஒருவரைப் பிணைக்கும் தன்மை வாய்ந்தது. ஆனால், 'கிரம உரிமை' என்பது தண்டனைப் பயத்தால் ஏற்படுவதாகும். எனவே, 'இயற்கை உரிமை' என்பது மனிதன் சட்டத்தால் ஏற்படுத்தும் உரிமைகளைவிடச் சிறந்ததாகும். இயற்கை நியதி எங்கும் ஒரே மாதிரியாகவே இருக்கிறது. தீ சுடும் என்பது இயற்கை நியதி. உலகில் எந்தப் பகுதியிலும் இதே இயற்கை நியதிதான் அரசாள்கிறது. ஆனால், மனிதன் செய்யும் சட்டங்கள் அப்படி அல்ல. அவை பிரதேசத்துக்குப் பிரதேசம், நாட்டுக்கு நாடு, கண்டத்துக்குக் கண்டம் வேறுபடுகின்றன. ஓரிடத்தில் குற்றமாகக் கருதப்படுவது, அதே மனித சட்டத்தால் பிறிதோரிடத்தில் நியாயமாகப் படுகிறது. எனவே, பொருளற்ற சட்டங்களை மனிதன் இயற்றுகிறான்.[1]

இவற்றை விரித்துக்கொண்டு போனால் பெருகும். எனவே, இவற்றை இப்படியே விட்டுவிட்டு, நாம் எடுத்துக்கொண்ட பொருளாகிய பொருளாதாரத்துக்கு வருவோம். எதைச் செய்ய மனிதனுக்கு 'இயற்கை உரிமை' இருக்கிறது? தன் தகுதிக்கு ஏற்றவற்றிலேயே மனிதனுக்கு உரிமை இருக்கிறது.[2] இதை என்னவென்று வரையறுக்க வேண்டும். எல்லோருக்கும் எல்லாவற்றிலும் உரிமையுண்டு என்ற ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது. ஒவ்வொருவரும் தத்தம் உழைப்பால் பெறக் கூடியவற்றிற்கே உரிமை கொண்டாட முடியும். வானத்தில் மிதக்கும் சிறு பூச்சிகளையெல்லாம் பிடித்துத் தின்னப் பறவைக்கு உரிமை உண்டென்றாலும், அதனால் அப்படிச் செய்ய முடியுமா? எந்த அளவு அவற்றை அது பிடிக்க முடியுமோ, அந்த அளவுக்குத்தான் பறவைக்குப் பூச்சிகள்மீது உரிமையிருக்கிறது (பூச்சிகளின்

[1] Le Droit Naturel, அதிகாரம் 2, பக்கங்கள் 365-66, ஆங்கன் பதிப்பு. பிந்தியக் குறிப்பீடுகள் இப் பதிப்பையே குறிக்கின்றன.
[2] அதே ஏடு, அதிகாரம் 1, பக்கம் 359.

உரிமை ஈண்டு விவாதிக்கப்படவில்லை).[1] மனிதன் சமுதாயத்தில் சேர்ந்ததும் இந்த இயற்கை உரிமையை அதிகப்படுத்திக்கொண்டே போவான். இந்த உரிமை அனுபவிக்கப்படுவதை உறுதிப்படுத்துவான். 'மனிதனின் இயற்கை உரிமையின் அடிப்படை நியதிகளை அனுசரித்துப் பார்த்தால், எந்த அமைப்பில் மனிதனுக்கு அதிக அனுகூலம் இருக்குமோ அந்த அமைப்பின் அடிப்படையிலேயே சமுதாயம் நிறுவப்பட வேண்டும்.'[2] மற்றுமோர் இயற்கை உரிமையை நாம் வற்புறுத்தவேண்டும். மனிதனுக்கு இயற்கை அளித்துள்ள திறமைகளையெல்லாம் பயன்படுத்தும் உரிமை மனிதனுக்கு இருக்க வேண்டும். இதனால் தனக்கோ பிறருக்கோ குந்தகம் விளையக் கூடாது என்ற நிபந்தனைக்கு இது உட்பட்டதாகும். பிறருக்குத் தீங்கு விளையக்கூடாது என்பது சரி; தானே தனக்குத் தீங்கு இழைத்துக்கொள்வதை ஏன் அனுமதிக்கக்கூடாது என்பது தெளிவாக இல்லை.[3] இவற்றுள் பொருளாதாரத் துறையில் குவெஸ்னே எந்த அளவு செல்லத் தயாராயுள்ளார் என்பது வெள்ளிடை மலையாக இருக்கிறது. உழைப்பின் அடிப்படையில் இவர் தனியுடைமையைப் புனிதப்படுத்தியுள்ளார்; ஒப்பந்த உரிமையை இவர் நிலைநாட்டியுள்ளார். இந்த உரிமைகளைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் தலையாய கடமை என இவர் அறைந்துள்ளார். உண்மையில், உடைமைக்கும் சுதந்திரத்துக்கும் பாதுகாப்பில்லா நாட்டில் அரசாங்கம் ஏது? அங்கு அராஜக நிலைதான் தலைவிரித்தாடும்.[4]

மனித சமுதாயம் இருவகைச் சட்டங்களுக்கு உட்பட்டதாகும். இயற்கைச் சட்டங்கள் ஒரு வகை. இரண்டாவது வகைச் சட்டங்கள் மனிதனால் நிச்சயிக்கப்பட்ட சட்டங்கள். முதல் வகைச் சட்டங்கள், 'இயற்கையில் ஏற்பட்டவை; அவை என்றும் மாறுக் குணம் உள்ளவை. தடுக்க முடியாதவை.'[5] இரண்டாம் வகையைச் சேர்ந்த சட்டங்கள் மனிதனால் இயற்றப்பட்டவையாதலால், அவை கீழ்நிலைப் பட்டவையே. மனிதன் இயற்றிய சட்டங்களின் முக்கியப் பணியே இயற்கைச் சட்டங்களை எடுத்துரைப்பதுதான்.[6]

[1] அதே புத்தகம், அதிகாரம் 2, பக்கங்கள் 366-367.
[2] அதே புத்தகம், அதிகாரம் 3, பக்கம் 368.
[3] அதே புத்தகம், அதிகாரம் 3, பக்கம் 371.
[4] அதே ஏடு, அதிகாரம் 5, பக்கம் 374. உடைமைக்குப் பாதுகாப்பு, ஒப்பந்த உரிமை என்ற இரு அடிப்படைக் கொள்கைகளும், பொதுக் கொள்கைகளில் மேலும் நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளன. 4-வது, 13-வது கொள்கைகளைப் பார்க்கவும்; பக்கங்கள் 331, 333.
[5] அதே ஏடு, அதிகாரம் 5, பக்கம் 375.
[6] அதே ஏடு, அதிகாரம் 5, பக்கம் 376.

மற்றெல்லாச் சட்டங்களுக்கும் அடிப்படையாகவுள்ள நிச்சயமான முதற் சட்டம் இயற்கை அமைப்புச் சட்டங்களே மக்களுக்கெல்லாம் எடுத்துரைக்கும் சட்டம்தான்.[1] ஆனால், துரதிர்ஷ்டவசமாக இதற்குரிய பாடத் திட்டம் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. மனிதனுல் நிச்சயிக்கப்பட்ட சட்டங்கள் இயற்கைச் சட்டங்களினின்றும் பெறப்பட்டவையே. இயற்கைச் சட்டங்களின் விரிவுரையாகவே அவை விளங்குகின்றன. சமுதாயத்தின் அடிப்படைச் சட்டங்கள் மனிதன் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளன. இவையே அவனுடைய மனச்சாட்சிக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன. இவற்றையொட்டிப் பார்த்தால் மனிதன் இயற்றிய சட்டங்கள் அவற்றை விளக்கிக்கூறும் சட்டங்களே. எனவே, மனிதன் இயற்றிய சட்டங்கள் இயற்கைச் சட்டங்களுக்கு உட்பட்டவையாகவே, அவற்றை அனுசரித்தே இருக்க வேண்டும். எனவே, அவை எதேச்சாதிகாரச் சட்டங்களாக இருப்பதற்கு இல்லை. அச் சட்டங்களை, 'சட்டமியற்றுவோன் தன்னிடமுள்ள அதிகார பலத்தால் நியாயமுள்ளவைகளாக்கிவிட முடியாது. அவை இயற்கையை ஒட்டி இருக்கிறவரையில்தான் நியாயமுள்ளவையாயிருக்கும்.'[2]

'இயற்கைச் சட்டத்தை' மேற்கொண்டும் விவரித்து அவற்றின் நுணுக்கங்களையெல்லாம் ஆராயும் வேலையை அரசியல் தத்துவ அறிஞர்களுக்கே விட்டுவிடுவோம். அது அவர்களுக்குரிய ஒன்றாகும். குவெஸ்னேவின் பொதுக் கருத்துக்களிலுள்ள பொருளாதார முக்கியத்துவத்தை மட்டும் நாம் கவனிப்பது போதுமானதாகும். இதில் அவருடைய நோக்கம் என்ன, எக் கொள்கையை நோக்கிப் போகிறார் என்பன தெளிவாகத் தெரிகின்றன. சில இயற்கைச் சட்டங்களைக் குழப்பம் நிறைந்த இவ்வுலக மக்களுக்கு எடுத்து விளக்குவதே சட்டம் இயற்றுவோரின் வேலை (இவற்றின் உள்ளடக்கம் என்ன என்பதை நாம் ஆராயாமலிருப்பதே, அறிந்துகொள்ள அதிக ஆர்வம் காட்டாமலிருப்பதே புத்திசாலித்தனம் ஆகும்). இயற்கைச் சட்டங்களை எந்த அளவு அனுசரித்துள்ளன என்பதைப் பொறுத்தே மனிதன் இயற்றிய சட்டம் நல்லதா கெட்டதா என்பது வெளிப்படையாகும். இவை ஒன்றுக்கொன்று முரணுயிருக்கக்கூடாது. அதே சமயத்தில் வெறும் வெளிப் பூச்சும் பயனில்லை. என்றும் மாரு இயற்கைச் சட்டங்களைப் பிரதிபலித்த பிறகு, மனிதன் இயற்றும் சட்டங்கள் ஒரு

[1] அதே ஏடு, அதிகாரம் 5, பக்கம் 375.
[2] Le Despotisme de la Chine, அதிகாரம் 8, முக்கியமாகப் பிரிவுகள் 6, 19; பக்கங்கள் 642, 650 காண்க.

வரையறைக்கு உட்பட்டே இருக்கவேண்டும். எவ்வளவு குறைவாக இச் சட்டங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு நல்லது. எனவே, இப்போது அரசாங்கத் தலையிடாக் கொள்கையின் ஆசார வாசலை நெருங்குகிறேம். தனி உரிமைக் கொள்கை, அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கை ஆகியவை இயற்கை வாதிகள் உலகுக்களித்த வரப்பிரசாத மாகும். சமுதாயத்தைக் கட்டிக் காப்பது அரசாங்கத்தின் கடமை. செல்வச் செழிப்பு, நிலங்களைப் பயிரிடுவதையும், திருடர் களையும் கொடியவர்களையும் ஒறுப்பதையும் பொறுத்திருப்ப தால், தீங்கிழைப்பவர்களைத் தண்டிக்க மனிதச் சட்டம் மெத்த அவசியமே.[1] வெளிப்பகையை வேரறுப்பது, உட்பகையை ஒறுப்பது, தீயவர்களைத் தண்டிப்பது, பொதுவான அரசாங்க நிருவாகத்துக்கு வழிகோலுவது ஆகியவை குறித்தே மனிதர் இயற்றும் சட்டங்கள் இருக்கவேண்டும். அவை இந்த அளவைத் தாண்டிப் போனால், அவை இயற்கைச் சட்டங்களின் பிரதிபலிப்பாக இருக்கமாட்டா. வணிக சுதந்திரம், அரசாங்கம் அதிகமாகத் தலையிடாதிருத்தல் ஆகிய கொள்கைகள் இப்போது தலைநீட்டுகின்றன.

இயற்கை நியதியை நாடிப் போனால், பொருளாதாரத் துறையில் நாம் விவசாயத்தை ஏற்றிப் போற்றவேண்டும். இயற்கை வாதக் கொள்கைகளில் இதுவே மிகவும் பிரசித்தி பெற் றது. விவசாயத்தின் அடிப்படையில் வாழும் நாடுகளே வல்லரசு களாக முடியும்; அவையே நீடித்து நிற்கும். சாம்ராச்சியங் களைப் படைக்க முடியும் என்று குவெஸ்னே கூறுவது உண்மை தான்.[2] விவசாயமே செல்வாதாரம். இதைப் போன்ற ஆதாரம் வேறு ஒன்றும் இல்லை. அக் காலத்தில் ஃபிரான்ஸ் நாட்டுத் தேவைகளையொட்டியே இயற்கை வாதிகள் விவசாயத்துக்குப் பெரு முக்கியத்துவம் அளித்தனர். வணிக வாதிகள் தொழிற் சாலைகளையும், அவை சம்பந்தப்பட்ட தொழில்களையும் ஏற்றிப் போற்றியதன் எதிரொலிதான் இது. கால்பர்ட் இக் கொள்கையை ஊக்குவித்ததால், 'கால்பர்டிசம்' என்றாலே ஃபிரான்ஸ் நாட்டில் வணிக வாதம் என்று பொருள் என்னும் நிலை ஏற்பட்டு விட்டது. இயற்கை வாதிகள் தாங்கள் விரும்பி மேற்கொள் வதற்காக அறிவியல் அடிப்படை ஒன்றை அமைத்துக் கொண்டனர். இதன் காரணமாக, விடுவிக்க முடியாத பல சிக்கல்கள் ஏற்பட்டன. விவசாயம் மட்டுமே சமுதாயத்துக்குச்

[1] Le Droit Naturel, அதிகாரம் 5, பக்கம் 375; Despotisme de la Chine, அதிகாரம் 8, பிரிவு 6, பக்கம் 642.
[2] Despotisme de la Chine, அதிகாரம் 8, பிரிவு 12, பக்கம் 647.

செல்வம் சேர்க்கிறது; இதுவே பயன் தரும் தொழில்; விவசாயத்துக்கு மாருக உள்ள தொழில்கள் எவ்வளவு அவசியமான வையாயிருந்தபோதிலும், அவை பயன்தராத் தொழில்களே; அவை மக்களுக்கு எவ்விதப் பயனும் தருவதில்லை. இவற்றை நிரூபிக்கவே இயற்கை வாதிகள் பெரிதும் முயன்றனர். 'அரசாங்கத்தின் வளத்துக்கும் நாட்டின் வளத்துக்கும் விவசாயமே அடிப்படை.[1] விவசாயத்தை ஆதரிக்கும் எதுவும் அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் நற்பயனே, இலாபத்தை அளிக்கும்'[2] எனக் கூறுகிறார் குவெஸ்னே. இவர் இவ்வாறு கூறுவது ஃஸெனேபன், சிசேரோ பொதுக்கூற்றுக்களை எதிரொலிப்பதாகக் கொள்ளக் கூடாது. மற்றவை விவசாயத்துக்குக் கீழ்ப்பட்டிருப்பதாலேயே, அவற்றைவிட விவசாயத்துக்குப் பெரு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதை அறிவியல் ரீதியில் நிரூபிக்க முடியும். 'குடியானவர்களும் தானியங்களும்' (Fermes and Grains) என்பவை குறித்து குவெஸ்னே எழுதிய கட்டுரைகளிலே அவர் வலியுறுத்திக் கூறியுள்ளதாவது:

'விவசாயமும் வணிகமும் இரு செல்வ ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன. தொழிலைப் போலவே வணிகமும் விவசாயத்தின் ஒரு பிரிவேயாகும். விவசாயம் இருந்தால்தான் இவை இரண்டும் இருக்க முடியும். தொழிலுக்கும் வணிகத்துக்கும் வேண்டிய மூலப் பொருள்களை விவசாயமே வழங்குகிறது. இப் பிரிவுகள் இரண்டிலிருந்தும் கிடைக்கும்இலாபம் விவசாயத்துக்கே போய்ச் சேருகிறது. ஒவ்வோர் ஆண்டும் செலவழிக்கப்படுகிற செல்வம் மீண்டும் புதுப்பிக்கப்படுவது விவசாயத்தால்தான்.'

குவெஸ்னேவின் சில கூற்றுக்களைக் கண்டால், வணிகப் பெருங்குடி மக்கள் சமுதாயத்தின் அங்கமாக இருக்கிறார்களோ இல்லையோ என்ற ஐயுறவு ஏற்படக்கூடும். ஒரு நாட்டிலே விவசாயமும் வணிகமும் சகவாழ்வு வாழ்கிறதென்றால், அந்த நாட்டிலே ஒன்றுக்கொன்று தொடர்பற்ற, வேருன இரண்டு இனங்கள் கூடி வாழ்வதாகவே பொருள் என்று குவெஸ்னே கூறுகிறார். மற்றது வெளிச் சேர்க்கையே. அது வெளி வணிகப் பொதுக் குடியரசின் அங்கமாக உள்ளது.[3] வணிகப் பெருங்குடி மக்கள் தனி இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மற்றவர்களினின்றும் முற்றிலும் வேருனவர்கள். அவர்கள் தங்களுக்கென்று

[1] Maximes Generals-பொதுக் கொள்கைகள், அதிகாரம் 1, பக்கம் 331.
[2] பொருளாதாரப் பட்டியல் ஆராய்ச்சி, பக்கம் 319.
[3] பொருளாதாரப் பட்டியல் ஆராய்ச்சி, பக்கம் 321.

தனி வகுப்பு ஒன்றை அமைத்துக்கொண்டுள்ளனர்[1] எனவும் கூறுகிறார் குவெஸ்னே. நகரங்களில் உள்ள மக்களுக்கு மலிவு விலையில் உணவுத் தானியங்கள் வழங்குவது தவருன கொள்கை எனக் கருதுகிறார் குவெஸ்னே. நாட்டு மக்களின் வயிற்றி லடித்து நகர மக்களின் வாயில் போடுவது நல்லதல்ல.

விவசாயத்துக்கும் தொழில், வணிகம் ஆகியவற்றுக்கும் உள்ள வேறுபாடு மற்றொரு வகையாலும் விளக்கப்படுகிறது. விவசாயத்தில் உபரி ஏற்படுகிறது; மற்றவற்றில் வரவுக்கும் செலவுக்கும் சரியாயிருக்கும் நிலையே உள்ளது. இந்த உபரியே 'நிகர உற்பத்தி.' விவசாய வேலையில் இயற்கை அளிக்கும் போனசே (வெகுமதி) இந்த உபரி. உரிமையாளர்கள் ஓரளவும், உழவர்கள் ஓரளவும் முன்பணம் போட்டு விவசாயம் செய்வதாக குவெஸ்னே கூறுகிறார். செலவெல்லாம் போகக் குடியானவர்கள் தங்கள் வாழ்வுக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொண்டது போக, அவர்கள் தாங்கள் போட்ட முன் பணத்தைத் திருப்பி எடுத்துக்கொண்டது போக, விவசாய விளையுளில் எஞ்சியிருப் பதே 'நிகர உற்பத்தி.'[2] இதை நில உரிமையாளருக்குக் கொடுக்கவேண்டும். இந்த நிகர உற்பத்தியே நாட்டின் உண்மை வருமானமாகும். இதுவே, ஏதாவதொரு வகையில் தொழிலாளர்களுக்கும் வணிகர்களுக்கும் பயன்படுகிறது. எனவே, இயற்கை வாதிகள் கருத்தில் சமுதாயத்தின் மூன்று வகுப்பினர்கள் இருக்கின்றனர். நிகர உற்பத்தி பெறும் உரிமை யாளர்கள் ஒரு வகுப்பினர்; இவர்கள் விவசாயத்துக்கு வேண்டிய பண முதலீடு செய்கின்றனர். சமூகத்தில் பொதுவான கடமைகள் பலவும் இவர்களையே சாரும். இரண்டாவதாக, விவசாயத்தில் ஈடுபட்டுள்ள குடியானவர்கள் இருக்கின்றனர். மூன்றுவதாகப் பயன்தரா உழைப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் இருக்கின்றனர். கூர்ந்து கவனிக்குமிடத்து நான்காவது வகுப் பினரும் இருக்கின்றனர். இவர்களே கூலியாட்கள். ஆனால், இயற்கை வாதிகளின் கருத்தில் இவர்கள் ஏற்ற இடம் பெற வில்லை.

சமுதாயத்தின் பயன்தரா உழைப்பில் ஈடுபட்டுள்ளவர்களைப் பற்றி மேலும் ஒரு விளக்கம் கூறவேண்டும். வணிகத்தைப் பொறுத்தவரையில் சிரமம் ஒன்றுமில்லை. பக்குவமடையாத மனித மனத்தின் எதிரொலியே இக் கருத்து. பண்டமாற்று செய்பவன் உற்பத்தி செய்பவன் ஆகமாட்டான். வணிகம்

[1] மேற்படி ஏடு, பக்கம் 328.
[2] மேற்படி ஏடு, பக்கங்கள் 304-309.

என்பது என்ன?[1] 'சம மதிப்புள்ள பொருள்கள் ஒன்றுக் கொன்றை மாற்றிக்கொள்வதுதானே வணிகம்.'[2] வணிகத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருக்கும் இலாப நஷ்டமின்றி, ஒரு பொருளைக் கொடுத்துவிட்டு அதற்குச் சம மதிப்புள்ள மற்றொரு பொருளை வாங்கிக்கொள்வதுதானே வணிகம்? செல்வத்தை ஒருவனிடமிருந்து மற்றொருவனுக்கு மாற்றுவதே வணிகன் வேலை. விவசாயிகள் இயற்கையன்னை தங்களுக்களித்ததை வைத்துக் கொண்டு, தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக்கொள் கிறார்கள். ஆனால், மற்றவர்கள் தங்களுக்கு அளித்ததை வைத்துக்கொண்டுதான், வர்த்தகர்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக்கொள்ளவேண்டிய நிலையிலுள்ளனர். ஒருவர் கொடுக்கவும் மற்றவர் வாங்கவுமாக இருக்கிறது. பயன் தரா உழைப்பாளர்கள் மற்றவர்களை அண்டியே வாழவேண்டி இருக்கிறது. இவர்களை மற்றவர்களே வைத்து ஆதரிக்கிறார்கள்.

தொழில் வகுப்பினர், தயாரிப்பாளர் சம்பந்தமாகக் கையாளப் படும் வாதமும் இத் தன்மையதே. ஒரு பொருளின் பொதுவான மதிப்பு, அசல் பொருளின் மதிப்பும், அதைத் தயாரிக்க எடுத்துக் கொண்ட நேரத்துக்குத் தொழிலாளர்க்குரிய ஊதியமும் சேர்ந்த தேயாகும்.[3] கைவினைஞரின் தொழில் உரிய இலாபம் தருவதா யிருந்தால், அதைச் செய்வதற்கு வேண்டிய வேலை அளவை அதிகரிப்பதே விரும்பத்தக்கதாகும்.[4] ஆனால், இத்தகைய உழைப்பு நாட்டின் வளத்தைப் பெருக்குவதில்லை. ஏனெனில், செல்வம் இருப்பதைப் பொறுத்தே தொழிலாளர்கள் இருக்க முடியும். இச் செல்வம் விவசாயத்தால்தான் பெருகும். கைவினை ஞர்கள் வேலையால் செல்வம் பெருகுவதில்லை (சக்கிலியர் எண்ணிக்கை அதிகரிக்கவேண்டுமானால், முதற்கண் மாட்டுத் தோல் கிடைக்கும் அளவு அதிகரிக்கவேண்டும் என்பதே இவருடைய வாதம்).[5] எனவே, செய்யும் செலவின் மதிப்பு, விவசாய உற்பத்தி செய்த செல்வத்தில் பங்குபெறக் கைவினைஞர் உரிமையடைகிறார். ஆனால், இவருடைய தொழிலில் விவசா யத்தில் இருப்பது போல் உபரி இருக்காது.

தொழிலாளி தான் உற்பத்தி செய்வதாகச் சொல்வதில்லை. தொழிலாளி தனக்கு வேண்டியதைச் சம்பாதிப்பதாகவே சொல்கிறான். குவெஸ்னேவின் வாதம் பிறரை நம்பச் செய்வதாக

[1] Du Commerce, பக்கம் 458.
[2] அதே ஏடு, பக்கம் 471.
[3] கைவினைஞர்கள் கருவிகள், பக்கம் 537.
[4] அதே ஏடு, பக்கம் 532.
[5] அதே ஏடு, பக்கம் 533.

இல்லை. உள்ளத்தே ஒளி இருந்தால் அல்லவோ வாக்கினில் ஒளி பிறக்கும்? குழப்படியான ஒரு பொருளை ஆதரித்துப் பேசுவது என்றால், திறமையான வாதம் எங்கிருந்து வரும்? இத்தகைய வாதங்களால் தொழிற்சாலைத் தொழிலாளி பயன்தரா உழைப்பாளி என்பதை ருவெஸ்னே நிலைநிறுத்த முயல்கிறார்.[1]

பயன்தரும் உழைப்புக்கும், பயன்தரா உழைப்புக்கும் வேறுபாடு கற்பித்துக் காட்டியிருப்பதே இயற்கைவாதிகள் உலகுக்களித்த வரப்பிரசாதம். இரண்டு தலைமுறையினர் இவ் வாதத்துக்குப் புதுக் கருத்துக் கொடுத்து எப்படியாவது அதை உண்மையான்தாக்க முயன்றனர். ஆனால், அவர்கள் முயற்சியெல்லாம் விழலுக்கு நீர் பாய்ச்சி மாய்ந்த கதையாகவே முடிந்தது. உண்மையில், இந்த வேறுபாடு இருந்தாலல்லவோ இவ் வாதம் வளம் பெறும்? இயற்கை வாதிகளின் கூற்றை ஏற்றுக் கொள்வதற்கில்லை. விவசாயிகளைப் பயன்தரும் உழைப்பாளர்கள் எனவும், தொழிற்சாலைத் தொழிலாளர்களைப் பயன்தரா உழைப்பாளர்கள் எனவும் பிரித்துக் கூறும் அளவிற்கு அவர்களிடையே அத்தனை வேறுபாடு இல்லை. பயன்படுத்துவோர் கைக்குப் போய்ச் சேரும் வரையில் ஒரு பொருளின் உற்பத்தி நிறைவுற்றது ஆகாது என்பது ஒரு திறமான பயன்பாட்டு முதுமொழியே. நாம் ரொட்டி வேண்டுமெனக் கேட்கும்போது, உழவன், மாவு மில்காரன், ரொட்டி சுடுவோன், சுட்ட ரொட்டியை எடுத்துச் சென்று விற்பவன் ஆகிய அனைவரும் நமக்காக உழைக்கிறார்கள். உரிய பொருள் உரிய இடத்தில், உரிய நேரத்தில் கிடைக்கவேண்டும். இதற்காகப் பாடுபடும் அனைவரும் பொருளாதார நோக்கில் ஒரே காரியத்தைச் செய்கிறார்கள். விவசாயத்தில்தான் நிகர உற்பத்தி கிடைக்கிறது; மற்றவற்றில் அல்ல என்ற வாதம் பித்தலாட்டமாகும்; அடிப்படையை மறைக்கப் பார்ப்பதாகும். இந்த வாதத்தை எதிர்க்கும் வேலையைத் திருவாளர் ரிகார்டோவுக்கே விட்டுவிடுவோம்.

இந்த இடத்தில் பொருளாதாரப் பட்டியலை விவாதிப்பது பொருத்தமுள்ளதாகும். இது அக் காலத்தில் அதாவது ருவெஸ்னே போன்ற இயற்கை வாதிகள் காலத்தில் மிகப் புகழ் பெற்றிருந்தது. ஆனால், இது இக் காலத்தில் முக்கியத்துவம் இழந்துவிட்டது. புரிந்துகொள்ளும் திறனற்றவர்களுக்கே பொரு

[1] இச் சுருக்கத்தால் உள்ள நிலையை உணர முடியாமலிருப்பவர்கள் 'நினைவுக் குறிப்புகள்' 384–395 பக்கங்களையும், 'கைவினைஞர்கள் கருவிகள்' 256 முதலான பக்கங்களையும் பார்க்கவும். இவற்றில், இந்த அம்சம் இயற்கை வாதிகளால் நயம்பட உரைக்கப்பட்டுள்ளது.

ளாதாரப் பட்டியல் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் இருக்கும் என்று டுபாண்ட் உறுதி அளிக்கிறார் என்றாலும், திகைப்பின்றி வியக்தமாகும் நிலை என்றாகிலும் உண்டாகுமா என்பது சந்தேகமே. இதை விமர்சிப்பவர்கள் மிகக் கவன முடன் நடந்துகொள்ளவேண்டும். ஏனென்றால், தாங்கள் எதைப் பற்றிப் பேசுகிறோம் என்பது அவர்களுக்கே சரியாகத் தெரியாத தொன்றாகும். குவெஸ்னேவின் பொருளாதாரப் பட்டியலை இயற்கைவாதிகள் தலையில் வைத்துக்கொண்டு கூத்தாடு கிறார்கள். இதை அரிய படைப்பாகவே போற்றுகிறார்கள். மூத்த மிராபோ இதை உலக விந்தைப் படைப்புகள் மூன்றினுள் ஒன்றாக வைத்து மதிப்பிட்டுள்ளார். எழுத்து, பணம், பொருளா தாரப் பட்டியல் ஆக இம் மூன்றும் அரிய படைப்புகளாகும். இவற்றைப் படைத்தவர்களை எவ்வளவு புகழ்ந்தாலும் அது மிகை யாகாது. குவெஸ்னேவை மிராபோ வானளாவப் புகழ்கிறார். இவர் படைத்த பொருளாதாரப் பட்டியலால் பிற்காலத்தவர் மிக்க பயனடைவரென மற்றவர்களும் இவருக்குப் புகழ்மாலை சூட்டியுள்ளனர்.

பொருளாதாரப் பட்டியலின் பின்னணியில் உள்ள கருத் துகள் யாவை எனச் சொல்வது சுலபம். இக் கருத்துகளை அப் பட்டியல் எவ்வாறு விளக்குகிறது எனக் கூறுவதே கடினம். முதலாவதாக, டுபாண்ட் கூறுவதுபோலப் பொருளாதாரம் என்பது இதுவரை ஊகிக்கப்பட்ட விஞ்ஞானமாகவே இருந்தது. பொருளாதாரத்தை அசல் விஞ்ஞானமாக்கியது இப் பட்டியலே (இத்தகைய முயற்சியை மேற்கொள்ளலாமென இப்பட்டியலே துணிந்து கூறியது). ஒரு சமுதாயத்தில் இயற்கை வாதிகளின் கொள்கைகளுக்கேற்ப, செல்வம் எவ்வாறு சுற்றிச் சுழல்கிறது என்பதைப் பொருளாதாரப் பட்டியல் சுட்டிக் காட்டுகிறது. சமுதாய ஆரோக்கியத்தின் நாடி பிடித்துப் பார்ப்பதே இதன் நோக்கமாகும். எனவே, இது அரசாங்கத்தின் கையில் ஏற்ற சாதனமாக விளங்கும். நிகர உற்பத்தி என்பது 100 சதவீத இலாபம் என்று கொண்டால், அதாவது 1,000 ரூபாய் விவசாயச் செலவு செய்தால் 2,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். இதில் செலவு ரூ. 1,000 போக, எஞ்சியுள்ள 1,000 ரூபாய் நில உரிமையாளருக்குப் போவதாக வைத்துக்கொள்வோம். இதில் பாதி மீண்டும் உற்பத்தியாளருக்கே போய்ச் சேர்ந்துவிடும். இதனால், மீண்டும் ரூ. 500 மதிப்புள்ள நிகர உற்பத்தி கிடைக்கும். எஞ்சிய 500 ரூபாய் பயனற்ற உழைப்பாளருக்குப் போய்ச் சேரும். இவர்கள் இதில் பாதித் தொகையை உற்பத்தியாளர்க்கு மீண்டும் கொடுத்துவிடுவார்கள். எனவே,

TABLEAU ECONOMIQUE

Objets a considerer. 1º trois sortes de Depenses. 2º leur Source. 3º leurs avances, 4º leur Distribution, 5º leurs Effets, 6º leur Reproduction, 7º leurs Rapports entr'elles, 8º leurs Rapports avec la population, 9º avec l'Agriculture, 10.º avec l'Industrie, 11º avec le Commerce, 12º avec la masse des richesses d'une Nation.

DEPENSES Productives *Relatives a l'Agriculture &c.*	DEPENSES DU REVENU *l'Impot compris se partagent a la Classe productive et a la Classe sterile*	DEPENSES Steriles *Relatives a l'Industrie &c.*
Avances annuelles *pour produire un Revenu de 2000 ℔ sont 2000 ℔*	Revenu *Annuel de*	Avances annuelles *pour les Ouvrages des Depenses steriles sont 1000 ℔*
2000 ℔ produisent net	*2000 ℔*	
Productions		Ouvrages &c.
1000 ℔ reproduisent net	*1000 ℔*	*1000 ℔*
500 reproduisent net	*500*	*500*
250 reproduisent net	*250*	*250*
125 reproduisent net	*125*	*125*
62 10 reproduisent net	*62 10*	*62 10*
31 5 reproduisent net	*31 5*	*31 5*
15 12 6 reproduisent net	*15 12 6*	*15 12 6*
7 16 3 reproduisent net	*7 16 3*	*7 16 3*
3 18 2 reproduisent net	*3 18 2*	*3 18 2*
1 19 1 reproduisent net	*1 19 1*	*1 19 1*
0 19 6 reproduisent net	*0 19 6*	*0 19 6*
0 9 9 reproduisent net	*0 9 9*	*0 9 9*
0 5 reproduisent net	*0 5*	*0 5*
0 2 6 reproduisent net	*0 2 6*	*0 2 6*
0 1 3 reproduisent net	*0 1 3*	*0 1 3*
0 0 8 reproduisent net	*0 0 8*	*0 0 8*
Total 2000 ℔	*Total 2000 ℔*	*Total 2000 ℔*

Il n'est pas necessaire de s'attacher a l'intelligence de ce Tableau avant la lecture des 7 premiers Chapitres, il suffit a chaque chapitre de faire attention a la partie du Tableau qui y a rapport.

Reproduction of the Tableau Economique from the *Elemens de la Philosophie rurale* by the Marquis de Mirabeau

(Reprinted from Oncken's *Geschichte der Nationalokonomie* by the courtesy of the publishers, Messrs. C. L. Hirschfeld.)

எதிலும் உற்பத்தியாளர்களுக்கு ஒரு பங்கு கிடைக்கிறது. ஒவ்வொரு தொகையையும் இரண்டால் வகுத்து, ஒரு பகுதியை உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கிறோம்.

குவெஸ்னே கூறியுள்ள கருத்தின் முடிவில் சமநிலை ஏற்படுகிறது. இவர் கண்ட நாட்டிலே உற்பத்தி அதிகரிப்பதுமில்லை, குறைந்து போவதுமில்லை; ஏற்றமும் இல்லை, இறக்கமும் இல்லை. சமுதாயச் செல்வத்தில் உரிய அளவுக்கு மேற்பட்ட பகுதி பயனற்ற உழைப்பாளர்களுக்குப் போய்ச் சேர்ந்தால், அந்த நாட்டின் நிலை சீர்குலையும். நாட்டிலே வளங்குன்றி வற்கடம் மிகும். பல்வேறு புள்ளிவிவரங்களையும் அனுமானங்களையும் அனுசரித்துப் பொருளாதாரப் பட்டியல் இடத்துக்கு இடம், காலத்துக்குக் காலம் மாறுபடும். ஒவ்வொரு விஷயத்திலும், அதன் தன்மைக்கேற்ப முடிவு வேறு விதமாயிருக்கும். என்றாலும், ஒரு சமுதாயத்தின் விசேஷ நிலைமைகளுக்கு இதைப் பயன்படுத்த முயற்சி எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. இத்தகைய முயற்சி நடைமுறைக் கொவ்வாத வீண் முயற்சி போலும்! பொருளாதாரப் பிரச்சினைகளுக்கெல்லாம் இதன் மூலம் விடை காணலாம் என இயற்கை வாதிகள் கூறியுள்ள போதிலும், அவர்கள் இதை நடைமுறையில் பயன்படுத்தியிருப்பதாகத் தெரியவில்லை.[1] ஒரு சமுதாயத்தில் செல்வச் சுழற்சி இருக்கிறது; அது எப்படிச் சுழல்கிறது என்பதைப் பொறுத்தே அச் சமுதாயத்தில் செல்வம் கூடவோ குறையவோ இருக்கும். இது ஒரே இடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தால், அச் சமுதாயத்தின் செல்வாதாரம் சீர்குலையும் என்ற கருத்துப் பயனுள்ள கற்பனைதான். இதில்தான் பொருளாதாரப் பட்டியலின் முக்கியத்துவம் அடங்கியுள்ளது. இதைத் தவிர வேறு வகையில் அது பயனுள்ளதல்ல. இது பயனற்ற முயற்சிக்கு ஓர் உதாரணமாகவே விளங்குகிறது.

சமுதாயத்தின் பல வகுப்பினரிடையே இருக்கவேண்டிய உறவு நிலையை எடுத்துக்கொண்டோமானால், விவசாயத்துக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பேராதரவு தருவதே இயற்கை வாதிகளின் முக்கிய கொள்கையாகும். விவசாய வேலையைப் பெருமளவில் மேற்கொண்டால்தான் சமுதாயத்துக்கு நலன் விளையும். 'குடியானவர்கள்', 'தானியங்கள்' என்னும் கட்டுரைகளில் இவர் இதையே வலியுறுத்திக் கூறுகிறார். விவசாயத்தைத் தொழில் அடிப்படையில் அமைக்கவேண்டும் என்பதே இவர் நோக்கம். விவசாயத்துக்கு மூலதனம் தேவை

[1] பொருளாதாரப் பட்டியல் ஆராய்ச்சி, பக்கங்கள் 311, 316.

என்பதை இவர் அடிக்கடி வலியுறுத்துகிறார். பணக்காரக் குடியானவனே விவசாயத்தின் ஜீவநாடி. இவர் உழவு வேலை செய்யும் தொழிலாளியல்ல. இவர் விவசாயத் தொழிலதிபராக இருக்கவேண்டும்.[1] எனவே, விவசாயத்தைக் கைவிட்டுத் தொழிற்சாலைத் தொழில்களை ஆதரிப்பதற்கில்லை. விவசாய விளை பொருள்களுக்கு அதிக விலை கிடைப்பதே விவேகமானது. வாழ்வுக்குத் தேவையான உணவுப் பொருள்களின் விலையைக் குறைத்துவிட்டுத் தொழிற்சாலைத் தயாரிப்புப் பொருள்களின் விலையை உயர்த்துவது ஆபத்தானது. இது அறிவுடைமை ஆகாது.[2] விவசாயத்தைப்பற்றி இவர் கூறிய கருத்துகள் இவர் காலத்துக்கே பொருந்தும். நாம் அவற்றை அதிகம் ஆராய வேண்டியதில்லை.

சுதந்திர வாணிபத்தை, கட்டுப்பாடற்ற சுயேச்சை வாணிபத்தை குவெஸ்னே ஆதரிக்கும்போதும், வணிக வாதிகளின் கருத்துகளை, அனுமானங்களை ஆராயும்போதும் ஆடம் ஸ்மித்துக்கு முன்னோடியாகவே குவெஸ்னே திகழ்கிறார். ஒருவர் தமக்குத் தேவையானவற்றைப் பணத்தைக் கொண்டு வாங்கலாம். எனவேதான், பணம் செல்வமாகக் கருதப்படுகிறது. ஆனால், காசு காய்க்கும் மரம் எங்கும் இல்லை. பணம் சும்மா வந்துவிடாது. இதைப் பெறுபவனும் இதற்குரிய ஈடு கொடுக்கவேண்டும். பணத்துக்குப் பதிலாக வேறு பொருள்கள் தரக்கூடிய நிலையில் இருந்தால், நாடுகள் தங்களுக்கு வேண்டிய பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். வாழ்வுக்குத் தேவையான மொத்தப் பொருள்கள், இப் பொருள்களின் ஆண்டு உற்பத்தி ஆகியவற்றின் கூடுதலே ஒரு நாட்டின் செல்வம். இப் பொருள்களில் ஏற்றத் தாழ்வில்லாதிருக்கும்போதும், பண இருப்பு அளவு குறையக்கூடும். ஏனெனில், சுயேச்சை வணிக முள்ள நாட்டிலே, பணத்துக்குப் பதில் வேறு பொருள்களை வைத்துக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது. எனவே, ஒரு நாட்டில் உள்ள பணத்தின் அளவைக் கொண்டு அந் நாட்டின் செல்வத்தை மதிப்பிடுவதற்கில்லை. பணம் என்பது விற்பனைக்கு அல்லது வாங்குவதற்கு உதவும் ஒரு சாதனம் மட்டுமே. அதனால், வேறு பயன் விளையாது.[3] விற்பது என்பதும் வாங்குவது என்பதும் ஒரே வேலையின் இரு அம்சங்களே. வாங்காமல் விற்க

[1] தானியங்கள், பக்கம் 219.

[2] அரசாங்கப் பொருளாதாரக் கொள்கைகள் (தெ 9); தானியங்கள் என்ற கருத்துரையுடன் இணைக்கப்பட்டுள்ளது (பக்கம் 327); 'குடியானவர்கள்' என்ற கட்டுரையையும் பார்க்கவும் (பக்கம் 180).

[3] ஆராய்ச்சியில் ஏழாவது முடிவைக் குறிப்பாகக் காண்க (பக்கம் 324); பொதுக் கொள்கைகள், பதின்மூன்றாவது கொள்கைக் குறிப்பைக் காண்க (பக்கங்கள் 347-348).

முடியாது ; விற்காமல் வாங்க முடியாது. ஒருவன் வாங்குகிறான் என்றால் மற்றொருவன் விற்கிறான் என்பதுதானே பொருள். எனவே, வணிகவாதிகளின் மையக் கொள்கை, ஒரு நாடு வாங்குவதைக் காட்டிலும் மிக அதிகம் விற்கவேண்டும் என்ற கொள்கை பொய்த்துப் போகிறது. இக் கொள்கை அர்த்தமற்றதாகிவிடுகிறது. நாம் வாங்குவதைக் காட்டிலும் விற்பது அதிகமிருக்க வேண்டும் என்று கூறுவது அபத்தமானது. இப்படிச் சொல்வதைவிட நம் பொருள்களைக்கொண்டு பணத்தை வாங்க விரும்புகிறோம்[1] எனச் சொல்வது பொருத்தமாக இருக்கும். வாங்குவதைவிட அதிகம் விற்பது என்பது முடிவடையா வணிகமே.[2] ஆரம்ப நிலையிலுள்ள வணிகமே அது. உலோகம் நீடித்து நிற்கும் வாதம் பின் கூறியுள்ளதால் பொய்த்துப் போகிறது இவ்வாறு வாதிப்பது சரியென்றால் (அழியாத்தன்மை, அதாவது நீடித்து நிற்கும் தன்மை வாய்ந்த), உலோகம் எவ்வளவு கொஞ்சமாக இருந்த போதிலும், அது (அழியும் தன்மை வாய்ந்த) ஏராளமான உலோகங்களைவிட மதிப்பு அதிகமுள்ளது எனக் கூறுவதை ஒக்கும்.[3] எனவே, சாதக வணிக நிலைக் கொள்கையால் பயனேதுமில்லை. அது ஒன்றுக்கும் உதவாத ஒன்று என்றாகிவிடுகிறது[4] வணிகம் என்பது எதிரிக்கு எதிராக மேற்கொள்ளும் போர் நிலை எனக் கருத முடியாது. எனவே, கட்டுப்பாடற்ற சுதந்திர வணிகம் நடைபெறுமாறு நாம் விட்டுவிடவேண்டும். வணிகத்தில் கடுமையான போட்டி இருந்தால்தான், விற்பவனுக்கு அதிக விலையும் கிடைக்கும்.[5] மற்ற நாடுகளுக்குப் பிரதிகூலமாக வணிகம் நடத்த முடியாது. நீதி தேவனை கடவுள் 'வாணிபம் நாடுகளிடையே நல்ல முறையில், பரஸ்பர அனுகூல முறையில் நடைபெறவேண்டுமென'[6] விதித்துள்ளார். இவையெல்லாம் ஆடம் ஸ்மித்தின் நான்காவது புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட கருத்துகளோ எனத் தோன்றும். அந்த அளவுக்கு குவெஸ்னே, ஆடம் ஸ்மித்தின் முன்னோடியாக விளங்குகிறார்.

என்றாலும், வெளிநாட்டு வணிகத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதில்தான் இயற்கை வாதிகளின் சுயேச்சை வணிகக் கொள்கை அடங்கியிருப்பதாகக் கருதுவதும் தவறாகவே முடியும். இயற்கை வாதிகளின் கருத்தில் வெளிநாட்டு வணிகமும் மற்ற வணிகத்தைப் போலவே பயனற்றதே. நாம் வெளிநாட்டானுக்கு

[1] வணிகம், பக்கங்கள் 478, 479.
[2] அதே ஏடு, பக்கம் 478.
[3] அதே ஏடு, பக்கம் 479.
[4] அதே ஏடு, பக்கம் 482.
[5] அதே ஏடு, பக்கம் 477.
[6] அதே ஏடு, பக்கம் 484.

எந்த அளவு பொருள்களை விற்பனை செய்கிறோமோ அந்த அளவு மட்டுமே அவனிடமிருந்து நாம் வாங்க முடியுமென குவெஸ்னே திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறார். எனவே, சுயேச்சையான வெளிநாட்டு வணிகம் நடைபெறும் நாட்டில் இதனால் இலாபமு மில்லை, நஷ்டமுமில்லை.

அவ் வணிகம் சம மதிப்புள்ள பொருள்களை மாற்றிக்கொள்வ தாகவே முடியும்.[1] விவசாயமும் தொழில்களும் இணைந்து வாழும் நாட்டில் தொழில்களுக்காகும் செலவு அவசியமென் றாலும், அது விவசாயிகள் மீது சுமையேற்றும் செலவுதான். இதற்கு வேண்டிய பணத்தை நிலக்கிழார்களே தரவேண்டி வரும்.[2] எனவே, வெளிநாட்டு வணிகம் என்பது பெரும் சுமையே தவிரப் பெருத்த இலாபம் தருவதல்ல. வெளிநாட்டு வணிகத்தின் முக்கியத்துவத்தை இழித்துக் கூறுவது இயற்கைவாதிகளின் சித்தாந்தம். அவர்களுடைய கருத்துப்படி, உள்நாட்டு வணி கத்தை வைத்தே ஒரு நாட்டின் செல்வத்தை மதிப்பிட வேண்டும். ஒரு நாடு, தன்னிடமுள்ள மண் வளத்தையும் ஆள் பலத்தையும் நல்ல வகையில் பயன்படுத்துமேயானால், அந்த நாடு அண்டை அயலிலுள்ள வணிக நாடுகள் மீது பொருமைப்பட வேண்டிய அவசியமே இருக்காது.[3] சுயேச்சை வணிகத்தை ஆதரிக்கும் முதல் நவீனப் பொருளாதாரவாதிகள், தத்துவார்த் தம், மதம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அதை ஆதரித் தனர்; வெளிநாட்டு வணிகத்தால் அனுகூலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையால் அல்ல என்பது விசித்திரமாக இருக்கிறது.

விவசாயமே பயன் தரும் தொழில்; நாட்டு வருமானத்துக் குள்ள ஒரே ஆதாரம் விவசாயமே என்று குவெஸ்னே கருதுவ தால், வரி விதிப்புத் துறையில் சில முக்கிய முடிவுகள் பெறப்படு கின்றன. வரி விதிப்பும், பல சட்டங்களுக்கும் விதிகளுக்கும் மாற்றவொண்ணாப் பல நியதிகளுக்கும் உட்பட்டதே. இதை நிதரிசனமாக விளக்கிக்காட்ட முடியும்.[4] குவெஸ்னே கூறும் இரண்டு அடிப்படை அமிசங்களை மட்டும் இங்குக் கவனிப்போம். முதலாவதாக, ஒரு நாடு கடன் வாங்கக்கூடாது. இது நல்ல அறிவுரையே. நாடாளும் நல்லறிஞர்கள் நெருக்கடியான காலங் களிலே நிதி திரட்டவேண்டுமானால், உள்நாட்டுச் செல்வாதாரங் களிலிருந்து வேண்டிய நிதியைத் திரட்டவேண்டும்; வெளி நாடுகளிலிருந்தும் கடன் கொடுப்போர்களிடமிருந்தும் கடன்

[1] Analyse, பக்கம் 321.
[2] அதே ஏடு, பக்கம் 321.
[3] Grains 12, 13, பக்கம் 239.
[4] Despotisme de la Chine, அதிகாரம் 8, பிரிவு 7, பக்கம் 645.

வாங்கக்கூடாது. பணம் கொடுப்பது ஒரு வியாபாரமாக ஆகி விடுகிறது என்பது கடன் வாங்குவதற்குள்ள ஆட்சேபனை. விவசாயிகளிடமுள்ள பணத்தை வசூலித்துவிடுவதால், அப் பணம் பயனற்ற செல்வமாகிவிடுகிறது. இப்போது, பொருளா தாரப் பட்டியலைப் பார்த்தோமானால், இத்தகைய நடவடிக் கையால் இப் பணம் பயன்தரா வகுப்பினருக்குப் போய்ச் சேரு வதைக் காட்டிலும், மேலும் இத்தகைய செல்வம் எந்த நாட் டையும், எந்த அரசனையும் மதிக்காது. அதன் அதிகார எல்லை வரையறை அற்றுப்போகும். இதையே நவீன வகையில் கூறுவ தானால், கடன் கொடுக்கும் கூட்டம் சர்வதேச அடிப்படையில் கடன் கொடுக்கும் நிலை ஏற்படும்.[1]

இரண்டாவது அமிசம் இன்னும் அடிப்படையானது. நாட்டுச் செல்வத்துக்குள்ள ஒரே ஆதாரம் விவசாயம். எனவே, எல்லா வரி விதிப்பும் விவசாயத்தின்மீதே இருக்கவேண்டும். எனவே, குவெஸ்னே ஒரு முனை நேரடி வரி விதிப்பை ஆதரவாள ராகத் திகழ்கிறார். நிகர உற்பத்தியின்மீதுதானே வரி விதிக்க முடியும்? இயற்கை வாதிகளின் அடிப்படை அனுமானங்களை ஏற்றுக்கொண்டுவிட்டால், இந்த வாதம் நியாயமானதாக இருக்கும். எப்படி வரிவிதித்தாலும், அது முடிவில், தண்ணீர் பள்ளத்தை நோக்கி விழுவதைப்போல நிகர உற்பத்தி மீதே வந்து விழும். எனவே, பல வகைகளில் பலருக்கும் வரி விதிப் பதைவிட உண்மையான தேசீய வருமானத்தில் ஒரு பகுதியை, அதாவது, விவசாயத்தின் நிகர உற்பத்தியில் ஒரு பகுதியை அரசாங்கம் நேரடியாக எடுத்துக்கொள்வதே நல்ல வழி. வேறெந்த வகையில் வரி விதித்தாலும் தாம் தப்பித்துக் கொள்ள முடியும் என நிலக்கிழார் நினைக்கக்கூடும். இவ்வாறு நினைப்பது தவறே. எங்கு, யார்மீது வரி விதித்தாலும் அதிகரித்த வரி விதிப்பு முடிவில் நிலக்கிழார் மீதே விழும். வரியின் கூடுதல் சுமையை அவரே தாங்கவேண்டிவரும். இவ்வாறு, குவெஸ்னே தாம் எழுதியுள்ள இரண்டாவது பொருளாதாரப் பிரச்சினையில் (தமக்குத் திருப்தி ஏற்படும் வகையில்) நிரூபித்துள்ளார். 'கூலியும், அதன் காரணமாகக் கூலி பெறுபவர்கள் அனுபவிக்கக் கூடியவைகளும், அவர்களுக்கிடையேயுள்ள போட்டி காரண மாகக் குறைந்த அளவிலேயே நிச்சயிக்கப்படுகின்றன.'[2] வரி விதிப்புக் கொள்கையை ஆராய்கையில் குவெஸ்னே இவ்வாறு கூறி இருப்பது, பின்னர் வந்த உறுதிக் கூலி நியதியில் காணப் படும் கருத்தைப் பெரிதும் ஒத்துள்ளது.

[1] பொதுக் கொள்கைகள், 28, 29, 30, பக்கம் 337.
[2] இரண்டாவது பொருளாதாரப் பிரச்சினை, பக்கம் 706.

துர்கோ

மற்ற இயற்கை வாதிகளிலே நாம் குறிப்பிடத்தக்கவர் ஆன்-ராபர்ட்-ஜாக்விஸ் துர்கோ'[1] (1727—1781) ஆவார். சில கருத்துகளில் இயற்கை வாதிகளிடையே இவர் தனித் தன்மை உடையவராகத் திகழ்கிறார். இவருடைய பெயரின் மங்காப் புகழ், இயற்கை வாதத்துக்கே ஏற்றம் தேடித் தந்துள்ளது. இவர் ஒருசில காலம் அரசாங்கத்தில் உயர் பதவி வகித்ததால், இயற்கை வாதக் கருத்துகளை நடைமுறையில் நிறைவேற்றிப் பார்க்க இவருக்கு வாய்ப்பு ஏற்பட்டது. இவருடைய வாழ்க்கையைப்பற்றியும் இவருடைய சாதனைகளைப்பற்றியும் விவரித்து உரைக்க ஏற்ற இடம் இதுவல்ல. அரசாங்க நிதித் துறையில் இவர் பெரும் பதவி வகித்த காலத்தில் இவர் கொண்டு வந்த சீர்திருத்தங்கள் அனைத்தும் இவர் பதவியிலிருந்து இறங்கியதும் எடுபட்டுப் போயின. இவருடைய வாழ்நாளிலேயே இவருடைய சீர்திருத்தங்கள் ஒப்புக்கொள்ளப்படவில்லை. என்றாலும் ஃபிரெஞ்சுப் புரட்சியில் இவர் கருத்துகளே ஏற்றம் பெற்றன. பத்தொன்பதாவது நூற்றாண்டினையே இவர் கருத்துகள் ஆட்டிப் படைத்தன.

துர்கோவின் கொள்கைகள் இரண்டு புத்தகங்களில் விளக்கப் பட்டுள்ளன. 'கூர்னே புகழ்மாலை', 'செல்வம் சேர்த்தல்-பங்கிடுதல்பற்றிய சிந்தனைகள்' ஆகியவையே இப் புத்தகங்கள். அரசாங்கத்திலே உயர் பதவி வகித்த காரணத்தால், அரசாங்க அறிக்கைகளிலும் தஸ்தாவேஜுகளிலும் தம்முடைய பொருளாதாரக் கொள்கைகளைப் புகுத்திவந்தார். கூர்னே ஆரம்ப இயற்கை வாதிகளில் ஒருவர். துர்கோவிடம் இவருக்கே குவெஸ்னேவைவிட செல்வாக்கு மிகுதி. கூர்னே கருத்தை விளக்குவதாகச் சொல்லிக்கொண்டு, துர்கோ தம் கருத்துகளை மக்களிடம் பரப்பிவந்தார். இப் புகழ்மாலை உண்மையில் அரசாங்கத் தலையிடாக் கொள்கையின் விளக்கமே. அரசாங்கக் கட்டுப்பாடுகளாலும் குறுக்கீடுகளாலும் நகரங்கள் ஒன்றையொன்று எதிரிகளாகக் கருதின. எனவே, இக் கொள்கை கோதிக் (Gothic) காட்டுமிராண்டித்தனத்தின் எஞ்சிய தீய விளைவேயாகும். கூர்னேயின் முக்கியக் கருத்தாவது: 'பொதுவாகச்

[1] பாரிஸில் (Paris) 1727-ல் பிறந்தார். 1749-ல் ஸர்பான் மடத் தலைவராளார்; மதத் துறை வாழ்வை விட்டுவிட்டுக் குற்ற இயல் நீதிபதியானார். லிமோஜிஸில் மேற் பார்வையாளராகப் பணியாற்றினார். பதினாறாம் லூயி, 1774-ல் இவரை பாரிசுக்கு அழைத்து வந்து நாவாய்த் துறை அமைச்சராக்கினார். பின்னர், நிதி அமைச்சராளார். இவருடைய சீர்திருத்தங்களுக்கு மிகுந்த எதிர்ப்புக் கிளம்பியதால் இவர் 1776-ல் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

சொல்லப்போனால், ஒவ்வொருவரும் அவரவர் நலத்தில் அக்கறையுள்ளவர்களாயிருப்பர்; ஒருவருடைய நலத்தில் மற்றவருக்கு அக்கறை இருப்பதற்கில்லை, அசட்டைதான் இருக்க முடியும்.' அரசாங்கத்துக்கு வணிகத்தில் இரு வகைப் பற்றுகள் உண்டு. (1) எளியாரை வலியார் வாட்டாது பார்த்துக்கொள்ள வேண்டும். தன்னைக் காத்துக்கொள்ள முடியாதவர்களுக்கு மற்றவர்கள் தீங்கிழைக்காது பார்த்துக்கொள்ளவேண்டும். (2) நாட்டின் செல்வம் பெருகுவதில் அரசாங்கத்துக்கு அக்கறையுண்டு. முதல் கருத்தில் பெறப்படுவது என்னவெனில், வாங்குபவன் பொருளை வாங்குவதற்கும், விற்பவன் பொருளை விற்பதற்கும் உள்ள இயல்பான உரிமையை அரசாங்கம் கட்டிக் காக்க வேண்டும். இந்த உரிமை தவருகப் பயன்படுத்தப்படாமலிருக்கும்படி பார்த்துக்கொள்வதற்குப் பொருள்களை வாங்குபவர்களிடமும் விற்பவர்களிடமும் உள்ள போட்டியே போதுமானது. இவ்வகையில் முழுச் சுதந்திரம் இருந்தால்தான் விற்பவன் தனக்குக் கட்டுப்படியாகும் விலைக்குப் பொருள்களை விற்கமுடியும். அதேபோல் வாங்குபவன் தனக்கு வேண்டிய சிறந்த பொருள்களைக் குறைந்த விலைக்குப் பெற முடியும். இந்த அளவிற்குமேல் அரசாங்கத் தலையீடு கூடாது. எவரும் ஏமாற்றப்படுவதனின்று தடுக்கப்படவேண்டும். அதற்கு ஆவன செய்யவேண்டுமென அரசாங்கம் முன்வருவது சரியல்ல. நடக்கும் குழந்தைகள் விழுந்துவிட்டால் என்ன செய்வது என அவர்களுக்குப் பாதுகாப்பு உறைகள் கொடுப்பதைப் போன்ற செயல்தான் இதுவும். ஏமாருது இருப்பது எப்படி என்பதை ஒருசில சோம்பேறிகளுக்குக் கற்றுக் கொடுப்பதற்காகச் சமுதாயம் முழுவதற்கும் வரி போட முடியுமா? ஏதோ ஒருசில குழந்தைகள் விழுந்துவிடலாம் என்பதற்காக, எல்லாக் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு உறை ஏன் கொடுக்க வேண்டும்?

இரண்டாவது கருத்தை ஆராய்ந்தாலும், இதே முடிவுக்குத்தான் வருவோம். ஆடம் ஸ்மித் கருத்துப்படி, ஒரு நாட்டின் செல்வம் எனப்படுவது பூமியின் விளையுளும் குடிமக்களின் உழைப்பும்தான். ஒவ்வொரு நிலத்திலிருந்தும் முடிந்தவரை உற்பத்தியைப் பெருக்கி, ஒவ்வொருவரும் முடிந்த அளவு உழைத்தால் இச் செல்வம் மிக அதிகமாக இருக்கும். தன்னிடமுள்ள செல்வாதாரத்தை எம் முறையில் பயன் படுத்துவது என்பதற்கு அவனவனே சிறந்த நீதிபதி; இது அனைவரும் ஒப்பிய முடிவு, தனிமனிதனுக்குத்தான் அந்த நெளிவு சுளிவும், நீக்குப்போக்கும். குறையும் குணமும், வசதியும் வனப்பும் தெரியும். எனவே, ஓர் அளவிற்கு மேல் அரசாங்கத் தலையீடின்றி, அவனவன் காரியத்

தைப் பார்க்கும்படி விட்டுவிட்டால், 'ஒவ்வொருவரும் தன் னலத்தைப் பேணி வளர்க்கப் பொதுநலம் தானே பெருகும். அரசாங்க முயற்சியைவிடத் தனியார் முயற்சியே இந்தத் துறையில் நல்ல பயன் விளைக்கும். அரசாங்கம் எப்பொழுதும் தவற்றையே செய்யும். புரியாத குழப்பக் கொள்கையின் அடிப் படையிலேயே அரசாங்கம் பணியாற்றும்.'

இதுவே அரசாங்கத் தலையிடாக் கொள்கை. இது இங்கு உறுதியுடனும் விடாப்பிடியாகவும் கூறப்பட்டுள்ளது. பிறர் நலம் பேணும் தன்னலத்தின் அடிப்படைச் சூத்திரத்தில் 'பொதுவாக' எனக் கூறப்பட்டிருந்த போதிலும், இதில் பின்வாங்கிச் செல்வ தற்கு இடம் எதுவும் இல்லை. மற்றப்படி கூர்னே புகழ் மாலையில் நமக்குத் தெரிந்த இயற்கைவாதக் கருத்துகளே இடம் பெற் றுள்ளன. விவசாயமே எல்லாவகை வருமானத்துக்கும் ஆதாரம். எல்லா வரியையும் நில உரிமையாளரே கொடுக்கின்றார். துர்கோ பின்னர் தாம் வெளியிட்ட கட்டளைகளில் 'கூர்னே கண்டித்த சமுதாய அமைப்புச் செல்வர்களையும் சமுதாயச் சோம்பேறி களையும் ஊட்டி வளர்ப்பதாகவும் ஏழைகளையும் பாட்டாளி களையும் வாட்டிவதைப்பதாகவும் இருந்தது' எனக் கூறுகிறார்.

இவர் எழுதிய 'சிந்தனைகள்' என்ற சிறு நூல் நூறு சிறு பத்திகள் கொண்டதாகும். இயற்கைவாதியின் பொருளாதாரக் கொள்கை விளக்கத்தை இந் நூல் சுருக்கித் தருவதாகக்கொள்ள லாம். இச் சிறு நூல் இரு சீன மாணவர்களுக்கு எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. இயற்கைவாதக் கொள்கையில் ஏற்க முடியாத பகுதிகள் இச் சிறு நூலில் கொள்கை வெறியுடனும் திறமை யுடனும் விளக்கப்பட்டுள்ளன. இங்கு விவசாயத்துக்கு முதலிடம் தரப்படுகிறது. மற்றத் தொழில்களில் ஈடுபடும் தொழிலாளி விவசாயிக்குக் கீழ்ப்பட்ட நிலையிலேயே இருக்கிறார். தொழிற் சாலைத் தொழிலாளி தன் முதலாளிக்கு அடங்கி நடக்க வேண்டிய வனாக இருக்கின்றான். இத் தொழிலாளி இல்லாவிட்டால், அந்த முதலாளிக்கு வேறு எத்தனையோ தொழிலாளிகள் கிடைப்பார்கள். ஆனால், ஏழைத் தொழிலாளியின் நிலை அப்படியில்லை. வேலை போய்விட்டால் தொழிலாளி தெருவில் நின்று தவிக்க வேண் டியதுதான்.[1] இதற்கு மாறாக, நிலத்தை நம்பி வாழும் விவசாயி களை எடுத்துக்கொண்டால், அவர்களுடைய நிலை ஏற்றம் நிறைந்ததாக இருக்கிறது. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாந் தொழுதுண்டு பின்செல்பவர் அல்லவா? நிலம்

[1]. துர்கோ இவ்வாறு எழுதியிருப்பதை அனைவரும் மேற்கோள் காட்டுகின்றனர். 'சிந்தனைகள்' பிரிவு 6.

என்னும் மங்கைநல்லாள் விவசாயியிடம் பேரம் பேசுவதில்லை. இறைக்க இறைக்க சுரக்கும் கிணறுபோல், தன்னிடம் அதிக வேலை செய்வோருக்கு அதிகப் பயன் வாரி வழங்க நிலமடந்தை தவறுவதில்லை. எனவே, உள்ளதைக் கொண்டு-கிடைத்ததைக் கொண்டு திருப்திப் படவேண்டிய நிலை விவசாயிக்கு இல்லை. அவன் உழைக்க, உழைக்க ஊதியம் பெருகும்.[1] விவசாயிக்குத் தன் தேவைக்கு மேற்பட்டும் உழைப்பின் ஊதியம் கிடைக்கிறது. இவன், இதை விலை கொடுத்து வாங்காது விற்கிறான். எனவே, நிலமே செல்வத்திற்குச் சிறந்த ஆதாரம். ஈட்டிய மூலதனத்தை விட நிலமடந்தை நல்தம் இலாபமே நிகர உற்பத்தி. இதை எல்லா விவசாயிகளும் ஒருமனமாக ஒப்புக்கொள்வர் எனச் சொல்வதற்கில்லை. 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மீறாது' என்பது முதுமொழியன்றே? இவருடைய சிந்தனைகளில் நாம் அடுத்ததாக வட்டியை எடுத்துக் கொள்வோம். வட்டிக்குத் தடை எதையும் விதிக்கக் கூடாதென துர்கோ ஆணித்தரமாக வாதிடுகிறார். இரு கட்சிகளுக்கும் பயன் கிடைத்துள்ளதால், வர்த்தக நிலையை ஒட்டியே வட்டியை நிச்சயிக்க வேண்டும்.[2] இதை மற்ற இடங்களிலும் துர்கோ கூறியுள்ளார். அரசாங்கத் தலையிடாக்கொள்கை இங்குச் சிறந்து விளங்குகிறது.

துர்கோ பிறப்பித்த சில அரசாங்கக் கட்டளைகளின் பொருளாதார முக்கியத்துவத்தை இப்போது எடுத்துக் கொள்வோம். வேலை வரையறை நீக்கத்தை துர்கோவின் சீர்திருத்த மனப்பான்மைக்கு அவருடைய ஆர்வத்துக்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலேயே இவர் இக் கட்டளையைப் பிறப்பித்துள்ளார். இந்த வேலை இன்னருக்கு என்றிருந்த ஏகபோக உரிமையைக் கிள்ளிக் களைந்ததே இவருடைய இக் கட்டளையின் தனிச் சிறப்பு. இதனால், எவரும் எத் தொழிலும் செய்யலாம் என்ற உரிமை ஏற்பட்டது. பரம்பரை உரிமைக்குச் சாவுமணி அடித்தார் துர்கோ. ஏகபோக உரிமையை எடுத்தெறிந்துவிட்டு, தொழில் உரிமையை இவர் நிலைநாட்டினார். இந்த உரிமையையே இவர் எல்லாவற்றிற்கும் அடிப்படையான உரிமையாகக் கருதுகிறார்.

வணிகத்துக்கும் தொழிலுக்கும் கடும் போட்டி உரிமையையும் பரிபூரண சுதந்திரத்தையும் வழங்குவதே இதன் நோக்கம். கட்டளையின் பதினான்காவது அமிசத்தில், எவரும் எக் காரணம் பற்றியும் எவ்வகைச் சங்கத்தையும் அமைக்கக் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது. பரிபூரண சுதந்திரத்தை நிலை

[1]. அதே ஏடு, பிரிவு-7 [2]. அதே ஏடு, 71-75,

நிறுத்த வேண்டுமானால், வர்க்க பேத அடிப்படையில் சங்கங்கள் ஏற்படுவதற்குத் தடை விதிக்க வேண்டும். ஆனால், பத்தொன்பதாவது, இருபதாவது நூற்றாண்டுகளின் சச்சரவுகளில் தூர்கோவைச் சிக்கவைப்பது நியாயமல்ல. தாம் இப்போது இல்லாத காரணத்தை அவர் பெரும் காரணமாகக் காட்ட முடியும்.

தமக்கு முன் வாழ்ந்த பொருளாதார வல்லுநர்களைப்பற்றி ஆடம் ஸ்மித் கூறியுள்ளதாவது:

'அரசியல் பொருளாதாரம்பற்றி இதுவரை எழுதப்பட்டவற்றுள் இந்த அமைப்பே உண்மைக்கு வெகு அருகில் இருக்கிறது. இதில் குறைபாடுகள் பல இருந்த போதிலும், இதைவிடச் சிறந்த அமைப்பு இதுவரை கூறப்படவில்லை. இயற்கை வாதிகளின் சாதனைகள் மகத்தானவை. இந்நாளில், அரசாங்கத் தலையிடாக் கொள்கைக்கு அதிக ஆதரவில்லை. என்றாலும், வணிகவாதிகளின் கொள்கைகளுக்கு ஏற்பட்ட எதிர்ப்பின் விளைவாக, இயற்கை வாதமும் அரசாங்கத் தலையிடாக் கொள்கையும் குறிப்பிட வேண்டியவையே. இயற்கைவாதிகள் வீர சுதந்திரம் வேண்டிய வீரதீரர்களாகத் திகழ்ந்துள்ளனர். ஆடம் ஸ்மித் கொள்கையின் உண்மைகளை இவர்களே நியாய வாத அடிப்படையில் விளக்கிக் கூறியுள்ளனர். இதுவே அவர்களுக்கு மறையா நிலைவுச் சின்னம். அவர்களுடைய குறைபாடுகள் நமக்குத் தெரிந்தவையே. அவற்றை அக்கு வேறு ஆணி வேராக அலசி ஆராய வேண்டியதில்லை. அவர்கள் வாழ்ந்த காலத்தை அனுசரித்துப் பார்த்தால், விவசாயத்துக்குப் பெரு முக்கியத்துவம் அவர்கள் அளித்தது சரியே. பண்புவாத அடிப்படையில் தத்துவங்களைப் போட்டுக் குழப்பி, விவசாயத்தின் மேன்மையை நிலைநிறுத்த முயன்றதே அவர்கள் செய்த தவறு. பயன்தரு உழைப்பு, பயன்தரா உழைப்பு எனப் பாகுபாடு செய்ததும் தவறே. நிகர உற்பத்திக் கொள்கை கிறுக்குத் தனமாக இருக்கிறது. தனி வரிக் கொள்கை வாதத்துக்காகக் கூறப்பட்டதாகவே கொள்ளவேண்டும். வருமானப் பெருக்கத்துக்கேற்ற வழிவகையாக இதைக் கொள்வதற்கில்லை. இந்த அனுமானங்களும் பொருளாதாரப் பட்டியலும் இயற்கை வாதிகளுக்கு விருப்பமான விஷயங்களாக இருந்தன. தேர்வுத் தாள் குறிப்பவர்களுக்கும் இவை வரப்பிரசாதமாக இருந்தன. இயற்கை வாதிகள் ஆடம் ஸ்மித்துக்கு முன்னோடிகளாக விளங்கினர் என்பதே அடிப்படையான விஷயம். ஆடம் ஸ்மித்தை ஏற்றிப் போற்றுவோரும் நவீனப் பொருளாதாரக் கருத்துகளை இயற்கைவாதிகளே முதன்முதல் வெளியிட்டனர் என்பதைக் கண்டு தயக்கம் கொள்ள வேண்டியதில்லை.

5. ஆடம் ஸ்மித்

ஹியூம்

ஆடம் ஸ்மித்தை ஆராயத் தொடங்குமுன் டேவிட் ஹியூம் (David Hume)[1] பற்றி ஓரளவு ஆய்வது நன்று. இவர் பற்பல துறைகளிலும் புகழ்பெற்றவர். இதனுல்தானே என்னவோ பொருளாதாரத் துறையில் இவர் பெயர் சிறப்புறவில்லே. இவர் தலேசிறந்த தத்துவமேதையாக இருந்தமையால் பொருளாதார மேதை என்ற புகழும் பெயரும் பெறவில்லே. இவரது பொருளாதாரக் கருத்துகளேப் படிப்பின் இயற்கைவாதிகளேப் (பிசியோகிரட்கள்) போலவே இவரும் ஆடம் ஸ்மித்திற்கு ஓரளவு முன்னேடியாகத் திகழ்கிருர் என்பது விளங்கும். எந்தப் பொருளாதாரக் கருத்தினேயும் இவர் விரிவாக ஆராயாத காரணத்தால் பொருளாதாரத் துறையில் இவருக்குப் பெரும் பெயர் கிடைக்கவில்லே. இவர் பதினெட்டாம் நூற்ருண்டின் சான்ருேர் போலவும், நூலாசிரியர் போன்றும் பல கருத்துகளேப் பெரும் போக்கில் தம் அறிவும், சால்பும், பெருந்தன்மையும் விளங்க எழுதியுள்ளார். இவற்றில் ஒருசில பொருளாதாரத்தன்மை வாய்ந்தவையே. வணிகம், பணம், வணிகநிலே, வணிகப் பொருமை பற்றிய கட்டுரைகளில் (Essays of Commerce, Of Money, Of the Ba'ance of Trade, Of the Jealousy of Trade) ஹியூமும் ஆடம் ஸ்மித்தைப் போலவே வணிகவாதக் (மெர்க்கன்டலிசக்) கொள்கைகளேக் கண்டித்துள்ளார்.

[1] 1711-ல் எடின்பர்க்கில் (Edinburgh) பிறந்தார்; இவர் மாணவராயிருக்கும்போதே அக்காலத்து வழக்கப்படி ஆசிரியராக ஐரோப்பிய நாடுகளுக்கு அடிக்கடிப் போய்வந்தார். பின்னர் (1735) எடின்பர்க் வழக்கறிஞர் சங்க நூல் நிலேய அலுவலாளராகப் பணியாற்றினர்.

'ஒரு நாட்டின் பொருளாதாரத்துக்குப் பொன்னும், வெள்ளியும் இரு கண்கள்' என்ற வணிகவாதிகள் கூற்றினைப் பொய்ப்பிப்பதே இவருடைய நோக்கம். எந்த நாட்டினை எடுத்துக் கொண்டோமானாலும், 'பணம் அதிகமாகவோ குறைவாகவோ இருப்பதால், எதுவும் பெருமளவு பாதிக்கப்பட்டு விடாது.' உழைப்பையும் பொருள்களையும் மதிப்பிடுவதற்குப் பணமே ஏற்ற சாதனமாக விளங்குகிறது. ஒரு நாட்டில் பணம் மிதமிஞ்சி இருந்தால், அதே அளவுள்ள பொருள்களை மதிப்பிட அதிகப் பணம் தேவைப்படும். இந்த மாறுதல் குறியீட்டு முறையை மாற்றிக்கொள்வதால் ஏற்படும் மாறுதலைப் போன்றதே. பணம் பெறுவதற்கும் விலைவாசி ஏறுவதற்கும் உள்ள இடைக்காலத்தில் மட்டுமே பொன், வெள்ளி அதிக அளவில் கிடைப்பது தொழிலுக்குச் சாதகமாக இருக்கும். வளத்திற்குரிய மூல காரணத்தை வேறிடத்தில்தான் தேடவேண்டும். 'ஒரு நாட்டில் பணம் பற்றுக்குறையாக இருப்பதாலேயே, உள் நாட்டில் கெடுதல் ஒன்றும் ஏற்பட்டுவிடாது; ஒரு நாட்டின் மக்களும் பொருள்களும் அந்த நாட்டின் வலிமைக்கு அடிப்படை ஆதாரம்.'

'சாதக வணிக நிலை' (மெர்க்கன்டலிசம்) பற்றிய கட்டுரையில், இதே கருத்துகள் வணிகவாத சமநிலைக் கொள்கைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு நாட்டுக்குப் பொன்னும் வெள்ளியும் கிடைக்காது போய்விடும் என்பது ஆதாரமற்ற அச்சமாகும். 'ஒரு நாட்டிலே மக்களும் தொழிலும் வளமாக இருக்கும்போது அந்த நாட்டிலே பணம் இல்லாது போய்விடும் என்பது அந்த நாட்டு நீர்நிலைகளும், நதிகளும், ஊற்றுக்களும் வற்றிப்போய் விடும் என்று கூறுவதை ஒக்கும்.' ஒரு நாட்டில் தொழில்வளம் மிகுந்திருந்தால், அந்த நாட்டு மக்களுக்கு வேண்டிய பணம் கிடைக்கும். நேர்மாறான இரு அனுமானங்களைக் கொண்டு டேவிட் ஹியூம் இக் கொள்கையை நிரூபித்துக் காட்டுகிறார். ஒரு நாட்டிலே உள்ள பணத்தில் ஐந்தில் நான்கு பகுதி ஒரே இரவில் அழிக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். இதனால் ஏற்படும் விளைவென்ன ? உழைப்பாளர் கூலியும் விலைவாசிகளும் உடனடியாக சமநிலை கால நிலைக்கு இறங்கிவிடும். அந்த நிலையில் இந்த நாட்டுடன் வெளிநாட்டுச் சந்தையில் எந்த நாடு போட்டியிட முடியும் ? குறைந்த விலையில் நிறைந்த பொருள்கள் கிடைப்பதால் அந்த நாட்டு ஏற்றுமதி அதிகரிக்கும்; ஏற்றுமதி அதிகரித்தால் அந்த நாட்டுக்குப் பொன்னும் வெள்ளியும் வந்து குவியும். எனவே, அந்த நாடு தான் இழந்த பணத்தைச் சிறிது காலத்திலேயே திரும்பப் பெற்றுவிடும். அதன் பின், அந்த நாட்டு விலைவாசிகளும் அண்டை அயல் நாடுகளில் இருக்கும் அளவும்

உயர்ந்துவிடும். அப்போது இந்த நாட்டில் குறைந்த கூலிக்குத் தொழிலாளர் கிடைக்கும் நிலையும், மலிவு விலையில் பொருள்கள் கிடைக்கும் நிலையும் மறைந்துபோகும்.

இதற்கு மாருன அனுமானத்தை இப்போது எடுத்துக் கொள்வோம். நம் நாட்டின் பொன் வெள்ளி இருப்பு ஒரே இரவில் ஐந்து மடங்கு அதிகரித்துவிடுவதாக வைத்துக் கொண்டால் உடனே விலைவாசி பெருமளவு ஏறிப்போகும். எந்த நாடும் நம் நாட்டிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்யத் துணியாது. வெளிநாட்டுப் பொருள்களின் இறக்குமதியைத் தடுக்க அந்த நாட்டில் பல சட்டங்கள் இருந்தபோதிலும், இந்த நிலையில் வெளிநாட்டுப் பொருள்கள் நம் நாட்டுக்கு வந்து சேரும்; நம் நாட்டுப் பணம் வெளி நாட்டுக்குப் போகும்.' இதனால் பெறப்படுவது என்னவென்றால், 'ஓர் அரசாங்கம் தன் மக்களையும், தன் தயாரிப்புப் பொருள்களையும் பாதுகாத்தல் வேண்டும். அந்த நாட்டில் இருக்கும் பணத்தைப்பற்றி பயப்பட வேண்டியதில்லை. அதை அந்த நாட்டு மக்களின் விவகாரங்களுக்கே விட்டுவிடலாம்.'

எனவே, அண்டை அயல் நாடுகள் வளமாக இருப்பதைப் பார்த்து எந்த நாடும் பொருமைப்படவேண்டியதில்லை. அதற்கு மாறுக, அண்டை அயல் நாடுகளில் வளங்கொழித்தால்தான், அந்த நாட்டு மக்கள் நம் நாட்டிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்து நமது வாடிக்கைக்காரர்களாக விளங்க முடியும். அப்போதுதான் நம் நாடு வளம்பெறும். நமது நடவடிக்கைகளால் அண்டை அயல் நாடுகளை வறுமையில் உழல விட்டால், நாமும் துன்புற வேண்டிவரும். அதே வறுமை நம்மையும் வாட்ட அதிக நாளாகாது. இங்கு ஹியூமின் கருத்து ஆணித்தரமானது. இது அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகிறது.

எனவே, 'நான் மனிதன் என்ற முறையில் மட்டுமன்றி, பிரிட்டன் தேசத்து குடிமகன் என்ற முறையிலும், ஜெர்மனி ஸ்பெயின், இத்தாலி ஆகியவைகளும் பிரான்சு நாடும் வணிகத் துறையில் வளங்கொழிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்வேன்.' [1]

ஆடம் ஸ்மித்துக்கு முன் இருந்தவர்களுள் டேவிட் ஹியூமே தலைசிறந்தவர். இவர் கருத்துகளை இங்கு விரிவாக ஆராய வேண்டும் என்ற நினைப்பில் இவரை இங்குக் குறிப்பிடவில்லை.

[1] வணிகப் பொருமை பற்றிய கட்டுரை.

பின்னணியில் ஹியூமைச் சித்திரித்துக் காட்டினாலன்றி, ஆடம் ஸ்மித் கருத்தாராய்ச்சி எதுவும் நிறைவு பெற்றதாகாது என்பதால் தான் இவர் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

ஆடம் ஸ்மித்

ஆங்கிலநாட்டு அரசியல் பொருளாதார நிபுணர்களில் ஆடம் ஸ்மித் (Adam Smith 1723—1790)[1] நடுநாயகமாகத் திகழ்கிறார். இவரே ஓர் இதிகாசமாக மாறியிருக்கிறார். இத்தகைய இதிகாசப் பெருங்கடலில் துணிந்து இறங்கப் புத்திசாலி மாலுமி எவனும் தயங்கவே செய்வான். ஆடம் ஸ்மித்தைப்பற்றி ஒருசில பக்கங்களில் விளக்கிக் கூறிவிட முடியாது. இவருக்குப் பிந்திய பொருளாதாரக் கொள்கை வரலாறு முழுவதும் இவரைப் பற்றிப் புகழ்ச்சியாகவோ, இகழ்ச்சியாகவோ இருப்பதே பின் வந்த பொருளாதாரக் கொள்கை வரலாறு முழுவதிலும் இவர் நீக்கமற நிறைந்திருப்பதற்குக் காரணமாகும். ஆடம் ஸ்மித் என்றாலே பொருளாதாரக் கொள்கையும்' பொருளாதாரக் கொள்கை என்றாலே ஆடம் ஸ்மித்தும் நினைவிலே நிலைப்பதற்கும் இதுதான் காரணம். எனினும் இவ்விருவகை அம்சமும் தவறுனவை ஆடம் ஸ்மித் அரசியல் பொருளாதார நிறுவனரு மல்ல, அமைப்பாளருமல்ல. இவருக்கு முன் பலபேர் எவ்வளவோ இத்துறையில் செய்திருப்பதால்தான் அவர் இத் துறையில் இந்த அளவு முன்னேறியுள்ளார். இவரை இத் துறையில் முன்னோடி எனக் கூறுவதற்கில்லை. வணிகவாதிகள் நிரூபிக்கக் கூடிய உணர்வுடன் பல பொருளாதாரக் கருத்துகளை விவாதித்துள்ளனர். இயற்கைவாதிகளும் பொருளாதாரக் கொள்கையைப் பெரும்பாலும் திட்டவட்டமான முறையில் உருவாக்கினர். ஆடம் ஸ்மித்தை நீக்கிவிட்டுப் பார்த்தாலும், அந்தக் காலம் பொருளாதார எண்ணங்கள் மலர்ந்த காலம் என்றே கூற வேண்டும். ஆடம் ஸ்மித்தின், 'நாடுகளின் செல்வம்' என்ற நூலைப் போன்று, இயற்கைவாதிகளான பிசியோக்கிரட்களின் கருத்து, டேவிட் ஹியூம் போன்ற மற்றவர்களின் நூல்கள் ஆகியவற்றிலிருந்து பெரும்பாலானவற்றைத் தொகுத்துக் காட்ட

[1] 1723-ல் கிர்கால்டியில் (Kirkcaldy) பிறந்தார். கிளாஸ்கோவிலும் ஆக்ஸ்போர்டிலும் கல்வி கற்றார். கிளாஸ்கோவில் முதலில் நியாய வாதப் பேராசிரியராகவும் பின்னர் நீதிநெறித் தத்துவப் போதகராகவும் (1751—1763) பணியாற்றினார். பின்னர் பக்ளுக் பிரபுவின் ஆசிரியராக அவருடன் சுற்றுப் பயணம் செய்தார். 1767-ல் கிர்கால்டிக்குத் திரும்பி வந்தார். 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nations) என்ற நூல் 1776-ல் வெளியிடப்பட்டது. 1778 முதல் 1790-ல் இவர் இறக்கும் வரை எடின்பரோவில் சுங்க ஆணையாளராகப் பணி புரிந்தார். 'தத்துவத் துறையில் நீதி நெறி உணர்வுக் கொள்கை' என்னும் நூலை இயற்றினார்.

முடியும். சுருங்கக் கூறின், பலர் தமக்கு முன் விவாதித்துப் போந்த பொருளாதாரப் பிரச்சினைகளையே ஆடம் ஸ்மித்தும் ஆராய்ந்துள்ளார். இக் கருத்தின் மற்றொரு பகுதியும் தவறே. ஆடம் ஸ்மித்துக்கு முன்னர் அரசியல் பொருளாதாரம் சுட்ட செங்கல்லாக இருந்தது; ஆடம் ஸ்மித் அதைப் புட மிட்ட தங்கமாக மாற்றி அமைத்தார் என்று கூறுவதும் தவறே. தலைசிறந்த ஸ்காட்லாந்துக்காரராகிய ஆடம் ஸ்மித் எழுதிய 'நாடுகளின் செல்வத்தில்' குறைகள் மலிந்துள்ளன. உண்மையைக் கூறுமிடத்து, இதை ஒப்புக் கொண்டே ஆகவேண்டும். 'ஸே' இதைப் புரிபடாச் சிக்கல் என வர்ணித்துள்ளது மிகையாக இருக்கலாமென்றாலும், இப் புத்தகத்தில் ஒழுங்குமுறை இல்லை. ஆடம் ஸ்மித் ஒரு கருத்தை விளக்கும்போது வேறு எதை எதையோ எழுதிக்கொண்டு போகிறார். எடுத்த கருத்தை விட்டு விட்டு வேறு கருத்துகளுக்குப் போய்விடுகிறார். மேலும், முக்கிய மான அமிசங்களில் பார்க்கப் போனால், ஆடம் ஸ்மித் குழப்ப முள்ளவராகவே காணப்படுகிறார். சில சமயம் ஆடம் ஸ்மித் எந்தக் கருத்தை ஆராய்கிறார் என்பதே புரிபடாமற் போகிறது. இக் குறைபாடு ஒருசில சமயம் குணமுள்ளதாக இருந்தாலும், ஒரே அத்தியாயத்தில் முரணான கருத்துகளை வெளியிடுகிறார். பல்வேறு கொள்கைகளை எடுத்துக் கூறுவதன்றி, அவர் எக் கொள்கையையும் முடிவு செய்வதில்லை. இந்த முரண்பாட்டினை அவர் உணர்ந்துள்ளதாகத் தெரியவில்லை. ஆடம் ஸ்மித் விளக்கி விவரித்த அரசியல் பொருளாதாரமும் கட்டுக்கோப்பாய் அமைந்த கொள்கை அமைப்பு அல்ல. சராசரி மனிதனின் மற்றப் படைப் புகளைப் போலவே, இதுவும் குறைபாடுகள், இடைவெளிகள், மயக்கங்கள், வரட்டுக் கொள்கைகள் நிறைந்ததே.

இவ்வாறெல்லாம் கூறியபோதிலும், பொருளாதார எண்ண வளர்ச்சி வரலாற்றில் ஆடம் ஸ்மித்தே தலைசிறந்தவராகத் திகழ்வதை மறுப்பதற்குமில்லை, மறைப்பதற்குமில்லை. இவர் பொருளாதாரக் காட்டில் வழி தேடிச் செல்பவராக இருந்தாலும், வழி வகுத்துக் கொடுத்தவர் இவரே. இவர் எல்லாவற்றையும் விரிவாக ஆராய்ந்தார். இவருக்கு முந்தியவர்கள் இவரைப்போல் செய்யவில்லை. இவருடைய அமைப்பு முறைகளில் குறைபாடுகள் உள்ளதாக இருந்தபோதிலும், இவருடைய கொள்கைகளைப் பின்பற்றியவர்கள் சீர்படுத்தித் திட்டவட்ட மாக்கியதால், அவற்றின் அடிப்படையிலேயே பிந்திய பொருளாதாரக் கருத்துகள் உருப்பெற்றன. ஆடம் ஸ்மித்துக்கு முன்னர் பொருளாதாரம் குறித்தும் விவாதம் இருந்தது. இவர் காலத்தில்தான் பொருளாதாரமே விவாதிப்பதற்குரிய ஒன்றாகிவிட்டது.

மொத்தமாகப் பார்க்கும்போது, துரதிர்ஷ்டவசமாக ஆடம் ஸ்மித்தைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. இவருடைய ஒருசில கொள்கைகள் பரந்த புகழ் பெற்றிருப்பதே இதற்குக் காரணம். ஆடம் ஸ்மித் என்று எண்ணினாலே சில கருத்துகள் தாம் நினைவுக்கு வருகின்றன. பொருளாதாரத்தை ஒரு இயலாக அறியாதவர்கள்கூட ஆடம் ஸ்மித்தின் சிதறிய கருத்துகளை அறிவர். தொழிற் பிரிவினை (அதன் மிகச் சிறந்த உதாரணமாகக் குண்டூசி தயாரிப்பை விளக்கியுள்ளார்), பல்வேறு வேலைகளுக்குப் பலவகை ஊதியங்கள் இருப்பதற்குரிய காரணங்கள் ஆகியவற்றை இவர் ஆராயும் அத்தியாயங்கள், வரி விதிப்புக் கொள்கைகள், வணிக வாதி (மெர்க்கன்டலிஸ்டு) களுக்கு எதிராக இவர் கூறியுள்ளவை ஆகியவற்றைப் பொருளாதாரம் வேண்டாம் என வெறுத்து ஒதுக்குபவர்களும் புறக்கணிப்பதற்கில்லை. இவ்வாறு ஆடம் ஸ்மித் கூறியவற்றுள் ஒருசிலவே நீங்காத நினைவாக இருப்பதால், அவர் மொத்தமாகக் கூறிய கருத்துகள், பொருளாதாரக் கொள்கையை உருவாக்கியதில் இவருக்குள்ள பங்கு இவற்றை உணர முடியாமல் போகிறது. இந்த நிலை நீங்க வேண்டுமானால் ஆடம் ஸ்மித் கூறியவற்றின் சில அம்சங்களை மட்டும் ஆராயாமல், நாடுகளின் செல்வத்தில் பொதுவாக என்ன கூறப்பட்டுள்ளது என்பதையே பெரும் போக்காக ஆராயவேண்டும். அப்போது தான் நமக்கு மிகத் தெரிந்த கருத்துகளைச் சரியான கோணத்தில், முழு அமைப்பிற்கும் அவற்றிற்கும் உள்ள சரியான உறவு முறையில் பார்க்க முடியும்.

அவருடைய கொள்கையை மதிப்பிடத் தொடங்குவதற்கு முன், அவருடைய பொது நிலையை ஓரளவு அறிந்து கொள்ள வேண்டும். ஆடம் ஸ்மித் இக் கொள்கைகளைக் கொண்டதற்குரிய காரணங்கள் மிகப் பல. அவற்றை நாம் இங்கு ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை. எதற்கெடுத்தாலும் 'இயற்கை' என்று சிலர் வலியுறுத்துவது இவருடைய ஆசிரியராகிய ஹட்சிசன் (Hutcheson) ஓரளவு காரணம்; மண்டவில்லியும் இதற்கு ஓரளவு காரணம். இவர் தனியார் 'சுயநலனே' பொது நலனுக்கு வழிகோலும் எனக் கூறியுள்ளார். இயற்கைவாதிகளுடன் ஆடம் ஸ்மித் கொண்டிருந்த தொடர்பும் இதற்கு ஓரளவு காரணமாயிருக்கலாம். ஆனால், இவருடைய கொள்கையின் பொது நோக்கங்கள் இயற்கைவாதத் தலைவர்களை இவர் சந்திப்பதற்கு முன்னரேயே உருப்பெற்றுவிட்டன என்பது இப்போது உறுதியாகத் தெரிகிறது. இயற்கை வாதிகளுடனும், பதினெட்டாவது நூற்றாண்டின் மற்றக் கருத்துகளுடனும் ஆடம் ஸ்மித் இயற்கையான அமைப்பு என்பதில் நம்பிக்கை உள்ளவராக இருக்

கிருர். இந்த நம்பிக்கை ஆடம் ஸ்மித்தைப் பொறுத்தவரையில் ஒரு பகுதி தத்துவ அடிப்படையிலும், மற்றொரு பகுதி மத அடிப்படையிலும் உள்ளது. இயற்கையான அமைப்பு, இயற்கை விதி என்று சொல்லும்போது, கட்டுப்பாடுகள் அனைத்தும் நீங்கிப் போகின்றன. எனவே, தனி மனித சுதந்திரத்தை ஆடம் ஸ்மித் ஏற்றிப் போற்றுகிருர். ஆனல், அவருடைய கருத்துப்படி கட்டுப்பாடுகளைக் களைவதால், பொருளாதாரக் குழப்பநிலை ஏற்படாது. அதற்கு மாருக, அப்போதுதான் இயற்கை விதி திறம்படச் செயலாற்ற முடியும். இத்தகைய நிலையில், சொந்த நலனை முன்னிட்டே ஒவ்வொருவரும் செயலாற்றுவர். ஆடம் ஸ்மித்தின் கருத்துப்படி எல்லாம் அவன் வகுத்த இயற்கை வழிப்படியே நடைபெறுகின்றன. தன்னலத்தின் அடிப்படையில் எல்லாம் நடைபெற்ருல், நிருவாக இயந்திரம் சரிவர இயங்கும். எதிர்த்துப் போராடி நிலை நிறுத்தும் சக்திகளுக்கிடையே சமநிலை ஏற்படுத்தும் சக்தி இதற்கு உண்டு.

இதிலிருந்து எல்லாம் நல்ல முறையில் நடக்கும் என்ற நம்பிக்கை உணர்வு ஏற்படுகிறது. நன்மை விளைவிக்கும் இறைமை பின்னின்று எல்லாவற்றையும் இயக்குவதால், தன்னல உணர்வின் அடிப்படையில் நடைபெறும் எல்லாக் காரியங்கள் வாயிலாகவும் முன்னேற்றமும் நன்மையுமே ஏற்படும். ஆடம் ஸ்மித்தின் மற்றொரு கருத்தையும் காணலாம். இதன்படி ஆடம் ஸ்மித் பிரத்தியட்ச வாதியாகத் துலங்குகிருர். இவர் எத்தத்துவத்தின் அடிப்படையில் பிரச்சினைகளை ஆராய்ந்தபோதிலும், பிரத்தியட்ச நோக்கை விடுவதேயில்லை. இவ்வுலக வாழ்க்கைப் பிரச்சினைகள் அவர் அறியாதவை அல்ல. தம் கொள்கை எப்படியிருந்த போதிலும், சில நிலைகளில் அவற்றிற்கு விதிவிலக்கு உண்டென்பதை அவர் அறிவார். பொதுநோக்கில் ஆடம் ஸ்மித் நம்பிக்கை வாதியாக இருந்தபோதிலும், குறிப்பிட்ட சிலவற்றில் உலகத்திலே எல்லாம் செவ்வனே இருப்பதாக அவர் கருதவில்லை.

பதினெட்டாம் நூற்ருண்டில் பொருளாதாரப் பிரச்சினையை எடுத்துக் கூறும் ஒரு வழி, செல்வத்தின் ஆதாரத்தைக் கண்டு பிடிப்பதுதான். நாட்டின் செல்வ வளர்ச்சிக்கு, சாதக வணிகக் கொடுப்பு நிலையே அடிப்படையென வணிகவாதிகள் (மெர்க்கன்டிஸ்டுகள்) கருதினர். செல்வம் அனைத்தும் விவசாயத்தில் இருந்தே ஏற்படுவதாகவும், மற்றத் தொழில்கள் அனைத்தும் பயனற்றவை யெனவும் இயற்கைவாதிகள் (பிசியோகிராட்கள்) கூறினர். ஆடம் ஸ்மித்தின் முதல் வாக்கியமே அவர் கருத்தை விளக்குவதாக அமைந்துள்ளது. 'ஒவ்வொரு தேசத்தின்

'ஆண்டு உழைப்பு' என்பது, வாழ்க்கை வசதிகளையும் அவசியப் பொருள்களையும் வழங்குகிற நிதிதான். இதையே அது ஆண்டு தோறும் பயன்படுத்துகிறது.'[1] எனவே, உழைப்பே எல்லா செல்வத்துக்கும் அடிப்படை. இதனால்தான், ஐரோப்பாவிலே 'ஸ்மித் அமைப்பை'த் (Smithianismus) தொழிலியல் அமைப்பு எனக் குறிப்பிடுகின்றனர் போலும்! ஆனால், இது தவருன கருத்து; ஏனெனில், ஆடம் ஸ்மித் தம் கருத்துகளைத் தொழில் புரட்சிக்கு முன்னே வெளியிட்டு விட்டார். எனவே, ஆடம் ஸ்மித் தொழில் புரட்சியை விளக்கிக் கூறுபவரல்ல. அதற்காக வாதிட்டு அதை நிலைநிறுத்த வேண்டியவருமல்ல. இன்னும் சொல்லப் போனால், அவர் வேளாண்மையையே பெரிதும் ஆதரித்தார். தொழில், வணிகப் பற்றுக்களை அவர் மிகவும் கண்டித்தார். எந்த அளவு திறமையுடனும், நுணுக்கத்துடனும், அறிவுசால் புலமையுடனும் உழைப்புப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்தே செல்வ அபிவிருத்தி அமையும் என்பது ஸ்மித் ஆரம்ப காலத்தில் கொண்டிருந்த கருத்தாகும். எனவே, ஆடம் ஸ்மித்தின் புத்தகத்தின் முதல் அதிகாரத்தில் தொழில் பிரிவினையை விளக்கிக் கூறுகிறார். தொழில் பிரிவினை புதிய கொள்கையல்ல. பிளேடோவின் இலட்சிய உலகின் அடிப்படையே தொழில் பிரிவினைதான். இது குறித்து ஃஸெனோபன் நன்கு அறிவார். இக்கொள்கையின் முக்கிய அமிசங்களை எல்லா நாடுகளும் ஏற்கெனவே அங்கீகரித்துள்ளன. என்றாலும், ஸ்மித் கூறிய விளக்கத்துக்கு விசேஷ முக்கியத்துவம் அளிக்கின்றனர் பொது மக்கள். பொருளாதார வாழ்க்கையின் முக்கிய அமிசமாகத் தொழில்பிரிவினை முதற்கண் வைக்கப்படுகிறது. இதனால் 'ஸ்மித்' கொள்கையில் ஏற்படுகிற விளைவு மகத்தானது. இந்த அடிப்படைக் கருத்து இரண்டு அமிசங்களில் செல்வாக்குடன் திகழ்வதை இப்போது காணலாம். முதலாவதாக, தொழில் பிரிவினை பின்னொரு மாற்றத்திற்கு வழிகோலுகிறது. உண்மையில் சொல்லப்போனால், ஆரம்பம் முதலே பணம், மதிப்பு ஆகிய வற்றை இரண்டாவது நிலையாகக் கருதி வந்துள்ளார். இயற்கை வாதிகள் மதிப்புக் கொள்கையை அறிந்திருக்கவில்லை என்பதே அவர்கள் மீது கூறப்படும் குறைபாடு. இயற்கை வாதிகளுடன் ஆடம் ஸ்மித் கருத்து மாறுபாடு கொண்டதால், அவர் இப் பிரச்சினையை ஆராயத் தொடங்கினார். இரண்டாவதாக, தொழில் பிரிவினையை வலியுறுத்தியதாலும், பின்னர் பொருள்கள் இதன் விளைவாக மாற்றிக்கொள்ளப்பட்டதாலும் சமூகம் என்பது அதிலுள்ள மக்கள் தங்களிடையே பொருள்களை மாற்றிக்கொள்வ

[1] நாடுகளின் செல்வம், முகவுரையும் திட்டமும்.

தால் பிணைப்புண்டு இருக்கும் ஓர் அமைப்பு என்றே ஆடம் ஸ்மித் கருதினர். மாற்றிக் கொள்ளத்தக்க இப் பொருள்களின் மதிப்பை உயர்த்துவன எல்லாம் செல்வத்தை அதிகரிக்கச் செய்பவையே. பின்னர் ஜெர்மானியப் பொருளாதார வல்லுநர்கள் ஸ்மித் கொள்கைகளைக் கண்டிப்பதற்கு இதுவே அடிப்படையாக அமைந்தது.

ஆதலினால், இவரது புத்தகத்தின் ஆரம்ப அதிகாரங்களின் முக்கியத்துவம் இவரது வரலாற்றில் அதிகமாக இடம் பெறும் தொழில் பிரிவினை பற்றியதல்ல. இவருடைய கொள்கையில் அதற்குச் சிறப்பான இடம் அளித்துள்ளதே இதற்குக் காரணம். தொழில் பிரிவினையால் பொருள் உற்பத்தி அதிகரிக்கிறது; அதிகத் திறமை, நேரமிச்சம், புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் ஆகியவையே தொழில் பிரிவினையின் அனுகூலங்கள். இவை புரட்சிகரமான கண்டுபிடிப்புகள் என்றும் கூறுவதற்கில்லை.[1] அவருடைய புகழ்பெற்ற அடுத்த கொள்கை தொழிற் பிரிவினை, சந்தை அளவைப் பொறுத்துள்ளது[2] என்பதாகும். இதைச் சரிவரப் பார்த்தோமானால், இது சாதாரண உண்மை என்பது தெரியவரும். செய்யவேண்டிய வேலையின் அளவை அனுசரித்தே, அதாவது சந்தையின் அளவை அனுசரித்தே தொழில் பிரிவினை இருக்கமுடியும். தொழில் பிரிவினையின் விளைவுகளை ஆடம் ஸ்மித் நன்கு விளக்கிக் கூறுகிறார். தொழில் பிரிவினைக் கொள்கையை அவர் நன்கு விளக்கியுள்ளதாகக் கூற முடியாது. இது மனித அறிவுக் கூர்மையின் விளைவல்ல; செல்வத்தை அதிகரிப்பது அதன் நோக்கமல்ல எனக் கூறுகிறார் ஆடம் ஸ்மித். இது பண்டங்களை ஒருவர்க்கொருவர் மாற்றிக் கொள்ள இயற்கையில் இருக்கிற தூண்டுதலின் விளைவேயாகும். பண்ட மாற்றமே வாழ்க்கையில் ஒருவகை இன்பம்[3] எனக் கூறுவதைப்போல் இது இருக்கிறது. இது பொருந்தாக் கூற்று. இவ்வாறு ஸ்மித் கூறிய பின்னர், தொழில் பிரிவினையின் நோக்கத்தை ஆடம் ஸ்மித் நியாயவாத அடிப்படையில் விளக்க முற்படுகிறார். ஒருவர்க்கொருவர் கூட்டுறவு முறையில் உதவி செய்து கொள்வதே இதன் நோக்கம். 'தன் சகோதரர்களிடமிருந்து எப்போதும் உதவிபெற வேண்டியவனாக மனிதன் இருக்கிறான். அவர்கள் பயன் கருதாமல் அதைத் தாமாகவே முன்வந்து செய்வர் என எதிர்பார்ப்பதற்கில்லை.' ஸ்மித் கொள்கைக் கருத்து மேலும் கூறுவதாவது, 'உதவி செய்ய வேண்டும் என்ற பெருந்

[1] அதே ஏடு, புத்தகம் 1, அதிகாரம் 1.
[2] அதே ஏடு, புத்தகம் 1, அதிகாரம் 3, [3] அதே ஏடு, புத்தகம் I, அதிகாரம் 2.

தன்மை காரணமாகக் கசாப்புக்காரன், கடைக்காரன், ரொட்டி விற்பவன் ஆகியோர் நமக்கு உணவு படைப்பதில்லை. தங்கள் சொந்த நலனை முன்னிட்டே அவர்கள் நமக்கு உணவிடுகின்றனர். இந்த அடிப்படையில் பார்த்தோமானால் ஒவ்வொருவரும் பிறர் தேவையைப் பூர்த்தி செய்யும் போதே, தம் தேவைகளையும் பிறர்மூலம் பூர்த்தி செய்து கொள்கிறார். சொந்த நலனை முன்னிட்டுப் பொருள்களை மாற்றிக்கொள்வதன் அடிப்படையிலேயே சமுதாயம் கட்டுண்டு இருக்கிறது. இது தொழில் பிரிவினையின் அடிப்படையிலேயே இருக்கின்றது.

இவ்வாறு முதல் மூன்று அத்தியாயங்களில் தொழில் பிரிவினையை ஒருவாறு விளக்கிக் கூறி முடித்துவிட்டு, ஆடம் ஸ்மித், நான்காவது அத்தியாயத்தில் பணத்தின் மூலத்தை ஆராயத் தொடங்குகிறார். மனிதர்களிடையே பலவகைத் தொழில்கள் ஏற்பட்டதன் ஒரு விளைவாகவே பணம் படைக்கப் பட்டது. 'ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு வகையில் ஒரு வர்த்தகனே.' எனவே, உலகெங்கணும் வணிகத்துக்குப் பயன் படும் கருவியாக நாணயச் செலாவணி தேவைப்படுகிறது. இதனால் 'தொடர்பான அல்லது மாற்றிக்கொள்ளத்தக்க சரக்கு மதிப்பு' பற்றிய கருத்துப் பிறக்கிறது. மதிப்பு என்பதற்கு ஸ்மித்தின் புகழ்பெற்ற கருத்தில் இருவகைப் பொருள்கள் உண்டு. ஒரு சமயம் அதன் பயனையும், வேறு சமயம் வேறு பொருள் களையும் வாங்குவதற்கு அதற்குள்ள சக்தியையும் குறிப்பிடுகிறார். முன்னது பயன்பாட்டு மதிப்பு ; பின்னது பண்டமாற்று மதிப்பு. சில பொருள்களுக்கு ஏற்றத் தாழ்வான மதிப்பு இருப்பதை அவர் உணர்ந்துள்ளார். பயன்பாட்டு மதிப்பு மிக்க பொருள் பண்ட மாற்று மதிப்பு உள்ளதாக இல்லாதிருக்கலாம். அவ்வாறே, பண்ட மாற்று மதிப்பு உள்ள பொருள் பயன்பாட்டு மதிப்பு உள்ளதாக இல்லாதிருக்கலாம். தண்ணீரும் வைரமும் இதற்கு உதாரணங் களாகும். இதன் அடிப்படையில் எத்துணையோ வாதம் நடத் தலாம். ஆடம் ஸ்மித்தைப் பொறுத்த வரையில் திரு. ஹ்யூபர்ட் ஃபிலிப்ஸ் கூறியிருப்பதைப் போல,

அந்தப் புத்திசாலிப் பறவை
வரம்பிலுள்ள பயன்பாட்டினைக்
கேட்டதில்லை போலும் !

ஆடம் ஸ்மித் பயன்பாட்டு மதிப்பை ஓரளவு பார்வையிட்ட பிறகு, பண்டமாற்று மதிப்பை விரிவாக விளக்கத் தொடங்குகிறார் என இங்குக் கூறுவது போதுமானதாகும்.

நியாய வாதத்தின் அடிப்படையில் ஏற்பட்ட பண்டமாற்று மதிப்புக் கொள்கையை ஆடம் ஸ்மித் அடுத்த மூன்று அத்தியாயங்களில் ஆராய்கிறார். முதலாவதாக, பண்டமாற்று மதிப்பை நிருணயிப்பதற்குரிய உண்மையான அளவீடு குறித்து (5-வது அதிகாரத்தில்) ஆடம் ஸ்மித் அக்கறை காட்டுகிறார். ஸ்மித் எழுதிய புரிந்துகொள்ள முடியாத அத்தியாயங்களுள் இதுவும் ஒன்றாகும். ஸ்மித்தின் சித்தத்திலேயே இரு வேறு கருத்துகள் குழம்பி நின்றன என்ற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. ஒரு சமயம் பார்த்தால் மதிப்பை நிருணயிக்கும் அளவீட்டை அவர் ஆராய்வதாகத் தோன்றுகிறது. மற்றொரு சமயம் பார்த்தால், மாறிக்கொண்டே இருக்கும் இவ்வுலகில், மதிப்பை நிருணயிப்பதற்குரிய சிறந்த நிலையான அளவுகோல் எது என்பதை ஆராய்வதாகத் தோன்றுகிறது. என்னுடைய பேனாவை எடுத்துக் கொண்டால், அதைச் செய்வதற்கு மேற்கண்ட உழைப்பின் அடிப்படையில் அதன் மதிப்பை நிருணயிக்கலாம். அதன் மதிப்பு ரூ 10 ஆக இருந்தால், ரூ. 10 மதிப்புள்ள உழைப்பு எவ்வகையானும் அதில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவே பொருள். இது ஒன்று. கரி வேலைக்காரிக்கு நாள் கூலி 5 ரூபாய் என்று கொண்டால், என்னுடைய பேனா அக்கரி வேலைக்காரியின் இரண்டு நாள் வேலைக்குச் சமமெனக் கொள்ளலாம். இவ்வாறு நான் கொள்வதானால், மதிப்பை அளவிட அதன் (தங்க) விலையை விட உழைப்பையே சிறந்த அளவீடாக நான் கருதுவதாகப் பொருள் கொள்ளவேண்டும். மதிப்பை நிருணயிப்பது எது? மதிப்பை அளவிடுவதற்கான சிறந்த அளவீடு யாது என்பவை இரு வேறுபட்டவைகள் ஆகும். பின் சொன்னதையே ஸ்மித் பெரும்பாலும் பின்பற்றுகிறார். முக்கியமான இந்த அதிகாரத்தில் உள்ளதையெல்லாம் அக்கு வேறு ஆணி வேராக அலசிப்பார்க்காமல், அதிகாரத்தின் முக்கிய முடிவுகளைச் சுருங்கக் கூறி விளங்கவைத்தல் சிறந்ததாகும். முக்கியமான பகுதி ஆரம்பத்திலேயே இருக்கிறது.

'எனவே, ஒரு பொருளின் மதிப்பு, அதை வைத்துள்ள மனிதனுக்கு அதைத் தானே உபயோகிக்கவோ, பயன்படுத்தவோ விரும்பாத, அதைக் கொடுத்துவிட்டு வேறு பொருள்களை வாங்கிக்கொள்ள விரும்பும் மனிதனுக்கு, அதை வாங்கப் பிடிக்கும் உழைப்பின் அளவே அதன் மதிப்பாகும். எனவே, எல்லாப் பொருள்களின் பண்டமாற்று மதிப்பை அளவிடுவதற்கு உழைப்பே உண்மையான அளவுகோல் ஆகும்.'

இதையே சுருக்கமாகக் கூறுவதானால், ஒரு பொருளை வைத்துள்ளவர் அதைக் கொடுத்துவிட்டு வேறு பொருள் பெற விரும்புமபோது, அதன் மதிப்பு அதன் விற்பனை விலை பெறக் கூடிய உழைப்பின் அளவாகவே இருக்கும். ஆனால், பொருளின் பண்டமாற்று மதிப்பினை நிருணயிப்பதற்கு உழைப்பே ஒரு வகையில் உண்மையான அளவீடு என்றாலும், பொதுவாக அதன் மதிப்பு வேறு வகையில் நிருணயிக்கப்படுகிறது. வசதியையும் வழக்கத்தையும் முன்னிட்டு, அது பணவடிவில் நிருணயிக்கப்படுகிறது. ஆனால், பொன்னும் வெள்ளியும் மதிப்பு மாறலாம். 'ஒரே அளவுள்ள உழைப்பு எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் தொழிலாளிக்கு ஒரே மதிப்புள்ளதாகக் கூறலாம்.' ஆதாம் ஏடன் தோட்டத்திலிருந்து விலக்கப்பட்ட பிறகு அவனுக்கேற்பட்ட முதுகு வலி, ரீஜண்ட் தெருவில் உள்ள தொழிலாளிக்கு ஏற்பட்ட முதுகு வலியை நிகர்த்ததே என ஆடம் ஸ்மித் கூறுவது போலுள்ளது. மற்றோர் வகை அளவீடு குறித்தும் ஆடம் ஸ்மித் இங்குச் சற்றே குறிப்பிடுகிறார். தொழிலாளியின் வாழ்வுக்கு வேண்டிய தானியங்களைக் கொண்டும் இதை நிருணயிக்கலாம். மற்ற அளவீடுகளை விட இதுவே சிறந்த அளவீடாக இருக்கக்கூடும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய ஒருபடித்தான கூலி நியதியையும், ஒரே மாதிரியான வாழ்க்கைத் தேவைகளையும் நாம் அனுமானித்துக்கொண்டால், இதுவும் உழைப்புப் போன்ற மற்றோர் அளவீடாக அமையும். முடிவாகப் பெறப்படுவது என்னவென்றால், 'உழைப்பே உலகெங்கும் சரியான மதிப்பு அளவீடு. எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் பல பொருள்களின் மதிப்பையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இதுவே சிறந்த சாதனம்.' நூற்றாண்டின் அடிப்படையில் பார்த்தோமானால், வெள்ளியைவிட தானியமே சிறந்த அளவீட்டுச் சாதனம். ஆண்டின் அடிப்படையில் பார்த்தோமானால், தானியத்தைவிட வெள்ளியே சிறந்த அளவீட்டுச் சாதனம். இந்த விவாதம் முழுவதுமே குழப்பம் நிறைந்ததாயிருக்கிறது. உழைப்பின் மதிப்பு எப்போதும் ஒரே மாதிரியாயிருக்கும் என்று தவருக அனுமானிக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஸ்மித்தின் நியாயம் வட்டச் சுழற்சியாக இருக்கிறது. எனினும், உழைப்பைச் சிறந்த மதிப்பு அளவீடாகக் கொண்டிருப்பதே ஸ்மித் முடிவின் முக்கிய அமிசம். இதை அவர் சரியான சொற்களில் விளக்கிக் கூறுமலிருக்கலாம். மதிப்பை நிருணயிப்பது உழைப்பே என்பதை எண்பிப்பதற்கு அவர் இங்கு மட்டுமே வாதிடவில்லை என்று கொள்ளலாம்.

அடுத்த அதிகாரத்தில் (புத்தகம் I அதிகாரம் 6) பொருள் விலையின் பல கோணங்களை ஸ்மித் ஆராயத் தொடங்குகிறார். 'ஆரம்ப காலச் சமுதாயத்தில்' மூலதனம் சேர்த்து நிலத்தை உடைமையாக்கிக் கொள்வதற்கு முன்னர், உழைப்பே மதிப்பை நிருணயிப்பதாகவும், மதிப்பை அளவிடும் சாதனமாகவும் இருந்தது' என ஸ்மித் கூறுகிறார். இந்த நிலையில் உற்பத்தி முழுவதும் உழைப்பாளிக்கே சொந்தம். 'எந்தவொரு பொருளை அடைவதில் அல்லது உற்பத்தி செய்வதில் பொதுவாகப் பயன் படுத்திய உழைப்பின் அளவு, வேறு பொருளை மாற்றிக்கொள் வதற்குரிய உழைப்பின் அளவை நிருணயிப்பதாயிருந்தது.' இந்த நிலை ஆரம்ப கால சமுதாயத்தில் மட்டுமே இருந்தது. பொருள் களின் விலை, தொழிலாளர் கூலி ஆகியவற்றுக்கு மேற்பட்டு மூலதனம் சேர்ந்துவிட்ட நிலையில், மூலதனம் போட்டவனுக்கும் இலாபம் இருக்க வேண்டும் அல்லவா? மூலதனத்துக்கு இலாபம் என்பது குறித்தவகை உழைப்புக்கு ஊதியம் என்று ஆடம் ஸ்மித் கொண்டாலும் இவ்வகை ஊதியம் சாதாரணக் கூலியினின்றும் வேறு அடிப்படையில் நிருணயிக்கப்படுவதாக ஆடம் ஸ்மித் வாதிக்கிறார். இந்த நிலையில் உற்பத்தி முழுவதும் உழைப்பா ளருக்கே போய்ச் சேருவதற்கில்லை. உழைப்பே பொருளின் மதிப்பை நிருணயிக்கிறது எனக் கூறுவதற்குமில்லை. நிலம் உடைமை ஆக்கப்பட்டதும், மூன்றாவது அமிசம் ஒன்று தலை தூக்குகிறது. 'நிலக்கிழார்களும் மற்றவர்களைப் போலவே உழைப்பின்றி ஊதியம் பெற ஆசைப்படுகிறார்கள். இயற்கையில் விளையும் பொருளுக்கும் அவர்கள் குத்தகை கேட்கிறார்கள்.' குத்தகையைக் குறித்த ஸ்மித் கருத்துகள் தெளிவானவை அல்ல. இங்கே, குத்தகையை அவர் வலிந்து பறிக்கும் ஒன்றாகவே கருதுகிறார். எனவே, எல்லா வகையிலும் மூன்று அமிசங்கள் நிறைந்துள்ளன. குத்தகை, கூலி, இலாபம் ஆகிய மூன்றும் முப்பாலாகிய நிலம், தொழிலாளர், மூலதனம் ஆகிய மூன்றுக்கும் நிகராக விளங்குகின்றன.

ஆனால், நடைமுறையில் இது எவ்வாறு செயல்படுகிறது? அடுத்த அதிகாரம் (7 வது அதிகாரம்) 'பொருள்களின் இயல் பான விலையும் அங்காடி விலையும்' என்பதாகும். இதில் அது செயல்படும் வகையை ஸ்மித் விளக்குகிறார். ஒவ்வொரு சமுதா யத்திலும் சாதாரண அல்லது சராசரிக் கூலி, இலாபம் (வாரம்), குத்தகை வீதம் இருப்பதாக ஸ்மித் அடித்துக் கூறுகிறார் (இது அவருடைய அனுமானமே). இந்தச் சாதாரண அல்லது சராசரி வீதங்களை அவை வழங்குகிற காலத்திலும் இடத்திலும் 'இயல் பான வீதங்கள்' என ஸ்மித் கூறுகிறார். இதற்கு நிகராகவே ஒரு

பொருளின் 'இயல்பான விலை' இருக்கும். அப் பொருள் இயல்பான கூலி, இலாபம், குத்தகை தரும்போது இந்த இயல்பான விலை இருப்பதாகக் கொள்ளவேண்டும். அந்த நிலையில், அப் பொருள் அதன் சரியான மதிப்புக்கே விற்கப்படுவதாகக் கொள்ளலாம். இதையே சுருக்கமாகக் கூறுவதானால், இயல்பான விலை என்பது பொருளின் அடக்க விலையே; இயல்பான விலை என்பது அதன் நிலைமைப்படி இலட்சியமேயாகும். இதற்கு மாறாக அங்காடி விலை அல்லது உண்மை விலை இருக்கிறது. இந்த விலை தேவைக்கும் பொருள் கிடைப்பதற்கும் ஏற்றபடி இருக்கும். வாங்குவோருக்கும் விற்பவர்களுக்கும் இடையில் இருக்கும் போட்டி மனப்பான்மையின் அடிப்படையில்தான் இந்த விலை நிருணயிக்கப்படுகிறது. கடும் போட்டியின் விளைவாக இயல்பான விலையே மைய விலையாக இருக்கும். இம் மையத்தை நோக்கியே விலைகள் வந்துகொண்டிருக்கும். சில அசாதாரண நிலைகளில் நீண்ட காலத்துக்கு அங்காடி (மார்க்கெட்) விலை இயல்பான விலையைவிட அதிகமாயிருக்கக்கூடும். நாம் பகுதிக் குத்தகை எனக் கூறுவதையும் சில இடங்களில் அவர் குறிப்பிடுகிறார். தயாரிப்பு இரகசியங்கள் சில காலம் பத்திரமாகப் பாதுகாக்கப்படும் போது, அத் தயாரிப்புப் பொருள்களுக்கு அதிகக் கிராக்கி(தேவை) இருக்கக்கூடுமாதலால், இத்தகைய குத்தகை ஏற்படுகிறது. இத் தகைய சமயங்களில் உற்பத்தி நிலைமைகள் கட்டுப்பாட்டில் இருக்கும். ஆனால், தேவையோ மிகுந்திருக்கும். சில இடங்களில் மட்டுமே சில பொருள்களைத் தயாரிப்பதற்குச் சிலருக்கே (ஏகபோக) உரிமை அளிக்கப்பட்டிருக்கலாம். அத்தகைய நிலைமைகளில் அப் பொருள்களுக்கு அதிகத் தேவை இருக்கும். இதுவே ஸ்மித் மதிப்பீட்டுக் கொள்கை. சுருங்கக் கூறின், உழைப்பே பொருளை மதிப்பிடுவதற்கு ஏற்ற இலட்சிய சாதனம். குறித்த யாதொரு சமயத்தில் பொருள்களுக்கு உள்ள தேவையையும், அவை கிடைக்கும் அளவையும், அளிப்பையும் அனுசரித்து அவற்றின் மதிப்பு நிருணயிக்கப்படுகிறது. சில அசாதாரண நிலைமைகளில் விற்பனையாளருக்குச் சாதக நிலை இருப்பது போகப் பொதுவாகச் சொல்லப்போனால், கடும்போட்டி இருப்பதனால் பொருளின் மதிப்பு அதன் அடக்க விலையை ஒட்டியே இருக்கும்.

தொழிலாளர், மூலதனம், நிலம் மூன்றுக்கும் உதவுகின்றவைகளை ஒரு வகையாக ஆராய்ந்து முடித்த பிறகு, முதல் புத்தகத்தின் எஞ்சிய அத்தியாயங்களில் நிகரான வருமானங்கள், அதாவது, கூலி, இலாபம், குத்தகை எவ்வாறு நிருணயிக்கப்படுகின்றன என்பதை ஸ்மித் ஆராயத் தொடங்குகிறார். எட்டாவது அத்தியா

யத்தில் கூலி பற்றிக் கூறப்படுகிறது. ஸ்மித்தின் வலிமைக்கும் வெறுமைக்கும் இதுவே சிறந்த உதாரணம். கூலிக் கொள்கை விஷயமாய் அவருடைய வாதங்களால் திடமான எந்த முடிவுக்கும் வரமுடியாது எனக் கூறலாம். அவர் பல கருத்துகளை உலவ விடுகிறார். பின்னர் வந்த கூலிக் கொள்கைக்கெல்லாம் இந்த அத்தியாயத்தில் ஏதாவதொரு பகுதியைத் தமக்கு ஆதாரமாகக் காட்டக் கூடிய அளவுக்கு அதில் பல கருத்துகளும் புதைந்து கிடக்கின்றன.

அடியிற்கண்ட கொள்கையைத் தோற்றுவாயாகக் கொண்டு இந்த அத்தியாயம் ஆரம்பமாகிறது. 'தொழிலாளி உற்பத்தி செய்த பொருள், அவன் உழைப்புக்கு ஏற்ற இயல்பான பிரதி பலனாக அல்லது கூலியாக அமைகிறது.' இயல்பான என்ற சொல் ஈண்டும் கையாளப்பட்டுள்ளது வாய்ப்புக் கேடாகும். மூல சமுதாயத்தில், 'தொழிலாளர் உற்பத்தி செய்த பொருள் முழுவதும் தொழிலாளருக்கே உரித்தாயிருக்கிறது' எனக் கூறுகிறார் ஸ்மித். 'உழைப்பினால் ஏற்பட்ட உற்பத்தி முழுவதும் தொழிலாளியின் உரிமை' என்ற பத்தொன்பதாவது நூற்றாண்டின் சமதர்மக் கொள்கைகளுக்கு இங்கே பெரு அங்கீகாரம் கிடைக்கிறது. நிலம் உடைமையாகி மூலதனம் மிகுந்த நிலையில் இது பொருந்தாது. இப்போது ஸ்மித் தம் நிலையை மாற்றிக்கொண்டு புதிய அடிப்படையில் கூலி நிருணயிப்புக் கொள்கையை விளக்குகிறார். முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பேரம் பேசுவதற்குள்ள சக்தியின் அடிப்படையில் அதாவது தொழிலாளர் கிடைப்பதற்கும், அவர்கள் வேண்டிய எண்ணிக்கைக்கும் ஏற்ற அடிப்படையில் கூலி அமையும். தொழிலாளி மிகுந்த கூலி வேண்டுமென விரும்புவான். முதலாளி மிகக் குறைந்த கூலி கொடுப்பான். கொடுக்க வேண்டுமெனவும் விரும்புவான். இவர்களுக்குள் ஏற்படுகிற ஒப்பந்தப்படியே கூலி அமையும். எனவே, இரு சாராரும் தத்தம் நிலையைப் பலப்படுத்தத் தங்களுக்குள் கூட்டுச் சேரவே முனைவர். ஆனால், இந்த விஷயத்தில் முதலாளிகளே அனுகூல நிலையில் இருப்பது ஆடம் ஸ்மித்துக்குத் தெரியும். முதலாளிகள் ஒருசிலரே. எனவே, அவர்கள் எளிதாக ஒன்றுசேர்ந்து இணைந்து நிற்க முடியும். ஆனால், தொழிலாளிகள் ஏராளமாக இருப்பதால் அவர்களுக்குள் இணைப்பு ஏற்படுவது அருமை. மேலும், எத்தனை நாள் வேண்டுமானாலும் முதலாளி தன் நிலையிலேயே நீடித்து நிற்கமுடியும். அன்றாடம் வறுமையில் வாடும் ஏழைத் தொழிலாளி பணக்கார முதலாளியை எதிர்த்து எத்தனை நாள் நிற்க முடியும்? பொய்த்தோற்றங்கள் எப்படி இருந்த போதிலும், 'தொழிலாளரின் கூலியை ஓரளவுக்கு மேல்

அதிகரிக்கக் கூடாது என்பதில் முதலாளிகள் எங்கும், எப்போதும், எச் சந்தர்ப்பத்திலும் ஒத்த கருத்து உள்ளவர்களாகவே இணைந்து நிற்கின்றனர்' முதலாளி வலுவான நிலையில் இருக்கிறான். தொழிலாளிகள் ஒன்றுகச் சேர்வதால், அவர்களுக்குப் பெரும் பயன் எதுவும் விளைவதில்லை. பேரம் பேசும் அடிப்படையில் கூலி அமைகிறது. ஆனால், பேரம் பேசும் நிலையில் முதலாளிதான் இருக்கிறான். என்றாலும், குறித்த நிலைக்குக் கீழே நீடித்த காலம் கூலியைக் குறைக்க முடியாது. தொழிலாளர் கூலி அவன் வாழவும், குடும்பம் நடத்தவும் போதுமானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் தொழிலாளர் இனம் உலகில் நீடித்திருக்க முடியும். கூலி உறுதிக் கொள்கையின் சாயல் இங்குப் படிந்துள்ளது.

தொழிலாளருக்கு அனுகூலமான நிலைகளை ஆராயத் தொடங்கும்போது (தொழிலாளர் போதிய எண்ணிக்கையில் இல்லாதிருப்பது இத்தகைய நிலைகளில் ஒன்றாகும்) கூலி நிதிக் கொள்கையின் ஆரம்பத்துக்கு வந்துவிடுகிறோம். 'கூலியின் அடிப்படையில் பிழைப்பவர்கள் வேண்டிய அளவு கூலி கொடுப்பதற்கு இருக்கும் நிதி உயரும் அளவை விட அதிகரிப்பதற்கில்லை.' கூலி கொடுப்பதற்குரிய நிதி நாட்டின் செல்வத்தைப் பொறுத்துள்ளது. ஒரு நாட்டில் எவ்வளவு செல்வம் இருக்கிறதென்பது அவ்வளவு முக்கியமானதல்ல. கூலியைப் பொறுத்த வரையில் இச் செல்வம் தொடர்ந்து அதிகரிக்கிறதா என்பதே முக்கியம். எனவே, செல்வம் மிகுந்திருக்கும் நாட்டைக் காட்டிலும் செல்வம் உண்டாகிக் கொண்டே போகும் நாட்டில் தான் தொழிலாளருக்கு அதிகக் கூலி கிடைக்கும். பின்னர் வந்த உற்பத்திக் கூலிக் கொள்கையை நாம் இந்த இடத்தில் அணுகுவதுபோல் தோன்றுகிறது. 'தொழிலாளருக்கு அதிகக் கூலி கொடுப்பது நாட்டின் செல்வ அதிகரிப்பையே குறிக்கும். செல்வ அதிகரிப்பின் பொருளும் பயனும் இதுவே.' செல்வம் அதிகரிக்காது அப்படியே இருக்கும் நாட்டில் தொழிலாளர் கூலி குறைவாகவே இருக்கும்.

கூலியைப் பொறுத்தமட்டில் மால்தூஸ் கருத்தை முன்னதாகவே கூறிவிடுவதோடு இந்த அதிகாரம் முடிவடைகிறது.

'ஒவ்வொரு வகைப் பிராணியும் தனக்குக் கிடைக்கும் உணவு, வாழ்க்கை வசதிக்கேற்பப் பல்கிப் பெருகுகிறது. இந்த அளவுக்கு மேல் எதுவும் அதிகரிக்காது. நாகரிக சமுதாயத்திலே, தாழ்ந்த தரத்திலுள்ள மக்களிடையேதான் வாழ்க்கை வசதியின்மை

இனப் பெருக்கத்துக்குத் தடை விதிக்கும். அவர்களுக்குப் பிறக்கும் பெரும்பாலான குழந்தைகளை அழித்துவிடுவதன் மூலம் இத்தடை பயன்படுகிறது.'

இங்கு மால்தூசிய அடிப்படையில் அதிகக் கூலி தொழிலாளரின் எண்ணிக்கையைப் பெருக்கும். தொழிலாளர்கள் அதிகம் தேவைப்பட்டால், அதிக அளவில் தொழிலாளர் கிடைக்க அவர்களுடைய கூலி உயர வேண்டும். எனவே, தொழிலாளர் தேவைப்படும் அளவையே கூலி வீதம் பிரதிபலிக்கிறது.

'இவ்வாறுக, வேறெந்தப் பொருளையும் போலவே மனிதன் தேவைப்படும் அளவுக்கே உற்பத்தியாகிறான். இனப் பெருக்கம் குறைந்த கதியில் நடைபெறும்போது, தேவை அதை அதிகரிக்கச் செய்கிறது. இனப்பெருக்கம் மிக அதிகமாகிவிட்டால், தேவை குறைந்து இனப் பெருக்கத்தைத் தடுத்து விடுகிறது.'

மால்தூஸ் கொள்கையை இதைவிட இரத்தினச் சுருக்கமாக மால்தூஸே விளக்கிக் கூற முடியுமா என்பது சந்தேகமே. மால்தூஸே பொருமைப்படும் அளவுக்கு ஆடம் ஸ்மித் இதைச் சுருங்கக் கூறி விளங்க வைத்துள்ளார்.

பிந்திய கொள்கைகளை ஆடம் ஸ்மித் காலத்துக்கு முன்னரே தட்டுத்தடவி கூறியிருப்பதே ஆடம் ஸ்மித் கூலிக் கொள்கையின் சிறப்பு. இரண்டு கட்சிக்காரர்களின் பேரம் பேசும் அடிப்படையில், அவர்களுக்குள்ள திறமையின் அடிப்படையில் கூலி அமையுமென ஆடம் ஸ்மித் வலியுறுத்தி, அவைகளை வளரும், குறையும் நிலைப்புத் தன்மைகளாய் அமைத்து, எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதையும் விளக்கியுள்ளார்.

ஒன்பதாவது அத்தியாயத்தில் இலாபத்தை ஆராய்ந்துள்ளார் ஆடம் ஸ்மித். இலாபமும் தொழிலாளர் கூலியைப் போலவே ஒரு நாட்டின் செல்வம் அதிகரிப்பதையும் குறைந்து போவதையும் பொறுத்துள்ளது. ஆனால், இங்கே உறவுமுறை தலைகீழாக இருக்கிறது. மூலதனம் மிகுந்தால், கடும் போட்டியின் காரணமாக இலாபம் குறைந்துவிடும். இலாப வீதம் நடைமுதல் வட்டி வீதத்திலிருந்து அறியப்படலாம். அதிக வட்டி வீதம் இருக்கிறதென்றால், மூலதனத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவே பொருள். கூலியும் இலாபமும் எதிர் எதிர் வரிசையில் செல்லும் என்பது பொதுக்கொள்கை. தொழிலாளிகளை முதலாளிகள் பயன்

படுத்துவதால், அதாவது மூலதனம் உழைப்பைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நிலையல்ல இது. மூலதனம் அதிகம் இருப்பதால் கூலி அதிகரிக்கிறது. கூலி அதிகரித்தால் இலாபம் குறைகிறது. பொது விதிக்கு இரண்டு விதிவிலக்குகள் உண்டு. புதிய குடியேற்ற நாடுகளில் கூலியும் இலாபமும் ஒரே சமயத்தில் அதிகமாயிருக்கலாம். மக்கள் இடம் பெயராது வாழும் நாட்டில் எல்லா வகைச் செல்வங்களும் நிரம்பி இருந்தாலும் கூலியும் இலாபமும் குறைவாயிருக்கலாம்.

இதுவரை கூலியையும் இலாபத்தையும் பொதுவாகப் பார்த்தோம். பல்வேறு வேலைகளில் இதன் வேறுபாடுகளை எது நிர்ணயிக்கும். இதிலிருந்து கூலியைப் பொறுத்தவரையில் 'ஸ்மித்' கூறியுள்ளது அனைவரும் அறிந்த ஒன்றே (அதி. 10). பிடித்தமான தன்மை, அவற்றைக் கற்றுக்கொள்ளுவதில் உள்ள எளிமை, தொடர்ந்த வேலைவாய்ப்பு, கொண்டுள்ள நம்பிக்கை, ஏற்படக்கூடிய வெற்றி ஆகியவற்றைப் பொறுத்து வேலைகளில் கூலி வேறுபடும். இப் பிரச்சினையை அவர் ஆராய்ந்திருக்கும் முறை காலத்தால் அழியாது. இதன் நிலையான அமிசத்தைப் பழக்கம் எவ்வளவு மாற்ற முயன்றாலும் இது எக்காலத்தும் அழிந்துவிடாது.

இவர் கூறியுள்ள கருத்துகள் நியாயமானவையாகவும் பொருத்தமானவையாகவும் இருக்கின்றன. ஆனால், இவர் கூறியுள்ளவை யெல்லாம் ஒரு தொழிலிலிருந்து மற்றொரு தொழிலுக்குத் தொழிலாளரை எளிதில் மாற்றத்தக்க வேலைகளில் கூலி வேறுபாடுகளை மட்டுமே விளக்குவதாகக் கூறலாம். தொழிலாளர் அனைவரும் ஒன்றுசேர்ந்த கூட்டணியாக விளங்கவில்லை என்பதை இவர் எண்ணிப் பார்க்கவில்லை. அவர்கள் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற பல தொகுதிகளாக இருக்கின்றனர். நவீன மருத்துவர், தேர்ச்சியற்ற தொழிலாளர், ஹாலிவுட் நட்சத்திரம், அரசியல் பொருளாதாரப் பேராசிரியர் இவர்களுக்கிடையே உள்ள ஊதிய வேறுபாட்டினை ஸ்மித்தின் ஐந்து காரணங்கள் போதிய அளவு விளக்கவில்லை. ஊதிய வேறுபாட்டுக்கான இந்த ஐந்து காரணங்களில் இரண்டு காரணங்கள் மட்டுமே இலாபத்துக்குப் பயன்படத்தக்கவை யாகும். தொழில் பிடித்திருக்கிறதா, இல்லையா என்பதும், அத் தொழிலில் உள்ள கஷ்டப் பொறுப்பும் இந்த இரு காரணங்களாகும். மேலும், பிடித்த தன்மை என்பது தொழிலாளிகளைவிட முதலாளிகளையே அதிகம் பாதிக்கிறது. எனவே, பொதுவான அடிப்படையில் கூலி வீதங்களைவிட இலாப வீதம் குறைவாகவே வேறுபடுமென ஸ்மித் அனுமானிக்கிறார்.

இலாபத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில், மூலதனத்துக்குக் கிடைக்கும் மொத்த வருவாய்க்கு இணையானது இலாபமெனக் கூறுகிறார் ஆடம் ஸ்மித். எனவே, வட்டி என்பது இலாபத்தின் ஒரு பகுதியே. இதை வேறு சொற்களில் கூறுவதானால், மொத்த இலாபத்தையும் நிகர இலாபத்தையும் ஆடம் ஸ்மித் தனித் தனியே விரிவாக நுணுகி ஆராயவில்லை.

கடைசியாகக் குத்தகையை (அத்தியாயம் 11) எடுத்துக் கொண்டோமானால், ஆடம் ஸ்மித் இரு நிலை கருத்துள்ளவராக இருக்கிறார். இவர் முக்கியமாகக் கூறியுள்ளதைப் பார்த்தால், குத்தகை என்பது வலிந்து பறித்தல் என்றே பொருள்படும். 'நிலத்தின் உண்மை நிலைமைகளை உத்தேசித்துப் பார்த்தால், குத்தகை என்பது குத்தகைதாரர் மிக அதிகமாகக் கொடுக்கக் கூடியதாகும்.' எஞ்சி நிற்பது 'சிறு அளவுதான்; அதை வைத்துக் கொண்டு குத்தகைதாரர் நஷ்டப்படாமல் திருப்தியுற வேண்டும். இதற்குமேல் அவனுக்கு அளிக்க நிலக்கிழார் தயாராயில்லை.' எனவே, குத்தகை என்பது அபிவிருத்திக்குச் செலுத்திய மூலதனத்துக்கு நியாயமான இலாபமாக இருக்கும் நிலை மாறி விட்டது. அபிவிருத்தி செய்யப்படாத நிலத்துக்கும் நிலக்கிழார் குத்தகை கேட்கத் தொடங்குகிறார். பின்னர் ரிகார்டோ இந்த உம்மைத் தொகையையும் நீக்கிவிட்டு, அதுவே குத்தகையை நிச்சயிக்கிறது என்று தேற்றமாய்க் கூறுகிறார். எனவே, நிலத்தின் குத்தகை 'இயல்பிலேயே ஏகபோக விலையாக' இருக்கிறது. இயற்கை வாதிகள் கூற்றும் விசித்திரமாக இதற்கு இணையாக இருக்கிறது. இயற்கையின் தாராள புத்தியாலும் வாரி வழங்கும் வள்ளல் தன்மையாலும் குத்தகை ஏற்படுகிறது என்பதே அவர்கள் கொள்கை.

'எந்த நிலையிலும் பொருள்களை அங்காடிக்குக் கொண்டு வரும்வரையில் தொழிலாளர் செலவுகளுக்கு உபரியாகவே உணவுத் தானியங்களை நிலம் உற்பத்தி செய்கிறது. அதுவும் தொழிலாளர் தாராளமாகச் செலவு செய்வதற்கு அனுமதித்த பிறகே இந்த நிலை இருக்கிறது. எனவே, நிலக்கிழாருக்குக் குத்தகையாகக் கொடுப்பதற்கு எப்படியும் உபரி இருக்கவே செய்கிறது. இதையேதான் தங்கள் குழப்ப நிலைவிலும் இயற்கை வாதிகள் கூறுகின்றனர். இறுதி நிலையிலுள்ள நிலத்தை வைத்துக் கொண்டு ரிகார்டோ செய்யும் செப்பிடு வித்தை இங்கு இல்லை.

ஆடம் ஸ்மித்தின் பொருளாதாரக் கருத்துகளைச் சுருக்கும் வகையில் எடுத்துக் கூறுவதில் அவருடைய இரண்டாவது

புத்தகம் முதல் புத்தகத்தைவிடக் குறைந்த முக்கியத்துவம் உள்ளதாகவே இருக்கிறது. இது 'மூலதனத்தின் தன்மை, சேர்க்கை, பயன்பாடு' ஆகியவற்றை விவரிக்கிறது. இதிலுங் கூடச் சில அமிசங்களில் ஸ்மித்தின் முக்கியக் கோட்பாடுகளையே காண்கிறோம். மூலதனம் என்பதன் பொருள் விளக்கம், நிகரான மூலதனம், சுழற்சி மூலதனம் ஆகியவை குறித்து இவர் செய்துள்ள ஆராய்ச்சியை நாம் கவனித்துக்கொண்டு நிற்கவேண்டிய தில்லை. மூலதனத்தின் சேர்க்கை, பயன்தரு உழைப்பு, பயன்தரா உழைப்பு இவற்றின் வேறுபாடு ஆகியவை குறித்து இவர் கூறியுள்ளவற்றிற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. எனவே, இவற்றை நாம் இங்குக் கவனிக்காது விட்டுவிட முடியாது.

பயன்தரு உழைப்பு, பயன்தரா உழைப்பு என்ற பாகுபாடு இயற்கை வாதிகள் விட்டுச் சென்ற தீய எச்சமாகும். ஆனால், இவற்றில் புதிய பொருள் இருப்பதாக ஆடம் ஸ்மித் கருதுகிறார். உழைப்பால் பொருளின் மதிப்புக் கூடுமானால், அது பயன்தரு உழைப்பாகும். பயன்தரா உழைப்பு எவ்வளவு உபயோகமுள்ளதானாலும், அதனால் அப் பொருளின் மதிப்பு அதிகரிக்கவே செய்யாது. ஸ்மித் கூறுவதாவது: 'தயாரிப்பாளரின் உழைப்புக் குறித்த ஒரு பொருளில் அல்லது விற்பனை செய்யத் தக்க பொருளில் ஒன்றி வெளிப்படுகிறது. இதன் தனிமை அப் பொருளில் ஒருசில காலத்துக்காவது நீடித்து நிற்கும்.[1] எனவே, இது பயன்தரு உழைப்பாகும். இதற்கு மாறுகக் குற்றேவல் காரர் செய்யும் பணி பயன்தரா உழைப்புக்கு உதாரணமாகும். இந்தப் பணி செய்து முடிக்கப்பட்டவுடனேயே அழிந்துபடுகிறது. இவ்வாறே குற்றேவல் காரனுடன், அரசன், நால்வகைப் படையினர், மதகுருமார், வழக்குரைஞர், கோமாளிகள், நடன மணிகள் ஆகிய அனைவரும் இதே நிலையில் இருக்கின்றனர்.' அவர்கள் பணி நீடித்த பயன்தருவதல்ல. இவர்கள் செய்யும் பணி உடனேயே அழிந்துவிடும் தன்மை வாய்ந்ததாகும்.

ஆனால், அவை அவ்வாறு அழிந்து விடுவது உண்மைதானா என்ற ஐயவினாவைச் சாதாரண மனிதன் எழுப்புகிறான். உழைப்புக் காரணமாக விற்கத்தக்க பொருள் கிடைத்தால், அல்லது அப் பொருளை அதிக விலைக்கு விற்க வழி ஏற்பட்டால், அந்த உழைப்புப் பயன்தரு உழைப்பு என ஆடம் ஸ்மித் சோதித்து அறிகிறார். இந்த அடிப்படையிலேயே, ஸ்மித் பொருள் முதல் வாதி என ஜெர்மன் இலட்சியப் பள்ளியினர்

[1] 'நாடுகளின் செல்வம்', புத்தகம் II, அதிகாரம், 3.

அவர்மேல் கண்டனக் கணைகள் தொடுத்தனர், இவர்களுடைய கூற்றுப்படி ஆடம் ஸ்மித் கருத்து என்னவென்றால், அங்காடிக்குக் கொண்டுவந்து விற்கப்படுகின்ற அல்லது விற்கக்கூடிய பொருள்களெல்லாம் செல்வமே. எனவே, பொருள் மாற்ற மதிப்பு அதிகரிக்கும்போதெல்லாம் செல்வம் அதிகரிப்பதாகப் பொருள் கொள்ளவேண்டும். பயன்தரு உழைப்பு, பயன்தரா உழைப்பு என்ற பாகுபாடே, அதையொட்டி ஏற்பட்டுள்ள தகராறே இப்போது பொருளற்றதாக நமக்குப் புலப்படுகிறது. தீர்க்க முடியாத புதிர் போடுவதற்கு இது ஏற்ற அமைப்புதான். இதை எண்ணிப் பார்த்தால், சில சமயம் சிரிப்புத்தான் வருகிறது. இரு விஷயங்களை மட்டும் இங்குக் குறிப்பிடலாம். முதலாவதாக, ஸ்மித் கூறுகிற பொருளின்படி பார்த்தால், 'பயன்தரா வேலைகள் மிகப் பலவாயிருக்கும். என்றாலும், மறைமுகமாக இவை உயர்ந்த உற்பத்தித் திறன் உள்ளவையாக இருக்கக்கூடும். ஒரு தொழிலாளியின் உயிரைக் காப்பாற்றுகிற மருத்துவர், அதன்பின் அத் தொழிலாளி செய்யும் உழைப்பின் பயனை ஓரளவு அடைவது முறைதானே![1] கூலிப் பட்டாளத்தினால் உய்யப்பெற்ற ஒரு நாடு, பின்னர் அவர்களுக்கு அஞ்சலி செய்கையில், அவர்களுடைய பணி அவர்கள் செய்த மாத்திரத்திலேயே அழிந்துவிட்டது எனக் கூறுவது பொருந்துமா? அது அறிவுடைமை ஆகுமா? இரண்டாவதாக, அதே பணிகள் பொருள் மாற்ற மதிப்பை அதிகரிக்கவும் செய்யலாம், அதிகரிக்காமலும் இருக்கலாம். இனிப்புப் பண்டம் செய்து, அதை வெளிப் பகட்டாக சிற்றுண்டி விடுதி வாசலில் அலங்கரித்து வைக்கும் சரக்குக்காரர் தமது பயன்தரு உழைப்பைப் புகழ்ந்து கொள்ளலாம். விற்கத்தக்க பொருள் ஒன்றைத் தாம் நிலைபெறச் செய்தது குறித்து மகிழ்வடையலாம். ஆனால், சாதாரண சமையல்காரர் அல்லது குற்றேவலாளர் செய்த பணி அது செய்து முடிக்கப்பட்ட கணத்திலேயே அழிந்துபடுகிறது. இவர்களுடைய நிலை என்ன?

இதே அத்தியாயத்தில் ஆடம் ஸ்மித் சிக்கனத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார். மூலதனம் சேர்ப்பதற்கும் சிக்கனமே சிறந்த வழியெனக் கூறியுள்ளார். சிந்தனையாளர் ஆடம் ஸ்மித், தனியார் செல்வம் மட்டுமன்றி நாட்டின் செல்வம் பெருகவும் சிக்கனமே சிறந்த சாதனம் எனவும் கூறுகிறார். மூலதனம் அதிகரிக்கிறதென்றால், அதற்குச் சிக்கனமே காரணம்; தொழிலோ தொழிலாளரோ அல்ல. இதைப் பின்னர், லாடர்டேல் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், சேமிப்பு இயக்கத்தைப்

[1] இதை மில் பின்னர் உணர்ந்தாரென்றாலும், இதனால் குழப்பம் என்ற புதை குழியில் அவர் மேலும் அமிழ்ந்தே போனார்.

பரவச் செய்ய இதுவே ஏற்ற வழி. இது நியாயமான அளவு பழைய வழிவகைகளிலேயே அமைந்துள்ளது. ஒவ்வோர் ஊதாரியும் பொதுமக்களின் விரோதி ஆவான்; சிக்கனக்காரன் ஒவ்வொருவனும் பொது நன்மைக்குப் பாடுபடும் பரோபகாரி யாவான். இந்த நம்பிக்கைக்குரிய காரணங்கள் துடிப்புடன் கூறப்படுகின்றன. ஸ்மித் கூறியதன் முக்கிய சாராம்சம் இதைத் தன்னலத்துடன் தொடர்புபடுத்தியதுதான். அதுவே அவருடைய அடிப்படைக் கொள்கையாக அமைகிறது. இங்குச் சிக்கனம் போற்றப்படுவதால், அரசாங்கம் தவறுகள் பல செய்தபோதிலும் நாட்டினைக் காப்பாற்றும் சக்தி இதற்குண்டு.

'எனினும் அனுபவத்திலிருந்து பல இடங்களில் நமக்குத் தெரிவது என்னவென்றால், சிக்கனமும் நன்னடத்தையும், தனியார் ஊதாரித்தனத்தையும் தவறான நடத்தையையும் மட்டுமன்றி அரசாங்க ஊதாரித்தனத்தையும் ஈடு செய்ய வல்லவை. தன் நிலையை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு மனிதனும் தொடர்ந்து இடையீடின்றி விடாப்பிடியாக மேற்கொள்ளும் முயற்சி, நாட்டின் முன்னேற்ற வேகத்தைத் தொடர்ந்து இருக்கச் செய்யும் திறன் வாய்ந்ததாகும். அரசாங்க ஊதாரித்தனமும் நிர்வாகத் தவறுகளும் மலிந்துள்ளபோதிலும், இம் முயற்சி தொடர்ந்து இருந்தால் நாடு முன்னேற்றமடையும். தனியார் முயற்சியிலிருந்தே அரசாங்க வளமும், தனியார் செல்வக் கொழிப்பும் ஏற்படும். நோயும் நொடியும் இருந்தபோதிலும் மனிதன் நோய் தீர்க்கும் மருந்தால் தேகாரோக்கியம் மீண்டும் பெறுவதுபோல, பிராணி வாழ்க்கைக் கொள்கைக் கிணங்க, இங்கு யாவும் நன்றாகவே நடக்கும்.'

இங்குத் தன்னலமே சமுதாயத்தின் உயிர் மூச்சாக விளங்குகிறது. நாட்டின் விருப்பத்திற்கு மாறாக அதைக் காப்பாற்றவும் செய்கிறது.[1]

இரண்டாவது புத்தகத்தின் இறுதி அத்தியாயம் (அத்தியாயம் 5) மூலதனத்தைப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு வழிகள்,

[1] இதே அத்தியாயத்திலுள்ள மற்றொரு பகுதி தன்னலத்தின் நீடித்த நிலையான செல்வாக்கை வலியுறுத்துகிறது. ஆனால், இதிலிருந்து கிடைக்கிற பொது நன்மைகள் இங்குக் குறிக்கப்படவில்லை. ''சேமிக்குமாறு நம்மைத் தூண்டும் கோட்பாடு நம் நிலையை மேம்படுத்திக்கொள்ளும் நம் விருப்பத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இந்த விருப்பம் பொதுவாக அமைதியானது, உணர்ச்சி வயப்படாதது. நமக்குள்ள இத் 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' நம்மைவிட்டகலாது. இறக்கும் வரை இது நம்மைத் தொடர்ந்து வருகிறது. இவை இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தன் நிலையை மேலும் உயர்த்திக்கொள்ளவேண்டுமென மனிதன் எண்ணுத நேரமில்லை. தன் நிலையில் பூரண திருப்தி கொண்டு அவன் வாளா இருப்பதே இல்லை. தன் செல்வத்தை அதிகரிக்கச் செய்வதின்மூலமே பெரும்பாலான மனிதர்கள் தங்கள் நிலைமையை மேம்படுத்திக்கொள்ள விரும்பி முயல்கின்றனர்.''

பயனுள்ள உழைப்புக்கு உற்சாகமும் ஆதரவும் அளிக்கும் வகையில் அவற்றின் தராதர அனுகூலங்கள் ஆகியவற்றை ஆராய்கின்றது. இங்கு இயற்கைவாதிகளின் கருத்தோடு ஸ்மித் ஒட்டிச் செல்வது குறிப்பிடத் தக்கதாகும். எவ்வளவோ முயன்றும் இத் தொடரிலிருந்து ஸ்மித் தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

இரண்டாவதாக, அரசாங்கத் தலையிடாக்கொள்கை இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. இது பின்னரே விரிவாக ஆராயப் படுகிறது. மூலதனத்தை எந்தெந்த முறைகளில் பயன்படுத்தினால் சமுதாயத்துக்கு அனுகூலமாயிருக்குமென எண்ணிப் பார்த்து அதற்கேற்ற வகையில் ஒழுங்கு செய்து வழிவகைகளை நிருணயிப்பதே நம் முன்னுள்ள பிரச்சினை. விவசாயமே எல்லாவற்றிற்கும் தலையானதெனக் கருதுகிறார் ஆடம் ஸ்மித். 'குடியானவன் மூலதனத்தை ஈடுபடுத்திப் பலனுள்ள உழைப்பைப் பெறும் அளவுக்கு வேறெந்தத் தொழிலிலும் பெற முடியாது.' இவர் கூறும் காரணங்கள் இயற்கைவாதிகள் கூறும் காரணங்களாகவே இருக்கின்றன. வேளாண்மையில் இயற்கையே பெருமளவு ஒத்துழைக்கிறது என்ற அனுமானமே இதற்கு அடிப்படையாக விளங்குகிறது.

'உழைக்கும் தொழிலாளிகள் மட்டுமன்றி, உழைக்கும் கால்நடைகளும் விவசாயிக்குப் பயன் தரும் உழைப்பாளிகளே. விவசாயத்தில் மனிதனுடன் இயற்கையும் சேர்ந்து பாடுபடுகிறது. இயற்கை உழைப்பதால் நமக்குச் செலவு ஏதும் இல்லையென்றாலும், அதன் உழைப்பால் விளைந்த பயன் நமக்கே கிடைக்கிறது. அதிகக் கூலியென்னும் தொழிலாளர் உற்பத்தி செய்த பொருளுக்கு மதிப்பு இருப்பதுபோலவே, நமக்குச் செலவு எதுவும் வைக்காமல் இயற்கை உற்பத்தி செய்த பொருளுக்கும் மதிப்பிருக்கிறது.'

சுருங்கக் கூறின், மதிப்புள்ள ஒன்றை இயற்கையே உற்பத்தி செய்கிறது. இது துர்கோ கூறிய இயற்கை அளிக்கும் வெகுமதியேயாகும். வேளாண்மைக்குப் பின்னர், தயாரிப்பாளர்களையும் மூன்றுவதாக ஏற்றுமதி வர்த்தகத்தையும் வைத்துப் பேசுகிறார் ஆடம் ஸ்மித். இந்த இடத்தில் ஆடம் ஸ்மித் இயற்கைவாதிகள் செய்ததைப் போலவே வணிகவாதிகள் கூறிய மதிப்புக்களை மாற்றியமைத்துவிடுகிறார்.

வர்த்தகத்தைப் பொறுத்தவரையில், வெளிநாட்டு ஏற்று மதிப் பயன்பாட்டு வணிகத்தைவிட உள்நாட்டு வணிகமே சாலச்

சிறந்தது. வேலை வாய்ப்புகள் கிடைப்பதை எண்ணிப் பார்த்தால் உள்நாட்டு வணிகமே சிறந்ததாகும். ஆனால், பல வேலைகளிலும் மூலதனம் பங்கிடப்படுவதை, 'எவ்வித நிர்ப்பந்தங்களும் பலாத்காரமும்' இன்றி இயற்கைச் சக்திகளே நிர்ணயிக்க வேண்டும்.

ஒரு நாட்டின் செல்வத்தையும், அதிகாரத்தையும், வலிமையையும் பெருக்குவதே அந்த நாட்டின் அரசியல் பொருளாதாரத்தின் பெரு நோக்கமா யிருக்கவேண்டும். எனவே, உள்நாட்டு வணிகத்தைவிட வெளிநாட்டுப் பயன்பாட்டு வணிகத்துக்கு அது அதிக ஆதரவு அளிக்கக்கூடாது. இவை இரண்டிற்கும் மேலாக ஏற்றுமதி வணிகத்துக்கு அறவே ஆதரவு அளிக்கக்கூடாது. இவை இரண்டிலும் இயல்பாக மூலதனம் செலுத்தப்படும் அளவுக்குமேலாக அத்துறைகளில் அதிக மூலதனம் செலுத்துமாறு வலுக்கட்டாயப்படுத்தவுங் கூடாது. மயக்கு நிலையில் தூண்டவுங் கூடாது.

இவ்வாறுக, அரசாங்கத் தலையிடாக் கொள்கையின் திருவுருவாகிய ஆடம் ஸ்மித் நான்காவது புத்தகத்தில் தமது சிறந்த வாதத்துக்காகத் தன் சக்திகளை யெல்லாம் திரட்டி வைத்துக் கொள்கிறார்.

நான்காவது புத்தகம் 'அரசியல் பொருளாதார அமைப்புகள்' பற்றியதாகும். இதில் பெருமளவு வணிகவாதிகளும், சிறிதளவில் இயற்கைவாதிகளும் கண்டிக்கப்படுகின்றனர். இங்குதான் வணிகவாதிகளுக் கெதிராகச் சுயேச்சை வணிகம் வேண்டும்; அரசாங்கக் கட்டுப்பாடோ பாதுகாப்போ கூடாது என்ற வாதம் பலமாகக் கையாளப்படுகிறது. 'செல்வம் என்பது பணமே. அதாவது பொன்னும் வெள்ளியும்.' இதுதான் வணிகவாதிகள் கூற்று என ஆடம் ஸ்மித் அடித்துப் பேசுவது அவ்வளவு சரியில்லை. ஆனால், இங்கு நாம் ஸ்மித் கருத்துகளைத்தான் ஆராய்கிறோமே ஒழிய, மற்றவர்களின் கருத்துகளுக்கு அவர் தரும் விமர்சனத்தை அல்ல; அது நாம் எடுத்துக்கொண்ட வேலையுமல்ல. ஆடம் ஸ்மித் கருத்தைச் சுருக்கமாகக் கூறுவதானால், மற்றப் பொருள்களைப் போன்றவையே பொன்னும் வெள்ளியும். எந்த நாட்டுக்கும் தேவைப்படும் பொன்னும் வெள்ளியும் சாதாரண வணிக முறையிலேயே கிடைத்துவிடும்.

'மது வகைகளை வாங்க நினைக்கும் நாட்டிடம் அதற்கேற்ற பொருள் வசதி இருந்தால், அவற்றை அந்த நாடு கண்டிப்பாக

வாங்கவே செய்யும். அதேபோல, பொன்னையும் வெள்ளியையும் வாங்க வசதி படைத்த நாட்டிலே இவற்றிற்கு ஒரு குறைவும் இருக்காது. மற்றப் பொருள்களைப்போலவே இவற்றிற்கும் ஒரு விலையுண்டு. அவை மற்றப் பொருள்களுக்கு விலையாயிருப்பது போலவே, மற்றப் பொருள்கள் இவற்றின் விலையாக இருக்கின்றன.'[1]

கட்டுப்பாடற்ற சுயேச்சை வணிக நிலையில், நமக்கு மது வகைகள் கிடைப்பதைப்போலவே, நாம் விரும்பும் பொன்னும் வெள்ளியும் நமக்குக் கிடைக்கும். மேலும், இவை கிடைப்பதற்கு ஒரு வரையறையும் அவற்றிற்கு அதிக மதிப்பும் இருப்பதால், தேவைக்கேற்பத் தன்னை ஒழுங்கு படுத்திக்கொள்ளும் தன்மை மற்றப் பொருள்களைவிட இதற்கே மிகுதியும் உண்டு.

இதுமட்டுமல்ல, நவீனப் பணக்கொள்கை கூறுவதைப் போலவே, பொன்னையும் வெள்ளியையும் வெளியே செல்லாமல் ஒரு நாட்டில் கட்டிக் காக்க முடியாது; அவ்வாறு செய்ய முயல்வது வீண் முயற்சியே என்று ஆடம் ஸ்மித் வாதாடுகிறார். வணிக முறையில் அவை செல்லவேண்டியபோது அவை வெளியேறுவதை எதுவும் தடுக்க முடியாது. ஸ்பெயினும், போர்ச்சுகலும் இவ் வெளியேற்றத்தைத் தடுக்கப் பல சட்டங்கள் இயற்றிய போதிலும், பொன்னும் வெள்ளியும் அந்த நாடுகளைவிட்டு வெளியேறவே செய்தன. அந்த நாடுகளில் அவை அதிக அளவில் இருக்கும்போது அவற்றின் மதிப்புக் குறைவதால், அவற்றிற்கு அதிக மதிப்புள்ள நாடுகளுக்கு அவை போகத்தானே செய்யும். இது நமக்குத் தெரிந்ததே. இதையே ஹ்யூமும் கூறியுள்ளார் எனக் கண்டோம். பொன் உரிய அளவுக்குமேல் ஏற்பட்டிருந்தால் விலைவாசிகள் ஏறும். அதனால், அந்த நாட்டுக்கு எவரும் பொருள்களை ஏற்றுமதி செய்யவே விரும்புவர். அந்த நாட்டிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்ய எவரும் முன்வரமாட்டார்கள். இதனால், அந்த நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குப் பொன் போய்விடும். சமநிலை மீண்டும் ஏற்பட்டு விலைவாசிகள் பழைய நிலைக்குத் திரும்புகிறவரையில், இவ்வாறு பொன் வெளியேறுவது நிற்காது. மற்றப் பொருள்களைப்போலப் பொன்னும் வெள்ளியும் அவ்வளவு அவசியமானவையல்ல. 'வாழ்க்கை வசதிப் பொருள்கள் பேரிய அளவு இராவிட்டால் மக்கள் பட்டினியால் படுதுயருற வேண்டியதுதான்.' பொன்னும் வெள்ளியும் இன்றிக் கரென்சி நோட்டுகளை, காகிதப் பணத்தை

[1] அதே ஏடு, புத்தகம் IV, அதிகாரம் 1.

வைத்துக்கொண்டா காலந்தள்ள முடியும். ஒரு நாட்டுக்கு வேண்டிய அளவு பொன்னையும் வெள்ளியையும் வெளிநாடுகளிலிருந்து வாங்குவதற்கு அந்த நாட்டு உற்பத்திப் பொருளில் ஒரு பகுதியே போதுமானதாகும். எஞ்சிய பெரும்பகுதி உள்நாட்டிலேயே பயன்படுகிறது. வெளிநாட்டுக்கு அனுப்பப்படும் பொருள்களில் பெரும்பகுதி வெளிநாட்டுப் பொருள்களை வாங்கவே பயன்படுகிறது. வணிகவாதியின் தங்க நாட்டமின்றியே இவையெல்லாம் தொடர்ந்து நடைபெற முடியும். எனவே, ஸ்மித் வாதத்தின் கருப்பொருள் இதுதான். தங்கத்தில் மாயச்சக்தி எதுவுமில்லை. தங்கம் மற்றப் பொருள்களுக்குக் கீழ்ப்பட்டதுதான். எனவே, அது குறைந்த முக்கியத்துவம் உள்ளதே;

'பணம் வாங்குவதைத் தவிர வேறு காரியங்களுக்கும் மற்றப் பொருள்கள் பயன்படும். ஆனால், பொருள்களை வாங்குவதற்குப் பயன்படுவதைத் தவிர, பணத்தால் வேறு என்ன பயன்? எனவே, பொருள்களை நாடிச் செல்வது பணமே ஒழிய, எப்போதும் பணத்தைநாடிப் பொருள்கள் செல்வதில்லை.'[1]

'வணிகத்தை விருத்தி செய்ய, தங்கம் தானே உன்னை வந்தடையும்.' இதுவே இவ் விஷயத்தில் ஆடம் ஸ்மித் போதனையின் சாரம். தங்கமே நீடித்து நிற்கக்கூடிய செல்வம் என்ற கருத்து தவறான அடிப்படையில் ஏற்பட்டதாகும். மதுவைவிட இரும்புச் சாமான்கள் நீடித்து நிற்கக்கூடியவை. இதனாலேயே, இரும்புச் சாமான்களை நாம் ஏராளமாகச் சேர்த்து வைத்துக்கொள்கிறோமா என்ன? இரும்புச் சட்டி, பானை, வாணலிகளை நாட்டிலே அளவுக்கதிகமான அளவு நாம் உற்பத்தி செய்வதில்லை. இந்தப் பாத்திரங்கள் பயன்படக் கூடிய அளவுக்கே அவற்றை உற்பத்தி செய்வோம். இவ்வாறு மதிப்புள்ள பொன், வெள்ளி உலோகங்கள் பயன்படக்கூடிய அளவுக்கே ஒரு நாட்டில் அவற்றைச் சேர்த்து வைத்துக்கொள்ளலாம். பொன், வெள்ளியின் பயன்களைப் பெருக்கினால், அவற்றின் அளவு அதிகரிக்கவே செய்யும். பயன்படும் அளவைவிடப் பொன்னையும் வெள்ளியையும் செயற்கையாகப் பெருக்கிக்கொண்டே போனால், அவை அந்த நாட்டைவிட்டு வெளியேறுவதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

தங்கத்தையும் வெள்ளியையும் அடைவதற்காக வெளிநாட்டு வணிகம் இருக்கவில்லை என்று வைத்துக்கொண்டால், அதனால்

[1] அதே ஏடு, புத்தகம் IV, அதிகாரம் 1.

வேறு என்ன பயன் என்பதை இப்போது காண்போம். தெளிவான இருவகைப் பயன்கள் ஏற்படுவதாக ஆடம் ஸ்மித் கூறுகிறார். நாட்டிலே உபரியாயுள்ள பொருள் இதனால் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாவதுடன், உள்நாட்டில் தேவைப்படும் பொருள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகிறது. வெளி நாட்டு வணிகத்தால் ஏற்படும் பயனை இவர் இவ்வாறு விளக்கு கிறார்: 'வெளிநாட்டு வணிகம் இருப்பதால்தான் தொழில் பிரிவினை எந்த ஒரு துறையிலும் முடங்கிக் கிடக்காமல் இருக் கிறது. உள்நாட்டுச் சந்தைமட்டும் இருந்தால் தொழில் பிரிவினை நிறைவெய்தாது. வெளிநாட்டு வணிகம் இருப்பதால்தான் தொழில் பிரிவினை பூரணத்துவம் பெறுகிறது.' வெளிநாட்டு வணிகம் என்பது ஆடம் ஸ்மித்தின் கருத்துப்படி உள்நாட்டு வணிகத்தின் அடுத்த வளர்ச்சி நிலையே. இது தொழில் பிரிவினையை விஸ்தரிக்கிறது; ஒவ்வொருவரும் தனக்கெனத் தனித்தன்மை வாய்ந்த தொழில் பெறுவதற்கு இது உதவுகிறது; இதனால் மாற்றிக்கொள்ளும் பொருள்கள் மல்கிப் பெருகுகின்றன.

வணிகவாதக் கொள்கைகளை ஆடம் ஸ்மித் பொதுவாகக் கண்டித்ததை இதுகாறும் கண்டோம். மற்றப் பொருள்களைப் போலவே பொன்னும் ஒரு பொருளே என்று ஆடம் ஸ்மித் வாதிக் கையில், அவர் தம் நிலையை எல்லைமீறிச் சொல்லுகிறாரோ என்ற ஐயம் நம்மை ஆட்கொள்கிறது. முதற்கண் வேண்டுமானால், அது அவ்வாறு இருந்திருக்கலாம். எக்காரணம் பற்றியேனும் ஒரு பொருள் சர்வதேச நாணயச் செலாவணியாக ஏற்பட்டுவிட்ட நிலையில், எப்பொருளையும் அதைக்கொண்டு வாங்கி விற்கலாம் என்ற நிலையில், அதற்குச் சில சிறப்பான தன்மைகள் ஏற்பட்டு விடும். நாணயச் செலாவணியாக ஆவதற்குமுன் இத்தன்மைகள் அதனிடம் இருந்திருக்காது. அது நாணயச் செலாவணி ஆன பின்னர், மற்றப் பொருள்களினின்றும் ஓரளவு வேறுபட்டே இருக்கும். தங்கம் சர்வதேசச் செலாவணியாகும். அதைக் கொண்டு எங்கும் எதையும் வாங்கி விடலாம்; விற்கவும் செய்யலாம். இத்தகைய நிலையில் ஆடம் ஸ்மித் கூறியதுபோல் சட்டிகள், பானைகள் போன்று அதுவும் ஒரு பொருளல்ல; இதற்கு வேறுபட்ட தனித்தன்மை இருக்கிறது.

அடுத்தபடியாகச் சாதக வணிகநிலை அடைவதற்கு வணிக வாதிகள் கையாண்ட பல உபாயங்களை ஆடம் ஸ்மித் ஆராயத் தொடங்கினார். இறக்குமதிக் கட்டுப்பாடுகள் குறித்து இவர் எழுதியுள்ள அதிகாரங்களே கருத்துக் களஞ்சியமாக, அறிவுப் பெட்டகமாக விளங்குகின்றன. இருவகைக் கட்டுப்பாடுகளை

இவர் வேறுபடுத்திக் காட்டுகிறார். உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை எந்த வெளிநாட்டிலிருந்தும் இறக்குமதி செய்வதற்கு விதிக்கும் தடை ஒரு வகைக் கட்டுப்பாடு; இரண்டாவது கட்டுப்பாடு குறித்த வரையறையுள்ளது. எந்தெந்த நாடுகளுடன் நமக்குச் சாதக வணிகநிலை இல்லையோ, அந்த நாடுகளிலிருந்துமட்டும் இறக்குமதி கூடாது என்று விதிக்கும் தடையே இரண்டாவது கட்டுப்பாடு. இது வணிகவாதக் கருத்தேயாகும். முதல் கட்டுப்பாடு உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற் கென்றே விதிக்கப்படுவதாகும். அப்போதுதான் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஏகபோக உரிமை கிடைக்கும். இதைக் குறித்த ஒரு தொழிலுக்குப் பயன்படுத்தினால் மூலதனமும் தொழிலாளரும் அத் தொழிலை நாடியே வருவர். ஆனால், எத் தொழிலும் இருக்கும் மூலதனத்தின் அளவுக்கேற்பவே வளர முடியும். எனவே, இத்தகைய கட்டுப்பாட்டினை அமல்படுத்துவதால்மட்டும் அந்த நாட்டில் மூலதனம் பராமரிக்கக்கூடிய அளவுக்குமேல் தொழில்களின் எண்ணிக்கையால் பெருக்கிவிட முடியாது. எனவே, காப்புவரித் தொழிலை ஒரு வர்த்தகத்திலிருந்து மற்றொரு வர்த்தகத்துக்கு மாற்ற மட்டுமே செய்யும்.'[1]

மேலும், காப்புவரி விதிப்பால், மூலதனம் அனுகூலமான துறையிலிருந்து அனுகூலம் குறைந்த துறைக்குப் போகவும்கூடும் என்று ஆடம் ஸ்மித் வாதிக்கிறார். இதற்கு இரு காரணங்கள் காட்டுகிறார். முதலாவதாக, தன் பணம் பத்திரமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வியாபாரி தன் மூலதனத்தை உள்நாட்டு வணிகத்தில் முடக்கவே விரும்புவான்; வெளிநாட்டுப் பயன்பாட்டு வணிகத்தில் மூலதனத்தை முடக்க முற்படமாட்டான்; அப்படியே பயன்பாட்டு வணிகத்தில் முடக்கினாலும், ஏற்றுமதி வணிகத்தில் மூலதனம் போட முன்வர மாட்டான். ஒரு நாட்டுக்கு மூலதனத்தால் பயன் விளைய வேண்டுமெனில் இந்த முறைப்படியே மூலதனத்தைப் பயன்படுத்த வேண்டும். இரண்டாவது காரணம் மேலும் அடிப்படையானது. இது ஸ்மித் கொள்கையின் மையக் கருத்துக்கே நம்மைக் கொண்டு செல்கிறது. ஒவ்வொருவரும் இலாபம் பெறவே முனைகின்றனர். எனவே, எதில் அதிக இலாபம் கிடைக்குமோ அதில்தான் மூலதனத்தை முதலீடு செய்ய ஒவ்வொருவனும் விரும்புவான். மதிப்பு மிகுந்த பொருள் உற்பத்தி செய்வதில்தான் அவன் தன் மூலதனத்தை முடக்குவான். ஆனால், நாட்டில் உற்பத்தி செய்யப்

[1] அதே ஏடு, புத்தகம் IV, அதிகாரம் 2.

படுவதெல்லாம் ஒருங்கு சேர்ந்ததே அந்த நாட்டின் பெரு மொத்த ஆண்டு வருமானம். எனவே, ஒவ்வொருவனும் தன்னலத்தைப் பேணி வளர்க்கையில் தானறியாமலேயே நாட்டின் செல்வத்தை அதிகரிக்க உதவி செய்கின்றான்.

'பொது நலத்தை வளர்ப்பது அவன் குறிக்கோள் அல்ல. அவன் அதை எந்த அளவு வளர்க்கிறான் என்பதும் அவனுக்குத் தெரியாது. வெளிநாட்டுத் தொழிலைவிட, உள்நாட்டுத் தொழிலை அவன் விரும்புவதற்குக் காரணம் தன்னலமே. தன்னை உறுதியுடன் நிலைநாட்டிக் கொள்ளவே அவன் அவ்வாறு செய்கிறான். அத்தொழிலில் அதிக மதிப்புள்ள உற்பத்தி ஏற்படச் செய்யும் போதும் தனக்கு இலாபம் கிடைக்கவே அவன் அவ்வாறு செய்கிறான். மற்றத் துறைகளில் இருப்பதைப் போலவே, இதிலும் இவன் விதியின் கை இழுத்துச் செல்லும் வழியே செல்கிறான். எனவே, பொது நலத்தை வளர்ப்பது இவன் உத்தேசமாயிராதபோதிலும், தன்னை அறியாமலேயே பொதுநலத்தை அவன் பேணி வளர்க்கிறான்.'

இவ்வாறு விதியின் கையின் குறுக்கீட்டால் இலாப நோக்கமே பொதுநல வளர்ச்சியாகப் பரிணமித்து விடுகிறது. அரசாங்கத் தலையிடாக் கொள்கையின் பகுதி மத அனுமதியும் இதுவே. ஒவ்வொருவரும் தன்னலத்தை நாடிப் போகையில், தன்னலம் எது என்பதை ஒவ்வொருவனும் நன்கு அறிவான். அந்தந்த நிலைமைகளை அனுசரித்து முடிவு செய்யும் திறமை அரசாங்கத்தைவிடத் தனி மனிதனுக்கே அதிகமுண்டு. அவனுக்குத்தானே தன் நிலவரம் சரியாகத் தெரியும்! தனி மனிதன் தன் மூலதனத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென அரசாங்க அதிகாரி ஆணை பிறப்பிப்பது அனுவசிய நடிவடிக்கையாகும். தனியார் துறையில் இந்தக் குறுக்கீடு தேவையற்றதாகும். இறக்குமதிகளை அரசாங்க ஆணைமூலம் கட்டுப்படுத்துகையில் இந்நிலையே ஏற்படுகிறது. வணிகமும் தொழிலும் இயல்பிலேயே இருந்திருக்கக் கூடிய துறை மாறி, அரசாங்க ஆணையில் வேறு துறையில் புகுகின்றன. எனவே, காப்புவரி பயனற்றது அல்லது தீங்கு விளைவிக்கக் கூடியது. காப்புவரி யின்றியே உள்நாட்டுப் பொருள் வெளிநாட்டுப் பொருளைப்போலவே மலிவாயிருந்ததால், காப்புவரி பயனற்றதாகும். மலிவான சந்தையில் பொருள்களை வாங்குவதனின்றும் அது மக்களைத் தடுத்தால், காப்புவரி தீங்கு விளைவிப்பதாகும்.

'புத்திசாலியான வீட்டுத் தலைவன் எவனும் வெளியே ஒரு பொருளை வாங்குவதற்கு ஆகும் செலவைவிட, ஒரு பொருளைத் தன் வீட்டிலேயே செய்வதற்கு அதிகச் செலவு ஆகுமானால், அவன் அப் பொருளை வெளியில் வாங்குவானேயன்றி வீட்டில் செய்யமாட்டான். தனி வீட்டுக்குப் பொருந்தும் இக் கொள்கை பெரிய சாம்ராச்சியத்துக்கும் பொருந்தும். தனிப்பட்ட குடும்பத்தில் புத்திசாலித்தனம் எனக் கருதப்படும் ஒரு காரியம், ஒரு நாட்டின் விஷயத்தில் முட்டாள்தனமாகாது.' [1]

சுயேச்சை வணிகத்துக்கு ஆதரவாக ஸ்மித் கூறும் வாதத்தின் சாராம்சம் இதுவே. நல்வாய்ப்பாக, நாம் இதை இங்கு விரிவாக ஆராய வேண்டியதில்லை. சுயேச்சை வணிகத்துக்குரிய ஆதாரங்களை ஆராயாமலேயே ஆடம் ஸ்மித்தின் வாதம் அவர் காலத்தில் நிலவிய கருத்துகள், சூழ்நிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருப்பதை ஈண்டுக் குறிப்பிடலாம். இவர் அடிப்படையான இரண்டு வாதங்களைக் கையாளுகிறார். முதலாவதாக, இயற்கை விதியை ஒட்டியே மனிதன் தன் மூல தனத்தையும் உழைப்பையும் ஈடுபடுத்துகிறான். இந்த இயற்கை விதி நாட்டின் கண்ணோட்டத்தில் பார்த்தோமானால், அனுகூல இறங்குமுக வரிசையில் இருக்கிறது. அக்காலத்தில் மூலதனம் அதிகமாக இடம் பெயராமல் இருந்தது. எனவே, இது அக்கால நிலைமைகளுக்குப் பொருந்தும். மேலும், அக்காலத்தில் மூல தனத்தை மக்கள் தங்கள் பார்வையிலேயே வைத்துக்கொள்ள விரும்பினர். எனவே, மூலதனம் அந்தந்த நாட்டிலேயே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. இப்போது வெளிநாடுகளில் மூலதனம் முதலீடு செய்வதும், தொழிலும் நிதியும் சர்வதேச வியாபகம் பெற்றுள்ளதுமாக ஆகிவிட்ட நிலையில் இது பொருந்தாக் கூற்றே. இக்கால நிலைமைகளுக்கு இக்கொள்கை ஏற்றதாயில்லை. இரண்டாவதாக, இழுத்துச் செல்லும் விதியின் கையை எடுத்துக் கொள்வோம். நாம் சொந்த நலனை முன்னிட்டுப் பாடுபட்டாலும், அது இந்த விதியின் கையின் விசேஷத்தால் பொது நலனிலே முடிவதாக ஆடம் ஸ்மித் கூறுகிறார். உண்மையைக் கூறுமிடத்து, இதை நாம் நம்பத் தயாராயில்லை. இதற்கு மாறுகத் தன்னலம் பொது நலனுக்கு விரோதமாயிருப்பதைக் கண்கூடாகக் கண்டுள்ளோம். தனி மனிதனின் செல்வச் செழிப்பு சமூதாய நலனுக்குக் குந்தகம் விளைவிக்கிறது. ஸ்மித் கூறுகிற இயல்பான கணித ஒற்றுமை ஏற்படுவதற்கில்லை. அப்படியிருந்தால், மக்களைத் தடுத்து நிறுத்தும் சக்தி ஒன்று வேண்டும். பொது நலனுக்குக்

[1] அதே ஏடு, புத்தகம் IV, அதிகாரம் 2.

குந்தகம் விளைவிக்கா வகையில் மக்களைத் தடுக்க அரசாங்கமே இச் சக்தியாக விளங்க முடியும். எனவே, அரசாங்கத் தலையிடாக் கொள்கையில் நாம் நம்பிக்கை இழந்துவிட்டோம். எனவே, அரசாங்கம் தலையிடுவதன் முட்டாள்தனத்தையும், வணிகத் தடைகளால் நேரிடும் பயங்கர விளைவுகளையும் ஆடம் ஸ்மித் வருணிக்கும்போது, நமக்கு இப்போது எவ்வித உத்வேகமும் முன்போல் உண்டாவதில்லை. ஸ்மித் பிந்திய தலைமுறைகளில் வந்த சுயேச்சை வணிகக்கொள்கை வெறியாளர்களைப் போன்றவர் அல்ல. உள்நாட்டுத் தொழிலை ஊக்குவிப்பதற்காக வெளிநாட்டின்மீது இரு சுமைகளை சுமத்தக்கூடிய இரு விஷயங்களை இவர் குறிப்பிடுகிறார். வேறு இரண்டு விஷயங்களிலும் இதை ஆராயவேண்டுமெனக் கூறுகிறார். இவற்றில் இரண்டேனும் சுயேச்சை வணிகக் கொள்கையினின்றும் பெரிதும் மாறுபட ஸ்மித்தை மேற்கோள் காட்டுவதாக அமைந்துள்ளன. 'நாட்டின் பாதுகாப்புத் தேவையை முன்னிட்டு குறித்தவகைத் தொழிலை மேற்கொள்ளுவது' முதல் விலக்காகும். நாட்டின் செல்வ வளர்ச்சியைவிட பாதுகாப்பே முக்கியமானது. சர்வதேசப் பரந்த கொள்கைகளை ஆடம் ஸ்மித் கொண்டிருந்தபோதிலும், அவர் தலைசிறந்த தேசீயவாதியாகவே திகழ்கிறார். எனவே, நாவாய்ச் சட்டத்திற்கு அவர் ஒப்புதல் அளிக்கிறார். இக்காலத்தில் போர் ஏற்படின், நாட்டின் செல்வம் முழுவதும் எதிரியை முறியடிக்கப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இந்த விலக்கை ஏற்றுக்கொள்வோமானால், ஸ்மித் காலத்தில் இருந்ததைவிட இப்போது இது பேரளவில் பயன்படும்.

இரண்டாவது விலக்கு இக் காலத்துக்கு அவ்வளவு முக்கியமானதல்ல. ஒரு பொருளின் உள்நாட்டு உற்பத்திக்கு ஏற்கெனவே அதற்கு ஆயத் தீர்வை விதிக்கப்பட்டிருக்கிற நிலையில் அதற்கு இறக்குமதித் தீர்வை விதிப்பதற்கு இவ் விலக்கு சம்பந்தப்படுகிறது. உள்நாட்டு, வெளிநாட்டுப் பொருள்களுக்கிடையே இது சமநிலை உண்டாக்குகிறது. எனவே, சம வாய்ப்பு அளிப்பதால், இவ்வாறு தீர்வை விதிப்பது சரியே. ஆராய்வதற்குரிய இரண்டு முறைகளில் ஒன்று பதிலடி கொடுக்கும் வகையில் தீர்வை விதிப்பதாகும். வெளிநாடு அதிகத் தீர்வை விதித்திருக்கும் நிலையில் அதைப் போக்குவதற்காக நாம் அந்த நாட்டுப் பொருள்களின் இறக்குமதிப் பொருள்களுக்குக் கடுந்தீர்வை விதிப்பதே இந்த நடவடிக்கை. இவ்வாறு செய்வதால் வெற்றி கிட்டுவதாயிருந்தால், ஆடம் ஸ்மித் அதை ஆதரிப்பார். அது வெற்றியடைந்தாலும் அடையாவிட்டாலும், அவர் அரசியல்வாதியைக் கெட்டிக்காரப் பிராணி என்றே இகழ்ச்சியாகக் குறிப்பிடுகிறார்.

நான்காவது விலக்கு (ஆராய்வதற்குரிய இராண்டாவது அம்சம்), சுயேச்சை வணிகம் பறிபோன நிலையில் எந்த அளவுக்கு எந்த முறையில் அதை மீண்டும் உயிர்ப்பிப்பதைப் பற்றியதாக இருக்கிறது. இந்த வாதம் நவீன காலத்துக்கும் பொருந்துவதாயிருக்கிறது. சுயேச்சை வணிகத்தைத் திடீரென மீண்டும் கொண்டு வந்தால் பலர் வேலை இழப்பர். அந்நிலையில் போட்டியை உடனடியாக எதிர்க்க முடியாமல் பல தொழில்கள் நசித்துப் போகும். இதன் காரணமாகப் பலரும் வேலை இழப்பர். இதை ஆடம் ஸ்மித் உணர்ந்துள்ளார். 'இந்த நிலையில் சுயேச்சை வணிகத்தைப் படிப்படியாகவே மீண்டும் கொண்டுவர வேண்டுமென மக்கள் விரும்புவர். அவ்வாறு கொண்டுவருகையில் மிகுந்த கவனமெடுத்துக்கொண்டு பல விஷயங்களையும் ஆராய்ந்து அவற்றின் சாதக பாதகங்களை அலசிப்பார்க்க வேண்டும்.' வேலையின்மை ஏற்படக் கூடாதென்பதற்காக சுயேச்சை வணிகத்தை மீண்டும் கொண்டுவருவதை ஒத்திப்போட ஆடம் ஸ்மித் இசைந்துள்ளது இக்கால நிலைமைக்கும் ஏற்றவாறு இருக்கிறது. வேலையின்மையைப் போக்க அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்ற கோரிக்கை எங்கும் எழுந்துள்ள இக்காலத்தில், மக்கள் இவர் கொள்கையை வரவேற்கவே செய்வர்.

இறக்குமதிக்கு விதிக்கப்படும் இரண்டாவதுவகைக் கட்டுப்பாடுகளை ஸ்மித் கண்டிப்பதிலிருந்து பொது அக்கறையுள்ள இரண்டு அமிசங்கள் ஏற்படுகின்றன (இக் கட்டுப்பாடுகள் சாதக வணிகநிலை இராத நாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதற்குச் சம்பந்தப்பட்டவையாகும்).[1] முதலாவதாக, மற்ற நாட்டிலை வறுமையில் ஆழ்த்துவதே ஒரு நாட்டுக்கு நன்மையாக இருக்கும் என்ற வணிக வாதிகளின் கொள்கைக்கு எதிராக இவ் விஷயங்களில் எல்லா நாடுகளுக்கும் பொதுவான நலம் இருப்பதாக ஆடம் ஸ்மித் அறிவிக்கிறார். இந்த அமிசத்தில் இயற்கை வர்த்தகளும் டேவிட் ஹ்யூமும் இவருடன் ஒத்த கருத்து உள்ளவர்களாகவே இருக்கின்றனர். 'எவ்வித வற்புறுத்தலும் தடையும் இன்றி நடத்தப்படுகிற வணிகம் இரு நாடுகளுக்கும் நன்மையேயாகும்.' அத்தகைய வணிகம் இரு பாலாருக்கும் அனுகூலமாயிருக்கும். யுத்த காலத்தில் இது எப்படியிருந்த போதிலும், சமாதான காலத்தில் ஒரு நாட்டைச் சுற்றியுள்ள நாடுகள் அனைத்தும் வளம் கொழித்தால்தான், அது அந்த நாட்டுக்கு அனுகூலமாயிருக்கும் 'ஓர் ஊரிலே பணக்கார வாடிக்கைக்காரன் இருந்தால், அவனே ஏழை வாடிக்கைக்காரனைவிட

[1] அதே ஏடு, புத்தகம் IV, அதிகாரம் 3.

அவ்வூர் மக்களுக்கு பயனுள்ளவனுயிருப்பான். வளங் கொழிக்கும் நாட்டின் விஷயத்திலும் இது பொருந்தும்.' இரண்டாவது அமிசம் ஆடம் ஸ்மித் பொதுக் கொள்கை ஒன்றைப் புகுத்துவதே. வணிகச் சமநிலையைவிட, ஆண்டு உற்பத்திப் பயன்பாட்டுச் சமநிலை இருப்பதே முக்கிய சமநிலையாகும் என ஆடம் ஸ்மித் புதுக் கொள்கை ஒன்றைக் கூறுகிறார். ஒரு நாட்டின் வளத்தைச் சோதிப்பதற்கு இதுவே ஒரு சிறந்த உரைகல்லாகும். வெளி நாட்டு வணிகமின்றித் தனித்து வாழும் நாட்டிலும் இந்த நிலை ஏற்படக்கூடும். வணிக வாதிகளின் கருத்துப்படி, ஒரு நாட்டுக்குச் சாதக வணிக நிலை இல்லாதபோதிலும், அந்த நாட்டின் உற்பத்திப் பொருள்கள் பயன்படுத்தும் அளவுக்கு அதிகமாய் இருந்தால் அந்த நாடு செல்வம் கொழிக்கும் நாடகவே விளங்கும். ஆனால், ஆடம் ஸ்மித் இக் கொள்கையைக் குறிப் பிடுவதோடு நிறுத்திக்கொண்டார். அதை அவர் விவரித்துக் கூறவில்லை.

வணிகவாதிகளை எதிர்த்துத் தீர்த்தபிறகு, ஆடம் ஸ்மித் இயற்கைவாதிகள் கூற்றினைக் கண்டிக்கத் தொடங்குகின்றார். 'விவசாய அமைப்பு' என்ற அதிகாரத்தில் இயற்கைவாதிகளை ஆடம் ஸ்மித் கண்டித்து எழுதியுள்ளார். ஆனால், இவர் அவர்களை அதிகம் கண்டிக்கவில்லை. அவர்களை இவர் கண்டித் துள்ளபோதிலும், அவர் அறியாமலேயே இயற்கைவாதிகள் கொள்கைளிலேயே ஆடம் ஸ்மித் தீவிரமாக ஒன்றியுள்ளார். 'பயனுள்ள', 'பயனற்ற' என்னும் சொற்களை இயற்கை வாதிகள் பயன்படுத்துவதைக் கண்டித்து ஆடம் ஸ்மித் கூறுவதாவது :

'திருமணத்தின் விளைவாக ஒரு மகனும் ஒரு மகளும் பிறந்த போதிலும், தந்தைக்கும் தாய்க்கும் பதிலாக உலகில் வாழ இவர்கள் மட்டுமே பிறந்தபோதிலும், மனிதர்களின் எண்ணிக் கையை இது அதிகரிக்காத போதிலும், முன்பிருந்த அளவிலேயே அதை வைத்திருந்த போதிலும், அத் திருமணத்தைப் பயனற்றது என்றோ, வியர்த்தமானது என்றோ நாம் கூறக் கூடாது.'[1]

ஆனால், இதற்கு எதிராக முடிவில் பார்க்கப்போனால் அத் திருமணம் பயனற்றதே. மக்கள் தொகையை அது அதிகரிக்க வில்லை என்பதே முக்கிய இயற்கை வாத அமிசம் என்று இயற்கை வாதிகளும் மற்றவர்களும் மறுத்துரைக்கக்கூடும். பின்னர், ஆடம் ஸ்மித் எழுதியுள்ள வாக்கியமும் இயற்கைவாதிகளின் கருத்தையே நன்கு பிரதிபலிக்கிறது.

[1] அதே ஏடு, புத்தகம் IV, அதிகாரம்-9.

'மூன்று குழந்தைகளை அளிக்கிற திருமணம், இரு குழந்தைகளை அளிக்கிற திருமணத்தைவிட அதிகப் பயன் உள்ளதே. இதைப் போலவே, குடியானவர், நாட்டுத் தொழிலாளர் ஆகியோரின் உழைப்பானது வியாபாரிகள், புதிய கண்டுபிடிப்பாளர்கள், தயாரிப்பாளர்களின் உழைப்பைவிட அதிகப் பயனுள்ளதாகும். என்றாலும், ஒருவகையின் உயர்ந்த உற்பத்தி மற்றவகையின் உற்பத்தியைப் பயனற்றதாக்கி விடாது; அல்லது வியர்த்தமானதாக்கிவிடாது.' விவசாயத்தின் அதிக உற்பத்தித் தன்மையை ஆடம் ஸ்மித் ஏற்றுக்கொள்வதால், இயற்கைவாதிகளின் முக்கியக் கருத்தை அவர் ஏற்றுக்கொண்டவராகவே ஆகிறார். கோனூர்டு பொருத்தமாகக் கூறியுள்ளதைப் போல, ஆடம் ஸ்மித் கொள்கை கூறப்பட்டுள்ள சொற்களை எதிர்த்தாலும், அக் கருத்தை ஏற்றுக்கொண்டு விடுகிறார்.[1]

ஆடம் ஸ்மித்தை விரிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றாலும், மற்ற முக்கிய அமிசங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்றாலும் அவற்றை இங்கு ஆராய்ந்துகொண்டிருப்பதற்கில்லை. வணிகவாதக் குடியேற்ற நாட்டுக் கொள்கையை இவர் கண்டிப்பதிலிருந்து சாம்ராச்சிய சமஷ்டி அமைப்பு துணைப் பொருளாகக் கினைத்துள்ளது. வரி விதிப்புக் கொள்கையை இவர் ஆராய்ந்துள்ளார். இக் கொள்கை பல பாட புத்தகங்களிலும் இடம் பெற்றுள்ளது. அரசின் செலவுகளைப் பற்றியும் ஓர் அதிகாரம் எழுதியுள்ளார். இதிலிருந்து அரசாங்க அலுவல்கள் குறித்து இவர் கொண்டுள்ள கருத்துகளை அறிந்துகொள்ளலாம். அரசாங்கத் தலையிடாக் கொள்கைக்கு இவர் அளிக்கும் சில விலக்குகளையும் அறிந்துகொள்ளலாம். இந்த விலக்குகளும் அற்பசொற்பமானவை அல்ல. பெருமொத்தமாகப் பார்க்கும் போது, ஆடம் ஸ்மித் கொள்கையின் பொது அமிசங்களைப் பற்றி விளக்குவதற்குப் போதுமான அளவு கூறப்பட்டுவிட்டது. பொருளாதாரக் கொள்கை வளர்ச்சியில் இவருக்குள்ள தலைமை ஸ்தானத்தையும் குறிப்பிட்டுள்ளேன். அரசியல், பொருளாதாரத்தைத் தனிப் பிரிவாக எடுத்துக்கொண்டு பார்த்தோமானால், ஆடம் ஸ்மித்தே நடுநாயகமாகத் திகழ்கிறார். இது மட்டுமல்ல, எண்ணத்திலும் நடைமுறையிலும் வேறெந்தப் பொருளாதார வல்லுநரைவிட இவர் செல்வாக்கே மிகுந்திருந்தது. வாழ்க்கைக்கு இவர் கொடுத்துள்ள பொருள் விளக்கம் இன்றளவும் உண்மைநிலையை ஒட்டியே இருக்கிறது. இதுவே இவருடைய சிறப்பு. பொருளாதாரத் துறையில் சமுதாயம்

[1] கோனூர்டு, 'பொருளாதாரக் கொள்கை வரலாறு', பிரிவு II, பக்கம்-211.

போட்டி, தன்னலம் ஆகியவற்றின்மூலம் தானுகவே இயங்கி வந்தது. சமுதாயம் முழுவதும் தொழில் பிரிவினை, அதன் காரண மாக ஏற்படுகிற பலவகைப் பொருள் பரிவர்த்தனைகள் ஆகியவை காரணமாக ஒன்றுபட்டு நிற்கிறது. அது ஒழுங்காக இயங்குவ தற்குச் சுதந்திரம் வேண்டும் என்றே ஆடம் ஸ்மித் கேட்டார். அந்த அளவு அவர் கூறும் சமுதாய அமைப்புப் பொருளாதாரத் துறையில் திறமையுள்ளதாயிருந்தது. இவற்றில் பெரும்பா லானவை பழையவற்றிலிருந்து பெறப்படுபவை என்பது உண்மை தான். விதியின் கையின் அரவணைப்புக்குள் மறைந்துபோகிற ஆடம் ஸ்மித், மற்றொரு ஆடம் ஸ்மித்தால் திருத்தப்படுகிறார். இந்த ஆடம் ஸ்மித் மிகுந்த மூளையுள்ளவர்; புத்திசாலி; தீர்க்க தரிசி; விவேகமுள்ளவர்; அப்பட்டமான ஸ்காட்லாந்துக்காரர். இத்தகைய ஸ்காட்லாந்துக்காரர் ஸ்காட்லாந்தின் கீழ்க்கரையில் ஏராளமாயிருக்கிறார்கள் என்றாலும், கிர்கால்டியில் பிறந்த சிறந்த புகழ்வாய்ந்த தலைமகனைப்போல் எல்லோரும் புகழ் ஏணியின் உச்சிப்படிக்குப் போய்விட முடியாது.

ஆடம் ஸ்மித்தின் நிரூபிக்கப்படாத பல அனுமானங்களை ஏற்றுக்கொண்டுள்ளது உண்மைதான். இந்த ஆடம் ஸ்மித் ஒரு புறமிருக்க, உலகம் தெரிந்த, தன் மக்களின் குணுதிசயங்களை நன்கறிந்த ஆடம் ஸ்மித், இவரைச் சமநிலைப்படுத்துகிறார். இவர் எதிலும் ஆச்சரியப்படுவதில்லை. ஒகடித்துக் குதறுவது போன்ற சொற்களைப் பயன்படுத்தியபோதிலும், இவர் நல்ல முறை யிலேயே நடந்துகொள்கிறார். இதனுல் பிறருக்குத் தீங்கு விளைவதில்லை. இக் காரணத்தாலேயே ஆடம் ஸ்மித் முரண் பாடுள்ளவராகக் காணப்படுகிறார். இதையே தாராள மனப் பான்மையுடன் கூறுவதானுல், அவர் பல துறைகளிலும் புகுந்து புறப்பட்டுள்ளார். பரந்த சர்வதேசக் கொள்கையாளராக இருந்த போதிலும், இவரைவிடச் சிறந்த தேசபக்தர் வேறு எவரும் இல்லை. அரசாங்கத் தலையிடாக் கொள்கையை இவர் ஆதரித்துள்ளார். தன்னலத்தால் முடிவில் நன்மையே விளையும் என்றெல்லாம் இவர் கூறியுள்ளபோதிலும், வரையறையற்ற, கட்டுப்பாடற்ற தன்னலத்தின் விளைவுகளை இவர் அறிந்தேயுள்ளார். அன்றுமுதல் இன்றுவரை ஆடம் ஸ்மித் சுயேச்சை வணிகத்தின் மூலகர்த்தா வாகவே விளங்குகிறார். இவர் பாதுகாப்புக் கொள்கை கொண்ட கட்சியினருக்குத் தாரக மந்திரம் ஒன்றை வழங்கியுள்ளார். அவர்கள் விவேகிகளாக இருந்தால், இதைத் தங்கள் கொடியில் பொறித்து வைத்துக்கொள்வர். எல்லா மக்களுக்கும், எல்லாக் கருத்துகளுக்கும் ஆடம் ஸ்மித் ஏதாவது விஷயம் வைத் திருப்பதே இவருடைய பெருமைக்குத் தலைசிறந்த சான்று.

மற்றவர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் இவர் எவ்வளவு பெரியவர் என்பது விளங்கும்.

என்றாலும், ஆடம் ஸ்மித்தும் கண்டனக் கணைகளிலிருந்து தப்ப முடியவில்லை. பொருளாதாரத் துறையில் ஒரு பிரிவினருக்கு இவர் எப்போதும் வெறுப்பூட்டியே வந்துள்ளார். இவர் பிரத்தியட்சவாதியாகத் திகழ்வதால், இலட்சியவாதிகளுக்கு இவரைப் பிடிப்பதில்லை. இலட்சியவாதிகளும் மற்ற நாடுகளிடம் துவேஷம் கொண்ட, பகை உணர்ச்சி பாராட்டுகிற தீவிர தேசபக்தர்களும் ஆடம் ஸ்மித்திடம் குரோதம் பாராட்டியே வந்துள்ளனர். இத்தகைய நிந்தணையாளர்களில் ஹில்ட பிராண்டு, லிஸ்ட், ம்யூல்லர், நம் காலத்தில் ஸ்பான் ஆகியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். ஆடம் ஸ்மித்தின் வலுக்குறைவு எங்குள்ளது என அவருடைய நிந்தணையாளர்கள் கூறியுள்ளதையும் நாம் ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

முதலாவதாக, ஆடம் ஸ்மித் செல்வம்பற்றிக் கொண்டுள்ள கருத்து மிகக் குறுகிய நோக்கமுடையது எனக் கூறப்படுகிறது. இவருடைய ஆரம்ப நிலையிலிருந்து பண்டமாற்று மதிப்புடன் செல்வத்தை இவர் இரண்டற இணைத்துப் பேசுகிறார். எனவே, இவருடைய கொள்கை 'மதிப்பு, விலை நியதிகளுடன்'[1] வெறும் தொடர்பு மட்டுமே கொண்டுள்ளது. இதன் விளைவாகத் தேசீய நலனின் விரிவான அமிசங்கள் இவருக்குப் பிடிபடாமல் போயிற்று. மற்ற இடங்கள் போலவே, இங்கும் ஸ்மித் தம்மைத் தாமே திருத்திக் கொள்பவராக இருக்கிறார். நாடுகளின் செல்வம் முழுவதையும் படித்துப்பார்த்தால், குறித்த பகுதிகளைப் பார்த்து விட்டுத் தவருகக்கொண்ட கருத்துகள் மறைந்தொழியும்.

இரண்டாவதாக, ஆடம் ஸ்மித் மிகுந்த அளவில் தனி நபர் வாதியாகத் திகழ்வதாகப் புகார் கூறப்படுகிறது. தன்னல நோக்கத்தில் மட்டுமன்றி வேறுவகையில் ஒருவரோடொருவர் தொடர்புகொள்ளாத தனி நபர்கள் நிறைந்ததாகவே இவர் சமுதாயத்தைக் கருதுகிறார். இதன் விளைவாக அரசாங்கத்தின் முக்கியத்துவத்தை இவர் உணரத் தவறியுள்ளார். அத்தகைய அரசாங்கத்தில் தனி மனிதனுக்குள்ள முக்கியத்துவத்தையும் இவர் உணரத் தவறுகிறார். அரசாங்கமே காப்புக் கடவுள் என நினைப்பவர்களில் ஒருவரல்ல ஆடம் ஸ்மித். அரசாங்கத்தின் காப்புக் கடமைகளை இவர் உணரவில்லை என இவர்மீது குற்றஞ்

[1] 'பொருளாதாரக் கொள்கை வகைகள்' என்ற தலைப்பில் ஸ்பான் எழுதியுள்ளவற்றைக் காண்க.

சாட்டுவது நியாயமாகாது. ஏனெனில், ஆடம் ஸ்மித் தம் கருத்து களைத் தொழில்புரட்சி ஏற்படுவதற்கு முன்னரேயே வெளியிட்டு விட்டார். அரசாங்கம் காப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற நவீனக் கருத்து தொழில்புரட்சிக்குப் பின்னரே, அதாவது ஆடம் ஸ்மித்துக்கு வெகு காலத்திற்குப் பின்னரே ஏற்பட்டது. இந்த நிலையில் நாம் ஆடம் ஸ்மித்தை எவ்வாறு குறைகூறுவது?

மூன்றுவதாக, ஸ்மித் உலகியல்வாதியாகத் திகழ்வதாகவும், இலட்சியவாதியாக இல்லை என்றும் இவருடைய நிந்தனை யாளர்கள் கூறுகின்றனர். இது மேலே முதலில் சொன்ன அமிசத் தின் வளர்ச்சிதான். செல்வத்தால் வாங்கி விற்கக்கூடிய தன் மைக்கு ஒரு வரையறை இருக்கிறது. இதற்குமேலும் போய், செல்வத்தைச் சரியாகப் பயன்படுத்துதலை, செல்வத்தின் உயர் நோக்கங்களை, பயன்களைப்பற்றிய பிரச்சினைகளை ஸ்மித் அணுக வில்லை எனவும் கூறப்படுகிறது. மேலெழுந்தவாரியாகப் பார்த் தால் இக் கூற்றிலும் உண்மை இருப்பதுபோல் தோன்றும். அதுவும் ஆடம் ஸ்மித் கூறியவற்றுள் சில பகுதிகளை மட்டும் அடிப்படையாகக்கொண்டு பார்த்தால், இது தெளிவாகத் தெரியும். ஸ்மித் எதையும் விரிவாக ஆராய்ந்துள்ளார். இவருக் குப் பின் வந்தவர்கள் எவரும் பொருளாதாரப் பிரச்சினையை இவ்வளவு விரிவாக ஆராயவில்லை. இந்த நிந்தனைக் கூற்றுக் களில் ஓரளவு உண்மை இருக்கும்வரையில் அவற்றிற்கு இரண்டு பதில்கள் கூறலாம். நாடுகளின் செல்வம் ஸ்மித்தின் ஒரு பகுதியை மட்டுமே, வேண்டுமென்றே காட்டுகிறது. வாழ்க்கை யின் பொருளாதார, லோகாயதத் துறையில் இவர் கொண்டுள்ள கருத்துகள் மட்டுமே இதில் நிறைந்துள்ளன. இரண்டாவதாக, ஆடம் ஸ்மித் இதிலும் ஸ்காட்லாந்துவாசியாகவே விளங்கு கிறார். ஸ்காட்லாந்துவாசி எவனும் தன் மனத்தில் தோன்றி யதை வெளிப்படையாகக் கூறிவிடமாட்டான். பெரிய தத்துவக் கொள்கையின் எதிரில் ஆடம் ஸ்மித் வாய்மூடி மௌனியாகவே இருக்கிறார். இலட்சியத்தை எடுத்து விளக்குவதில் உண்மை ஸ்காட்லாந்துக்காரன் கூசவே செய்வான். எங்கே, தான் எதை யாவது தவருகக் கூறி மற்றவர் கண்ணில் தாழ்ந்துவிடப் போகிறோமோ என்ற அச்சத்தில் வாயை மூடிக்கொண்டிருப்பான்.

இவ்வாருக ஆடம் ஸ்மித்திடம் நாம் விடைபெற்றுக் கொள்வோமாக.

6. மால்தஸ்—ரிகார்டோ

மால்தஸ்

ஆங்கிலத் தொன்மை அரசியல் பொருளாதாரத்திற்கு அடிகோலிய மூவர்களில் இரண்டாமவராக தாமஸ் இராபர்ட் மால்தஸ் (Thomas Robert Malthus[1], 1766—1834) திகழ்கிறார். இவர் எழுதிக் குவித்த கட்டுரைகள் மிகப் பல. எனினும், ஒரே புத்தகம் தான் வரைந்துள்ளார். அதிலும் ஒரே ஒரு கருத்தையே வலியுறுத்தியுள்ளார். அந்தக் கருத்தும் அவரின் வயது ஏற ஏற மாறியது. ஆகவே, அவர் தம் நூலைக் 'கட்டுரை' என்றே பெயரிட்டழைத்தார். வேறு பெயரால் அதை அழைப்பதற்கில்லை. அக் கட்டுரையின் கருப்பொருளும் 'மக்கள்தொகைக் கோட்பாட்டைப்' பற்றியதே. ஒரு கருத்தை வலியுறுத்தியதற்காக வேறு பெருமைக்குரிய குடிமகன் எவனும் மால்தஸைப்போல் பழிக்கப்படவுமில்லை, தூற்றலுக்குரியவனுகவுமில்லை. வேறு சிறந்த எழுத்தாளன் எவனும் ஒரு கொள்கைக்காக இவ்வளவு மறுப்புப் பெற்றதுமில்லை ; கண்டனக் கணைகள் ஏற்றதுமில்லை. எனினும், இவரைத் தூற்றியவர்கள், ஏளனம் செய்தவர்கள், இழித்துரைத்தவர்கள் இவர் எடுத்துரைத்தவற்றைப் படித்துப் புரிந்துகொண்டு, பின்னர் அவ்வாறு பகைமை பாராட்டியதாகவும் கூறுவதற்கில்லை. ஆனுல், ஒருவகையில் பார்க்கின் புதிதாகவோ, திடுக்கிடும்படியாகவோ மால்தஸ் எதையும் கூறிவிடவில்லை. மால்தஸியம் என்பது மால்தஸ் கூறிய கொள்கை எனக் கொண்டால், அவர்

[1] 1766 ஆம் ஆண்டில் டோர்கிங்க்கு (Dorking) அருகில் பிறந்த இவர் முதல் வகுப்புப் பட்டம் பெற்ற ஒன்பதாவது கணித மேதை; ஜேஸஸ் கல்லூரியாளர்; மதபோதகர்; ஹெய்ல்ஸ்பரி கல்லூரியில் (கிழக்கு இந்தியக் கம்பெனி) அரசியல் பொருளாதாரப் பேராசிரியர். மக்கள் தொகை பற்றிய கட்டுரை மட்டுமன்றி (வாரம், தானிய இறக்குமதி போன்ற) பல பொருள்கள் குறித்தும் சிறு நூல்கள் வெளியிட்டுள்ளார்; அரசியல் பொருளாதாரக் கொள்கை (Principles of Political Economy) என்ற நூலையும் எழுதியுள்ளார்.

மக்கள் தொகைக் கட்டுரை எழுதுவதற்கு முன்னரே இதை விளக்கமாக எடுத்துக் கூறியவர்கள் பலருண்டு. கூலி பற்றிய அதிகாரத்தில் பலவகையான கூலிச் சார்புடைய கொள்கைகள் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளன. ஏற்கெனவே மேற்கோள் காட்டியிருப்பதைப்போல, அதில் ஆடம் ஸ்மித் கூறுவதாவது, 'எந்தப் பொருளும் தேவைக்கேற்ப உற்பத்தியாகிறது. அதைப்போலவே மனிதனும் தேவைக்கேற்ப உற்பத்தி ஆகிறான்.' இதுவே மால்தஸ் கொள்கையின் கருப்பொருள். பதினெட்டாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மிராபௌ போன்ற பல எழுத்தாளர்களும் மால்தஸ் கருத்தை ஒட்டி முன்னரே எழுதியுள்ளனர். மால்தஸ் கொள்கையை விளக்க இவர்களுடைய நூல்களிலிருந்து பல மேற்கோள்கள் காட்டலாம். மற்றவர்கள் இடைநிகழ் கருத்தாக எடுத்துக் கூறியவற்றைக் கொள்கை வடிவில் விளக்கமாக எடுத்துக் கூறியதே மால்தஸின் தனிச்சிறப்பு. அக் கொள்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து மற்றவர்கள் ஏதோ ஒரு கருத்தாக எடுத்துக் கூறியதை மால்தஸ் மையக் கோட்பாடாகக் கொண்டு அதன் மூலம் எல்லாவற்றிற்கும் விளக்கம் கூறினார்.

மக்கள் தொகைக் கட்டுரையை மால்தஸ் எழுதியதன் அடிப்படைக் காரணத்தைப் புரிந்து கொண்டால்தான், மால்தஸை நாம் அறிந்துகொள்ளமுடியும். மால்தஸ் கொள்கை வளர்ச்சியடைந்த பல நிலைகளையும் ஆராய்வது நன்று. மால்தசுக்கும், அவருடைய தந்தையாகிய டேனியல் மால்தசுக்கும் வீட்டில் ஏற்பட்ட வாதத்தின் விளைவே இக் கட்டுரை. டேனியல் மால்தஸ் இடதுசாரி கொள்கைக்காரர்; ரூசோவின் நண்பர். அந்தக் காலத்தில் வையகத்தில் வானுலக வாழ்வைப் பெறும் கருத்து இங்கிலாந்தில் ஓங்கி வளர்ந்தது. இம் மண்ணுலகை விண்ணுலகாக்கும் விந்தைக் கருத்தைக் காண்டர்செட்டும் காட்வினும் கவினுற விளக்கியுள்ளனர். காட்வின் தாம் எழுதிய அரசியல் நீதியிலும் (1796), வழிதேடுவோனிலும் (1797) இதை அழகுற அமைத்துள்ளார். காட்வின் அரசியல் கொள்கை வித்தகர். அதன் விளைவாக ஏற்படும் பொருளாதாரக் கோட்பாடு மட்டுமே அவர் அறிந்தது. எனவே, அவர் கனவு கண்டது ஆட்சித்தளையற்ற பொன்னுடு. அங்கு மக்கள் தளைகள் ஏதுமின்றி விடுதலை பெற்றிருப்பர். செல்வத் தட்டுப்பாடோ, திருமணக் கட்டுப்பாடோ, புலனடக்க தளையோ இருக்காது. அரைமணிநேர உழைப்பே மகிழ்ச்சியாக வாழப் போதுமானது. அங்கே மனிதன் மண்ணிலே எவ்வகைக் கட்டுப்பாடுமின்றி மேவன செய்தொழுகும் குறைபாடுகளற்ற நிறை மனிதன் என்ற அடிப்படையில் எழுந்த பகற்கனவுக் கோட்டையின் மீது

தந்தையும் மகனும் தர்க்கத்தில் இறங்கினர். இவ் விவாதம் முடிவடைந்த பின்னர் அல்லது தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டபோது, இளைய மால்தஸ் எந்தெந்த வாதங்களால் தன் தந்தையை மடக்கியிருக்க முடியுமென எண்ணினானோ, அவற்றை எழுதி வைத்தான். இவ்வாருக, 1798-ல், மக்கள் தொகைக் கட்டுரையின் முதல் பதிப்பு வெளிவந்தது. இக் கட்டுரை ஆசிரியரின் குணநலனை ஒத்துள்ளது. ஓர் இளங்காளையின் எழுச்சி மிக்க கனல்பொறி பறக்கும் கருத்தோவியமாகவே அது மிளிர்ந்தது. காட்வினும் காண்டர்செட்டும் கூறியவற்றிற்கு மறுப்பாகவும் அது அமைந்தது. காட்வின் கனவு கண்ட நாட்டின் நிலையாமையை நிரூபிப்பதன்மூலம், அவன் கூறிய 'நிறை மனிதக் கொள்கை'யைப் பொய்யென எண்பிப்பதே இதன் நோக்கமாகும்.

காட்வினை முறியடிப்பதற்காக மால்தஸ் தம் புத்தகத்தின் முதல் பதிப்பில் இரண்டு சித்தாந்தங்களை வெளியிட்டார். 'மனிதன் வாழவேண்டுமானால் உணவு அவசியம்' என்பது முதல் சித்தாந்தம். 'பால் உணர்வு ஆர்வம் அவசியமாகும்; இது இப்போதிருப்பதைப் போன்றே என்றும் இருந்துவரும்'[1] என்பதே இரண்டாவது சித்தாந்தம். வாழ்வதற்குத் தேவையான உணவு விளையும் வேகத்தைவிட மக்கள் தொகை வளர்ச்சியின் வேகம் அதிகமாகும். முதல் பதிப்பில் இக் கொள்கை விடாப்பிடியாக வற்புறுத்தப்பட்டுள்ளது. இரண்டு நான்கு ஆனால், நான்கு எட்டாகும் என்ற ஜியோமிதி கணித முறைப்படி மக்கள் தொகையும் பெருகும் என்பதே இவருடைய கொள்கை.

காட்வின் கனவுகண்ட பொன்னுடு மண்ணிலே மலருமானால் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு அதைவிடச் சிறந்த நிலை வேருென்றுமில்லை. அந்நிலை இருப்பின் கணிதப் பெருக்கல் முறைப்படி, மக்கள்தொகை ஐம்பது ஆண்டுகளில் எவ்வளவோ பெருகிவிடும். வெறுக்கத்தக்க பால் உணர்ச்சி ஆர்வம் தலை தூக்கும். வலிமையே வாழ்வுக்குத் துணை என்ற நிலை ஏற்படும். பொய்யும் வழுவும் தோன்றிச் 'செயற்கையான தீமைகளெல்லாம் தலைவிரித்தாடும்.' முதல் பதிப்பின் கருத்து எளியது. வாழ்வதற்குத் தேவையான உணவு அதிகரிப்பைவிட மக்கள்தொகை வளர்ச்சி அதிகம் என்பதை ஒப்புக்கொள்வோமானால், மக்கள் தொகை வளர்ச்சியை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி வைக்கும் வலிமை அவசியம். மக்கள் தொகைப் பெருக்கத்திற்குத்

[1] பொருளாதாரச் சங்கம் மீண்டும் வெளியிட்ட முதல் பதிப்பு, பக்கம் 11.

தடையாக இருக்கக்கூடிய இச்சக்திகள்தாம் தீயொழுக்கங்களும் வறுமையும் ஆம். கதிரவன் ஒளி பட்டவுடன் மறையும் பனிப் படலம்போல், காட்வின் கனவுகண்ட சொர்க்கம் உண்மை யெனும் ஒளி பட்டவுடன் மறைகிறது. மால்தஸ் தம் கருத்தை இவ்வாறு சித்திரித்த பிறகு, தமது கருத்தைச் சீர்தூக்கிப் பார்க்க விரும்பினர். உணர்ச்சி வேகத்தில் முதலில் எழுதிய கருத்து களை ஒழுங்குபடுத்தவும், அனுபவ அறிவோடு ஒப்பிட்டுப் பார்க்கவும், பல்வேறு நாடுகளுக்குச் செல்லவும், அறிவு முதிர்ச்சி யுறப் பல்வேறு நூல்களையும் விரிவாகப் படித்தார். இதன் விளை வாக 1803-ல் இரண்டாவது பதிப்பு வெளிவந்தது. இது சில அமிசங்களில் முதல் பதிப்புக்குப் பெரிதும் மாறுபட்டிருந்தது. இடையில் கழிந்த ஆண்டுகளில் அவர் நடத்திய விவாதங்கள், திறனாய்வுகள் ஆகியவற்றின் பயனைத் தம் வாதத்தின் ஒரு பகுதியை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. இதனால் இவ ருடைய கருத்தே அடியோடு மாறிப்போயிற்று. முதல் பதிப்பிலே மக்கள் தொகைப் பெருக்கத்துக்குத் தடையாகத் தீயொழுக்கங் களும் ஊழித்துன்பங்களும் ஆகிய இரண்டை மட்டுமே இவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், மேலே குறிப்பாகச் சுட்டியுள்ளபடி வயதேறிய மணமாகாத பலர் இளமைக்காலம் கடந்ததும், அதைத் துன்பமாகக் கருதாதவர்களாகவும், தீயொழுக்கத்திற்குத் தம்மை ஆட்படுத்திக்கொள்ளாதவர்களாகவும் இருக்கலாம். இக் குறையை நிவர்த்திப்பதற்காக மூன்றுவது வழிமுறைத் தடை ஒன்றை மால்தஸ் வெளியிட்டார். மக்கள் தொகைப் பெருக் கத்தைக் குறைக்கப் புலனடக்கத்தை மேற்கொள்ளலாமென்பது தான் அது. கண்டனக் கணையை முறியடிப்பதற்காகத் தம் முழு முதற் கொள்கையை மாற்றிக்கொண்டதன் விளைவாக அவரு டைய மூலவாதமே அடிபட்டுப் போயிற்று. மக்கள் பெருக்கத் தடையாகப் புலனடக்கத்தைக் கொள்வதாயின், நிறை மனிதக் கொள்கையை மறுக்கும் வாதங்கள் நிலைநிற்க முடியாது. காட்வின் கூறிய மண்ணுலக சொர்க்கத்தில் புலனடக்கம் கொள்ள முடியுமாதலால், தீயொழுக்கத்திற்கு வழியேது? புன் னெறியைக் கண்டித்து எழுதத்தான் வழியேது? இந்த மூன்று வது புலனடக்கச் சித்தாந்தம், காண்டர் செட்டும் காட்வினும் மால்தஸின் கண்டனக் கணைகளிலிருந்து தப்ப வழி செய்கிறது.

இரண்டாவது பதிப்பிலும் பிந்திய பதிப்புகளிலும் மால்தஸ் தம் கொள்கைகளை மிக்க கவனத்துடன் கூறுகிறார். முதல் அதி காரத்திலே தம் கருத்துகளைச் சுருங்கக் கூறி விளங்க வைத்துள் ளார். மேலும், தம் கருத்துகளைச் சித்தாந்தங்களாக வகைப் படுத்தியுள்ளார்.

1. வாழ்விற்குத் தேவையான உணவு கிடைக்கும் அளவைப் பொறுத்தே மக்கள் தொகை வரையறுக்கப்படுகிறது.

2. வாழ்விற்கு அவசியமான உணவு அதிகரித்தால் மக்கள் தொகையும் அதற்கேற்பப் பெருகும். வலிமை வாய்ந்த திட்டவட்டமான தடை ஏற்பட்டாலன்றி மக்கள் தொகை பெருகத்தான் செய்யும்.

3. மக்கள் பெருக்கத்தின் திறனைத் தடுக்கவல்ல இப் பெரும் தடைகள், வாழ்வதற்குத் தேவையான உணவு கிடைக்கும் அளவிலேயே மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி வைக்க வல்லவையாகும். இத் தடைகளைப் புலனடக்கம், தீயொழுக்கம், இயற்கை உற்பாதம் என மூன்றுகப் பிரிக்கலாம்.[1]

இவற்றில் முதல் சித்தாந்தத்தை நிரூபிக்கவேண்டிய அவசியமில்லை. வாழ்வதற்குத் தேவையான அளவு உணவு கிடைப்பதற்கு மேற்பட்டு மக்கள் வாழ்வதற்கில்லை. உணவில்லையேல் வாழ்வு இல்லை. இரண்டாவது சித்தாந்தம் கவனமுடன் கூறப்பட்டுள்ளதாக மால்தஸ் கருதுகிறார். 'வாழ்வுக்கு வேண்டிய உணவுப்பொருள் அதிகரித்தால் மக்கள் தொகையும் உடன் அதிகரிக்கும்' என்று தம் கொள்கையைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறார். இதையே அவர் நெடுகிலும் கூறியுள்ளார். எனவே, உணவுதான் மக்களின் பெருக்கத்துக்கு அடிப்படை. இதை ஒட்டியே ஜியோமிதி கணித சாம்யங்களின் சர்ச்சை அமைந்துள்ளது. மால்தஸ் தகராறில் இதுவே முக்கிய அங்கம் வகிக்கிறது. மனித இனத்தில் இனப் பெருக்க உணர்வு எல்லாக் காலங்களிலும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரே மாதிரியாயிருப்பதாக மால்தஸ் கருதுகிறார். ஓரிடத்தில் அவர் குறிப்பிடுகிறார்: 'ஒவ்வொரு காலத்திலும் பால் உணர்வு ஆர்வம் ஒரே விதமாக இருப்பதாகத் தோன்றுகிறது. எனவே, இதையே கணித மொழியில் கூறுவதானால், இதை எல்லாக் காலத்திலும் உறுதி நிலையாகக் கொள்ளலாம்.'[2] இது வெறும் அனுமானமே. இதை எண்பிக்க முடியாது. இந்த அனுமானத்தை மறுப்பது பின்னர் மால்தஸைத் தாக்குவதற்கு ஒரு வழிமுறையாகப் பயன்படும். இந்த அனு

[1] மக்கள் தொகைக் கட்டுரை (Essay on Population), புத்தகம் I, அதிகாரம் 2, பக்கங்கள் 18–19, தொகுதி I 'எவ்வரிமன்' (Everyman) வெளியீடு, வசதிக்காகப் பிந்திய குறிப்பீடுகளிலும் இதையே கையாண்டுள்ளோம்.

[2] மக்கள் தொகைக் கட்டுரை (Essay on population) புத்தகம் II, தொகுதி I, அதிகாரம் 13, பக்கம் 312.

மானம் சரியென வாதத்திற்காக வைத்துக்கொண்டாலும் (இக் கால அமெரிக்க அனுபவம் சான்று பகர்வதுபோல), இருபத் தைந்து ஆண்டுகளில் மக்கள் தொகை இரட்டிப்பதாக இருந் தால், அடுத்தடுத்து இருபத்தைந்து ஆண்டுகளில் 1 : 2 : 4 : 8 : 16 : 32 என்ற கணக்கின்படி பெருகிவிடும்.

வாழ்வதற்குத் தேவையான உணவு அதிகரிப்பைக் கணித சாம்யம் முறைப்படுத்துவதாக வாதிப்பது அவ்வளவு மகிழ்ச்சிக் குரியதன்று. இதனால் எதுவும் நிரூபிக்கப்படாது. இது ஒன்ப தாவது நிலை; கணித மாணவராய் இருந்தவர்க்கு ஏற்றதல்ல. மால்தஸ் கூறுவதெல்லாம் இதுதான்: "அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் விளையுள் இரு மடங்காக அதிகரிக்கும் என்பதை ஏற்றுக்கொண்டோமானால், அது 'நியாயமான அளவு நாம் எதிர்நோக்குவதைவிட அதிக அளவுதான்.'[1] அடுத்த இருபத் தைந்து ஆண்டுகளில் ஒவ்வொரு கால அளவிலும் உற்பத்தி ஒரே சீராகத் தற்போதிருக்கும் அளவுதான் அதிகரிக்கும். இதுவே அவருடைய அனுமானம். இக் கணித முறையை நிரூபிக்க வழியில்லை. இதை மேல் மதிப்பீடாகவே மால்தஸ் கருதுகிறார். 'இந்த மதிப்பீடு உண்மையென உரைப்பதற்கில்லை. இது உலக உற்பத்திக்குச் சாதகமாயுள்ளது. இது குறித்த நமது அனுபவம் இம் மதிப்பீட்டுக்கு உகந்ததாயில்லை."

இந்த அளவீடுகளை ஏற்றுக்கொண்டால், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கிடைக்கும் உணவு வரையறைக்குள் கட்டுப் படுத்துவதற்குச் சில சக்திகள் இருக்கவேண்டும். மறு பதிப்பில் இவை புலனடக்கம், தீயொழுக்கம், உற்பாதம் என விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தடுப்புத் தடைகள், நிச்சயத் தடைகள் என்றும் மற்றொரு வகையில் இத் தடைகளைப் பிரிக்கலாம். தடுப்புத்தடை, பிறப்பு வீதங்களைக் குறைப்பதற்குரிய சாதனங் களைக் குறிக்கிறது. புலனடக்கம் பெரிதும் மேற்கொள்ளின் அது இத்தலைப்பின்கீழ் வரும். மால்தஸின் சித்தாந்தப்படி, பிறப் பைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் சகல தீய பழக்கங் களும் இத்தலைப்பின்கீழ் வரும். நிச்சயத் தடைகள் என்பது மரண வீதத்தை அதிகப்படுத்தும் சக்திகளாம். 'பெருவாரி நோய்கள், போர்கள், பிளேக், பஞ்சம்' ஆகியவை இதன்பாற் பட்டவைகளாகும். இவை இயற்கையாக ஏற்படின், அவை விதியின்பாற்படும். இவை மனிதனால் செயற்கையாக விளைவிக்கப் பட்டால் சதி என விவரிக்கலாம். இவற்றின் விளைவும் துன்பமே. இங்ஙனம் வகைப்படுத்தியுள்ளது எந்த அளவு தர்க்க ரீதியாக

[1] அதே புத்தகம், தொகுதி I, பக்கம் 9.

உள்ளது என்பது விவாதத்திற்குரியதாகும். தூரதிருஷ்டியினாலும் அறிவினாலும் போரைத் தவிர்க்க முடிவதைப் போன்று, கொள்ளை நோய்களையும், பஞ்சத்தையும், வெள்ளத்தையும் தவிர்க்க முடியும். இத்தகைய இயற்கை விளைவுகளைக் கடவுள் ஏற்படுத்துவதாகக் கருதாமல் தானே ஏற்படுத்துவதாகக் கருதுவது மனிதன் வளர்ந்துவிட்டான் என்பதற்கு அறிகுறியாகும்.

புலனடக்கம் இரண்டாம் பதிப்பில் கூறப்பட்டுள்ள கருத்தெனக் கண்டோம். எனினும், இது புதிய கூற்றென்பது பொய்த் தோற்றமேயன்றி உண்மையல்ல.[1] முதல் பதிப்பில் புலனடக்கக் கொள்கையை மால்தஸ் அடிக்கடி வலியுறுத்தியுள்ளார். ஆனால், காட்வினுக்கு எதிராக வாதம் செய்யவே, அவருடைய பெருந்துயருள்ள நாடு என அல்லது சதி நிரம்பிய நாடு என வலிந்து அனுமானிக்கவேண்டியுள்ளது. 1798-ல் மால்தஸ் இத்தகைய முடிவுக்கே வந்தார்.[2] முதல் பதிப்பிலே மால்தஸ் புலனடக்கத்தை ஒரு கொள்கையாக ஏற்றுக்கொண்டார். ஆனால், அவருடைய வாதத்துக்காக அதைப் பெருந்துயருக்குச் சமமாகக் கருதவேண்டி வந்தது. இக் கருத்து நியாயமானதாகும்.

ஒரு கருத்தில் மால்தஸ், ஆடம் ஸ்மித்தின் கருத்துக்குத் துணையாக இருக்கிறார். செல்வத்தைப் பெருக்குவதில் அரசாங்கத் தலையீடு பயனளிக்காது, தீமையே பயக்கும் என்பதை ஆடம் ஸ்மித் விளக்கியுள்ளார். இவையெல்லாம் ஒரு நியதிக்கு உட்பட்டவை. ஒரு நாட்டிலுள்ள தங்க வெள்ளிக் கட்டிகளைச் செயற்கைக் கட்டுப்பாடுமூலம் அரசாங்கம் அதிகரிக்க முயல்வது விஷமத்தனமானது.[3] இந்த நியதியை மால்தஸ் மனிதப் பெருக்கத்துக்கும் பயன்படுத்தினார். இங்கும் இந்த நியதி பயன்படும். இதை எதேச்சாதிகாரமாகத் தள்ளிவிடுவதற்கில்லை. மக்கள்

[1] மால்தஸ் இச் சொற்றொடரை வரையறையோடு பயன்படுத்துகிறார். 'புலனடக்கம் என்று நான் குறிப்பிடுகையில், விவேக அடிப்படையில் திருமணம் செய்து கொள்ளாமல் தன்னைக் கட்டுப்படுத்தியுள்ளதையே கூறுகிறேன். அவ்வாறு ஒருவர் தம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கும் கால அளவில் அவருடைய நடத்தை தூயதாக இருக்கவேண்டும்.' புத்தகம் I, அதிகாரம் 2, அடிக் குறிப்பு, தொகுதி I, பக்கம் 14.

[2] 'இப்புலனடக்கம் இயற்கை உணர்ச்சி மீக் கூறுவதால், பெரும்பாலும் தீய நெறிக்கு வித்திடுகிறது.' (முதல் பதிப்பு, பக்கம் 29). 'திருமணத்துக்குள்ள ஒவ்வொரு தடையும் ஒருவகைத் துன்பம் என்றே கருதுதல் வேண்டும்' (பக்கம் 89). 'ஒரு குடும்பத்தை வைத்துக் காப்பாற்ற முடியாது என்பதால் திருமணத்துக்குள்ள சிறு தடையும் இத் தலைப்பின்கீழ்ச் சேர்க்கப்படலாம்' (பக்கம் 108). இதைப் படித்துப் பார்க்கும் மானிடதுவேஷி மால்தஸ் முதல் பதிப்பு வெளியிட்டதற்கும், இரண்டாம் பதிப்பு வெளியிட்டதற்கும் இடைக்காலத்தில் திருமணம் செய்துகொண்டார் என்று குறும்புத்தனமாகக் கூறக்கூடும்.

[3] மால்தஸே இவ் உவமையைச் சுட்டிக்காட்டியுள்ளார். புத்தகம் III, அதிகாரம் 14.

தொகையையும் அரசாங்கமூலம் பெருக்க முயல்வது வீணனதே யாகும். வாழ்வுக்கு வேண்டிய உணவு அதிகரித்தாலொழிய மக்கள் தொகை அதிகரிக்காது. உணவுப் பெருக்கம் ஏற்பட்டால், அரசாங்க ஆதரவு இல்லையெனினும் மக்கள் தொகை தானுகவே பல்கிப் பெருகும். எந்த அரசாங்கமும் மக்கள் தொகையைப் பெருக்க முயல்வது வீண் முயற்சியாகும். இதனுல் மரண வீதம்தான் அதிகரிக்கும்.[1] திருமணத்திற்குச் சாவே உறுதுணை. மரணம் ஏற்பட்டால்தான், இளவயதினர் திருமணம் செய்துகொள்வதற்கு வழி பிறக்கும். சிறு வயதிலேயே திருமணம் செய்துகொள்வதை ஆதரிக்க விரும்புவோர் பஞ்சம் ஏற்படுத்தப் பயந்தாலும், 'பயன்படுத்துமாறு இயற்கையை நிர்ப் பந்திக்கிற நாம் மற்ற அழிவுச் சக்திகளைத் தொடர்ந்து ஊக்குவித் தல் வேண்டும்.[2] இதே முறையை அனுசரித்துப் பார்த்தால், வெளி யேற்றுவதன்மூலமாக மட்டுமே ஒரு நாட்டின் மக்கள் தொகை யைக் குறைத்துவிட முடியாது. வெளியேறுபவர்களுக்குப் பதில் மற்றவர்கள் வருவர். 'ஆனுல், அந்த நாட்டின் தொழிற்சாலையை முடக்கிவிட்டால், வாழ்வுக்கான ஆதாரங்களை எடுத்துவிட்டால் நமது எண்ணம் உடனடியாக நிறைவேறிவிடும்.'[3] மக்கள் தொகையைச் செல்வச் செழிப்பு நம்பியிருக்கவில்லை. செல்வச் செழிப்பு இருந்தால்தான் மக்கள் தொகை வளர முடியும். உணவை உற்பத்தி செய்யாமல் கடவுள் குழந்தைகளைப் பிறப்பிப் பதில்லை என்பது சரியல்ல. ஆனுல், உணவிருக்கும் இடத்தில் குழந்தை தோன்றும் என்பது உண்மையே. எனவே, உணவு முன்னணியில் நிற்கிறது. மக்கள் தொகை பெருகவேண்டு மெனில், உணவு உற்பத்தி அதிகரித்தல்வேண்டும். உணவு உற்பத்தி அதிகரித்துவிட்டால் மக்கள் தொகை அதிகரிப்பைத் தனியார் முயற்சிக்கு விட்டுவிடலாம். இதில் தனியார் முயற்சி தவற இயலாது.

மால்தஸ் ஒருவகையில் ஆடம் ஸ்மித்தின் கொள்கைக்கு ஆதரவாய் இருந்தார் என்ருல், மற்ருெர் வகையில் அவருக்கு நேர்விரோதமாகவே இருந்தார். இயற்கையிலேயே ஒன்றுக் கொன்று உறவுமுறை ஊடும் பாவும்போல் பின்னப்பட்டிருப்ப தாகவும், கண்ணிற் காணு பெரும் சக்தி ஒன்று வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, சமுதாயப் பெருநன்மைக்குப் பாடுபடுவதாகவும் ஆடம் ஸ்மித் கொள்கைவிளக்கம் கூறினர். எனவே, கண்ணுக் கெட்டாத பெரும்சக்தி ஒன்ருல் எல்லாம் செவ்வனே நடைபெறும்

[1] அதே புத்தகம் II, அதிகாரம் 4, தொகுதி 1, பக்கங்கள் 195–196.
[2] அதே புத்தகம் IV, அதிகாரம் 5, தொகுதி II, பக்கம் 179.
[3] அதே புத்தகம் II, அதிகாரம் 10, தொகுதி I, பக்கம் 272.

என்ற நம்பிக்கை கொண்டிருந்தார். இது கண்மூடித்தனமான நம்பிக்கை என்றுலும், அவர் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால், மால்தஸ் எதிலும் அவநம்பிக்கை கொள்பவராகத் திகழ்ந்தார். இதிலும் ஒரு நியதி உண்டு; ஆனால், அதன் தன்மை வேருனது. புலனடக்கம் என்பதில் அவருக்கு அதிக நம்பிக்கை கிடையாது. மேலும், சதியும் விதியுமே இந்த நியதிகளுக்குத் துணையாக உள்ளன. இவர் அவ்வப்போது குறிப்பிடும் இயற்கை நியதிகள் கொடூரமானவை; பிறரைத் தண்டிப்பவை. இவை கடவுளின் நியதிகள் என மால்தஸ் குறிப்பிடுகிறார். நமது நன்மைக்கு ஒவ்வாத எதையும் நாம் செய்தால், இயற்கையின் சீற்றத்துக்கு நம்மை ஆட்படுத்துவதன்மூலம் கடவுள் நம்மை எச்சரிக்கிறார். 'நாவடக்கம் இன்றிக் கண்டதை உண்பதிலும், அளவுக்குமீறிக் குடிப்பதிலும் காலங் கழிப்பதால் நம் உடல்நிலை கெடுகிறது. குழந்தைகளை அதிகம் பெறுவதால் ஏழ்மை, தொற்று நோய் ஆகியவற்றுக்கு இரையாகிச் சாகின்றோம்.' இயற்கையாகக் கடவுளின் நியதிகள் இவ்வாறு இருக்கின்றன. இவை நாம் வரம்பு மீறி நடந்துள்ளதை உணர்த்தும் வகையில் எச்சரிக்கை விடுக்கின்றன. இவற்றிற்கு நாம் செவிசாய்த்து நடக்காவிட்டால், 'நமது கீழ்ப்படியாமைக்கு ஏற்ற தண்டனை நமக்குக் கிடைக்கிறது. நமது துன்பங்களை பிறருக்கு வழிகாட்டியாக அமைகின்றன.'[1] பத்தொன்பதாவது நூற்றாண்டின் கொள்கை அவநம்பிக்கையையும் அழிவையும் படம் பிடித்துக் காட்டுகிறதென்றால் அதற்கு மூலகாரணம் மால்தஸ்தான்.

நடைமுறையில் என்ன செய்யவேண்டும் என்பதை மால்தஸ் திட்டவட்டமாகக் குறிப்பிடுவதில்லை. 'திருமணம் செய்துகொள்வதற்கு அவசரப்படேல்' என்று கூறுகிறார். பெண்மணிகளுக்கு அடியிற்கண்ட வேண்டுகோள் விடுக்கிறார்: 'மகளிர் இருபத்தேழு அல்லது இருபத்தெட்டு வயதில் திருமணம் செய்துகொள்ளலாம் என்ற உறுதியான நம்பிக்கை அவர்களுக்கு இருந்தால், அவர்கள் அதுவரையில் காத்திருக்கவேண்டும். இதனால் ஆண்கள் பிரிவாற்றுமையால் எவ்வளவு துன்புற்றாலும் மகளிர் இவ்வாறு காத்துக்கொண்டிருப்பதே சாலச் சிறந்தது.'[2] இது வயதான, அன்புள்ள மாமாவின் உபதேசமாக, அறிவுரையாக இருக்கிறது. அனைவரும் நம்புவதுபோல் இரக்கமற்ற கொடிய அரக்கனின் கூக்குரலாக இல்லை. இதனால் விளையும் பயன் பூஜ்யம்

[1] மக்கள் தொகைக் கட்டுரை, புத்தகம் IV, அதிகாரம் I, தொகுதி II. பக்கம் 152.

[2] மக்கள் தொகைக் கட்டுரை, புத்தகம் IV, அதிகாரம் 2, தொகுதி II, பக்கம்–163.

தான். வயதான அன்பு மாமாவின் அறிவுரைக்கு வாலிபமுறுக் கேறிய இளைஞர்கள் செவிசாய்த்திடமாட்டார்கள். அதேபோல் மால்தஸின் அறிவுரையினுலும் பயன் ஏதும் விளையவில்லே. இருபத்தெட்டு வயதில் மணம் புரிந்துகொண்டாலும், அதன் பின்னரும் வேண்டுமான அளவு குழந்தைகள் பெற்றுக்கொள்ளு வதற்கு வேண்டிய காலம் நிறைய இருக்கிறது. திருமணத் திற்குப் பிறகும் புலனடக்கத்தோடு இருக்கவேண்டுமென மில் சொல்வதுபோல மால்தஸ் சொல்லவில்லே. திருமணத்துக்கு முன் மனிதன் அடக்கத்தோடு இருக்கலாம்; மணமான பின் என்ன நடக்கிறது என்பது மனிதனிடம் இல்லே என்பதே மால்தஸ் கூற்று. எனவே, மனிதன் திருமணம் செய்துகொள் வதைத்தான் தள்ளிப்போடலாம். 'ஒருவன் திருமணம் செய்து கொண்டபின் எத்தனே குழந்தைகளேப் பெறுவான் என்பதை அவனே உறுதியாகக் கூற இயலாது.' அதிகக் குழந்தைகளுள்ள குடும்பங்களுக்குக் குடும்பநிதி தரவேண்டுமெனவும் மால்தஸ் கூறுவது வியத்தற்குரியது. 'பல துன்பங்களிலிருந்தும் திருமண மானவருக்குப் பரிகாரம் அளிக்கவேண்டும். இவற்றையெல்லாம் திருமணம் செய்துகொள்வதற்கு முன்னரே எண்ணிப் பார்த் திருக்கவேண்டும் எனச் சொல்வது நியாயமல்ல.'[1]

அவருடைய மற்றொரு நடைமுறைப் பிரேரணை இரவலர்ச் சட்டத்தைப் படிப்படியாக எடுத்துவிட வேண்டும் என்பதாகும். இது பொருளாதாரக் கொள்கைக்குச் சம்பந்தப்பட்டதன்று. அவருடைய ஆலோசணே அக்கால நிலேமைகளுக்கு ஏற்றதா யிருந்தது. ஆதரவு பெற ஏழைகளுக்கு உரிமையில்லேயென அரசாங்கம் அறிவித்துவிடவேண்டும். திருமணச் சடங்கு நிறை வேற்றும்போதே தன் குழந்தைகளேத் தான் காப்பாற்றுவதாக உறுதிமொழி எழுதிக்கொடுக்க வேண்டும். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தவறு செய்பவர்கள் இயற்கையின் சீற்றத் துக்கு ஆட்படத்தான் வேண்டும். அவர்கள் வறுமையின் கொடிய கரங்களில் சிக்கி உழலவேண்டும். அல்லது ஏதாவ தொரு செல்வச் சீமானின் தயவில் வாழவேண்டும். அவனவன் செய்த குற்றத்திற்கேற்பக் கடவுள் தகுந்த தண்டணே விதிப்பார் என நாம் நிச்சயம் நம்பலாம். எனவே, எவரும் தம் மனச்சாட்சி யைத் தொட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டியதில்லே. 'நமக்காக இயற்கையே நல்முறைப்படுத்தவும் தண்டிக்கவும் காத்திருக் கையில், இயற்கையின் கரங்களிலிருந்து நீதி தவருச் செங்கோலே நாம் ஏன் வலிந்து பறிக்கவேண்டும்? கொலேகாரன் என்ற

[1] மக்கள் தொகைக் கட்டுரை (Essay on Population), புத்தகம் IV, அதிகாரம் 13, தொகுதி II, பக்கம் 255.

அவப்பெயரை ஏன் வீணே பெறவேண்டும்?[1] இயற்கையின் நியதிகள் (கடவுளின் நியதிகள்) தவறியவனைத் தண்டிக்கின்றன. அவனுக்குத் தண்டனை கிடைக்கும்போது, சமுதாயம் அவன் மேல் கழிவிரக்கங்கொண்டு அவனை ஏறிட்டுப் பார்க்கவேண்டியதுமில்லை. ஏழை, ஏழையாயிருப்பதற்குக் கூலிவீதமோ, ஊராட்சியோ, சமூகமோ, கடவுளோ, அரசாங்கமோ பொறுப்பில்லை. 'அவர்களுடைய ஏழ்மைக்கு அவர்களே காரணம்.'[2] குறிப்பாக, 'மக்கள் துயருற்றிருப்பதற்கு அரசாங்கமே காரணம் என்பது நியாயமல்ல.' ஏனெனில், வறுமைக்கும் துயருக்கும் உள்ள முக்கியக் காரணம் நேர்வழியில் அரசாங்கத்துக்குச் சம்பந்தப்பட்டதன்று.[3] இக் கொள்கைக்கும் அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கைக்கும் உள்ள நெருங்கிய சம்பந்தம் உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்குகிறது.

முந்தைய நாளில் மால்தஸ் இரக்கமற்ற அரக்கன், கொள்ளை நோய், பஞ்சம், போர் ஆகியவற்றை விரும்பி வரவேற்றுக் கொக்கரிப்பவன்; நாட்டிலே அளவுக்கு மேற்பட்டுள்ள குழந்தைகளை மடியச் செய்ய, இயற்கையின் சீற்றத்தைக் கிளப்பிவிடுமாறு இறைவனை எப்போதும் இறைஞ்சுபவன் என்ற தவருன கருத்து வழங்கிவந்தது. இக்காலத்தில் அக் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மால்தஸ் சார்பில் வாதாடவேண்டியதில்லை; அது மிகையாகும். தாம் கூறிய தடைகளைப் போற்றிப் புகழ் பாடாமலிருப்பதே விவேகமாகும்; தாம் கூறிய தடைகளை அனுசரித்தே எல்லாம் நடந்திருக்கிறது என்று கூருதிருப்பதே சிறப்பு என்று மால்தஸ் கூறியுள்ளார்.[4] என்ருலும், மால்தஸ் எழுதியுள்ளவற்றைத் தொடர்ந்து படித்தால் அவர் வம்பை விலைகொடுத்து வாங்குகிறார் என்பது தெரியவரும். மால்தஸ் முதல் பதிப்பை வெளியிட்ட காலத்தில் முதிரா இளவயதுள்ளவராக இருந்த காரணத்தால், எதற்கெடுத்தாலும் யாருடனும் சண்டையிடுபவராகவும், யாரையும் வாதத்துக்கு இழுப்பவராகவும், வம்பை விலைகொடுத்து வாங்குபவராகவுமே இருந்திருக்கிறார். இலட்சிய வாதிகளுக்கெதிராகப் பிரத்தியட்ச உணர்வுடன் எதையும் உள்ளவாறே எடுத்துக் கூறுவதில் ஆனந்தம் கொள்கிறார். மரணத்தையும் கொள்ளை நோய்களையும் எடுத்துக் கூறுவதில்,

[1] மக்கள் தொகைக் கட்டுரை, புத்தகம் IV, அதிகாரம் 8, தொகுதி II, பக்கம் 202.

[2] மக்கள் தொகைக் கட்டுரை, புத்தகம் IV, அதிகாரம் 3, தொகுதி II, பக்கம் 170.

[3] மக்கள் தொகைக் கட்டுரை, புத்தகம் IV, அதிகாரம் 6, தொகுதி II, பக்கம் 193.

[4] மக்கள் தொகைக் கட்டுரை, புத்தகம் I, அதிகாரம் 5, தொகுதி I, பக்கம் 53, அடிக்குறிப்பு.

மஹ குஹயினும் நிஹகுஹயா நெஞ்சினராகத் தாம் கொண்ட உறுதியினின்றும் ஒரு சிறிதும் சலியாதவராகத் திடசித்த ராகக் காட்சியளிக்கிறார். தமது கொள்கையை அழுத்தந் திருத்தமாக, திட்டவட்டமாக எடுத்துக் கூறுவதற்குத் தம் இலக்கியப் புலமையெல்லாம் பயன்படுத்தியுள்ளார். இவர் பயன்படுத்தும் காரசாரமான வாதத்தால் பிறருக்கு ஊனமுண் டாகாதென்றுலும், அதிர்ச்சி ஏற்படுவது உறுதி. இவர் சில இடங்களில் வரம்பு மீறி, நிதானம் தவறி எழுதியுள்ளார். உதாரணமாக, ஏழைகஹக் குறிப்பிடுகையில், 'வாழ்க்கை என்னும் பெருஞ் சூதாட்டத்தில் தோற்றுப்போன அபாக்கிய சாலிகள்'[1] எனக் கூறுகிறார். மக்கள் தொகையைக் குறைப்பதற் குரிய தடைகஹக் குறிப்பிடுகையில், 'அத்தடைகள் அதிக மக்கள் தொகையை அழிக்கும் கொள்ஹ நோய்களுக்குப் பதிலானவை' எனக் கூறுகிறார். தான் குறிப்பிடும் சொற்றொடர், 'முதற்பார்வைக்கு விசித்திரமாக இருப்பதாகவும்'[2] அடக்கத் துடன் இறைஞ்சும் பாவஹயில் எழுதியுள்ளார். உரிய அளவுக்கு மேற்பட்டுள்ள மக்கள் தொகையைக் குறைப்பதற்கு இயற்கை மேற்கொள்ளும் வழிவகைகஹ விளக்குகையில், 'எந்த வகையில் இயற்கை தன் சீற்றத்தைக் காண்பிக்கும் என்பதை உறுதியாக எடுத்துக் கூற முடியாவிட்டாலும், அது தன் சீற்றத்தைக் காண்பித்தே தீரும்'[3] என மனமகிழ்வுடன் பூரித்துப் போகிறார். 'மரணம் ஏற்படும் ஒரு வாயிஹ அடைத்துவிட்டாலும், அதற்குப் பதிலாக வேறு வழிகளில் மரணம் அதிக அளவில் நிகழ்வது உறுதி'[4] என அஞ்சாது இவர் எழுதியுள்ளதைக் காணும் எவரும் அச்சத்தால் நடுங்கவே செய்வர். மால்தஸ் கூறியுள்ளவற்றைப் பிறர் திரித்துக் கூறியுள்ளனர் என்பது உண்மைதான்; அவரைத் தவருகப் பிறர் புரிந்துகொண்டுள்ளனர் என்பதும் உண்மைதான் என்றுலும், பத்தொன்பதாம் நூற்றுண்டின் பெரும் பகுதியில்

[1] மக்கள் தொகைக் கட்டுரை, புத்தகம் III, அதிகாரம் 2, தொகுதி II, பக்கம் 20.

[2] மக்கள் தொகைக் கட்டுரை, புத்தகம் II, அதிகாரம் 13, தொகுதி I, பக்கம் 312.

[3] மக்கள் தொகைக் கட்டுரை, தொகுதி I, பக்கம் 312.

[4] 'பெரியம்மையால் ஏராளமானவர்கள் இறக்கின்றனர் என்பது உண்மை தான். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஏராளமானவர்கள் மரணமடைவதற்கு இயற்கை வைத்துள்ள பெருவழியாகும் இது. கிடைக்கும் உணவின் அளவிற்கேற்ப மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தவே இந்த உபாயத்தை இயற்கை கடைப்பிடித் துள்ளது. இயற்கையின் இந்த வழி அடைபட்டால், மற்றவழிகளில் ஏராளமானவர் மரணமடைவர்; அன்றி, மரணம் சம்பவிக்கப் புதுப்புது வழிகள் ஏற்படும்' (புத்தகம் IV, அதிகாரம் 5, தொகுதி II, பக்கம் 183). இந்த அதிகாரம் முழுவதிலும் பெருமகிழ்வு கொண்ட மனத்தவராகவே மால்தஸ் திகழ்கிறார். அல்வழிப் பிறந்த குழந்தையை அலட்சியமாக ஒதுக்கித் தள்ளுவதிலும் அவருடைய 'கொடூரம்' வெளிப் படுகிறது. 'சொல்லப்போனுல் இக் குழந்தைக்கு மதிப்பேதுமில்ஹ. இது இறந்து பட்டாலும், மற்றவை இதன் இடத்தை ஆக்கிரமித்துக்கொள்ளும்' (புத்தகம் IV, அதிகாரம் 8, தொகுதி II, பக்கம் 203).

இவரது கொள்கையாக உலவிவந்த ஒன்றுக்கு இவர் பொறுப்பல்ல என்று தட்டிக்கழிக்கவும் இயலாது.

பல வகைகளில் மால்தஸ் விசித்திர மனிதனாக விளங்குகிறார். இவரது கொள்கை காலத்துக்கு முந்தியது. காலத்துக்கு முந்திய கொள்கையை சுவனமின்றி எடுத்துக் கூறியதில் இவர் பிரபலமடைந்தார். இதனால் இவர் பலர் சுவனத்தைக் கவர்ந்தார். ஊக உணர்வின்றி உண்மை அடிப்படை உணர்வில் இவர் தம் கொள்கையை எடுத்துக் கூறியிருந்தால், இவருக்கு இவ்வளவு புகழ் கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே. இவர் புதிதாக எதையும் கூறிவிடவில்லை என்றாலும், இவர் அதை எடுத்துக் கூறியவிதம் அலாதியாகும். இவர் கூறிய கருத்து அக்காலத்துக்கு ஏற்றதாக இருந்தது. காலத்திற்கேற்ற கருத்தாக இருந்ததால் அவர் புகழ் பரவிற்று. அப்போது பிரிட்டனில் மக்கள் தொகைப் பெருக்கம் மிகுந்திருந்தது. எவரும் அதைப்பற்றியே பேசினர். தீய விளைவுகள், போரின் விளைவுகள் போன்ற நிச்சயத் தடைகளையும் மக்கள் கண்கூடாகக் கண்டனர். மால்தஸ் எதிலும் சம்பந்தமற்றவர்போல், தாமரையிலைத் தண்ணீர்போல் பற்றின்றி எழுதியது பலருக்கும் பிடிக்கவில்லை. என்றாலும், அரசினரின் தலையிடாக் கொள்கை ஓங்கி நின்ற அக்காலத்தில், ஏழைகள் ஏழைகளாகவே இருப்பதற்கு அவர்களே காரணம்; மற்றவர்கள் பொறுப்பல்ல. பரவலாக உள்ள துயரத்திற்கு அரசாங்கம் பொறுப்பாளி அல்ல என்று அவர் கூறிய கருத்து, அதனால் தப்பிப் பிழைத்தவர்களுக்கு, பொறுப்பு நீங்கப்பெற்றவர்களுக்கு மலையிடைப் பிறந்த மருந்தாக அமைந்தது. எனினும், மால்தஸின் இரண்டாவது பதிப்பை வைத்தே அவரை மதிப்பிட வேண்டும். அப்படி மதிப்பிட்டுப் பார்க்கும்போது, ஒருவர் ஏற்றுக்கொள்ள இயலாத கருத்து எதுவும் அதில் இல்லை. ஐரோப்பியப்போர் மால்தஸ் கருத்துக்கு ஆக்கம் தேடியது. என்றாலும், இத்தலைமுறையினர் இப் பிரச்சினையைக் கண்டு பீதியடைய வேண்டியதில்லை. இதற்குரிய காரணத்தைத் துருவி ஆராயவேண்டிய அவசியமுமில்லை. மக்கள் தொகை ஒரு சீராகப் பெருகுகிறது என்பதே மால்தஸின் அடிப்படை உணர்வாகும். எனவே, தடைகள் செயற்படுவதற்கு உட்பட்டு, மக்கள் தொகை ஓர் அளவாக ஒரே விகிதப்படி அதிகரிக்கவேண்டும். கடந்த ஐம்பது ஆண்டுகளை எடுத்துக்கொண்டு பார்த்தோமானால், மக்கள் தொகை, புள்ளி விவரப்படி மக்கள் பிறப்புவீதம் குறைந்துகொண்டே வந்திருக்கிறது. இதன் காரணமாகச் சில நாடுகளில் மக்கள் தொகை மிகக் குறைந்துபோகுமோ என்ற பீதி ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த நாடுகளில் குழந்தைப்

பிறப்புப் பாக்கியமாகக் கருதப்படும். மக்களின் செல்வம் விரும்பி வரவேற்கப்படும். பிறப்புவீதம் குறைந்துபோனதற்குரிய காரணத்தை ஆராய்வதற்கு இது உகந்த நேரமுமல்ல, தகுந்த இடமுமல்ல. இதுபற்றித் தீர்மானமான கருத்து எதையும் இங்குக் கூறவேண்டியதில்லை. காட்வினும், பின்னர் காரேயும் கூறுகிறபடி, இனப் பெருக்கத்திறன் குறைந்துபோனது இதற்குக் காரணமாயிருக்கலாம். இதை ஏற்றுக்கொண்டால் மால்தஸின் அடிப்படை அனுமானம் பொய்த்துப் போகிறது. திருமணம் செய்துகொண்டபின்னர், வேண்டுமென்றே குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்தி வைப்பது இக் குறைவிற்குக் காரணமாயிருக்கலாம். திருமணத்திற்குப்பின் இவ்வாறிருக்கலாம் என்பதை மால்தஸ் எண்ணிப் பார்த்ததுமில்லை. எனவே, தற்போதைய நிலையை வைத்து ஆராய்ந்தால், ஒரு முறையான மக்கள்தொகைப் பெருக்கம் என்ற மால்தஸின் அடிப்படை அனுமானம் வறட்டுப் பிடிவாதமாகவே தெரிகிறது. அது அப்படி இல்லையென்றால், மக்கள்தொகை பெருகுவதைத் தடுப்பதற்குரிய தடைகளை மாற்றிக் கூறவேண்டும். வேறு சில புதிய கருத்துகளையும் இவற்றில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இப் புதிய கருத்துகளை மால்தஸ் எண்ணிப் பார்க்கவேயில்லை. அவருக்கும் அக் கருத்துகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

மால்தஸைப்பற்றிச் சுருக்கமாக எழுதினாலும், குத்தகை குறித்து அவருடைய கொள்கையைக் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். இவர் இதுபற்றிய தம் கருத்தை குத்தகையின் தன்மை வளர்ச்சிபற்றிய விசாரணை (1815) என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார். பின்னர் ரிகார்டோ கூறியவற்றின் முக்கிய அமிசங்களை எல்லாம் மால்தஸ் அவருக்கு முன்னதாகவே இதில் விவரமாக விளக்கியுள்ளார். விவசாய விளைபொருள் அதிக விலைக்கு விற்பதன் காரணங்களை மால்தஸ் முதற்கண் விளக்கத் தொடங்குகிறார். அவருக்குமுன் ஸே, எமிஸ்மாண்டி போன்றவர்கள் இந்த அதிக விலைக்கு ஏகபோக அமைப்பே காரணம் எனக் கூறிப்போந்தனர். இக் கருத்தை மால்தஸ் மறந்துவிட்டு, அதிக விலைக்கு மூன்று காரணங்களைக் குறிப்பிடுகிறார். நிலத்தை நம்பி வாழ்பவர்களின் தேவைக்கு அதிகமாக விளையுள் ஏற்படும் வகையில் மண்வளம் மிகுந்திருப்பது முதற்காரணம். இரண்டாவது காரணம் இவருடைய மக்கள் தொகைக் கொள்கைக்கு ஏற்ப அமைந்துள்ளது. மற்றப் பொருள்களைப்போல் அல்லாமல் விவசாய விளைபொருள் தன் தேவைக்குத் தானே வித்திடுகிறது. மற்றப் பொருள்கள் விஷயத்தில், அவற்றிற்கான தேவை வெளியிலிருந்து வருகிறது. உற்பத்திக்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

எனவே, உற்பத்தி அதிகமானால் விலை குறைந்துபோகிறது. இதற்கு மாறாக, உணவே மக்களின் அடிப்படைத் தேவை. வாழ்வுக்கு அவசியமான பொருள்களின் தேவை உணவுத் தேவையைப் பொறுத்தே உள்ளது. எனவே, உணவுப்பொருள் அதிக விலைக்கு விற்பது விவசாய விளையுள் மிகுந்திருப்பதால் தான்; அருகியிருப்பதால் அல்ல. இது விசித்திரமான நிலைதான்.

குத்தகை விளக்கம் பின்வருமாறு: 'வளமான நிலம் ஏராளமாயிருக்கையில் நிலச்சுவான்தாருக்கு எவனும் குத்தகை கொடுக்க மாட்டான். பின்னர், வளம் குறைந்த நிலம், வசதி குறைந்த நிலம் சாகுபடிக்கு மேற்கொள்ளப்படலாம். ஆனால், ஒவ்வொன்றிலும் கிடைக்கிற விளையுள், இயல்பான அல்லது அவசியமான விலைக்கே விற்கப்படும். ஏனெனில், முன்னேற்றமடைந்த எந்த நாட்டிலும் விவசாய விளைபொருள்களின் விலை வளங் குறைந்த நிலத்தில் விளைபொருள் உற்பத்திச் செலவுக்கு ஏற்பவே இருக்கவேண்டும்.' ரிகார்டோ குத்தகை குறித்துக் கூறும் கொள்கைகளுக்கும், மால்தஸ் கூறும் கொள்கைக்கும் எவ்வளவு நெருங்கிய ஒற்றுமையுள்ளதென்பது மால்தஸின் அடியிற்கண்ட வாசகத்திலிருந்து புலப்படும். இதில் நிலமடந்தை பெரும் இயந்திரத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளாள். இந்த ஒப்புவமை காரேக்கு மிகவும் பிடித்தமானதாகும்.

'ஒரு நாட்டிலே மிக வளமான நிலங்கள், தயாரிப்பு ஆலைகளிலுள்ள மிகச்சிறந்த இயந்திரங்கள்போல, மிகக் குறைந்த செலவில் மிக அதிகமான பயன் அளிக்கின்றன. எனினும், வளர்ந்து வரும் மக்கள் தொகையின் பெருகிவரும் தேவையைப் பூரணமாகப் பூர்த்தி செய்வதற்கு இவை போதுமானவையல்ல. எனவே, மூலப்பொருளின் விலை இயல்பாகவே ஏறுகிறது. திறன் குறைந்த இயந்திரத்தில் அதிகச் செலவாகும் வேலைமுறைப்படி பொருள் தயாரித்தாலும், குறிப்பிட்ட அளவுக்கு அதன் விலை ஏறுகிறது. ஒரே வகைத் தானியத்திற்கு இரண்டு விலைகள் இருப்பதற்கில்லை. எனவே, விளைபொருளை ஒப்பிட்டுப் பார்த்தால், குறைந்த மூலதனம் தேவைப்படுகிற மற்ற இயந்திரங்கள் அனைத்தும் அவற்றின் இயல்புக்கு ஏற்ற பயன் தரவேண்டும்'[1] (பக்கம் 38).

[1] ரிகார்டோ, விலையேற்றமும் குத்தகை உயர்வும் தரக்குறைவான நிலத்தைச் சென்றடையுமுன்னரே ஏற்படுகின்றன என்று கூறியதற்காகக் கண்டிக்கப்பட்டார். இவைகள் சென்றடையும் இடத்தைப் பொறுத்தே அமைகின்றன என்று மால்தஸ் தெளிவாக்கியுள்ளார். 'குத்தகை உயரும்வரை அல்லது முன்னால் பயிரிடப்பட்டதில் ஏற்றம் ஏற்படும்வரை எந்தப் புது நிலத்தையும் பயிரிட எடுத்துக்கொள்ள முடியாது.' மேலும், 'குத்தகை உயரும்வரை அல்லது முன்னால் பயிரிடப்பட்டதில் ஏற்றம் ஏற்படும் வரை தரக்குறைவான புது நிலத்தைப் பயிரிட எடுத்துக்கொள்வதற்கு அதனால் ஒரு போதும் விடை கூறமுடியாது.'

ரிகார்டோ

ஒரு சாராரின் கொள்கைப்படி, டேவிட் ரிகார்டோ[1] (David Ricardo 1772—1823) அரசியல் பொருளாதாரத்தைத் தவருன வழியில் திருப்பிவிட்டு, வறட்டுக் கொள்கைக்கு வழி கோலியவர் ஆவார். தர்க்கரீதியான இவருடைய வாதங்களும் தாம் எடுத்துக்கொண்ட கருத்தை விடாப்பிடியாகக் கடைசி வரையில் விவாதிக்கும் திறமையையும் பார்த்தோமானுல், இவரைப்போன்ற பொருளாதார வல்லுநர் வேறு எவரும் இல்லையெனக் கூறத்தோன்றும். ஆனுலும், இவர் கட்டிய கற்பனைக் கோட்டை, வாதமாளிகை எதுவும் நிலைத்து நிற்கவில்லை. எனினும், ரிகார்டோ மற்றவர்களைத் தம் செல்வாக்கின்கீழ்க் கொண்டுவந்த அளவுக்கு வேறு எவரும் கொண்டுவரவில்லை. தம் செல்வாக்கு எந்தெந்த வழிகளில் பயன்பட்டதென்பதை ரிகார்டோ அறிந்தால் அவரே வியப்புக் கடலில் அமிழ்ந்து போவார். அவருடைய விசித்திரமானது, அவரை மையமாக வைத்தே பல வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன. தலைசிறந்த ஆங்கில அரசியல் பொருளாதாரத்தைத் திட்டவட்டமாக அழகுற அமைத்தவரே ரிகார்டோதான். எனவே, அடுத்த தலைமுறையினர் ஆடம் ஸ்மித், மால்தஸ், ரிகார்டோ ஆகியவர்கள் கூறிய வற்றையே திருப்பித் திருப்பிக் கிளிப்பிள்ளைகள்போல் எடுத்துரைக்கும்படி ஆயிற்று. என்ருலும், ரிகார்டோ கூறியவற்றை ஆதாரமாக வைத்துப் பொதுவுடைமை வாதிகள் நிலப் பிரபுத்துவ, நடுத்தர ஆட்சியைக் கண்டித்தார்கள் என்ருல், நிலையும் நினைப்பும் மாறினவிதத்தை என்னென்று கூறுவது? எனவே, பொதுவுடைமைவாதிகளின் ஆலயத்தில் மார்க்ஸ், லெனின் இருவருக்கும் உருவச் சிலை வைப்பது அவசியமென்ருல், அந்த ஆலயத்தின் ஒரு மூலையில் ரிகார்டோ உருவப்படத்தையாவது வைத்து ஆராதிக்கவேண்டியதுதான்.

ரிகார்டோ எழுதியவற்றின் பொருளைக் கவனிக்காமல், அவற்றின் அமைப்பை மட்டும் பார்த்தோமானுல், ரிகார்டோ ஓர் எழுத்தாளரே அல்ல. தான் மோசமான எழுத்தாளர் என்பதை அவரே ஓரளவு உணர்ந்திருந்தார். என்ருலும், அவர் எவ்வளவு மோசமான எழுத்தாளர் என்ற முழு உண்மையை அவரே

[1] இவர் 1772-ல் லண்டனில் (London) பிறந்தார்; யூத இனத்தவர். இவருடைய தந்தை ஹாலந்தில் பிறந்த நிதி வணிகச் சீமானுவார். சிறுவயது முதற் கொண்டே பங்கு மார்க்கெட் நிலவரத்தில் தீவிரப் பங்கு கொண்டார்; இதில் இவர் பெரும் பொருள் திரட்டினுர். பின்னர் நிலக்கிழாராகி பாராளுமன்றம் புகுந்தார். இவருடைய கொள்கைகள் தவிரத் தங்க, வெள்ளிக்கட்டியின் அகவிலை போன்ற பல சிறு நூல்களும் எழுதியுள்ளார். இவை மிக முக்கியமானவை.

அறிவாரா என்பது ஐயமே. அரசியல், பொருளாதார வரிவிதிப்புக் கோட்பாடுகள் என்ற இவருடைய முக்கிய எழுத்து வரைவை ஒரு புத்தகம் என்றே கூறுவதற்கில்லை. அப்படிக் கூறின், அது மிகையாகவே, வெறும் புகழ்ச்சியாகவே இருக்கும். அது பரபரப்பான எப்போதும் எதையாவது செய்துகொண்டே யிருக்கும் மனிதன் ஒருவன் எழுத்தில் போட்டதை எடுத்துத் தொகுத்த வடிவம் என்றே கூறவேண்டும். இதில் ஒரு சீரான அதிகாரங்கள் இல்லை. அதைச் சரியான முறையில் அமைக்கும் வேலையில் அவர் மிகவும் துன்புற்றார். அவர் எழுதியவை அவருக்குப் பிடித்தமான பொருள்பற்றிய குறிப்புகளும் துணுக்குகளுமே. இதைப் புத்தகமாக்குவோம் என்ற நினைப்பில் அவர் எழுதிக் குவிக்கவில்லை. இவர் கூறக்கூடிய இச் சமாதானத்தை மற்ற நூலாசிரியர்கள் தங்கள் நூல்களில் குறித்துக் கூறுவதற்கில்லை. அவர் எழுதியவை தன்னையும் தன் நண்பர்களையும் உச்தேசித்து எழுதிய குறிப்புகளே. நண்பர்கள் தூண்டிய தாலேயே அவர் அவற்றைப் புத்தக உருவில் வெளியிட்டார். ஆனால், ரிகார்டோ எழுதியுள்ள பொருளாதாரக் கொள்கை காட்டில் சிக்கித் தவிப்பவர்களுக்கு என்ன ஆறுதலைக் கொடுக்க முடியும் ?

பொருளாதாரத்தைச் செயல் முறையில் விளக்காமல் பண்பியலாக விளக்கிய பெருமை ரிகார்டோவைச் சாரும் என்று கூறுவது வழக்கம். இது உண்மை யென்றாலும், இதுவே முழு உண்மை என்றும் கூறுவதற்கில்லை. உண்மையென ஒப்புக் கொள்ளப்பட்ட சில கொள்கைகளின் அடிப்படையின்மீதே ரிகார்டோ தமது பொருளாதாரக் கருத்துக்கோவையைக் கட்டியுள்ளார். இவர் சில சமயங்களில் இக் கொள்கைகளைக் கடைசி வரையில், அலுப்புத் தட்டுகிறவரையில் அலசிப்பார்த்துள்ளார். அவருடைய முடிவுகளுக்கும் நாம் காணும் உலகுக்கும் இடையே பெருத்த வேறுபாட்டினை இப்போது நாம் பார்க்கிறோம் என்றாலும், அவருடைய காலத்தில் அந்த வேறுபாடு அவ்வளவு பெரிதாக இருந்திருக்காது. இப்படி இருந்தால், அப்படி இருந்தால் என்ற அடிப்படையின்மேல் உருவான கருத்துக்கோவையே அவருடைய நூல் என்பதும் உண்மைதான். இப்படி இருந்தால், அப்படி இருந்தால் என்ற இவருடைய அனுமானக் கடலில் குதிப்பவர் மூச்சுமுட்டிவிடும் நிலையையே அடைவர். பண்பியலான அனுமான உலகை ரிகார்டோ எழுதிவைத்துள்ளார் என்றாலும், அவர் வாழ்ந்த உலகு அத்தகையதில்லை. ஏனெனில், இவரை விட உலகை அதிகம் அறிந்தவரும் இலர் ; அதிலிருந்து அதிகப் பயன் துய்த்தவரும் இலர். இவர் அவ்வப்போது எழுதியுள்ள பல

கட்டுரைகளும், இவர் எழுதிய கோட்பாடுகளைப்போல முக்கியத்துவம் வாய்ந்தவையே. அவற்றிலெல்லாம் ரிகார்டோ தம் காலத்தில் அடிபட்ட அவசிய, அவசர முக்கியக் கருத்துகளைப் பற்றியே எழுதியுள்ளார்.

இலக்கியக் கண்கொண்டு பார்த்தோமானால், இவர் தமது நுட்பத் திறனை யூதர்களிடமிருந்தே பெற்றார் என்பது தெரிகிறது. இவர் விஷயத்தில் 'குலவித்தை கல்லாமல் பாகம்' பட்டது என்றே கூற வேண்டும். கோனர்டு என்பவர், ரிகார்டோ, மார்க்ஸ் இருவரும் யூத இனத்தைச் சேர்ந்தவராதலால், இவர்களிடம் உள்ள வியத்தகு ஒற்றுமை அமிசங்களை விரிவாக விளக்கியுள்ளார். ரிகார்டோ பங்கு மாற்ற நிலையத்தில் பெற்ற அனுபவத்தின் பயனையும் இங்குக் குறிப்பிடவே வேண்டும். சுயேச்சையான போட்டி இருக்க வேண்டுமென்ற ரிகார்டோவின் கருத்துச் செயலில் பயன்பட்ட இடம் பங்கு மார்க்கெட் அல்லவா? உண்மையில் சொல்லப்போனால், ரிகார்டோ உருவாக்கிய நூல் இலக்கியப் புலமை இல்லாமல், வரிக்கு வரி உயிரோ, வலிவோ, வனப்போ, ஆற்றொழுக்கோ கொடுக்க நேரமும் திறமையும் அற்ற யூதன் ஒருவனின் கருத்தோவிய மாகும். தன்னைப்போன்றே தன் வாசகர்களும் அதிமேதையாக இருப்பார்களெனத் தவறுக அனுமானித்ததே ரிகார்டோவின் பெருந்தவறுகும்.

அரசியல் பொருளாதாரம் எந்த அளவு பயனுள்ளது என்பது குறித்து ரிகார்டோ கொண்ட கருத்து அவர் எழுதிய புத்தகத்தின் ஆரம்பத்திலேயே உள்ளது. அவர் தமது முன்னுரையில் எழுதுவதாவது 'நிலத்திலிருந்து கிடைக்கும் விளையுள் குத்தகை, இலாபம், கூலி என மூன்றுகப் பகுக்கப்படுகிறது. இதை எவ்வாறு பங்கிடுவது என்பதை முறைப்படுத்தும் சட்டங்களை நிருணயிப்பதே அரசியல் பொருளாதாரத்தின் முக்கியப் பிரச்சினை ஆகும்.'[1] இவர் 1820 அக்டோபர் 20ஆம் தேதியன்று மால்தசுக்கு எழுதிய கடிதத்தில் தம் கருத்தை வலியுறுத்திக் கூறுவதாவது:

'அரசியல் பொருளாதாரம் என்பது செல்வத்தின் தன்மையையும் காரணங்களையும் ஆராய்ந்து விளக்குவது என்று நீங்கள் கருதுகின்றீர்கள். தொழிலின் பயனை விளைந்தவற்றை அவை ஏற்படக் காரணமாய் இருந்த வகுப்பினரிடையே பங்கிடுவதை

[1] அரசியல் பொருளாதாரக் கொள்கைகளும் வரி விதிப்புக் கொள்கைகளும், எவ்வரிமென் வெளியீடு, பக்கம் 1.

நிருணயிக்கும் சட்டங்களைப்பற்றிய ஆராய்ச்சியே அதுவென நான் கருதுகிறேன். அளவைக் குறித்துச் சட்டம் எதுவும் விதிப் பதற்கில்லை. இந்த விதத்தில் பங்கிடவேண்டும் என்று அநேக மாக நிருணயிக்க முடியும். நாள் செல்லச் செல்ல, முந்தைய ஆராய்ச் சி பயனற்றது, வீணானது; பிந்தைய ஆராய்ச்சிமூலமே விஞ்ஞானத்தின் உண்மை நோக்கத்தை அடைய முடியும் என்ற என் கருத்து வலுப்பெறுகிறது. இதுவே என் உறுதியான கருத்து.'[1]

எனவே, பங்கிடும் பிரச்சினையிலேயே ரிகார்டோ தீவிர கவனம் செலுத்துகிறார். தேசீய உற்பத்தியில் பலருக்கும் கிடைக்கவேண்டிய பங்கின் விகிதாசாரத்தை நிருணயிக்கவே இவ்வாறு கவனம் செலுத்தப்படுகிறது. இதையும் ரிகார்டோ சரி வரச் செய்து முடிக்கவில்லை. ரிகார்டோவின் கொள்கைகள் பலவும் மார்க்ஸின் தத்துவத்திற்கு மிக ஏற்றவை. பங்கீட்டை அவர் வலியுறுத்திக் கூறுவதும் மிக முக்கியத்துவம் உள்ளதாகும். ஏனெனில், உற்பத்தித் துறையில் திறமையே முடிவான உரைகல் என்றால், பங்கீட்டுத்துறையில் நீதியே உரைகல்லாகும்.

பொருளாதாரக் கருத்து வளர்ச்சி வரலாற்றில் ரிகார்டோ பெற்றுள்ள இடத்தை அறிந்துகொள்ள, அவருடைய கொள்கை களைப் படிப்பதே போதுமானதாகும். இவர் முதற்கண் மதிப்பை ஆராய்கிறார். தனது புத்தகத்தின் முதல் அதிகாரம் முழுவதையும் இவர் இதற்கே பயன்படுத்தியுள்ளார். அவருடைய எண்ண அலைகளின் ஆரம்பம் இதுதான் என்பது ஐயப்பாட்டிற்குரியதே. இவருடைய கொள்கையை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், எளிதாக இருப்பது போலவும் நன்கு விளங்குவது போலவும் தோன்றும். ஆனால், போகப்போக இவருடைய கொள்கை பல மாற்றங்களுக்கு ஆட்பட்டுக் கொள்கைக் குழப்பத்தில் முடிவடை கிறது. எவரேனும் இவருடைய கொள்கையை இந்த அளவு ஆராய்ந்தால், அக் கொள்கை எளியதா, அது புரிகிறதா என்ற சந்தேகம் கொள்வர். பிறர் சந்தேகம் கொள்வதென்ன ? ரிகார்டோவே தம் கொள்கை சரியானதுதான் என்ற ஐயப்பாட் டுக்கு ஆட்பட்டுள்ளார். இவர் தம் கொள்கையை ஆடம் ஸ்மித்தின் அடிச்சுவட்டில் ஆரம்பிக்கிறார். பயன் மதிப்பையும் பரிமாற்ற மதிப்பையும் வேறுபடுத்திக் கூறுகிறார். ஒரு பொருளுக்குப் பரிமாற்ற மதிப்பு இருக்கவேண்டுமென்றால், அப் பொருளால் பயனிருக்கவேண்டும். ஆனால், பயன்படுவதை

[1] மால்தசுக்கு ரிகார்டோ எழுதிய கடிதங்கள், பக்கம் 175.

மட்டும் கொண்டு ஒரு பொருளின் பரிமாற்ற மதிப்பை நிருண யிக்கவில்லை. பயன் இருப்பதாக வைத்துக்கொண்டால், பொருளின் பரிமாற்ற மதிப்பு இரு ஆதாரங்களிலிருந்து கிடைக் கிறது: (1) கிடைப்பதன் அருமை, (2) அவற்றைப் பெறுவதற்கு வேண்டியுள்ள முயற்சியின் அளவு. ஆனால், மதிப்பை நிருணயிப் பதற்கு இவை இரண்டும் எந்த அளவு செயல்படுகின்றன என்பதை எவ்வாறு நிருணயித்தறிவது? இந்த இடத்தில் ரிகார்டோ மிகத் துணிவுடன் எல்லாப் பொருள்களையும் இரு வகைகளாகப் பிரிக்கிறார். சில பொருள்கள் இருக்கின்றன; எவ்வளவுதான் மேற்கொண்டு முயற்சியெடுத்தபோதிலும் இவற்றின் அளவைப் பெருக்க முடியாது. எனவே, இவை அதிகம் கிடைத்தாலும் இவற்றின் மதிப்புக் குறையாது. இந்த விஷயத்தில் பொருள் கிடைப்பதன் அருமையை வைத்து மதிப்பு நிருணயிக்கப்படுகிறது. கிடைத்தற்கருமையான சிலைகள், சிற்பப் படங்கள், புத்தகங்கள், நாணயங்கள் ஆகியவை இத் தகைய பொருள்களாகும். பொருளாதாரக் கண்காட்சியில் கொலுவீற்றிருக்கும் பெரிய ஆக்கின் (Auk's) முட்டையைப் போன்ற பொருள்களெல்லாம் இவ்வகையைச் சார்ந்தவை. வேறு சில பொருள்கள் இருக்கின்றன; மனித உழைப்பினால், நாம் இவற்றை அதிக அளவு உற்பத்தி செய்துவிட முடியும். இதற்கு வரையறை என்பதே இல்லை. 'ஒவ்வொரு பொருள் செய்யவும் மேற்கொண்ட முயற்சியே' இதன் பரிமாற்ற மதிப்புக்கு அடிப் படை. இப்படிக் கூறியபோதிலும், இந்த அதிகாரத்தின் துவக் கத்தில் பொதுவிளக்கம் கூறும்முகத்தான், 'சமுதாயத்தின் ஆரம்ப நிலையால்' என்றும், 'அநேகமாகத் தனிப்பட'[1] என்றும் இதற்கு வரையறை ஏற்படுத்தி, தமது கொள்கையை வழவழாக் கொள்கையாக்கிவிடுகிறார். எனினும், சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும், இதுவே அடிப்படையாக இருக்கிறது.[2] இந்தப் பிரச்சினையைத் துணிவுடன் இவ்வாறு இரு கூருக்கி யிருப்பது இக் கொள்கை நிந்தித்துத் தள்ளப்படுவதற்கும் வழி கோலுகிறது எனவும் கூறலாம். மதிப்புப்பற்றிய பிரச்சினை ஒன்றேயாகும். மதிப்பு எங்கு ஏற்படினும், மதிப்புக் கொள்கை அதை விளக்கவல்லதாக இருக்கவேண்டும். ஒருவகைப் பொருளின் விஷயத்தில் ஒரு விதத்தில் மதிப்பு ஏற்படுவதாகவும், மற்றவகைப் பொருளின் விஷயத்தில் பிறிதொரு விதத்தில் ஏற்படு வதாகவும் கூறுவது பொருந்தாக் கூற்று. எல்லாப் பொருள் களையும் இருவகைகளாக, மாற்ற முடியாத இருவகைகளாகப்

[1] 'தனிப்பட' என்றே முதலில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், சந்தேகம் விரை விலேயே ரிகார்டோவை ஆட்கொண்டது.

[2] கொள்கைகள், அதிகாரம் 1, மதிப்புப்பற்றியது, பிரிவு 1.

பிரித்ததே ரிகார்டோ செய்த தவறு. அற்புதம் நிகழ்ந்தாலொழிய அதிகரிக்கப்படமுடியாத பொருள்கள் என்றும் (பொருளாதாரப் பாடப் புத்தகத்தில் அற்புதத்துக்கு இடமேது?), மக்கள் விரும்பினால் வரையறையின்றி உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய பொருள்கள் என்றும் பொருள்களை இருவகைப்படுத்தியதே ரிகார்டோ செய்த தவறு. இத்தகைய வகைப்பாடுகள் உண்மையில் இல்லையென்று வாதிடலாம். இவை இருப்பதாக வைத்துக்கொண்டாலும், சிறு மாற்றம் விரைவாக, இவை ஒன்று மற்றொன்றுக மாறிவிட முடியும். உண்மையில் சொல்லப் போனால், குறித்த காலத்தில் எல்லாப் பொருள்களும் வரையறைக் குட்பட்டவையே. எதிர்நோக்கில் பார்த்தோமானால், மனித முயற்சியில் அதிகரிக்க முடியாத பொருள்களே இல்லையென்றும் சொல்லலாம். பழம்பெரும் சித்திரக்காரர் தீட்டிய சித்திரங்களும், பெரிய ஆக் முட்டைகளும் வழக்கமான உதாரணங்களாகும். பழம்பெரும் சித்திரக்காரர் ஒருவரின் சித்திரங்கள் ஓரளவுக்கு உட்பட்டவை என்பது உண்மைதான். அத் தொழிலின் வன்மை கட்டுப்படுத்தி வைக்கப்பட்டுள்ளவரையில் இது உண்மைதான். பழம் பெரும் சித்திரக்காரர்களின் சித்திரங்கள் எண்ணிக்கையில் பெருகிக்கொண்டே போகின்றன. இதற்கு 500 ஆண்டுகள் வேண்டுமானால் ஆகலாம். 2400ஆம் ஆண்டில் இன்றைய சித்திரக்காரர்களின் சித்திரங்கள் பழம்பெரும் சித்திரக்காரர்களின் சித்திரங்களாக மாறி, அதன் மார்க்கெட்டையே குலைக்கும் அளவுக்குப் பெருகிவிடக்கூடும். பெரிய ஆக் முட்டை விஷயத்திலும் இப்படித்தான். இக் கடற்பறவை விட்டுச் சென்ற முட்டைகள் ஒரு சிலவாயிருக்கலாம். ஆனால், இப்போது இனம் ஒழிந்த பறவைகளின் முட்டைகளை அதிகரிப்பது சாத்தியமே. இதற்காக முயற்சி எடுத்துக்கொண்டால், இது முடியாத காரியமா என்ன? இப்போதுள்ள சிட்டுக்களையும் தவிட்டுப் பறவைகளையும் பெரிய கடற் பறவையைப்போல இன ஒழிப்புச் செய்துவிட்டால், இவற்றின் முட்டைகளும் கடற்பறவை முட்டைகளைப்போல அழியாப் புகழ் பெற்றுவிடும். தேன் சிட்டு ஒழிப்பு இயக்கத்தால் பெரிய கடற்பறவையின் முட்டை பாதிக்கப்படாது என்று எவர் தான் உறுதியாகக் கூற முடியும்? இவ்வாறு செய்தால், அதன் மதிப்பு நிச்சயம் பாதிக்கப்படும். ஏனெனில், இவ்வாறு செய்வ தால், இனம் ஒழிந்த பறவைகளின் முட்டைகள் எண்ணிக்கையில் அதிகரிக்கின்றன அல்லவா? தேன் சிட்டு முட்டைகள் ஆக் பறவை முட்டைகளுக்குப் பதிலாக வந்துள்ளன என்று சொல்லலாம் என்றாலும், இந்த முட்டைகளை விரும்பி ஏற்பவர்கள் சிலரேனும் மற்றதன் முட்டைகளை ஏற்கவும் தயங்கமாட்டார்கள்.

ரிகார்டோ, மார்க்ஸைவிடத் துணிவு குறைந்தவரே. அதிக ரிக்கத்தக்க பொருள்கள் ஒவ்வொன்றுக்கும் செலுத்திய முயற் சியின் அளவுக்கேற்ப அவை மாறுபடுகின்றன என்பதற்கு ஆதாரம் எதுவும் காட்டவில்லை. அவர் இது குறித்துக் கூறுவ தெல்லாம் இதுதான்: 'இந்தக் கூற்றின் உண்மையை நாம் திரிகரண சுத்தியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டுமானால், முயற் சியைக் குறைப்பதற்குரிய வழிவகைகளை அபிவிருத்தி செய்ய முடியும் என அனுமானம் செய்யவேண்டும்.' இதன் விளை வென்ன? முடிவான பொருளின் மதிப்பில் வீழ்ச்சி ஏற்படுகிறது. இக் கூற்றின் நிரூபணம் இக் கூற்றின் உண்மையைச் சார்ந் துள்ளது.[1]

'அடிப்படை' எனக் கூறப்பட்ட கொள்கை பல வரையறை களுக்கு உடனடியாக ஆட்பட்டுவிடுகிறது. இதனால், ரிகார் டோவின் அடிப்படை ஆட்டங்கண்டுவிடுகிறது. முயற்சியின் பல தன்மைகளால் முதல் சிக்கல் ஏற்படுகிறது. ரிகார்டோ கூறு வதாவது, 'முயற்சியின் பல தன்மைகள் மதிப்பிடப்படுவது, எல்லாக் காரியங்களுக்கும் துல்லியமாகக் கணக்கிடுவது மார்க் கெட்டில் சரிகட்டப்படுகிறது.' இத்தகைய அளவீடு 'ஒரு முறை நிர்ணயிக்கப்பட்டால் அதன்பின் அது மாறுதலுக்கு உட்படுவ தில்லை.'[2] எனினும், அங்காடியிலே என்ன நேர்கிறது என்பதை விளக்கும் மதிப்பீட்டுக் கொள்கை அங்காடியில் உண்மை யிலேயே நிகழ்வதன் அடிப்படையில் அமைவதில்லை. பொரு ளாதாரச் சர்ச்சையில் எப்போதும் இருந்துவரும் தீராப் பிரச் சினையே இது. எது காரணம், எது விளைவு; நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா; மரம் முதலில் ஏற்பட்டதா, விதை முதலில் ஏற்பட்டதா என்ற பழம் பிரச்சினை தான் இங்கும் தலைதூக்குகிறது. பலவகை முயற்சிகளுக்கு முதலில் மதிப்புக் கணித்துவிட்டு—இதை எவ்வாறு கணிக்கிறோம் என்பதை ஆண்டவனே அறிவார்—அதன்பின் உற்பத்தி செய்யப் பட்ட பல பொருள்களுக்கு அங்காடியில் அவற்றின் மதிப்புப் பிரதி பலிக்கிறதா அல்லது ஈவு இரக்கமற்ற அங்காடியில் பல பொருள் களின் மதிப்பு முதலிலேயே நிருணயிக்கப்பட்டு, அதன்பின் பல முயற்சிகளின் ஒப்புவமை மதிப்பாகப் பிரதிபலிக்கிறதா? தேவைப் படும் முயற்சியின் அளவைப்பொறுத்து ஒரு பொருளுக்கு அங்கா டியில் மதிப்பு ஏற்படுகிறது என்ற கொள்கையை மேற்கொண்டோ மானால், பலவகை முயற்சிகள் எந்த விகிதாசாரப்படி இருக்க

[1] கொள்கைகள், அதிகாரம் 1, பிரிவு 3, பக்கம் 15.
[2] கொள்கைகள், அதிகாரம் 1, பிரிவு 2, பக்கங்கள் 11-12.

வேண்டும் என்பதை நிருணயிப்பதற்கு அங்காடிக்குச் செல்ல வேண்டும் எனச் சொல்வதற்கு நமக்கு வாயேது ?[1]

ஏற்படும் மூலதனத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவைப் படும் நேரம், உழைப்பு, நிலையான, புழங்கும் மூலதனங்களிடையே அதன் பகிர்வு, மூலதனம் நீடித்திருக்கும் கால அளவு, பொருள்களை அங்காடிக்குக் கொண்டுவருவதற்கு ஆகும் காலம் முதலிய வரையறை நிபந்தனைகளை ரிகார்டோ குறிப்பிடுகிறார். இவையெல்லாம் அவ்வளவு முக்கியமானவை அல்ல என ரிகார்டோ ஒதுக்கித் தள்ளப் பார்த்தாலும், அவருடைய அறிக்கை பல சந்தேகங்களைக் கிளப்பிவிடுகிறது. இச் சந்தே கங்கள் அவருக்கும் ஏற்பட்டு, அவர் குழப்பத்தில் ஆழ்ந்தார் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றே. எனினும், பொருளின் மதிப்பையும் அதை உற்பத்தி செய்வதற்கு அவசியமான முயற்சி யையும் இயன்றவரையில் குறிப்பிட்டுக் காட்ட, கொள்கைகளில் இவர் பெருமுயற்சி செய்துள்ளார். அவர் விதித்த பல தடை களும் வரையறைகளும் புறக்கணிக்கப்படுகின்றன. ரிகார்டோ மதிப்பின் உழைப்புக் கொள்கை ஒன்றை உலகுக்கு உருவாக்கித் தந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

தேவைப்படும் உழைப்பின் அளவைப்பொறுத்தே ஒரு பொருளுக்கு மதிப்பு ஏற்படுகிறது என்ற கொள்கை நிலத்தைப் பயன்படுத்துவதற்கும், அதை விலைவித்துக் குத்தகை செலுத்து வதற்கும் எந்த அளவு பொருந்துகிறதென்பதை இப்போது ஆராய்வோம். இதை ஆராய்ந்தோமானால், ரிகார்டோ குத்தகைக் கொள்கையை அறிந்துகொள்கிறோம். ரிகார்டோ கொள்கைகளில் இதுதான் மையமானது எனக் கூறமுடியா விட்டாலும், பெரும்புகழ் பெற்ற கொள்கை இதுதான். ரிகார்டோவின் இக்கொள்கை முக்கிய அமிசங்களில் ஏற்கெனவே பிறரால் கூறப்பட்டது என்பது உண்மைதான் ; எனினும், ரிகார்டோ இதைத் திட்டவட்டமாக வரையறுத்து இதற்கு முழு உருவம் கொடுத்துள்ளார். அதனால், எல்லாக் காலத்துக்கும் இது ரிகார்டோ கொள்கை என்றே வழங்குகிறது. ஏற்கெனவே நாம் பார்த்தபடி பிசியோகிராட்ஸ் குத்தகையை இயற்கையின்

[1] இவ் விஷயத்தில் மார்க்ஸ் கூறுவது இதற்கு மிக ஒத்துவருகிறது. 'பலவகை உழைப்பு, பல விதிதாசாரங்களில் தேர்ச்சி பெறு உழைப்பைத் தர நிலையாக வைத்துக் கணக்கிடப்படுவது, ஒரு சமூக அமைப்பின் அடிப்படையில் உற்பத்தி செய்பவர்களைக் கருதிப்பார்க்காமல் நடைபெறுகிறது. எனவே, மாமூல் வழக்கத்தையொட்டி இது நடை பெறுவதாகத் தோன்றுகிறது' (மார்க்ஸ், மூலதனம், அதிகாரம் 1, பிரிவு 2, பக்கம் 52). உற்பத்தி செய்பவர்களைக் கருதிப்பார்க்காமல் அவர்களைப் புறக்கணித்துவிட்டு நடைபெறும் புதிய வேலைமுறை அங்காடி மதிப்பீடுதான்.

வளத்துக்குச் சான்றுகவே கருதினர்; ஆடம் ஸ்மித்தும் இக் கொள்கையையே கொண்டிருந்தார். ஆனால், மால்தஸ் இவர் களுக்கு மாறுக வேறு கொள்கை கொண்டிருந்தார். இவருடைய கொள்கைப்படி குத்தகை என்பது இயற்கையின் வளத்தால் ஏற்படுவதல்ல, வளக்குறைவால் ஏற்படுவதாகும்.

ரிகார்டோ வரையறுத்த பொருளில் குத்தகையை ஒப்புக் கொண்டோமானால், ரிகார்டோ குத்தகைக் கொள்கை நமக்கு இந் நாளில் தெள்ளத்தெளிய விளங்கும் கொள்கையே ஆகும். குத்தகை என்பது, 'மண்வளத்தின் அழிக்க முடியாத மூலச்சக்தி களைப் பயன்படுத்துவதற்காக நில வினைவிலிருந்து நிலக்கிழாருக்கு அளிக்கப்படும் பகுதியாகும்.'[1] எனவே, ரிகார்டோவின் குத்த கைக்கொள்கை மற்றவர்களினின்றும் மாறுபட்டதாகும். நிலக் கிழார்கள், குடியானவர்கள், இன்னோரன்ன பிற பண்ணைக் கட்டடங்கள், அபிவிருத்தியில் ஈடுபடுத்திய மூலதனம் போன்ற பல விஷயங்கள் குத்தகையில் அடங்கியிருப்பதாகக் கருதுகின் றனர். குடியேற்ற நாடு கண்ட ஒருவன் மண்வளத்துக்கு மூல சக்தி எது? சாத்தான் அதில் வைத்த சக்தி தவிர வேறு சக்தி ஏது எனக் கூறலாம். திறமையற்ற குடியானவன் அதில் அழிக்க முடியாத சக்தி எதுவும் இல்லையெனக் கூறலாம். சாதாரண மனிதன் நிலத்தில் இத்தகைய சக்திகள் இருப்பதாக ஒப்புக் கொண்டாலும், இவை மற்றச் சக்திகளுடன் இரண்டறக் கலந் திருப்பதாகவும் இவை பின்னர் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சக்திகள் எனவும் கூறலாம். எனவே, ரிகார்டிய அல்லது பொருளாதாரக் குத்தகையை வட்டியாக அமைகின்ற இதர அமிசங்களினின்றும் இனம் பிரித்துக்காட்ட முயல்வது அறி வுடைமை அல்ல; அது வீண்முயற்சி எனவும் கூறக்கூடும்.

பொருளாதாரப் பாடப் புத்தகங்கள் ரிகார்டோ குத்தகைக் கொள்கையை அனைவருக்கும் விளங்கவைத்துள்ளன. எனவே, அக் கொள்கையை மேலெழுந்தவாரியாக ஆராய்வதே இங்குப் போதுமானதாகும். புதிய நிலக் குடியேற்றத்தின் விஷயத்தில், வளமான, செழிப்பான நிலம் ஏராளமாக இருப்பதாக வைத்துக் கொண்டாலும், அங்குக் குத்தகை எதுவும் இருக்காது. பயன் படுத்தப்படாத செழிப்பான பூமி ஏராளமாக இருக்கையில், எவன் குத்தகை கொடுக்க முன்வருவான்? ஆனாலும், நாள் செல்லச் செல்ல, இத்தகைய செழிப்பான பூமி குறைந்துகொண்டே வரும். மக்கள் தொகை பெருகப்பெருக, முன்னிலும் வளம் குறைந்த

[1] கொள்கைகள், அதிகாரம் II, பக்கம் 33.

நிலத்தையும் பயன்படுத்தவேண்டிய அவசியம் ஏற்படும். அப்போது அதிக வளமுள்ள நிலத்தின் விஷயத்தில் குத்தகை ஏற்படும். எனவே, மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்படும். ஒவ்வொரு முறையும் முன்னிலும் வளம் குறைந்த நிலம் சாகுபடியின்கீழ் வரும். புதிதாகச் சாகுபடிக்கு வந்த நிலத்துக்குக் குத்தகை இருக்காது. முன்னர், கடைசியாகச் சாகுபடி செய்த நிலத்துக்கு இப்போது குத்தகை கிடைக்கும். வளம் நிறைந்த நிலத்துக்குக் கிடைக்கும் குத்தகை அதற்கேற்ப உயரும்.

இக் கொள்கையைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுவது சாத்தியமே. (ரிகார்டோ அடிக்கடி பயன்படுத்துவதுபோல) இப்படி இருப்பதாக வைத்துக்கொள்வோம்: மூன்று தரமுள்ள நிலங்கள் இருப்பதாகவும், அவற்றில் மூலதனமும் உழைப்பும் சம அளவில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், அவற்றிலிருந்து முறையே 100, 90, 80 டன் நிகர மகசூல் கிடைப்பதாகவும் வைத்துக்கொள்வோம். முதல்தர நிலம்மட்டும் சாகுபடி செய்யப்படுகையில் குத்தகை எதுவும் இருக்காது. இரண்டாந்தர நிலம் சாகுபடிக்கு மேற்கொள்ளப்படும்போது 10 டன் குத்தகை முதல்தர நிலத்துக்குக் கிடைக்கும். ஏனெனில், ஒரேவகையைச் சேர்ந்த பொருளுக்கு அங்காடியில் ஒரு விலைதான் இருக்க முடியும். அந்த விலையும் 90 டன் விளையுள் சாகுபடிக்குக் கட்டுபடியாக இருக்க வேண்டும். மூன்றாந்தர நிலம் சாகுபடியின்கீழ் வரும்போது குத்தகையில்லா நிலத்தில் 80 டன் விளையுள் கிடைக்கும். முன்னர், கடைசியாகச் சாகுபடிக்கு வந்த நிலத்துக்கு (இதில் 90 டன் விளையுள் கிடைக்கும்) இப்போது 10 டன் குத்தகை வரும்; மிக உயர்ந்த தரமுள்ள நிலத்துக்கு இதுவரை கொடுத்து வந்த 10 டன் குத்தகை இப்போது 20 டன்னுக உயரும். இப்படியே முடிவில்லாமல் சொல்லிக்கொண்டே போகலாம்.

ரிகார்டோ குத்தகைக் கொள்கை, மதிப்பின் உழைப்புக் கொள்கையுடன் எந்த முறையில் சம்பந்தமுள்ளதென்பதைக் காணலாம். உற்பத்திச் செலவைப் பொறுத்து மதிப்பு நிருணயிக்கப்படுகிறது. விவசாய விளைபொருள்களின் விஷயத்தில் ஒரு சீரான உற்பத்திச் செலவு எங்கே இருக்கிறது? பலவகை உற்பத்திச் செலவில் எந்த எந்த உற்பத்திச் செலவின் அடிப்படையில் நிருணயிப்பது? மிக அதிகமான உற்பத்திச் செலவின் அடிப்படையில்தான் அதன் மதிப்பை நிருணயிக்கவேண்டும். சமுதாயத் தேவையை முன்னிட்டுத் தரம் குறைந்த நிலத்தையும் வசதியற்ற நிலையில் சாகுபடிக்கு மேற்கொள்ளவேண்டி வந்தால், அதற்கு ஆகும் செலவு சரிக்கட்டப்படுகிறவரையில் விலை

நிருணயிக்கப்படவேண்டும். எனவே, வசதியற்ற மிக மோசமான நிலையில் சாகுபடி செய்பவர்களின் உற்பத்திச் செலவின் அடிப்படையில் பொருள்களின் விலை நிருணயிக்கப்படுகிறது. விலை ஒரு சீராக இருப்பதால், வசதியுள்ள நிலையில் செழிப்பான நிலத்தைச் சாகுபடி செய்பவர்களுக்கு உபரி கிடைக்கும். எனவே, ரிகார்டோ குத்தகைக் கொள்கையைச் சுருங்கக் கூறுவதானால், ஒரு பொருளுக்கு அங்காடியில் ஒரே விலை இருக்கையில் (ஒரே விலை இருந்தே தீரவேண்டும்), ஒரேவகையான இரு பொருள்கள் வெவ்வேறு செலவில் உற்பத்தி செய்யப்படும்போது, வசதியான நிலையில் உற்பத்தி செய்யப்படும் பொருளின் விஷயத்தில் செலவு போக உபரி எஞ்சி நிற்கும். சம அளவில் மூலதனமும் உழைப்பும் செலுத்தும்போது கிடைக்கிற விளையுளின் வேறுபாடே குத்தகை. இப்படிச் சொல்லும்போது, குத்தகையை விவசாயத்துடன் மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. பொருளாதார வாழ்விலும் இது ஏற்படக்கூடும்.

ரிகார்டோ குத்தகைக் கொள்கை முழுவதும் ஒரே குழப்படியானது என்று திறனுய்வார் கூறக்கூடும். விளைவைக் காரணமாகக் காட்டியதால் இந்தக் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறுவார். மக்கள் பெருக்கத்தின் விளைவாகத் தரம் குறைந்த நிலத்தையும் சாகுபடி செய்யவேண்டி வருகிறது. இதன் விளைவாக உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. உற்பத்திச் செலவுக்கேற்ப அப் பொருளின் விலையும் ஏறுகிறது. ரிகார்டோ கற்பனை உலகத்தில்தான் மிதந்து செல்கிறார். என்றாலும், இத்தகைய அனுமான நிலையிலுங்கூட, தரம் குறைந்த நிலத்தைச் சாகுபடியின் கீழ்க் கொண்டுவருவது பொருளின் விலை ஏற்றத்தினால் ஒழிய நிலவுயர்வின் காரணத்தால் அல்ல. விலையேற்றம் முதலில் ஏற்படுகிறது. தரம் குறைந்த நிலத்தின் சாகுபடி பின்னர் நிகழ்கிறது. ஒரு பொருளுக்குப் பற்றுக்குறை ஏற்பட்டால், அதன் விலை ஏறுகிறது. விலை ஏறி நிற்பதால், தரம் குறைந்த நிலத்தையும் சாகுபடி செய்ய மக்கள் முன்வருகிறார்கள். ரிகார்டோ மதிப்புக் கொள்கை இதனால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதைக் கூறத் தேவையில்லை, அதிக முயற்சியின்மேல் விளைவிக்கப்படுகிற தானியமே அதன் விலையை நிருணயிக்கிறது[1] என்ற அறிக்கையை மாற்றிக் கூறவேண்டிவரும். அதற்கு மாறுகச் சாகுபடி செய்வது இலாபமானதா, இல்லையா என்பதை அத் தானியத்துக்குக் கிடைக்கும் விலையே நிருணயிக்கிறது.

ரிகார்டோ குத்தகைக் கொள்கையினின்றும் எழுகிற சில விஷயங்களை இங்கே குறிப்பிடலாம். இவருடைய கொள்கைப்படி,

[1] கொள்கைகள், பக்கங்கள் 40–41.

குத்தகை பயக்கா நிலம் எங்கேனும் இருந்தே தீரவேண்டும். ஆனால், தரம் குன்றிய நிலத்தைச் சாகுபடி செய்வதைவிடப் பின்னர் ஒரு நிலையில் (அத்தகைய நிலை சாத்தியமாக இருக்குமானால்) வளமிக்க நிலத்திலே அதிக மூலதனத்தையும் உழைப்பையும் ஈடுபடுத்தி அதிக விளையுள் பெறமுடியும் என்பதை ரிகார்டோவே உணர்ந்துள்ளார். ஏற்கெனவே சாகுபடி செய்த நிலத்தில் இவ்விதத் தீவிர முயற்சி மேற்கொள்வதாலும், முன்னர் சொன்ன முறையிலேயே குத்தகை ஏற்படவேண்டும். ஏனெனில், 'குறைந்த பயனுடன் அதிக உழைப்பை ஈடுபடுத்துவதால்'[1] குத்தகை ஏற்பட்டே தீரும் (இங்கே குறைந்த விளையுள் நியதி புலப்படுகிறது). இதையே நவீன முறையில் செய்வதானால், குத்தகை நியதி விரிவாகவும் பயன்படும்; தீவிரமாகவும் பயன்படும். அகல உழுதலும் ஆழ உழுதலும் என்ற இருவகையும் இங்கே பயன்படும். இக் கொள்கையிலிருந்து பெறப்படுகிற முக்கியமான விஷயம் என்னவென்றால், (ரிகார்டோ கருதிய பொருளில்) குத்தகை உற்பத்திச் செலவில் வருவதில்லை என்பதே. எனவே, குத்தகையைத் தள்ளிவிட்டாலும், அதனால் அப்பொருளின் விலையில் எம்மாற்றமும் ஏற்படாது. மிக மோசமான நிலையில் செய்யப்படும் உற்பத்தியைப் பொறுத்து விலை நிருணயிக்கப்படுகிறது. குத்தகை என்பது எஞ்சி நிற்கும் உபரியே; தரமான நிலத்தின் அனுகூலமே குத்தகை என்ற வாதத்திலிருந்து இக் கொள்கை உருவெடுக்கிறது. மற்றுமொரு விஷயம் ரிகார்டோ குத்தகைக் கொள்கையினின்றும் பெறப்படுகிறது, எஞ்சி நிற்கும் உபரியெல்லாம் நிலக்கிழாருக்கே போய்ச் சேருகிறது. சமுதாயம் முன்னேற முன்னேற, இது அதிகரித்துக் கொண்டே போகும். நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதால் இந்த விளைவு ஏற்படுகிறது. செல்வம், நாட்டின் வளம் பெருகினால் (மால்தஸ் கொள்கை விளக்கப்படி) மக்கள் தொகை பெருகும்; பெருகிய மக்கள் தொகைக்கு வேண்டிய உணவு வழங்கவேண்டுமானால், முன்னிலும் தரம் குறைந்த நிலங்களையும் சாகுபடியின்கீழ்க் கொண்டுவரவேண்டும். குத்தகை அதிகரிக்கும் இப் போக்கினை விவசாயத்தில் ஏற்படும் அபிவிருத்திமூலம் தடுத்து நிறுத்த முடியும். தீவிரச் சாகுபடியை மேற்கொள்வதால் ஏற்கெனவே சாகுபடியின் கீழுள்ள நிலத்திலிருந்து அதிக விளையுள் பெறமுடியும். அவசியமாகச் சாகுபடி செய்யப்படுகிற நிலங்களின் தராதரங்கள் குறையக் குறைய, குத்தகையும் குறைந்துபோகும். ரிகார்டோ துலாம்பரமாகச் சொல்கிறபடி, எஞ்சியுள்ள நிலத்தின் உற்பத்தித் திறன் குறையக் குறையக்

[1] கொள்கைகள், பக்கம் 37.

குத்தகை விரைந்து அதிகரிக்கும். வளமான நிலமெல்லாம் சாகு படியின்கீழ் வந்தபின், பாறைப் பகுதிகளையும் சாகுபடியின்கீழ்க் கொண்டுவர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ள நிலையே நிலக் கிழாருக்கு மிக வசதியான நிலை.

ரிகார்டோ கொள்கையின் விளைவு மிக மகத்தானது. வேறெந்த உரிமையும் இல்லாவிட்டாலும், நில மகசூலில் ஒரு பகுதி நிலக்கிழாருக்கு இனமாக அளிக்கப்படுகிறது. அவர் எந்தவித முயற்சியும் மேற்கொள்ளாமலேயே இது அவருக்குக் கிடைக்கிறது. இப் பகுதியும் மக்கள்தொகை வளரவளர அதிக ரித்துக்கொண்டே போகிறது. இவ் வகையில் ஆண்டு மகசூலில் நிலக்கிழாருக்குக் கிடைக்கும் பகுதி ரிகார்டோ கொள்கைப்படி வரையறை அற்று இருக்கும். எனவே, இக் கொள்கை பிசியோ கிராட்ஸ் கொள்கையினின்றும் முற்றிலும் வேறுபட்டதாகும்; தலைகீழானதாகும். பிசியோகிராட்ஸ் நிலக்கிழாருக்குக் கௌரவ மான ஸ்தானம் கொடுத்தனர். அவர்களால் சமூகத்துக்கு நற் பயன் விளையும் எனவும் குறிப்பிட்டனர். இயற்கை அன்னையின் கருணை மழையே குத்தகை எனவும் கூறிப்போந்தனர். இப்போது ரிகார்டோ கொள்கைப்படி கருணையே வடிவான இயற்கை அன்னை மாற்றுந் தாயாகி விட்டாள். 'இயற்கை அன்னை வளம் கொழிக்கிறாள் என்பதற்காக நாம் அவளுக்கு ஈடுசெய்வதில்லை. வளம் இல்லாததால்தான் நாம் இயற்கை அன்னைக்கு ஈடுசெய்கிறோம். இயற்கை அன்னை வளத்தைக் குறுக்கக் குறுக்க நாம் அவளுக்குக் கொடுக்கும் ஈடு அதிக ரிக்கிறது.'[1] பொருளாதார வானிலே இத்தகைய கருத்துகளால் மப்பும் மந்தாரமும் ஏற்பட்டு இருள் நிறைந்துவிடுகிறது.

ரிகார்டோவின் தலைசிறந்த மற்றக் கொள்கைகளில் மிக முக்கியமானது கூலிபற்றியதாகும். உழைப்பின் விலையாகிய கூலி, மதிப்புக்கு ஓர் உதாரணமாகவே விளங்குகிறது. உற்பத் திக்கு அவசியமான உழைப்பின் அளவைப்பொறுத்தே மதிப்பு நிருணயிக்கப்படுகிறது என்று கண்டோம். இது 'இயல்பான விலையே'. ஆனால், இவ் விலை ஒரொருபொழுது மாறுபடலாம். ஏனென்றால், எப்பொழுமே எல்லாக் காலத்திலும் அதே அபரி மித அளவில் கிடைப்பதில்லை. இத்தகைய மாறுபாடுகள் காரண மாகப் பல்வேறு உற்பத்தி வழிகளில் மூலதனம் பங்கீடு செய்யப் படுகிறது. எனவே, ரிகார்டோ சித்தாந்தப்படி அங்காடி விலை ஊசலாடிக்கொண்டே இருக்கும். ஆனாலும், உற்பத்தி உழைப்புச் செலவைக் குறிக்கிற இயல்பான விலையை நாடியே அது நகர்ந்து

[1] கொள்கைகள், அதிகாரம் 2, பக்கம் 39, அடிக் குறிப்பு.

வரும்.[1] உழைப்பின் விலையாகிய கூலிக்கு இக்கொள்கைகளைப் பொருத்திப் பார்த்தால், இங்கும் அங்காடி விலையும் இயல்பான விலையும் இருக்கும். உண்மையில் கொடுக்கப்படுகிற விலையே அங்காடி விலையாக இருக்கும். இது பொருள் கிடைப்பதற்கும் கிராக்கிக்கும் ஏற்ப இருக்கும். உழைப்பு அதிகம் இருந்தால் அங்காடி விலை குறையும்; தொழிலாளர் கிடைப்பது அருமையாக இருந்தால் அங்காடி விலை ஏறும். இந்த மாறுதல்கள் எப்படி இருந்தபோதிலும் மற்ற விஷயங்களில் இருப்பதைப்போலவே, இங்கும் இயல்பான விலைக்குத் திரும்பும் போக்கே மேலோங்கும்.

உழைப்பின் இயல்பான விலை என்பதுதான் என்ன? லசேலேயைப் பின்பற்றிக் கூலிபற்றிய உறுதிக் கொள்கையில்தான் இதற்கு விடை காணவேண்டும். இக்கொள்கையை உருவாக்கியவர் வசைக்கு உட்படவேண்டுமானால், அந்த வசை ரிகார்டோவை மட்டும் பாதிக்காது, வேறு சிலரையும் பாதிக்கும். பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவுப் பகுதியில் வாழ்ந்த பலரும் இக்கருத்தே கொண்டிருந்தனர். துர்கோவின் திட்டவட்டமான அறிக்கையை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம்.[2] ரிகார்டோ கருத்துப்படி, 'உழைப்பின் இயல்பான விலை என்பது, தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் ஒன்றுக வாழ்ந்து, தங்கள் இனத்தைப் பெருக்காமலும் குறைக்காமலும் ஒரே நிலையில் வைத்திருப்பதற்கு அவசியமான விலை எனப் பொருள்படும்.'[3] உணவின் விலையும் அவசியப் பொருள்களின் விலையும் ஏறியிறங்குவது போலவே உழைப்பின் இயல்பான விலையும் ஏறி இறங்கும். உழைப்பின் அங்காடி விலை இயல்பான விலையை நோக்கியே முன்னேறும். ஏனெனில், அது இயல்பான விலையைவிடக் குறைந்துபோனால், தொழிலாளர் எண்ணிக்கையும் குறைந்துபோகும். அது இயல்பான விலைக்கு மேற்பட்டால், மக்கள் தொகை பெருகிவிடும். தொழிலாளர் பல்கிப்பெருகிய காரணத்தால் அங்காடி விலை மீண்டும் இறங்குமுகம் காணும். ரிகார்டோ பரிபூரண மால்தஸிய வாதி. 'தொழிலாளர் கிடைப்பது எப்போதும் அவர்கள் வாழ்வதற்குக் கிடைக்கும் உணவின் அளவைப்பொறுத்தே இருக்கும். இக் கூற்று முடிந்த முடிவாகும்.[4] உழைப்பின் இயல்பான விலையைச் சுருங்கக் கூறுவதானால், மக்களை உற்பத்தி செய்வதற்குக் குறைந்த அளவு ஆகும் செலவே உழைப்பின் இயல்பான விலை.

[1] கொள்கைகள், அதிகாரம் 4, இயல்பான விலையும் அங்காடி விலையும்.
[2] மேலே 106-வது பக்கத்தைப் பார்க்கவும்.
[3] கொள்கைகள், அதிகாரம் 5, கூலிபற்றியது, பக்கம் 52.
[4] கொள்கைகள், அதிகாரம் 21, பக்கம் 194.

ரிகார்டோ முதலில் முரட்டுத்தனமாகக் கூறிய கொள்கைப் படி எப்போதும் கூலி சார்ந்து நிற்கக்கூடிய இயல்பான வீதம், ஒரு தொழிலாளி தன் மனைவியையும் இரு குழந்தைகளையும் வைத்துக் காப்பாற்றுவதற்குவேண்டிய குறைந்தபட்ச வீதமே. ஆனால், ரிகார்டோவின் வழக்கப்படி இக் கூற்றும் பல மாறுதல் களுக்கு உட்படுகிறது. பின்னர் அவர் கூறியவற்றுல், இக் கருத்துப் பெரிதும் மாறிப்போகிறது. 'அபிவிருத்தி அடையும் சமுதாயத்தில்' மூலதனம் பெருகப்பெருக, அங்காடி வீதம் இயல்பான வீதத்தைவிடப் பன்னெடுங்காலம் வரையில் அதிக மாகவே இருக்கும் என ஒப்புக்கொள்கிறார்கள். இந்த நியதி பயன்படுவது, நின்றுபோவது ஒருபுறமிருக்க, உணவையும் அவசியப் பொருள்களையும்மட்டும் கருதிப் பார்த்தாலும், உழைப்பின் இயல்பான விலை எப்போதும் ஒரேநிலையில் நிலைத்து நிற்பதல்ல என்றும் ஒப்புக்கொள்வதால் இவருடைய முந்திய வாதத்தின் உறுதி குறைந்துபோகிறது. இது நாட்டுக்கு நாடு மாறுபடுவதன்றி, ஒரே நாட்டிலும் வெவ்வேறு காலங்களில் வெவ் வேருக இருக்கிறது. சுருக்கமாகச் சொல்வதானால், இது முக்கிய மாக மக்களின் பழக்க வழக்கங்களையும் அனுஷ்டானங்களையும் பொறுத்ததாகும். எனவே, ரிகார்டோ கூலித்தரம் வாழ்க்கைத் தரத்தையொட்டி அமையாமல் வழக்கமான தரத்தையொட்டி அமைந்துள்ளது. இயல்பான வீதம், வழக்கமான வீதம் என்று ஏற்றுக்கொண்டால், கூலி இயல்பான வீதத்துக்குத் திரும்பும் தன்மையுடையது எனக் கூறுவது சொற்சிலம்பமேயன்றி வேறல்ல. அது எவ்வாறு இருக்கும் என்பது மக்களின் பழக்க வழக்கங்களையும் ஆசாரங்களையும் முழுவதும் பொறுத்ததாகும். மக்கள் தொகை மிக அபரிமிதமாக அளவுக்குமேல் பல்கிப் பெருகாமல் இருக்க வசதி வேண்டும். பல ஆனந்தங்களையும் அனுபவிக்க வேண்டும் என்ற ருசி இருப்பதன் முக்கியத்துவத்தை ரிகார்டோ வலியுறுத்தினர். இது வழக்கமான வாழ்வுக்கு ஆதரவாக இருப்பதாக நாம் இன்று பொருள் கொள்ளவேண்டும். இக் கால அளவு ஒன்றில், அங்காடி வீதம் பன்னெடுங்கால அளவுக்கு இயல்பான வீதத்தைவிட அதிகமாக இருக்குமானால், வசதியான வாழ்வு வேண்டும் என்ற ருசி மக்களிடையே ஏற் பட்டுவிடும். மேற்கூறிய பன்னெடுங்காலத்தின் முடிவில், மக்களின் பழக்க வழக்கங்களும் ஆசாரங்களும் மிக மாறிப்போய் விடும். இந்த உண்மையை உழைப்பின் இயல்பான விலையைப் பற்றிய ரிகார்டோ கொள்கை ஏற்றுக்கொண்டேயாகவேண்டும்.

மூர்க்கத்தனமாக இருப்பதற்கு மாருகக் கூலி உறுதிக் கொள்கை குறித்து ரிகார்டோ கூறியவை காலத்துக்கேற்ப

மாற்றிக்கொள்ளக் கூடியவையா யிருக்கின்றன. எல்லோரும் ஒப்புக்கொண்ட வகையில் இக் கொள்கையைப் பார்த்தாலும், கூலி குறைந்தபட்ச அளவை அடையும் தன்மையது என்ற கூற்று இரு அமிசங்களில் இப்போது பொய்த்துப்போயுள்ளது. இக் கொள்கை துர்கோவுக்கும் ரிகார்டோவுக்கும் இடைப்பட்ட காலத்திலிருந்த நிலைமைக்குப் பொருந்துவதாக இருக்கலாம். முதலாவதாக, தொழிலாளி தனித்தே நிற்பான் என ரிகார்டோ கருதினர். முதலாளியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், தொழிலாளி பிரதிகூலமான நிலைமையில் இருப்பதாகவும் கருதினர்; தொழிற் சங்கங்களும் யூனியன்களும் தொழிலாளர் கூலியை எவ்வாறு பாதிக்கும் என்பதை அவர் ஊகித்து உணரவில்லை. இரண்டாவ தாகக் கூலி உறுதிக்கொள்கையின் பின்னணியில் மால்தஸின் பொதுக்கொள்கைகள் இருக்கின்றன. இவற்றை இப்போது திருத்திக் கூறவேண்டும். மக்கள் தொகை பெருகுவதற்கு வேண்டிய தடைகள் முன்பிருந்ததைப்போல இப்போது இல்லை. உணவு கிடைக்குமென்று தெரிந்தாலே குழந்தைகள் உற்பத்தி யாகிவிடும் என்ற கூற்று இப்போது அவ்வளவு உண்மையான தல்ல. வாழ்க்கைத்தரம் உயர்ந்தால் பிறப்பு வீதம் பொதுவாகக் குறைகிறது. மேலும், கூலிபற்றிய உறுதிக்கொள்கை இப்போது முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. அது இப்போது தேர்வு எழுதுவதற்குமட்டுமே பயன்படும்.

பல்வேறு உரிமைக்காரர்களிடையே 'விகிதாசாரத்தில்' எந்த விகிதாசாரத்தில் பங்கிடுவது என்பதை ரிகார்டோ ஆராய்வார் என வாசகர் எதிர்பார்க்கலாம். இதை இவர் அறுதியிட்டுக் கூறவில்லை. இவருடைய கொள்கைப்படி, இந்த விகிதாசாரம் எதிர்காலத்தில் எவ்வாறு மாறும் என்பதையே இவர் குறிப்பிட் டுள்ளார். நாம் முன்னரே கண்டவாறு குத்தகை உயரும். தரம் குறைந்த நிலத்தைச் சாகுபடி செய்வதால், உணவின் விலை ஏறுவதால் கூலியும் உயரும். என்றாலும், உண்மைக் கூலி (ஜீவாதாரக் கண்ணோட்டத்தில்) உயராது. இவ்வாறு கூறுவது ரிகார்டோ நியதிக்கு முரணுகத் தோன்றினாலும், கூலியுயர்வு பொதுவாகப் பொருள்களின் விலையேற்றத்தைக் கவனிக்கும் போது தொழிலாளிக்குப் போதுமான நஷ்டஈடு அளித்ததாகாது.[1] இலாபத்துடன் வட்டியும் சேர்க்கவேண்டும். இலாபத்தைப் பொறுத்தவரையில் ரிகார்டோ கருத்துத் தெளிவாக இல்லை என்றாலும், ஒரு பொதுக்கொள்கையை அவர் விடாப்பிடியாக வலியுறுத்தியுள்ளார். எக் காரணம்பற்றியேனும் கூலி உயர்ந்தால்

[1] கொள்கைகள், அதிகாரம் 5, கூலிபற்றியது, பக்கம் 57.

அதே காரணத்தை முன்னிட்டு இலாபம் குறையும் என்பதே அக் கொள்கை. இன்னும் சொல்லப்போனால், கூலி உயர்வைத் தவிர வேறு எதுவும் இலாபத்தைப் பாதிக்காது.[1] உயர் கூலிப் பொருளாதாரத்துக்கு இங்கு இடமில்லை. தொழிலாளர் உற்பத்தி செய்வதைப் பாதிக்கக்கூடிய காரணங்களை ஆராய்வதற்கும் இங்கு இடமில்லை. கூலியும் இலாபமும் ஒன்றுக் கொன்று முரண்பாடானவை. ஒன்று குறைந்தால் மற்றொன்று உயரும். நீண்ட காலக் கண்ணோட்டத்தில் பார்த்தால், பண ரூபமான கூலி உயரும்; அதன் விளைவாக இலாபவீதம் குறையும்.

ரிகார்டோவின் பங்கீட்டுத் திட்டம் இவ்வாறாக இருக்கிறது. மக்களிடையே பொதுநலம் இருந்த இடத்தில் தன்னலத்தையும் விரோதபாவத்தையும் ரிகார்டோ வளர்த்துவிட்டார். 'நிலக் கிழாரின் நலம், பயன் துய்ப்போரின், தயாரிப்பவரின் நலனுக்கு எப்போதும் விரோதமானதே.'[2] அவ்வாறே முதலாளி, தொழிலாளி நலனும் ஒன்றுக்கொன்று விரோதமானவையே. ஒருவர் இலாபமடைந்தால் மற்றவர் நஷ்டமடைவார். ஒருவருடைய நன்மை மற்றவருடைய தீமையில் முடியும். மேலும், நிலுக்கிழார் நீங்கலாக அனைவருடைய எதிர்கால நிலைமையும் மோசமானதே. ஆடம் ஸ்மித்தின் தாராள நம்பிக்கை இருந்த காலம் பறி போகிறது. இப்போது எதிலும் அவநம்பிக்கைதான். எதிலும் ஆறுதல் இல்லை. என்றாலும், ரிகார்டோ தலையிடாக் கொள்கையில் ஊன்றி நின்றார். 'இவையே கூலியை முறைப்படுத்தும் நியதிகள். மற்ற ஒப்பந்தங்களைப்போலவே, கூலியும் அங்காடியின் நியாயமான, கட்டுப்பாடற்ற போட்டிக்கு விடப்படவேண்டும். சட்டமன்றத் தலையீடு இந்த விஷயத்தில் அறவே கூடாது'[3] என்று வலியுறுத்திக் கூறியுள்ளார். ரிகார்டோ படைத்த இருள் புலத்தில் ஏன் தலையீடு இருக்கக்கூடாது? எல்லாம் நல்லபடி நடக்கும்; எல்லாவற்றையும் கடவுள் மேலிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்; தன்னலத்தோடு பொது நலத்தையும் கவனித்தால் எல்லாம் சரியாய் இருக்கும்; தலையிடாக் கொள்கையே சிறந்தது என வாதிப்பவர்களுக்கு இது சரியாகவிருக்கலாம். ஆனால், எதிலும் அவநம்பிக்கையும், எதிர்காலம் மோசமான தென்ற கருத்தும் உடையவர்கள் அரசாங்கத் தலையீட்டை ஏன் எதிர்க்கவேண்டும்? 'நோய் தீமையானது என்றாலும்,

[1] கொள்கைகள், அதிகாரம் 6, இலாபம்பற்றியது, பக்கங்கள் 70-71.
[2] கொள்கைகள், அதிகாரம் 24, பக்கம் 255. இதற்கு ஓரளவு விதிவிலக்கு உண்டென்பது உண்மைதான்.
[3] கொள்கைகள், அதிகாரம் 5, கூலிபற்றியது, பக்கம் 61.

அதன் பரிகாரம் அதைவிடத் தீமையானது'[1] எனக் கருது பவர்கள்மட்டுமே தலையிடாக் கொள்கையை ஆதரிக்க முடியும்.

வெளிநாட்டு வணிகம், நாணயப் பிரச்சினை குறித்து ரிகார்டோ கூறியவைபற்றி எவ்வளவோ எழுதமுடியும் என்றாலும், அதற்கு இது உரிய இடமல்ல. அன்றைய அவசரப் பிரச்சினைகளை ஆராயவே ரிகார்டோ முதற்கண் ஆரம்பித்தார் என்பதை நினைவில் கொண்டோமானால் பொருளாதாரப் பொதுக்கொள்கையைப் போன்றே சிக்கல் நிரம்பிய பொருளாதாரக் கொள்கைகளிலும் அவர் முக்கியக் காரணமாயிருப்பது தெரியவரும். பொன், வெள்ளிக் கட்டிகளைப் பல நாடுகளிடையே பகிர்ந்தளிப்பதை முறைப்படுத்தும் நியதிகள் சர்வதேச வணிகத்தின் பயனாய் ஏற்பட்டவை என அவர் விளக்கிக் கூறுகிறார். நாணய விஷயத்தில் பணத்தின் அளவீட்டுக் கொள்கையை அவர் உருவாக்கினார். நாணய மதிப்புக் குறைவின் பொருளை நன்கு விளக்கியுள்ளார். தங்கத்தையும் வெள்ளியையும் பயன்படுத்துவதில் சிக்கனமாய் இருக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார். 'நாணயச் செலாவணி முழுவதும் காகிதத்திலேயே இருப்பது மிக நல்ல ஏற்பாடாகும். ஆனால் இதற்கு ஈடாகத் தங்கம் கைவசம் இருக்க வேண்டும்'.[2] 1925ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தங்க நாணயத் திட்டத்தின் நூதன அமிசங்களை இவர் ஏற்கெனவே எழுதிவைத்துள்ளார். ரிகார்டோ நாணயச் செலாவணி நிபுணர் என்பதை விவாதிப்பதற்கு இது இடமன்று.

ரிகார்டோ எழுப்பிய கோட்டை இப்போது இல்லையென்றாலும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் தம் எழுத்தால் செல்வாக்குப் பெற்றவர்களில் ரிகார்டோவும் ஒருவராவார். தாம் எத் துறையில் எவர்களிடம் செல்வாக்குப் பெறுவோம் என்பதை ரிகார்டோ எண்ணிப் பார்த்திருந்தால், ஞானக்கண் கொண்டு அதை அறிய முடிந்திருந்தால், அவர் நடுங்கிப் போயிருப்பார். அவருடைய முக்கிய நோக்கமே பங்கீட்டுக் கொள்கையை விவாதிப்பதுதான். பல்வேறு வகை வரிகள் யார் யாருக்கு விதிக்கப்படுகின்றன என்பதை ஆராய்வதும் அவருடைய முக்கியக் குறிக்கோளாகும். அப்பழுக்கற்ற தெய்வீகத் தூய்மை நிறைந்த அனுமானங்கள்

[1] எதிலும் அவநம்பிக்கையும், தனியார் சுதந்திரக் கொள்கையும் முரண்தொடையாக இருப்பதைக் கோனூர்டு நம் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார். ஆங்கிலப் பண்பாட்டிலுள்ள கால்வினிஸ்ட், கடுந்தூய்மையாளர் அம்சங்களே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால், ரிகார்டோ விஷயத்தில் நாம் கால்வினுக்கும் முந்திய காலத்துக்குப் போகவேண்டும். கோனூர்டு எழுதிய நம்பிக்கையுள்ள குடிமகன், தொகுதி II, பக்கம் 250.

[2] கொள்கைகள், அதிகாரம் 27, பக்கம் 244.

என அவர் நம்பியவற்றின் அடிப்படையிலேயே அவர் தம் கொள்கைகளை உருவாக்கினார்; அவற்றின் தர்க்க ரீதியான முடிவுகள் வரையில் விடாப்பிடியாகச் சென்றார். மனிதன் விரும்பியவாறு நடக்கிறான்; அவன் நடத்தைக்குச் சில சமயங்களில் காரணம் காட்ட இயலாதென்பதெல்லாம் இவர் அகராதியில் இல்லை. சமுதாயத்தின் அமைப்பைத் தர்க்க ரீதியாக மட்டும் விளக்குவதற்கில்லை. மேலும், கட்டுப்பாடற்ற, சுயேச்சையான போட்டி எதிலும் எப்போதும் இருக்கும் என்று இவர் உண்மையில் நம்பினார். அது இப்போது அப்படியில்லை; எப்போதும் இருந்ததும் இல்லை. 'தயாரிப்பாளரின் இலாபம் உரிய அளவில் இராவிட்டால், அவர் ஏன் தம் தொழிலைத் தொடர்ந்து நடத்த வேண்டும்?'[1] அவருக்கே இதற்குரிய விடை தெரியும். இரண்டு அதிகாரங்களுக்குப் பின் அவரே அதனை விளக்கியுள்ளார். ஒரு வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் அதனால் நஷ்டப்பட்டாலும், அதிலிருந்து எளிதில் மீளமுடியாது. அதைவிட்டு வேறு புதிய வாழ்க்கையை மேற்கொள்ள முடியாததே இதற்குக் காரணம். கப்பல் கட்டும் தொழிலில் இருப்பவர் தம் மூலதனத்தை ஒரே நாளில் எப்படி விவசாயத்தில் திருப்பிவிட முடியும்? ஆனால், பிரத்தியட்ச உலக ஞானம் இருந்தபோதிலும், இதெல்லாம் ரிகார்டோவின் வாதத்தைத் தடுக்க முடியுமா என்ன? தொழிலாளர் வர்க்கத்திடம் ரிகார்டோ பரிவுகொண்டார் என்றாலும், தொழிலாளர் வர்க்கத்தைப் பொருள் உற்பத்திக்குரிய ஒரு சாதனமாகவே ரிகார்டோ கருதினார். 'ஒரு நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையை முன்னிட்டுக் கீழ்த்தரத் தொழிலாளர் தங்கள் இனத்தை நிலைநிறுத்துவதன்றி அதிகரிக்கச் செய்யவும் வேண்டி வந்தால், அவர்களுடைய கூலி அதற்கேற்பக் குறையவே செய்யும்.'[2] மார்க்ஸின் தொழில் ரிசர்வ் படை, தொழிலின் மேல் நோக்கத்தைப் பூர்த்திசெய்வதற்கு வைக்கப்பட்டுள்ள தனி இனம் என்பது இதைவிடத் தெளிவாக எங்கே விளங்குகிறது? நிகர வருமானத்தைவிட மொத்த வருமானம் அதிகரிப்பதன் அனுகூலங்களை அதிகப்படுத்திக் கூறியதற்காக ஆடம் ஸ்மித்திற்கு எதிராக ஓரிடத்தில் வாதாடியுள்ளார். இது சிஸ்மாண்டிக்குப் பிடிக்கவில்லை. 'நிகர வருமானமே முக்கியம். குறைந்த மக்கள் தொகையுடன் நிகர வருமானத்தை அதிகரிக்க முடியுமானால் மக்கள் தொகை ஏன் பெருகவேண்டும்?'[3] என ரிகார்டோ கேட்கிறார். தர்க்க ரீதியாக இவருடைய வாதத்தைத் தொடர்வோமானால், ஒரே ஒரு மனிதன் உலகில் இருப்பதே

[1] அதே ஏடு, அதிகாரம் 17, அடிக்குறிப்பு, பக்கம் 160.
[2] கொள்கைகள், அதிகாரம் 16, பக்கம் 143.
[3] அதே ஏடு, அதிகாரம் 26, மொத்த நிகர வருவாய், பக்கம் 235.

பெரு நன்மையாக இருக்கும். கடைசியாக எஞ்சி நிற்பவர் இயந்திர சாதனத்தையும், பில்லி சூனியத்தையும் துணையாக வைத்துக்கொண்டு தமக்கு வேண்டியவற்றை யெல்லாம் அமைத்துக்கொள்வர். 'செல்வத்தைப் பெருக்கவே மனிதன் இருக்கிறான்; மனிதனுடைய பயனுக்காகச் செல்வம் இல்லை' என்ற கருத்து இங்குத் திறம்பட உரைக்கப்பட்டுள்ளது.

ரிகார்டோவின் கொள்கைகளெல்லாம் தவறுக மேற்கோள் காட்டும் வகையிலும், தவறுகப் பயன்படும் வகையிலும் அமைந் துள்ளன. இவற்றின் சுருக்க வடிவில் இவற்றை வெறும் நினைவில் வைத்துக்கொள்ள முடியும். இவற்றை மறப்பதும் எளிது; இவற்றைப் புரிந்துகொள்வதும் கடினம். தம் கொள்கை களைக் கூறிய பிறகு, அவற்றிற்கு அவர் கொடுத்த விளக்கங் களும், வரையறைகளும், கட்டுத்திட்டங்களும் எவரையும் குழப்பத்தில் ஆழ்த்தும். இவற்றுல் அவருடைய கொள்கைகளே மாறிப்போகின்றன. எனவே, கொள்கைக்கு விளக்கம் கூறு ரிகார்டோ, மூலக் கொள்கைகளை மட்டும் கூறிய ரிகார்டோ மற்றவர்களுக்கு அவர் நினைத்திராத வேறு வகைகளில் பயன்படு கிறார். இவருக்குத் தெரியாமலேயே விஞ்ஞான சமதர்மத்திற்கு இவர் வித்திட்டுள்ளார். மதிப்பின் உழைப்புக் கொள்கையில் இவர் மகிழ்ச்சியுறவில்லை. என்றாலும், இதை அடிப்படையாக வைத்தே மார்க்ஸ் தம் நூல்களை எழுதியுள்ளார். இதைப் போலவே ரிகார்டோ கூறிய குத்தகைக் கொள்கையை விவசாயச் சமதர்மத்துக்கு வழிகோலுவதாகக் கொள்ள முடியும். ரிகார்டோ கூலிக்கொள்கையை அவர் கூறிய விளக்கங்களின்றிப் பார்த்தால், அது சமதர்மப் போர்க்குரலாகவே ஒலிக்கிறது. கூலியும் இலாபமும்பற்றிய இக் கொள்கை வர்க்கப்போராட்டத்திற்கு வித்திடுவதாகவே தோன்றுகிறது. தலைசிறந்த ஆங்கில அரசியல் பொருளாதார வித்தகர் மார்க்சுக்கும், அவருடைய வழித் தோன்றல்களுக்கும் வாதமிட வழிவகைகளைத் தேடிக்கொடுத்தார் என்றால், இதை விதி எனக் கூறுது என்னென்று கூறுவது? இதுவே விதியின் வேடிக்கை. ரிகார்டோ கூறிய விளக்கங்க ளெல்லாவற்றையும் பொதுவுடைமைவாதிகள் எடுத்துக்கொள்ள வில்லை என்பது உண்மையென்றாலும், அவை அவ்வளவு முக்கிய மல்ல. இலக்கியப் புலமை வெறும் அழகு அமைப்பு அல்ல; அது பயனுள்ள கருவியாகும். நாவன்மை இல்லாதவர்கள் பிறர் தங்களைத் தவறுகப் புரிந்துகொண்டால், தங்களைத் தாங்களே நொந்துகொள்ளவேண்டுமேயன்றிப் பிறரை நொந்துகொள் வதில் பயன் ஏதுமில்லை என்பதே நாம் ரிகார்டோ எழுதிய நூலிலிருந்து கற்கவேண்டிய பாடமாகும்.

7. லாடர்டேல், ரே, சிஸ்மாண்டி

ஆடம் ஸ்மித், மால்தஸ், ரிகார்டோ ஆகியவர்களுடன் 'தொன்மை' அரசியல் பொருளாதாரம் ஒருவகையில் முழுமை யுற்றது என்றே சொல்லவேண்டும். பொருளாதார்க் கொள்கை விளக்கம் தந்த பெரியார்களே, அவர்கள் கூறிய கொள்கைகளே எவ்வாறு வரிசைப்படுத்துவது சிறந்தது என்பதைத் தீர்மானிப்பது எளிதான காரியமல்ல. தனி நபருக்கும் அரசாங்கத்துக்கும் இருக்கிற உறவுமுறைகள் குறித்துத் தொன்மைப் பொருளாதார வாதிகள் நிச்சயமான சில கற்பிதங்களைக் கொண்டுள்ளனர். அவர்களுடைய பிற்காலக் கொள்கை வளர்ச்சியில் ஒரு நம்பிக்கை யின்மை தொனிக்கிறது. மால்தஸ் மக்கள் தொகைக் கொள்கை யிலும் ரிகார்டோவின் 'வார நியதி' (குத்தகை) யிலும் இதைக் கண்கூடாகக் காணலாம். அரசாங்கத்தின் தலையிடாக்கொள்கை, கட்டுப்பாடற்ற வாணிபம் ஆகியவற்றை அவர்கள் ஆதரித்ததால், உலகப் பொதுநலனுளராகிய அவர்கள், வரட்டுப் பிடிவாதத் துடன் தனி நபர் உரிமை வாதிகளாகிவிட்டனர். அவர்கள் கூறிய கருத்துகள் ஒவ்வொன்றுக்கும் மாற்றுக் கருத்து ஏற் பட்டது; இது தவிர்க்க முடியாதது. சிலர் பழைய கருத்துகளை ஓரளவு மாற்றியமைத்துக்கொண்டு அவற்றையே வேதமந்திரம் ஓதுவதுபோல் முணுமுணுக்கத் தொடங்கினர்.

எனவே, அடுத்த தலைமுறையில் கட்டுப்பாடற்ற சுதந்திரக் கொள்கையைச் சிலர் கண்டிக்கத் தொடங்கினர். அரசாங்கத் தலையிடாக்கொள்கையின் அடிப்படை அனுமானங்களையே இவர்கள் மறுக்க ஆரம்பித்தனர். மக்களுக்கு அரசு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென இவர்கள் வாதாடினர். இந்த உலகத்தில் எல்லாம் நல்லபடியே நடக்கும் என்ற நம்பிக்கை வாதிகளாய் இவர்கள் திகழ்ந்தனர். எத்தர்களான சர்வதேச வாதிகளுக்கு எதிராகத் தேசீயவாதிகள் நாட்டைக் கட்டிக்காக்க வேண்டு

மென வாதாடினர். நாம் எடுத்துக்கொண்ட அளவில் இவற்றை யெல்லாம் விரிவாக ஆராய முடியாது. துர்ப்பாக்கியவசமாக இக் கொள்கையாளர்கள் குறித்த முன்னேற்றத் துறையைச் சேர்ந்தவர்களாக இல்லை. இவர்கள் எந்த வகையைச் சேர்ந்த வர்கள் என வரையறுத்துச் சொல்ல முடியாதிருக்கிறது. எனவே, அடுத்த நான்கு அதிகாரங்களில் இவர்களை ஒல்லும் வகையில் தொகுத்துக் காட்டியுள்ளேன். இந்த அதிகாரத்தில் ஆடம் ஸ்மித்தின் ஆரம்பக் கண்டனக்காரர்களாகிய லாடர் டேல், ரே, சிஸ்மாண்டி ஆகியவர்களை ஓரளவு பார்க்கலாம். செல்வத்தின் தன்மையை ஆடம் ஸ்மித் தவருகப் புரிந்துகொண் டிருப்பதாக லாடர்டேலும் ரேயும் கருதுகின்றனர். அரசாங் கத்தின் தலையிடாக் கொள்கை ஒழியவேண்டும்; அரசாங்கத் துக்கு விரிவான கடமைகள் இருக்கவேண்டும் என்பதில் ரேயும் சிஸ்மாண்டியும் ஒத்த கருத்துள்ளவர்களாக இருக்கின் றனர். இதன் விளைவாகப் பாதுகாப்பு அரசாங்கம் வேண்டுமென ரே கேட்கிறார்; ஆனால், சமதர்ம அரசாங்கம் வேண்டுமென சிஸ்மாண்டி கேட்கிறார். அடுத்த அதிகாரத்தில் முல்லர், லிஸ்ட், வான்துனன் என்ற மூன்று ஜெர்மன் எழுத்தாளர்களின் கருத்து களைக் காணலாம். முல்லரும் லிஸ்டும் ஒரே கருத்துடையவர்களாக இருக்கின்றனர். முல்லர், ஆடம் ஸ்மித் கூறியவற்றை விரிவாக வும் விளக்கமாகவும் கண்டிக்கிறார். வான்துனன் தனியராகத் திகழ்கிறார். தம் ஜெர்மன் தோழர்களுக்கு மத்தியில் மட்டுமே இவர் மனமகிழ்வுடன் இருக்கமுடியும். ஒன்பதாவது அதிகாரத் தில் நம்பிக்கை வாதத்துக்கு ஏற்பட்ட எதிரொலியான கருத்துகள் விவாதிக்கப்படும். கரேயும் பாஸ்டியட்டும் இதன் பிரதிநிதிக ளாவர். உண்மையில் பார்க்கப்போனால், கரேயை லிஸ்டுடன் கூட்டுச் சேர்க்கவேண்டும். ஏனெனில், இருவரும் அரசாங்கப் பாதுகாப்பு முறையை விளக்கிக் கூறுவதில் ஈடுபட்டுள்ளனர். கடைசியாகப் பத்தாவது அதிகாரத்தில் பழங்கோட்பாட்டு நெறியை சே, சீனியர், மில், கயர்ன்ஸ் ஆகியோர் வலியுறுத்திக் கூறுவர்.

லாடர்டேல்

இந்த அதிகாரத்தில் தொகுத்துள்ள மூன்று எழுத்தாளர் களில் இருவர் ஆடம் ஸ்மித் நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றுவிடவில்லை யென்றாலும், ஆடம் ஸ்மித்தின் சில அனுமானங்களை இவர்கள் அடிப்படையிலேயே கண்டிப்பதால் இவர்கள் மற்றவர்களின்

கவனத்தைக் கவருகின்றனர். ஆடம் ஸ்மித் பகுத்தறிவின் திருவுரு; மிகவும் திறமைசாலி. அவரை நிந்திக்கும் இவர்களோ விசித்திர மனிதராவர்; தெளிவற்ற தனிப்போக்குடையவர்க ளென்றே கூறலாம். இந்தக் கிறுக்குத்தனம் ஜான் ரேயிடம் இருந்ததைவிட, லாடர்டேலின் எட்டாவது பிரபுவாகிய ஜேம்ஸ் மெய்ட்லண்டிடம் அதிகம் காணப்பட்டது.

லாடர்டேல்[1] (Lauderdale, 1759—1830) தம் காலத்தில் ஒரு பேரறிஞராகத் திகழ்ந்தார். பிரபுக்கள் சபையின் பத்திரி கையில் அடிக்கடித் தம் எதிர்ப்புக்குரலே எழுப்பி வந்தார். பொருளாதார இலக்கியத்திற்கு இவர் ஆற்றிய தொண்டு குறிப் பிடத்தக்கதாகும். பொதுச் செல்வத்தின் மூலம், தன்மை, அதை அதிகரிப்பதற்குரிய வழிவகைகள், காரணங்கள் ஆகிய வைபற்றிய விசாரணை என்ற பெருந்தலைப்புள்ள புத்தகத்தில் இவருடைய கருத்துகளைக் காணலாம். இப் புத்தகத்தின் தலைப்புத்தான் பெரிதாயிருக்கிறதேயொழிய இதிலுள்ள கருத் துகள் ஒருசிலவே; அவையும் இரத்தினச் சுருக்கமாயிருக்கின்றன. இவர் தம் கருத்துகளை விடாப்பிடியாகவும், திறமையுடனும் எடுத்துரைத்துள்ளார். தமது விளம்பரத்தில் இவர் கூறுவ தாவது: 'என் கருத்துகள் புதியவை மட்டும் அல்ல; ஏற் கெனவே வழங்கிவரும் கருத்துக்கு மாறுனவையுமாகும்.' லாடர் டேலின் கொள்கைகளில் கூறப்படும் முக்கிய அம்சம் அவருடைய புத்தகத் தலைப்பிலேயே காணக்கிடக்கிறது. அவர் கூறுவ தாவது: 'பொதுப் பொருளாதாரம் என்பது சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் அனைவராலும் விவாதிக்கப்படவேண்டியதே. இதைப் பண்டிதரும் விவாதிப்பர், பாமரரும் விவாதிப்பர், நன் னெறியாளரும் விவாதிப்பர், புன்னெறியாளரும் விவாதிப்பர். எனவே, பாமரர்களின், புன்னெறியாளர்களின் தவருன, சரிவர அமையாத கொள்கைகள், எண்ணங்கள் பொய்யும் பித்தலாட்ட மும் நிறைந்த கருத்துகளாகப் பரிணமிக்கின்றன.'[2] ஆடம் ஸ்மித்தைப்பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் லாடர்டேல் தீப் பொறி பறக்க கண்டனக் கணைகள் தொடுக்கிறார்; எடுத்ததற் கெல்லாம் குற்றம் கண்டுபிடிக்கிறார்.[3] அவர் கூறியதன் பொருள்

[1] 1759-ல் பிறந்தார்; 1780-ல் பாராளுமன்ற உறுப்பினர் ஆனார்; 1789-ல் ஸ்காட்லாந்து பிரபுவானார்; 1790—ல் ஸ்காட்லாந்தின் பிரதிநிதித்துவப் பிரபு ஆனார்; அரசியல் நீதியாகப் பார்க்கப்போனால் இவர்தம் வாழ்நாளில் தீவிர இடதுசாரிக் கொள்கையிலிருந்து, தீவிர வலதுசாரிக் கொள்கைக்குத் தாவினார்; இவர் எக் கருத்துப்பற்றியும் கவலைகொள்ளா மனிதராவார்.

[2] பொதுச் செல்வம், பக்கங்கள் 3-4.

[3] உதாரணம்: 'நாட்டுச் செல்வம் பற்றிய விசாரணையின் பல பாகங்களில் குறிப் பிடப்படாத நாட்டுச் செல்வதாரக் கருத்து எதுவும் வேறெங்கும் குறிப்பிடப் பட வில்லை. எல்லாக் கருத்தும் இதிலேயே இருக்கிறது' (பொதுச் செல்வம், பக்கம் 116)

என்னவென்றால், 'புன்னெறியாளரைப்போல் ஆடம் ஸ்மித்தும் தவறான, பொய்யான கொள்கைகளைப் பரப்பியவர்' என்பதே யாகும். அங்காடிப் பொம்மையென ஆடம் ஸ்மித்தை இகழ்ந்து ரைக்கின்றார் லாடர்டேல். அவர் சமுதாயத்தின், நாட்டின் வளப்பத்துடன் தனி மனிதரின் செல்வத்தைப் போட்டுக் குழப்பு வதாகவும், தனி நபர் பணக்காரரானால் அதன் காரணமாக நாட்டின் வளப்பமும் அந்த அளவு பெருகும் எனத் தவறாக அனு மானிப்பதாகவும் லாடர்டேல் கூறுகிறார்.

நாட்டின் வளத்தைக் குறிக்க 'வளப்பம்' என்ற சொல்லையும், தனி மனிதனின் வளத்தைக் குறிக்கச் 'செல்வம்' என்ற சொல்லை யும் லாடர்டேல் நெடுகிலும் கையாளுகிறார். ஸ்மித் கூறியவற்றி லேயே மிகத் தவறானது என லாடர்டேல் கருதும் கருத்து, 'நாட்டுச் செல்வம்' இரண்டாம் புத்தகத்தின் மூன்றாவது அதிகாரத்தில் வருகிறது. இதில்தான் 'புகழ்பெற்ற தத்துவ மேதை' மூலதனச் சேர்க்கை குறித்து விவாதிக்கிறார். இதில் ஸ்மித் கூறுவதாவது: 'தனி மனிதனின் ஆண்டு வருமானத்தி லிருந்தோ அல்லது ஆண்டு இலாபத்திலிருந்தோ எஞ்சிய சேமிப் பினால்தான் அவருடைய மூலதனம் அதிகரிக்கும். சமுதாயத்தின் மூலதனம் தனி மனிதர்கள் எல்லோருடைய மூலதனச் சேர்க்கை யாகும். எனவே, சமுதாய மூலதனமும் இவ்வாறே அதிகரிக்கும்.' இதன் கடைசிப் பகுதியே லாடர்டேலுக்கு வேப்பங்காயாக இருக்கிறது. சமுதாயத்தின் மூலதனத்தை தனி மனிதர்களின் பெரு மொத்த மூலதனத்துடன் இணைத்து இரண்டும் ஒன்றே எனக் கூறுவது சரியல்ல. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவை. இந்த வேறுபாட்டினை, இந்த விரோதத் தன்மையை நாம் அறியவேண்டுமானால், லாடர்டேல் காட்டுகிற பொருள்களின் மதிப்பறியும் பொருளாதாரக் காட்டுக்குள் புகுந்து புறப்படவேண்டியதுதான். இப் பொருளாதாரக் காட்டில்-திக்குத் திசை தெரியாக் காட்டில்-பொருளாதார வல்லுநர்களும் மற்றவர்களும் சாசுவதமாகவும் விடாப்பிடியாகவும் பொருளின் மதிப்புப்பற்றிய சர்ச்சையில் ஈடுபட்டுள்ளனர். இதில் புகுந்து விட்டால் நமக்கு வழி தப்பிவிடும். வெளியே வரும் வழி எது என்பது தெரியாமல் இக் காட்டுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்துகொண்டே இருப்போம். ஒரு பொருளுக்கு மதிப்பு இருக்க வேண்டுமானால் இரண்டு நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

முதலாவதாக அப் பொருள் மனிதனுக்குப் பயன்படுவதாக, மனிதன் விரும்புவதாக இருக்கவேண்டும்; இரண்டாவதாக, அப்

பொருள் 'அதிகம் கிடைக்காத நிலையில்'[1] இருக்கவேண்டும். தேவை ஒரே நிலையில் இருந்து, அப் பொருள் கிடைப்பது அரிதா யிருந்தால், அதன் மதிப்பு அதிகமாகும்; அப் பொருள் அபரிமித மாகக் கிடைத்தால் அதன் மதிப்புக் குறையும். ஆனால் (வேறிடத் தில் குறைவாக இருப்பதால்) தனிமனிதனின் வளம் பெருகுமானால், பொதுச் செல்வத்துக்கும், தனியார் வளத்துக்கும் இடையில் விரோதபாவம் இருக்கவேண்டும்; வெவ்வேறு காரணங்களால் இவை அதிகரிக்கும் என லாடர்டேல் வாதிக்கிறார். தனியார் வளமெல்லாம் ஒருங்கு சேர்ந்ததே பொதுச் செல்வம் என்பது அக் காலத்துப் பொதுக் கருத்தாகும். ஆடம் ஸ்மித் விளக்கிக் கூறியதுபோல, 'தனியார் வளத்துக்குச் சிக்கனமே காரணம்; பொதுச் செல்வம் பெருகுவதற்கும் இதுவே காரணம்.'[2] தனியார் வளம் பெருக வேண்டுமானால் பற்றுக் குறை யிருக்கவேண்டும். 'நாட்டின் செல்வம் பெருகவேண்டுமானால், மனிதன் பொதுவாகப் பயன்படுத்துவதும், அவனுக்கு அவசியமானதுமான பொருளில் பற்றுக்குறை ஏற்படுத்தவேண்டும் என்று சொன்னால் மனிதனின் பகுத்தறிவு போருக்குப் புறப்படும்.' கேழ்வரகில் நெய் வடி கின்றது என்றால், கேட்போர்க்கு மதி போனதெங்கே எனக் கேட்கும் அவன், அடுத்துக் கூறும் பகுதி அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகிறது. 'உதாரணமாக, ஒரு நாட்டில் வாழ்க்கைக்கு அவசியமான வசதிகள் அளவிறந்து இருப்பனவாக வைத்துக் கொள்வோம். அங்கு நல்ல தண்ணீர் வரையறையின்றிக் கிடைப் பதாக வைத்துக்கொள்வோம். அந்த நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதற்காக அந்த நாட்டில் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற் படுத்த வேண்டுமென எந்தப் புத்திசாலியாவது சொல்வதாக வைத்துக்கொண்டால், அவனுடைய மேதா விலாசத்தை மக்கள் என்னென்று கருதுவர்! அவனை 'மேல்தாவி' என்றே அழைப்பர். நீர்வளம் நிறைந்திருப்பது ஒரு நாட்டின் பாக்கியமாகும். ஒரு நாடு வளம் கொழிக்க வேண்டுமானால் நீர் வளம் இன்றியமையாத தாகும். ஆனால், இந்த அதிபுத்திசாலி தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்படுத்துவதுமூலம் தனி மனிதனின் வளத்தைப் பெருக்கி, அதன் வழியே நாட்டுச் செல்வத்தை அதிகரித்துவிடுவான்.' தண்ணீர் பயனுள்ளது; எல்லோராலும் விரும்பப்படுவது. இந்த இரண்டு குணங்களுடன் எளிதில் கிடைக்காத தன்மையும் சேர்ந்துகொண்டால், அதன் மதிப்பு உயர்வதற்கு என்ன தடை?[3]

[1] பொதுச் செல்வம், பக்கம் 12.
[2] அதே ஏடு, பக்கம் 40.
[3] அதே ஏடு, ப. 43—44.

இதுவரை பற்றுக்குறை வாதம் பார்த்தோம். இப்போது அபரிமித வாதம் பார்ப்போம். இதுவும் துடிப்பாகவே வாதிக்கப் படுகிறது.

'தண்ணீர் அபரிதமாகக் கிடைப்பதைப்போலவே ஏதாவ தொரு உணவு வகையை வரையறையின்றிக் கிடைக்கச் செய் வதாக ஒரு கணம் வைத்துக்கொள்வோம். உண்மையில் பற்றுக் குறை இருக்கும் காலத்தில்கூட இத்தகைய அபரிமித நிலை உண்டாகாமல் இருக்கக் கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஆலோசனை கூறுபவனின் மேதைத்தனத்தை என் னென்று கூறுவது! எவரும் அவனைப் பேதையென்றே விளிப்பர். ஏனெனில், உடனடியாகத் தீங்கைப் போக்க இது எவ்வளவு சிறந்த பரிகாரம். ஆனாலும், அதனால் நாட்டின் செல்வம் குறைவது உறுதி. இக்கருத்து கேலிக் கூத்தாகத் தோன்றினும், காற்றும் நீரும் போல் எங்கும் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிற பொருளுக்கு மதிப்பேது? இவ்வாறு அபரிமித நிலை ஏற்படுவதால் தனியார் வளம் குறைந்து போவது சர்வ நிச்சயம். அப்பொருளின் மதிப்பு எந்த அளவுக்கு இதனால் குறைந்து போகிறதோ அந்த அளவு தனியார் வளமும் குறைந்து போகும்.'[1]

எனவே, பொதுச் செல்வத்திற்கும், தனியார் வளத்திற்கும் இடையில் இத்தகைய பெரும் பிளவு இருக்கிறது. பொருள்கள் அதிகமாகக் கிடைத்தால் சமுதாயத்துக்கு இலாபம். அப்பொருளை வைத்திருக்கும் தனி நபர் அப் பொருள் பற்றுக்குறையாக இருக்க வேண்டும் என்றே விரும்புவான். அப்போதுதானே அவன் வைத்திருக்கும் பொருளுக்கு அதிக விலை கிடைக்கும்? இன்னும் சொல்லப்போனால், லாடர்டேல் அடியிற் கண்டவாறு அடித்துப் பேசுகிறார்: 'பொருள்கள் குறைவாகக் கிடைப்பதன் காரண மாகத் தனிநபர் வளம் பெருகுவது நாட்டுச் செல்வம் குறை வதையே குறிக்கிறது. தனியார் வளம் குறைந்தால் நாட்டுச் செல்வம் பெருகுவதற்கு அதுவே அறிகுறி.'[2] எனவே, லாடர் டேலின் பொருள்விளக்கப்படி, 'செல்வம் என்பது தனக்குப் பயனுள்ளதென, தனக்கு மகிழ்வூட்ட வல்லதென மனிதன் விரும்புவதாகும்.' தனியார் வளம் என்பது, 'தனக்குப் பய னுள்ளதென, தனக்கு மகிழ்வூட்டவல்லதென மனிதன் விரும்பு வதும், பற்றுக்குறையில் இருப்பதுமான வளமாகும்.'[3] பற்றுக் குறை அதிகரித்தால் நாட்டுச் செல்வம் குறையும்; தனியார் வளம் பெருகும்.

[1] அதே ஏடு, பக்கங்கள் 45-46.
[2] அதே ஏடு, பக்கங்கள் 55-56.
[3] அதே ஏடு, பக்கங்கள் 56-57.

மதிப்பு மாறுபடுவதற்குரிய நான்கு காரணங்களை விரிவாக விவாதிக்கையில் (பொருள் குறைவது, அதிகரிப்பது, தேவை குறைவது, அதிகரிப்பது), இப்போது தேவையின் நீக்குப் போக்குக் கொள்கை என வழங்குவதை லாடர்டேல் ஆராய் கிறார். முதற் காரணத்தை, அதாவது பொருள் குறைவாகக் கிடைப்பதை (அதாவது பற்றுக்குறையை) எடுத்துக்கொண்டோ மானால், நாம் எதிர்பார்க்கும் அளவைவிடப் போட்டியினால் பொருளின் மதிப்பு மிகவும் அதிகரிக்கும். மக்கள் தங்கள் மற்றைய சந்தோஷங்களை எந்த அளவு தியாகம் செய்யத் தயாரா யிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே இந்த மதிப்பு அதிகரிக்கும். 'வழக்கமாக அனுபவித்துவருபவற்றைத் தொடர்ந்து அனுப விக்க வேண்டும் என்ற மக்களின் மனநிலைதான்'[1] இதற்கு அடிப் படை. ஒரு பொருள் என்ன விலைக்கு விற்ற போதிலும் முன்னர் வாங்கிய அதே அளவு அப் பொருளை மக்கள் இப்போதும் வாங்கு வார்களா என்பது 'அவசியம், காரணமாகவோ, வழக்கம் காரண மாகவோ, ருசி காரணமாகவோ அப் பொருள்மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் விருப்பத்தைப் பொறுத்தே இருக்கும். பல பொருள்கள் பற்றுக்குறையாக இருந்தபோதிலும் அவற்றின் விலை ஒரே சீராக ஏறுவதில்லையே என்ற வாதத்திற்கு இங்கே விடை கிடைக்கிறது. பொருள்களின் தன்மைக்கேற்பவே விலை ஏறு கிறது. மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் அவசியப் பொருள்களின் விலை மிக உயர்ந்துவிடும். 1:50 என்ற வீதத் தில் இதன் மதிப்பு உயர்ந்து, அதற்கேற்ப அதன் விலையும் அதி கரிக்கும். ஆனால், சிலர் பயன்படுத்தும் போகப் பொருள்களின் மதிப்பு இரண்டு அல்லது மூன்று மடங்குகளுக்குமேல் உயருவ தில்லை.' மற்றோரிடத்தில் லாடர்டேல் கூறுவது போல, 'அவசியப் பொருளின் மதிப்பு எவ்வளவு உயர்ந்த போதிலும், மற்றவற்றைத் தியாகம் செய்து அப்பொருளை அடைய முடியுமானால் மனிதன் அதை அடைந்தே தீருவான். அப் பொருளை அடையும் ஆசை யைக் கைவிடும்படி செய்வதற்கில்லை.'[2]

செல்வத்தை உற்பத்தி செய்வதில் மூலதனத்தின் பங்கையும் லாடர்டேல் நுணுகி ஆராய்ந்துள்ளார். நிலம், உழைப்பு, மூல தனம் ஆகிய மூன்றும் அவர் கருத்துப்படி செல்வத்தின் மூல ஆதாரங்களாகும். அபிவிருத்தியின் பல்வேறு நிலைகளில் இவை வெவ்வேறு வீதாசாரத்தில் மூலதனத்தை உற்பத்திசெய்யும். மூலதனத்தின் அலுவலைப் பொறுத்தவரையில், லாடர்டேல்

[1] அதே ஏடு, பக்கங்கள் 65-66.
[2] அதே ஏடு, பக்கம் 76.

கண்டிக்கிற கருத்து, ஆடம் ஸ்மித் கூறிய சில வாசகங்களில் பொதிந்துள்ளது (புத்தகம் I, அதிகாரம் 6). சரக்குகளின் மேல் உள்ள இலாபம் தொழிலாளர் மூலப்பொருளுக்குச்சேர்க்கிற மதிப்பிலிருந்து பெறப்படுகிறது. இதற்கு லாடர்டேல் விளக்கம் கூறுவதைப் பார்த்தால், அதில் பொதுவுடைமை வாசனை வீசுகிறது. இக் கருத்தின்படி, மூலதனம் மூல வருமான ஆதாரம் ஆகாது. ஏனெனில், இலாபம் என்பது 'தொழிலாளரின் கையிலிருந்து முதலாளியின் கைக்குப் போய்ச் சேருகிற பொருள்தான்.'[1] இந்தக் கருத்துக்கு எதிராக லாடர்டேல் கூறுவதாவது, மூலதனம் பெறுகிற இலாபம் இத் தன்மை வாய்ந்த சாதாரண மாற்றம் அல்ல. அது பெறுகிற இலாபம் அது செய்த சேவையிலிருந்தே கிடைக்கிறது. 'ஓரளவு தொழிலாளரின் வேலையை மூலதனமே செய்து முடித்து விடுகிறது. மூலதனம் இச் சேவையைச் செய்யாவிட்டால், அதைத் தொழிலாளி தன் கையாலேயே செய்து முடிக்க வேண்டும். மனிதன் தன் முயற்சியால் செய்து முடிக்க இயலாத வேலையை மூலதனம் நிறைவேற்றி முடிக்கிறது.'[2] கையில் மண் வெட்டி வைத்துள்ள ஒரு மனிதன் ஐம்பது வேலையாட்கள் நகத்தால் செய்யும் வேலையைவிட அதிக வேலை செய்யமுடியும் (இதுவே குறைந்த மதிப்பீடுதான்); எனவே, மூலதனத்தின் இப் பகுதி 49 தொழிலாளர்களின் தேவையை நீக்கிவிடுகிறது. அவர்கள் இதனால் வேலை இழப்பர். எனவே, லாடர்டேலின் கருத்துப்படி ஐந்து வகைகளில் மூலதனம் உற்பத்திக்கு உதவி செய்கிறது. மூலதனத்துக்குக் கிடைக்கிற இலாபம் தொழிலாளர் வேலை செய்யும் இழப்பாலேயே ஏற்படுகிறது.[3] எனவே, உண்மை தலைகீழாக இருக்கிறது. மூலதனம் தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கு மாறுகத் தொழிலாளரின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்குப் பதிலாக அதன் உண்மை அளவைத் தொழிலாளருக்குப் பதிலாகப் பணி புரிவதுதான். மூலதனத்தை அதிகம் ஈடுபடுத்தினால் குறைந்த தொழிலாளர்களே போதும்.

[1] அதே ஏடு, பக்கம் 158. நாட்டுச் செல்வம், புத்தகம் II, அதிகாரம் 3—லிருந்தும் ஒரு பகுதியை அவர் மேற்கோள் காட்டுகிறார். இப் பகுதி மார்க்ஸ் பொருள் விளக்கத்திற்கு ஒத்து வருகிறது. 'தயாரிப்பாளரின் தொழிலாளி அவர் வேலை செய்யும் பொருள்களின் மதிப்பைப் பொதுவாக அதிகரிக்கிறார். தமக்கு வாழ்க்கை வசதி கிடைக்கவும், தமது முதலாளிக்கு இலாபம் கிட்டவும் இவ்வாறு செய்கிறார்.' 'தயாரிப்பாளர்' என்பது இவ் வாசகத்தில் 18 ஆம் நூற்றாண்டு உண்மைப் பொருளின்படி தமது கையினால் வேலை செய்கிற ஒருவர் எனப் பொருள்படும்.

[2] அதே ஏடு, பக்கம் 161.

[3] இவருடைய பாணியில் அமைந்த அடிக்குறிப்பில் லாடர்டேல் கூறுவதாவது: 'மூலதனம் தொழிலாளரின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதாக ஸ்மித் விவரித்து இருப்பது கொள்கைக் குறிப்பத்தாலேயே ஏற்பட்டுள்ளது. இதே வார்த்தையைத் தொடர்ந்து பார்த்தால் பத்து மைல் தொலைவுக்குள் சுற்று வழியில் இருக்கும் இரு இடங்களைப் புதிய குறுக்குச்சாலை போட்டு ஐந்து மைல் தொலைவுக்குள் கொண்டு வருவது நடப்பவனின் வேகத்தை இரு மடங்காக்கியது என்று கூறினால் எப்படியோ அப்படியேதான் இந்த வாதமும் இருக்கிறது.' பக்கம் 185.

இக் கருத்தின் விளைவுகள் மகத்தானவை. வசதியின் பொருட்டு லாடர்டேல் கூறுவதை அனுசரித்து ஸ்மித்தின் கருத்தாவது: 'இப்போதுள்ள மூலதன அளவை அனுசரித்துத் தொழிலாளர் எண்ணிக்கை முறைப்படுத்தப்படுகிறது. எனவே, மூல தனத்தை அதிகரிப்பதே செல்வத்தை அதிகப்படுத்துவதற் குரிய தலைசிறந்த ஒரே வழியாகும்.' தொழிலாளர்களை நீக்கக் கூடிய முறையில் பயனுள்ள வகையில் மூலதனத்தை உபயோ கிக்கிற வரையில்தான் ஒரு நாட்டுக்குப் பயன் ஏற்படும். அதற்கு மேற்பட்ட மூலதனத்தால் பயன் ஏதும் இல்லை.[1]

நடைமுறையில் லாடர்டேல் கருத்தின் மத்திய அமிசத் திற்கு இப்போது வருகிறோம். கருத்திலே தலைகீழ் மாற்றம் ஏற்-படுகிறது. மூலதனம் முதற்கண் எதன்மூலம் ஏற்பட்டதோ அதன் மூலமே அதை அதிகப்படுத்த முடியும். ஆனால், பாமரக் கருத்து தனிமனிதன் வளத்தைப் பெருக்கும் வழியையும், பொதுச் செல்வத்தைப் பெருக்கும் வழியையும் ஒன்றுக்கொன்று குழப்பிக் கொள்ளுகிறது. இரண்டிற்கும் சிக்கனமே சிறந்த வழியாகும்.[2] ஆனால், சிக்கனத்தை லாடர்டேல் கண்ணெடுத்துப் பார்க்க மாட்டார். அவருடைய கருத்துப்படி சிக்கனம் என்பது 'பணச் சேர்க்கைக்குரிய கீழ்த்தர உணர்ச்சியே.' ஒவ்வோர் ஊதாரியும் பொதுநல விரோதியாவான்; சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் ஒவ்வொருவனும் பொதுநல நண்பனாவான். விவசாயமே பிரதானத் தொழிலாக இருந்த சமுதாய அமைப்பில் ஒருவன் பயன்படுத்தக்கூடிய அளவுவரையில் மூலதனம் அவனிடம் இருக்கையில், தான் பயன்படுத்தக்கூடியதைவிட அதிக அளவு உணவுப் பொருள் கைவசம் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் உட்கொள்ளும் அளவைக் குறைப்பது தனக்கும் நல்லதல்ல, பிறருக்கும் நல்லதல்ல. ஓர் அளவுக்கு மேற்பட்டுவிட்டால், மூல தனத்தைப் பயனுள்ள வகையில் அதிகரிக்க முடியாது.[3] எனவே, கடன் கரைப்பு நிதியால் பயன் ஏதும் விளையாது. தேவையை ஊக்குவிக்கவேண்டும்; அப்போதுதான் தொழில் வளரும். பெரிய மாற்றங்கள் ஏற்படப் போவதாக லாடர்டேல் எச்சரித்துக் கூறுவதாவது: 'எங்குப் பார்க்கினும் செல்வத்தில் ஏற்றத் தாழ்வு அதிகம் இருக்கிறது. பொதுச் செல்வம் அதிகரிப்ப தற்கு இதுவே பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிறது.' செல்வம் பலரிடம் சரிவரப் பங்கிட்டால், வாழ்க்கைத்தரம் உயர்ந்து வளமான வாழ்வு மலரும். அதன் பயனும் உள்

[1] அதே ஏடு, பக்கங்கள் 203—205.
[2] அதே ஏடு, பக். 208
[3] அதே ஏடு, பக். 228.

நாட்டிலே பொருள்களுக்கு அதிகத் தேவை தொடர்ந்து ஏற்படும்.[1]

ரே

ஜான் ரே[2] (John Rae, 1786-1873) பல அமிசங்களில் லாடர்டேலை ஒத்துள்ளார். இவருடைய எழுத்துக்களில் கார சாரம் அதிகம் இருக்காது. எதற்கெடுத்தாலும் குற்றம் கண்டு பிடிக்கும் தன்மையும் இவரிடம் அதிகம் இல்லை. என்ருலும், ஆடம் ஸ்மித்தின் கருத்து அடிப்படைகளை இவரும் பெருமளவு கண்டிக்கிருர். அவருடைய இரண்டு அனுமானங்களை இவர் முக்கியமாகக் கண்டிக்கிருர். முதலாவதாகத் தனியார் வளத் தைப் பெருக்குவதன் மூலம் நாட்டுச் செல்வத்தை அதிகரிக்க முடியும் என்ற கருத்தையும், இரண்டாவதாகத் தனியார் அக் கறைக்கும் தேசீய அக்கறைக்கும் இயல்பான ஒற்றுமை இருக் கிறது என்ற கருத்தையும் இவர் கண்டிக்கிருர். இவர் இக் கருத்துகளைத் தாம் எழுதிய முக்கியப் புத்தகமாகிய 'அரசியல் பொருளாதாரம் பற்றிய புதுக் கொள்கைகளில்'[3] எழுதியுள்ளார். தனியார் சொத்துச் சேர்ப்பதால் நாட்டுச் செல்வம் பெருகுவதற்கு ஒரு வரையறை இருக்கிறது; அதற்கு மேற்பட்டு அது அதிகரிக்க முடியாது.[4] லாடர்டேல் கூறியதுபோல, ஒரு நாடு நல்ல முறை யில் பயன்படுத்தக்கூடிய முறங்களுக்கும் வரையறை இருக் கிறது. ஆடம் ஸ்மித்தும் ஓரிடத்தில் பாஸ சட்டி பற்றி இதையே கூறியுள்ளார். இந்த வரையறைக்குமேல் சும்மா சேர்த்துவைப்பதால் பயனேதும் விளையாது. நாட்டு மூலதனம் மேலும் அதிகரிக்க வேண்டுமானுல், நாட்டில் மேற்கொண்டும் அபிவிருத்தி ஏற்படவேண்டும். முறங்களுக்குப் பதிலாகப் புடைக்கும் பாத்திரங்கள் வரவேண்டும். அதாவது புதிய கண்டு பிடிப்புகளும், அபிவிருத்தியும் ஏற்பட வேண்டும்.[5]

[1] அதே ஏடு, பக். 345–349.

[2] அபர்டீனைச் சேர்ந்த புட்டி (Footdee) என்ற இடத்தில் 1786ல் பிறந்தார்; மரிஷல் கல்லூரியில் கல்வி பயின்ருர்; பின்னர் எடின்பர்க்கில் மருத்துவம் படித்தார்; நிதி வசதியிலும் இல்வாழ்க்கையிலும் துன்புற்ருர். எனவே, தன் நாட்டை விட்டு வெளி நாட்டுக்குச் சென்ருர். கனடாவிலும் பிற இடங்களிலும் ஆசிரியர், மருத்துவர் முதலிய பல வேலைகள் பார்த்தார்; முடிவில் கான்ட்விச் தீவுகளில் அரசாங்க அதிகாரி யாய்ப் பணியாற்றினுர்.

[3] இதன் முழுத்தலைப்பு இன்னும் மிக நீண்டது; ரே எழுதிய புத்தகத்தை டாக்டர் மிகில்ட்டர் 1905–ல் திருத்தி, 'மூலதனத்தின் சமுதாயக் கொள்கை' என்ற பெயரில் வெளியிட்டார். இதன் ஆசிரியர் இப் புத்தகத்தின் அமைப்பையே மாற்றிவிட்டார். தமக்குச் சரியெனப்பட்ட வகையில் விஷயங்களை மாற்றியமைத்தார். இதை 'அனுவசியக் கவனிப்பு' என ஆடம் ஸ்மித் கூறியிருப்பார். ஆனல், இப்புத்தகமே எளிதில் கிடைப்பதால் இது மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

[4] மூலதனத்தின் சமுதாயக் கொள்கை, பக்கம் 157.

[5] அதே ஏடு, பக்கங்கள் 152–153.

இந்த அமிசம் ரே கருத்தில் மிக முக்கியமானதாகும். அவர் கூறுவதைச் சுருக்கித் தந்தால் அதன் சாராம்சம் அடியிற் கண்ட வாறு இருக்கும். பொது நிதியைப் பெருமளவு அடைவதன் மூலம் தனிப்பட்டவர்கள் பொதுவாகத் தங்கள் மூலதனத்தை அதிகரிக்கிறார்கள். ஒருவர் செல்வராகும்போது வேறொருவர் வறிஞராகிறார். ஒருவர் வீடு வீடாகவும், பண்ணை பண்ணை யாகவும் அடுக்கடுக்காகத் தமக்குச் சேர்த்துக்கொண்ட போதி லும் நாட்டுச் செல்வம் என்னவோ சிறிதும் மாறுமல் அப்படியே இருக்கிறது. இதற்கு மாறுக அடுத்துள்ள நாடுகள் செல்வத்தில் சேர்ந்தே முன்னேறுகின்றன அல்லது வீழ்கின்றன. எனவே, இதையே சுருக்கிக் கூறுவதானால், 'ஏற்கெனவே இருக்கும் செல்வத்தின் பெரும் பகுதியை அடைவதன்மூலம் தனிப்பட்ட வர்கள் செல்வர்களாக மாறுகையில், நாடுகள் ஏற்கெனவே இராத செல்வத்தைப் புதிதாக உற்பத்திசெய்வதுமூலம் வளம் பெறுகின்றன. எனவே, இவை இரண்டும் இந்த வகையில் வேறு படுகின்றன. ஒன்று இருப்பதை அடைகிறது. மற்றொன்று புதிதாக உற்பத்தி செய்கிறது.'[1] இக் கருத்தின் விளைவாகப் புதிய படைப்புகளுக்கு ரே முதலிடம் அளிக்கிறார். சமுதாய அபி விருத்தியில் புதிய கண்டுபிடிப்புகளுக்கு உள்ள இடத்தை ஆராய் வதே இவருடைய முக்கிய வேலையாகும். புதிதாகக் கண்டு பிடிப்பதுமூலமே அதிக உற்பத்தி செய்ய முடியும். எனவே, தேசிய செல்வம் பெருக வேண்டுமானால், புதிய கண்டுபிடிப் புக்கள் இன்றியமையாமல் இருக்கவேண்டும். ஆனால், நாட்டுச் செல்வத்துக்கும் தனியார் வளத்துக்கும் வேறுபாடு கற்பித்திருப்ப தால், தனியார் செல்வம் அதிகரிப்பதற்கும் இதையே காரணமாகக் காட்டமுடியாது.[2] இதனுடன் தொழில் பிரிவினை குறித்து ஆடம் ஸ்மித்துடன் இவர் கருத்து வேறுபடுவதையும் குறிப்பிட வேண்டும். தொழில் பிரிவினையின் ஒரு விளைவாகவே புதிய கண்டுபிடிப்பு ஊக்குவிக்கப்படுவதாக ஸ்மித் கூறியுள்ளார். ஆனால், இது உள்ள நிலையைத் தலைகீழாகச் சொல்வதாகும் என ஒரே தொடர்ப்புபடுத்திக் குறிப்பிடுகிறார். புதிய கண்டு பிடிப்பு, புது அறிவு காரணமாகக் கருவிகள் பல்கிப் பெருகும். பலவகைக் கருவிகள் வந்தால் பலவகைத் தொழில்கள் ஏற்படும். எல்லா மனிதர்களும் எல்லாக் கருவிகளையும் வைத்திருப்பது வீணான வேலை. அப்படிச் செய்தால் பெரும்பாலான கருவிகள் வேலையின்றி வறிதே கிடக்க வேண்டியதுதான்.[3] எனவே, தொழில் பிரிவினை ஏற்கெனவே புதிதாகக் கண்டுபிடித்தவை

[1] அதே ஏடு, பக்கம் 383.
[2] அதே ஏடு, பக்கங்கள் 386
[3] அதே ஏடு, பக்கங்கள் 102–103.

களிலிருந்து ஏற்படுகிறது. புதிய கண்டுபிடிப்பு இருந்தால்தான் தொழில் பிரிவினை ஏற்பட முடியும். இன்னும் சொல்லப்போனால் செய்வதையே மீண்டும் மீண்டும் செய்துகொண்டிருந்தால் இது தொழில் பிரிவினைக்கு ஈடாகும். மனிதனின் உற்சாகம் குன்றி விடும். இத்தகைய நிலையில் கண்டுபிடிப்புகளுக்கு வழி இருக்காது. இங்கு ரே சரியாகவே விஷயங்களைப் புரிந்து கொண்டு வலியுறுத்தவேண்டியவற்றையே வலியுறுத்தியுள்ளார். ஸ்மித், தொழில் பிரிவினைக் கொள்கையில் 'லாகவத்துக்கு' அதிக இடம் அளிக்கப்பட்டுள்ளது. அதன் முக்கியத்துவத்தை ரே குறைத்தே மதிப்பிடுகிறார். ஏனெனில் 'இலாகவம்' என்பது ஒரு தொழிலை ஆரம்பிக்கும் காலத்தில்தான் முக்கியமானதாயிருக்கும். நாளாவட்டத்தில் 'கை செய்வது குறைவு; கருவி செய்வது நிறைவு'[1] என்ற நிலை ஏற்படும். எனவே, ரே கருத்தில் தொழில் பிரிவினை முன்னேற்றத்துக்குக் காரணமல்ல; முன்னேற்றத்தின் விளைவே தொழில் பிரிவினை. சமுதாயத்தை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்கிற புதிய கண்டுபிடிப்புகளின் விளைவே தொழில் பிரிவினை.

இருப்பதை அடைவதுமூலமே தனியார் வளம் பெருகும் என ரே கூறுவதால், தேசீய நலனுக்கும், தனியார் நலனுக்கும் இயல்பான ஒற்றுமையில்லை என்பதும் இதிலிருந்து பெறப்படுகிறது. ஒன்றின் நன்மை மற்றொன்றின் தீமையில் முடியும். 'சூதாடியின், ஜேப்படி செய்பவனின் முயற்சியால் நாட்டுக்கு என்ன நன்மை?' தீவிரமான போர் உணர்ச்சியினால் நாடு பெறும் பலனென்ன? இவற்றிலும் இன்னொன்ன பிற விஷயங்களிலும் தன்னலத்தால் பொதுநலம் ஏற்பட வழியில்லை. தன்னலத்துக்கு மனிதன் பாடுபட்டால், மறைவான சூத்திரதாரி அதைப் பொதுநலனில் முடித்துவைப்பான் என்பது சரியல்ல.[2] எனவே, அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையை ஒரே நியாயகாரணங்களைக் காட்டி எதிர்க்கிறார். புத்திசாலித்தனமாக அரசாங்கத்தலையீடு வேண்டுமென வாதிக்கிறார். பெருத்த சமுதாயங்களில் மனிதர்கள் வாழும்போது ஒவ்வொரு தனி மனிதனும் பொதுநலனில் அக்கறை கொள்வான் என்பது முயற்கொம்பே. பொதுநலனுக்குப் பாடுபடுவது சட்டமன்ற உறுப்பினரின் பொறுப்பாகும். அரசாங்கத் தலையிடாக் கொள்கையின்படி ஒவ்வொரு தனி மனிதனும் தன்னலத்தில் நாட்டம் கொண்டு ஆவன செய்வதால் அவன் அறியாமலேயே, அவன் செய்ய வேண்டுமெனக் கருதாமலேயே, பொதுநலனுக்குப் பாடுபடு

[1] அதே ஏடு, பக்கங்கள் 237–242.
[2] அதே ஏடு, பக்கம் 345.

கிறுன். அதனுல் நாட்டுச் செல்வம் அதிகரிக்கிறது. எனவே, அறிந்தே நாட்டுச் செல்வத்தை அதிகரிக்கப் பாடுபடவேண்டியது சட்டம் செய்வோரின் பொறுப்பே. இயல்பாகவே நிகழ்ச்சிகள் எந்தக் கதியை நோக்கிச் செல்லுமோ அந்தக் கதி இக் குறுக் கீட்டால் தடைபடுவதால், இக் குறுக்கீடு இயற்கைக்கு மாருக இருப்பதால், அரசாங்கத் தலையிடாக் கொள்கையின்படி இக் குறுக்கீடு தீங்கு பயக்கும் எனக் கருதப்படுகிறது.[1]

இந்த அனுமானம் தவருனதென ரே கருதுகிறுர். சட்டம் செய்பவரின் திறன் பொதுநலனே அதிகரிக்க வல்லதல்லவென எங்கும் கண்கூடாக எண்பிக்கப்படவில்லே. உண்மையில் சொல்லப்போனுல் இந்த அனுமானம் தலேகீழாக இருக்க வேண்டும்.[2] பயனுள்ள கலேகள் ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடு களுக்குச் செல்வதே இவர் மனத்தில் துடித்துக்கொண்டிருக்கும் உதாரணமாகும். இக் கலேகள் இவ்வாறு இடம் மாறியது முதற் கண் பலாத்காரத்தினுல் இருக்கலாம். அவை, போர், புரட்சி, நாடு கடத்தல் ஆகியவற்றின் விளேவுகளாகும். இத்தகைய தீய வழிகள் இராவிட்டால், அவைமூலம் மறைமுகமாகக் கிடைக்கும் நற்பயன்களேயும் நாம் இழந்துவிடவேண்டுமா என்ன? நன்மையை எடுத்துக்கொண்டு தீமையைத் தள்ளிவிடுவதற்கு நம்மால் முடியாவிட்டால் நமக்கு அறிவிருந்து என்ன பயன்?[3] கலே அறிவைப் பரப்புவதற்கு முன்னுட்களில் மேற்கொண்ட கொடிய பலாத்கார வழிகளுக்குப் பதிலாக இக் காலத்தில் சிட்ட மியற்றுவோன் அன்பு வழியில் இவற்றை வளர்க்கவேண்டியது தான். அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? கலேஞனிடம் நேசக் கரம் நீட்டி, அன்பு காட்டி இன்முகத்துடன் வரவேற்றுல், எந்தக் கலேஞன்தான் அந்த நாட்டுக்கு வர முன்வரமாட்டான்? எனவே, சட்டம் இயற்றுவோன் கவனமுடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். சலுகைகள், நன்கொடைகள், தீர்வைகள்[4] போன்று பல ஆயுதங்களே இதன் பொருட்டுச் சட்டம் இயற்றுவோன் கையில் தருகிறுர் ரே. தனியார் ஒரு தொழிலே ஒரு நாட்டிலிருந்து மற்றெரு நாட்டுக்கு எடுத்துச் செல்வது மிக அருமையாகும். இது எளிதில் நடக்காது.

[1] அதே ஏடு, பக்கங்கள் 357, 362.

[2] ரேயின் உவமை சுவையானது. இது முழுவதும் பொருத்தமானதாயிராவிடி னும் சுவையானதே. 'பலபேர் ஓரிடத்துக்குப் பல முறை சென்றுல், அவர்கள் ஏற் படுத்தவேண்டும் என்று எண்ணுமலேயே அங்கே நடைபாதை ஏற்பட்டுவிடும். மக்கள் சாலே போடவேண்டுமென்று விரும்பி உண்டாக்கும் சாலேயைவிட இயற்கையில் அமைந்த நடைபாதை உயர்ந்துவிடுமா? (பக்கம் 362) ஊராட்சி மன்றம் தொடர்ந்து இருப்பதற்குரிய ஒரு வாதம்.

[3] அதே ஏடு, பக்கம் 365.

[4] அதே ஏடு, பக்கங்கள் 369-370.

இந்த வாதத்தையும் ரே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார். இதனால் இலாபம் கிடைப்பது மிகவும் அரிது. 'இத் திட்டத்திற்காகும் முதற்செலவைச் சமூகம் முழுவதும் தாங்கிக் கொள்வதே நல்லது. ஏதாவதொரு தொழிலதிபரின் தனி முயற்சி யால் பொதுநன்மை ஏற்படட்டும் என நாம் காத்துக்கொண் டிருப்பது அறிவுடைமையாகாது.'[1] இப்படி அரசாங்கமே தொழில்களை ஆரம்பித்து வளர்க்கவேண்டும் என்ற வாதம் மெல்லத் தொடங்குகின்றது.

ரேயின் மையக் கொள்கை கண்டிக்கப்படத்தக்கதாயிருக் கிறது. இதைக் கண்டிக்கவேண்டுமென நினைப்பவர்களுக்கு இது மிக உதவியாக இருக்கிறது. இதைச் சரிசெய்ய அவர் சில ஆலோசனைகள் கூறுகிறார் என்றாலும், அவருடைய வாதங்கள் பொதுவாகப் பார்க்குமிடத்து, அவர் கண்டிக்கின்ற கருத்துகளைப் போலவே பலமில்லாதவைதாம், சக்தி இல்லாதவைதாம். தனியார் வளம் பெருகுவதாலேயே நாட்டுச் செல்வம் அதிக ரிக்கும் என்ற வாதம் தவறானதென ரே கூறுகிறார்.[2] புதிய கலைகளைப் புகுத்துவதன் முக்கியத்துவத்தை ஆடம் ஸ்மித் ஏற்றுக்கொள்வதாலேயே ரே இவ்வாறு கூறுகிறார். அடியிற் கண்டதை ரே ஒப்புக்கொள்வதால் ரேயின் கொள்கையும் முறிந்துபோவதாகக் கருதவேண்டும்.

'தனி மனிதர்களும் நாடுகளும் வருமான மிச்சம் மூலமாக மட்டுமன்றி வேறு வழிகளிலும் செல்வம் அடைகின்றனர். மூல தனமும் சிக்கனமும் தொழிலுக்குத் தேவைப்படுவதைப் போலவே திறமையும் லாகவமும் அவசியமாகும். இவையும் அவைபோலவே மதிப்புள்ளவையாகும். எனவே, வேண்டிய திறமையை அடையச் செய்யப்படும் செலவு நல்வழியில் செய்யப் படுவதே.'[3]

இது அசைக்கமுடியாத ஆணித்தரமான வாதமாகும். ஆடம் ஸ்மித்தும் இதைத் தம் மந்தநிலையில் ஏற்றுக்கொண்டிருக்கக் கூடும். ஆனால், நாட்டுச் செல்வம் சேரும் வகையையும், தனியார் வளம் சேரும் வகையையும் ரே வேறிடத்தில் வேறுபடுத்திக் காட்டும் வாதம் இதனால் பொய்த்துப் போகிறதென்பது என்னவோ உண்மைதான்.

[1] அதே ஏடு, பக்கம் 410.
[2] அதே ஏடு, பக்கம் 407.
[3] அதே ஏடு, பக்கம் 428.

ஒருவர் மனத்திடை எழுந்த எண்ணங்கள் மற்றொருவர் மனத்திடை எழுந்த எண்ணங்களோடு மோதுவதால் ஏற்படுகிற விளைவுகளை ஆராய்பவர்களுக்கு ரே தகுந்த பாத்திரமானவர். அமெரிக்கச் சூழ்நிலையில் வசித்த காரணத்தால் ரேயின் மனப் பாங்கு, பின்னர் வரும் காரேயின் மனப்பாங்கைப் பெரிதும் ஒத்துள்ளது. நிலம் என்பது ஒரு கருவி. இதை மற்றக் கருவி களிலிருந்து வேறுபடுத்திக் காட்டமுடியாது என்ற வாதத்திலும், மீண்டும் உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவைப் பொறுத்தே ஒரு பொருளின் மதிப்பு அமைகிறது என்ற காரே கொள்கைக்கு ஒப்பிய வாதத்திலும் இவர் காரேயை ஒத்துள்ளார். இவ்விஷயங் களில் இவர் காரேக்கு முன்னோடியாகத் திகழ்கிறார்.[1]

இவர் லிஸ்ட் கருத்துடனும் ஓரளவு ஒத்துப் போகிறார். லிஸ்ட் கருத்துகள் அவரது அமெரிக்க ஆராய்ச்சி அனுபவத் தின் பயனாக ஏற்பட்டவையாகும். பின்னர், செல்வ ஆதாரமாய்ப் பயன் படுவதற்குப் புதிய தொழிலை ஏற்படுத்துவதன் அவசியத்தை ரே வலியுறுத்தும்போதும், சட்டம் இயற்றுவோன் 'சிறு செலவு செய்வதன்மூலம் சமுதாயத்தின் பொருள் உற்பத்தி ஆற்றலை அதிகரிக்க முடியும்' என்று குறிப்பிடும்போதும், ஜெர்மன் பொரு ளாதார வல்லுநராகிய லிஸ்டின் எண்ணத்தை மட்டுமன்றி, அதே சொல்லையும் முன்னதாகக் கையாளும் முன்னோடியாக ரே திகழ்கிறார். முடிவாக இது மிக விசித்திரமாகத் தோன்று விட்டால், போகப்பொருள், டம்பம்பற்றிய ரே கருத்துகளும் 'வெளிப்படையான', 'பயன்படுத்துதல்' என்னும் சொற்களை அவர் ஒருங்கிணைத்திருப்பதும் தார்ஸ்டன் வெப்ளென் கருத்து களை முன்னதாக எதிரொலிக்கிறதென்றே கூறலாம்.[2]

[1] கருவிகள்பற்றி விவாதிக்கையில், 'பயன்படுத்துவதற்குப் பண்படுத்தப்பட்ட நிலம் ஒரு கருவியே என விளக்குகிறார். விவசாயத் தொழிலாளரின் சக்தியே அதைக் கருவியாக ஆக்கியுள்ளது' (பக்கம் 16). 'சாகுபடி செய்யும் ஒரு நிலத்தின் பகுதி விவசாயி வேலை செய்வதற்குட்பட்ட கருவியாகக் கருதப்படும்போது, மற்றக் கருவிகளி னின்றும் வேறுபடுத்துவதில்லை' (பக்கம் 40). முன்னதைவிடக் குறைந்த உழைப்பில் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களின் மதிப்பைப்பற்றிக் குறிப்பிடுகையில், 'அவை தங்கள் எஜமானருக்கு முன்னர் வாங்கிக் கொடுத்த மற்றப் பொருள்களைவிட இப்போது குறைவாகவே வாங்கிக்கொடுக்கும். அவற்றைச் செய்யவேண்டியிருக்கும் உழைப் பின் அடிப்படையில் அவற்றின் மதிப்பிற்கேற்ப அவை வேறு பொருள்களுக்கு மாற்றிக்கொள்ளப்படுகின்றன' (பக்கம் 107).

[2] அதே ஏடு, பக்கம் 245; இது வரும் மற்றப் பக்கங்கள்.

சிஸ்மாண்டி

சிஸ்மாண்டியை[1] (Sismondi, 1773-1842) பொருளாதார எழுத்தாளர் வரிசையில் எங்கு வைப்பது என்பதைக் காண்பது மிக்க கடினமான காரியமாகும். இவரது மனம் நிலையற்றதே இதற்குக் காரணம். தம் கருத்தின் தொடக்க நிலையை விட்டு விடவில்லை என்றாலும், அவர் தம் இயற்கையான இலட்சிய வரம்பை எய்தினாரா எனின், இல்லையென்று உறுதியாகச் சொல்லலாம். இவர் பல கொள்கைக் குழாத்துடன் தொடர்புகொண்டிருந்த போதிலும், இறுதியாக எந்தக் கொள்கையிலும் நிலைத்து நிற்கவில்லை. முக்கியமான முதல் நூலிலே, 'டிலா ரிச்சஸ் கமர்ஷியல்'[2] (1803) என்ற நூலில் இவருடைய நிலை தெளிவாயிருக்கிறது. இளைஞர்கட்கு உரிய முறைக்கேற்ப இவர் ஆடம் ஸ்மித்தை முழுதும் பின்பற்றுமல் இருப்பதில் திருப்தியடைந்தார். ஆச்சரியப்படத்தக்கது யாதெனில், ஆடம் ஸ்மித்தின் மாணவர் என்று சொல்லிக்கொள்வதில் அவர் கவலையுறவில்லை. ஆடம் ஸ்மித்தை ஆராய்ந்து படித்தவர்கள் தம் நூலில் சில அதிகாரங்களில் புதிய விஷயத்தைக் காணமுடியாது என்று சிஸ்மாண்டியே குறிப்பிடுகிறார்.[3] ஆடம் ஸ்மித் இங்கிலாந்துக்கென்று எழுதிய கருத்துகளைப் பிரெஞ்சு நாட்டுக்குப் பயன்படுத்துவதே தம் நோக்கம் என்பதையும் சிஸ்மாண்டி தெளிவுபடுத்தியுள்ளார்.[4] தம் புத்தகத்தில் புதிய கருத்து எதையும் தாம் கூறிவிடவில்லை என்ற உண்மையை சிஸ்மாண்டியே மறுக்காமல் மறைக்காமல் ஒப்புக்கொண்டுள்ளார்.[5]

எனவே, இவருடைய முதல் புத்தகத்தின் முக்கிய நோக்கம் அரசாங்கத் தலையிடாக்கொள்கைதான். தன்னலம் கண்டால் பொதுநலம் காணலாம் என்பதே இவர் கொள்கை. அரசாங்கம் தலையிடுவதால் பயன் ஏதும் விளையாது என சிஸ்மாண்டி விளம்புகிறார். கட்டுப்பாடற்ற வணிகம் இருந்தால், நாட்டுக்குப் பயனுள்ள வகையில் மூலதனம் செயலாற்றும் என ஓரிடத்தில் இவர்

[1] ஜெனீவாவில் (Geneva) 1773 ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் இறக்கும் போதும் ஜெனீவாவில்தான் தங்கியிருந்தார்; தன் வாழ்நாளில் பெரும் பகுதியை இத்தாலியில் கழித்தார். இங்கு இவர் விவசாயத்தில் ஈடுபட்டார்; இடைக்காலத்தில் இத்தாலியக் குடியரசுகளின் வரலாறு என்ற நூலைப் பதினைறு புத்தகங்களாக எழுதினார்; ஃபிரெஞ்சு நாட்டு வரலாற்றையும் இருபத்தொரு புத்தகங்களாக எழுதினார். இவருடைய மற்ற நூல்களும் பெரியவையே. தம் வாழ்வுத்திலும் பின்னரும் இவர் இங்கிலாந்து சென்றுள்ளார்.

[2] இதன் முழுத்தலைப்பு மிக நீண்டதாகும்.

[3] De la Richesse Commerciale, தொகுதி I, பக்கம் xx.

[4] டிலா ரிச்சஸ் கமர்ஷியல், தொகுதி I, பக்கம் 12.

[5] புதிய கொள்கைகள், பக்கம் vii.

கூறியுள்ளார்.[1] 'மனிதர்கள் அனைவரும் தத்தம் நலனைப் பேணி வளர்த்தால், அவர்கள் நாட்டு நலனையும் அதன் மூலம் வளர்ப்பர்'[2] என சிஸ்மாண்டி அடித்துக் கூறும்போது எழுதிச் செல்லும் விதியின் கையைக் காண்கிறோம். 'எந்த முதலாளி தன்னலத் தைப்பேணி வளர்க்கிறானோ, அவன் அந்த நாட்டுப் பொது நலத் துக்காகவும் எப்போதும் மிகப் பாடுபடுகிறான்'[3] என்ற நம்பிக்கை மிகுந்த முடிவுக்கு வந்து சேர்கிறோம். வரியில்லா நிலையும் உயர் நன்மையும் ஒன்றோடொன்று மாறுதலின்றி இணைகின்றன. பிரிட் டிஷ் வியாபாரிகளை நோக்கி, என்ன உதவி வேண்டுமென அரசாங்கம் கேட்டபோது, 'துணை ஒன்றும் வேண்டா. தொல்லை செய்யாமலிருந்தால், அதுவே போதும்'[4] என்று அவர்கள் கூறி யதைப் பெருமையுடன் குறிப்பிடுகிறார் சிஸ்மாண்டி. அரசாங்கத் தலையிடாக் கொள்கைத் தத்துவத்தின் விழுமிய கருத்துகளே இவை; ஆனால், வயதான சிஸ்மாண்டி வெளியிட்ட கருத்துகள் இவற்றிலிருந்து ஓரளவு மாறுனவை; இதை ஆங்காங்கே காண லாம். 'தொழிலாளர் வர்க்கமே உழைப்புக்கு அடிப்படை. உழைப்பினால் விளைந்த பயனை இவர்கள் அடைய முடியாமல், இப்பயன் ஏற்படுவதற்கு ஒரு சிறிதும் பாடுபடாத, வீணே உண்டு கொழுக்கும் சமுதாயத்திற்குச் சுமையாக உள்ள மற்றவர்களுடன் அதைப் பகிர்ந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அறிவுள்ள எந்த மனிதனும் இந்த நிலை கண்டு துக்கப்படாமல் இருக்க முடியாது.[5]

வரலாறு எழுதுவதில் பதினாறு ஆண்டுக்காலம் ஈடுபட்ட பின்னர் சிஸ்மாண்டி பொருளாதாரத் துறைக்குத் திரும்பி வந்து, 'அரசியல் பொருளாதார புதுக் கொள்கைகள்' (1819) எழு தினார். இப்போதும் ஆடம் ஸ்மித்திடம் இவருக்கு மதிப்பு உண் டென்றாலும், முன்பிருந்ததைப் போல் இப்போது இவர் ஆடம் ஸ்மித்தை ஒருசிறிதும் பின்பற்றுபவர் அல்ல; இந்தப் பதினாறாண்டு இடைக் காலத்தில் உலகம் வெகுவாக மாறித் தொழில் மயம் ஆனதைக் கண்டார். உலகமெங்கும் அதிகம் உற்பத்தி செய்ய வேண்டும்; அதுவும் மலிந்த விலையில் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இதைச் சிந்தித்துப் பார்த்த அவர், இதில் பாராட்ட ஒன்றுமில்லையென்று எண்ணினார். இவற்றின் பின்னணியில் தொன்மை அரசியல் பொருளாதாரக் கொள்கை தலைதூக்கி நின்றது. சிஸ்மாண்டி இத் துறையில்

[1] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 267.
[2] டிலா ரிச்சஸ் கமர்ஷியல், தொகுதி I, பக்கம் 329.
[3] அதே ஏடு, தொகுதி II, பக்கம் 152.
[4] அதே ஏடு, தொகுதி II, பக்கம் 143.
[5] டிலா ரிச்சஸ் கமர்ஷியல், தொகுதி I, பக்கம் 109.

முதிர்ச்சியடைந்திருக்காவிட்டால், அரசியல் பொருளாதாரமே வேறு வகையில் இருந்திருக்கும்.

இது பெரு நன்மைக் கொள்கையேயாகும்.[1] மனிதன் புற நல மேம்பாடடைய வேண்டும் என்பதே இதன் நோக்கம். ஆனால், 1819 ஆம் ஆண்டு ஐரோப்பாவில், முக்கியமாக இங்கிலாந்தில், வாழ்விலே மகிழ்ச்சி ஏற்பட என்ன நடந்தது? மால்தஸின் நம் பிக்கையூட்டும் சித்திரத்துக்குப் பதிலாக, சிஸ்மாண்டியின் அவ நம்பிக்கை தொனிக்க வாழ்வைத் துயர நிலையில் படம் பிடித்துக் காட்டுகிறார். பசி, பிணி, துயர் நிறைந்த, தாழ்வுற்றுக் கிடக்கும் உலகையே இவர் சித்திரிக்கிறார். தொழில் பிரிவினையை இவர் நிந்திக்கத் தலைப்படுகிறார். தயாரிப்பாளர்களின் புதிய கண்டு பிடிப்புகள் என்ற பெரும் பாறையில் மோதி, மனித இனம் என்ற கப்பல் தூள் தூளாகச் சிதறிப் போவதாகக் குறிப்பிடுகிறார்.[2] 'நாம் போவது எங்கே?' என்ற ஐயவினுவைச் சிஸ்மாண்டி எழுப்புகிறார். இந்த உலகிலே இவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்ட பின்னரும் எங்கு நோக்கினும் மனிதன் துயரக் கடலில்தான் ஆழ்ந்திருக் கிறானே தவிர மகிழ்ச்சியில் திளைக்கும் மக்கள் எங்கே இருக் கிறார்கள்.[3] சிஸ்மாண்டியின் கொள்கையின் கருப்பொருள் எளி தானது. இக் கருத்தையே அவர் எல்லா இடங்களிலும் வற் புறுத்துவதால் சிஸ்மாண்டி தனிக் கருத்துத் தம்பிரானுகத் திகழ் கிறார். கட்டுப்பாடற்ற போட்டியினுல் கெடுதலே விளைகிறது. இதுவே இவருடைய மையக் கருத்தாகும். இத்தகைய போட்டி யினுல் ஏராளமான பொருள்கள் உற்பத்தியாகிவிட்டால், அவை விலை போவதெங்கே? தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப் பட்ட பொருளுக்குக் கிராக்கி எப்படி இருக்க முடியும்? சிஸ் மாண்டியின் இந்த அச்சம் எல்லாப் பொருள்களிடத்தும் ஏற்படு கிறதேயன்றி ஒரு சில பொருள்களிடத்து மட்டும் அன்று. இந்த அதிக உற்பத்தி, தொழில் முறைப் பகுப்புக் காரணமாகவும், பெரு மளவு உற்பத்திக் காரணமாகவும் ஏற்படுவதாக இவர் குறிப்பிடு கிறார். தனி மனிதன் தானே உற்பத்தி செய்தால், எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும், எங்கே நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பது அவனுக்குத் தெளிவாகத் தெரியும். மற்றவர் களுடன் சேர்ந்து பொதுவில் மற்றவர்களுக்காகப் பொருள்களை உற்பத்தி செய்யும்போது, உற்பத்தி எப்போது உரிய அளவைத் தாண்டிப் போகிறது என்பதை அவன் அறிவதற்கு வழியில்லை.[4]

[1] புதிய கொள்கைகள், தொகுதி II, பக்கம் 248. தொகுதி I, பக்கங்கள் 8–9.
[2] டிலா ரிச்சஸ்., தொகுதி II, பக்கம் 313.
[3] புதிய கொள்கைகள், தொகுதி II, பக்கம் 329.
[4] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 68.

எனவே, தனித்து வேலை செய்யும் மனிதனுக்குத் தான் எந்த அளவு சேர்த்துவைக்கலாம் என்பது தெரியும். சேர்த்து வைப்பதே பின்னர் ஓய்வில் அனுபவிப்பதற்குப் பயன்படுகிறது. தான் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு மேற்பட்டுச் சேர்த்துவைப்பது அறியாமை அல்லவா? சிக்கல் நிறைந்த இச் சமுதாயத்தில், உழைப்பவன் ஒருவன், உண்பவன் மற்றொருவன். ஆகவே, நேர்மையாகப் பெறவேண்டிய இயற்கையான பலனை மனிதன் பெற முடியாமல் தடுக்கப்படுகிறான். என்றாலும், தனி மனிதன் பயன்துய்ப்பதற்கு ஓர் அளவு இருப்பதைப் போலவே, சமுதாயம் பயன்துய்ப்பதற்கும் ஒரு வரையறை இருக்கிறது. ஆனால், இப்போது இந்த வரையறை தெளிவாகத் தெரியவில்லை. 'அதிக உற்பத்தி வேண்டும் என்று எழுத்தாளர்களும் அரசாங்கமும் ஊக்கிப்பதால்,[1] மனிதன் அதிக உற்பத்தியில் ஈடுபடுகிறான். உற்பத்திக்கு முன்னதாகத் தேவை தோன்றவேண்டும். உற்பத்தியாளர் தாம் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய முடியுமா என அரசாங்கம் கவனிக்கிறதேயன்றி உற்பத்தி செய்த அதிகப் பொருளுக்குத் தேவை இருக்குமா என்பதைக் கவனிப்பதில்லை.[2] உற்பத்தியாளரிடம் இருக்கும் மூலதனத்தின் அடிப்படையில் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பொருள்கள் உற்பத்தியை அதிகரிப்பது எளிது; சுருக்குவது கடினம். இதனாலேயே இத் தீய விளைவுகள் ஏற்படுகின்றன. இதன் காரணமாகவே, பின்னர் தொழில் கூட்டுறவுகள் ஏற்பட்டன. பல காரணங்களை முன்னிட்டு ஒரு நிறுவனத்தின் அளவைக் குறைப்பதும் கடினம். அந்த நிறுவனத்தை மூடிவிடுவது அதைவிட மிக்க கடினம்.[3] சிஸ்மாண்டி தம்மைச் சுற்றிலுமுள்ள உலகத்தைப் பார்க்கையில், உலகமெங்கும் உற்பத்தி அளவுக்குமேல் அதிகரித்திருப்பதால் முடங்கிக்கிடக்கும் மார்க்கெட்டையே கண்டார்; அதிக அளவு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைப் பயன்படுத்துவதற்கு ஆட்களைத்—துய்ப்போரைக் கண்டாரில்லை. தேவைக்கேற்ப உற்பத்தி செய்யாமல் கிடைக்கும் மூலதனத்துக்குக்கேற்ப உற்பத்தி செய்வதன் விளைவே இது[4]. உரிய அளவுக்குமேல் உற்பத்தி என்ற கொள்கை சிஸ்மாண்டியின் பங்கீட்டுக் கொள்கையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இதை என்னவென்று விளக்க முயல்வதைவிட இப்போதுள்ள தெளிவற்ற நிலையிலேயே விட்டுவிடுவது நலம். ஆண்டு உற்பத்தியையும், ஆண்டு வருமானத்தையும் சிஸ்மாண்டி வேறுபடுத்திக் காட்டுகிறார். இது நியாய வாதத்தை

[1] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 77–80.
[2] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 317.
[3] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 310.
[4] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 338.

அனுசரித்து இருப்பதாகத் தோன்றவில்லை. சிஸ்மாண்டியின் இந்தக் கொள்கைகள் காலங்கடந்த விந்தைக்குரிய அரும்பொருள் ஆகும். எனவே, நாம் அதைப் பொருட்காட்சி சாலையில் வைத் திருப்பதிலிருந்து ஆராய்ந்து பார்ப்பதற்காகக்கூட எடுக்கா மலிருப்பது சிறந்ததாகும்.[1] அவருடைய திறமை அவருடைய பொதுக் கருத்துகளை அடித்துக் கூறுவதில்தான் இருக்கிறது. தெளி வற்ற கருத்துகளை சிஸ்மாண்டி தெளிவுபடுத்துவதில் திறமை யைக் காட்டவில்லை. உற்பத்திக்கும் பயன்படுத்துதலுக்கும் ஒரு சமநிலை இருக்க வேண்டும். அளவுக்கு மீறிய செலவினாலும் அளவுக்குக் குறைந்த செலவாலும் நாடு கெடும்[2]. எனவே, இவ ருடையது துய்ப்புக் குறைவுக் கொள்கையேயாகும்.

இதற்கு வேண்டிய தூண்டுகோல் வேறிடத்திலிருந்து வந்திருக்க வேண்டும். அதனாலேயே இவரது பொருளாதார அடிப்படை, சிக்கல் நிறைந்ததாகவும், நிச்சய மற்றதாகவும் இருக்கிறது. ஒழுக்கப் பண்பாளர் என்ற கோணத்திலிருந்து இவர் மனிதனை ஆராய்கிறார்; இவருடைய கண்டனங்களில் சமய ஆர்வத்தைக் காண்கிறோம். மனிதன் இயல்பாகவே ஓய்வுகொள்ள விரும்புகிறான் என்பது சிஸ்மாண்டியின் கூற்று. எனவே, பொருளாதார வாழ்க்கை அமைப்பில் இந்த ஓய்வுக்கும் இடமிருக்க வேண்டும்[3]. 'உழைத்த மனிதன் ஓய்வெடுக்க வேண்டாவா' என்று பெரும்போக்காகக் கேட்கிறார்; ஆனால், அதிக உற்பத்தி என்ற உணர்ச்சி வேகத்தில் உழைப்பின் முடிவையும் வாழ்க்கையின் நோக்கத்தையும் நாம் மறந்துவிடு கிறோம் என்று கூறுகிறார்.

பொருட் செல்வம் சேர்ப்பதால் மட்டும் பயனில்லை. எல்லோ ரும் இன்புற்றிருப்பதற்காகச் செல்வத்தைக் கட்டுப்படுத்தவும் நெறிமுறைக்குட்படுத்தவும் வேண்டும். அதுவே முக்கியம் என இவர் கூறுவதால், வரையறையற்ற போட்டி இருப்பதே பெரு நன்மை என்ற வாதம் மறைந்துபோகிறது. அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையால் அவதியே அதிகப்படுகின்றது. எனவே பெரிய அளவில் அரசாங்கத் தலையீடு அவசியம்[4]. வலியாரிடமிருந்து எளியாரைக் கட்டிக்காப்பதும், ஆதரவற்ற

[1] சிஸ்மாண்டியைப் புரிந்துகொள்ள விரும்பாதவர்கள் 'புதிய கொள்கைகள்' புத்தகம் II, அதிகாரங்கள் 5, 6 ஆகியவற்றைப் படிக்க வேண்டும். 5-வது அதி காரம், 'தேசிய வருமானத்தைப் பலவகைக் குடிமக்களிடையே பங்கிடுதல்' என் பதாகும்; 6-வது அதிகாரம், 'பயன்படுத்துவதுமூலம் உற்பத்தியும், வருமானத்தினால் செலவும் நிர்ணயிக்கப்படுதல்' என்பதாகும்.

[2] அதே ஏடு, தொகுதி I, பக்கங்கள் 120, 122.

[3] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 78.

[4] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 54.

வர்களைப் பாதுகாப்பதும், ஒவ்வொருவரின் தற்கால நலனுக்குப் பதிலாக அனைவரின் நிலையான நலனுக்கு உறுதுணையாக இருப்பதும் அரசாங்கத்தின் கடமைகளாகும் (அவர் கூறுவது போல் ஆடம் ஸ்மித் காலத்திலிருந்து). அனுபவத்தின்மூலம் இத்தகைய அரசாங்கம் இருக்கவேண்டும் என்பது வெள்ளிடை மலையாகியுள்ளது. 'தங்களுக்குப் பயன் விளைக்காத செல்வ அபிவிருத்திக்கு மனிதர் பலியாவதைத் தடுக்க'[1] அரசாங்கம் அவசியமே.

எனவே, தனிமனித நலனே பொதுநலன். அனைவரின் நலனும் ஒன்றே என்ற கொள்கையும், எல்லாவற்றையும் மறைவான, எது என்று அறிய முடியாத, அவன் இயக்கி வைக்கிறான் என்ற கொள்கையும் வளர்ச்சிபெற்று சிஸ்மாண்டியால் சின்னபின்னமாகிறது. இதை அவன் வெளிப்படையாகக் கூறிவிட்டாலும் பேரம் பேசும் சக்தி மக்களிடையே சமமாக இராததால் அரசாங்கத்தின் 'தலையிடாக்கொள்கை' பயனற்றுப் போகிறது என்பதை அவர் உணர்ந்துள்ளார். ஆறலை கள்வன் தன் சொந்த நலனை முன்னிட்டுக் கொள்ளையடிக்கலாம்; இதேபோல் பொருளைப் பறிகொடுப்பவனும் தன் உயிர் பிழைக்க விரும்பும் தன் சொந்த நலனை முன்னிட்டு எதிர்த்துப் போராடாமலும் இருக்கலாம். இவ்வாறு கொலையுண்டு போகாமல் பிழைத்துக்கொள்ளலாம் என்பதாலும், பொருள் போனால் போகட்டும் என்பதாலும் எதிர்த்துப் போராடாமல் வாளா இருக்கவே செய்வான்.[2] வன்செயல்கள் காணப்படாவிட்டாலும் சமூக நிறுவனங்கள் இச் செயல்களுக்குத் தடை ஏற்படுத்துவதாக சிஸ்மாண்டி வாதிக்கிறார். இதனால் ஏழைத் தொழிலாளி தத்தளித்துத் தவிக்க வேண்டி வருகிறது; மோசமான நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேலைசெய்யவேண்டியிருக்கிறது. இந்த நிபந்தனைகளுக்கு உட்படாமலிருந்தால், பசியின் கொடுமையால் துயருறவேண்டி வருகிறது. தொழிலாளி இந்த மோசமான நிலையில் இருப்பதால், அவனைக் கைகொடுத்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புச் சமுதாயத்தைச் சேர்ந்ததே.[3] 'நடக்கிறபடி நடக்கட்டும்' என்று விட்டுவிட்டால், எளியார் என்றும் துன்புறுவர்; வலியார் என்றும் மேலோங்கி நிற்பர். அடங்கிப் போவதே ஏழைக்கு நன்மையாக இருக்குமாதலால் அதீதி தலைவிரித்தாடும்.[4]

[1] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 55.
[2] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 197.
[3] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 197.
[4] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 379.

இப்போது அரசாங்க அலுவல்களைப் பொதுவாகக் காண்போம். தனியார் ஒவ்வொருவரும், தம் சொந்த நலனைக் கருதி இயந்திரத்தின் வேகத்தை அதிகரிக்கவே முயல்கிறார். இதன் வேகத்தை மட்டுப்படுத்தி, இதன் இயக்கத்தை முறைப்படுத்துவதே அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கவேண்டும்.[1] மற்றப் பொருளாதார வல்லுநர்கள் தொழிலியல் ஆர்வத்தைப் போற்றிக் கடும் போட்டியும், இயந்திரத்தின் வேகமும் அதிகரிக்கவேண்டும் எனக் கூறும்போது, இந்த வேகத்தைக் கண்டு சிஸ்மாண்டி அச்சப்படுகிறார். அவர் நண்பர்களை நோக்கிக் கூறுவதாவது, 'பொருளாதாரத் தேர் நிலை தவறிக் கடுவேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது. இது நம்மைப் படுகுழியில் ஆழ்த்திவிடும்.'[2]

வேகத்தை மட்டுப்படுத்தவேண்டும் எனச் சொல்வது எளிது; ஆனால், செய்வது எப்படி? சிஸ்மாண்டியின் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ள புதிய கண்டுபிடிப்புகளையும், இயந்திரம் பற்றிய கொள்கையையும் உதாரணமாக எடுத்துக்கொள்வோம். முக்கியமாகப் புதிய கண்டுபிடிப்புகளை சிஸ்மாண்டி அறவே வெறுக்கிறார். இவற்றால் பொதுவாகத் தீய விளைவுகளே ஏற்படுகின்றன. இதனால் மனிதன் தன் புத்திசாலித்தனத்தை இழக்கின்றான்; கட்டுடல், செம்மையான உடல்நிலை, பீடுநடை எல்லாம் கெட்டு, அது செல்வத்தை உற்பத்தி செய்வதற்கு அதிக சக்தியைப் பெறத்தான் பயன்படுகிறது. பால்மணம் மாறுப் பச்சிளங் குழந்தைகள் வாழ்வின்பத்தைத் துய்ப்பதற்கு முன்னரேயே கைத் தொழிலில் ஈடுபடமுடியும் என்பது உண்மைதான். ஆனால், இதற்காக நாம் எதை வேண்டுமானாலும் இழந்துவிட முடியுமா ? புதிய கண்டுபிடிப்புகள்மூலம் தேவைப்படும் தொழிலாளர் எண்ணிக்கை குறைகிறது. இதனால், நாட்டு நிலைமை மோசமாகும். வெளிநாட்டு வணிகத்தின் பயனும் இந்த நிலை ஓரளவு மறைக்கப்படும் என்பது உண்மைதான். பொருள் உற்பத்தி செய்யப்படும் நாட்டில் இதனால் வளங்கொழிக்கும் என்றாலும், இதனால் வேறிடத்தில் பேரழிவு நிச்சயம் ஏற்படும். எனவே, ஆங்கில நாட்டுத் தயாரிப்பாளர்களைப் பொறுத்தவரை 'துன்பமெல்லாம் ஐரோப்பிய உற்பத்தியாளர்களைச் சார்ந்துள்ளது;[3] அவதி ஐரோப்பியனுக்கு ; ஆனந்தம் ஆங்கிலேயனுக்கு'[4] என்றாலும், எல்லாக் கண்டுபிடிப்புகளையும் கண்டிக்க வேண்டியதில்லை.

[1] அதே ஏடு, தொகுதி I, பக்கங்கள் 381–385.
[2] அரசியல் பொருளாதாரக் கொள்கைகள், தொகுதி II, பக்கம் 211.
[3] புதிய கொள்கைகள், தொகுதி I, பக்கம்-366.
[4] அதே ஏடு, தொகுதி I, பக்கம்-322.

பூர்த்தி செய்யப்படாத தேவை ஏற்கெனவே இருந்தால், புதிய கண்டுபிடிப்புகளால் தீமை எதுவும் ஏற்படாது என்பதே சிஸ்மாண்டியின் கொள்கை. 'உற்பத்தி அளவைவிடத் தேவையின் அளவு அதிகமாயிருக்கும்போது, புதிய கண்டுபிடிப்பு சமூக நன்மையில் முடியும்; ஏனெனில், இப் புதிய கண்டுபிடிப்பு இருக்கும் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு வழிகோலுகிறது. இதற்கு மாருகத் தேவைக்குப் போதுமான அளவு உற்பத்தி இருக்கும்போது, புதிய கண்டுபிடிப்பு சமுதாயத்துக்குச் சாபக் கேடாகவே இருக்கும். இதனுல் பொருள்களின் விலே ஓரளவு குறையும் என்ற நன்மையைத் தவிர, பயன்படுத்துவோருக்கு வேறு நன்மை எதுவும் ஏற்பட்டுவிடாது. ஆனுல், இப்புதிய கண்டுபிடிப்பு உற்பத்தியாளர்களின் வாழ்வுக்கே உலேவைத்து விடுகிறது.'[1] முதலில் விற்பனேச் சந்தை விரிவடையவேண்டும். பொருள்கள் விற்பனேயாவதற்குரிய சந்தை விரிவடைந்தால், புதிய கண்டுபிடிப்புகளுக்கு இடம் உண்டு. இந்த வாதத்தை ஓரளவு திருத்தியமைத்து சிஸ்மாண்டி கூறுவதாவது: 'புதிய கண்டுபிடிப்பால் விற்பனேச் சந்தை விரிவடைந்து அப்பொருள் ஏழை வகுப்பினருக்குக் கிடைப்பதாக இருப்பதால், அக் கண்டுபிடிப்புப் பயனுள்ளதுதான். தேவைகள் அனேத்தும் ஏற்கெனவே பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்னும் காரணம் பற்றியோ, விலே எவ்வளவு குறைந்தபோதிலும் ஒருபோதும் ஏழை மக்கள் அப் பொருளே வாங்கமாட்டார்கள் என்ற காரணம் பற்றியோ விற்பனேச் சந்தையை விரிவுபடுத்த முடியாவிட்டால், அப் புதிய கண்டுபிடிப்பால் சமுதாயத்துக்குப் பெருநஷ்டமே ஏற்படும்; மனித இனத்துக்கே இப் புதிய கண்டுபிடிப்பு பெருஞ் சாபக்கேடாக விளங்கும். ஏனெனில், இத்தகைய புதிய கண்டு பிடிப்பால் ஒருசில தயாரிப்பாளர்களுக்கே நன்மை ஏற்படும்; மற்றவர்களுக்கெல்லாம் இதனுல் தீமை ஏற்படும். பயனடையும் நாடுகள் சில; பாழடையும் நாடுகள் பல.[2] பழைமை போற்றியாக சிஸ்மாண்டி உருவெடுக்கும்போதுகூட, புதிய தேவை ஏற்பட்டதால்தான் மனிதர்கள் அதற்காகப் புதிய கண்டுபிடிப்புகள் குறித்து யோசித்தனர் என பழைமையைப் போற்றுகிருர் சிஸ்மாண்டி. இத்தகைய காலமல்லவோ பொன்னென பழங்கால மெனப் பெருமை கொள்கிருர் சிஸ்மாண்டி.[3]

எனவே, புதிய கண்டுபிடிப்பின் பெருங்கேட்டிலிருந்து சமுதாயத்தையும் பாட்டாளியையும் பாதுகாப்பது எப்படி

[1] அதே ஏடு, தொகுதி II, பக்கம் 317.
[2] அதே ஏடு, தொகுதி II, பக்கம் 321.
[3] நிறன் சோதனேகள் I, பக்கம் 34.

என்பதை இப்போது ஆராய்வோம். இதற்கு வித்தியாசமான நூதனமான ஆலோசனை கூறுகிறார் சிஸ்மாண்டி. மற்ற நாடுகள் புதிய கண்டுபிடிப்பைப் பயன்படுத்துவதாயிருந்தால், ஒரு நாட்டில் மட்டும் அதற்குத் தடை விதித்துப் பயனில்லை என்பதை அவர் உணர்ந்துள்ளார்.

எனவே, புதிய கண்டுபிடிப்பாளருக்குக் கொடுக்கப்படும் உரிமைகளைப் பறிப்பதே நாம் எடுக்கக்கூடிய பாதுகாப்பு நடவடிக்கையாகுமென சிஸ்மாண்டி கூறுகிறார். எல்லாப் புதிய கண்டுபிடிப்புகளும் உடனடியாக அனைவருக்கும் அறிவிக்கப் பட்டு எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யப்பட்டால், 'புதி தாகக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற எண்ணம் தலைதூக்காது; உற்சாகம் குன்றிவிடும்.'[1]

மக்கள்தொகைப் பிரச்சினையை பொருளாதார வல்லுநர் களுக்குத் தம் பரிசாக வழங்கியுள்ளார் மால்தஸ். இப் பிரச் சினையில் சிஸ்மாண்டி தனிக் கருத்துள்ளவராகத் திகழ்கிறார். வருமானத்திற்கேற்பவே மக்கள்தொகை அமையும் என சிஸ்மாண்டி கருதுகிறார். மால்தஸ் கூறியதற்கு மாறுக, உணவுத் தேவை வரையறையை மக்கள்தொகை அடையவுமில்லை, இனி அடையப்போவதுமில்லை. தேவையான உணவு வாங்குவது இயலாததாகி வருவதால் மக்கள்தொகை அதிகரிப்புத் தடைப் பட்டுவிடுகிறது; வேண்டிய உணவை உற்பத்தி செய்வதனின் றும் அனுமதி மறுக்கப்படுவதால் மக்கள்தொகை அதிகரிப்பு நின்றுவிடுகிறது. எனவே, இத் தடை உணவுத் தேவையினால் ஏற்படுவதல்ல. மனிதன் 'உறுதி பூணுவதால்' இத்தடை ஏற்படு கிறது. நிலக்கிழார் தம் இசைவு அளிக்க வருவாய் கேட்பதால், வருவாய் வாங்காமல் மற்றவர்களை அதில் பாடுபட அனுமதிக்க மறுப்பதால் இத் தடை ஏற்படுகிறது.[2]

ஆனால், இது மால்தஸின் கொள்கைக்கு முரணானது எனக் கூறுவதற்கில்லை. என்றாலும், சிஸ்மாண்டி மனித விருப்பம் என்பதை விவரிக்கையில் மால்தஸின் கொள்கையிலிருந்து பெரிதும் மாறுபடுகிறார்: மக்கள் தொகை, பாட்டாளிகள் எத்தனை பேர் தேவை என்பதன் அடிப்படையிலேயே இருக்கும்.[3] வேலையும், நிச்சயமான வருவாயும் உறுதி என்றால், மக்கள் மணம்

[1] புதிய கொள்கைகள், தொகுதி-II, பக்கங்கள் 331-333.
[2] அதே ஏடு, தொகுதி-II, பக்கங்கள் 267-270.
[3] மால்தஸ் கூறுவதையே இவரும் கூறியுள்ளது சுவையாகவுள்ளது. அதே ஏடு, தொகுதி-II, பக்கம்-284.

புரிந்துகொண்டு மக்களைப் பெறுமளவு பெறவே செய்வர். பாட்டாளிக்கு வருவாய் நிச்சயம் கிடைக்கும் என்ற உறுதியின்மையே புதிய சமுதாயத்தின் கொடிய அமிசம். இந்த நிச்சயமற்ற நிலைமையால் பாட்டாளி ஏமாற்றப்படுகிறான். அவனுக்குப் பிறக்கும் குழந்தைகள் வாழ்க்கை வசதிகள் அற்றுத் திண்டாடித் தெருவில் நிற்கவேண்டிவருகிறது. சிஸ்மாண்டி நிச்சயமாக நம்புவதாவது, குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை ஏற்படுகிற வரையில், பாட்டாளி மணம் புரிந்து கொள்ளமாட்டான். தன் வருமானத்திற்கேற்பவே தன் குடும்ப அளவை நிருணயித்துக்கொள்வான். வேலை நீடித்திருக்கும்; வருவாய் நிச்சயம் என்ற அனுமானத்தின்மேலேயே இவை யெல்லாம் நடக்கின்றன. ஆனால், வேலை நீடித்திருக்கும் என்ற நிலைமாறிப் பாட்டாளிகளுக்குப் பதிலாக இயந்திரங்களே வேலை செய்யத் தொடங்கிவிட்டால், நிலைமை மிக மோசமாகிவிடும். தமக்கு எவ்வளவு வருமானம் வரும் என்பது பாட்டாளிகளுக்குத் தெரியாமல் போகும்; அவர்களுக்குத் தெரியாமலேயே மற்றவர்கள் அதை மாற்றிவிடமுடியும். தொழிலதிபரேகூட இதைத் தவருகக் கணக்கிட்டாலும் கணக்கிடலாம். எனவே, அன்றுடங் காய்ச்சி என்ற நிலை ஏற்பட்டு, வெந்ததைத் தின்று வேளை வந்த போது சாவது என்ற நிலைமை பாட்டாளிக்கு வந்தபின், பாட்டாளி எதிலும் அக்கறையற்றுப் போகிறான். 'தான் எப்படியோ தன் மகனும் அப்படியே இருந்துவிட்டுப்போகட்டும் என்று விட்டு விடுகிறான்.'[1] மேலும், தன் குழந்தைகள் வறியர்களாக இருப்பதால் அவர்கள் மற்றவர்களின் இரக்கத்திற்குப் பாத்திரமாகி, அவ்வப் போது கிடைக்கும் கருணைப் பிச்சையால் ஏதாவது சம்பாதிக்க மாட்டார்களா; ஏழு வயதிலிருந்தே ஏதாவது செய்து ஏதாவது, கூலி பெறமாட்டார்களா என்று எண்ணத் தலைப்படுகிறான் பாட்டாளி. எனவே, திருமணம் புரிவதற்குள்ள தடை நீங்கிப் போகிறது. குழந்தைகள் வதவதவெனப் பிறக்கின்றன; இவர்களுடைய நல்வாழ்வுக்குச் சமுதாயம் எந்த ஏற்பாடும் செய்திருக்கவில்லை.[2] எனவே, வேலைத் தேவை அவ்வளவு முக்கிய மல்ல. சரிவரத் தொடர்ந்து வேலை கிடைக்குமோ என்பதே முக்கியம்: ஏனெனில், சரிவரத் தொடர்ந்து வேலை கிடைக்காமல், விட்டுவிட்டு வேலை கிடைத்தால், அதனால் பாட்டாளி நிலை படுமோசமாகிறது. வேலை இருக்கும் என்ற நம்பிக்கையால் பாட்டாளியின் குடும்பம் பெருகுவதால், வேலை தொடர்ந்து இல்லாதபோது பாட்டாளியின் குடும்பத்தினர் பசி, பிணி,

[1] அதே ஏடு, தொகுதி II, பக்கம் 259.
[2] அதே ஏடு, தொகுதி II, பக்கம் 263.

படுதுயர், சாக்காடு ஆகியவற்றிலேயே உழலவேண்டியிருக்கிறது.[1]

எனவே, அடியைப் பிடியடா என்று மீண்டும் பழைய நிலைக்கே திரும்புகிறோம். நிச்சயமற்ற நிலையாலேயே மக்கள் தொகை மிக அதிகமாகிறது. இந்த நிச்சயமற்ற நிலை அதிக உற்பத்தியாலும், தொழிற்புரட்சி சகாப்தத்தின் பயங்கரப் புதிய கண்டுபிடிப்புகளாலும் ஏற்பட்டுள்ளது. இதற்கு சிஸ்மாண்டி கூறும் பரிகாரம் நடைமுறைச் சாத்தியம் அல்ல என்றாலும், அது சுவையானதாக இருக்கிறது. திருமணம் செய்துகொண்டவர்கள் ஆஸ்திக்கு ஓர் ஆணும், ஆசைக்கொரு பெண்ணும் பெற்றுவிட்ட பிறகு மீண்டும் குழந்தை பெறவேண்டும் என்ற நினைவே யற்றவர்களாக வானப்பிரஸ்த வாழ்க்கையில் ஈடுபடவேண்டும். இதுவே இந்நிலைக்கு ஒரே பரிகாரம். இதற்குமேல் குழந்தைகள் பெற்றால், அது அநீதியாகும், கொடூரமாகும். இப்படி அதிகம் பெற்றால் மற்றவர்கள் இளமையில் திருமணம் செய்துகொள்வது தடைபடும். ஆனால், அவர்களுக்கு ஆனந்தம் இருக்கிறது. வயதான நிலையில் குழைந்தைகட்கு வேண்டிய வசதி இருக்காது.[2] இந்த அளவுக்குமேல் சிஸ்மாண்டி சுட்டிக்காட்டும் பரிகாரம் மிகப் பயங்கரமாயிருக்கிறது.[3] ஏழைகள் திருமணத்திற்குத் தடை விதிக்கத் தயாராயிருக்கிறார் சிஸ்மாண்டி. சில உறுதிமொழிகள் கொடுத்தால்தான் ஏழைகள் திருமணம் செய்துகொள்ளலாம். கிராமப் பகுதியில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களைப் பொறுத்தவரையில் பாட்டாளியையும் நிலத்தையும் இணைத்து வைப்பதே அரசாங்கத்தின் கடமை. அதுவே அதன் நோக்கமாக இருக்கவேண்டும். எனவே, கிராமப்பகுதியில் சொத்துள்ளவர்களே திருமணம் செய்துகொள்ளலாம். இதுவே சிஸ்மாண்டி கூறும் ஆலோசனையின் விளைவாக இருக்கும். நகரப்பகுதிகளில் இந்த வேலை அவ்வளவு எளிதல்ல என்றாலும் நோக்கம் என்னவோ அதுவேதான். பாட்டாளியின் நிச்சயமற்ற நிலை மறைந்தொழிய வேண்டும்; வேலை நிச்சயம், வருவாய் நிச்சயம் என்ற நிலை ஏற்படவேண்டும். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் ஓரளவேனும் உயரவேண்டும். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்தால்தான் அவர்கள் திருமணம் செய்துகொள்ளலாம். வேலை தொடர்ந்திருக்கும் என்று முதலாளி உறுதி கூறினால்தான் இந்த நிலை ஏற்படும். எனவே, பாட்டாளியின் திருமணம் முதலாளியின் கையில் என்ற அவலநிலை ஏற்பட்டு விடுகிறது. முதலாளி

[1] அதே ஏடு, தொகுதி-II, பக்கம் 285.
[2] அதே ஏடு, தொகுதி II, பக்கம் 295.
[3] முந்திய பதிப்புக்களில் இதை இவர் மேலும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

நீண்டத்தால் பாட்டாளி திருமணம் செய்துகொள்வதைத் தடுத்து விடமுடியும். பாட்டாளி அத் தொழிலுக்கு நிலையான சுமையாகி விடுகிறான்.[1]

சுருங்கக் கூறின், சிஸ்மாண்டி தம் எதிர்ப்புக் குரலைக் காட்டியுள்ளார். இதில்தான் இவர் முக்கியமானவராகத் திகழ்கின்றார். 'கொள்கை' என்ற அளவில் இவர் எதையும் உலகுக்கு அளிக்கவில்லை. அதிகப் பொருள் உற்பத்தி காரணமாகவே மார்க்கெட்டில் மந்தநிலை ஏற்பட்டு, வணிகம் நிலை கெட்டுக் கிடக்கிறது என்ற இவருடைய வாதம் சரியல்ல. ஒரு சில பொருள்கள் விஷயத்தில் அதிக உற்பத்தி இருந்தபோதிலும், எல்லாப் பொருள்களும் ஒரே சமயத்தில் அதிக அளவு உற்பத்தி செய்யப்படும் என்பதை நினைத்துப் பார்க்கவும் முடியாது.[2] அதிக உற்பத்தி என்பது வீதாசாரமற்ற உற்பத்தி என்றே பொருள்படும்.

மற்றப் பொருள்களின் உற்பத்தியை உத்தேசித்துப் பார்க்கும் போது, இப்பொருளின் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. இங்கு அதிக உற்பத்தி என்பது வேறு பொருள்களின் குறைந்த உற்பத்தி என்றே பொருள். இயந்திர அபிவிருத்திபற்றிய கொள்கையிலும், பொருள் உற்பத்தியை அதிகரிப்பதற்குமுன் அதற்குத் தேவை இருக்கவேண்டும் என வற்புறுத்துவதிலும், சிஸ்மாண்டி பொருளாதார வாழ்க்கையின் பல உண்மை அமிசங்களை ஏறெடுத்துப் பார்க்கவும் மறுக்கிறார். வழங்கல் நிலைமைகளில் ஏற்படும் மாறுதல்கள் தேவையைப் பாதிக்கும் என்பதை சிஸ்மாண்டி அசட்டை செய்கிறார். சிஸ்மாண்டியின் நூதனக்கொள்கை எதுவும் நீடித்து நிற்கவில்லை; காலவெள்ளத்தில் எதிர்நீச்சுப் போட்டி தலைதூக்கி நிற்கவில்லை. இதனாலேயே இவரைப் புறக்கணிக்கலாம் எனவும் கொள்வதற்கில்லை. எதிர்ப்பு அவசியம் என ஏற்பட்ட காலத்தில் இவர் தம் எதிர்ப்புக் குரலை எழுப்பினார். செல்வம் மனிதனுக்காக இருக்கிறதேயொழிய, மனிதன் செல்வத்திற்காக இல்லை யென்ற உண்மையை இவர் தெளிவுபடுத்தினார்.[3] நிதிக் கொள்கை அக்காலத்தில் மனிதன் செல்வத்திற்காக இருக்கிறான் என்ற மயக்க நிலையை ஏற்படுத்தியிருந்தது. தொழில் புரட்சியின் இருண்ட நாட்களில் உலகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்று எதிர்ப்பு முரசறைந்தவர் சிஸ்மாண்டியே. பாட்டாளிக்கு வேலை உறுதியும் அந்தஸ்தும் வேண்டும் என சிஸ்மாண்டி வலியுறுத்

[1] அதே ஏடு, தொகுதி II, பக்கங்கள் 339, 363.
[2] மில் எழுதிய அரசியல் பொருளாதாரக் கொள்கைகள், புத்தகம் III, அதிகாரம் 14-ஐப் பார்க்கவும்.
[3] திறமைச் சோதனைகள், தொகுதி I, பக்கம் 62-ஐக் காண்க.

தினர். ஆனால் எக்குறிக்கோளையும் அடையவில்லை. இவர் சமதர்மக் கொள்கைகளைப் பரப்பினர் என்றாலும், சமதர்மக் குறிக்கோளை அடைந்துவிட்டதாகக் கூறமுடியாது. பிற்கால சமதர்மவாதிகள் இவரை மதித்தனர். இவருடைய கருத்துகளுக்கு ஆதரவு நல்கினர். பிற்கால சமதர்மவாதிகளிடம் இவருக்குச் செல்வாக்கு இருந்தது என்பதையும் புறக்கணிப்பதற்கில்லை. ஆனால், பிரச்சினையைக் கண்டு இவர் திகைத்துத் தடுமாறி நின்றாரேயன்றி, அப்பிரச்சினைக்குத் தீர்வு எதையும் காணவில்லை. இவர் ஒழுக்கநல வாதியே ஒழியப் பொருளாதார வல்லுநரல்லர்.[1] 'எதுவும் இயந்திர கதியில் இருக்கவேண்டும்; மேலும் பல இயந்திரங்களைப் படைக்கும் இயந்திரங்கள் வேண்டும். வாழ்வில் நின்று நிதானிப்பதற்கும், ஓய்வு கொள்ளவும் நேரமில்லை' என்ற கருத்து முட்டாள்தனமானது என்பதை இக் காலப் புலவர்கள் எடுத்துக் கூறுவதையே சிஸ்மாண்டியும் முன்னரே வலியுறுத்தியுள்ளார். உண்மையின் அடிப்படையில் சிஸ்மாண்டி கொதித்தெழுந்தார். இவருடைய ஆவேசம் நியாயமானதே. இவ்வாறு கனன்றெழுந்த தீர்க்கதரிசி பயனுள்ள காரியத்தையே செய்துள்ளார். ஆத்திரத்தில் ஓரளவு தவறான வாதத்தைப் பயன்படுத்துகிறார் என்றாலும், அவரால் பயன் விளையவில்லை எனக் கூறிவிட முடியாது.

[1] புதிய கொள்கைகள் என்ற புத்தகத்தை முடிக்கும்போது அதன் இறுதியில் இவர் எழுதியுள்ள கருத்தைப் பலரும் மேற்கோள் காட்டுகின்றனர்.

8. முல்லர், லிஸ்ட், வான்துனன்

முல்லர்

இந்த அத்தியாயத்தில் குறிப்பிடுகிற ஜெர்மன் எழுத்தாளர்கள் மூவரில் ஆடம் முல்லரை[1] (Adam Muller) ஓரளவே இங்கிலாந்து நாட்டவர் அறிவர். அவரது நிலை விசித்திரமான விதிக்கு உட்பட்டதாகும். அவர் முழுவதும் மறக்கப்படவில்லை என்றாலும், சமீபகாலம் வரையில் அலட்சியத்திற்கு உட்படுத்தப் பட்டார். சிறிது காலத்திற்கு முன் ஜெர்மனியிலுள்ள புதிய ரொமான்டிக் கருத்துப் பள்ளி, மறைந்திருந்த அவர் கருத்துகளை வெளிக்கொணர்ந்து நம்பிக்கையூட்டும் வகையில் மறுமலர்ச்சி அளித்து உலகத்தின் முன் நிறுத்தியது. ஏனையோரைவிட முல்லர்தாம் மிகச் சிறந்த பொருளாதார நிபுணர் எனவும், அல்லது அவர் தம் காலத்திலாவது மிகப்பெரிய பொருளாதார அறிஞ ரென்றும் டாக்டர் ஸ்பான் நம்மை நம்பவைக்க முற்படுகிறார். ரிகார்டோவும் மால்தசும் அவர் காலத்தவர்கள்தாம் என்பதால் இப் புகழ்மொழி ஓரளவு அடக்கத்தோடு சொல்லப்பட்டிருந்தாலும் இரங்கத்தக்கதாகும். வேறு சிலருக்கு முல்லர் பொருளாதார நிபுணர் அல்லவென்று தோன்றினாலும், சொற்சிலம்பம் ஆடும் ஒருவர் என்றுவது தோன்றக்கூடும். இந்தக் கருத்து எந்த அளவு ஒப்புக்கொள்ளக்கூடியது என்பதில் ஐயம் எழுந்தாலும், லிஸ்ட் கூறிய கருத்துகளோடு முல்லர் தம்மை இணைத்துக்

[1] 1779-ல் பெர்லினில் (Berlin) பிறந்தார்; கோட்டிங்ஜனிலும் பெர்லினிலும் கல்வி கற்றார்; 1805-ல் ரோமன் கத்தோலிக்க சர்ச்சில் சேர்ந்தார். பின்னர் ஆஸ்திரிய நாட்டு அரசாங்கப் பணியை மேற்கொண்டார். கடைசியாக வியன்னாவில் அரசாங்க நிதி இலாகா ஆலோசகர் ஆனார். இவர் இயற்றிய முக்கிய நூல்கள், 'Elemente der Staatskunst' (1809) and the 'Versuche einer neuen Theorie des Geldes' (1816), but there is in addition a good deal of miscellaneous writing ஆகும். இதைத்தவிர இவர் பல்வேறு நல்ல எழுத்தோவியங்களும் வரைந்துள்ளார்.

கூறிக்கொள்வதால் அவரை ஒரு கருத்துப் பள்ளியினரோடு இணைத்துத் திறனாய்வு காண்பதில் தவறில்லை.

முல்லர் முதலாவதாகத் தம்மை ஓர் அரசியல் எழுத்தாள ராகவே கருதினார். இரண்டாவதாகத்தான் பொருளாதாரக் கோட் பாட்டினை விளக்கும் வல்லுநராக எண்ணினார். அவருடைய அரசியல் கருத்துகளில் அரசியலும் பொருளாதாரமும் ஒன்றோ டொன்று பிரிக்க முடியாதவையாகப் பின்னிக்கிடந்தன. அவரு டைய மனமோ பொருளாதாரத்திற்குத் தொடர்பற்ற செய்திகளில் தான் அதிகம் தோய்ந்திருந்ததென்று சொல்லவேண்டும். ஆடம் ஸ்மித்தின் சில குறிப்பிட்ட கொள்கைகளுக்கு எதிரான எண்ணம் தான் அவரை அவ்வாறு கருதச் செய்தது. தனிப்பட்டவரின் உள்ளுணர்ச்சி, தனி மனிதனின் உரிமை நடவடிக்கைகளின் மீதே ஸ்மித் தம் கருத்துகளை நிறுவினர். பின் வந்த திறனாய்வுக் குழுவினர் குறிப்பிட்டதுபோல் இந்த ஒரு சார்புக் கருத் தையே அவர் வலியுறுத்தவில்லை. ஆடம் ஸ்மித் மீது எவ்விதக் காழ்ப்பும் கொள்ளாமல் பார்ப்போமானால், தனியார் உடைமையின் மொத்தமே நாட்டுச் செல்வம் என்பதும், தனியார்கள் ஒன்றுகக் கலந்த அமைப்பையே அவர் அவ்வாறு குறிப்பிட்டாரென்பதும் தெரியவரும். மிக உயர்ந்த நல்லெண்ணத்தின்பாற்பட்ட தன்ன லத்தில் அலைமோதும் தனி மனிதனின் இதய ஓசையே பொரு ளாதாரப் போக்காகும். அமைதியாக நடைபெறும் செயலைப் போல் யாரும் அறியாமல் உருவான முடிவுப்பொருள் என்று பொது நலனைச் சுருக்கமாக்கி, அதில் பொருளாதாரம் கண்டார் ஆடம் ஸ்மித். ஆடம் முல்லருக்கு நாட்டு ஆட்சிதான் முழு முதற் பொருளாகும். தனி மனிதனுக்கு ஆட்சியின் தொடர்பால் தான் மதிப்பு உண்டாகிறது. ஆகவே, முல்லரின் பொதுவான அரசியல் கோட்பாட்டை நோக்குவதன்மூலம் அவரது பொரு ளாதாரக் கொள்கையை அறிவது அவசியமாகும்.

முல்லரின் எழுத்தோவியங்களில் இரு பெரும் கருத்தோட்டங் களைக் காணலாம். முதற்கண், ரொமான்டிக் இயக்கத்தில் இரண் டறக் கலந்து, அதன் அரசியல் பொருளாதாரக் கோட்பாட்டின் தன்னிகரற்ற பிரதிநிதியாய் விளங்கினர். ரொமான்டிக் இயக் கத்தின் தெளிவான நோக்கம், ஜெர்மனியில் பரவியிருந்த விதத்தைப் பார்க்கும்போது, அந்த இயக்கத்தின் நோக்கத்தை ஆராய்வதைவிட ஆராயாமல் விடுவதே குழப்பத்தைக் குறைப்ப தாகும். ரொமான்டிக் குழுவினர் ஒரு கருத்துடையவர்கள் என்று கொண்டால், அவர்கள் முடிவற்றதும், இன்ன தன்மை என்று அறியவொண்ணாததும், காணாததுமான ஒன்றை

அடையப் போராடினர் என்றே கூறுதல்வேண்டும். அவர்கள் வாழ்க்கையின் முடிவைத் தேடி ஓடியதால் இவ்வுலக நிகழ்ச்சி களை அறிய விரும்பியவர்களுக்கு அவர்களின் கருத்துப் புரியாத புதிராகவே நின்றது. முல்லர் அடிக்கடி புகழ்பாடுகிற 'பர்க்' (Burke) அவர் கொண்ட கருத்துகளுக்கு முக்கியக் காரணமாகத் திகழ்கிறார்.

முல்லர் கொள்கையின் அடிப்படைக் கருத்து அரிஸ்டாட்டில் கூறிய ஆட்சி என்ற ஒன்றில்லாமல் மனிதனைக் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது என்பதாகும். ஒவ்வொரு தனி மனிதனும் நாகரிக வாழ்வின் சின்னமான ஆட்சி அமைப்பில் நடு நாயகமாகவும், எல்லாக் கோணங்களிலும் ஆட்சி அமைப் போடும் பின்னிக் கிடக்கிறான். மதிக்கத்தக்க கடந்த காலமும், கவனிக்கத்தக்க எதிர்காலமும் பின்னிப் பிணைந்துள்ள ஆட்சி அமைப்புக்குரிய காலக்கட்டத்தின் நடுவில் ஒவ்வொரு மனிதனும் உயிர் வாழ்கிறான். ஆகவே, நாடு என்பது, அதாவது ஆட்சி என்பது சமுதாய வாழ்வில் சில முடிவுகளையும் இலட்சியங்களையும் அடைவதற்காக ஏற்படுத்தப்பட்ட செயற்கை அமைப்பு அல்ல; சமுதாய வாழ்க்கையே நாட்டின் ஆட்சி முறையாகப் பரிணமிக் கிறது. முல்லர் அடிக்கடி கூறுவதுபோல் அது சாதாரண அடிப் படை மனித சமுதாயத் தேவை மட்டுமல்ல; அது மிக உயர்ந்த சமுதாயத் தேவையுமாகும்.[1]

நாட்டின் ஆட்சியானது காலங்காலமாய் ஏற்பட்ட தொடர் பைக் காட்டுவதாகும் என்னும் 'பர்க்'கின் கருத்து, முல்லரால் உறுதியாகப் பின்பற்றப்படுவது இங்கே வெளிப்படையாகத் தெரியவரும். நிலத்தோடு மனிதன் நடத்தும் மாபெரும் போரில் நண்பர்கள் தேவை; அந்த நண்பர்களும் நிகழ்காலத்தில் வாழ் பவர்கள் மாத்திரமன்றி, இறந்தகாலத்தில் வாழ்ந்தவர்களும், அவர்களின் பரம்பரையினரும் ஆவார்கள். ஏனெனில், எந்த ஒரு தலைமுறையும் தன் காலத்தில் இந்தப் போரில் தன் பலத்தைக் கொண்டு மாத்திரம் வெற்றிபெற இயலாது. ஆகையால் ஆட்சி என்பது இந்த இரண்டு கூட்டுப் பலத்தையும் கொண்டது. அதாவது, ஒரு காலத்தில் வாழ்கிறவர்கள் மாத்திரமன்றிக் காலத்தால் ஒருவருக்குப்பின் ஒருவராக சமுதாயப் பாரம்பரியமும் இதில் சேரும்.[2] இது அழியாதது; தேக்க நிலை யடையாதது;

[1] Elemente der Staatskunst, Vol. I, pp. 29-31. ஆட்சி என்பது, "das Bedurfniss aller Bedurfnisse des Herzens, des Geistes unddes Leibes" ஆகும். ஹெர்டு பிளேம் தொகுப்பில் சமீபகால வெளியீடுகளில் இதன் குறிப்பைக் காணலாம்.

[2] மேற்கண்ட புத்தகம் I, pp. 59-60.

இடையருத ஓட்டத்தில் இருப்பதாகும். குடும்பம்பற்றிய ஒரே மாதிரியான விளக்கம் முல்லர் அடிக்கடி எழுதுவதாகும்; ஒவ் வொரு மனிதனும் குடும்பத்தை உருவாக்குகிற குழுவில் உறுப் பினனாக இருப்பதன் மூலம்தான் ஏதாவது உற்பத்தி செய்யவும், உடைமை உரிமை கொள்ளவும் முடியும்.[1] இத்தகைய குடும்ப அடிப்படையில் மத்தியகால சமுதாயம் அமைந்துள்ளது என்று அவர் நம்பியதனால், அவருடைய எழுத்தோவியங்களில் படை மான்யம் (பிரபுத்துவமுறை) குறித்தும், ஆட்சி அமைப்பில் பிரபுத்துவத்தின் செயல் குறித்தும் வானளாவப் புகழ்ந்துள்ளார். முல்லரின் அரசியல் கோட்பாட்டின் சாரம் தனி மனிதனை விழுங்கக் கூடிய கடல்மிருகம்போல் அரசாங்கம் அமையவேண்டும் என்ப தாகும்; ஜெர்மானியர் இவ்வாறு ஊகம்கொண்டது இயற்கையே. இதில் எது விசித்திரமானது எனின், முல்லர் தம் கோட்பாடு படை மான்யக் கொள்கையில் பொதிந்து கிடக்கிறது என்று எண்ணி யதுதான்.

அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்த முல்லரின் அரசியல் கோட்பாடுகளை ஆராய்ந்ததுபோலவே முல்லரின் பொருளாதாரக் கோட்பாட்டையும் விவாதிக்கலாம். முதன் முதலில், தனியார் உரிமைகள் மீது அவர் கொண்டிருந்த தணியாத கோபம் அவரை வரையறையற்ற தனியார் சொத்துரிமையைத் தாக்கித் தகர்க்கத் தூண்டியது. மேலும் படைமான்ய முறையில், ரோமன் சட்டத் தின் தீமையான வாரிசுரிமை குறை இல்லாதிருந்தது அவரை மேலும் ஊக்குவித்தது. கூட்டு மொத்தத்திலிருந்து தனி மனிதனை வெட்டி எடுத்தலின் விளைவு என்னவென்றால், தனித்தனியாகவும் கூட்டாகவும் அனைவரும் ஏழ்மைக் கடலில் தத்தளிக்கவும், தத்தளித்தவர்களின் உள்ளங்களில் தங்களுக்கென தனி மரம் கிடைக்காதா என்று எண்ணவும் செய்தனரே அன்றிக் கூட்டு மொத்தமாகச் செல்வச்செழிப்பில் வாழக்கூடிய தீவிற்குப் போய்ச் சேருவோம் என்று அவர்கள் எண்ணவேயில்லை.[2]

குடும்பத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில் சமமான பங்கு கிடைத்ததும், அவர்கள் முன்பிருந்ததைவிட மிக ஏழைய ராக இருந்தனர். செல்வக் கூட்டு மொத்தத்திலும் அப்படி ஒரு மாற்றமில்லையென்றாலும், எல்லா மதிப்புகளையும் உயர்த்தக் கூடிய ஒரு சக்தி சமுதாயத்தில் உருவாகவேண்டும் என்று அவர் எண்ணினார்.[3]

[1] Theorie des geldes, p. 10.
[2] அதே புத்தகம், பக்கம் 7.
[3] அதே புத்தகம், பக்கம் 11.

இருந்தபோதிலும், முல்லர் மூன்று விதமான உடைமைகள் உள்ளன எனக் கருதுகிறார். (அ) தூய்மையான தனியார் உடைமை, (ஆ) கூட்டு உடைமை, (இ) இராச்சியங்கட்குரிய உடைமை. இந்த மூவகை மூலமும் எல்லா உடைமைகளிலும் ஊடுருவி இருக்கும். தனி மனிதன் எது தன்னுடையது எனக் கருதுகிறானோ அதை மற்றவர்களோடு எந்த நேரத்திலும் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். அதுவும் நேரம் வந்தால் ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கவும் சித்தம் கொள்ளவேண்டும். பொதுமக்களின் பொறுப்பில் இருப்பதுதான் மெய்யான சொத்தாகும். தனியுடைமையெல்லாம் மற்றவரின் சொத்தை அனுபவிக்கப்பெற்ற உரிமையே யாகும்.[1] முல்லருக்குப் படைமான்யத்தின் மீது ஏற்பட்ட பற்றே அவரது கொள்கையைத் தழுவியுள்ளது என்று அவர் கருதியதினாலாகும். இருப்பினும் ஓரிடத்தில் தனியார் உடைமைக்கான சட்ட நீதியான தடைகளையெல்லாம் படைமான்யம் கொண்டுள்ளது எனக் குறிப்பிடுகிறார்.[2]

செல்வத்தின் தன்மையையும், உற்பத்தியின் பொருளையும் விளக்குமிடத்தில் முல்லர், தாம் ஆட்ம் ஸ்மித்தோடு வேறுபட்டிருப்பதை அடிக்கடி வற்புறுத்துகிறார். சுயேச்சை வாணிபக் கோட்பாட்டுக்கு எதிராக அரசியல் விற்பன்னன் செய்யவேண்டுவதென்ன? நிரந்தரமாக இருக்கவேண்டிய ஒன்று என இராச்சிய ஆட்சி அமைப்பை அவர் கொள்வதன்றி வேறென்ன? தலையிடாக் கொள்கை என்பது வரையறையற்ற தனியார் சொத்துரிமைக்குக் கொடுக்கப்பட்ட காணிக்கை; எல்லா வகைச் சொத்தின்மீதும் அரசாங்கம் கொண்டுள்ள உரிமைத் துறப்பு என்று பொருள்படுகிறது.[3] மனித சமுதாய அமைப்புகள், சட்டங்கள் ஆகியவை பயனற்றவை என்ற இயற்கை நியதியைக் கொள்வோமானால் அது புரட்சிகரமானதே.[4] முல்லருக்கு 'நாடு' என்பது எல்லாவற்றிற்கும் நடுநாயகமாகும். அதாவது எல்லாச் செல்வத்திற்கும், எல்லா உற்பத்திக்கும், எல்லா நுகர்ச்சிக்கும் முழுமுதற் பொருளான நாட்டின் எதிர்விளைவுக் கண்ணோட்டத்தைக்கொண்டே செல்வமனைத்தும், உற்பத்தி முழுதும் நுகர்ச்சியாகக் கவனிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிர்ணயமாகும் விலையிலிருந்து மதிப்பு வேறுபடுத்தப்படுவதற்கான காரணமே, அரசாங்கத்திற்கு நிரந்தரமான புத்துணர்ச்சி தரவும், ஒரு பொருள் அரசாங்கத்தோடு

[1] அதே புத்தகம், பக்கம்-19-20.
[2] Staatskunst I, pp. 268, 269.
[3] Thorie des Geldes, pp.102-103.
[4] அதே புத்தகம், பக்கம் 132.

கொண்டுள்ள தொடர்பைக் காட்டவுமான நிலையை ஏற்படுத்து கிறது.[1] பழைய அரசியல் பொருளாதாரம் செல்வாதாரமாகக் கருதப்பட்டதே தவிர, உயர்ந்த எண்ணத்தில் மதிப்புக்குத் தரப்பட்ட விளக்கம் அதில் இல்லை.[2] பொருள்களைப்பற்றி அவர் நூலில் குறிப்பிடப்படுகிறதேதவிர மனிதர்களைப்பற்றி அல்ல. வாங்குவதற்கும் விற்பதற்கும் உரிய பருப்பொருள்களைப் (Concrete) பற்றியே ஆடம் ஸ்மித் கூறுகிறார் எனக் குற்றம் சாட்டு கிறார் முல்லர். உண்மையில் ஸ்மித் கூறுகிற உற்பத்தியுடைய உழைப்பு, உற்பத்தியற்ற உழைப்பு என்ற விவாதத்தை அதன் மீது வளர்ந்துள்ள அறிவீனமான வாதத்திற்கு அப்பால் பார்த்தால், தத்துவ மேதை தத்துவத்தை விவரித்திருப்பது விற்பனைக்கல்லபோல் தெரியும். 'எது செல்வம்' என்பதை, 'எவ்வாறு செல்வம் வருகிறது'[3] என்ற கேள்வியிலிருந்து பிரித்துக் காண்பது இயலாதென முல்லர் கருதுகிறார். பல மடங்கு 'உற்பத்தி'யை இலட்சியமாகக்கொண்ட அரசியல் பொருளா தாரம் உற்பத்திக்கு உள்ள தடைகளை நீக்குவதுதான்[4] சரியான வழியாகும். மாற்று மதிப்பு உள்ளவைகளையே செல்வம் என ஆடம் ஸ்மித் கருதியதால் தமக்கு முற்பட்டவர்களைப்போலவே இவரும் பல முக்கியமான விஷயங்களை விட்டுவிட்டார். அரசாங் கத்தின் எந்த சக்தி அல்லது, எந்த நடவடிக்கை செல்வத்தை நிலைநிறுத்துகிறது என்பதையும், பல விஷயங்களை மறந்தது போலவே மறந்துவிட்டார்.

இவ்வாருக அரசியல் பொருளாதாரத்தின் ஒரு கருத் தோட்டம் உருவாகியது. இதுவும் புறப்பொருள்களிலிருந்தே வளர்ந்தது. இப்பொருள்களுக்கு முக்கியத்துவம் ஏதாவது இருக்கு மானால், அந்த முக்கியத்துவத்திற்கு அதைச் சார்ந்தவர்களின் உற்பத்தி சக்தி அதிகரிப்பதே காரணமாகும்.[5] செல்வத்தை எண்ணலும் கூட்டுத்தொகையாலும் கணக்கிடுவதை நாம் ஒதுக்கித்தள்ளவேண்டும். ரோமான்டிக் கருத்தில் ஊக்கம் கொண்டுள்ள முல்லரோ, 'எண்களில் சொல்லப்படுகிற எதற்கும் மதிப்போ புகழோ இல்லை'[6] என்று குறிப்பிட்டுள்ளார். உற்பத்தி பற்றியும், சிக்கனம் குறித்தும் நிகழ்காலக் கருத்துகளை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதில் லாடர்டேலுடன் தோளோடு தோள்

[1] அதே புத்தகம், பக்கங்கள் 58-59.
[2] அதே புத்தகம், பக்கங்கள், 96-97.
[3] Staatskunst, I, பக்கங்கள் 35-36.
[4] அதே புத்தகம் I, பக்கங்கள், 156-157.
[5] Theorie des Geldes, பக்கம் 14.
[6] அதே புத்தகம், பக்கம்-46.

இணைகிறார். சமுதாயப் பொருளாதாரச் செய்கைகள், முடிவில்லாத நுகர்ச்சியும், முடிவில்லாத உற்பத்தியும் என முதற்கண் கொள்ளலாம். ஆனால், உற்று நோக்கின் நுகர்ச்சியைவிட உற்பத்தி அதிகமாக இருப்பது தெரியவரும். தேசீயச் செல்வமென்பது தேசீய உற்பத்திகளிலிருந்து, தேசீயத் தேவைகளைக் கழிப்பதனால் ஏற்படுவதல்ல. அவ்வாறு கழிப்போமானால் அவைகள் பயனற்ற உதவாக்கரை சொத்துகளின் மொத்தத் தொகையாகவே இருக்கும். மாறாக, உண்மையான நுகர்ச்சி என்பதே உண்மையான செல்வத்தின் மூலமாகும். அது பயன்படுத்துவதிலும் உரிமையாக்கிக்கொள்வதிலும் அடங்கிக் கிடக்கிறது'[1] உற்பத்திக்கும் நுகர்ச்சிக்கும் இடையில் இடைவிடாமல் இருக்கின்ற முரண்பாடுகளின் காரணமாகக் கிடைக்கிற அந்த உயர்ந்த உற்பத்தியைத்தான் நாம் தேசீயச் சேமிப்புச் செல்வம் என்று அழைக்கிறோம். அதுவே தேசீய சக்தியாகவும், நாட்டிடத்துக் கொண்ட பற்றுகவும், ஏன் அதுவே நாடாகவும் இருக்கிறது.[2] ஆகவே, நாடென்பது நாடா வளந்தருவதாகும். எல்லாச் செல்வங்களும் உற்பத்தியாகும் தொட்டில் ஆகும். அதுவே எல்லா உற்பத்தியின், நுகர்ச்சியின் முடிவுமாகும்.

இதைப் போன்றுதான் முல்லர் ஆத்மீக மூலதனம் பற்றியும் குறிப்பிடுகிறார். இவ்வாறு வழிவழி வந்த பழைமைக்கும், அவர்தரும் மதிப்புக் காரணமாக மிகப் பழக்கப்பட்ட மூன்று தலைப்புகளையே மாற்றிக் குறிப்பிடுகிறார். அஃதாவது 'நிலம், உழைப்பு, மூலதனம்' என்ற இவைகளை மாற்றி 'இயற்கை, மனிதன், கடந்தகாலம்' என்று அழைக்கிறார்.[3] இயற்கையை எதிர்த்துப் போராடும் இத்தகைய சக்தி, மனிதனுக்குப் பல வழிமுறைகளாக வாழ்ந்த மனித சமுதாயம் தந்த அரும்பெரும் மூலதனமேயாகும். ஆகவே, அந்த மூலதனம் மனித சமுதாயம் முழுவதற்குமே உரியதாகும். ஆனால், இன்றைய சமுதாயத்தினர்க்கு அதை அனுபவிக்க மாத்திரமே உரிமையுண்டு.[4] இவ்வாறு பார்ப்போமாயின், கடந்தகால மரபு உரிமை என்பது பொருள் தன்மையானது மட்டும் அன்று; அது ஆத்மீகத் தன்மையும் உடையதாகும். ஆகவே, ஸ்மித் கூறிய மூலதனத்தில் ஆத்மீக மூலதனத்திற்கு இடம் காண்பது அவசியமாகும். எப்படியோ முல்லர் இதைச் சுற்றியே வளைந்து வளைந்து வருகிறார். இக் கருத்துக் கண்ணோட்டத்தைக் கொள்வோமாயின்

[1] Theorie des Geldes, பக்கம் 66. Staatskunst, பக்கங்கள் 448, 474 பார்க்க
[2] Theorie des Geldes, பக்கங்கள் 70-72. முல்லர் சேமிப்பைச் செல்வமென்று அழைப்பது அவருக்கே உரித்தான தனித்த பாணியாகும்.
[3] Staatskunst, II, பக்கம் 6.
[4] அதே ஏடு I, பக்கம் 161.

நாடென்பது புலனறிவுக்குப் படுகின்ற பல பொருள்களோடு, நாட்டின் ஆட்சி அமைப்பு, அரசியல் அமைப்பு, சட்டங்கள், தேசீய சின்னங்கள் ஆகியவைகள் அடங்கியதாகும். சில நேரங்களில் சட்டம் இயற்றுவதற்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. அதுவும் 'கிறித்துவ நாட்டின் அரும்பெரும் செல்வமாம்' என்று அறைகிறார் முல்லர். இக் கருத்து இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய உண்மையாகும். ஏனெனில், இங்கிலாந்தின் சக்தி அதனுடைய நிலவளத்திலோ, உழைப்பாளர் தொகையிலோ அமையவில்லை. பின் அதன் மூலம் எதில் தான் அமைந்து கிடக்கிறது எனின், அதன் ஆத்மீக மூலதனமான சட்டங்களிலும், நடைமுறை பழக்கவழக்கங்களிலும், தேசீயப் பெருமதிப்பிலும், செல்வச் சேமிப்பிலும் அடங்கிக் கிடக்கிறது.[1]

முல்லரின் முரண்பாடான போக்கு ஆடம் ஸ்மித்தின் தொழில் பிரிவினைக் கொள்கைமீதும் செல்கிறது. 'ஒரு குடிமகன் தன்னுடைய தொழிலைச் செய்கின்ற காரணத்தால் முழுமனிதனுகத் திகழ்வதிலிருந்து தவறுதல் கூடாது.' தன்னுடைய புத்தகத்தின் ஒரு பகுதியில் கற்பனையாக மனித சமுதாயத் துவக்க காலத்தில் மனிதன் தன்னுடைய எல்லாத் திறமைகளுடன் வாழ்ந்ததாக விளக்கியுள்ளார். அப்போது தனி மனிதனே அரசாங்கமாக இருந்தான். அதுபோன்றே தனி மனிதனும் அரசாங்கத்தைவிடத் தரத்தில் குறைந்தவனுகக் கருதப்படவில்லை. இந்தச் சிறப்பியல்புக்குரிய மனிதனுக்குப் பின்னுல் வந்தவர்களெல்லாம் இம் மனிதனைப் போன்றே இயற்கையோடு இணைந்த முறையில் பல்வேறு திறமைகள் ஒன்றுபடுத்தப்படவேண்டும் என்று எண்ணினர்கள். ஆகவே, தொழில்பிரிவினை என்பது (அல்லது சமுதாயத்தின் பல்வேறு பணிகள்) எங்கு இயலுமென்றுல், எங்கே அனைவரிடமும் ஒற்றுமையும், ஒருவரோடு ஒருவர்க்கு நல்ல தொடர்பும் அமைந்துகிடக்கிறதோ அங்கேதான் இயலும். இவ்வாறு ஒன்றுக இணைந்தவர்கள்தாம் முழு மனிதனைப் பிரதிபலிக்கச் செய்கிறார்கள். தொழில்பிரிவினையில் முன்னேற்றம் காணக் காண முழுமனித நிலையிலிருந்து மிகவும் விலகிச் செல்லவேண்டிய கட்டம் ஏற்படும். ஒவ்வொரு மனிதனின் தேவைகளும் ஒரே

[1] Theorie des Geldes, பக்கங்கள் 107-108; Staatskunst II, பக்கம் 16. முல்லர் மிக விசித்திரமாக மூலதனத்தை இரண்டாகப் பிரிக்கிறார். அதுவும் அவைகள் நாட்டின் மிகப்பெரிய உடைமைகள் என்றும் குறிப்பிடுகிறார். அஃதாவது, பணமும் மொழியும் ஆம். மேலும், தேசீயச் செல்வத்தை நான்கு கூறுகளாகக் காண்கிறார். அவையாவன, நிலம், உழைப்பு, உண்மையான மூலதனம் (பணம்), ஆத்மீக மூலதனம் (பேச்சு, கல்வி, எழுத்து). இதைப்போலவே ஒரு தத்துவ அறிஞன் சமுதாயத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்க அஞ்சமாட்டான். Lehrstand, Wehrstand, Nahrstand and Verkehrstand, (Staatskunst II, பக்கங்கள் 29-33).

நிலையில் இருக்கும். ஆக்வே, ஒவ்வொருவனும் மற்றவர்கள் தனக்காக உழைக்கக்கூடிய நிலையில்தான் உழைப்பான். எல்லோருடைய மொத்தமான கூட்டு உழைப்பு அவனுக்குத் தேவைப்படும். சுருக்கமாகக் கூறுவதானால், சமூகம் என்பது பொருளாதார நடவடிக்கைகளின் கூட்டு அமைப்பாகும். அரசாங்கமோ எல்லாத்தேவைகளும் ஒன்றுக இணைந்த தேவையாக அமையும். தொழில் பிரிவினையை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டேபோக இந்த ஒற்றுமைச்சக்தி வலுவடையவேண்டும்.

தொழிற் பிரிவினைபற்றி ஆடம் ஸ்மித்தினுடைய விசித்திரமான விளக்கம் சுமை மாற்றும் போக்குப்போல் காணப்படுவதால் அது முழுநிறைவு உடையதாக இல்லையென முல்லர் கருதுகிறார். தொழிற் பிரிவினை என்பது எதிலிருந்து எழுந்தது என்றால், அல்லது எதைச் சார்ந்தது என்றால், மூலதனத்தையோ அன்றி முல்லர் குறிப்பிடுகிற 'கடந்த காலத்தி'னின்றே பெறப்பட்டதாகும். இக் கடந்தகாலம் உழைப்பாளருக்கு ஒரு வேலையின் கண் நாட்டம் செலுத்துவதற்கான நல்ல நிலைமையை உருவாக்கித் தருகிறது. ஆயினும், தொழிற் பிரிவினை என்பது (நல்ல காலமாக முல்லருக்கும் புரிந்த ஒன்றுகும்) மனிதர்களை அடிமைகளுடைய நிலைக்கும், இயந்திரங்களின் நிலைக்கும் தாழ்த்தி விடுகிறது. நாட்டில் உண்மையான மூலதனமோ, கடந்த காலத்தின் விளைவுகளோ பட்டாளிகளின் உள்ளத்தில் இந்த ஆபத்துகளை எதிர்க்கின்ற அளவுக்கு ஆடிக்கொண்டிராவிட்டால் இந்தத் தாழ்நிலையிலிருந்து விடுபடுவது கடினமாகும்.

ஆடம் ஸ்மித்தைப்பற்றித் திறனாய்வு செய்துகொண்டே போகுங்காலத்து முல்லர் அடிக்கடி ஒன்றை வலியுறுத்துகிறார். அதுதான் ஸ்மித்தினுடைய ஒருசார்புக் கொள்கையாகும். ஸ்மித்தினுடைய கொள்கைகளோ 'கிரேட் பிரிட்டன்' தேசத்தில் உருவாகிய ஒரு மாதிரியான கோட்பாடுகளாகும். அந்த நாட்டில் இருந்த நிலைமைகளைப் பார்க்கும்போது அவைகள் பொருத்தமானவையாகக்கூடத் தோன்றும். மேலும், எதை ஸ்மித் புறக்கணித்தாரோ அவைகள், வேறுமாதிரியான சூழ்நிலைகள் அமைந்த ஐரோப்பாக் கண்டத்து நிலைமைகளாகும். முல்லரோ இங்கிலாந்தை சம்பிரதாய முறையில் அடிக்கடிப் பாராட்டுகிறார். ஸ்மித் ஆத்மீக மூலதனத்தை மறந்துவிட்டதற்குக் காரணமே இங்கிலாந்து நாட்டவர்கள் அதை அறிவிக்காமலே தெரியக் கூடிய ஒன்று என விட்டுவிட்டதுதான். ஆகவே, உற்பத்தி என்பது செல்வத்தை நிலைநிறுத்துவதிலும் பாதுகாப்பதிலும் அமைவது என்று கொள்ளமுடியாது. ஏனெனில், நிலைநிறுத்தும்

கோட்பாடும், தேசீய ஒற்றுமையும் நாட்டின் பழக்கவழக்கங் களினுலும், அரசியல் அமைப்பு ஏற்படுத்துகின்ற இயற்கையான உணர்ச்சிகளினுலும் பல நூற்ருண்டுகளாக அமைந்தனவாகும். ஆகவே, பிரிட்டனில் தொழிற் பிரிவினைக் கோட்பாட்டின் தீமைகள் மற்ற இடங்களைப்போலத் தாக்கவில்லை. மேலும், ஒற்றுமையை உருவாக்குகின்ற தேசீய ஆத்மீக மூலதனமும், கடந்த காலத்தின் ஊடுருவும் உணர்ச்சியும், இறந்த காலத்தின் பொது முன்னேற்றங்களும் ஒவ்வொரு குடிமகனின் உள்ளத்திலும் எழுச்சியை ஏற்படுத்துகின்ற காரணத்தால் நிலைபெற்று நிற் கின்றன. இது 'பிரிட்டனே ஆள்வாயாக' என்ற கவிதையின் எதிரொலிபோல் நீண்ட தூரத்திலிருந்து நமக்குக் கேட்கிறது. முல்லருடைய கோட்பாட்டை நாம் ஏற்றுக்கொள்கிறேமோ இல்லையோ நமக்கு அது நல்ல விளக்கம் அளிக்கிறது.

முல்லருடைய மிக முக்கியமான பணிகளில் ஒன்று பணம் பற்றிய கோட்பாட்டை எழுதியிருப்பதாகும். அதைப்பற்றி இங்கே குறிப்பிடுவது அவசியமாகும். ஆயினும், வேறு எதனையும் விட இதில் முல்லர் மானசீகமான, விளக்க முடியாத, நுணுக்க மான குறியீட்டைப்போல எழுதியிருக்கிற காரணத்தால், முழு வதையும் விளக்க முடியாதே என்று எண்ணும்போது அஞ்ச வேண்டியிருக்கிறது. மனிதனின் அடிப்படைத் தேவையே தன் துணைவர்களோடு ஒன்றுசேர்வதாகும். இப்படி ஒன்று சேருவதை வேறு வார்த்தைகளில் விளக்குவதானுல், பணம் தேவை என்பதே இந்த ஒன்றுசேர்வதால் அமைகின்ற ஆட்சி யமைப்பினுல் உருவாகுவதாகும். மனிதர்களும் மற்றவைகளும் ஒன்றுசேரவேண்டும் என்பதற்கான பாசக்கயிறு அரசாங்கமே யாகும். சட்டத்திற்கு எவ்வாறு நீதிபதியின் வார்த்தைகள் முக்கியமோ, அதுபோன்று ஒன்றுசேர்வதற்கான தேவையை உணர்த்துகின்ற பொருளாதார விளக்கம் பணத்தில் அடங்கியுள் ளது. பணம், அரசாங்கத்தின் மாற்று ஆகும். அரசாங்கத்தைப் போலவே அது பொது உடைமையாக இருத்தல்வேண்டும். ஒருவர் கையிலிருந்து மற்ருெருவர் கைக்கு மாறிச் சுற்றிக்கொண் டிருக்கிற நேரத்தில்தான் பணம், பணமெனக் கருதப்படும். அது ஒருவரின் தனி உடைமையாகி நகராமல் நின்றுவிடுமானுல் தன் மதிப்பை இழந்துவிடுகிறது. ஆகவே, பணமென்பதே சமுதா யத்தை இணைக்கும் சாந்துஆகும். முல்லரைப் பொறுத்த வரையில் பணமென்பது அங்காடிப் பொருளாக மாத்திரம் இருக்கவில்லை; அதையும் கடந்ததாகும். இருவரால் ஏதாவது ஒரு பொருள் விரும்பப்படுமானுல் அதுதான் பணம். எல்லாத் தனி மனிதர்களிடத்தும் இயைந்து இருக்கின்ற சொத்துதான்

பணமாகும். அது மற்றத் தனி மனிதரிடத்துச் செல்லும்போது சமூக அமைப்பில் ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்துகிறது. ஒரு குடிமகனேகூட மற்றவர்களால் அதிகமாக விரும்பப்பட்டால் அவனே பணமாகிறுன். அவன் எவ்வளவுக்கெவ்வளவு சிறப்புப் பெறுகிறுனோ அவ்வளவுக்கவ்வளவு பணமாகிறுன். மற்றோரிடத்தில் அரசாங்கமே பணமெனக் கண்டோம். அவ்வாறே சட்டமும் தூய்மையான பணமாகும். இவ்வாறு பணம் சமுதாயத்தின் தேவையை உணர்த்துகிறது. அது அழியாதது. பழங்காலத்திலிருந்து தேவைப்பட்டது. எல்லாக் காலத்திலும் இரண்டு உருவங்களில் திகழ்ந்தது. பின்னுலோ உலோகத்தாலான பணம் என்றும், அதற்குரிய 'சொல்' என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. பணத்தைப்பற்றி (வேறு எதனைப்பற்றியும்) யாரும் எத்தகைய விளக்கமும் தாம் விரும்புவதுபோல் தரலாம். இவ்வாறு விளக்கப்பட்ட பணக்கோட்பாடு இங்கிலாந்து பாங்கிலோ, நிதி இலாக்காவிலோ விளக்கம் கருதி மதிக்கப்படுவது இல்லை. முல்லருடைய பணக்கோட்பாட்டில் விளக்கப்பட்டுள்ள விசித்திரமான 'எண்கள் முறையும்' 'கருத்து முறையும்' நமக்குக் காட்டுவதெல்லாம் அது தெளிவற்றது என்பதாகும். காகித நாணயப் பரிமாற்றம் ஏற்பட்டதானது ஒரு நாட்டுக்குள்ளாகவே பரிமாற்றம் இருக்கவேண்டும் என்ற கருத்தைக் கொண்டதாகும். உலகப்பணம் அல்லது உலோகப்பணம், உலக வாணிபப் போக்கில்தான் அந்த நாணயத்தின் மதிப்பு அடங்கிக் கிடக்கிறது என்ற தவருன கருத்தைக் காட்டுகிறது. இதனுல் அது உள் நாட்டு ஆட்சிக்குள்ளே அல்லது தன்னுடைய நாட்டிற்குள்ளே நடைபெறுகின்ற வாணிபத்தின் மூலம்தான், தான் இருப்பதைக் காட்டுகிறது. தங்கமும் வெள்ளியும் ஒரு எண்ணத்தை வளர்க்கிறது; அது என்னவெனில், எங்கெங்கே உலோக நாணயம் என்ற சொல் கேட்கிறதோ, அது ஒருவனின் தாய்நாட்டைக் காட்டுகிறது. அவன் பிறந்த நிலத்தோடு அவனை இணைப்பது காகித நாணயமே.[1]

லிஸ்ட்

ரொமான்டிசிசம் (Romanticism) தோன்றியதற்கான காரணத்தை ஆராய்கின்ற நிலை சமீப காலத்தில் தோன்றியதென்றும், 'முல்லருக்குத்' தரப்பட்ட இடம், அவருடைய கருத்துகள்

[1] Staatskunst I, பக்கம் 453.

பிரடரிக் லிஸ்ட் (Friedrich List, 1789-1846)[1] சொன்ன கருத்துகளோடு ஒத்திருந்ததனால்தான். ஆனால், லிஸ்ட் பகற் கன்வு காண்பவரல்லர்.

தம்முடைய காலத்தின் நிதர்சனமான உண்மைகளுக்காக லிஸ்ட் போராடினார். அவரையோ உலகம் சூழ்ந்து ஒழித்தது; ஆனாலும் உலகத்தின் மாபெரும் மனிதர்களில் அவரும் ஒருவர். அவருடைய கருத்துகள் பெரும்பாலும் முல்லரின் எண்ணக் கோட்டிலேயே சென்றன. மாயாவாதத்திலும், குறியீடுகளிலும் தம்முடைய கருத்துகளைக் குழப்பிய சொற்புரட்டு இருளிலும் நெளிந்த முல்லரைப்போல் அல்லாமல் அரசியல் எழுத்தாளரைப் போல லிஸ்ட் எழுதினார்.

பொருளாதாரக் கோட்பாடுகளுக்கு லிஸ்ட் தந்துசென்ற கொள்கைகளைக் காணவேண்டுமானால் 'அரசியல் பொருளாதாரத் தின் தேசீய முறைகள்'[2] (The National System of Political Economy) என்ற ஏட்டினைக் காண்க. அவருடைய கருத்துகள் காலத்தின் கொடிய பிடியால் சிக்கித் தவிக்கின்றன. அவை களோ, லிஸ்ட் காலத்தில் ஜெர்மனியின் முன்னேற்றத்திற்காக எழுதப்பட்டவையாகும். அது தாக்குதல் நிறைந்ததாக இருந்தது. அதிலிருந்த மறுப்புரைகள் எதிரியினுடைய எலும்பை நொறுக்கு வதுபோல் அமைந்திருந்தன. ஆடம் ஸ்மித் (Adam Smith) தின் கருத்துகளிலிருந்து விலகியோ, அன்றிக் கலந்தோ, கலவாமலோ அவரைப் பின்பற்றியவர்களை எண்ணிக்கொண்டு லிஸ்ட் தம்மு டைய நூல்களிலே கருத்துப் பள்ளியினர் என்றே அழைத்தார். ஆடம் ஸ்மித்தை அவர் தாக்கியிருக்கும் முறை உயிருடையது; உணர்ச்சி மிக்கது. திரும்பத் திரும்பக் கூறும் தவறு அவரிடத்தில் இருப்பினும் அவருடைய நூல் உற்சாகமும் விறு விறுப்பும் தர வல்லது. நூல் முழுவதையும் நோக்காமல் அங்கொன்றும் இங் கொன்றுமாகச் சில கருத்துகள் லிஸ்டினுடைய திறனாய்வில் சிக்கிய 'கருத்துப் பள்ளி' யை நமக்குக் காட்டும்.

[1] 1786-ல் ரூட்லின்ஜன் (Reutlingen) என்னும் ஊரில் பிறந்தார். 1817-ல் டியுபின்ஜின் (Tubingen) என்ற ஊரில் பொருளாதாரப் பேராசிரியரானார். 1819-ல் வேலையை உதறித்தள்ளினார். பின் உருட்டம்பர்க் (Wurtemberg) பாராளுமன்ற உறுப்பினரானார். சீர்திருத்தம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்ததால் பாராளு மன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். சிறையிலிருந்து வெளிவந்தபின் அமெரிக்கா (America வில் குடியேறினார். அங்கே ஏழு ஆண்டுகள் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றினார். ஜெர்மனிக்குச் சென்று திரும்பி வந்தவுடன் ரெயில்வே முன்னேற் றத்திற்காகப் போராடினார். 1846-ல் நோயுற்றமையினாலும் வறுமையினாலும் பரிதாப மாக மரணமடைந்தார்.

[2] எஸ். எஸ். லாய்டு (S. S. Lloyd) எழுதியுள்ள ஆங்கில மொழிபெயர்ப்பைக் காண்க.

ஆடம் ஸ்மித்தை அவர் தாக்கியுள்ள அடிப்படை என்ன வெனில், ஸ்மித் வெறும் மதிப்புக் கோட்பாட்டையே தந்துள்ளார் என்பதும், அவருடைய கொள்கைகள் ஒரு சாதாரணக் கடைக் காரனின் கோட்பாட்டைப்போல் வெறும் 'மாற்று மதிப்பை'யே நம்பியதாக இருந்ததுவும், செல்வமும், செல்வம் உருவாவதற் குரிய காரணங்களும் இரு தனித் தனிக் கருத்துகளைக் காட்டு வதுமாகும். இரண்டாவதை, முதலாவதைவிட முக்கியமான தாகக் கவனிக்கவேண்டும். ஒருவனிடத்துச் செல்வம் இருக்க லாம்; ஆனால், தான் நுகருவதைவிட அதிகமான பொருள்களை உற்பத்திசெய்யும் திறமை அவனுக்கு இல்லாமல் இருக்குமானால் நாளுக்கு நாள் ஏழையாக ஆகிவிடுவான். 'ஆகவே, செல்வத்தை உற்பத்தி செய்கின்ற சக்தி செல்வத்தைவிட மிகமிக முக்கியமான தாகும். இதுவே கிடைத்ததைக் காப்பதோடு அல்லாமல் அதிகரிக்கச் செய்வதும், இழந்த இடத்தில் வேறொன்றை உருவாக்குவதுமான காரியத்தைச் செய்கின்றது.'[1]

இதே முறையில்தான் லிஸ்ட் தம்முடைய கட்டுரை முழுதும் 'மதிப்புக் கோட்பாட்டிற்கும்,' 'உற்பத்தி சக்திக் கோட்பாட் டிற்கும்' உள்ள வேறுபாட்டை விளக்க முயல்கிறார். ஐந்து பிள்ளைகளை உடைய இரண்டு தந்தையர் ஓராயிரம் டாலர் களைத் தங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஓராண்டுச் செல விற்கு பிரித்துத் தருகிற ஓர் உதாரணத்தைக் காட்டி விளக்க முயல்கின்றார். 'ஒருவனை வட்டிக்கு விடுகின்ற முறையில் தன் பணத்தைச் சேமிப்பில் இட்டுத் தன் பிள்ளைகளைக் கடுமையான வேலை செய்து பிழைக்குமாறு விடுகிறான். மற்றவனை தன் இரு பிள்ளைகளைத் திறமையான புத்திகூர்மை மிக்க நிலப்பிரபுக்களாக இருக்கும் வகையிலும், மற்ற மூவரைப் பயனுள்ள வியாபாரம் செய்வதற்கான வகையிலும் பயன்படுத்துகிறான். முன்னவன் மதிப்புக் கோட்பாட்டின்படி இறக்கும்போது செல்வனாய் உள்ளான்; உற்பத்தி சக்திக் கோட்பாட்டின்படி பின்னவனை பாராட்டத்தக்கவனாக வாழ்ந்தவனாகிறான்.[2] என்பது அந்த உவமையாகும்.

ஆகவே, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியைக் கருத்தில் வைக்கவேண்டும். அதன் காரணங்கள் பலவாகும். 'கிறித்துவ சமயம், ஒரு தாரம் உடைமை, அடிமை ஒழிப்பு, பண்ணையாள் ஒழிப்பு, மணிமுடிப் பரம்பரை உரிமை, அச்சு இயந்திரங்கள்

[1] National System of Political Economy, பக்கம் 108, மேலும் 12 ஆம் அத்தியாயம் முழுதும்.
[2] அதே புத்தகம், பக்கம் 112.

கண்டுபிடிப்பு, அஞ்சல் முறை, பணம், நிறையும் அளவும் காணும் முறைகள், நாள் காட்டிகள், கடிகாரங்கள், காவற் படையினர், போக்குவரவு சாதனங்கள் இவைகள் எல்லாம் உற்பத்தி சக்தியின் வலிமையான விதிகளாகும். ஒரு நாட்டின் உற்பத்தி சக்தியை அதிகரிக்கவோ குறைக்கவோ செய்யாத ஒரு சட்டத்தையோ அல்லது பொதுமக்களது சட்டரீதியான முடிவையோ நாம் ஒருபோதும் காண முடியாது'[1]

நம்முடைய தேசீய வாழ்வில் இணைந்துவிட்ட மனித சமுதாய நீதிமுறைகளின் தொகுப்பு இதுவென்றே தோன்றுகிறது. இதைத்தான் குறிப்பிடுகிறர் லிஸ்ட். 'புதியன காணல், பழையன துருவி ஆராய்தல், முன்னேற்றம் கொள்ளுதல், தூய்மையாய் இருத்தல் என்ற இவையும், பலவழி முறையினரின் உழைப்பும் இணைந்தே இன்றைக்கு அமைந்துள்ள தேசங்கள் உருவாயின. இப்போது வாழ்கின்ற மனித இனத்தின் மொத்த அறிவு மூல தனத்தின் விளைவே இதுவாம். எவ்வளவுக்கெவ்வளவு கடந்த தலைமுறையினரின் முயற்சிகளை அறிந்துகொண்டு அவைகளை வளர்த்து அவற்றை பயன்படுத்துகின்றனரோ, அந்தத் திறமையின் வீதத்திலேயே ஒவ்வொரு நாட்டின் உற்பத்தித் திறனும் அடங்கிக் கிடக்கிறது....'[2]

அந்தக் 'கருத்துப் பள்ளியினரை' மேலும் வெளிப்படையாகத் தாக்குவதற்கான இரண்டாம் காரணமாக இஃது அமைந்தது. அஃதாவது, அவர்கள் தேசீய முக்கியத்துவத்தை அலட்சியப் படுத்தியதாகும். குவிஸ்னே மனித சமுதாயம் முழுவதையுமே ஆராய்ந்தார். அவரைப் பின்பற்றிய ஆடம் ஸ்மித்தோ அவரைப்போன்றே உண்மையான அரசியல் பொருளாதாரத்தை ஒதுக்கித் தள்ளினர். அரசியல் பொருளாதாரம் என்பதற்குச் சொல்வழிப் பொருள் கொள்வோமாயின் ஒரு நாட்டின் தேசீய வாழ்வையே அஃது குறிக்கும். ஆனால், இக் கருத்துப் பள்ளியோ இதற்குப் பதிலாக 'அகில உலகப் பொருளாதாரத்தையோ அல்லது உலக அரசியலையோ'[3] மேற்கொள்கிறது. சர்வதேச ஒற்றுமையோ, அனைத்து நாடுகளின் கூட்டமைப்போ இருப்பதாகக் கொள்வதாயின், அரசியல் தலையிடா வணிகம் நியாயமென ஒப்புக்கொள்ளப்படுதல் வேண்டும். ஆனால், 'இந்தக் கருத்துப் பள்ளியினரோ, இனிமேல்தான் உருவாகவேண்டிய ஒரு நிலைமையை இப்போதே இருப்பதாகக்

[1] அதே புத்தகம், பக்கம் 113.
[2] அதே புத்தகம், பக்கம் 113.
[3] அதே புத்தகம், பக்கம் 98.

கொண்டு வாதிட்டுள்ளனர்'[1]. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் மனித சமுதாய முழுமைக்குமிடையில் நாடு நிற்கிறது என்பதை நாம் அறிவோம். இதைப் பர்க்கும் முல்லரும் பல எடுத்துக் கூறியுள்ளமையைப் பெரு மரபாக லிஸ்ட் பாராட்டி உள்ளார்.[2]

மனித சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும் வெறும் உற்பத்தி செய்வோர் மாத்திரமோ அல்லது நுகர்வோர் மாத்திரமோ அன்று. அவர்கள் அரசாங்கத்தின் உரிமைமிக்க குடிகளும் தேசங்களின் உறுப்பினர்களும்[3] ஆவார்கள். ஒவ்வொருவரின் உற்பத்தி சக்தியும் ஒரு நாட்டின் அரசியல் பொருளாதார சூழ்நிலைகளைப் பெரிதும் சார்ந்திருக்கிறது[4] ஆகவே, அரசியற் பொருளாதாரத்தின் நோக்கமே நாட்டின் பொருளாதார வளத்தை மேன்மேலும் அதிகரிப்பதாகும்.

ஆகவே, 'பொருளாதாரத்தை அரசியலினின்றும் விலக்கி வைப்பதற்கான எந்த முயற்சியும் தவருனதாகும். தடையற்ற வணிகம் என்பது ஒரு கற்பனைக் கோட்டையே; சட்டரீதியான அதிகாரத்தின் தலையீடும், ஆட்சி அமைப்பினுடைய குறுக்கீடும் எங்கெங்கே தேசீயப் பொருளாதாரம் வளர வேண்டுமோ, அங்கங்கெல்லாம் தேவையானதாகும்'[5] என்று லிஸ்ட் குறிப்பிடுவதோடு கூட இதுதான் நியாயமானதென வாதாடுகிறார். தடையற்ற வணிகம் (Laissez-faire) என்ற கோட்பாடு கொள்ளைக்காரர்களுக்கும், எத்தர்களுக்கும், திருடர்களுக்கும் பொருத்தமானதாகத் தெரிவதுபோல் வணிகர்களுக்கு உகந்ததாக இல்லை.[6] ஒரு நாட்டின் அரசியல் தலைவனின் பணி எதுவும் செய்யாமல் இருப்பதன்று. 'ஒரு அரசியல் தலைவனுக்குத் தெரியும் தெரிந்திருக்கவும் வேண்டும்..... எவ்வாறு ஒருநாட்டின் எல்லா உற்பத்தி சக்திகளையும் எழச் செய்யவும், வளரச் செய்யவும், பாதுகாக்கச் செய்யவும் உரிய வழிகளையும், மாறுக அவைகள் எவ்வாறு அழிக்கப்படுகின்றன, பயன்படுத்தப்படாமல் போகின்றன, சக்தி அற்றுப் போய்விடுகின்றன என்பவைகளையும் தெரிந்துவைத்திருக்கவேண்டும்.'[7]

பின் எவ்வாறுதான் ஓர் அரசியல் தலைவனின் பணி வெற்றி பெறுவது? அதனுடைய விடையில்தான் லிஸ்டினுடைய கோட்பாட்டின் மையப்புள்ளி அமைந்துகிடக்கிறது. தொழில் பிரிவினையின் பலனை எவ்விதத் தனிப்பட்ட தொழிலிலும் பயன்படுத்தலாம்

[1] அதே புத்தகம், பக்கம் 102.
[2] அதே புத்தகம், பக்கம் 141.
[3] அதே ஏடு, பக்கம் 140.
[4] அதே ஏடு, பக்கம் 65.
[5] அதே ஏடு, பக்கம் 139.
[6] அதே ஏடு, பக்கம் 208.
[7] அதே புத்தகம், பக். 284.

என்பதை ஆடம் ஸ்மித் வலியுறுத்தினர். உதாரணமாக ஊசி செய்யும முறையைக் குறிப்பிட்டார். அவருக்கு 'ஒரு நாடு முழுவதையும் பாதிக்கிற தொழிற் பிரிவினையைப்பற்றி சிந்தனையே இல்லை.'[1] தொழிற் பிரிவினைக் கோட்பாட்டை ஒரு நாடு முழுவதற்கும் பொருத்திப் பார்ப்பதன்மூலம் ஒரு நாடு பெற்றிருக்கிற எல்லா சக்திகளின் வளர்ச்சியும் ஒரே நிலையில் இருக்கும்.

'இந்தப் பெருமைக்குரிய கருத்துப் பள்ளியினர் உற்பத்தி சக்திகளின் இயற்கையான போக்கைச் சரியானவகையில் உணராதவரையில், நாடுகளின் கூட்டு மொத்தமான நிலைமைகளைக் கணக்கில் கொள்ளாதவரையில் ஏற்படுகின்ற விளைவு யாதெனில் விவசாயம், இயந்திரத் தொழில்கள், வாணிபம், அரசியல் அதிகாரம், உள்நாட்டுச் செல்வம் இவைகள் ஒரே அளவில் வளரவேண்டிய முக்கியத்துவம் அலட்சியப்படுத்தப் படுகிறது; மேலும் ஒரு நாட்டின் எல்லா வழிகளிலும் வளர வேண்டிய உற்பத்தித் திறன் வீணாகிறது.'[2]

மேற்கண்ட முறையில்தான் தம்முடைய காலத்தில் ஜெர்மனியில் உற்பத்தியைப் பெருக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். தம்முடைய காலத்துச் சூழ்நிலைகளின் மூலமே அவர் பல பிரச்சினைகளை அணுகினர். இங்கிலாந்து உலகத்தின் தொழிற் கேந்திரமாக இருந்த காரணத்தால் ஐரோப்பியக் கண்டத்துத் தொழில்களை முளையிலேயே நசுக்கிவிடும் போக்கில் அமைந்திருந்தது. 'தீவில் வாழ்வோரின் ஆதிக்கத்திற்கு' அடிமையாக இருப்பது மற்ற நாடுகளுக்குப் பாதுகாப்பானதா? தொழில் உற்பத்தியும் விவசாயமும் இணைந்த நாட்டினைவிட வெறும் விவசாய நாடு தரத்தில் குறைந்ததே என்பது லிஸ்டினுடைய வாதமாகும். இந்தக் கருத்தை வலியுறுத்துவதில் லிஸ்ட் ஒரு சமுதாயத்தின் தொழில் உற்பத்தியின் பலனை வெகுவாகப் பாராட்டியதோடு மாத்திரமல்லாமல், விவசாயத்தை மிகவும் குறைத்தும் குறிப்பிட்டார். அவரை 'மெர்க்கன்டலிஸ்ட்'டினுடைய கருத்துகளை ஏற்றுக்கொண்டவர் எனக் கூறுவது பொருத்தமில்லை எனினும் 'பிசியோக்கிரட்டிஸ்ட்' கருத்துகளுக்கு முழு விரோதமாக இருந்தார் எனக் குறிப்பிடுவது பொருத்தமாகும். உள் நாட்டு வெளிநாட்டு வாணிபம், அதுவும் நாவாய் வாணிபமும் விவசாயமும் சிறப்புறுவதற்கான வழி, தொழில் உற்பத்தி உச்ச கட்டத்தை அடைந்தால்தான் இயலுமென்று அடிக்கடி வலியுறுத்திக் கூறினர். விவசாயத்தை மாத்திரம் நம்பியிருக்கின்ற

[1] அதே புத்தகம் ப. 280.
[2] அதே ஏடு—பக்கம்-114.

ஒரு நாடு, அந்நாட்டு மக்களுக்கு மிக அவசியமானதொரு பணி இல்லாமல் செய்கிறது. ஒரு தலைசிறந்த நாட்டின் பொருள் வளத்தில் பாதியைக்கூட, ஏன், பத்தில் ஒரு பங்கைக்கூட அந்நாடு பெறமுடியாது.[1] 'முடங்கிப்போன விவசாயத்திற்கு' எதிராகச் சரியான நேரத்தில் தொழில்துறையைப் புகுத்தின விவசாயத் தொழிற்சாலைகளின் உற்பத்தி சக்தி ஒன்றுக் கொன்று உதவியாக மிளிர்ந்து அளவிட முடியாத அளவு முன் னேற்றம் ஏற்படும். இவ்வாறு நன்னம்பிக்கையாளர் லிஸ்ட் குறிப் பிடுகிறார். எந்த நாடு விவசாயத்தை மாத்திரம் நம்பி வாழ்கிறதோ அந்த நாடு ஒரு கை யிழந்த மனிதனை[2] ஒக்கும். அந்த நாட்டின் துன்பத்தை [இதைப் பிசியோக்கிராட்கள், வாரோ(Varro) ஆகிய இவர்களுக்கு உரிய மதிப்போடே கூறுகிறோம்] எவ்வாறு எடுத்து விளக்குவது? ஏனெனில், ஒரு முழுக்கத்தை எடுத்துச் சொல்வது எனில், மூலை மந்தம், விகாரமான உடலமைப்பு, மூடநம்பிக்கை வைதீக நிலை, பழைய முறைகள், நாகரிகமின்மை, செல்வச் செழிப் பின்மை, விடுதலை உரிமையின்மை'[3] இந்த நிலைமைகள் இருக்கும். மாறுக, தொழில் துறையினர் புதியன புகுதலில் ஆர்வமும், விஞ்ஞானம், கலைகள் இவைகளை வளர்க்கவும், அவற்றைப் பயன் படுத்தவும் செய்கின்றனர். தொழில் துறையினரால்தான் விவசா யமே திறன் மிக்க தொழிலாகவும், விஞ்ஞானமாகவும், அருங் கலையாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது.[4] தொழில் துறையில் முன்னேறிய ஒரு நாட்டின் பெருமைபற்றிப் பேசும்போது அந் நாட்டில் புதியவற்றைப் புகுத்திய விஞ்ஞானிகள் பாராட்டப் படுவர். அறிஞர்கள் புகழும் பரிசும் பெறுவர்; காலத்தின் அருமை உணரப்படும். ஆனால், அவைகளை நாம் இங்கே விளக் கத் தேவையில்லை.[5] 'ஒரு நாட்டின் பல துறைகளைப் பற்றிய அறிவும், தேசீய வருமானமும் பொருள்வழி, அருள்வழிப் பாது காப்பும், தேசீய சுதந்திரத்திற்கான உத்தரவாதமும் ஆகிய இவைகள் ஒரே அளவில் வளர்வதற்குத் தொழில் மயமான சக்தியை உருவாக்குதலே வழியாகும்.'[6] மேலும், முன்பு குறிப்

[1] அதே புத்தகம், பக்கம் 124.
[2] அதே ஏடு, பக். 130.
[3] அதே ஏடு, பக். 159.
[4] அதே ஏடு, பக். 161.
[5] ஓர் ஆட்டிடையன் காலத்தின் மதிப்பை உணருவதும் அறிவதும் எங்ஙனம்? அவனுக்கோ காலமென்பது பெருஞ் சுமையே; வேய்ங்குழலோ, ஆழ்ந்த நித்திரையோ தவிர வேறு எது அவனைக் காலத்தின் கொடுமையிலிருந்து காப்பாற்றும்? பக்கம் 163. சுகமான சோம்பலும் ஓய்வும் மிக்க ஆட்டிடையனது வாழ்க்கை பதினெட்டாம் நூற்றாண்டின் கிராமீயப் பாடல்களிலிருந்து இன்னும் உயிர் ஊட்டத்துடன் ஒலிக்கிறது. திரு. ஹெர்ன்ஷா ஆட்டிடையனின் உழைப்புபற்றிக் கூறுவதைக் கேளுங்கள் 'வின் மீன்களை நோக்கி அவைகளைக் கணக்கிட்டுக்கொண்டே அவன் அமர்ந்திருக்கிறான். இயற்கையோ ஆடுகளை மேய்க்கிறது! வளர்க்கிறது! அவனே செல்வனுக்கிக் கொண்டே இருக்கிறான்' (Survey of Socialism, பக். 351) திரு. ராபர்ட் பர்ன்ஸ் வேறொன்றைப் பற்றிக் கூறுவதாயின், எளிதாக இருப்பவையாயின் அவர்களே முயல்க.
[6] National System of Political Economy, பக்கம் 168.

பிட்டதுபோல் இயந்திரத்தொழில் முன்னேற்றம் விவசாய முழு முன்னேற்றத்திற்குத் தேவையாகும். குடியானவனுக்குத் தொழிற் சாலைப் பொருள்கள் அருகிலேயே கிடைத்தல் வேண்டும்; மற்ற நாட்டிலிருந்து கிடைப்பதில் பலன் இல்லை. தொழில் உற்பத்தி தான் நிலத்தின் மதிப்பைப் பன்மடங்காக்குகிறது. விவசாயத்தி னுடைய பலனை அதிகரிப்பதற்காகவாவது இவற்றைச் செய்ய வேண்டும். உள் நாட்டிலேயே உருவாகின்ற தொழில் பெருக்கம் தான் விவசாயப் பொருள்களுடைய தேவையைப் பத்து அல்லது இருபது மடங்குகள் உயர்த்தும். இந்த மதிப்பை மிகப் பலன் மிக்க ஏற்றுமதியினாலுங்கூடப் பெற முடியாது.[1]

இந்தக் கருத்துகள் எல்லாம் ஓர் அரசாங்கத்தின் கடமை யைக் குறிக்கின்றன. லிஸ்ட்டைப் பொறுத்தவரையில் பொருளா தாரம் என்பது அரசியலும் தேசீயமும் கலந்ததாகும். பொதுவாக நாட்டின் உற்பத்தித்திறனை முன்னேறச்செய்வது முக்கியமான தொன்றாகும். குறிப்பாக, தக்க நேரத்தில் தாழ்ந்த நிலையினின்று மேன்மையான நிலைக்கு முன்னேற்றம் காண்பது மிக்க அவசிய மாகும். இது தனி விவசாய நாட்டினின்று விவசாயமும், இதர உற்பத்திகளும் கொண்ட நாட்டினை மனத்தில் இருத்தி லிஸ்ட் கூறியதாகும். அவருடைய முழுமை பெற்ற கருத்தாவது, ஒரு நாடு ஐந்து படிப்படியான முன்னேற்றங்களைக் கண்டிருக்க வேண்டும் என்பதாகும். அந்த ஐந்து வளர்ச்சிகளை அவர் கீழ்க்கண்ட சொற்களில் குறித்துள்ளார். 'காட்டுமிராண்டித் தனம், ஆடு மாடுகள் மேய்த்து வாழ்ந்த காலம், உழவுத் தொழில் காலம், உழவும் பிறதொழில் மூலமும் உற்பத்தி பெருக்கிய காலம், உழவும் தொழிலும்கொண்டு வாணிபத்தைப் பெருக்கிய காலம்' என்பனவாகும். உண்மையில் லிஸ்ட் பின் குறிப்பிட் டுள்ள மூன்றினையே மனத்தில் கொண்டுள்ளார். ஒரு நாடு தாழ்ந்த நிலையிலிருந்து மேன்மையான நிலைக்கு வருவதற்கு முதன் மையான ஆயுதம் ஏதாவது ஓர் உருவத்தில் விளங்கும் காப்பு விதியே ஆகும். ஆனால், ஆடம் ஸ்மித்தைச் சுதந்திர வாணிபத் தின் பாதுகாவலர் என்று குறிப்பிடுவது எவ்வளவு தவறுனதோ அவ்வளவு தவறுனது லிஸ்டைக் காப்பு விதியின் தன்னிகரற்ற பாதுகாவலர் எனக் குறிப்பிடுவதும் ஆகும். காப்பு விதியை லிஸ்ட் வலியுறுத்திக் கூறுவது உண்மையே எனினும், அவர் கருத்தின்படி காப்புவிதி நியாயமானதே. ஆனால், அவருடைய கொள்கை முழுவதையும் ஆராய்ந்து நோக்கின், காப்பு விதியை அனுசரிப்பவராகவோ, சுதந்திர வாணிபத்தின் ஆதரவாள

[1] அதே ஏடு, பக்கங்கள் 194-200.

ராகவோ அவர் இல்லையென்பது தெரியும். எந்தக் கொள்கையும் அவரைப் பொறுத்தவரையில் முற்றுப்பெற்ற முடிவல்ல. ஒவ்வொன்றும் ஒரு வழிமுறையே ஆகும். அவ்வப்போது நிலைமைக்கு ஏற்பக் கொள்கைகளைக் கொள்வது சரியானது என்பதே அவர் கருத்து. அவர் சொல்கிறார்: 'ஒவ்வொரு நாடும் அதனதன் முன்னேற்றத்தின் அளவைப் பொறுத்துத் தங்களுடைய முறைகளை மாற்றிக்கொள்வதோ, திருத்திக்கொள்வதோ —முடிவான இலட்சியத்தை துறந்துவிடாமல் இருப்பது—நல்லதும் அவசியமும் ஆகும்.'[1] நாடுகளின் முன்னேற்றத்தின் முதல் நிலைகளில் அவைகள் தங்களைக் காட்டுமிராண்டி நிலையிலிருந்து விடுவித்துக் கொள்ளவும், விவசாயத்தில் முன்னேற்றம் காணவும், தங்களைவிட முன்னேறிய நாடுகளோடு சுதந்திர வாணிபத்தில் ஈடுபடவும் செய்து, அதன் பின்புதான் தொழில் உற்பத்தி வளர்ச்சி மீன் பிடிப்பதிலும், கப்பல் வாணிபத்திலும், வாணிபக் கட்டுப்பாடு கொண்ட வெளிநாட்டு வாணிபத்திலும் ஈடுபடும். கடைசியாகச் செல்வத்திலும் சக்தியிலும் மிக உயர்ந்த கட்டத்தை அடைந்தவுடன் சுதந்திர வாணிபக் கோட்பாட்டிற்கு திரும்பும். ஏனெனில், அப்போதுதான் விவசாயிகள், தொழில் உற்பத்தி செய்வோர் வணிகர்கள் ஆகியவர்களுடைய சுறுசுறுப்பு நீடிக்கும். இதற்கு உதாரணமாகச் சுதந்திர வணிகப் பொருத்தமுடைய சூழ்நிலைகள் அமைந்த ஸ்பெயின், போர்ச்சுகல், நேப்பில்ஸ் இவைகளைக் குறிப்பிடுகிறார். அடுத்துக் காப்பு விதி மிகவும் தேவை என்பதற்கு ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஜெர்மனி இவைகளை உதாரணமாகத் தருகிறார். ஃபிரான்சு உச்சகட்டத்தின் எல்லையில் நிற்பதாகச் சொல்லுகிறார். சுதந்திர வாணிபம் பொருத்தமுடையது என்றும், அதற்கு ஓர் உதாரணம் கிரேட் பிரிட்டனே என்றும் குறிப்பிடுகிறார். லிஸ்ட்டினுடைய முறைப்படி காப்பு விதியின் அளவையும், நிலையையும், காரணத்தையும் மேலும் ஆராய்வது உகந்ததாகும். முடிந்த இலட்சியம் சுதந்திர வாணிபம் ஆயின், சமமான தகுதியுடைய நாடுகளுக்கு இடையில்தான் சுதந்திர வாணிபம் இருக்க முடியும். ஆகவே, வாணிபச் சுதந்திரம் இயற்கையாக இயங்குவதற்கு முன்னேற்றத்தில் பின் தங்கிய நாடுகள் செயற்கை முறைகளைக்கொண்டு இங்கிலாந்து நாடு எவ்வளவு தூரத்திற்கு உயர்ந்திருக்கிறதோ அந்த அளவுக்கு உயர்தல் வேண்டும்.[2]

இந்தச் செயற்கை முறைகள் காப்பு விதியில் சொல்லப்பட்டு இருக்கின்றன. முன்னேற்றமடைந்த நாட்டோடு பின் தங்கிய

[1] அதே ஏடு, பக்கம் 93.
[2] அதே ஏடு, பக்கம் 107.

நாடுகளை எவ்வாறு உயர்த்திவைப்பது என்பதற்குக் காப்பு விதியே வழியாகும்.[1] காப்பு விதியை அனுசரிப்பதற்கு ஏற்ற நாடுகள் என்று சிலவற்றைத்தான் லிஸ்ட் மனத்தில் கொண்டு உள்ளார். அதனால்தான் லிஸ்ட் சிறிய நாடுகளைப்பற்றி வெறுப்போடு பேசுகிறார். 'ஒரு சிறிய நாடு தன்னுடைய நாட்டு எல்லைக்குள்ளே உற்பத்தியின் எல்லா வழிவகைகளையும் கொண்டு சிறந்த நிலையை அடைதல் இயலாது. அதில் எல்லாக் காப்பு முறைகளும் தனிப்பட்டோரின் ஆதிக்கத்திற்கே ஆக்க மளிக்கும். அத்தகைய சிறிய நாடு பலமிக்க நாடுகளோடு இணைந்தும், உடன் பட்டும், பல தியாகங்களைச் செய்தும்தான் தன்னுடைய சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.[2] எங்கே காப்பு விதி பொருத்தமானதாக இருக்கிறதோ அங்கே கூட உடனடியான தியாகம் செய்யவேண்டியிருக்கும் என லிஸ்ட் குறிப்பிடுவதற்கு அஞ்சவில்லை. எதிர்கால நன்மைகளைப் பெறுவதற்காக நிகழ்கால நன்மைகளைத் தியாகம் செய்ய வேண்டும் எனக் கொள்ளவேண்டும்.[3] ஒரு தேசீயக் கடனுக்கும், அதைப்போன்ற காப்பு விதிக்கும் இடையிலுள்ள மாறுபாட்டைச் சமீப காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தை அவர் அறிந்திருப் பாரானால் நிச்சயம் ஏற்றுக்கொள்வார். ஒரு தேசீயக் கடனைப் பொறுத்தவரையில் அந்தப் பெருஞ் சுமையின் ஒரு பகுதியை எதிர்கால தலைமுறையினர் சுமப்பதன்மூலம் இப்போதைய தலை முறையினர் நன்மையடைகின்றனர். காப்பு விதி முறையின்படி எதிர்காலத்தினர் நன்மைக்காக நிகழ்காலத்தினர் செலவுச் சுமையை சுமக்கவேண்டியுள்ளது. இந்த இரண்டு முறை களிலும் அரசாங்கமே இக்காரியத்தைச் செய்கிறது. ஏனெனில், காலம் கடந்து நோக்கும் சக்தி அரசாங்கத்திற்கே உள்ளது. காப்பு விதி முறையை அனுசரிக்க வேண்டிய அளவு முறையினை நோக்குங்கால் அதற்குள்ள பல வரன்முறைகளைக் காணலாம். முதற்கண், பழைய முறைப்படி பார்ப்பின், அதாவது கருத்துப் பள்ளியினர் கோட்பாட்டின்படி நோக்கின் கச்சாப் பொருள்களின் பரிமாற்றங்களைப் பொறுத்தவரையில் 'மிகப்பெரிய அளவு சுதந்திர வாணிபம்' தனியாருக்கும் நாடு முழுமைக்கும் ஏற்றதும் நன்மை பயப்பதும் ஆகும். தொழிலுற்பத்திப் பொருள்கள் வேறுவித நிலையில் இங்கு இருக்கின்ற காரணத்தால் ஒன்றுபட்ட இயற்கை சக்திகளுக்கு உயிரூட்டவும் செயலாற்றவும் செய்கின்றன. இது இறக்குமதி மீதுள்ள வரையறை காரணமாக ஏற்படுவ தாகும். இதனால் காப்பு விதி சில நாடுகளுக்குத்தான் ஒத்து

[1] அதே ஏடு, பக்கம் 103.
[2] அதே ஏடு, பக்கம் 142-ம் பக்கம் 247-ம் காண்க.
[3] அதே ஏடு, பக்கம் 183.

வரும். தொழிலுற்பத்தியைப் பொறுத்தவரையில் அவை நாகரிகத்தின் உச்ச கட்டத்திற்குக் கொண்டுசெல்வதாகும். ஆனால், 'அவைகள் வெளிநாட்டு உற்பத்தி சக்திகளுக்கு போட்டியிட நேருமாயின் தம்முடைய முன்னேற்றத்தை இழந்துவிடும்.' இது இயந்திரத் தொழில் உற்பத்தியை மட்டுமே குறிக்கும். 'வெளிநாட்டுப் போட்டிக்கு அஞ்சவேண்டி இல்லாத அளவுக்கு உள்நாட்டு உற்பத்தி சக்தி நிலைமை வளருமாயின் இது நியாயமானதாகும்.'[1] மேலும், 'அது உடனடியாகவும் முழுவதாகவும் வெளிநாட்டுப் போட்டியைத் தவிர்ப்பதும், மற்ற நாடுகளினின்றும் பாதுகாப்பு முறையால் தன்னைத் தனிப்படுத்திக் கொள்வதும்' சரியன்று. இயந்திரத் தொழில்களின் எல்லாக் கிளைகளுக்கும் இந்த அளவு பாதுகாப்புத் தருவது கூடாது. எது மிக முக்கியமானதோ அதற்கே காப்புத் தரல் வேண்டும்.[2] அந்த நாடு, தானே உற்பத்தியில் நிறைவு அடைகிறவரையில் இயந்திரங்களை இறக்குமதி செய்வதில் மிகத் தாராளமாக இருத்தல்வேண்டும். பாதுகாப்பு முறையின் உச்ச எல்லைக்கோடு எதுவென்று 'லிஸ்ட்' ஒரு பகுதியில் குறிப்பிட்டுள்ளார். ஒரு தொழிற்சாலைக்கு உற்பத்தி சக்திக்குத் தேவையான அடிப்படைச் சூழ்நிலைகள் அமையாதபோதும், இருபது அல்லது முப்பது சதவிகிதம் காப்புத் தந்தும் அதனால் பலன்பெற முடியாதபோதும், நாற்பது முதல் அறுபது சதவிகிதம் காப்புத் தந்தும் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த முடியாதபோதும் அந்த உச்ச கட்டத்தைக் காணலாம். சுங்கத் தீர்வைகள் அனைவருக்கும் நன்மைதரத் தெரிந்தவையாகவும், ஏமாற்றுவதற்கு வழியின்றியும் இருத்தல்வேண்டும். இந்தக் கருத்தில் 'ஆடம் ஸ்மித்தை' வெகுவாகத் தாக்குகிறார் (காரணம் இல்லாமல் அல்ல). ஆடம் ஸ்மித்தினுடைய சுங்கத் தீர்வைகளை திரும்பப் பெறுகின்ற கோட்பாடு, லிஸ்டினுடைய கண்களுக்கு அழிவைத் தரக்கூடியதாகவும் அர்த்தமற்றதாகவும் தோன்றுகிறது.[3]

லிஸ்டைப் பொறுத்தவரையில் காப்பு விதி என்பது ஓர் இடைக்கால நிவாரணம்தான். ஆனால், போரிலே நாட்டங் கொண்ட நாடுகளைப்பற்றிப் பேசுகிற லிஸ்டிற்கும், சர்வதேசச் சங்கத்தினுடைய தீர்க்கதரிசிபோல் பேசுகிற லிஸ்டிற்கும் விசித்திரமான முரண்பாடு இருப்பதைக் காணலாம். ஓரிடத்தில் 'ஜெர்மனி, ஜெர்மனியின் நல் வாழ்விற்காகவே' என்றும், 'ரஷ்யா, ரஷ்யாவின் நல் வாழ்விற்காகவே' என்றும் முரசறைகிறார். 'சுதந்திர வாணிபத்தின் நற்காலம் எப்போது வருமென்று எதிர்பார்த்து நம்பிக்கொண்

[1] அதே ஏடு, பக்கம் 144.
[2] அதே ஏடு, பக்கங்கள் 144-145.
[3] அதே ஏடு, பக்கங்கள் 254-255.

டிருப்பதைவிட உலகத்தாரெல்லாம் ஒன்று என்ற உணர்ச்சியைத் தீயிலே தூக்கி எறிவது நன்றாகும்.'[1] பெரிய படைகளின்மீது பெரு நம்பிக்கை கொண்ட லிஸ்ட் அகண்ட ஜெர்மனி காணப் பேராசை கொள்கிறார். ஜெர்மனியினுடைய இரும்புப் பிடியில் ஹாலந்தும் டென்மார்க்கும் சிக்கவேண்டுமென்று வெளிப்படையாகவே சொல்கிறார்.[2] வேறோர் இடத்தில் ஜெர்மனி, ஹாலந்து, பெல்ஜியம், ஸ்விட்ஜர்லாந்து இவைகளோடு சேர்ந்து அரசியல் 'வணிக இணைப்பாக'[3] ஆகவேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார். போரேகூடப் பயனுடையதென்று அவர் கருதுகிறார். ஏனெனில், வெறும் விவசாய நிலைமையிலிருந்து தொழில் உற்பத்தி நிலைமைக்கு உயர்த்துவதோடு காப்புக் கொள்கையையும் அது உருவாக்குகிறது.[4] எனினும், வேறோர் இடத்தில் எல்லா நாடுகளும் ஒன்றுபட்டிருக்கின்ற ஓர் இணைப்பை மிக நீண்டகாலத் திற்குப்பின் உருவாகும் ஒன்றாக எண்ணிப் பார்க்கிறார். இதில் அவருடைய மெய்யான நம்பிக்கையைச் சந்தேகிக்கவேண்டியதில்லை. அதைக் காணத் தேவையான வழிவகைகளாக்கூட கோடிட்டுக் காட்டுகிறார். காப்புமுறை அவ்வாறான ஒற்றுமையைச் சிறப்பான முறையில் அமைப்பதற்கு உதவும் கருவிகளாகவும், உண்மையான வணிகச் சுதந்திரத்தை வளர்த்திடும் வழியாகவும் அமைகிறது. மெர்க்கன்டலிஸ்டு முறையைத் திறனுய்வு செய்கின்ற லிஸ்டினுடைய நிலையை கவனிக்கத்தக்கதாகும். அதை எதிர்த்து அவர் கூறுகின்ற கருத்துகள் சிறப்புடையனவாகும். 'உலகம் ஒன்று என்ற கோட்பாட்டை ஒரு சிறிதும் மதிக்காமல் அலட்சியம் செய்வதும், நாடுகளின் எதிர்கால ஒன்றுபட்ட இணைப்பை ஒருசிறிதும் அங்கீகரிக்காமல் இருப்பதும், இடைவிடாத அமைதியை நிலைநாட்டுவதும், உலகம் முழுமைக்கும் பொதுவான வணிகச் சுதந்திரத்தை எல்லா நாடுகளும் அடைந்துதீரவேண்டிய இலட்சியமாகக் கொள்வதை எதிர்ப்பதும் காரணமாகும்.'[5]

வான்துனன்

ஜான் ஹென்ரிக் 'வான்துனன்'[6] (John Henrich Von Thunen -1783—1850) இக் குழுவில் மூன்றாமவராவார். டாக்டர் 'ஸ்பான்' (Dr. Spann) பெரு முயற்சியினால் இவரை இந்தக் குழுவில் சேர்த்துக்கொள்ளலாமே யன்றி இவருக்கு வேறு

[1] அதே ஏடு, பக்கம் 75.
[2] அதே ஏடு, பக்கம் 143.
[3] அதே ஏடு, பக்கம் 332.
[4] அதே ஏடு, பக்கம் 148.
[5] அதே ஏடு, பக்கம் 272.
[6] இவர் 1783-ல் பிறந்தார். ஓல்டன்பர்க்கில் (Oldenberg) ஒரு நிலச்சுவான்தாரின் மகன்; கோட்டிங்ஜனில் சிறிது காலம் கல்வி பயின்றார்; 1810-ல் டெல்லோ எஸ்டேட்டை வாங்கி அங்கேயே வாழ்ந்தார்; 1850-ல் இறந்தார்.

அருகதை இல்லை. முல்லர் (Muller), லிஸ்ட் (List) ஆகியவர்கள் கொண்டிருந்த உணர்ச்சியோ, கொள்கையோ இவரிடத்தில் ஏதும் இல்லை. பொருளாதார நிபுணர்களில் இவரும் தவறிப்போய் ஒருவராய் இருக்கிறார். காரணம், இவர் ஒரு விவசாயியாய் இருந்தமையினால் பயிர்த்தொழில் பிரச்சினைகள் இவர் மூளையைக் குடைந்துகொண்டிருந்தன. இளகிய மனம் படைத்தவராதலால், தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும்பற்றித் தனக்குத் தோன்றியவற்றை அவ்வப்பொழுது எழுதிவைத்தார். முல்லருடைய கட்டுரைகள் அவருக்குத் தலைவலியைத் தந்திருக்க வேண்டும். லிஸ்ட் மிக முக்கியமென்று கருதியவை இவரது உள்ளத்தைத் தொடவில்லை. தேசியம் பற்றிய இவர் கண்ணோட்டம் குறிப்பிடத் தக்கது. உலகத்தின் மையப் புள்ளியாகத் தங்கள் நாடு அமைந்திருப்பதாக எண்ணி இறுமாந்திருப்பவர்களை எள்ளி நகையாடுகிறார். உலக மனித சமுதாயத்தின் நன்மைக்காகப் பாடுபடுவதையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டு மென்கிறார். இங்கிலாந்து இப்போது பழைய பாதையிலிருந்து மாறித் தியாக வழியில் தன்னலம் விட்டுப் பொதுநலம் காப்பதற்காகப் பாராட்டுகிறார். முல்லரும், லிஸ்டும் கவலை கொண்ட பொருளாதாரம் சம்பந்தப்பட்ட அரசியல்பற்றி வான்துனன் ஒரு சிறிதும் கவலை கொள்ளவில்லை. அவரோ ஒரு நில முதலாளி; தம் பண்ணையும், பண்ணை வேலைக்காரர்களும்தாம் அவரைக் கவர்ந்தன. பண்ணையின் வரவு செலவுக் கணக்கை மாலை நேரத்தில் எழுதி வைப்பதில் தணியாத ஆர்வம் உடையவர். பொருளாதாரக் கோட்பாட்டு வளர்ச்சியில் அவருக்கு ஓர் இடம் கிடைப்பதற்குக் காரணமாயிருந்தது, அவர் எழுதிய 'தனித்த நாடு' (Isolated State) என்ற நூலேயாகும். அவருடைய வாழ்க்கையே அந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. தன்னை ஆடம் ஸ்மித்தின் (Adam Smith) மாணவர் என்று சொல்கிறார். எனினும், ஸ்மித் அவர்களைப் பற்றி வான்துனன் கூறுவதாவது, 'ஸ்மித் அவர்கள் பல செய்திகளில் குழப்பமடைந்துள்ளார். அவர் இலாபம், வட்டி இரண்டையும் குழப்பியுள்ளார். வாரம்பற்றி (குத்தகைபற்றி) சரியான விளக்கம் இல்லை. மற்றும் பல்வேறு கருத்துகளை முடிக்காமலே விட்டுள்ளார்.' தம் ஆசிரியரிடம் கொண்ட மதிப்பு, அவர் விட்டுச் சென்ற வேலையை நிறைவு பெறச் செய்வது தம் கடமையென எண்ணினார். இந்நிலையில் உருவானதுதான் அவர் வாழ்வோடு வளர்ந்த 'தனித்த நாடு' என்ற ஏடாகும்.

உருவிலும், முறையிலும், அமைப்பிலும் பொருளாதார இலக்கியங்களிலிருந்து முழுதும் வேறுபட்டதும் (விசித்திரமான

தும்), குறிப்பிடத்தக்கதும் 'தனித்த நாடாகும்.' அந்த ஏட்டினை வடித்தெடுத்துப் பார்க்கின் அதற்கு ஒழுங்கான உருவம் ஏதுமில்லை என்பது தெரியும். கணக்கு உதாரணங்களும், சிறு குறிப்புகளும், விளக்கக் குறிப்புகளும் கலந்த ஒரு ஒழுங்கற்ற கலப்படமாய் அவ்வேடு உள்ளது. தனித்த நாடுபற்றிய அவர் எண்ணங்களுக்கும் அவ்வேட்டிற்கும் எவ்வித ஒற்றுமையும் இல்லை. மனித சமுதாயப் பரிவு நோக்கத்தோடும் (குறிக்கணக்கியல்) அல்ஜீப்ரா கண்ணோட்டத்துடனும் இப் பிரச்சினைகளை ஆய்ந்திருக்கிறார்.

இந்த வழியில்தான், தனித்தநாடு தனித் தன்மை வாய்ந்தது. வான்துனன் பிறர் நூல்களைப் படிக்கச் சிரமம் எடுத்துக்கொள்ளவில்லை. ஆகவே, அவருள்ளம் அன்றலர்ந்த மலராக இருந்தது.

கோட்டின்ஜன் பல்கலைக் கழகத்திலிருந்தும், அதிகமாகப் படிப்பதிலிருந்தும், அவை தமக்குத் தேவையில்லை என்று எண்ணியே விலகிக்கொண்டார். இள வயதிலிருந்தே அவர் மனத்தில் உருவாக்கி வந்த 'தனித்த நாடு' பற்றிய எண்ணம் வெறும் கற்பனையாகும். வான்துனனின் நூலோ நடை முறைக்கு ஒத்துவராத பிரச்சினைகளின் நிலைக்களனுகும். முதல் பக்கத்திலேயே தம் கோட்பாடுகளைக் கவனமுடன் தருகிறார். உடனே எந்தக் கொள்கைகள் தீர்க்கப்படவேண்டியது என்பதையும் விளக்குகிறார். இக்லிடு (Euclid) இருப்பாரானுல் இதைக் கண்டு மகிழ்ந்திருப்பார். இந்தக் கோட்பாடுகள் தனித்த நாட்டில் உருவாகும் அமைப்பின் விசித்திர விளக்கமாகும். செழிப்பு மிக்க பரந்த சமவெளியின் நடுவிலே ஒரு மாபெரு நகரம் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்வோம். அங்கு ஆற்றினூடேயோ, நாவாய் ஓடும் கால்வாய் வழியாகவோ செல்லுதல் இயலாது எனவும் கொள்வோம். அச் சமவெளியோ, சரிசமமான நில வளப்பம் உடைய பயிர்வெளிகளைக் கொண்டது. பயிர்வெளிகள் முடிவடையும் இடமோ, காடு கரம்பான வறண்ட நிலமாம். அச்சமவெளியின்கண் வேறு எந்த நகரமும் இல்லையாதலின் சமவெளியில் வாழ்வோர்க்குத் தேவையான தொழில் முறை உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் இந் நகரமே அளிக்கிறது. இதற்கு மாருக, உயிர் வாழ்வுக்குத் தேவையான உணவுப் பொருள் அனைத்தையும் உழுவோரிடமிருந்து நகரம் பெறுகிறது. இவ்வாறு கொள்வோமானுல் பயிர்ச் செலவு செய்தல் எவ்வாறு நடைபெறுகிறது என்ற கேள்வி எழுகிறது. பயிர்செய் நிலம் நகரத்தினின்று வெகு தூரத்திலோ, அருகிலோ அமைவதனுல் ஏற்படும் விளைவுகளும் அறியத்தக்கன.

இதைக் கூர்ந்து நோக்கின் இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான 'பிரச்சினை என்பது விளங்கும். இருப்பினும், இதை முழுமுதல் உண்மையெனக் கொண்டே வான்துனன் விளக்க முற்படுவது வியத்தற்குரியதே. ரிகார்டோவும் வான்துனனும் புலனுகாத கருத்தியலின் பொழிப்புரையைப் பிழிந்தெடுத்துத் தருவதில் நிபுணர்கள். மற்றப் பொருளாதார வல்லுநர்களைவிடச் சொல்வதை அறிந்து சொல்வதில் சிறந்தவர்கள். தெல்லோவில் (Tellow) தம் சொந்தப் பண்ணை நிருவாகத்தின் நடைமுறை அனுபவத்தில் திளைத்தெழுந்தவர் வான்துனன். அவர் பண்ணைக் கணக்கு எழுதிவைத்திருந்த அளவைக் கண்டால் ஆண்டவனும் அஞ்சுவான். அங்காடியிலிருந்து (மார்க்கெட்டிலிருந்து) பொருள் விளையும் இடத்தின் தூரம்தான் போக்குவரத்துச் செலவாக உருவெடுத்து விலையின் தன்மைக்குக் காரணமாகிறது என்பதே அவர் எடுத்துக்கொண்ட பிரச்சினையாகும். அவர் பண்ணையி லுள்ள ஒவ்வொன்றின் விலையும் எவ்வளவு என்பதை அவர் நுணுக்கமாகக் கண்டதுபோல் கண்டவர் எவருமில்லை. இந்தத் தனித்த நாடு, அவர் தெல்லோவில் பட்டபாட்டின் முடிவுகளில் முகிழ்த்ததே. ஆண்டாண்டுகளாகத் துருவித் துருவிக் கண்டு எழுதிய வரவு செலவுக் கணக்குகளே, இவர் அறுதியிட்ட முடிவுகளின் உறுதியான அடித்தளமாகும்.

உண்மைக்கு மாறுபட்ட கற்பனை அமைப்பின் முடிவுகளா தலின் இதற்கு நிரூபணம் தேவையில்லை (சிறப்பான சாலைகள் எதுவுமில்லை என்று அனுமானித்துக் கொண்டிருப்பதும் காண்க). நகரத்தை நடுவிடமாகக்கொண்டு தூரத்தை அளவிட்டு வரையப் பட்ட வட்ட வளைவுக் கோடுகளுக்குள்ளே அமைந்த நிலங்களில் விளைந்த விளையுளின் நிறையும், அளவும், பெருக்கிய மதிப்பின் மீதமும், பண்டத்தின் போக்குவரத்து செலவினமும் சேர்ந்தே அதன் விலை அமைகிறது. வான்துனன் தாம் அறிந்த ஒன்றை தெரிவிப்பதில் வெற்றி பெற்றுள்ளார். ஆனால், அவரின் புகழோ அதனுள் இல்லை. ஆறு வட்டங்களாக அவர் நிலத்தை அமைத் திருக்கிறார். ஒரு பகுதி நாம் என்ன எதிர்பார்க்கிறோமோ அத்தகு முறையிலும், மற்றொரு பகுதி ஓரளவு வியத்தகு வகையிலும் உள்ளது.[1] ஆனால், இதில் அவர் கண்ட முடிவு சிறப்பானதாக இல்லை. அதன் முழு ஓட்டத்திலும் எது சிறப்பானதெனின்

[1] வியாபாரத்திற்குரிய தோட்டமும் காடும் (Fruchtwechselwirthschaft, Koppelwirths chaft, Dreifelderwirthschaft), கால் நடைகள் (எதை மொழி பெயர்க்க முடியாதோ அதை மொழி பெயர்க்காமல் இருத்தலே நன்று.) ஸ்பான் (Spann) காட்டியவிற்குத் தந்துள்ள சிறப்பை விளக்குகிறார். வேறு பயிர்த் தொழி லுக்குப் பயனற்ற இடம்தான் காட்டிற்கு ஒதுக்கப்படுவதால் காடு மிக நீண்ட தூரத் திற்கு அப்பால் ஒதுக்கப்பட்டுத் தள்ளப்பட்டுள்ளது.

தொழில் நுட்ப ஆலோசனையாகும். அதையும் எதிர்காலக் கண்ணோட்டத்தோடும், புதிய முறைகளை அணுகும் வகையோடும் காணும்போது பாராட்டுதலுக் குரியதாயுள்ளது. தோட்டத்தில் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு உள்வட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று அவர் குறிப்பிடுகின்றார். அழியும் பொருள் என்று கொண்டாலும், போக்கு வரவுச் செலவைக் கவனித்தலும் அதில் சேர்க்கப்படவேண்டும். அவருடைய கருத்துப்படி எந்த நிலம் பால் உற்பத்திக்காகப் பயன்படுகிறதோ, அந்த நிலம் வேறு எந்தப் பொருளும் இதைவிட ஆதாயந் தரத்தக்க முறையில் பயன்படுத்த முடியாதவாறு பாலின் விலை ஏற்றப்படுதல் வேண்டும்.[1] போக்கு வரவுச் செலவை மிக்க கவனமுடன் ஆராய்கிறார் (பயணத்தில் பயன்படும் குதிரைக்காகும் செலவையும் குறிப்பிட்டுள்ளார்). இவ்வாறுக நகரத்திலிருந்து பல்வேறு தூரங்களில் எவ்வாறு தானியத்தின் மதிப்பளவு குறைந்து கொண்டே போகிறது என்பதையுங் குறிப்பிடுகிறார். அதுவும் 49·95 மைல்கள் தூரத்திலிருந்து வருமானால் தானியம் மதிப்பற்ற பொருளாகிவிடுகிறது. ஆகவே, இந்தத் தூரத்திற்கு அப்பால் எந்தச் செலவும் இல்லாமல் தானியம் உற்பத்தி செய்ய முடியுமென்றாலும், பயிர்த்தொழில் செய்வது இயலாத தொன்றாகிவிடுகிறது.[2] இந்தக் கருத்தின்மீது கட்டப்படுகின்ற விளக்கந்தான் வான்துனனுடைய வாரக் கோட்பாடு ஆகும். ஆடம் ஸ்மித் கருத்துக்கு இது திருத்தமாக அமையும் என்று தெரிந்தே இவர் கூறியுள்ளார். ஒரு பண்ணை (எஸ்டேட்) பெற்றுள்ள கட்டடங்களும், அதனுடன் கூடிய சாதனங்களும் நிலத்திலிருந்து பிரித்துப்பார்க்கக்கூடியவைகளே. பண்ணையிலிருந்து கிடைக்கின்ற வருமானம் முழுதும் நிலத்தினின்று கிடைப்பதில்லை. ஆனால், மதிப்பு மிக்க பொருள்கள் (கட்டடங்கள்) மீது முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத்தின் வட்டியும் சேர்ந்ததே ஆகும். முதலீடு செய்யப்பட்டுள்ள பொருள்களுக்கான வட்டியை மொத்த வருமானத்திலிருந்து கழித்துவிடுவோமானால் மிச்சமிருப்பதுதான் நிலத்திலிருந்து கிடைப்பதாகும். அதை நிலத்தினுடைய வாரம்[3] என்று அழைக்கிறோம். வாரத்தின் இச் சொற்பொருள் விளக்கத்தைக் கொண்டால் எதிர்மறை வாரம் கருத்தியலில் இருப்பது சாத்தியமாகும் (மொத்த வரு

[1] அதே ஏடு, பக்கம் 13.
[2] அதே ஏடு, பக்கம் 181.
[3] அதே ஏடு, பக்கம் 33 'நிலத்திலிருந்து பிரித்தெடுக்கும் இப்போக்கு' சோதனை செய்யப்படுமானால் பொருள் தெளிவின்றி இருப்பது தெரிய வரும். பண்படுத்துவதற்காகும் செலவின்மீது ஏற்படும் வட்டியை வான்துனனின் வாரக் கோட்பாட்டினுள்ளே சேர்ப்பதா? அல்லது வெளியில் விடுவதா?

மானத்தைவிட வட்டி அதிகமாயின் கையை விட்டுக் கொடுக்க வேண்டிய பணம் எதிர்மறை வாரமாகும்). தானியத்தின் விலையை நிருணயிப்பதற்கான காரணங்களை ஆராயின், வாரம் எவ்வாறு வந்தது என்பது தெரியும். ஒரு நகரத்திற்குப் பருப்புத் தேவையாயின் அந்நகரத்தார் என்ன விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கும் என்றால், மிகத் தூரத்திலே உள்ள ஒரு தானிய உற்பத்தியாளனின் உற்பத்திச் செலவையும், போக்கு வரவுச் செலவையும் சேர்த்துக் கேட்கின்ற தொகைக்கு அது சமமாக இருக்கும். இதன்மீது வான்துனன் ஒரு பொது விதியை அமைக்கிறார் (உள்ளபடியே அறியவும், தனித்த நாட்டிற்கும்). 'அந்தப் பருப்பின் விலை எவ்வளவு அதிகமாக இருக்கவேண்டுமென்றால், பூஜ்ய நிலைக்குக் கீழேயும் வீழாத அளவில், தானியத்தின் தேவையைத் திருப்தி செய்யத் தக்க பயிரிடவேண்டிய உற்பத்திச் செலவும் போக்கு வரவுச் செலவும் உச்சத்தில் உள்ள ஒரு பண்ணையின் நிலத்தினின்று கிடைக்கும் வாரத்திற்குச் சமமாயிருத்தல் வேண்டும்.'[1] ஆனால், வாங்கு பவனைப் பொறுத்தவரையில் தூரத்தில் விளைந்ததற்கும், அருகிலே விளைந்த தானியத்திற்கும் சந்தை மதிப்பில் வித்தியாசமில்லை. சந்தைக்குக் கொண்டு வருவதில், எதற்கு அதிகம் செலவாயிற்று என்று அவன் கவலைப்படுவதில்லை. 'நகரத்தின் மிக அருகிலுள்ள உற்பத்தியாளன் அவனுக்கு ஆகும் செலவைவிட அதிகமாக மேலும் எதைப் பெறுகிறானோ அது அப்பட்டமான ஆதாயமாகும். மேலும், அந்த ஆதாயம் நிரந்தரமானதும் ஆண்டுதோறும் கிடைக்கப் பெறுவதும் ஆகும். ஆகவே, அவன் பண்ணையின் நிலம் வருட வாரம் பெற்றுத் தருவதாயுள்ளது. இவ்வாருக நாம் வாரத்தின் விளக்கம் பெறுகிறோம். 'ஒரு பண்ணையின் வாரம் என்பது, தேவையைத் திருப்தி செய்வதற்கு அவசியமான உற்பத்தியை உடைய ஒரு நிலம், வளப்பத்தினாலோ, இருப் பிடத்தினாலோ மட்டமான பண்ணையைவிடப் பெற்றிருக்கிற சாதக நிலைகள் அளிக்கின்ற அனுகூலங்களைப் பொறுத்திருக் கிறது.'[2]

வான்துனன் கண்ட கருத்து என்ன என்பது தெளிவாகத் தெரிகிறது; ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டைப் படிப்படி யாக வெளிப்படுத்துகிறார். ஆனால், முதலாவதாக அங்காடியி லிருந்து தூரத்தையும் சூழ்நிலையினையும் கொண்டே ஆராய்கிறார். உறுதியாக ரிகார்டோவைப்போல, 'தர'த்தை எடுத்துக்கொள்ள

[1] அதே ஏடு, பக்கம் 226.
[2] அதே ஏடு, பக்கங்கள் 229-230.

வில்லை.[1] வாரத்தின் மீது விதிக்கப்படும் வரிகளை அவர் ஆதரிக்கிறார். அதனால் என்ன விளைவு ஏற்படும் என்பதும் அவருக்குத் தெளிவாகத் தெரியும். 'நில வாரத்தில்' ஒரு பகுதியை அரசாங்கத்திற்குத் தந்துவிட்டால், இது எந்த விதத்திலும் விவசாயத்தின் வளர்ச்சியையோ அமைப்பையோ மாற்றுதென அறுதியிட்டுச் சொல்கிறார். வாரம் பூஜ்யமாக உள்ள பண்ணைகள் இத்தகைய வரிக்கு ஏதும் அளிக்க முடியாது. மிக தூரத்தில் இருப்பதும், மிக மோசமானதுமான நிலம் ஒரு சிறிதும் இதனால் பாதிக்கப்படாது. ஆகவே, அத்தகைய வரி பயிர்ச் செலவின் பரப்பையோ, மக்கள் தொகையையோ இடப்பட்ட மூலதனத்தையோ, உற்பத்தியின் தரத்தையோ கேடாக்கும் படி பாதிக்காது. வரியால் வாரம் முழுதும் எடுத்துக்கொள்ளப்படுமானால் நிலத்தின் பயிர்ச்செலவு முன்பிருந்ததுபோல் நின்றுவிடும்.[2]

வான்துனன் இந்த வாரக் கோட்பாட்டை விரித்துரைக்கும் போக்கில் இறுதிநிலைக் கருத்தைப் பயன்படுத்தி இருக்கிறார். தம்முடைய ஊக நோக்க ஆராய்ச்சி முழுவதும் பிற்கால இறுதி நிலைக் கருத்துப் பள்ளியினரைப்பற்றி நுணுக்கமாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார். இவ்வாறுகக் கூலிபற்றிச் சிறந்த கோட்பாட்டை நம் முன் வைக்கிறார். ஒரு பண்ணையில் ஓரளவு விளைவிற்கு மேல் ஒவ்வொரு புதிய தொழிலாளியும் உற்பத்தியில் குறைந்த பங்கையே விளைவிக்கிறான். இருபத்தொன்றுவது ஆளைவிட இருபத்து மூன்றுவது ஆள் குறைவாகவும், இவ்வாறே தொழிலாளியின் எண்ணிக்கை வளர வளர, குறைவு உற்பத்தி வளர்ந்துகொண்டே சென்று, கடைசித் தொழிலாளி தான் பெறுகின்ற கூலிக்குச் சமமான புதிய விளைவைத் தருகின்ற நிலையில் இக் குறைவு வளர்ச்சி நின்றுவிடுகின்றது.[3] மேலும், இந்தக் கடைசித் தொழிலாளி பெறுகின்ற கூலி மற்ற எல்லாத் தொழிலாளர்களும் பெறவேண்டிய கூலிக்கு அளவாய் நிற்கின்றது. ஏனெனில், ஒரே விதமான வேலைக்கு வெவ்வேறு விதமான கூலி அளவு இருத்தல் கூடாது.[4] மறைந்தொழுகாமற் கூற வேண்டுமாயின் இதுதான் உழைப்பின் இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாடாகும். ஆக, மேலும் கூலி, வட்டி இவைகளின் தொடர்பைப்பற்றிக் கூறும்போது 'மூலதனத்தின் குறைவு பயனுறுதியை' வற்புறுத்துகிறார். இது முற்றிலும் புதிய கால வழிமுறையாகும். வான்துனனுக்கு மிகவும் பிடித்தமான, மிக

[1] 'தனித்த நாடு' (The Isolated State) பற்றிய விவாதம் முழுவதும் நிலத்தின் ஒரே தன்மையை மேற்கொள்கிறது; ஆகவே, சுழற்றில் ஒன்றை மாற்றத்திற்கு உரியதாக அமைகிறது. ஆயினும், வான்துனன் அதன் உயர்வைப்பற்றிப் பேசத் தயங்குகிறார். 'Lage und Boden'

[2] அதே ஏடு, பக்கம் 346.

[3] அதே ஏடு, பக்கங்கள் 415–416.

[4] அதே ஏடு, பக்கம் 577.

நீளமான அட்டவணையின்மூலம், மூலதனம் அளவில் வளரும் போது இலாப வழிகள் குறைந்துகொண்டே செல்லும் என்றும், அதன் அதிகரிப்பின் ஒவ்வொரு நிலையிலும் மிகக் குறைந்த இலாப வழி என்ன அளிக்குமோ அதே அளவிற்குப் போட்டி கட்டாயமாகக் குறைந்துவிடும். அதன் பயனுக வட்டி (முதல் ஈனும் வாரம்) உபயோகிக்கப்பட்ட மூலதனத்தின் கடைசிப் பகுதி அளிக்கின்ற வருவாயால் நிருணயிக்கப்படுகின்றது. இந்த வட்டி வீதம் நிருணயிக்கப்படுவதில் தொடர்ந்து அதிகரிக்கின்ற மூலதனத்தின் அளவு கணக்கிட முடியாத அளவிற்கு மிகமிகச் சிறியதாகும்.[1]

வான்துனன்பற்றி எழுதப்படுகின்ற மிகச் சிறிய கட்டுரையிலும், தனித்த நாடுபற்றிய அவர் கொள்கையினின்று வெகு தூரத்திற்கு விலகியுள்ள சில கருத்துகள் குறிப்பிடப்படாமல் விடப்படுமானுல் அக் கட்டுரை முழுமையுற்றது ஆகாது. தொழிலாளியின் மிகக் குறைந்த கூலியையும் வேலைசெய்யும் சூழ்நிலைகளையும் கண்டு அவர் வருந்தினர். ரிகார்டோவின் ஏட்டில் கிடைக்கின்ற நிறைவைவிடத் தொழிலாளி மிகுந்த நிறைவைப் பெறத்தக்க வழிவகைகளைக் காண முயன்றார். தொழிலாளி படும்பாட்டைப்பற்றித் தனித்த நாடு என்ற அவர் ஏட்டின் இரண்டாம் பகுதியில் ஒரு பிரிவில் விவாதித்துள்ளார். 'பயங்கரக் கனவு' என்று அவர் அழைக்கும் கருத்துக் குறித்தும் அவர் விளக்கியுள்ளார். 'சாதாரணக் கைத்தொழிலாளி எண்ணிக் கையில் மிக அதிகமான வர்க்கமாக இருந்தும், அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் தரப்படாமல் இருப்பது பெருந்தீங்காகும். தொழிற்சாலையில் வேலைபார்க்கும் ஒருவனுடைய கைத்தொழிலாளிக்குக் கிடைக்கும் ஊதியத்தைக் கணக்கிடும்போது மிக மிகக் குறைந்த அளவுடையதாக இருக்கிறது. ஒரு வகுப்புத் தொழிலிலிருந்து வேறு வகுப்பிற்குச் செல்வது, பள்ளி அறிவை அளிப்பதற்குப் போதுமான ஊதியத்தைப் பெறுத காரணத்தினுல், ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு தொழில் வகுப்பிற்கு மாற்றம் செய்வது இயலாததாய் ஆகிவிடுகிறது. இளமையிலேயே மணம் செய்துகொள்வதாலும், பாட்டாளிகளின் எண்ணிக்கை தேவைகளைவிட அதிகமாக இருப்பதாலும், இந்தக் குறைந்த கூலி விகிதங்கள் சாசுவதமாக இருக்கின்றன. இந்நிலை மாற, மக்களின் குணநலங்களில் பெரியதொரு மாற்றம் வேண்டுமென விளம்புகிறர். வான்துனன் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்வதாவது, மண நாளைத் தள்ளிப்போடுவது, சிறந்த கல்வி

[1] அதே ஏடு, பக்கங்கள் 496, 498, 558.

அளிப்பது, எதிர்காலத்தை எண்ணிப்பார்ப்பது ஆகியவை ஆகும். இவைகளிலிருந்துதான் ஆச்சரியப்படத்தக்க அந்த விளைவுகளை எதிர்பார்க்கிறார். 'சொர்க்கம்' என்ற சொல்லைக் கூட அவர் பயன்படுத்தத் தவறவில்லை.

இந்தக் கனவிற்கு அப்பால் பார்த்தால், கூலிப் பிரச்சினையைப் பற்றிய இரண்டு காரியங்களுக்காக வான்துனன் போராடுகிறார். முதலாவதாக, உழைப்பு ஒருசிறிதும் இன்றிப் பெறுகின்ற வாரத்தின் அளவிற்கு ஏன் கூலித் தொகைகளை உயர்த்தக்கூடாது? இரண்டாவதாக, பொருள்களின் இயற்கையான போக்குக்குத் தக்கபடியும், ஆண்டவனின் திருவுள்ளப்படியும் நிருணயிக்கப் பட்டதாகச் சொல்லப்படும் குறைந்த கூலி விகிதங்கள் அடிமைத் தனத்தினுலா, ஆதிக்க வெறியினுலா, எவ்வாறு இப்போது ஏற்பட்டது? முதல் கருத்துப்பற்றி வான்துனன் 'வாரம் ஒரு சிறிதும் அளிக்காத நிலத்தின் பயிர்ச் செலவின் இறுதிநிலைக்கு' அதிகரிக்கும் கூலியினுல் ஏற்படும் விளைவுகளை ஆராய்கிறார்.[1]

இது முடிவாக எதற்கு அழைத்துச் செல்கிறது என்றால், தொழிலாளர்கள் மாற்றப்படவும், கூலித்தொகை அழுந்தவுமான நிலையில் நகரத்தை நோக்கிப் பயிர்ச்செலவு இறுதிநிலை இழுக்கப் படுவதற்கே பயன்படுகிறது. கூலித் தொகைகளில் உண்மையான விகிதம் பற்றிய பிரச்சினையில் பொருளாதார இலக்கியத்தில் ஆர்வந் தரும் ஒரு கருத்தை வான்துனன் தர முயல்கிறார். கூலியானது இரண்டு உறுதியான பகுதிகளைக்கொண்டு இலங்க வேண்டுமென்று அவர் மொழிகிறார்: (1) தன்னைத் திறமையாக வைத்துக்கொள்ளத் தொழிலாளி எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்பதும், (2) தன்னுடைய இடைவிடாத உழைப் பிற்கு அவன் என்ன பரிசாகப் பெறவேண்டும் என்பதும்.[2] கூலியை 'உழைப்பு' என்ற பண்டத்திற்குத் தரப்படும் விலை என்று மாத்திரம் அல்லாமல் வேறு பலவும் ஆகும் என்று முதன் முதல் குறிப்பிட்டவர் இவர்தாம் என ரோஷர் ஏற்றிப் போற்றிப் பேசுகிறார். இதற்கு அப்பாலும் கூலிக் கோட்பாட்டிற்கு அவர் அளித்துள்ள விளக்கம் எல்லை மீறியதாகும். இயற்கையும் நியாயமும் ஆன கூலி விகிதத்தைக் காணவேண்டுமெனும் அவாவில் கணக்கியல் வாய்பாடுகளைக்கொண்டு வெவ்வேறு வழிகளில் நிரூபிக்க முயலுகிறார். கூலிபற்றிய உண்மையான வாய்பாடு $\sqrt{அ}$ ப என்பதில் அ என்பது வாழ்வதற்குத்

[1] அதே ஏடு, பக்கம் 463.
[2] அதே ஏடு, பக்கம் 490.

தேவையான உணவையும், ப என்பது தொழிலாளியின் உற்பத்தித் திறனையும் குறிக்கும். இனி இருக்கிற நிலையில் இந்த நிரூபணம் உண்மைக்கு மாறுபட்ட பல எடுகோள்களின் மேல் நிற்கிறது. தொழிலாளி தான் உற்பத்தி செய்கிற வளப்பத்தில் பங்குபெறவேண்டும் என்ற கருத்தை கோடிட்டுக் காட்டுவதே இந்த வாய்பாட்டின் நோக்கமாகும். நடைமுறையில் தம்முடைய பண்ணையில் இலாபப் பங்குத் திட்டத்தை வான்துனன் புகுத்தியதுபோல் தோன்றலாம். இதுவும் ஏதோ ஒரு வழியில் $\sqrt{}$அ ப என்ற வாய்பாட்டால் விளக்கப்படலாம். வான்துனன் கூட இந்த வாய்பாட்டைத் தம்முடைய தலைசிறந்த முன்னேற்றத்தைக் காட்டுவதென எண்ணினார். அதுவும் தம்முடைய கல்லறையின் மீது எழுதப்படவேண்டும் என்று விரும்பினார். விளம்பர சாதனங்களான கல்லறை எழுத்துகளுக்கு உறுதியான நிரூபணம் தேவை என்று இதுவரை வற்புறுத்தப்படவில்லை.

9. நன்னம்பிக்கையாளர்கள்

கரே—பாஸ்டியட்

'தொன்மை அரசியற் பொருளாதாரம்' அவநம்பிக்கை யுடைய கருத்துகளின் நிலைக்களனாய் இருந்தது. இதற்கே மால்தசும் ரிகார்டோவும் தலைமையேற்றனர். குறைந்துசெல் விளைவு விதியின் அடிப்படையிலும், மக்கள் தொகைக் கோட் பாட்டின் மீது எழுந்த வாரம்பற்றிய விதிகளிலிருந்தும் கொண்ட எடுத்துக்காட்டுகள் மேலும் அவநம்பிக்கையைத் தூண்டி விட்டன. அச்சத்தை மூட்டும் எதிர்காலத்தைச் சுட்டிக்காட் டியதோடு அவர்கள் நிற்கவில்லை. எண்ணிக்கையில் வளர்ந்து வரும் ஒரு வகுப்பாகிய சோம்பேறிக் கூட்டத்திற்கு உணவைப் பெருக்கவேண்டிய அவசியத்தையும் எடுத்துக்காட்டினர்கள். இயற்கை அளிக்கும் விருந்தில் இடமில்லாத நிலை உருவாகும். சஞ்சலமும், சச்சரவும், தொல்லையும் நிறைந்த அமைப்பைத் தொன்மைப் பள்ளியினர் காட்டுகின்றனர்.

கரே

அவநம்பிக்கையைத் தகர்த்துத் தன்னம்பிக்கையுடன் பொருளாதாரக் கோட்பாடு முன்னேற ஆரம்பித்தபோது அதற்குத் தலைமை யேற்றவர் ஹென்ரி சார்லஸ் கரே[1] (Henry

[1] சார்லஸ் கரே 1793-ல் பிலடெல்பியாவில் (Philadelphia) பிறந்தார். அயர் லாந்திலிருந்து சென்று குடியேறிச் சிறப்புமிக்க வெளியீட்டாளராக இருந்தவரின் மகன்தான் கரே. அவர் தொழிலில் நல்ல வெற்றி பெற்றார். 1835-ல் இளமைக் காலத்திலேயே தொழிலிலிருந்து விலகிப் பொருளாதார இலக்கியங்களை எழுதுவதில் தம்முடைய காலத்தைச் செலவிட்டார். அவர் எழுதிய அளவு, நூல் எழுதியவர்கள் மிகக் குறைவே. அவருடைய பெரிய நூல்கள் பதின்மூன்று பெரும் பகுதிகளாக உள்ளன; அவருடைய சிறிய வெளியீடுகளோ ஐம்பத்தேழு. அவை யெல்லாங்கூடச் சிறியவை அல்லவென்றும் கூறலாம். அவரின் முக்கியமான நூல்கள்: 'அரசியல் பொருளாதாரக் கோட்பாடு', 'கூலி வீதம் பற்றிய கட்டுரை' (Essay on the Rate of Wages, Principles of Political Economy) (மூன்று பெரிய பகுதிகள்) 'நேற்று, இன்று, நாளை ஒத்து வரும் பொறுப்புக்கள்' (The Past, the Present and the Future, Harmony of Interests) 'சமூக அறிவியலின் கோட்பாடுகள்' (The Principles of Social Science) (மூன்று மிகப் பெரிய பகுதிகள்) முதலியனவாகும்.

Charles Carey) ஆவார். ஒரு சமயத்தில் அவரை அமெரிக்க அரசியல் பொருளாதாரத்தின் தனிப் பிரதிநிதியென்று விசித்திர மாகக் கருதியதுமுண்டு. அவருடைய காலத்தில் அவருக்கு அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பெருமதிப்பு இருந்தது; இங்கிலாந்தில் அவ்வளவு இல்லை. ஆனால், நம் காலத்திலோ அவருடைய நூல்கள் சிறப்பிழந்துவிட்டன. காரணம் அவருடைய ஏடுகளின் மிகப் பெரிய அளவு திரும்பத் திரும்ப ஒன்றையே சொல்லும் போக்கும், குழந்தைத் தனமான விஷயமுமே ஆகும். விடா முயற்சியுடனும் பொறுமையுடனும் அவரது நூலைப் படிக்க முற்படுவோர்க்கு அவர் கொஞ்சம் கவர்ச்சியுடைய வராகத்தான் தெரிகிறார். அவருக்கென்று உள்ள கருத்துகளை நோக்கின் அதில் ஒன்றும் தவறு இல்லை. பொருளாதாரவாதி தன் சூழ்நிலையை அனுசரித்தே நூல் எழுதுகிறான் என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாய் நிற்கும் பெரிய மனிதர் கரே. நம்மிடம் மதிப்புப் பெறுவிட்டாலும், மற்ற இடங்களில் பெருமதிப்புப் பெற்றிருக்கிற கரேயைப் போன்ற ஒருவரை நாம் ஆய்வது நன்றே. மற்றவர்களெல்லாம் அளவுக்கு மீறிப் பெருந்தன்மையோடு பாராட்டும்போது நாம் நியாயமான அளவுக்கு அவரைப் பாராட்டுவது நல்லது.

கரேயினுடைய கருத்தோட்டத்தின் மையப்புள்ளி எது வென்று எளிதாகக் காணவேண்டுமாயின் அதுதான் அவருடைய மதிப்புக் கோட்பாடாகும்.[1] அவரைப் பொறுத்த வரையில் உழைப்பென்பது ஒன்றே மதிப்பிற்கான காரணமாகிறது. ஆனால், கரேயின் உழைப்பு மதிப்புக் கோட்பாடு பல மாறுதல்களை உடையதாக இருந்தது. அது அவரை விசித்திரமான முடிவுகளைக் காணச் செய்தது. (கரே மயக்கம் கொண்டுள்ள) முந்தைய ராபின்சன் குருசோவினுடைய பொருளாதார நிலைமையில் பண்டங்கள், அவற்றைச் செய்வதற்குத் தேவையான உழைப்பின் விகிதாசர அளவோடு பண்டமாற்றுதலுக்குக் காரணமாயிற்று. ஆனால், திரைக்கு முன்னால் மூலதனம் தோன்றிய உடன் நடைமுறை மதிப்புகளிலெல்லாம் ஒரு மாற்றம் பீறிட்டு எழுந்தது. இப்போது பண்டங்களெல்லாம், பொருள்களை மறு முறை செய்வதற்காகும் செலவோடு ஒன்றேடொன்று பரிமாற்றிக் கொள்ளும். ஆனால், மனித சமுதாயம் முன்னேற முன்னேற அடுத்தடுத்து உற்பத்தியாகும் பொருள்களின் செலவு மெல்ல மெல்ல விழுந்தது. இவ்வாறுக எல்லா நடைமுறை மூலதனத்தின் மதிப்பும் ஒரே சீராகக் குறைகிறது. கரேயின் மொழியில் கூறுவதானால், மதிப்பு

[1] Principles of Political Economy, தொகுதி 1, அதிகாரம் 2, பக்கங்கள் 19,20.

என்பது 'நாம் அடைய விரும்பும் ஒரு பொருளைப் பெறும் முயற்சியில் தடைகளை எதிர்த்து நிறுத்தவேண்டிய சக்தியின் ஓர் அளவுதான்.' இதிலிருந்து தெரிவது என்னவென்றால், மூலதனத்தின் உதவி பெற்ற 'உழைப்பு'த் தரத்தில் உயரும். பண்டங்களின்மூலம் வெளியாகும் உழைப்பின் பரிமாற்ற மதிப்பு ஒரே சீராக அதிகரிக்கும். அதே நேரத்தில் நடைமுறை மூலதனம் மதிப்பில் அதே அளவு குறையச் செய்யும். உழைப்பில் கூறுவோமானால் ஒவ்வொரு நிலையிலும் மறு முறையும் செய்வதற்கான செலவால் மதிப்பு நிருணயிக்கப்படுகிறது; நிலைவுக் கோட்பாட்டின்படி அது ஒரே அளவில் வீழும் என்று கொள்ளவேண்டும். மேலும் இதற்கு முன் செய்யப்பட்ட இயந்திரங்களின் உழைப்பின் மதிப்பும், குறைந்துகொண்டே செல்லும். கரே மேலும் சொல்கிறார்: காரண காரியங்களின்படி பார்த்தால், ஆக்கும் சக்தி வீதமும் அதே அளவில் குறைந்துகொண்டே போகும். இதை வேறு வார்த்தைகளில் சொல்வதானால், தொழிலாளியின் நிலையும் முன்னேற்றமடைந்துகொண்டே செல்லும்.[1] முதலாளி, தொழிலாளிக்குத் தரும் ஊதியமும் வளர்ந்துகொண்டே செல்லும்; ஆனால், அதிகரிக்கும் உற்பத்திப் பொருள் ஒவ்வொன்றுக்கும் ஊதியம் ஓரளவு குறைந்துகொண்டே செல்லும்.[2]

கரே நிலத்தை மற்றப் பல்வேறு விதமான மூலதனத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார். ஆகவே, வாரம் என்பதைத் தனியாகக் கொள்ளவில்லை. 'இயந்திரங்களின்மீது போடப்பட்ட முதலீட்டிற்கும் நிலத்தினுடைய மூலதனத்திற்கும் வேறுபாடு இல்லை; வாரம் என்பது முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் வட்டியே ஆகும்; இயற்கை அருளியுள்ள வரையறையற்ற வளங்களைப் போன்று நிலவளத்தின் மதிப்பு அதைப் பயன்படுத்தவும் செழிப்பாக்கவும் செலவிடப்பட்ட உழைப்பின் மதிப்பேயாகும்.'[3] மூலதனத்தின் மற்றப் பல்வேறு உருவங்களும் சமுதாய வளர்ச்சியினால் விளைந்தவைகளே. பிந்திய பயிர் நிலங்கள் குறைந்த செலவிலே வேளாண்மைக்குக் கொண்டுவரப்பட்டன. ஆக, இங்கே மறு முறை உற்பத்திச் செலவு ஒரே அளவாக வீழ்கிறது. நிலத்தைப் பண்படுத்திய செலவைவிடக் குறைவாகவே நிலம் ஏறக்குறைய விற்கப்படுகிறது. இது ரிகார்டோ சொன்ன கொள்கையான 'அழிக்க முடியாத அடிப்படை சக்திகளுக்காக' நிலத்திற்கு விலை கொடுக்கப்படுகிறது என்ற கருத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். இந்தக் கடைசிப் பகுதிகள் உண்மையில் நிலைநிறுத்தப்படவில்லை.

[1] Social science, தொகுதி 1, பக்கம் 158.
[2] Political Economy, தொகுதி I, பக்கங்கள் 129–130.
[3] Political Economy, தொகுதி I, பக்கங்கள் 129-130.

உற்று நோக்கின் கரேயின் கருத்துகள் சமுதாயத்தின் முன்னேற்றத்தில், ஏன்? வரையறையற்ற முன்னேற்றத்தில் நம்பிக்கைகொண்டு கூறியதாகும். முதன்முதலில் வாழத் தொடங்கிய பழங்குடி மக்கள் பெற்றிருந்த நேரத்தால் நீண்ட நாட்களே அவர் ஒவ்வோர் இடத்திலும் நிலைஊட்டுகிறார். முந்தையப் பழங்குடி மக்கள் சமுதாயத்தில் கிடைத்த ஒவ்வொரு புதிய மனிதனும் இயற்கையை எதிர்த்துப் போராடக் கிடைத்த புதிய வீரனுவான். முல்லரைப் போன்று, ஆனால், கொஞ்சம் அழுத்தமாக மனிதனின் அடிப்படைத் தேவைகளே ஒத்திட்டுக் காண்கிறார்; 'மனிதனது முதல் ஆசையும் முழுமையான ஆசையும் தன்னுடைய உற்றார் உறவினரோடு சேர்ந்து வாழ்தலேயாகும். ஏனெனில், மனிதன் இவ்வாறு வாழ்தலினுல் மட்டுமே உடலையும், குணநலன்களையும், அறிவையும், அரசிய லையும், சுற்றுச் சார்பு சூழ்நிலைமைகளையும் ஒரே சீராக வளர்த்து வாழ்வில் வெற்றி காணவேண்டும் என்று அவன் நினைப்பதினுலே யாகும்.'[1] 'தச்சன் தனது உழைப்பை உணவுக்காக மாற்றிக் கொள்ள வந்ததும்', உழவன் கொல்லன் வரவால் மகிழ்ச்சி கொண்டதுமான முன்னைய சமூகத்தின் முன்னேற்றமும், வளர்ச்சி யும், அமைப்பும் அவருடைய புத்தகங்களில் அடிக்கடி வருவ தொன்றுகும்.

இவ்வாறு புதிய நாட்டில் குடியேறிய ஒருவனது நிலைமை யையும் வாழ்வின் நோக்கத்தையும் கொண்டுபார்த்தால், மால்தஸினுடைய மக்கள்தொகைக் கோட்பாட்டையும், குறைந்துசெல் விளைவுக் கோட்பாட்டையும் (அதனுடன் ரிகார் டோவின் வாரக் கோட்பாட்டையும்) வசைமாரி பொழிந்து தூற்றி மறுக்க முயல்கிறார். 'புதிய குடியேற்றம் தரும் வளர்ச்சியை இன்றைய தினம் நாம் கண்டு அறிந்து எழுதுவது போன்று ரிகார்டோவால் ஒருபோதும் முடியவில்லை.' இச் சொற்றொடர் சிறப்பானதாகும். ரிகார்டோவின் கோட்பாட்டை வேறு முறையில் கரே கூறியுள்ளார். பயிர்த்தொழில் ஆரம்பித்த மிகப் பழங்காலத்தே மிக நல்ல வளம் பொருந்திய நிலங்கள் மட்டுமே பயிராக்கப்பட்டன என்ற தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். 'இக் கருத்து உண்மையோ, பொய்யோ, தக்கதோ, தகாததோ தெரியவில்லை. அவ்வாறு இல்லையெனில் இக் கருத்தும் இடிந்து வீழ்ந்து மண்மேடாகிவிடும்.' இவ்வாருக கரே தாம் கொண்ட கருத்தை வெற்றியுடன் நிரூபிக்க அறிவியல் பாதையைக் கொள்கிறார். ரிகார்டோவின் கோட்பாட்டிற்கு எது

[1] Harmony of Interests, பக்கம் 52.

அடிப்படையோ அதற்கு முழுதும் முரண்பட்டே பயிர்த்தொழில் முறை இருந்திருக்க வேண்டுமெனக் கூறுகிறார்.

பண்படாத நிலந்தான் முதன்முதல் பயிர்செய்யப் பயன் படுத்தப்பட்டது. ஏனெனில், தாவரங்களின்றி அந்நிலங்கள் இருந்தமையால் முதல் கட்டங்களில் அதைப் பயன்படுத்து வது எளிதாக இருந்தது. பலரோடு சேர்ந்து மிகுந்த சக்தியைக் கொண்டுதான் மலை சார்ந்த பகுதிகளிலிருந்து வளமிக்கப் பள்ளத் தாக்குகளுக்கு வந்தனர். 'இந்தச் சட்டத்தினின்று விதிவிலக்கு இருப்பதாகவே காணேம். நாம் அறிந்தவரையில் அவ்வாறு ஒன்று இருக்கமுடியும் என்றே இருந்தது என்றே சொல்ல முடியாது.'[1] இவ்வாறு நிலத்தை மற்ற மூலதனத்தின் அமைப் புக்களோடு அவர் கண்டார். 'நிலம் என்பது தன்னுடைய காரியத்திற்கு ஏற்றவாறு பண்படுத்திக் கொள்ளக்கூடிய மனிதனுக்கு அளிக்கப்பட்ட ஒரு பெரிய இயந்திரமாகும்' என்கிறார் கரே. மிக இழிந்ததிலிருந்து ஆரம்பித்து மிக உயர்ந்ததை அடைவதற்கு மனிதன் முயற்சிக்கிறான். இதுதான் பல துறை முன்னேற்றத்தின் சாரமாகும். முதன்முதலில் கல்லும், அதன்பின் இரும்பும், அதன்பின் எஃகினால் செய்யப்பட்ட சம்மட்டிகளும் பயன்பட்டன. உணவைப் பெறுவதற்கு இத் தகைய இயந்திர முறையைப் பயன்படுத்தினான் என்ற ரிகார் டோவின் கோட்பாட்டை நாம் ஒப்புக்கொண்டால், மனிதன் சிறந்ததிலிருந்து மிக இழிந்ததற்குச் செல்கிறான் என்று கொள்ள வேண்டி இருக்கிறது.[2] வரலாறு ஆய்வு முடிவுகளைப் பொறுத்த வரையில், குடியிருப்புகளின் அமைப்புப்பற்றி கரே சொல்லிய கருத்து உண்மையென ஒப்புக்கொள்ளவேண்டி இருக்கிறது. இவையெல்லாம் தெளிவான விளக்கங்களாகும். முதலாவதாக ரிகார்டோவினுடைய கோட்பாடு வரலாற்று வளர்ச்சியை அடிப் படையாகக் கொண்டதல்ல. ஆரம்ப காலத்தில் சிறந்த நிலங் களில் பயிரிடுவதும், அதன்பின் தரம் குறைந்த நிலங்களைப் பயன் படுத்துவதும் வரலாறு ஆகும்.

ரிகார்டோ உவமை காட்டுகிற வளத்தைப்பற்றி ஒரு நேரத் தில் ஆராய்கிறார். அந்த ஒரு நேரம் என்பது வேளாண்மையில் சில நேரங்களில் கூடுதலான வருவாயும், சில நேரத்தில் செழிப்பாக இருந்த நிலம் மற்றொரு நேரத்தில் செழிப்புக் குன்றி காணப்படுவதும் ஆகும். இது ரிகார்டோவை வாயடைக்கச் செய்துவிட்டது. ரிகார்டோவைப்பற்றிய பெருங்கதையான

[1] The past, The Present and The Future, பக்கங்கள் 21-39.
[2] Political Economy, தொகுதி I, பக்கம் 25.

திறனுய்வுகளில்தான் அவர் சொல்வதைப் புரிந்துகொள்ள முடிய வில்லை என்று சொல்கிறார். இதைப் போன்றே மால்தசைப் பற்றியும் புரிந்துகொள்ள முடியவில்லை என்கிறார். ஆனாலும் கரேயின் புத்தகம் உதவாக்கரை ஆகிவிடவில்லை. அவருடைய ஆராய்ச்சியின் வரலாற்றுப் பின்னணிக்கு அப்பால் குறைந்துசெல் விளைவு விதியைப்பற்றி மிகக் கவனமாக ஒரு கருத்தினைச் சொல்லியுள்ளார்.

'ஒரு குறிப்பிட்ட அளவைக் கடந்து' என்ற வார்த்தைகளை அழுத்தம் திருத்தமாகச் சொல்வதன்மூலம் அவர் நிரூபிக்கிறார். கல், இரும்பு, எஃகு, சம்மட்டி இவைகள் திறனற்ற கருவியி லிருந்து திறன்மிக்க கருவிகளுக்கு வந்துள்ள முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. இந்தக் கருத்திலுள்ள தவறு ஆராய்வதற்குரிய தாகும். முதலாவதாக மனிதன் கற்கோடாரிக் காலத்தைக் கடந்தவுடன், அக் கோடாரியை அழித்துவிட்டான். இவ்வாறு முதன்முதல் தரங்குறைந்த நிலத்தைப் பயிர் செய்தபோது நடக்க வில்லை. அது தாற்காலிகமாக பயன்படுத்தப்படாவிட்டாலும் அவசர காலத்திற்குத் தேவைப்படுமென்று பாதுகாக்கப்பட் டுள்ளது. இரண்டாவதாக மனித சமுதாயம் கூட்டுச் சேருவதன் மூலமாகப் பலத்தைப் பெற முடியும் என்றால் எங்கெங்கே பள்ளத் தாக்கு இருந்ததோ அங்கெல்லாம் அவர்கள் சென்றார்கள். இவ்வாறுகச் சென்றுகொண்டேயிருந்தால் இனிமேல் செல் வதற்கு எந்தப் பள்ளத்தாக்கும் இல்லையென்ற நிலையும், உழுது பயிர்செய்ய மேலும் வளமுள்ள நிலங்கள் கிடைக்கா என்ற நிலையும், அதனால், அதற்கு முன்னால் தேவையில்லையெனத் தாற்காலிகமாக ஒதுக்கப்பட்ட வளங்குறைந்த நிலங்களுக்கு மறுபடியும் திரும்பிவரவேண்டிய நிலையும் ஏற்படும். சுருங்கக் கூறின் இயந்திரங்களைப் பொறுத்தவரை மனித இனம், தமக்கு ஒரு நேரத்தில் தெரிந்த மிகச் சிறந்த இயந்திரத்தோடு திருப்தி அடைந்தது.

ஆகவே, பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் ஒரே சீரான திறனுடையவையாக இருந்தன. ஆனால், இது நிலத்தைப் பொறுத்தவரையில் முற்றிலும் மாறுபட்டதாகும். பல்வேறு திறனற்றல் கொண்ட 'உபகரணங்களை' ஒரே நேரத்தில் பயன் படுத்தவேண்டிய அவசியம் அங்கு உள்ளது. இதில்தான் ரிகார்டோவின் வாரக் கோட்பாடு அடங்கியுள்ளது.

இவையெல்லாம் பற்றி கரே ஒருசிறிதும் கவலை கொள்ளவே யில்லை. அவரைப் பொறுத்தவரையில் உலகம் எல்லையற்றது;

விரிந்தது; உழவுத் தொழிலில் வளர்ந்துசெல் விளைவு மாரு மதிப்பளவையாக ஏற்றம் பெறுவதற்கு ஏதும் தடையிருப்பதாக அவர் கருதவில்லை. அவர் அவ்வாறு கூறிப் போந்தது அவர் துணிவைக் காட்டுவதாகும். 'கைப்பற்றிப் பயன்படுத்தப்படாத நிலம்' இப்போதும் எப்போதும் ஏராளமாக இருந்து வருகிறது. உணவை உற்பத்தி செய்வதற்கான வளமிக்க நிலம் எல்லையற்று இருப்பதாகவே அவர் கருதினர். உழைப்புச் சேமிப்புப் பெட்டக மாக நிலம் ஒன்றுதான் இருந்து வருகிறது. 'அதன் ஆதாயப் பங்கு முடிவில்லாமல் வளர்ந்துகொண்டே செல்ல, அதன் மூல தனம் முடிவில்லாமல் இரட்டித்துக்கொண்டே செல்கிறது.' அதன் உற்பத்தியின் கழிவை அது திரும்பப் பெற்றுக்கொண் டிருக்கிறவரையில் அது இவ்வாறே எப்போதும் தொடர்ந்து செல்லும். இது கரேயின் தற்காப்புக் கருத்துகளைப் பொறுத்த வரையில் மிக முக்கியமானதாகும். ஆக, 'வளர்ந்துசெல் விளைவு வீதம் உடையதாய் எல்லையற்ற அளவில் உழைப்பும் மூலதனமும் ஈடுபடுத்தத் தக்கதாய் அமைந்த ஒரே ஒரு தொழில் வேளாண் மையாகும்.[1]

மேற்கூறிய கருத்துகளே, மால்தசுக்கு எவ்வாறு விடை யிறுப்பார் என்பதை ஓரளவு காட்டும். மற்ற எந்தக் காரணங்க ளாலும் பாதிக்கப்படாமல் இருக்குமானால், மூலதனம் மக்கள் தொகையைவிட மிக வேகமாக வளரும் தன்மையது.[2] இது எதைக் காட்டுகிறது எனின் கூட்டு வாழ்வின் மேன்மையையும், இயற்கை சக்திகளை எதிர்த்து அடக்கக் கூடியவர்களின் எண்ணிக்கை வளரும் சக்தியினையும் காட்டுவதாகும். அப்போது 'மக்கள் பெருக்கத்தில் ஏற்படும் ஒவ்வொரு கூடுதலான எண்ணிக் கையும், ஒரு துய்ப்பவனையும், ஓர் உற்பத்தியாளனையும் கொண்டு வருகிறது.'[3] முதன் முதலில் குடியேறியவர்கள் எண்ணிக் கையில் குறைந்திருந்த காரணத்தால், ஒவ்வொரு புதிய சேர்க்கையிலும் செல்வத்தைப் பெருக்குவதற்கான சக்தியையும் திறமையையும் வளர்ப்பதற்கு முற்பட்டனர். இவையெல்லாம் உண்மையே. மனிதன் தனிமையாக வாழ இயலாது. குறைந்த மக்கள்தொகை உள்ள காலத்தில் செல்வத்தை வளர்ப்பதற்கான ஒரு வழியே மக்கள் பெருக்கம் ஆகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்த அமெரிக்காவின் நிலைமைகளை நோக்கும் போது இக் கருத்து மிக நியாயமானது என்பது புலப்படும். ஆனால், இந்த எச்சரிக்கைக்கு அப்பாலும் மால்தசுக்கு எதிராக விசித்திரமான விவாதங்களில் கரே ஈடுபடுகிறார்.

[1] The Past, the Present and the Future, பக்கங்கள் 77-99.
[2] Wages, பக்கம் 81.
[3] Harmony of Interests, பக்கம் 86.

அதில் ஒன்று மிக முக்கியமானதாகும். ஆனால், அது சமய சித்தாந்தமாகும். அதில் ஆண்டவன் குறிப்பிட்டதாகச் சொல்லியிருப்பதாவது, 'மகப் பேறு அளியுங்கள். மக்கள் செல்வத்தைப் பெருக்குங்கள்' என்பதாகும். புதிய கால அரசியல் பொருளாதாரம் கூறுவதாவது, 'மகப் பேறு வேண்டா, மக்கள் பெருக்கமும் வேண்டா.' 'இது கடவுளின் முதல் கட்டளையையே மறுத்துரைப்பதாகும். ஆண்டவன் சந்நிதானம் தந்த பிழைபட்ட ஏற்பாட்டிற்கு வறுமையையும் ஏழ்மையையும் காரணமாகக் காட்டி உரைக்கிறது.'[1] மால்தஸ் கோட்பாடு ஒழுங்கு படுத்தப் பட்ட உண்மைகளைத் தலைகீழாக்குகிறது என்று இவர் விமர்சிக்கிறார்.[2] ஆனால், இவர் விமர்சனமோ நடை நயமற்றது; குழப்பம் மிகுந்தது. மக்கள் தொகை பெருகும்போதுதான் உணவும் அபரிமிதமாகிறது. மீண்டும் மால்தஸின் கோட்பாட்டைக் குறிப்பிடும்போது மால்தஸினுடைய தடைகள் நடைமுறையிலிருக்கும்போது உணவு மிகுதியாக இருத்தல்வேண்டும்; ஆனால், போர் நிகழும் காலத்து இக்கட்டு இருக்கிறது: 'சமாதானம் வருகிறது—தடைகள் ஒதுக்கப்படுகின்றன—மூல தனம் மீண்டும் வளரத் தொடங்குகிறது.'[3] கடுமையாகக் கூறுவதெனின், 'ஆண்டவனின் தவற்றினைத் திருத்தப் போர் ஏற்பட்டதா? மனிதனது தவற்றால் ஏற்படும் நிலைமைகளைக் களைவதற்கு என்றே ஆண்டவன் போரை உண்டாக்கினாரா?'[4] இவைகளையெல்லாம் நோக்கின் தூய மால்தஸின் கொள்கைகளை ஒதுக்கித் தள்ளுவதற்கு அவருக்கெதிராக நடத்தும் அறப்போர் எனக்கொள்ள வேண்டியுள்ளது. அறப்போர், ஆண்டவன் மனிதருக்கு அருளிய வழிவகைகளை நியாயமென்று வாதாடும் உணர்ச்சியில் எழுந்தவையாகும். இதே போக்கில் அவர் தருகின்ற விவாதங்கள் ஃபோரியரை நினைவூட்டும் வகையில் சிறு பிள்ளைத்தனமாக அமைந்துள்ளன.

மற்றொரு விவாதத்தின்மூலம் அக் காலத்திற்குப் பெரியதொரு நன்மையைச் செய்துள்ளார். ஆனால், அவ் விவாதம் அசட்டுத் தனமானது. பெருக்குத்தொடர் விகிதத்தில் மனித இனப் பெருக்கம் ஏற்படுகிறது என்று கொண்டாலும், அவன், தான் உயிர் வாழ்வதற்குக் கீழ்ப்பட்ட மிருகங்களையும் தாவரங்களையும் நம்பித் தானே இருக்கவேண்டும்; அவைகள் மட்டும் பெருக்குத் தொடர் விகிதத்தில் இனப்பெருக்கம் செய்யாமல் இருந்துவிடுமா?

[1] Harmony of Interests, பக்கம் 201. Wages, பக்கம் 232.
[2] Wages, பக்கம் 244.
[3] Political Economy. தொகுதி III, பக்கம் 54.
[4] Social Science, தொகுதி III, பக்கம் 270.

பொதுவான போக்கை நமக்குக் காட்டுவதைவிட, மனிதன் மிக நல்ல முறையில் இருக்கிறான் என்பதைக் காட்டியே நம்மை நம்பவைக்க முயல்கிறார். மனிதர்கள் விழுங்குபவர்கள்; முயல்கள் விழுங்கப்படுபவைகள்; இவைகள் ஒன்றைப்போல் ஒன்று (ஜியோமிதி முறையில்) பெருக்குத் தொடர் விகிதத்தில் அதிகரிக்க முயலும்.

முயல்கள் மனிதர்களைவிடத் தம் இனத்தைப் பன்மடங்கு பெருக்குவதில் பெயர்போனவை. ஆகவே, வளர்ச்சி எங்கும் எவ் விதத்திலும் உண்டு; ஆனால், முன்னேற்றத்திற்கு எதிர் விகிதத் தில் அது இருக்கும்; 'இது எவ்வளவு அதிகமோ, அது அவ் வளவு குறைவாக' இருக்கும். மார்க்சின் கொள்கைப்படி ஒரு புதிய வலிமையான கொள்கையைக் காண்கிறோம். அதன்படி மனிதன் பெருக்குத் தொடர் விகிதத்தில் வளர்கிறான். ஆனால், நாரைகள், முயல்கள், சிப்பிகள், உருளைக்கிழங்குகள், சீமைச் சிவப்பு முள்ளங்கிகள் முதலிய மனிதனுக்குப் பயன்படும் மற்ற எல்லாப் பண்டங்களும் கூட்டுத் தொடர் விகிதத்தில்தான் வளர்கின்றன. 'அமெரிக்காவின் மக்கள் தொகைப் பெருக்கம் எவ்வளவு வேகமாக இருந்ததோ அதைவிட வேகமாகச் சிப்பிகள் பெருக்கம் இருந்துவந்தது'[1] என்கிறார். கரேயின் சித்தாந்தப்படி வேலை யில்லாத் திண்டாட்டம் போக, வேலையற்றவர்கள் முயல்கள் வளர்ச்சியைப் பெருக்கவேண்டும், அல்லது சிப்பிகளை அதிகமாக உற்பத்தி செய்தல் வேண்டும். கார்பானிக் அமிலம் (கரிய ஈருயிரகை) பற்றிய விவாதம் விந்தைக்குரியதாயினும் குறிப்பிடு வதற்கேற்றதாகும். நாகரிகத்தின் விரிவான வளர்ச்சியாலும், முன்னேற்றத்தாலும் பெரிய, ஆனால், தாழ்ந்த வகை மிருகங்கள் அழிந்துபோகின்றன. இவ்வாறு இறப்பதால் செடி, கொடி முதலியன வளர்வதற்கு முக்கியமான கார்பானிக் அமிலம் குறைந்துவிடுகிறது. ஆகவே, கரிய ஈருயிரகை (கார்பானிக் அமிலம்) உற்பத்தியாளர் என்ற வகையில் அதிகமான மனிதர்கள் தங்கள் சகபாடிகளில் பெரிய, ஆனால், தாழ்ந்த உயிரினங்களின் இடத்தை நிரப்புதல் வேண்டும். சிங்கங்கள் மூச்சோட்டத்தைக் குறைத்துக்கொண்டால் மனிதர்கள் மூச் சோட்டத்தை அதிகரித்தல் வேண்டும். அழகிய இயற்கைப் போக்கிற்கு[2] இது மற்றோர் உதாரணமாகும்.

இவை போன்ற வெறும் விவாதங்களே மால்தஸ் பேயை விரட்டப் போதுமானவையாகா. இதைக் கரே உணர்கிறார்.

[1] Social Science, தொகுதி III, பக்கம் 351.
[2] Social Science, தொகுதி III, பக்கங்கள் 319–320.

அவருடைய பழைய புத்தகங்களில் 'மனிதன் நிற்பதற்குக்கூட இடம் இல்லாத' காலம் ஒன்று வரும் என்பதை அவர் ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால், அவர் நீண்ட காலத்திற்கு அப்பால் வரும் நெருக்கடியைத் தீர்க்கும் வேலையை அருள் பாலிக்கும் ஆண்டவனிடம் தந்துவிட்டு அமைதி கொள்கிறார்.[1] உணவு உற்பத்தியைப் பெருக்க அவசரப்பட்டு அமிதமான, நெறியிழந்த முறையைப் பின்பற்றத் தேவையில்லை. இந்நிலையில் உலகத்தில் அநேகமாக, ஏன், உறுதியாக மக்கள் பெருக்கம் ஒரு நாள் ஏற்படும் என்பதுறுதி. அந்த நெருக்கடியை நம்முடைய வருங்கால மக்களிடத்தில் விட்டுவிடல் வேண்டும். அவர்கள் மக்கள் பெருக்கத்தின் காரணங்களை அறிந்து, சீர்செய்து தங்களுடைய நிலைமையை உயர்த்துவாராக![2]

இத்தகைய பொருத்தமான உபதேசத்தைச் செய்த பின்னும், அவ்வாறு எதிர்காலத்திற்குப் பிரச்சினையைத் தள்ளிப்போடுவது, எதிர்காலம் எவ்வளவுதான் தள்ளியிருந்தாலும் திருப்தி தரக் கூடியதன்று 'சந்ததிப் பெருக்க உணர்ச்சி உறுதியான ஒன்றுயின்', அதன் முடிவு பெரும் திரளான மனித இனம் அடிமையாக அல்லலுறவும், இயற்கையால் அடக்கப்பட்டுத் தாழ்கின்ற நிலையும்தான் ஏற்படும்.[3]

இச் சங்கடத்தைப் போக்க ஒரே ஒருவழிதான் உண்டு. சந்ததிப் பெருக்க உணர்ச்சி நிலையற்றதெனவும், மாறக்கூடியது எனவும் நிரூபித்தால், காண விரும்பும் இன்ப நிலையை மறுபடியும் நிலைநிறுத்தலாம். இதுதான் கரேயின் வாதமாகும். அவர் பல இடங்களில் நிலையற்ற சந்ததிப் பெருக்க சக்தி உள்ளது என்றும், நரம்புகளுக்கும், சந்ததிப் பெருக்க சக்திக்கும் தொடர்புள்ளது எனவும் எடுத்துரைத்துள்ளார். இதில் அவரை அறியாமல் மால்தஸின் கருத்தைப் பயன்படுத்தியுள்ளார். நரம்புப் பகுதிகளுக்கும், சந்ததி உற்பத்தி சக்திக்கும் தொடர்பிருக்கிறது. தசை நார் சக்தியை நரம்புச் சக்தியாக மாற்றின், சந்ததி உற்பத்திப் பெருக்கவீதம் குறையும். மலட்டுத்தன்மை அறிவின் திறமையை வளர்க்கிறது. ஓர் இனம் முன்னேற முன்னேற இயற்கையாகவே அவ்வினத்தின் மக்கள் பெருக்க விகிதம் குறையும். ஆகவே, மால்தஸ் கூறும் தடைகள் தேவையற்றவை. ஏனெனில், தெய்வீகத்தின் இயங்கு சக்தியானது மக்கள் பெருக்கத்தைத் தானே சரிப்படுத்திவிடும். இன்ப அமைதி நிலவத் தொடங்கும்.

[1] The Past, the Present and the Future, பக்கம் 77.
[2] Political Economy, தொகுதி III, பக்கம் 91.
[3] Social Science, தொகுதி III, பக்கம் 265.

'சாதாரணமாகத் தொழிற் காப்பு விதிக்கு, கரேயும் லிஸ்டும் இரட்டைப் பிரதிநிதிகளாவர்' எனச் சொல்லப்படுகிறது. ஆனால், அவருடைய காப்பு விதி உணர்ச்சி வழியானது அறிவியல் முறைக்கு முழுதும் விரோதமானது. இறக்குமதி வரிகள் யாரைப் பாதிக்கின்றன, என்பன போன்ற சிக்கலான வற்றை அவர் விளக்க முற்படவில்லை. அவருடைய காப்பு விதி முறையானது மிகப்பழைய காலத்தைச் சார்ந்த காட்டு நிலங்களில் வாழும் மனிதனது சூழ்நிலையை வெளிப்படுத்துகிறது. வெளிப்படையாகக் கூறுவோமாயின் பிற்போக்கான கொள்கையைக்கொண்ட சுயேச்சை வாணிப விருப்பாளர் கரே எனலாம். காப்பு விதி பற்றி, 'ஆண்டவனுடைய அழகிய பயனுள்ள வழிகளை முறியடிக்க வல்லது' என அவர் கருதினாலும், காப்பு விதியினால் ஏற்பட்ட வேகமான முன்னேற்றத்தினால், அவர் வேகமாகவும் சிறிதும் அறிவற்ற முறையிலும் 'காப்பாளர்' ஆனார் என்பது தெளிவு. இங்குக் கரேயின் அடிப்படையான நோக்கம் என்னவெனில், அவர் உற்பத்தியாளரையும் துய்ப்போரையும் அண்மையில் கொண்டுவருதலேயாகும் (இதிலிருந்துதான் மற்ற அனைவரும் வளர்கின்றனர்). ஆகவே, காப்பு விதி இரு துறையாளரையும் அண்மையில் கொணரச் செய்யும் பெரு முயற்சியாகும். கரேயினிடம் அரை குறையான அபிப்பிராயங்கள் இல்லை. 'காப்பு விதி சரியோ அன்றித் தவறோ, சுயேச்சை வாணிபம் சரியோ, தவறோ..... அரைகுறையான வழிகள் எப்பொழுதும் தவறுனவையாகும்.'

மற்றொரு கருத்தும் கரேயின் மனத்தில் எப்பொழுதும் அலை பாய்ந்துகொண்டிருக்கிறது. வர்த்தகத்தையும் (வணிகவியலையும் - Commerce) வியாபாரத்தையும் (Trade) அவர் வேறுபடுத்துவது அவருடைய விசித்திரத் தனித்தன்மையைக் காட்டுவதாகும். வர்த்தகம் ஒரு சமுதாய உறுப்பினர்களிடை நிகழும் இயற்கையான பரிவர்த்தனையாகும். இது நிலத்து வாழும். வியாபாரம் என்பது பொருள்களைத் தொலைநாடுகளுக்கு எடுத்துச் செல்வதேயாகும். அது அழிவை உடையதாகும். சுருங்கக் கூறின், வர்த்தகத்தைக் கடைப்பிடிப்போர் அவர்களுடைய நண்பர், சுற்றத்தாரோடே பண்டமாற்றுச் செய்துகொள்ள விரும்புகின்றனர்; வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளோர் 'அவர்களுக்கே' பண்டமாற்றைச் செயற்படுத்த விழைகின்றனர்.

கரேயின் காப்பு விதிப்படி, 'நில உடைமையாளர்களும் உழைப்பாளிகளும் போக்குவரத்திற்கே முதன்மையாகவும் அதிகமாகவும் வரியைச் செலுத்தல் வேண்டும்' என்பதேயாகும். தறியையும் (கைத்தறித் தொழிலும்) சுத்தியலையும் (இருப்பு வேலையும்) இயற்கையான இடங்களாகிய உழவிற்கும், பரம்படிக்கும்

பலகைக்கும் அருகில் கொணர்ந்து அவ்வரியைக் கழிவு செய்யவே அவர் விரும்புகிறார். அநேகமாக அவருடைய கருத்துகள் அவருடைய அடிப்படையான கொள்கைக்கு வேறுபட்டே விளங்குகின்றன. காப்பு விதியின் நோக்கம் உற்பத்தியாளர், துய்ப்போர் இவர்களின் தொல்லைவையும், அதனால் ஏற்படும் வீண் செலவையும் குறைப்பதேயாம். ஒற்றுமையுணர்ச்சி ஏற் படுத்தச் செய்யப்படும் ஓர் உணர்ச்சியே தவிர அது வேறு இல்லை எனத் தெரிகிறது. இக் கொள்கையில் உள்ள சில வேற்றுமைகள் நமக்குச் சுவையைத் தருவனவாயும், வியப்பூட்டுபவையாயும் விளங்குகின்றன. காப்பு விதி ஒருமையை ஏற்படுத்துகிறது; சுயேச்சை வியாபாரம் ஒற்றுமையைக் குலைக்கிறது. தொழிலாளர் களின் உழைப்பை விலைக்கு வாங்குவதற்காக நடைபெறும் போட்டியே காப்பு விதியாகும். உழைப்பை விற்பதே தடையிலா வாணிபமாகும். மனிதர்கள் மலிவாக இருப்பின் போர் போற்றப் படுகிறது. ஆக, தடையிலா வாணிபம் போருக்கு வித்திடுகிறது. மேலும் தடையிலா வாணிபம் நீண்ட தூரத்தில் உள்ள மார்க் கெட்டுகள் நிலைக்க உதவிசெய்கிறது; காப்பு விதி உள்நாட்டு மார்க்கெட்டைப் போற்றுகிறது. யார் நீண்ட தூரத்தில் உள்ள மார்க்கெட்டுகளை விரும்புகிறார்களோ, அவர்கள் தங்கள் மனைவி மக்களைப் பிரிந்து சத்திரம் சாவடிகளிலே தங்கி, வீண்செலவு செய்து, ஒழுக்கங்கெட்டு அலைவர். ஆகவே, தலையிடா வாணிபம் வழிப்போக்கர் விடுதியில் தீய நடவடிக்கைகளுக்குக் காரண மாகிறது. காப்பு விதி இல்லற வாழ்க்கையின் இன்பத்தை நல்கு கிறது. இவைகளும், மற்ற மிக முக்கியமான கருத்துகளும் இந்த விவாதத்தின் வண்ணமிக்க நூலிழைகளாகும்.[1]

ஆனால், இங்கே வேறுவிதமான ஒரு துணை விவாதமும் உள்ளது. விவசாயத்தையே நம்பி வாழும் காப்பற்ற ஒரு நாடு தன் மண்ணையே விற்கவேண்டிய நிலை ஏற்படும். நிலத்திற்குத் தேவையற்ற கழிவுப் பொருள்களைத் திருப்பி நிலத்திற்கே அனுப்பு வதன்மூலம் அதிகரிக்கும் விளைவை நிலம் தருவதற்குக் காரண மாகும் என்ற இந்த எண்ணம் கரேயின் மனத்தைக் குடைந்து, நுகர்ச்சி செய்யும் இடம் மிக அருகில் இருந்தால்தான் தன் கழிவுப் பொருளை நிலம் திரும்பப் பெற முடியும் என்று கூறி வாதிடுகிறார்.[2] இதிலிருந்து லிஸ்ட் கூறிய வேறொரு முடிவிற்கு நாம் வரலாம். 'எப்போதும் உற்பத்தி முறை முன்னால் செல்லும். திறனை விவசாய அமைப்பை அது தொடர்ந்ததே இல்லை. முந்தியது இல்லையாயின், பயிர்த்தொழிலின் எல்லா முயற்சிகளும்

[1] Harmony of Interests, பக்கங்கள் 193, 202, 209, etc.
[2] Social Science, தொகுதி I, பக்கம் 273.

கரடு முரடான மண் பகுதிகளை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்ய வேண்டிய வேலையில் கொண்டுவந்து விட்டுவிடும்.'[1] இதைப் படிப்பவர் இந்த விவாதம்பற்றிப் பொருளாதாரக் கருத்தை அறிய விரும்பின், அதை உரிய இடத்தில், தம்முடைய கனரகப் பீரங்கிப் படையில் சேர்ப்பது தகுதியுடையது என்று எண்ணித் தந்துள்ளார் ஜான் ஸ்டூவர்ட் மில் (புத்தகம்-5, அதிகாரம்-10).

மடமையை[2] நோக்கி இது ஓரளவு சென்றிடினும், கரே பொருளாதாரக் கோட்பாட்டு வளர்ச்சியில் ஒரு முக்கியமான அங்கம் வகிக்கிறார். தொன்மைப் பள்ளியினரின் அவநம்பிக் கையை எதிர்க்கும் ஒரு போக்கிற்கு அவர் பிரதிநிதியாவார். அவருடைய மதிப்புக் கோட்பாடு, சமுதாய முன்னேற்றத்தினுல் நடைமுறைச் செல்வம் தொடர்ச்சியாக குறைந்துகொண்டே செல்கிறது என்ற கருத்தின் மீது கட்டப்பட்டிருப்பதாகும். இது பொருள்கள் இசைந்த பொருத்தம் முடிவாக உடையன என்பதை நிரூபிக்கும். 'மனித சமுதாயத்தின் பல்வேறு வகுப்புகளுக் கிடையே உண்மையான, உறுதியான இசைவுப் பொருத்த அக்கறை உள்ளது.'[3] இக் கருத்தை மீண்டும் பாஸ்டியட்டிடமும் காண்கிறோம். ஆனுல், குறைந்துசெல் விளைவுக் கோட்பாடும் மக்கள் தொகை விதியும் ஆக இவ்விரண்டு தொன்மைப் பொரு ளாதார அவநம்பிக்கைகளும் இவரின் கொள்கையால் மிக வேகமாகத் தாக்கப்பட்டிருப்பது இயற்கையே. அவருடைய திறனுய்வுகளின் பெரும் பகுதி மற்றவர்களை மிகக் கண்டிப்பான சுவைத்திறம் உடைய கூற்றுக்களையே தருமாறு கட்டாயப்படுத்தி யிருப்பது அதன் சிறு தரத்தைக் காட்டுவதாகும். மற்றவர்களும் இவ் உலகத்துக் கரேக்களின் கையில் சிக்கித் தவருகப் புரிந்து கொள்ளப்படவும், தவருக விமர்சிக்கப்படவுமான நிலைமையிலி ருந்து தாங்கள் தப்பவேண்டும் என்று எண்ணியதே இதற்குக் காரணமாகும். மற்றவர்களை எதன் காரணமாகக் கடிந்து குற்றம் சாட்டினரோ, அந்தச் 'சூழ்நிலைக்கு அடிமைப்படும் குறைபாடு' இவரிடம் மிகுந்தும் பளிச்செனவும் காணப்பட்டது. காலனி முறை தோன்றிய முதற் காலத்து வாழ்ந்த பரிதாபத்திற்குரிய பொருளாதார நிபுணர் இவர்; காடடர்ந்த பரந்த வெளிகள் எப்போதும் இருக்குமென்றும், வாழ்வதற்கு வேண்டிய இடம் எக்காலத்தும் கிடைக்குமென்றும், நிலத்தின் கஞ்சத்தனத்திற்கு

[1] Social Science, தொகுதி III, பக்கம் 333.

[2] 'உண்மை எளிதானது. ஆக எளிய கருத்துகள் பொதுவாக உண்மை யானவை.' இது கரேக்கு மிகப் பிடித்தமான திட்பநுட்பமுடைய கண்டுபிடிப் பாகும். ஆனுல், எந்த விதமான கருத்தியல் முறைக்கும் உறுதியான அடிக்கல்லாக இருக்க முடியாது.

[3] Social Science, தொகுதி III, பக்கம் 118.

அஞ்சி வாழும் நிலை மனிதனுக்கு எக் காலத்துக்கும் ஏற்படாது என்றும், இனப்பெருக்க முறைக்கு எப்போதும் பெண்கள் ஆரத் தழுவி ஆதரவு அளிப்பார்கள் என்றும் உண்மையாகவே மனத்தில் நம்பி இருந்தவர் இவர்.

பாஸ்டியட்

காலம் ஃபிரடரிக் பாஸ்டியட்டுடன் (Frederic Bastiat[1]—1801-1850) ஒத்துழைக்கவில்லையெனினும் முனைப்பாகத் தோன்றும் குறிப்பிடத்தக்கவர்களிலே இவருக்கும் ஓர் இடம் உண்டு. இவரது சாபக்கேடு எதுவென்று பிரெஞ்சு மொழியில் கூறுவதாயின் Esprit Vulgarisateur (கொச்சை மொழி எழுத்தாளர்) ஆகும். அது உண்மையாகக்கூட இருக்கலாம். பாஸ்டியட்டினுடைய வாழ்வில் எது முக்கியமானது எனின், வாழ்வில் மிகப் பிற்காலத்தில் அவர் எழுதத் தொடங்கியதுதான். அவர் இளமையிலேயே இறந்துவிட்ட காரணத்தால் அவருடைய குறிப்பிடத்தக்க இலக்கியப் படைப்பு ஏறக்குறைய ஐந்தாண்டுகளின் விறுவிறுப்பான செயலின் விளைவாகும். அடிப்படையில் பாஸ்டியட் ஒரு பத்திரிகையாளர் ஆவர். இந்தச் சொல்லை உயர் அறிவு படைத்தவர் தரத்தில் இறங்கிச் செயலாற்றினர் என்ற பொருளில் கூறவில்லை. அந்த நாட்களின் தேவைக்கேற்ப பணியாற்றியவர் என்ற பொருளில் சொல்லப்பட்டதாகும் இந்த வார்த்தை. பத்திரிகையாளர் என்ற முறையில் பாஸ்டியட்டுக்கு ஈடு இணை உடையவர்கள் ஒரு சிலரே. இதுவரை எவரும் அவரைப்போல் தம் எதிரான கண்ணோட்டத்தை அறிவீனத்தின் எல்லைக் கோட்டிற்கு இழுத்துச் சென்றதில்லை. தற்போதும் ஒரு நாள்கூட இருக்கத் தகுதியற்ற அவருடைய நூல் சொல்திறம் நிரம்பி, நகைச்சுவை ததும்பி எதிரிகளைச் சுட்டிக் குத்துவதில் குறி தவறுத் திறமையும் கொண்டிலங்குவதாய்ப் படிப்பதற்கு மகிழ்ச்சி தருவதாய் அமைந்துள்ளது.

பாஸ்டியட் பத்திரிகையாளராய் இருந்த காரணத்தால் அந்நாட்களில் வாத எதிர்வாதங்களிலிருந்து ஒதுங்கியிருக்க முடியவில்லை. மற்றவர்களைத் தாக்குவதில் அவருக்குள்ள தனித்

[1] பாஸ்டியட் 1801-ல் பயோனி அருகே முக்ரனில் (Mugron) பிறந்தார். 1844 வரை அவருடைய பண்ணையில் உலகம் அறியா மனிதராக வாழ்ந்தார்; ஆனால், பொது வாழ்விலும் அறிவுத் துறையிலும் தம்முடைய பகுதியில் செல்வாக்கு உடையவராகவே இருந்தார். அதன்பின் திடீரென்று தடையிலா வாணிபம் காரணமாக அவருடைய பத்திரிகைத் துறையில் திறன்மிக்க எழுத்தாளராகத் திகழ ஆரம்பித்தார். இப்போது வாழ்க்கையின் முக்கியப் பகுதி தொடங்கிற்று; 1848-ல் அரசியல் நிருணய சபையில் உறுப்பினரானார். 1849-ல் சட்டமன்ற உறுப்பினர். இறுதி ஆறு ஆண்டுகள் மிகக் கடுமையாக உழைத்தார். கடும் உழைப்பே அவர் இறந்துபடக் காரணமாக இருந்தது (ஆண்டு—1850; இடம்- ரோம்).

திறமை, அவர் மறைவிற்குப்பின் அவரைப்பற்றிப் பெரும் சந்தேகங்களை ஏற்படுத்தியது; விஞ்ஞானத்தின் துல்லியமான கண்களுக்கு முன்னுல் அவர் ஒரு போலி என்று முடிவு செய்யப்படாவிட்டாலும், அவருடைய மூளை சுறுசுறுப்புடையதாயினும், அறிவு ஆழமற்றது. பத்திரிகை உலகத் தலைப்புகளில் சாகாவரம் பெற்றதும், நெறி தவறியதுமான இரண்டு தலைப்புகள்—தடையிலா வாணிபமும், காப்பு விதி முரண்பாடும், சோஷலிசம் பற்றிய இறந்துபடா விவாதமும் ஆகியவைகள்தாம். காப்புக் கொள்கை குறித்த அவர் மறுப்புரை சோஷலிசத்தை எதிர்த்த கொள்கையின் அடிப்படையையே கொண்டதாகும். இவை இரண்டும் சுரண்டல் முறையின் வழிவகைகளே யாகும். இலாபம் பெற முடியாத உற்பத்தியாளன் காப்பு விதி தேவையென்று கழறுகின்றன். அதன்படி அரசாங்கமும் மற்றவர்களைச் சுரண்டி இலாபம் பெற அனுமதிக்கின்றது. அவ்வாறே சோஷலிசம் தனி மனிதனின் பொறுப்பைத் தட்டிக்கழிக்க வழி செய்கிறது. இவ்வாறு நகைச்சுவை மிக்க கட்டுரை[1] ஒன்றில் அரசாங்கம் பற்றிய கருத்துச் சுருக்கத்தினைத் தந்துள்ளார். அரசாங்கம் என்பது ஒரு 'பெரிய கட்டுக்கதை; அதன்படி ஒவ்வொருவனும் மற்றவனுடைய செலவில் வாழ ஏற்பாடு செய்யப்படுகிறது.' உண்மையில் செப்பமற்ற காப்பு விதியைத் தாக்குதல் செய்கிறார்; அவ்வாறே அறிவுக் கூர்மையற்ற சோஷலிசத்தை இடித்துப் பேசுகிறார். அவருடைய திறமையான நகைச்சுவை வசை எவ்வாறிருக்கும் என்பதைக் கதிரவனது போட்டியை எதிர்த்து மெழுகுவர்த்தி உற்பத்தியாளர்கள் தருகின்ற தெய்வீக விண்ணப்பமும், அதிகச் செல்வம் அடைவதற்காக வலக்கையைப் பயன்படுத்துவதை நிறுத்திவிடுவதற்கான தீர்மானமும் எடுத்துக் காட்டும்; 'ஒருவன் எவ்வளவு அதிகமாக உழைக்கிறனே அவ்வளவு செல்வனுகிறன்; மீறவேண்டிய தடைகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு ஒருவன் அதிகமாக உழைக்கவேண்டும்; ஆகவே, மீறவேண்டிய தடைகள் எவ்வளவு அதிகமாக இருக்கின்றனவோ, அவ்வளவு ஒருவன் செல்வனுக இருப்பான்' இவைகள் ஒருவேளை குழந்தைத்தனமாக இருக்கலாம். கீழ் வகுப்புகளில் செய்யப்படவேண்டிய கட்டுக்கதைகளும், உருவகக் கதைகளும் மயக்கந்தரும் நறுமணத்தைத் தந்து, அவரை ஒரு முக்கியமான எழுத்தாளர் என்ற நிலைமையைப் பாதிக்கச் செய்துவிட்டது. எனினும், அவர் தந்துள்ள இக் காரணம் பாஸ்டியட்டினுடைய பணிகளைப் பட்டியலில் சேர்த்துக்கொள்வதற்குக் காரணமாகிறது.

[1] L' Etat.

காப்பு விதியின்மீதும், சோஷலிசத்தின் மீதும் அவர் தொடுத்த போர் பாஸ்டியட்டின் எதிர்மறையான அழிவுக் கருத்துக்களையே காட்டும். இதனுடைய உச்ச கட்டத்தை அவருடைய ஏடு 'பொருளாதாரப் போலி வாதம்' (The Economic Sophisms) காட்டுகிறது. அவர் இறப்பதற்கு முன்னால் அவருடைய கோட்பாட்டின் உறுதியான பக்கத்தைக் காட்டுவதற்காக அளவுக்கு மீறி ஆவல் கொண்டு எழுத முற்பட்டார். அவைகளில் ஒரு தொகுப்புதான் வெளிவந்தது. அந்நூலின் தலைப்பு, 'பொருளாதாரப் பொருத்தங்கள்' (Economic Hormonies) பாஸ்டியட் கருத்தின் சாரத்தைக் காட்டுவதாகும். அவர் காப்பு விதியையும் சோஷலிசத்தையும் தாக்கியதன் காரணம், அவைகள் இயற்கைக்கு விரோதமான நிலையில் உள்ளவையாகும்: ஒவ்வொன்றும் ஒருசிலர் பிறரை உறிஞ்சி வாழ்வதற்கான வழியை வகுக்கின்றது. அவரே பழைமை தலையிடா வாணிபப் பொருளாதாரவாதியானாலும், ஸ்மித், ரிகார்டோ, மால்தஸ் இவர்களுடைய கருத்திலிருந்து கொண்ட முடிவுகள் அவரை வருத்தியது. இம் முடிவுகள் ஒன்றேடொன்று முரண்பட்டனவாயுமிருந்தன. சுதந்திரத்தில் உறுதி சிதையா நம்பிக்கை கொண்டவராய் இருந்தமையின் இயற்கை வழி சமுதாயத்தைக் காண அவர் விழைகிறார்; 'Les grandes loi, proridentielles' என்றும் மதிப்போடு பேசுகிறார். ரிகார்டோ மால்தஸின் கோட்பாடுகள் குறிப்பதுபோல் சக்திவாய்ந்த தெய்வீகச் சட்டங்கள் சமுதாயத்தைக் கேடுநோக்கி அழைத்துச் செல்லுமாயின், நாம் எங்கே இருக்கிறோம் என்றறிய வேண்டாவா? எவ்வாறாயினும், பாஸ்டியட் வெவ்வேறு பொருளாதார விதிகள் (வாரம், மக்கள் தொகை, மதிப்புப்பற்றிய விதிகள்) அமைதியாக சமுதாயத்தை அநீதியிலும் சமமின்மையிலும் திணிக்கின்றன. இங்கேதான் இப்போதைய முரண்பாட்டின் அறப்போர் வீரருக்கு மேலாகக் கருதப்படுகிற வகையில் பாஸ்டியட்டின் முக்கியத்துவம் இருக்கிறது. எந்த நிமிடமும் தலையிடாக் கொள்கையைத் தலை மேற்கொண்ட அவர் சுதந்திரமான ஆட்சியின் கீழ் நியாயமானவற்றில் முழுப் பொருத்தமான இசைவு இருக்குமென்கிறார் (அவற்றின் மையப்புள்ளியில் எதிர்ப்புணர்ச்சிகள் இல்லாமல் இருந்தால்தான் இது நடைபெறும்).

அவருடைய கோட்பாட்டின் முழுப்பொருள் மதிப்பைப் புதிய முறையோடு நோக்குவதிலும், மதிப்பு, பயன்பாடு இவற்றின் திடமான வேற்றுமையிலுமே உள்ளது. பயன்பாடுகள் இரண்டு வகைப்படும்; அவைகளில் ஒன்று ஆண்டவனால் அளிக்கப் பட்டவைகள். இரண்டாவது, நமது முயற்சியினால் கிடைக்கப்

பெறுவது ஆகும். முன்னேற்றத்தின் முழுச்சுருக்கமும், முன்னியது பின்னியதைவிட அதிகமாகப் பயன்படுத்துவதிலேயே அடங்கியுள்ளது. இலவசமாகக் கிடைக்கும் பயன்பாடுகள் கடுமுயற்சியால் கிடைக்கும் பயன்பாடுகளைத் தள்ளி ஒதுக்குகின்ற ஒரு நிகழ்ச்சி நடந்துகொண்டே இருக்கிறது., பயன்பாட்டுக் கருத்தின் புறம் திரும்பினால், 'பாஸ்டியட்' கருத்தியலே பணி செய்தலோடு சேர்த்துப் பார்ப்பதால் சிக்கல்களைத் தவிர்க்க முயல்கின்றார். 'முயற்சி என்பது, அதாவது பிறருடைய தேவைகளைப் பூர்த்திசெய்யும் வழி என்பது, மற்றவருக்குத் தனது உழைப்பை அளிப்பதேயாம்.' பணிகள் பணிகளுக்காகப் பரிமாறப்படுகின்றன. இவ்வாருன மாறுதல்கள் சுயேச்சையாக நடைபெறின், பரிமாறப்படுகின்ற பணிகள் ஒரே மதிப்பீடுகள் உள்ளனவாக இருக்கும். அப்போதுதான் அங்கு 'மதிப்பு' தோன்றுகிறது. அது மாற்றப்படும் பணிகளுக்குள்ளே ஒன்றை ஒன்று மதிக்கச் செய்கிறது. 'இது இரண்டு பணிகள் மாற்றப்படுவதன் தொடர்பாகும்.' இக் கூற்றுச் சதுப்பு நிலத்துப் பாசிபோல் அமைந்திருக்கிறது. நன்னம்பிக்கைப் போக்கில் இதைக் கூற வேண்டுமாயின், இயற்கையினால் அருளப்பட்டவை யெல்லாம் மதிப்பற்றவை ஆகும். மதிப்பின் சுருக்கமானது மனிதனது உழைப்பிலே புதைந்து கிடக்கிறது. ஓர் உழைப்பும் நல்கப்படவில்லை யென்றாலும், கிடைக்கப் பெறவில்லை யென்றாலும் அங்கே மதிப்பீடு இருக்க முடியாது. எனவே, பயன்பாடானது இயற்கையினாலும், மனிதனது முயற்சியினாலும் கிடைக்கப் பெறுவதுமான இரண்டு வகைகளின் கூட்டுப் பொருளாகும். முதலாவது இனமாகக் கிடைப்பது. ஆனால், இரண்டாவதற்குத்தான் மதிப்பு உண்டு. ஆனால், முன்னேற்றம், கண்டுபிடிப்பு இவைகளின் பொருள் யாதெனில், இயற்கை பயனளிக்கக்கூடிய உதவியைச் செய்யாமல் தடைப்படுத்துகிறது என்பதாகும். இவ்வாறு பயன்பாடு மேலும் மேலும் இலவசமாக அளிக்கப்படுகின்ற ஒன்றாகும். ஆனால், செயல்முறையில் மனிதனுடைய பங்கை ஒத்திருக்கிற மதிப்பு, பயன்பாட்டுக்கு ஏற்ப வீழ்கிறது.

ஒரு பொருளின் மதிப்பு, அதில் அடங்கியிருக்கும் உழைப்பைப் பொறுத்ததேயல்லாமல் அதில் உள்ள 'சடப்பொருளை'ப் பொறுத்ததல்ல; சடப்பொருளானது உழைப்பின் மூலமாக ஒரு பொருளாக மாற்றப்படுவதாகவோ, அதனுள் ஒன்றுக்கப்பட்டதாகவோ இருக்கலாம். பணியின் மதிப்புக் குறையுமாயின், அப் பணியோடு சம்பந்தப்பட்டுள்ள உற்பத்திப்பொருளின் தாற்காலிக மதிப்பும் குறைந்துபோகும்.

ஆனால், முன்னேற்றம் உள்ளது எனக் கொண்டால் இதுதான் சாதாரணமாக நடப்பதாகும். இயற்கை அளித்தவைகளை மேலும் மேலும் பயன் படுத்திக்கொண்டே சென்றால் ஒவ்வொரு பொருளும் இப்போது ஆகும் முயற்சிச் செலவைவிடக் குறைவாகவே எதிர்காலத்தில் செலவாகும். பயன்பாடு குறையற்றதாக இருக்குமானால் மூலதனம் குறைந்துகொண்டே செல்லும். தற்போதைய உழைப்போடு முந்திய உழைப்பைப் பரிமாறிக் கொள்ள வேண்டியிருந்தால், தற்போதைய உழைப்பே அதிக நன்மை உடையதாகக் கருதப்படும். பயங்கரமான கூலி நிர்ணய இரும்பு விதியினின்று மீட்சிபெறும். தொழிலாளர்கள் நல்வாழ்வை எதிர்நோக்கியே இருப்பார்கள்.

பாஸ்டியட்டும் இவ்வாறே நில முதலாளித்துவத்தையும் ஆதரித்துப் பேசுகிறார். மெதுவாக மதிப்புக் குறைவு ஏற்படுவது பற்றிய பொது விதியிலிருந்து நிலத்தை விலக்கிவிட முடியாது. 'கரேயை'ப் பொறுத்தவரை, நிலத்திற்காகக் கொடுக்கப்படுகிற தொகை இயற்கையின் வரப்பிரசாதத்துக்காக அல்ல. இதற்கு முன்னால் நடைபெற்ற பணிகள், நீர்பாய்ச்சுதல், வற்றவைத்தல், வேலிகட்டுதல் முதலிய எல்லாப் பணிகளுக்காகவும்தான். இவ் வேலைகளெல்லாம் எளிதாகுமாயின் நிலத்தின் மதிப்பும் வீழும். இவ்வாறே வரம் என்பதும் இதற்கு முன்னால் செய்யப்பட்ட பணிகளுக்காகத் தரப்படுகின்ற நியாயமான தொகையாகும். பாஸ்டியட்டினுடைய கொடை வளத்திலும் மூலதனம் மேற்போக்காக விட்டுவிடப்படவில்லை. வட்டியினுடைய நியாயத்தை மிக்க திறமையுடன் வாதிட்டு நிலைநிறுத்தியது போன்றே, முதலாளியினுடைய பரிசினால் முன்னேறுகின்ற தொழிலாளியின் நன்னிலைமை விலைக்கு வாங்கப்படுவதில்லை. அவருடைய திருப்திக்காகவே அவர் நிரூபித்துள்ளார். முதலாளியினுடைய பங்கு விகிதாசாரத்தில் ஓரளவு குறையுமென்றாலும், மொத்த அளவில் அதிகரிக்கவே செய்யும். இவற்றைப்பற்றி மற்ற நன்னம்பிக்கையாளரில் ஒருவரான 'கரே' நன்கு கூறியுள்ளார். ஆனால், அவர் கருத்தைத் திருடியிருப்பதாக பாஸ்டியட் குற்றஞ் சாட்டுகிறார். இதைவிட மிக முக்கியமான நூல்களிலேகூட அவர் விரும்புகின்ற ஒன்றை நிரூபிப்பதற்காகத் தேவையில்லாத விளக்கங்களில் ஈடுபடுகிறார். அவர், தாம் இவ்வுலகத்துக் குறைபாடுகளைக் காண முடியாத குருடர் அல்லவென்றும், வாசகர்களை நம்பச்செய்கிறார். ஆனால், அவருடைய நூலான 'பொருளாதார இசைவுப் பொருத்தங்களை'ப் பார்க்கும்போது, போதுமான அளவு சுதந்திரம் இருப்பின், பொருளாதாரத் தோட்டத்திலுள்ள ஒவ்வொன்றும் மேலும்மேலும் அழகை அதிகரிக்கச் செய்யும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறார்.

10. தொன்மைப் பொருளாதார மரபு

சே, சீனியர், ஜே. எஸ். மில், கயர்ன்ஸ்

பழமைக் கருத்துப் பள்ளியினரைத் தொடர்ந்து பிற்காலத்தில் அரசியல் பொருளாதாரம்பற்றி எழுதியோர்க்கு இப் பிரிவில் தரப் பட்டுள்ளதுபோன்ற பரந்த விளக்கம் தேவையில்லாத ஒன்றாகும். (இப் பழமைக் கருத்துப் பள்ளியினர் யாரெனில் ஆடம் ஸ்மித், மால்தஸ், ரிகார்டோ ஆகியவர்கள் எழுதிய கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டவர்கள்). அவர்கள் செய்த வேலை எதுவெனின் கருத்துகளை நன்கு விளக்கியதும் ஒழுங்குபடுத்தியதுமாம். எனினும், அவர்களில் எவரும் ஒரு கருத்தை வலியுறுத்தி நிலை நிறுத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் உருவாக்கிய கருத்து களோ சிதைந்து பிறந்தன. பிரசவ வேதனைக்குப்பின் பெற்ற சொற்றொடர்களோ சில செத்துப் பிறந்தன! உயிரோடு பிறந்தவை சில நாட்களில் காலனின் பார்வைக்கு இலக்காயின. இவர்களில் சில எழுத்தாளர்களை இப் பிரிவில் ஒருசேரக் கூட்டிப் பார்ப்பது அனுமதிக்கக்கூடியதே. இவர்களில் ஒரு சிலரே பரர்த்து மகிழத் தகுந்தவர்கள். ஆனால், இதுவல்ல நம் வேலை. இவர்களில் புதிய கருத்தை உருவாக்கியவர்களையும், மரபு ஒன்றை ஏற்படுத்தியவர்களையும் நாம் தேடி அலையப்போவதில்லை.

சே

பிறந்த இடத்தின் புகழிற்காகவாவது அல்லது குறைந்தது, அவர் காலத்தின் பெருமைக்காகவாவது நாம், ஜீன் பாப்டிஸ்ட் சேக்கு[1] (Jean Baptiste Say) வரவேற்புத் தந்தே ஆக

[1] சே 1767-ல் லியான்சில் (Lyons) பிறந்தார். முதலில் தொழில் செய்தார். பல ஏற்றத் தாழ்வுகளுக்குப்பின் தொழில் அனுபவம் மிகப் பெற்றார். மீட்டியர்லில் கன்சர்வேடிவ் கலைக் கல்லூரியில் அரசியல் பொருளாதாரத் துறைக்குத் தலைமை தாங்கினர். பிரான்சிலுள்ள கல்லூரியில் பின் சிறிது காலம் பணியாற்றினார். 1803-ல் Traite' d' Economie Politique-அரசியல் பொருளாதாரக் கட்டுரை என்ற நூலும், 1828-ல் a Cours Complete d' Economie Politique Pratique - 'முழு அரசியல் பொருளாதார நடைமுறை நிலை' என்ற நூலும் எழுதினர்.

வேண்டும். பிற்காலத்தில் அவர் அலட்சியப்படுத்தப்பட்டார். ஒரே காலத்தில் வாழ்பவர்கள், தங்கள் காலத்தவர் ஒருவரைப் பற்றி அளவுக்கு மேல் உயர்த்திப் பார்ப்பதில் ஏற்படும் விளைவு தான் இது. ஆடம் ஸ்மித் நூலின் கருத்துகளைப் பிரான்சு நாட்டவருக்கும், உலகத்திற்கும் எடுத்துச் சொல்லிப் பரப்பியவர் அவர். இதில் அவர் பெரும் வெற்றி பெற்றார். 'அரசியல் பொருளாதாரம்' என்ற அவரது கட்டுரை நூலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரையில் ஆடம் ஸ்மித் பற்றி எழுதியிருப்பது பார்க்க வேண்டியது. ஸ்மித் நூலை மிகமிகப் பாராட்டியும், அதே வரியில் சிறிது ஸ்மித் முறைபற்றிக் குத்திக்காட்டியும், வாதத்தை வரிசைப்படுத்துவதில் முறைமை இல்லாதது பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அடிக்கடி எடுத்துச் சொல்லப்படும் ஓர் எடுத்துக் காட்டில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது :—

ஸ்மித் நூல், அரசியல் பொருளாதாரத்தின் மிகச் சிறப்பான கோட்பாடுகளைக் குழப்பமான முறையில் தொகுத்து அறிவுறுத்தும் எண்ண எதிர் அலைகளின் சுழற்சியில் சுற்றிச் சுழன்று புள்ளியியலின் விசித்திர எண்ணங்களின் ஊடே விளக்கமான பளிச்சிடுகின்ற உதாரணங்களைக் கொண்டு காப்பாற்ற முற்பட்ட ஒரு கருத்துத் தொகுப்பாகும். அது ஓர் அழகிய கட்டுரை நூலென்றாலும், அரசியல் பற்றி முழுதும் இல்லை ; பொருளாதாரம் பற்றியும் சரியான விளக்கம் இல்லை. உறுதியான கருத்துகளின் ஊடே தட்டுத்தடுமாறி எழுதப்பெற்ற சில முழுமை பெருக் கருத்துகளின் குழப்பக் கூட்டுச் சேர்க்கையாகும்.[1] இதைப் போன்றே ரிகார்டோவும், ஒழுங்கு ஒரு சிறிதுமற்ற, நிரல்பட எழுதத் தெரியாத ஓர் எழுத்தாளரே என்று அவர் குறிப்பிடுவதில் தவறில்லை. சேயின் எண்ணம் இப்படிப்பட்ட பரந்த குழப்ப வாதத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதாகும். பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஓர் ஒழுங்கும் வரையறையும் ஏற்படுத்தவும், அதன் கோட்பாடுகளைப் பரப்பவும், வல்லுநர்கள் மாத்திரமன்றி அனைவரும் படித்துப் பாராட்டத்தக்க வகையில் ஒரு நூலெழுதுவது என்பதும் அவரது குறிக்கோளாகும்.

இவ்விரு வகையிலும் அவர் போற்றத்தக்க வெற்றி பெற்றார். அரசியல் பொருளாதாரம் எதுவாக இருக்க வேண்டுமென்பதிலே அவர் தெளிவான கருத்துக் கொண்டிருந்தார். மற்றத் துல்லியமான அறிவியல்களைப் போலவே, இதுவும் அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டு திகழ்கிறது. இக் கோட்பாடுகளின்[2] பின்

[1] அரசியல் பொருளாதாரக் கட்டுரை, தொகுதி I, பக்கம் 16–17.
[2] அதே புத்தகம் — பக்கம் 27.

விஷயங்களாவது பல துணை முறைகளைக் கொண்டிலங்குகிறது. நாம் காணும் உலகின் பருப்பொருள்கள் பற்றிய விதிகளைப் போன்றே இக் கோட்பாடுகளும் பொருள்களிலும் பொருள்களின் இயற்கைத் தன்மைகளிலுமிருந்து உருவாக்கப் பட்டவையே. ஆகவே, பொருளாதாரம் ஓர் அறிவியல் எனக் கருதப்படும் நிலை வந்துவிட்டது. ஆகவே, முதல் பக்கத்தில் பொருளாதாரம் செல்வத்தின் உற்பத்தி, பங்கீடு, நுகர்ச்சி என மூன்று தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்றில் முதல் தலைப்பின் கீழ் பரிவர்த்தனை விளக்கப்பட வேண்டுமெனக் கொள்ளப்பட்டது. இவ்வகையிலேயே, நிலம், உழைப்பு, மூலதனம் (தொழில்துணை வுடையோர்க்கும் இடம் தரவேண்டும்) இந்த உற்பத்திக் காரணிகளுக்குத் தரப்படவேண்டிய வருமானம் குறித்தும் சேயின் விளக்கம் உள்ளது. பத்தொன்பதாவது நூற்றாண்டிலும், ஏன், இருபதாவது நூற்றாண்டிலுங்கூட எழுதப்பட்ட பல புத்தகங்களில் சேயின் கருத்துகள் நிழலாட்டம் போடுகின்றன.

இந்த வெளிச்செல் வழிக் கோட்பாடுகளில் எதுவும் இவரே உருவாக்கியதல்ல. இதன் சாரத்தைக் குவெஸ்னேயின் புத்தகத்தில் காணலாம். அவரது மெர்க்கன்டலிசக் கோட்பாடான, வாங்குவதைவிட அதிகமாக விற்பது என்பது 'வாணிபத் தொடங்குமுக' மன்றிப் பிறிதொன்றில்லை. அல்லது 'சே' கண்ட முடிவுகள் ஸ்மித், குவெஸ்னே எழுதியவைகளிலிருந்து ஒன்றும் மாறுபட்டவையுமல்ல. வெளிநாட்டு வாணிபம் பற்றிய சேயின் முடிபுகள், குவெஸ்னே கூறியதும் ஸ்மித் ஹியூம் கண்டவைகளின் எதிரொலியேயாம். பொருள் தன்மைகளைப்பற்றிய கோட்பாட்டில் சே, ஸ்மித் கருத்துகளிலிருந்தும் மிகத் தாழ்ந்து போய்விட்டார். செல்வம் அத்தனையும் நிலைபெற்றுப் பொருள் தன்மையுடன் விளங்கக் கூடியதாய் அமைய வேண்டும் எனத் தவறுக எண்ணினார். எல்லா ஊழியத்தையும் பயனிலாப் (உழைப்பாக) பாடாகக் கருதினர். நோய் தீர்க்கும் மருத்துவனின் ஊழியத்தை எடுத்துக்கொள்வோம். இதைப் பயனிலா உழைப்பென எவனே சொல்வான்? (மன நோயாளியைத் தவிர). மேலும், மருத்துவனின் 'பயன்பாடு' பரிவர்த்தனைக்கு உரியது அல்ல என்று கூற முடியுமா? மருத்துவனது கட்டணத்திற்கு அவனது ஆலோசனை பரிவர்த்தனை செய்யப்படுகிறது. ஆனால், ஆலோசனை தரப்பட்டவுடன் அதன் தேவை முடிந்து விடுகிறது. அதைச் சொல்வதில்தான் அதன் உற்பத்தி அடங்கியுள்ளது; அதைக் கேட்பதில் அதன் நுகர்ச்சி அடங்கியுள்ளது; உற்பத்தியாகும் அதே நேரத்தில் இப் பொருள் நுகரப்பட்டு விடுகிறது.[1]

[1] அதே ஏடு, தொகுதி I, பிரிவு 13, பக்கம் 12.

இது பொருந்தாதென சே கூறுகிறார். எங்கெங்கே உற்பத்தி யோடு நுகர்ச்சியும் ஒரே நேரத்தில் நடைபெறுகிறதோ, அங் கெல்லாம், உதாரணமாக, இசை நுகர்ச்சி போன்றவை யெல்லாம் பொருள் பயன்படா உற்பத்தி என சே வாதாடுகிறார். இவைகள் உற்பத்தி முடிந்தவுடனே மறைந்து விடுவதாலும், நிலையான பரிவர்த்தனை மதிப்பு இல்லாததாலும், சேர்த்துவைப்பது இயலாத ஒன்றுனதாலும் நாட்டின் முதலீட்டை இவைகளால் அதிகரிக்கச் செய்ய இயலா. இது அவர் மனத்தில் ஆட்டம் போடுவதால், இந்த அளவுக்கு மீறிய பயனற்ற உற்பத்தியால் பல ஆபத்துகள் உள்ளன. இவ்வாறுக, உடனுக்குடன் நுகர்ச்சி செய்யப்படுகிற பயன்படா உழைப்பை அதிகரிப்பதின் மூலம் நுகர்ச்சியு ம்வளர் கிறது. எதுவும் எஞ்சியிருப்பதில்லை. உண்மையில் உற்பத்திப் பொருள்கள் ஒன்றை யொன்று பரிவர்த்தனை செய்துகொள் கின்றன. ஆகவே, 'விற்பனை நடைபெறவில்லை யென்றால், அதற் குக் காரணம் பணத் தட்டுப்பாடு அன்று. மற்றப் பொருள்களின் தட்டுப்பாடேயாகும்' என அவர் கூறுகிறார். இதை சே கூறியிருக் கக்கூடாது. ஆனால், இதிலிருந்து வேறொரு கோட்பாடும் முளைக் கிறது. ஒரு பொருள் உற்பத்தியானவுடனே அந்த விநாடியே வேறு பொருள்களுக்கு அது மார்க்கெட்டை ஏற்படுத்துகிறது. எனவே, பொதுவான அதிக உற்பத்தி என்பது நடைபெற முடியாத காரியம். ஏதாவது உற்பத்தியான பொருள்கள் அளவுக்குமேல் இருக்குமாயின் அதன் காரணம் வேறு எங்கோ, எந்தப் பொருளோ அளவுக்குக் குறைவாக இருக்கிறது. ஆகவே, அளவுக்குமேல் உள்ள உற்பத்தியை வடிகட்ட வழி, வேறோர் இடத்தில் மேலும் உற்பத்தி செய்வதே.

தம்முடைய மார்க்கெட் கோட்பாடுகளிலிருந்து மூன்று முடிவுகளை சே காணுகிறார். முதலாவது, எவ்வளவுக்கெவ்வளவு மார்க்கெட் பெருகியும் பரவியும் இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு மிக வருவாய் தரக்கூடியதாய் இருக்கும். ஏனெனில், அதன் மூலம் தேவை அதிகரித்து விலை ஏறும். இரண்டாவதாக, ஒவ்வொருவரும் மற்றவரின் வாழ்வின் செழிப்பிலும் வளர்ச்சி யிலும் அக்கறை கொண்டுள்ளதாகக் கூறப்படும். பழம்பெருங் கொள்கைகளுக்குத் தம் கருத்து ஒத்ததெனக் கூறுகிறார். ஒரு நாட்டை உற்பத்தியாளர்கள், நுகர்ச்சியாளர்கள் என்று இரு பெரும் பிரிவுகளாக அவர் பிரிப்பது நகைக்கத்தக்கதாகும். 'ஏ' என்பவன் செல்வச் செழிப்போடு இருப்பின், பி, சி, டி, என்பவர் களுக்கு நல்ல வாடிக்கைக்காரனாக அமைகிறான். ஆகவே, இவர்கள் 'ஏ'யின் வெற்றிக்கும், செல்வச் செழிப்பிற்கும் வேண்டுதல் செய்யவேண்டும். அவர் பிரான்சு தேசத்தின்

செல்வச் செழிப்பிற்கு ஹியூம் ஆண்டவனே வேண்டிக்கொண்டது நினைவுகூரத்தக்கது. ஒரு நாட்டின் வாழ்வில், விவசாயம், பொறிவழித் தொழில்கள், வாணிகம் இவையெல்லாம் ஒரே செழிப்புடையனவாக அமையவேண்டும். (லிஸ்டும், கரேயும் கூட இவ்வாறே எண்ணினர்). அகில உலகக் கண்ணோட்டத்தில் ஒரு நாடு செழிப்பான அயல் நாடுகளைப் பெற்றிருப்பதில் அக்கறை செலுத்த வேண்டும் (இது ஆடம் ஸ்மித் கருதியதுதான்—பிரெஞ்சு மொழியில் உள்ளது). மார்க்கெட்டுக் கோட்பாடுகளின் மூன்றாவது முடிபு கீழ்க்கண்டதாகும். இறக்குமதி உள்நாட்டின் உற்பத்திக்கோ தொழில்களுக்கோ கேடு விளைவிக்காது. காரணம் வெளிநாட்டிலிருந்து வாங்கப்படும் பொருள்களுக்குச் சமமாக உள்நாட்டுப் பொருள்கள் விற்கப்படுகின்றன. இந்தப் பொருள்களுக்கு நிச்சயம் ஒரு மார்க்கெட் உருவாகும் (இது சுதந்திர வாணிபத்தின் சாராம்சம் ஆகும்).

பொருளாதாரத்தை மக்களிடையே பரவச் செய்யவேண்டுமென்ற அவரது நோக்கத்திலும் அவர் வெற்றி பெற்றார். தெள்ளத்தெளிவான நடையும் ஒழுங்கான கருத்துப் போக்கும் உடையவர் சே. இன்னும் சேயின் புத்தகத்தை மகிழ்ச்சியோடு படிக்கலாம். ரிகார்டோவைத் திரும்பப் படிப்பதற்கு நெஞ்சு உரமும், உள்ள உறுதியும் தேவை. இதனால் சேயின் நூல்கள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவை மிகவும் நன்றாக விற்பனையாகின்றன. பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதன் பொருளாதாரத்தை மற்ற எவரையும்விட நன்றாகப் போதித்தவர் 'சே'தான்.

இவ்வாறு பொருளாதாரத்தை மக்களின் (கொச்சை) மொழியில் விளக்கிய பேரும் பெருமையும் தவிர, சேவிற்கு என்றே சில கருத்துகள் உண்டு. இக் கருத்துகளில், அதன் காலத்தில் மிகச் சிறப்புப் பெற்றதும், அழையாத உலகத்திற்கு அழைத்துச் செல்லும் அனுமதிச் சீட்டு என்று கருதப்பட்டதும் எதுவெனில், 'மார்க்கெட்டுகளின் கொள்கைகள்' ஆகும். ஆனால், இது அவ்வளவு பெரிய விஷயமல்ல. இதன்படிப் பண்டங்களும் சேவையும் பணத்தால் வாங்கப்படுவது ஒரு மாயையே; உண்மையில் அவைகள் மற்றப் பண்டங்களினாலும் சேவையினாலும் வாங்கப்படுகின்றன. பணம் ஓர் 'வண்டி'யே. அது இரண்டு பண்டங்களைப் பரிவர்த்தனை செய்து முடித்தவுடன், மற்றப் பண்டங்களைப் பரிவர்த்தனை செய்யச் சென்று கொண்டிருக்கும். இதன் நுகர்ச்சி இன்பம் தருமானால் நன்று;

[1] அதே புத்தகம், பக்கம் 27.

மிக நன்று. சட்ட நுணுக்கச் சிக்கல்கள் வழக்கறிஞர்களுக்கு வேலை கொடுப்பதற்கும், அவர்கள் ஊதியத்தை அதிகரிப் பதற்கும் மாத்திரம் பயன்படுமானால், அது யாருக்கென்ன பயன் தரும்? ஆடம் ஸ்மித் திரைக்குப் பின்னால் இக் கருத்தைக் கேட்டுப் புன்முறுவல் புரிகிறார். மற்றொரு கருத்திலும், புதிய உலகைக் காண முன்னேறுகிறார். ஆனால், பலன் கண்டுபிடிக்கும் அளவு தூரம் அவரால் செல்ல முடியவில்லை. ரிகார்டோ தமது ஏட்டில் இருபதாவது அத்தியாயத்தில், மதிப்புப் பற்றிய சேயின் குழப்பக் கருத்துகளைக் கொண்டு குற்றம் சுமத்துகிறார். சேயி னுடைய ஒன்றுக்கொன்று பொருந்திவராப் பதினான்கு சொற் றொடர்களை எடுத்துவைத்து அலசி, சேயின் கைகளை முறுக்கி எடுத்து விடுகிறார். சேயின் மதிப்புப் பற்றிய கருத்துகளைச் சுருக்கிக் கூறுவது மிகக் கடினமானதாகும். அவ்வாறு செய்யினும் அதனால் பலனொன்றுமில்லை. மீறிச் செய்தோமாயின், அவரின் முரண்பட்ட ஒவ்வாத கருத்துகள் மூளைக் குழப் பத்தைத்தான் விளைவிக்கும். அல்லது செல்லுபடியாகாத ஒரு கருத்திலிருந்து ஒரு நல்ல கருத்தை இருட்டில் தடவித் தேட வேண்டிய நிலைதான் பிறக்கும். ஆனால், அந்தப் பயணம் முடிவடையா ஒன்றாகவே நின்றிருக்கும். தம் காலத்தில் வாழ்ந்த ஆங்கில நூலாசிரியர்களைவிட சே, 'பயன்' கோட்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் தர விரும்பினார். மிக நுணுகி ஆராய்ந்தால், சே மதிப்புக் கோட்பாட்டின் நிபுணர் என்பது தெரியவரும். மனத் தியல்பு அடிப்படையில் அமைந்த அக்கோட்பாட்டில், உற்பத்திச் செலவுக் கருத்து அநேகமாக விடுபட்டுப் போயிருக்கிறது. ரிகார்டோவின் தொகுப்பிலுள்ள மற்றக் கருத்துகளைக் காணின் இவைகளெல்லாம் பின்தள்ளப்பட்டுப் போய்விடும். ஓர் இடத் தில் அவர் கூறுகிறார்: உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு, உற்பத் திப் பொருள்களின் மதிப்பாகவில்லை. மாறாக விளைவுப் பொரு ளின் பயனே மதிப்பைப் பெற்றுத் தருகிறது. மதிப்பையே அப் பொருளுக்கு உருவாக்குகிறது. இந்தப் பயனை உருவாக்கக்கூடிய செயல் திறனே, உற்பத்திச் சாதனங்களுக்கு மதிப்பை உரு வாக்கவும், பெற்றுத்தரவும் செய்கிறது.[1] இவ்வாறே பண்டங் களின் பயன் பொறுத்தே உற்பத்திச் செலவின் அளவுக்கு விலை யேறுகிறது. இவ்வாறு நடைபெறவில்லையாயின் எதுவும் உற்பத்தி யாகாது.[2] இன்னும் உறுதியோடு அவர் கூறுகிறார்: 'உற்பத்திக் கருவிகளின் மதிப்பு உற்பத்திப் பொருள்களிலிருந்து கிடைக் கிறது. இந்தப் பொருளைப் பயன்படுத்துவதிலிருந்து கிடைக்கும்

[1] அதே ஏடு, தொகுதி II, அதிகாரம் I, பக்கம் 9.
[2] அதேஏடு, தொகுதி II, பக்கம் 17.

திருப்தியிலிருந்து இது எழலாம்.[1] இவையெல்லாம் எப் பயனையும் நல்காதெனினும், மதிப்புக் கோட்பாடுபற்றி உள்ளூர அதிருப்தி இருந்தது. சே, தம் சந்தேகங்களை வாய்விட்டுக் கதறிக் கூறுகிறார்.

இறுதியாக, சே, தொழில்துணிவோர்பற்றி வாழ்த்துப்பா இசைக்கிறார். அவரோ தலையிடாக் கொள்கையில் தலையாயவர். தொழிற் காலத்தின், பேரார்வத்தின் பிரதிநிதி.

சீனியர்

இதைப் போன்ற ஓர் அறிமுக மதிப்பீட்டுப் புத்தகத்தில், இரண்டாம் பட்சமான நட்சத்திரங்கள் மறைந்து போக வேண்டியவைதாம். முதல் தரத்தில் வைக்கப்பட வேண்டியவர்கள்பற்றி ஒரு சிறிதே எழுதப்படுவதன் காரணம் அவர்களின் அறிவுத் திறன் பரந்த பாலிவனம் போன்று இருப்பதால் ஆகும். ரிகார்டோவின் ஒரு வகைப் பண்பட்டாக் குழுவைச் சேர்ந்த மக்களில் நாஸி வில்லியம் சீனியர் (Nassau William Senior, 1790—1864)[2] ஒருவராவார். அவர் அடுத்த தலை முறையினர் அடிக்கடி போரிட்டுப் பேசுவதற்குக் காரணமாயிருந்தவர். ஏனெனில், அவர் ஒரு கவர்ச்சியான மனிதராவார். இரண்டாவதாகப் பொருளாதார விவாத அலைகள் ஆண்டுக் கணக்கில் வீசிக் கொண்டிருக்க வேண்டிய நிலையில் ஓர் அழகிய சொற்றொடரைச் சொல்லிவிட்டுச் சென்றுள்ளார். சீனியருடைய் இக் கருத்துகள் இங்கே குறிப்பிடுவதற்குரிய சிறப்புடையன வாகும். முதலாவது அரசியல், பொருளாதார இயலின் 'பெருமையும் தன்மையும்' பற்றியதாகும். இரண்டாவது உற்பத்தியில் மூலதனத்தின் செயல்கள் பற்றிய ஆராய்வாகும்.

முதல் கருத்துப் பற்றி சீனியர் தம்முடைய இலக்கணமூலம் பொருளாதாரத்தின் போக்கையும் நோக்கையும் குறுக்கி விடுகிறார். ஒருவிதத் தனித்தன்மைக்கும் இறுக்கமான நிலைக்கும் பொருளாதாரத்தை அழுத்தமாக எடுத்துச் சொல்கிறார். அவர் கொள்கையளவில் (நடை முறையில் அவ்வாறில்லை) பொருளாதாரம் ஒரு கருத்தியல் மெய்ம்மை, உய்த்து உணர்வு விஞ்ஞானம் என வற்புறுத்திச் சொல்வதில் வல்லவராய் இருந்தார். அதுவும்

[1] அதே ஏடு, தொகுதி II.

[2] 1790–ல் பிறந்தார். வழக்குரைஞராஞர்; ஆக்ஸ்போர்டு பேராசிரியர். 1832-ல் இரப்போர் சட்டம் பற்றிய ராயல் கமிஷனில் உறுப்பினர்.

வசதியான சாய்வு நாற்காலியில் குளிர்காயும் அடுப்பின் அருகே அமர்ந்துகொண்டு உணர்ச்சிதரும் அருமையான புகையிலையைப் புகைத்துக் கொண்டே பொருளாதாரத்தைக் கைக்கொள்ளலாம் என அவர் கருதினர். அவரைப் பொறுத்தவரையில் அரசியல் பொருளாதாரம் என்பது இயற்கையைப் பற்றியும், செல்வத்தின் உற்பத்தி, பங்கீடு ஆகியவை பற்றியும் கூறுகின்ற விஞ்ஞானம் என்பதாகும். தன்னுடைய பணியை அறிந்த பொருளாதார வல்லுநன் எவனும் அது ஒரு கலை என்று அழைக்கப்படுவதை எதிர்த்து நிலைநிறுத்தவே விழைவான். 'வான இயல்' விஞ்ஞானத்தின் ஒரு பகுதியாகக் கப்பற் போக்குவரவு இயல் (கடற் கடவு) அமைந்திருக்க வில்லை. அவ்வாறே நடை முறைப் பிரச்சினை எவ்வளவு முக்கியமானதாயினும் அரசியல் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக அது இருத்தல் இயலாது. மேலும், பொருளாதார அறிஞனின் முடிவுகள் பொதுமைக் கருத்தும் மெய்ப்பாடும் எவ்வளவுதான் உடையதாயினும், ஆலோசனையாக ஒரு சிறு வார்த்தை சேர்ப்பதற்கும் அவனுக்கு உரிமை அளிக்கவில்லை. அவன் செய்யவேண்டியதெல்லாம் அறிவுறுத்தித் தடுப்பதோ, பாராட்டிப் பரிந்து பேசுவதோ அல்ல; பொதுக் கோட்பாடுகளைத் தெள்ளத் தெளிய எடுத்துரைப் பதே அவன் வேலை.[1] பாராட்டத்தக்க அளவு தன்னை விலக்கிக் கொள்ளும் உணர்ச்சியையே இது காட்டுவதாகும். காரணகாரியம் காட்டி விளக்கி முடிவுகளைக் கண்டு அதன்பின் யாரோ ஒருவன் சிந்திப்பதற்குத் திருப்தியோடு விட்டுவிட்டுச் செல்வது என்பது பொருளாதார நிபுணனுக்குத் தரப்படுகின்ற அவமானமாகும். பொருளாதார விளக்கங்கள் தனித்த சிறந்த வழிகாட்டியாகப் பயன்படுமென்று கருதுவது, சிக்கல் நிறைந்த இந்த உலகத்தில் ஏற்றுக்கொள்ளத் தக்கதோ, நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியதோ அன்று. ஏனெனில் சீனியர் இந்த உண்மையை அளவுக்குமீறி வற்புறுத்திக் கூறிச் சிக்கலை ஏற்படுத்துகிறார். சீனியர் சிந்திக்கின்ற வெறும் கருத்தியல் விஞ்ஞானத்தில் நிகழ்ச் சிப் பிரமாணமானவைகளைவிடக் கருத்து முடிவுகளே முக்கிய மானவை எனக் கருதப்படுகின்றன.[2] இது மாத்திரமல்லாமல் சொற்களுக்குக் கூர்மையான பொருளைக் காணுவதும் ஓர் அறிவு வேலையாகக் கருதப்படுகிறது. 'சில அறிந்த சொற்களை மிக நல்ல முறையில் பயன்படுத்துவது பற்றிய விவாதங்களே'[3] பெரிய அளவிற்குத் தம்முடைய ஆராய்ச்சியின் பயன் என வாசகர்களை அவர் எச்சரிக்கிறார். அவரால் பின்பற்றப்பட்ட அரசியல்

[1] Political Economy, பக்கங்கள் 2–3.
[2] அதே ஏடு, பக்கம் 5.
[3] அதே ஏடு, பக்கம் 5

பொருளாதாரம் அவர் எண்ணிய அளவுக்கு உயர்ந்திருக்குமானால் சாக்ரடீசுடைய விளக்கவுரைக் கலையைப்போல ஒரு பயிற்சிப் பாடமாகியிருக்கும்.

பொருளாதாரம் முக்கியமாக வெறும் கருத்தியலாக இருந்து நடைமுறை நிகழ்ச்சிகளை நோக்கவில்லையெனின், அதைக் கொள்வதில்தான் என்ன பயன்? அதன் பதிலில் அடங்கிக் கிடக்கும் அமைதி நம் மூச்சையே நிறுத்திவிடும் போலிருக்கிறது. அரசியல் பொருளாதாரம் யாவும் கூர்ந்து அறிதலும், விழிப் புணர்வு பெறுவதும் ஆகியவற்றின் விளைவாக எழுந்த ஒரு சில பொதுவான கருத்துரைகளிலிருந்து அடையப்பெற்றதே. இவ் வகைக் கருத்துரைகளைச் சுருக்கமாகக் கூறுமிடத்து நான்கு வகைப்படும். பொருளாதாரக் கொள்கையில் சில வகை முறையில் ஒருசீரான அளவுகள் இருப்பதனால் அவைகளை மிகச் சுருங்கிய வடிவில் தெரிவிக்கலாம். முதலாவதாக, 'ஒவ்வொரு மனிதனும் இயன்ற அளவு சிறு தியாகம் செய்து, மேற்கொண்டு செல்வத்தை அடைய விரும்புகிறான்.' இங்குப் பொருளாதார நிலையில் மனிதனைக் காண்கிறோம். பொருளாதார விஞ்ஞானம் எதன் அடிப்படையில் அமைக்கப்பட்டதோ அதுபோல் அம் மனிதனும் எதையும் மெய்ப்பிக்காமலே அவற்றை உண்மை எனக் கொண்டு, பதுங்கிப்பதுங்கிச் செல்கிறான். இரண்டாவது கருத்துரை, மால்தஸ் விதியின் அறிக்கையாகும். அதன்படி உலகின் மக்கள்தொகை உடற்கூறு அல்லது ஒழுக்கம் இன்மையினால் மட்டுமே கட்டுப்படுத்தப்படுகிறது. மூன்றுவதாக மூல தனத்தின் செயல் முறைகளைக் குறிப்பிடுவதாகவோ அல்லது தொழிலில் கிடைக்கும் அதிகரித்த பொருள்கள் பற்றிய கொள்கையைக் குறிப்பதாகவோ அமையும் அறிக்கையாகும். அது கூறுவதாவது: 'செல்வத்தை உற்பத்தி செய்யும் தொழிற் சக்தி, இதர கருவிகள் ஆகியவை மேற்கொண்டும் உற்பத்தி செய்வதன் மூலம், அந்தக் கருவிகளை மேலும் மேலும் பயன்படுத்திப் பொருள்களை அதிகரிக்கச் செய்யலாம். இது அடிப்படையான நான்கு கருத்துரைகளின் இறுதியாக, விவசாயத்திற்குப் பயன்படுவதாக உள்ள பயன் விளைவுக் குறைவுக் கோட்பாட்டின் விளக்கமாகும். மேற்கண்ட கருத்துரைகளில் முதலாவதாக இருப்பது விழிப் புணர்வு ஊட்டக் கூடியதாக இருக்கிறது என்கிறார் சீனியர். மற்றவை மூன்றும் கூர்ந்தறியப்பட வேண்டியவை. சீனியருடைய நான்கு அடிப்படைக் கருத்துரைகளை அறிவதைவிட எளிமையானது வேறொன்றில்லை. முதலாவது, தானே விளங்கும் பொது உண்மையாகக் கருதப்படுகிறது. ஆனால், இது அடிப்படையிலேயே உண்மையற்றதாகவும் இருக்கக்கூடும். மால்தஸ்

கூறிய கருத்துகள் எல்லாக் காலங்களுக்கும் எல்லா இடங்களுக்கும் உண்மையானவையல்ல (மால்தஸ் இவ்வாறே கருதினர்). பலருக்கு இது கூர்ந்து அறிகின்ற ஒன்றாகவே இருக்கவில்லை. பயன் விளைவுக் குறைவுக் கோட்பாடு ஒப்புக்கொள்ள முடியாத ஒரு விளக்கமாகவே உள்ளது. அதாவது, தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்பட்ட 'தொழிலாளர்கள் மிகையாய் இருக்கும் போதும், விவசாயத்தில் வேலைக்கமர்த்தப்பட்டவர்கள் குறை வாய் இருக்கும்போதும் திறமை விகிதாசார முறையில் அமை கிறது.' இது கூர்ந்தறிதலின் விளைவாய் இருக்கலாம். ஆனால், கூர்ந்தறிதல் சரியாக அமையவில்லை யென்றால் பலனொன்றும் இல்லை. முதல் கோட்பாடு இன்பத்தை வெளிப்படையாகப் பாராட்டிச் சொல்லப்பட்டிருப்பதால் சிலரால் ஒதுக்கப்படலாம். மற்ற மூன்று கோட்பாடுகளும், பார்த்தவுடன் தீர்க்கக்கூடிய நுண்காட்சிகளை அடிப்படையாகக் கொண்டதாகும்; அவைகள் பொருளாதாரத்தில் நுண்ணறிவு ஆராய்ச்சியில் கிடைத்ததாகும். அவைகளைத் தானே விளங்கும் உண்மைகளிலிருந்து எழுந்தவை கள் என்று கூறமுடியாது. இது எப்படியிருப்பினும், இப்போது உள்ள உடனடிப் பிரச்சினையிலிருந்து பார்ப்போமானால், இது முக்கியமானதல்ல. அறிவியற் கூறுகளில் ஒன்றான அரசியல் பொருளாதாரத்தின் கருத்தியல் நோக்கத்தில் நமது கவனத்தை ஈர்ப்பது எதுவென்றால், அதன் கருத்துகள் அத்தனையையும் நான்கே நான்கு தெளிவற்ற முற்கோள்களில் அடக்கிவிட்டது தான். இந்நிலை ஆதிக்க மனப்பான்மையுள்ள மனத்தின் அவசர மான முடிபுகளாகும். அவர்களின் உள்ளத்தில் ஆழ்ந்து கிடக்கிற அந்த அறிவுச் செல்வங்களை வெளிக்கொணரச் செய்தால் உண்மை தெரியும்.

இவ்வழியே தீவிரமாகச் செல்வோமாயின், அது சொற்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் ஒரு முழு விஞ்ஞானத் துறை ஆகி விடும். நல்ல காலமாக சீனியர் பொருளாதாரத்தைத் தாம் கண்ட நான்கு புதுக் கருத்துகளின் அடிப்படையில் ஆராயும் வாய்வியல் (தருக்க நூல்) பயிற்சியாக ஆக்கவில்லை. சீனியர் கூர்மையாக ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய தர்க்க ரீதியான அறிவுடையவர். அவருக்கு முன்பிருந்தவர்களை அவர் குறை கூறுவதன் காரணமே சொற்றொடர்களைப் பயன்படுத்துவதிலும், இலக்கணம் கூறுவதிலும் அவர் கொண்டிருந்த நுட்பமான போக்கேயாகும். குறிப்பாக ஓரிடத்தில் பல்வேறு கருத்து களைத் தன்னகத்தே கொண்டதாக ஒரு சொற்றொடரை அவர் எழுதியுள்ளார். ஆனால், அச் சொற்றொடர்களைக் கேலிசெய்து மகிழ்ந்தவர்களும் உண்டு. உற்பத்திச் சாதனங்களைக் குறிப்பிடும்

போது, 'மூல தனம்' என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் கவன முடன் தவிர்க்கிறார். ஏனெனில், 'அதற்கென்று பொதுவான ஒரு பொருள், ஐயந்திரிபற்ற நிலையில் இல்லாததாலும், அதற்கு வெவ் வேறு இலக்கணம் கூறப்படுவதாலும் ஆகும்.'[1] (சீனியர் சொல் வழக்கில் கவனமாக இருத்தல் போலவே வியங்கோளைப் பயன் படுத்துவதிலும் உள்ளார்). இவ்வாறுக அவருடைய உற்பத்திச் சாதனங்கள்—உழைப்பு, தொழிற்படுகிற இயற்கை ஆற்றல்கள் ஆகிய இச் சொற்கள்—நிச்சயமாக மடத்தனமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிற 'நிலம்' என்ற சொல்லைவிடச் சிறந்ததாகும். மேலும், நுகர்பொருள் தவிர்ப்புமாகும் (abstinence). அவர் ஏன் மூலதனம் என்ற சொல்லை மறுதலிக்கிறார் என்றால், அந்தச் சொல்லுக்குச் சாதாரணமாகத் தரப்படுகின்ற பொருள், 'செல்வத்தின் கூறு, செல்வத்தின் உற்பத்தியிலும் பங்கீட்டிலும் பயன்படுத்தப்படு கின்ற மனிதக் கடுமுயற்சியின் விளைவு[2]' என்பதனாலாகும். ஆனால், இவ்வாறு இலக்கணம் கூறப்பட்ட மூலதனம் ஒரு சாதாரண உற்பத்திச் சாதனமல்ல. அதுவே உழைப்புக் கூட்டுறவின் விளைவாகும்; மேலும், இயற்கைக் கூறுகள் தந்தவை யுமாகும்; மேலும், சீனியர் குறிப்பிடுகின்ற 'தவிர்த்தல்' (abstinence) மூலம் கிடைத்ததாகும். 'தவிர்த்தல்' என்பதற்கு சீனியர் கொள்கின்ற பொருள் இதுதான். 'எது இயற்கைக் கூற்றிலிருந்தும் உழைப்பிலிருந்தும் பிரிக்கக் கூடியதாய் இருக் கிறதோ, எதன் உடனிகழ்வுக் கூட்டுச் செயல் மூலதனம் என்ற ஒன்று நிலைபெறுவதற்குக் காரணமாய் இருக்கிறதோ, உழைப்பு எவ்வாறு கூலிக்குத் தொடர்புடையதாய் இருக்கிறதோ, அவ்வாறு இலாபத்திற்குத் தொடர்புடையதாக எது உளதோ அதுதான் 'தவிர்த்தல்' என்பதன் பொருளாகும்.[3] சீனியர் என்ன செய்தார் என்பதைக் காண்போம். உயிரற்ற சடப் பொருளான மூலதனத்தை நீக்கி, அவ்விடத்தில் பரிசுக்குரிய மனிதத் தியாகத்தை ஏற்றி வைத்தார். அவ்வாறு ஒரு மனிதத் தியாகம் இருக்கிறது என்பதிலே சீனியருக்கு ஒரு சிறிதும் அட்டியில்லை. 'நம்முடைய சக்திக்கு உட்பட்ட மகிழ்ச்சி யான செயலைத் துறப்பதும், உடனடிப் பயன்களுக்குப் பதிலாக நீண்ட காலப் பயனைப் பெற விரும்புவதுமான மனித எத்த னத்தின் உறுதிநிலையைப் பெறுவது துன்பங்களிலெல்லாம் கடுந் துன்பமாகும். இதைப் பின்தொடர்ந்து உற்பத்திச் செலவைப்பற்றி ஆராயும்போது அது அகவியலின் கூறுகளில் அடங்கியுள்ளது. உற்பத்திச் செலவு என்பதானது அதற்குத்

[1] அதே ஏடு, பக்கம் 59.
[2] அதே ஏடு, பக்கம் 59.
[3] அதே ஏடு, பக்கம் 59.

தேவையான தவிர்ப்பு நிலையும் உழைப்பும் சேர்ந்த கூட்டு மொத்தமாகும்.'[1] முதலாளிக்குத் தரப்படுகின்ற பரிசு தவிர்த் தலுக்காகத் தரப்படுகிற ஊதியமாகும். இப்போதைய உடனடி உரிமைகளைத் துறப்பதற்காகவும், இன்பத்தைத் தவிர்ப்பதற் காகவும் தரப்படுகிற விலையாகும் அது. 'தவிர்ப்பு' என்ற வார்த்தை 'கூட்டு மொத்தத்'துடன் வருந்தத்தக்க முறையில் மனோதத்துவ வகையில் இணைந்திருப்பது ஓரளவு துர்ப்பாக்கி யத்திற்கு உரியதாகும். ஏனெனில், தவிர்ப்பு என்பது வரையறை யுள்ள பொருளில், சமயத்துறையினர் கொள்ளும் இன்ப மறுப்பைக் குறிக்கிறது; ரோத்ஸில்டு (Rothschild) என்னும் ஒருவர் தவிர்ப்புக்காகப் பெற்ற பரிசு சிரிப்புக்குரியதாக இருக்கிறது.

ஜே. எஸ். மில்

'ஜான் ஸ்டுவர்ட் மில்[2]' (John Stuart Mill) அவர்களைத் தனித்த அத்தியாயம் ஒன்றில் பெருமைப்படுத்தி எழுதுவதை விட்டு 'சே', 'சீனியர்', 'கயர்ன்ஸ்' இவர்களோடு இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஏற்றி நெருக்கடியில் தள்ளுவது பெருந் துரோகத்திற்குச் சமமாகும். மறைந்துபோன அவரிலும் குறிப்பாகப் பெரிய மனிதர்களைப்பற்றி வேதனைக்குரிய அடிக் குறிப்பு வரையும் நிலை வரும்போதுதான் வாழ்க்கை வீழ்ச்சிக் குரியது என்பது தெரியவருகிறது. இதைப்போன்ற ஒரு முதல் நோக்கு ஏட்டில் மிக நீண்ட திறனாய்வுக்கு 'மில்லை' ஈடுபடுத் துதல் தேவையில்லை என்பதற்கு வலிமை மிக்க காரணங்கள் நிறைய இருக்கின்றன. அரசியல் பொருளாதாரக் கருத்து முன்னேற்றத்தில், ஒரு சிறிதும் வேறுபடாத ஒரே கருத்து அவரைப்பற்றிய மதிப்புரைஞர்களிடம் உள்ளது. அதில் ஒருவர் 'மில்லைப்'பற்றிச் சுருக்கமாகக் கூறியது என்னவென்றால், மற்றவர் கூறியதைக் கூறுவதில் வல்லவர் என்பதாகும். சென்ற தலை முறையின் சிறந்த கருத்துகளைத் திறமையாக எடுத்துச் சொல்வதில் வல்லவர் என்று மற்றொருவர் கூறினர்.

மூன்றுவதாக ஒருவர், 'அவர் தொன்மைப் பொருளாதாரத் தின் பளிங்குமணியாகத் திகழ்கிறார்' என்று குறிப்பிட்டார்.

[1] அதே ஏடு, பக்கம் 101.

[2] மில், ஜேம்ஸ் மில்லுக்கு (James Mill) மகனாய் 1806-ல் பிறந்தார். அளவு மீறிய கல்வித் தேர்வு முறைக்குப் பலியானார். அது, அதற்கு முன்னால் தந்த முடிவு களைவிடப் படுமோசமான முடிவுகளையே பின்னால் தந்தது. பிரிட்டனிலுள்ள இந்திய அலுவலகத்தில் முப்பத்தைந்து ஆண்டுகள் பணி செய்தார். சில காலம் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார்.

நான்காவதாக ஒருவர், அவர் எழுதிய கோட்பாடுகளை (principles) ஒன்று சேர்த்து இணைத்த உரு (Oeuvre d' assemblage) என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு எல்லோரும் ஒரே மாதிரியாகச் சேர்ந்து சொன்ன கருத்தை 'மில்லும்' மறுக்கவில்லை. இந்த ஒன்றுக இணையும் கருத்துப் போக்கின் திசையில், எங்கேயோ தான் உண்மை இருக்கவேண்டும் என்று எண்ணவேண்டியுள்ளது. ரிகார்டோவும் மால்தஸும் பொருளாதாரத்தின் ஒத்திசையும் முக்கியமான கருத்துகளை முதன்முதலில் கூறினர். முழு அளவுக்கு ஒத்த கருத்துகளாக இல்லாமலும் இருந்திருக்கலாம். இடைக் காலத்தில் இந்தக் கருத்துக் கோட்பாடுகளை 'ரே', 'லாடர்டேல்' ஆகியவர்கள் திரித்துக் கூறினர். 'செயின்ட் சைமன்களும்' 'ஃபோரியர்களும்' இந்த இணைந்த இசைக்கு மாறுபட்ட வகையில், வேறுபட்ட முறையில் குழலிசைக்கத் தலைப்பட்டனர். குழப்பமடைந்த ரசிகர்கள் இவையெல்லாம் எதற்காக நடைபெறுகின்றன என்று சந்தேகித்தனர். முற்போக்கு நோக்கமுடையவர்களுடைய உறுதியோடும், தைரியத்தோடும் முக்கியக் கோட்பாட்டை மறுபடியும் ஒழுங்காக எடுத்துச்சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இரசிகர்களுடைய இசைக்கலை இரசிப்புத் தன்மையோடு பணிமுறைத் தலைவரின் கருத்தை ஏற்க மறுப்பவரும், திருச்சபைக் கோட்பாட்டை ஏற்க ஒவ்வாதவரும் தலையிட்டமையின், புதிய முறையில் பொருளாதாரத்தை மீண்டும் எழுதவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்த வேலையைத்தான் 'மில்' மேற்கொண்டார்; அவருடைய நூலானது 'ரிகார்டோ', 'மால்தஸ்' கூறிய முக்கியக் கோட்பாடுகளை மறுபடியும் விளக்கிற்று; எனினும், இடைப்பட்ட முப்பது நாற்பது ஆண்டுகளின் திறனுய்வுகளை மறந்து எழுதப்பட்ட ஒரு நூல் அல்ல இந்நூல்.

மில்லினுடைய மிக முக்கியமான நிலை அவர் மேற்கொண்ட பணியை அவர் முடிப்பதற்கான அளவிடற்கரிய திறமையில் அடங்கிக் கிடக்கிறது. உயர்ந்த ஒழுக்கத் தொனி அவருடைய புத்தகமான கோட்பாட்டில் எங்கும் பரவி நிறைந்திருக்கிறது. சமயச் சார்புடைய (அவா அறுத்த) அக்கால நிலைமைகளில் அது ஏற்கக் கூடியதாய் இருந்தது. அந்த ஏட்டின் இலக்கியத் தகைமை, மில்லுக்கு முந்தி வாழ்ந்தவர்கள் எவர்களுக்கும் காண முடியாத கவனத்தைக் கவரும் சிறப்புக் கூறுக இருந்தது. இதன் விளைவாக இரண்டு தலைமுறையினருக்கு உண்மையாகவே மில் இந் நாட்டில் (இங்கிலாந்தில்) பொருளாதாரத்தைப் போதித்தார். இதைத் தம்முடைய ஏட்டின் 'கோட்பாடுகளைக்' கொண்டோ அல்லது மற்ற ஏடுகளைக் கொண்டோ அவர் கற்பித்திருந்தாலும்,

'கோட்பாடுகளின்' பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது. அரசியல் பொருளாதாரச் சொற்பொழிவுக் கூட்டத்தில் மில்லினுடைய உருவச் சிலையை (நெஞ்சளவு) வைப்பதற்குரிய சிறந்த காரணம் எதுவோ அதுவே பொருளாதாரக் கோட்பாட்டு வரலாறு பற்றிய அறிமுக மதிப்பீட்டு நூலில் மிகக் குறைந்த இடமே இவருக்கு அளிக்கப்பட்டிருப்பதற்கு உரிய காரணமுமாகும். நம் முடைய இப்போதைய பணிக்கு (இந்நூலுக்கு) மிகவும் தேவையான மனிதர்கள் யாரெனில்—எவ்வளவுதான் இருட்டில் தடவித் தேடப்பட வேண்டியவர்களாய் இருந்தாலும்—கருத்து வளம் உண்டுபண்ணுகிறவர்களே ஆவர். வெளிநாட்டு வாணிபக் கோட்பாட்டை விரித்து விளக்கிச் சொன்னதைத் தவிரப் பொருளாதாரக் கோட்பாட்டு அமைப்பிற்கு எதையாவது 'மில்' புதிதாகச் சேர்த்து இருக்கிறாரா என்பது ஐயத்திற்குரியதாகும். 'மில்' நமக்குப் புதிதாக எதையும் போதிக்கவில்லை என்று சமீப காலத்திய 'திறனாய்வாளன்' கடுமையாகக் குறிப்பிட்டதல்லாமல் மேலும் சொன்னான், 'கோட்பாட்டு வளர்ச்சிக்கு அவர் விட்டுச் சென்ற கருத்துகள் என்ன என்பதைக் காண்பதைவிட அவருடைய கோட்பாட்டுத் தவறுகளை எடுத்துக் காட்டுவது எளிதாகும்.'[1] மில்லினுடைய நூல் பாராட்டத்தக்கது அன்று என்றே (முக்கியமற்றவைகள் பற்றிய வேறுபாடு இல்லை என்றே) வழிவழி வந்த தொன்மைக் கோட்பாடுகளுக்குத் திருத்தங்களோ, மாற்றங்களோ இல்லையென்று கூறிவிட முடியாது. மற்றவர்களைப் போல மில்லிடமும் பொழுதுபோக்குக் குதிரைகள் உண்டு. ஆனால், அவைகள் அவருடைய தோட்டத்திற்குத் தொடர்ந்து வருவதில்லை. பெரும்பாலும் 'மால்தஸ்', 'ரிகார்டோ' அவருடைய தந்தை ஆகியவர்களின் கருத்துகளைப் பின்பற்றி எழுதப்பட்ட மில்லினுடைய முக்கியமான கருத்துகளைத் தொடர்ந்து விளக்க முயல்வதைவிட, மில்லினால் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ள குறிப்புகளை எடுத்துச் சொல்லுவது நல்லதாகும். ஏனெனில், அவைகள் எழுத்தாளனின் உள்ளுணர்ச்சியை வெளிக்கொணரும் ஒளிவிளக்குகளாகும்.

மிகவும் கவர்ச்சி செய்கின்ற முதல் கருத்து முன்னுரையிலும் தலைப்புகுதியிலும் இருக்கிறது. தன்னையே புதிய 'ஆடம் ஸ்மித்' என்று கருதிக்கொண்டு எழுதினார் 'மில்'. 'படிக்க முடியாத ரிகார்டோவை' படிக்கக்கூடிய வகையில் எளிமையாக எழுதினார். எது கவனத்துக்குரியதெனில் 'ஸ்மித்தை' ஒரு முன் மாதிரியாகக் கொண்டு 'மில்' தூண்டப்பட்டதுதான்; ஸ்மித்

[1] Bousquet, Essai sur l' Evolution de la Pensee Economique, பக்கம் 91.

ஒருவர்தாம் 'கோட்பாடுகளைச் செயற்பாட்டோடு அடிக்கடி பொருத்திப் பார்க்கும் வேலையைச் செய்தார்'. தூய அரசியல் பொருளாதாரம் அளிக்கின்றவைகளை யெல்லாம் தாண்டிப் 'பெரிய விஷயங்களுக்குப் பொருத்தி ஆழ்ந்து ஆராய்ந்தார்.' இந்தக் கருத்து தலைப்பையே பாதிப்பதாக இருக்கிறது. 'அரசியல் பொருளாதாரத்தின் கோட்பாடுகள்' என்ற பழகிய தலைப்பிற்கு அப்பால், 'அவைகளைச் சமுதாயத் தத்துவத்தோடு ஒத்து ஒட்டிப்பார்த்தல்' என்ற வார்த்தைகள் காணப்படுகின்றன. மில்லைப் பொறுத்தவரையில், 'அரசியல் பொருளாதாரம்' என்பது ஒரு பெரிய விஷயத்தின் ஒரு பகுதியாகும். அவருடைய அறிவுக்குப் பட்ட வரையில் அவர் வெறும் கொள்கை வாதியாக இருந்து விட விரும்பவில்லை. ஒரு சமுதாய சீர்திருத்தவாதி எத்தகைய நிலையில் இருப்பானே அத்தகைய அளவில் அவருடைய ஆசிரியர் 'பென்தம்' போன்று அவரும் இருந்தார். சீனியரைக் கேட்டால், பொருளாதார வாதியாயினும், பொருளாதார வாதி என்ற நிலையில் இருப்பவன் ஆயினும், ஆலோசனையாக ஒரு சிறு வார்த்தையைக்கூடச் சொல்வதற்கு அருகதை இல்லையென்று கூறுவார். மில்லிற்கோ வாழ்க்கையின் இலட்சியமே ஆலோசனை கூறுவதுதான். அவருடைய கொள்கைகள் பெரும்பாலும் திருத்தப்பட்ட மறுகூற்றேயாகும். வேளாளர் உரிமை, கூட்டுறவு, வார வரி, மரபுரிமைத் தடைகள் இவற்றைப்பற்றிய வாதங்களைக் காணும்போது, அவையெல்லாம் சமூகச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டே மில் கூறிப் போந்தார் என நன்கு உணரலாம். நடைமுறைக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்ற வகையில் பொருளாதாரம் ஓர் அறிவுக் கூருகக் கருதப்படுமாயின், இதுவே மில்லின் தனித்தன்மையான கொள்கையாகும் என்பதை நாம் அறிதல் வேண்டும். இதனையே தமக்குக் கிடைக்கின்ற நற்சான்றுகக் கருதிப் பொருளாதாரத்தை ஆராய்ந்துள்ளார். உற்பத்தி விதிகளுக்கும், பங்கீட்டு விதிகளுக்கும் உள்ள இயற்கைத் தன்மையை இவ்வாறே வேறுபடுத்தி விளக்கியுள்ளார். செல்வ உற்பத்தியின் விதிகள் எவையென்று 'மில்' குறிப்பிடும்போது, அவைகள் 'பருப்பொருள் இயலின்' உண்மைகளையே முழுதும் கொண்டவைகள்; அவற்றில் எதுவும் விதிக்கட்டின்றி மனப்போக்கின்படி நிர்ணயிக்கக்கூடியது அல்ல. இந்த விஷயத்தில் நம்முடைய விருப்பு வெறுப்புகள் எதுவாயினும், 'குறைந்துசெல் விளைவு விதிக் கோட்பாடுகள்' தந்துள்ளவற்றை அறிதல் வேண்டும். நம்முடைய கருத்துகளுக்கும் விருப்பங்களுக்கும் அவைகளின்மீது எவ்வித ஆதிக்கமும் இல்லை. எவ்வாறுயினும், மில் கூறுவதுபோல் செல்வத்தின் பங்கீட்டைப் பொறுத்தவரையில் அது முற்றிலும் மாறுபட்டுள்ளது. அங்கே

நாம் முழுவதும் 'மனித சமுதாய நிறுவனங்களையே' முழுதும் நம்பி யிருக்கவேண்டிய நிலை இருக்கிறது. 'ஒரு முறை அவைகள் அமைந்துவிட்டால்' அவைகளை மனிதன் விருப்பப்படி மாற்றிக் கொள்ளலாம். இதிலிருந்து பெறப்படுவது என்னவெனில், செல்வத்தின் பங்கீடு மனித சமூகத்தின் பழக்க வழக்கங்களையும் சட்டங்களையும் பொறுத்தது.[1] மனிதனுல் மாற்ற முடியாததாகவும் கட்டுப்படுத்த முடியாததாகவுமுள்ள உற்பத்தித் துறைச் சட்டத் திற்கும், மனிதனுல் உருவாக்கப்படவும், மாற்றவும் முடியுமான முறையில் பங்கீட்டுத் துறைச் சட்டம் அமைந்திருக்கின்ற இவ் வேறுபாட்டை மில் கடுமையான முறையில் எடுத்துக் கூறி யுள்ளார். மில் விறுவிறுப்புடன் வேறுபடுத்திக் கூறியுள்ள கருத்துகள் தாக்குதலுக்கு நிற்கமுடியாதவையாகும். ஒரு முறை அவைகள் அமைந்துவிட்டால், எல்லாமறிந்த, எல்லாம் வல்ல இணையற்ற பாராளுமன்றம் பங்கீட்டை ஆராய்ச்சியின்மை காரணமாக எவ்விதமேனும் தீர்மானித்துவிடக்கூடும். மக்களு டைய உணர்ச்சிகளுக்கு விரோதமாக இந்த விஷயங்களில் அது தவறு செய்யுமானுல், அது நிலைத்துநிற்க முடியாது. எதிர்ப்பற்ற சக்தியின்மூலம் பங்கீடு கட்டுப்படுத்தப்படுமானுல், அதனுல் ஒருசிறிது நன்மையே வரும். ஏனெனில், இந்தக் கட்டுப் பாடற்ற அதிகாரம் உற்பத்தி ஊற்றையே வற்றச் செய்துவிடு கிறது. அதனுல் பங்கிடுவதற்கு எதுவுமில்லாமல் போய்விடு கிறது. பழைய தொன்மைப் பொருளாதார வாதிகளிடமிருந்து இவருக்குள்ள வேறுபாடு மிக நன்முகத் தெரிகிறது. அவர்களுக்குப் பங்கீட்டு விதிகள் மற்றவற்றைப் போலவே மாற்ற முடியாதவை களாகும். 'மில்' இவைகளையெல்லாம் மனிதத் துணிபாற்றல் கொண்டு கட்டுப்படுத்தி ஒரு வட்டத்திற்குள் கூட்டிச் சேர்க் கின்ற காரணத்தால் எதிர்காலத்தை ஆழ்ந்து ஆராயக்கூடிய சீர்திருத்தவாதியாய், கம்யூனிச ஆட்சி வரப்போவதைப்பற்றி அமைதியாகச் சிந்திக்கக்கூடியவராய்க் காட்சி தருகிறார்.

மில்லின் வயது ஆக ஆக, அதுவே அவருடைய சீர்திருத்த முத்தாய்ப்புப் புனைந்துரைக்கும், சோஷலிச உணர்ச்சி ஊடாட்டத் திற்கும் காரணமாயிற்று. ஆனுல் அவர், தம்முடைய எண்ணங் களை ஒருபோதும் வெளிக்கொணர்ந்து சொன்னதில்லை. கம்யூனிசத் திற்கும், தனியார் சொத்துரிமைக்கும் இடையில் எதைத் தேர்ந் தெடுப்பது என்ற நிலை வந்திருக்குமானுல் அது எவ்வாறிருக்கும் என்பதல்ல, எவ்வாறிருக்கிறது என்பதுபற்றி அவர் கூறுகிறார்: 'கம்யூனிசத்தினுடைய இக்கட்டெல்லாம் பெரியவையானுலும்

[1] Principles, ஏடு II, அதிகாரம் 1.

சிறியவையானலும், அவையெல்லாம் தராசுத் தட்டின் தூசி களுக்குச் சமமாகும்.[1] மில்லினுடைய சோஷலிசம் ஓர் அதிசயப் படைப்பாகும்; இங்கே இந்த அளவுக்குச் சொன்னலே போது மானது.

எந்தப் பிரச்சினையைப்பற்றியும் அவரால் அறிவுரையோ ஆலோசனைகளோ சொல்லாமல் இருக்க முடியவில்லை. அவ்வாறே அவரால் இந்தக் கருத்துகளை ஜீரணிக்கவும் முடியவில்லை. காரணம், அவரே சில கொள்கைகளை அவருக்கென்றே தயா ரித்துக் கொண்டதனலாகும். இதனல் சில சமயங்களில் ஒவ்வாத கருத்துகளும் வருகின்றன. ஆனல், அதே நேரத்தில் சொல்லப் படும் கருத்துகளுக்கு அவை முரண்பாடாக இல்லை. மில்லின் சோஷலிசம் அவருடைய முக்கியக் கருத்துகளுக்குப் பிற்பட்ட காலத்துச் சேமிப்பாகும். சோஷலிசத்தினுடைய நிலை கண்டு பிடிக்கப்பட்டவுடன் அது பழைய முறையின்மீது நிலைத்து நிற்க முடியாதென்பது நன்ருகத் தெரிந்தது. உண்மையில் மில் கடைசிவரையில் கலப்படமில்லாத தனித் தத்துவவாதியாகத் திகழ்ந்தார். அவருடைய சோஷலிசமே தனியுரிமைக் கோட் பாட்டில் வேர்விட்டதாகும். செல்வத்தைச் சமமாகப் பிரிக்கச் சட்டம் செய்வது குறித்து அவர் பேசும்போது அசைக்கமுடியாத தனியார் உரிமை வாதியாகப் பேசுகிருர்; 'தனியாருடைய உழைப் பின் பலனை அவனுடைய அல்லது அவளுடைய சொந்தத் தொழிலிலிருந்து கிடைத்த பெரிய அல்லது சிறிய வருமானமா யிருந்தாலும் அதன் நியாயத்தை ஏற்றுக்கொள்ளுவதாயின்'[2] சோஷலிசத்தை ஒப்புக்கொள்ளலாம். சோஷலிசக் கருத்து களின் கருவாக உள்ள வளர்வீத வரியைக்கூட அவர் தவிர்க்க விரும்புகிருர். 'மிகுந்த வருமானம் பெறுபவர்களின்மீது குறைந்த வருவாய் பெறுபவர்களைவிட அதிகமாக உயர்ந்த சதவிகிதத்தில் வரிவிதிப்பது, தொழிலுக்கும் பொருளாதாரத்திற்கும் விதிக்கப் பட்ட கேட்டிற்குரிய வரியாகக் கருதப்படும்; அது மிகவும் கடினப்பட்டு உழைத்து மற்றவர்களைவிட அதிகமாகச் சேமித்த தற்காக அவர்களுக்குத் தரப்பட்ட தண்டனையாகும்.' மரபுரிமை, வாரிசுரிமை பற்றிய அத்தியாயத்தில் பல முடிச்சுகளிட்டுத் தம்மை இறுகக் கட்டிக்கொள்கிருர். ஏனெனில், தனியார் தத்துவத்தின் சிறப்புக்குரிய சொத்துரிமையில் புனிதமான மர புரிமை தம்முடைய சீர்திருத்தக் கருத்தால் சீரழிந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக உள்ளார்.

[1] அதே ஏடு, புத்தகம் 2, அதிகாரம் 1, பிரிவு 3.
[2] அதே ஏடு, புத்தகம் 4, அதிகாரம் 6, பிரிவு 2.

மரபு உரிமையைத் தவருகக் கையாளக் கூடாது என்பதிலே கவனமாக இருக்கும் அவர் புதிய திட்டம் ஒன்றும் தருகிருர். 'ஒருவர் மரபு உரிமைமூலம் பிறருக்கு வழங்குதலைத் தடுத்தல் கூடாது; வாரிசுரிமை அல்லது மரபுரிமை மூலம் பெறுகின்ற செல்வத்திற்கு அளவும் தடையும் வைக்கலாம்.[1] அவருடைய இதயத்திற்குப் பிடித்தமான சீர்திருத்தங்கள், விவசாயச் சொத்துரிமையைப் பரவலாக்குவது, கூட்டு உடைமையுடைய ஒரு முறையில் உழைப்பையும் மூலதனத்தையும் ஒன்ற இணைப்பது முதலிய இவைகள் தனியார் உரிமையின் சாரமாகும். போட்டியைப் போற்றி அவர் பாடியிருக்கும் திருப்பாடல் சோஷலிசத்தோடு பொருந்தாததோடு அதற்கு மேலும் ஏதாவது பொருளிருக்குமானால் போட்டியைப் போக்கிவிடுவது தவிர வேறு பொருளில்லை. மில்லினுடைய சோஷலிசம் இப்போதைய வழக்கத்திலுள்ள நோக்கையும் போக்கையும் காட்டவில்லை. அது அவருடைய உணர்ச்சியால் உருக்கி வார்க்கப்பட்ட வார்ப்படமாகும். அது மில்லின் மற்றக் கருத்துக் கோவைகளோடு ஒரு போதும் பொருந்தி வந்ததேயில்லை; நல்ல காலமாக மில்லிற்கும் இந்த உண்மை தெரியாது.

மில்லினுடைய பொதுக் கருத்துநிலைக்கு அப்பால் அவர் வலியுறுத்தியுள்ள, அல்லது வலியுறுத்தியதாகக் கருதப்படுகிற மறுவிளக்கவுரையில் ஒரு குறிப்பைக் காணலாம். மால்தஸினுடைய பொதுக் கருத்துகளின் செல்வாக்கிலிருந்து பிரித்து, மில்லைக் காணுவது இயலாததாகும். அடிப்படை உணவுப் பிரச்சினையின் காரணமாகவே மக்கள் தொகை அதிகரிப்புப் பயங்கரமாகக் காணப்படுகிறது என்பதும், 'குறைந்துசெல் விளைவு விதியும்', மதிப்பதற்கா அன்றி அவமதிப்பதற்கா மில்லால் கூறப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. இது 'அரசியல் பொருளாதாரத்தில் மிக முக்கியக் கருத்துரையாகும்.'[2] மக்கள்தொகைப் பிரச்சினை பற்றி அவர் எழுதும்போது நியாயத்தின்பாற்பட்ட கோபத்தால் அவர் குரல் நடுங்குவதோடு 'மால்தஸை'விடக் கடுமையான நடையில் அவரை எழுதவைக்கிறது; அளவுக்கு மீறிக் குழந்தையைப் பெறுவது, மிகைப்பட்ட குடியைப் போலவும், ஒழுக்க வரம்பு கடந்த செயலைப் போலவும் இருப்பதால், அதற்குக் காரணமானவர்களுக்கு ஆதரவு அளிப்பதை நிறுத்தி, இழிவுக்கும் ஏளனத்திற்கும் அவர்களைப் பலியாக்கவேண்டும் என்று[3] அவர் கூறுகிருர்.

[1] அதே ஏடு, புத்தகம் 2, அத்தியாயம் 4.
[2] அதே ஏடு, புத்தகம் 1, அத்தியாயம் 12, பிரிவு 2.
[3] அதே ஏடு, புத்தகம் 2, அத்தியாயம் 13, பிரிவு 1.

இந்தப் பிரச்சினையில் அவரது அறப்போர்க் கோபத்தை அளந்தறிய வேண்டுமானால் அவரது கூலி பற்றிய கொள்கைகளை அறிதல் நன்றும். பாராட்டத்தக்க கூலி நிதிக் கோட்பாடு மில்லோடு மிகவும் சேர்த்துச் சொல்லப்படுகின்ற ஒன்றுனலும் (அவ்வாறு சொல்வது முழுதும் நியாயமல்ல) அதன் தவற்றை எடுத்து விளக்கியபோது 'மில்' வெளிப்படையாகச் சூள் உரைத்தார். அந்தச் சூளுரைப்பு அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கிற்று. ஆனால், கூலித்தொகை நிதிக் கோட்பாடு ஏறக்குறைய பொதுச் சொத்துத்தான். அதை மால்தஸிடம் காணலாம். 'சீனியர்' அதைச் சுருக்கமாகக் கூறியுள்ளார்: 'எத்தனை தொழிலாளர்கள் பேணிக் காப்பாற்றப்பட வேண்டுமோ அத்தனை தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நிதியைப் பொறுத்துத்தான் கூலித்தொகை அமைகிறது.'[1] 'ஒரு நாட்டின் கூலித்தொகை நிதியின் கூட்டு மொத்தத்தைக்' குறிப்பதற்கு வசதியான சொற்றொடர் கிடைக்காமல் 'மில்' தவித்தார். ஆனால், அவருடைய கோட்பாட்டின் அடிப்படையில் கூலித்தொகைக்காகத் தனித்து வைத்துள்ள, முதலிலேயே முடிவு செய்யப்பட்ட நிதியையே சார்ந்து இருக்கிறது. வரையறைக்கு உட்பட்ட எண்ணிக்கையுள்ள தொழிலாளர்களுக்கு அந்த நிதியை எவ்வாறு பங்கிடுவது என்பது குறித்தும், போட்டியின் வசப்பட்டு அது பங்கிடப்படுகிறது என்பதும் விளக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து 'மில்' ஒரு முடிவுக்கு வருகிறார்: 'கூலித்தொகை அதிகரிக்கவேண்டுமானால் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான கூட்டு மொத்த நிதி அதிகரிக்கப்படவேண்டும்; அல்லது கூலிக்கு வருகிற தொழிலாளர்களின் எண்ணிக்கை குறையவேண்டும்.' கூலித்தொகை நிதி என்பது, கூலி தருவதற்கென்றே செயல் மாற்ற முடியாததாய் வைக்கப்பட்டுள்ள மூலதனத்தின் ஒரு பகுதியாகும்; இது உண்மையில் ஒரு கட்டுக்கதையேயாகும். ஆனால், இது ஏறும் கூலி விகிதத்தால் பயனேதும் இல்லை என்ற குற்றச்சாட்டிலிருந்து தப்புவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். இந்த முறை மக்கள் தொகையை நியாயமாகக் குறைப்பதில் அடங்கியிருக்கிறது.

மதிப்புப்பற்றிய 'மில்' கருத்து நினைவுகூரத்தக்கதாகும்; இத்தகு நிலை அதனுடைய முடிபுகளுக்காகவோ, கருத்துச் செறிவிற்காகவோ அல்ல; இங்கேதான் எல்லாப் பேய்களும் தங்கியிருக்கின்றன என்ற துர்ப்பாக்கியத்துக்குரிய உறுதிமொழியைத் தந்திருப்பதனால்தான். 'மதிப்பு விதிகளைப் பொறுத்த

[1] Senior Political Economy, பக்கம் 154.

வரையில் இப்போதைய அல்லது எதிர்கால எழுத்தாளன் எவனும் தீர்க்கவேண்டிய நிலையில் எந்தப் பிரச்சினையும் விட்டுவைக்கப்படவில்லை; மகிழ்ச்சி தரத்தக்க வகையில் இதன் கோட்பாடு முழுமை நிறைந்ததாகும்.'[1] (வியப்புள்ள கழுவாய்க் காக) விசித்திரமான பிராயச்சித்தமாக மில் கூறிய அனைத்திலும் இளைஞரால் அடிக்கடி எடுத்தாளப்படும் சொற்கூட்டமாய் இது அமைந்துவிடுமோ என்று பயப்படவேண்டியிருக்கிறது. எதைப் பற்றியும் தைரியமாக இருக்க முடியாது என்பதற்கு இது ஒரு சரியான எச்சரிக்கையாகும்.

மில் கருத்தில் ஒரு கடைசி அதிசயம் என்னவெனில் பொருளா தாரம், தத்துவம், கவிதை இவைகளெல்லாம் ஒன்றுக இணைந்த நிலையான அரசாங்கம்[2] பற்றிய கருத்துரையாகும். சிஸ்மாண்டி யைப் போலவே இயந்திரத் தொழில் முன்னேற்றத்தின்மூலம் சமூகம் 'எந்த முடிவை' நோக்கிச் செல்கிறது என்று மில் கேட்டார். மேலும், 'அந்த முன்னேற்றம் நின்றுவிடும்போது மனித சமுதாயத்தை எந்தச் சூழ்நிலையில் அது அமைக்கும் என்று நாம் எதிர்பார்ப்பது?'

'மில்' எவ்வாறு வேதனை மிக்க துன்பச் சூழ்நிலை ஏற்படும் என்று எண்ணுகிறாரோ அவ்வாறே முன்னேற்றம் நின்றுவிடும் என்றும் கருதுகிறார். வரையறைக்குட்பட்ட இசைத் தாளமும் அரைகுறைத் தாளங்களும் வெவ்வேறு விதத்தில் ஒன்றே டொன்று இணைக்கப்பட்டால், ஒரு நாள் உலகம்—நீண்ட காலத்திற்குப் பின்னல்ல — கடைசி இசையைப் பாடும். பிரான்சிஸ், டே ஹண்டர் ஆகியவர்களுடைய ஆண்டு வெளி யீடுகள், 'அந்த நாள் விரைவில் வரும்' என்பதற்கான அறிகுறியைக் காட்டவில்லை. செல்வத்தின் அதிகரிப்பு அளவிட முடியாததாய் இல்லாதபோது முன்னேறும் நாட்டிற்கு அப்பால் நிலையான நாடு வந்துதான் தீரவேண்டும் என்பது வெளிப்படையான உண்மை யாகும் என்கிறார் மில். மனித சமுதாயத் தொழிலின் ஓட்டம் கடைசியாகப் 'பரந்து நிற்கும் கடலில் கலந்துதான் தீரவேண்டும்.' சிலருக்கு இவ்வாறான அசைவற்ற நாட்டின் நிலைமை வருந்தத் தக்கதாயும், சிறுமைப்பட்டதாயும், துன்பம் உடையதாயும் தோன்றும். ஆனால், மில் இதிலிருந்து மகிழ்ச்சி தரத்தக்க வண்ண முடைய படத்தை உருவாக்குகிறார். மக்கள்தொகையும் தொழிற் சாலையும் ஒரே அளவு உடையதாய், அளவிறந்த வறுமையோ, அளவற்ற செல்வமோ இல்லாததாய், சோம்பேறிகளின் தீவின்

[1] Principles, புத்தகம் 3, அதிகாரம் 1, பிரிவு 1.
[2] Principles, புத்தகம் 4, அதிகாரம் 6.

சுகமத்தனையும் ஒருசிறிதும் தொல்லையில்லாமல் கிடைக்குமென்று காட்டுகிறார். ஆனால், இது ஒரே நிலையுடையதாயினும், தொழிற் சாலையையும் மூலதனத்தையும் பொறுத்தவரையில் மனித சமுதாய முன்னேற்றத்தில் ஒரு நிலையான நாடாக இருக்கத் தேவையில்லை. ஆங்குசனுடைய பேரப்பிள்ளைகள் மேலான தத்துவத்தின் அடிப்படையில் புத்தகங்கள் எழுதுவதற்கு இது எப்போதும் திறந்திருக்கும். தொன்மை அரசியல் பொருளாதாரத்திற்கு இது ஒரு விசித்திரமான முன்னுரையாகும். திறனுய்வாளர்கள் கூறியபடி இதனுடைய ஆரம்ப கட்டத்திலேயே உடன் வந்தவர்களையும், முன் சென்றவர்களையும் இது முந்தி விட்டது.

கயர்ன்ஸ்

பழமைக் கருத்துப் பள்ளியினரைக் காணின், ரிகார்டோவின் ஆத்மார்த்த சீடர்களில் சில வழிகளில் கடைசி ஆளாகக் கோடிட்டுக் காட்டப்படுபவர் ஜான் எலியட் கயர்ன்ஸ் (John Elliot Cairnes,[1] 1824—1875). இவரைப்பற்றி ஒருசிறிது சொல்லி இந்த அத்தியாயத்தை முடிக்கலாம். கூலித்தொகை நிதிக் கோட்பாட்டிலிருந்து மில் பின்வாங்கியபோது, லான்ஜு, தோரன்டன் ஆகியவர்களுடைய தாக்குதலுக்கு அவருடைய குரு ஏன் சரணடைந்திருக்கக்கூடாது என்பதற்கு கயர்ன்ஸ் தொடர்ந்து காரணங்காட்டி வந்தார். நம்பிக்கையற்ற கூட்டத்தில் நம்பிக்கைக்கு உரிய ஒருவர் இவராகத்தான் இருந்திருக்க வேண்டும். யாரும் பேராசிரியர் பாஸட்டை மறந்துவிட முடியாது. கயர்ன்ஸினுடைய நூல்களை நோக்கின், அது ஒரு தெளிந்த, உறுதியுடைய, நுண்ணிய மனத்தைக் காட்டுகிறது. மில் நிறைவேற்றியதை இவ்வறிவுள்ளம் பூர்த்தி செய்தது. ஆனாலும், இம் மனத்தில் புதிய கருத்துகள் ஊடுருவ முடியாதவையாகும். இரண்டு கருத்துகள் இங்கே நம்மை நிறுத்தி வைக்கின்றன. ஒன்று அரசியல் பொருளாதாரத்தின் இயற்பொருள் தன்மையாகும். இரண்டாவது 'போட்டியில்லாக் குழுக்கள்' பற்றிய அவருடைய கொள்கையாகும். இது கயர்ன்ஸினுடைய உயிரூட்டமுள்ள அசைக்க முடியாத கருத்தாகும்.

[1] கயர்ன்ஸ் 1823-ல் அயர்லாந்தில் (Ireland) பிறந்தார். டப்ளின் நகரத்திலுள்ள டிரினிட்டி கல்லூரியில் கல்வி பயின்றார். சட்டமும் படித்தார். டப்ளின், கால்வே, லண்டன் முதலிய இடங்களில் பேராசிரியராய்ப் பணியாற்றினார். அவருடைய முக்கிய நூல்கள் : The Character and Logical Method of Political Economy, and Some Leading Principles of Political Economy.

அரசியற் பொருளாதாரத்தின் இயல்பையும் இலக்கணத்தை யும் பொறுத்தவரையில் கயர்ன்ஸ் எழுதிய முக்கிய நூல் 'அர சியல்பொருளாதாரத்தின் வாதமுறையும் குணமும்' (The Character and Logical Method of Political Economy) என்பதாகும். அதிலுள்ள சிறப்பான வாதம் சீனியரை ஞாபகமூட்டுவதாகும். கயர்ன்ஸினுடைய கருத்தில் 'அரசியற் பொருளாதாரம் அயல் பொருள்களின் விலைவால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த அயல் கருத்துகள் 'சூழ்விலைத் திறனும் நியாயவாதமும் ஆகும்.'[1] அரசியற் பொருளாதாரம் உறுதியான நடைமுறை முடிவுகளை அடையவேண்டிய ஒன்றாகக் கொண்டிருக்கும் வரையில் அது அறிவியலின் கூறுகள் எதனையும் பெறமுடியாது. அதன்பின் கயர்ன்ஸைப் பொறுத்தவரையில் பொருளாதாரம் அசைக்க முடியாத அறிவியலாக இருத்தல் வேண்டும். அது அவ்வாறு இருப்பதற்காக நடைமுறைப் பிரச்சினைகள் அனைத்திலிருந்தும் அது வெட்டப்பட்டு நீக்கப்படவேண்டும். வரையறையற்ற நடுநிலைமைக் கோட்பாட்டை ஏற்றிருத்தல் வேண்டும். 'சமூகத் தொழிலியல் சம்பந்தமான எல்லா முறைகளிலிருந்தும் தனித்து நிற்றல் வேண்டும்.'[2]

அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகிற ஒரு வாசகத்தில் அவர் இவ்வாறு கூறுகிறார்: 'அரசியல் பொருளாதாரம் என்பது போட்டியிடும் சமூகத் திட்டங்களுக்கிடையில் நடுநிலையாக நிற்பதாகும். பொறியியல் விஞ்ஞானம் போல், ரெயில்வே நிர் மாணத்தின் போட்டியுள்ள திட்டங்களுக்கிடையில் நடுநிலைமை யாக நிற்பதுபோல் (இதில் பொறியியல் திறனும் செலவும் கவனிக் கப்படவேண்டியவையாகும்) இரசாயனம், துப்புரவு முன்னேற்றத் திற்கான போட்டியுள்ள திட்டங்களுக்கிடையில் நடுநாயகமாக நிற்பதுபோல், ஒன்றுக்கொன்று எதிர்க்கின்ற மருத்துவ முறை களுக்குள்ளே உடற்கூற்றியல் நடுநாயகமாக இருப்பதுபோல் இருக்கிறது. எல்லாவற்றையும் அளந்தெடுப்பதற்குரிய கருவியின் பகுதியாகவும், சரியாகக் கூறின் அது கருவிகளையே அளிக்கிறது. அது எதனையேடும் தன்னை இணைத்துக் கொள்வதற்கு மறுக்கிறது.'[3]

சுருக்கமாகக் கூறின், 'தற்கால ரெயில்வே துறைக்கும், பொறியியல் துறைக்கும் என்ன தொடர்பு உள்ளதோ அதைவிட இப்போதைய தொழில் துறைக்கும் பொருளாதார அறிவியலுக்கும் அதிகமான தொடர்பில்லை.'

[1] Character and Logical Method, பக்கங்கள் 14–16.
[2] அதே ஏடு, பக்கம் 20.
[3] அதே ஏடு, பக்கம் 21.

இது உண்மையேயாயினும், இங்கே இவ்வுண்மை மிக அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த அவா வெறுத்த கொள்கை நடைமுறையில் மதிக்கப்படுமானால் பொருளாதாரத்தை அதனுடைய உயிரூட்டமுள்ள உணர்ச்சியிலிருந்து பிரிப்பதாகும். மற்றோர் இடத்தில் கயர்ன்ஸ் கூறியுள்ள கருத்துப்படி, அக் கருத்தை மேற்போக்காகக் கொள்ளின் கல்வியியல் பொருளாதாரப் பயிற்சி கருத்தியலான புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றுகவே முடியும். அவருடைய முழு விவாதமும் பொருளாதார அறிவியலே ஓர் உய்த்துணர்வு பயிற்சியாகவே பிரித்தெடுக்கிறது.'[1] ஆராய்ந்து பார்ப்போமானால் சோதனை தேவையாகும். பொதுவாகப் பொருளாதார நிபுணரின் ஆயுத சாலையில் இவைகள் இல்லை. மேலும், உண்மைகள் பொங்கி மேற்செல்வனவாகும்.

'அவன் (பொருளாதார நிபுணன்) பொருளாதாரப் பிரச்சினைகளை, மாறுகின்ற இச் சமுதாயத்தின் சிக்கல்களோடு இணைக்காமல் அது எவ்வாறு அவனிடத்தில் தரப்பட்டதோ அவ்வாறே எடுத்துக்கொள்ளல்வேண்டும். தரப்பட்ட உண்மைகளிலிருந்து உய்த்துணரும் முறையைவிட்டு வேறு எந்த முறைக்காவது செல்வானையின் ஒரு சிறிதும் மதிப்பற்ற முறையில் எந்த முடிவிற்கும் வரமுடியாமல் அவன் காலம் முடிந்துவிடும் என்று சொல்வதற்குக் காரணம் இருக்கிறது.'[2]

இந்தக் குறைபாட்டிற்கு எதிராகப் பொருளாதார நிபுணனை இயக்க நூல் அறிஞனோடு ஒப்பிட்டிருப்பதில் ஒரு நன்மையிருக்கிறது. 'முடிந்த பௌதிகக் கோட்பாடுகளைப்பற்றி நேரடியான அறிவு மனிதனுக்கில்லை. நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்தபின்புதான், விஞ்ஞானி எதிலிருந்து காரண காரியங்களை விளக்குகின்றானே அந்தப் பொதுக் கருத்துகளை அடைகிறான்.[3] ஆனால், பொருளாதார அறிஞன் முடிந்த காரணத்தை[4] மனத்தில் கொண்டே துவங்குகிறான். அந்த முடிந்த காரணம் எதுவெனில் அதுதான் மகிழ்ச்சியான மனிதன்; பௌதிக அறிஞன் பல நூற்றாண்டுகளின் ஆராய்ச்சிக்குப் பின்னால் அடைகின்ற ஒன்றைப் பொருளாதார அறிஞன் எடுத்த எடுப்பிலேயே பெற்று விடுகிறான்.'

இந்த முடிந்த காரணங்கள் பொருளாதார மனிதனின் நடத்தையையே சார்ந்திருக்கிறது. இது 'சில மனித உணர்ச்சிகளையும்

[1] அதே ஏடு, பக்கம் 64.
[2] அதே ஏடு, பக்கங்கள் 65–66
[3] அதே ஏடு, பக்கங்கள் 70-71.
[4] அதே ஏடு, பக்கம் 75.

சில மீருக இயல்புகளையும், மனச்சார்புகளையும் கொண்டிருக் கிறது.' இந்த முடிந்த காரணங்கள் நாம் நேரடியாக அறிந் தவையாகும். சீனியருடைய நான்கு அடிப்படைக் கருத்து ரைகள் இதைப்போன்றுதான் அமைந்துள்ளன.

கடுமையான தத்துவ உண்மை ஒன்றை—பொருளாதார விதிகளின் இயற்கைத் தன்மையை—குறித்துக் கயர்ன்ஸ் அழுத்தந் திருத்தமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார். அரசியல் பொருளாதாரத்தைக் கற்பனை (ஊகக் கோட்பாடு) என்று ஏன் கருதவேண்டும் என்பதை அவர் சரியான முறையில் குறித் துள்ளார்.[1] ஒரு பொருளாதார விதி இயல்புரை உண்மையைக் கூறவில்லை. கற்பனையான ஊகக் கருத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒரு பொருளாதாரச் செயலைக் குறித்த விதியை அந்தச் செயலைக் குறித்த நிகழ்ச்சிகளைக் கொண்டு நிரூபிப்பதோ மறுப்பதோ இயலாது. மனித இயல்பில் உள்ள சில கோட்பாடு களை அடிப்படையாகக் கொண்டே, சிலவிதப் பொருளியல் நிலை மைகளைக்கொண்டு நிரூபணம் செய்யவேண்டும். அவ்வாறே ஒரு பொருளாதார விதியை மறுப்பதற்கும் (மனித நடத்தையின்) 'கொள்கைகள்' அவ்வாறு இல்லையென சொல்லியாகவேண்டும். அல்லது முடிவை அடையப்போகும் வழியில் பொருளாதார அறிஞன் வாதப் பிரதிவாதங்களுக்கு அடிமையாகிவிட்டான் என்று கூறுதல் வேண்டும். சுருங்கக் கூறின், பொருளாதார விதிகளைச் சில உண்மைகளைக்கொண்டு நிரூபிப்பதோ மறுப் பதோ இயலாத காரியமாகும்.[2]

அறிவுத்துறை விளக்க ஆராய்ச்சி என்று நோக்குவோமாயின் கயர்ன்ஸ் கருத்துகள் காப்பாற்றப்பட வேண்டியவையே. நம் முடைய அறிவின் அளவையும் அடிப்படையையும் அடிக்கடி ஆராய்ந்து பார்ப்பது—நமக்கு ஏதாவது உண்மையில் தெரியுமா என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வது—தேவை என்பது மாத்திரமல்ல. மிகமிக அவசியமுமாகும். இதற்காக ஓர் அறிவுள்ள சமுதாயம் தத்துவ அறிஞர்களையும், மறைநூல் அறிஞர் களையும் கொண்டு இலங்குகிறது. இயல்பு குறித்தும், வழி வகைகள் குறித்தும் அளவுக்குமீறி ஆராய்கின்ற போக்கிலிருந்து, அப்பாவி மனிதன், தன்னைத் தடுத்து நிறுத்திக்கொண்டுவிட முடியாது. அவ்வாறு செய்யின் உள்முக ஆராய்ச்சிப் பண்பு சரியாக இல்லை என்பதை இது எடுத்துக்காட்டும். கயர்ன்ஸ் சொல்வதில் பெரும்பகுதி மற்ற அறிவுத்துறைகளுக்கும் பொருந்தி

[1] அதே ஏடு, பக்கம் 51. [2] அதே ஏடு, பக்கங்கள் 99-107.

வருவதாகும். அவர் அறிந்தவரையில் (சரியோ தவரோ) பொருளாதாரத்தைக் கருத்தியலான அறிவுத்துறையின் பக்கமே சேர்க்க முயல்கிறார். பொருளாதாரத்தை பகுத்தறிவுத் துறையாக கயர்ன்ஸ் ஆக்கியிருப்பதைக் கண்டுபிடிக்கத் தந்திரம் ஒன்றும் தேவையில்லை. இதற்காகக் கூறுகின்ற உறுதியான காரணம் பொதுக் கோட்பாடுகளே அடிப்படையாகக் கொண்டதாகும். உலகப் பிரச்சினைகளில் எப்பக்கமும் இக் கருத்துச் சாராமல் இருப்பதை எண்ணி அவரே உவகை கொள்கின்றார். பகுத்தறிகின்ற கடுமையான அறிவியல் உண்மைகளைக்கொண்டு பொருளாதார முடிவுகள் மறுக்கப்படுதலும் கூடாது என அவர் கருதுகிறார்.

அந்த உண்மைகள் பொருளாதார விதிகளுக்கும் முரண்பட்டு இருக்குமானால், அது அந்த உண்மைகளுக்கு ஏற்பட்ட கேடு என்று கொள்ளவேண்டும். இதை மாறுபட்ட போக்கு என்று கொள்வோமாயினும், இந்த நேரத்தில் தொன்மை அரசியல் பொருளாதாரம் தோன்றியதானது பெரிய அளவிற்கு இதை மாற்றிற்று.

இந்த முறைகள்பற்றிய பிரச்சினையை விட்டுவிட்டு 'கயர்ன்ஸை' நினைவில் கொள்ளவேண்டுமானால் அவருடைய 'போட்டியிடாக் குழுக்கள்'பற்றிய கருத்துகளும், அதிலிருந்து வருவிக்கப்பட்ட முடிவுகளும் முக்கியமானவைகளாகும். முதல் அத்தியாயத்தில் 'சில முக்கியக் கோட்பாடுகள்' (Some Leading Principles) என்ற ஏட்டில் ஜீவான்சைப் புரிந்துகொள்ள முடியாமல் அவர் தவிர்த்திருப்பதைக் காணும்போது நமக்குப் பெரிதும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. மதிப்புப் பற்றிய அவருடைய சொந்தக் கருத்து பழமைப் போக்கில் இருக்கிறது. ஆனால், அதிலும் சில வரையறைகள் உண்டு. 'உற்பத்திச் செலவு' பற்றிய மில் கருத்தினை மிகத் தெளிந்த முறையில் கடைசிவரையில் ஆராய்கிறார். 'செலவு', 'செலவினுடைய பரிசு' இவை இரண்டும் ஒன்றோடொன்று மாறுபட்டிருப்பதுபோல் வேறு எந்த இரண்டு கருத்துகளும் முரண்பட்டிருக்கவில்லை. 'செலவும் பரிசும்' பொருளாதாரத்தின் எதிர்மறைக் கோட்பாடுகளாகும். கூலியும், மூலதனத்தின் இலாபமும், இவற்றினுள்ளே மில் காண விரும்பும் உற்பத்திச் செலவும் செலவுக்குரியதே அல்ல. செலவுகள் தியாகங்கள் ஆகும். மில்லினுடைய கூற்றின்படி இவைகள் தியாகத்திற்குத் தரப்பட்ட பரிசுகள் அல்ல; இவைகளே தியாகங்கள்தாம். இவ்வாறு கயர்ன்ஸ் போராடுகின்ற பழைமை உருவம்

[1] Leading Principles, பக்கம் 50.

பெற்ற கோட்பாட்டின்மூலம் உற்பத்திச் செலவு என்பது முதலாளித்துவத்தினுடைய செலவுகளாய் முழுதும் அமைந்திருக்கிறது. இதிலிருந்து தெரிவது உற்பத்திச் செலவுக் கோட்பாடு மதிப்பை நிருணயிக்கிறது. இதுபோன்ற தீர்மானம் ஒன்றை உறுதிப்படுத்த இது பயன்படுகின்றது. இவ்வாறு முதலாளித்துவத்தினுடைய பொருளின் தன்மை சார்ந்த செலவுகள் என்ன என்பது சீனியரை நிணைவூட்டுகின்ற முறையில் கயர்ன்ஸ் தந்துள்ள கோட்பாடு விளக்குகிறது. அதில் உற்பத்திச் செலவு அகவியல் பொருள்களைச் சார்ந்திருக்கிறது. மேலும், வெவ்வேறு விதமான தியாகங்களை—உழைப்பு, இன்பத் துறப்பு, ஆபத்து ஏற்பு இவைகளை—உருவாக்கின. இந்த வெவ்வேறு வகைக் கூறுகளின் பணப் பரிசுகள் கணக்கில் வாரா.

'உற்பத்திச் செலவை' நிருணயிக்கப் பயன்படும் அகவியல், நம்மை நிறுத்தத் தேவையில்லை. போட்டியிடாக் குழுக்கள்பற்றிய கருத்துச் சிக்கலிலிருந்து எவ்வாறு விடுபடுவது என்பதுதான் நம்முடைய நோக்கமாகும். எந்தப் போட்டி, தியாகங்கள் செய்யப்பட்ட விகிதாசார அளவுக்குப் பரிசுகள் தருவதற்குக் காரணமாயிருக்கிறதோ, அதைத்தான் நாம் கவனிக்கிறோம். பண்டங்களின் மதிப்போடு 'உற்பத்திச் செலவுகளைத் தொடர்புபடுத்துவதற்குப் பாதுகாப்பாக'[1] இருப்பதுதான் போட்டியாகும். 'பயன்படு போட்டி' இருந்தால்தான் உற்பத்திச் செலவு மதிப்புகளை ஒழுங்குபடுத்தும். இவ்வாறுக, கயர்ன்ஸ் இந்தப் போட்டியின் பயன்படு தன்மை எவ்வளவு தூரத்திற்கு இருக்குமென்று காண முயல்கிறார். ஏனெனில், ஏதாவது தடைகள், 'சட்டமோ, அறியாமையோ, வறுமையோ' இருப்பின் போட்டி இல்லாதொழிந்துபோகும். இதனால் பண்டங்கள் அதனதன் செலவுக்கு (அஃதாவது) அதற்குத் தேவைப்பட்ட தியாகத்தின் அளவுக்கு பரிமாற்றப்பட மாட்டா. கயர்ன்ஸ் மிக எளிதில் திருப்தியடைந்துவிடுகிறார். காரணம் தேர்ந்தெடுப்பதற்கான முழுநிலை மூலதனத்துக்குரியதாக இருக்கிறது. ஆகவே, மூலதனம் எந்த வகையிலும் பயன்படுத்தப்படலாம். ஆனால், உழைப்பு அவ்வாறில்லை. முழுதும் நிருணயிக்கப்படாத நிலையிலுள்ள உழைப்பு, தொழிற்சாலையின் முழு அமைப்பிலும் தேர்ந்தெடுக்கப்பட வசதியில்லை.

'நாம் இதன்மூலம் உண்மையில் என்ன காண்கிறோம் என்றால், மக்கள் தொகையினர் அனைவரும் எல்லா வேலைகளுக்கும்

[1] அதே நூடு, பக்கம் 63.

வேறுபாடின்றிப் போட்டியிடமுடியாது. ஒன்றன்மீது மற்றொன்று ஆதிக்கம் செலுத்துகின்ற வரிசையான தொழிற்சாலை அமைப்புகள், ஒவ்வொன்றிலும் வெவ்வேறு வேலைகளைப் பெற முயல்கின்ற ஒவ்வொருவரும் தங்கள் மெய்யான பயன்படும் சக்திக்கு ஏற்றாற் போல் தேர்ந்தெடுக்கும் திறமையினைப் பெற்றிருத்தல் நன்று; அவ்வாறன்றிப் பல்வேறு தரமுள்ள தொழில்களில் ஈடுபட்டுள்ள அனைவருக்குமிடையே ஒரே 'பயன்படு போட்டி' ஏற்படுமாயின் ஒருவரோடொருவர் கொண்டுள்ள தொடர்பு அற்றுப்போகும்.'[1]

இவ்வாறுக, 'நம்முடைய சமூகப் பொருளாதாரத்தின் சிறப்புக் கூறாய் அமைந்துள்ள போட்டியிடாத் தொழிற் குழுக்களை நாம் ஏற்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறோம்.' இக் கருத்து தெளிவு மிக்கது; சிறப்புடையது. ஏனெனில், கயர்ன்ஸ் மதிப்புக் கோட்பாட்டில், மாற்றங்கள் செய்ய இவற்றைப் பயன் படுத்துகிறார். ஏதாவது ஒரு குழுவிற்குள் தாம் பண்டங்களின் உற்பத்திச் செலவு மட்டத்தில், பரிமாற்றம் நடைபெறும். போட்டியிடா இரண்டு குழுக்களுக்கிடையில் பரிமாற்றம் வேறு அடிப்படையில் நடைபெறும். அது அயல்நாட்டு வாணிபக் கோட்பாட்டில் அடிக்கடி சொல்லப்படுகின்ற பரிமாற்றத் தேவையே தவிர வேறு ஒன்றுமில்லை. போட்டியிட்டாக் குழுக்களுக்கிடையே செலவுக் கோட்பாடு ஏன் தோல்வியடைந்துவிட்டதென்றால் பல்வேறு பண்டங்களின் உற்பத்தியாளர்கள் பெறுகின்ற ஒப்புமை சார்ந்த ஆதாயம் அதை விளக்கும். ஆதாயம் (பரிசு) ஒரு குழுவிற்குள் நடைபெறும் தியாகத்தின் விகிதாசாரத்தைப் பொறுத்திருக்கிறது. அது வேறுபட்ட இரண்டு குழுக்களிடையே ஒத்துவராது. ஒரு குழுவை மற்றொன்றோடு ஒப்பிடும்போது அது பெற்றிருக்கின்ற நற்பயன்—அயல் நாட்டு வாணிபத்தில் இருப்பது போல்—ஒரு குழுவின் உற்பத்தி மற்றொரு குழுவின் உற்பத்தியோடு கொண்டிருக்கிற பரிமாற்ற மதிப்புகளையே சார்ந்திருக்கும்.[2]

கயர்ன்ஸினுடைய போட்டியிடாக் குழுக்கள்பற்றிய கோட்பாடு மிக முக்கியமான இடத்தைப் பெறுவதன் காரணம், பழமையான உற்பத்திச் செலவின் மதிப்புக் கோட்பாட்டைத் தாழ்த்துவதுதான். மேலும், தியாகத்தைப்பற்றிய அகவியல் கருத்திற்குச் சிறப்பினை அளிக்க எண்ணிய செவான்ஸ், ஆஸ்திரியர்களே அத் தியாகத்திற்குக் காரணமானவர்கள் என்று கூறுகிறார். இக்

[1] அதே ஏடு, பக்கம் 72.
[2] அதே ஏடு, பக்கங்கள் 75–79.

கருத்தை மேலும் வலியுறுத்தியிருப்பாரானால், அடிப்படைக் கருத்திலிருந்து நீண்ட தூரம் விலகிச் சென்றிருப்பார். திறன் மிக்க உழைப்பு, ஏன், திறனற்ற உழைப்பைவிட அதிகமான கூலியுயர்வைப் பெறுகிறது என்பதுபற்றி அவர் விவாதிக்கும்பொழுது 'திறமை என்பது செலவுக் கூருக ஆகாது என்பதனாலும், 'எங்கே திறனான உழைப்பு விற்பனை முற்றுரிமையோடு இருக்கிறதோ அங்கே உயர்ந்தபட்ச ஆதாயம் என்பது கிடைக்கக் கூடியது' என்பதனாலும்' என்று சரியாக வாதிடுகிறார். 'திறனான உழைப்பு என்பது, அதனுடைய தேவையோடு கணக்கிடும்போது மிக மிகக் குறைவான எண்ணிக்கை உடையவர்களுக்கே இத்திறன் வாய்க்கப் பெற்றிருக்கிறது; இது சூழ்நிலைத் திறனாகும்.'[1] இதுவே இதைத் தீர்மானிப்பதற்கான கூருகும். உழைப்பாளியின் எண்ணிக்கை குறைவாக இருக்கும்போதுதான் உழைப்பின் உற்பத்தி இறுதி நிலை உயர்கிறது. இதைப் பிற்காலத் தலைமுறையினர் நன்றாக உணர்ந்திருந்தனர். இதையறியாத காரணத்தால் கயர்ன்ஸ் மேற்கண்டவாறு சொல்கிறார்.

[1] அதே ஏடு, பக்கம் 85.

11. காரல் மார்க்ஸ்

கருத்தியல் கற்பனை வாதிகளான பழைய சோஷலிஸ்டுகள் பொருளாதார நிபுணர்கள் அல்லர் என்பது ஐயமறத் தெரிந்ததே. எனினும், பழைய சோஷலிசக் கொள்கை வரலாற்றை இது போன்ற ஏட்டில், தனித்த பிரிவில் எழுதுவது இயலாது. இப் பிரிவில் மார்க்ஸ்பற்றிப் பெரிதும் எழுதுவது தவருனதல்ல என்பதையுணர்ந்து, பழைய சோஷலிச ஆதரவாளர்கள் திருப்தி யடையவேண்டும். 'பிளேட்டோ' கம்யூனிசத்தைப்பற்றிக் கூறியிருப்பதால், அவர்தாம் சோஷலிசத்தைப்பற்றி முதன் முதல் அறிந்து விளம்பியவர் எனச் சிலர் நினைக்கின்றனர். 'மூர்' (Moore) தமது 'உடோபியா'வில் (கற்பனைக் கருத்தியலில்) சுரண்டல் கொள்கையை விளக்கியுள்ளார்; தனியார் சொத்துரிமையைத் தாக்கியுள்ளார். ஆகையால், அவர்தாம் சோஷலிசத்தின் முன்னோடி என எண்ணுவோரும் உண்டு. மார்க்ஸீயக் கண் ணோட்டத்தில் பார்க்கும்போது, பழைய சோஷலிசம் மார்க்ஸினு டைய தயவு தாட்சணியமற்ற கண்டனத்திற்கு ஆட்பட்டதாகும்.

இஃதில்லாமல் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சோஷலிஸ்டுகளின் கருத்துரைகளும் இத்தகைய கண் டனத்திற்கு ஆளாயிற்று. இவ்வாறு கண்டனத்திற்கு ஆளான வர்களிலே சோஷலிசத்தைப் பெற்ற தந்தையாரை நாம் தேட வேண்டியுள்ளது. நாமறிந்த வரையில் இவர்களிலே காலத்தால் முற்பட்டவர் என்று கருதப்படுபவர், 'செயின்ட் சைமன்' என்பவர் ஆவர். 'வாழ்க்கைக் குறிப்பு' எழுதிப் பெயர்பெற்ற ஓர் எழுத் தாளரின் பெயரும் இதுவே; ஆனால், அவரல்லர் இவர். இவர் ஒரு பாட்டாளி அல்ல; விபரீத உணர்ச்சிக்குப் பெயர்போன பிரபு; ஆயினும் அறிவாளி. உலகம் தொழில் மயமாகப் போவதை

முன்னறிந்து மொழிந்தவர். இவர் காலம் உலக மாற்றத்தை விரும்பிப் பெறத் துடிதுடித்த காலம். அப்போது ஆத்மீகத் தலைமை எங்கே கிடைக்குமென விடாப்பிடியாகத் தேடியவர் சைமன். அதற்காகவும் சிறு நூல்கள் பல எழுதினர். இக்கருத்தை அவர் நுழைக்காத நூலில்லை. அப்போதைய உலகக் கருத்து, தனிச் சலுகை நல்கும் உரிமைகளை ஒட்டறுப்பதில் வட்டமிட்டது. உலக வளங்களை மக்களின் பொதுவுடைமையாக்க வேண்டு மென்ற கருத்தும் அவ்வுலகத்தில் ஓங்கி நின்றது.

உண்மையில், 'செயின்ட் சைமனுடைய' சோஷலிசம் (அவ்வாறு ஒன்று இருந்திருக்குமானால்) குறைபாடுகள் மலிந்த தாகும்; இந்த விசித்திரமான கோட்பாட்டை அவரது சீடர்கள் பரப்பினர்கள். அவர்கள் தனி உரிமைகளில் தலைசிறந்த தனியார் சொத்து வாரிசுரிமையை ஒழிக்கவேண்டும் என்று கூறி னர்கள். இதன்மூலம் அரசை, இறுதிப் பத்திரம் வாயிலாக எஞ்சிய பொருளைப் பெறும் ஓர் அரசாக ஆக்கிவிட்டனர். இவ் வாறு சோஷலிசப் பாதையை அடைவதற்குக் குறுக்கு வழி கண்டனர். இவ்வரிசையில் அடுத்து, 'ஃபூரியர்' (Fourier, 1772—1837) வருகிறார். இவர் வாழ்க்கையில் மனச் சஞ் சலங் கொண்டவர். இவர், தாம் தாறுமாறுகப் பேசினும், குழப்ப மடைந்தவர்களை அடிக்கடி தெளிவு பெறவைக்க முயலுவதாக எண்ணினர். 'கூட்டுறவுக் குழுவே (Phalanx) உலகத்தைத் திருத்தி யமைக்கவல்லது என அவர் கனவு கண்டார். அவ் வாறு அமைத்தால் இறுதியில் மொத்தம் 29,85,984 கூட்டுறவுக் குழுக்கள் இருக்கும். அவரது கொள்கை கூட்டுறவு சோஷ லிசமாகும். அதன் நோக்கம் தேவையின்றி வீணுவதையும், திறமையின்மையையும் மாற்றியமைப்பது. மக்கள் சமுதாயத்தின் முரண்பட்ட மோதல்கள் நீக்கப்படுவதும், ஒருவர் மற்றவரின் வாய்ப்புக்கேட்டில் ஆதாயம் பெறுவதைத் தடுப்பதும் ஆகும். இளமையிலே செயலில் முதியவராகக் காரியமாற்றிப் பெருமை பெற்ற 'ராபர்ட் ஓவன்' (Robert Owen, 1771—1858) காண்போம். இலட்சியத் தொழிலதிபராக இளமையில் திகழ்ந்த அவர், பிற்கால வாழ்வில் துணிவுடன் தேவையான வாணிபத் திலும், இடர் மேற்கொண்ட செயல் வேட்டத்திலும் ஈடுபட்டார். உலகம் உய்யவேண்டுமெனின் ஒரே ஒரு பாதைதான் தென் படுகிறது; அதுவும் கூட்டுறவுமூலம்தான் எய்தப் பெறும் என்றார்.

மேலும், பொதுவுடைமைத் தத்துவம் உள்ளதாகக் கருதப் படும் நியூஹார்மனி என்னுமிடத்தில் தாம் நிறுவியதான கிராமக்

குடியிருப்புகளை நிருமாணிப்பதன் மூலமே கூட்டுறவை அடைய முடியுமென எண்ணினர். நான்காவதாகக் (இவண் கடைசியாக) குறிப்பிடப்படவேண்டியவர் 'லூயி பிலாங்க்' ((Louis Blanc, 1811—1882) என்பவர். இவர் மாற்றமிக்க மனநிலையுடையவர். இவர் பிற்கால சோஷலிசத்தைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்; இதனால் இவரையும் கற்பனைக் கருத்தியல் வாதிகளில் ஒருசேரக் கொள்ள முடியாது. மக்களின் கூட்டுறவு முறைகளினால் போட்டியைத் தவிர்க்கலாம் என்பது இவரது கருத்து; ஆனால், இவரைப் பொறுத்தவரையில் ஏழைகளின் வங்கி (Bank) யாக உள்ள அரசாங்கம், கூட்டுறவு சங்கங்களைத் துவக்கி வைக்கவும், இதன் விளைவாக முதலாளித்துவத்தை அத்துறையிலிருந்து விரட்டும்வகையில் இப்புது அமைப்பை மேற்கொள்ளவுமான மாபெரும் சீர்திருத்தத் திட்டத்தைத் துவங்கிவைக்கும் பேராளராகத் திகழ வேண்டும் என்று கருதினர்.

இவ்வாறுதான் சோஷலிசக் 'கருத்தியல் கற்பனை வாதிகள்' இருந்தனர். பெரும்பாலானவர் 'கூட்டுறவு வாதிகளாகவும்' திகழ்ந்தனர். அவர்களைக் கருத்தியல் கற்பனைவாதிகள் என்று ஏன் குறிப்பிடுகிறோமெனில், சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதென்பது கப்பலைக் கடலில் மிதக்கவிடுவது போன்று யாரேனும் ஒருவர் துவக்கிவைக்கவேண்டிய ஒன்று என நம்பினர். அதன்பின்தான் சோஷலிசத்தின் வேலை தொடங்கும் என எண்ணினர். அவர்கள் இணையும் 'கூட்டுறவு முறைகளை' விரும்புபவர்கள் என்று குறிப்பிடப்படுவது ஏனெனில், சோஷலிசக் கொள்கைகளின் அடிப்படையில் மக்கள் கூடிவாழும் சமுதாயத்தை நிறுவி, அதை விரிவாக்குவதன் மூலம்தான் சோஷலிசம் உருவாகி வருமெனக் கனவு கண்டனர். ஃபூரியர் (Fourier) தாம் நினைக்கும் கூட்டுறவுப் படைகளை அமைக்க ஒரு தலைவர் தேவையென்றும், அந்தப் பெயர் தெரியா முதலாளி (தலைவர்) முதல் கூட்டுறவுப் படையைநிறுவுவதற்குத் துணைபுரிவார் என்றும் அப்படிப்பட்ட ஒருவரது வருகைக்காகத் தம் இல்லத்தில் நாள் தோறும் ஒரு மணிநேரம் காத்துக்கொண்டிருந்தார். பழைய சோஷலிச வாதிகளின் திறமையின்மைக்கும் அறியாமைக்கும் அடையாளமாக இவை உள்ளன.

காரல் மார்க்ஸ்[1] (Karl Marx, 1818—1883) பொருளாதாரத்துறையில் காலடி வைத்தவுடன் இவை யாவும் மாற்றம்

[1] காரல் மார்க்ஸ் 1818-ல் டிரியரில் பிறந்தார். பான், பெர்லின் நகரங்களில் படித்தார். ரியினிஷ் சிடங் (1842) என்ற பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். 1848 வரையில் ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து முதலியவை

அடையத் தொடங்கின. சோஷலிசம் என்பது இப்போதுதான் பொருளாதாரக் கோட்பாட்டின் முக்கியப் பகுதிகளில் புகுந்து இணைந்தது. ஏனெனில், மார்க்ஸ் வந்தபின் சோஷலிசம் பொருளாதாரக் கொள்கையின் ஓர் அங்கமாகவும், பொருளாதாரத் திட்பவாதத்துடனும் அமைந்தது. நடைமுறைப் பொருளாதார நடவடிக்கைகளை ஆதாரமாகக்கொண்டு வருவதுரைக்கும் முறை மார்க்ஸுடன் துவங்கியது. வெறுப்போடும் கசப்போடும் அழைக்கப்பட்ட 'கருத்தியல் கற்பனை' என்ற பெயரிலிருந்து விடுபட்டு, 'சோஷலிசம்' புதியதொரு பொலிவையும் சிறப்பையும் பெற்றுவிட்டதாக எண்ணி, மார்க்ஸ் காலத்திலிருந்து அதை 'அறிவியல் சோஷலிசம்' என்ற முத்திரையிட்டழைத்தனர். இப் புதிய சோஷலிஸ்டுகளுக்குப் பழைய கருத்தியல் கற்பனை சோஷலிஸ்டுகள் (உட்டோபியன்) வெறும் பகற்கனவுக்காரர்களாகத் தோன்றினர். பாராளுமன்றச் சட்டங்களின்மூலம் இலட்சியப் பொதுவுடைமையை அடையமுயலலாம் என்றும், நீதி, தயை, தாட்சணியம், உரிமை இவைகளின் அடிப்படையில் இறுகிய மனத்தை இளகவைக்கலாம் என்றும் பழைய கற்பனை சோஷலிஸ்டுகள் எண்ணிய இவை குழந்தைத்தனமான அறியாமையின்பாற்பட்டது எனப் புதிய சோஷலிஸ்டுகள் சாடினர். கருத்தியல் கற்பனைவாதிகளான சோஷலிஸ்டுகள், சோஷலிசத்தின் உள்ளார்ந்த அழகையும், அதன் அவசியத்தையும் நிரூபிக்க மனித உணர்ச்சிகளின் மீது முறையிட்டனர். இந்த முறை எள்ளளவும் பயன்படாத முறையாகும்.- சோஷலிசத்தின் இன்றியமையாமையை நிரூபிப்பதற்குப் பொருளாதாரக் காரண காரியங்களைக் காட்டுவதும், வலியுறுத்துவதும் மிகச் சிறந்த வழியாகும்; பொருளாதார வாத விளக்கங்கள், வரலாற்று மேற்கோள்களால் தெளிவுறுத்தல் ஆகியனமூலம் நிலைமைகள் இவ்வாறு உள்ளபடியால், விளைவுகள் எப்படியிருக்கவேண்டுமோ அப்படித்தான் இருக்கின்றன. இங்ஙனம் நிலைமைகள் சென்றுகொண்டிருப்பதனால், இதன் விளைவாகத் தவிர்க்க முடியாததும், மறுக்க வொண்ணாததுமான சோஷலிச அரசை நிறுவுவதுதான் ஒரே வழியாகும்; இதை அறுதியிட்டுரைப்பதுதான் சிறந்த கொள்கையாகும்.

களுக்கிடையில் நாடுவிட்டு நாடு செல்லவேண்டியவரானார். அதன்பின் 1888-ல் அவர் இறக்கும்வரையில் லண்டனிலேயே தங்கியிருந்தார். சிற்சில சமயங்களில் அவர் வெளிநாடு சென்று வந்ததுண்டு. 1864-ல் உருவாக்கப்பட்ட முதல் சர்வதேச (தொழிலாளர்) சங்கத்திலும், பின் அதன் நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டார். ஆனால், மிக முக்கியமாக லண்டனில் அவரது வாழ்க்கை படிப்பதிலும் எழுதுவதிலுமே சென்றது. 1867-ல் மூலதனத்தின் முதற் பகுதி வெளிவந்தது. அடுத்த இரண்டு பகுதிகளும் அவர் இறந்தபின் 1885, 1894 ஆம் ஆண்டுகளில் முறையே வெளியிடப்பட்டன.

மார்க்ஸின் இலக்கிய ஏடுகளோ 'சகாரா' பாலைவனத்தைப் போல் உள்ளது. மார்க்ஸினுடைய கருத்துகளின் பொருள் என்ன என்பது பற்றியும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இந்த முரண்பாடு அவருடைய நூலைப் பற்றேடு அணுகுபவர்களுக்கும், அவரது கருத்தின் நிபுணர்களுக்குமிடையிலும் இருக்கிறது. இவ் வேறுபாடுகள் அளவுக்குமீறி இருப்பதால் இங்குச் சில முக்கிய மானவைகளை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவைகளையெல்லாம் துச்சமெனத் தள்ளிவிடுவது மிகவும் அவசியமானதாகும். வெறும் சக்கைதான் மிச்சமானாலும் பரவாயில்லை. இக் கருத்தையொட்டி, முதற்கண் அறிவியல் சோஷலிசத்திற்கு அடிகோலியவர்கள் என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டவர்களையும் பெருமள விற்கு ஒதுக்கிவிட்டு மேலே செல்வது ஏற்புடையதாகும். 'ரர்ட் பர்ட்டஸ்' (Rodbertus, 1805—1875) என்பார் சிறப்பான ஒரு தத்துவ ஞானி; சோஷலிசக் கொள்கையைக் கண்ணியமான முறையில் சீர்திருத்தியவர்; முதலில் பழைமைப் பிடிப்பும், மாறுதல் விரும்பாமையும் உள்ளவராகக் காணப்பட்டாலும் அவர் புரட்சி யில் மனமில்லாத '∴பேபியன் சோஷலிஸ்ட்' போல் காணப்பட் டார். மார்க்ஸ், ராட்பர்ட்டஸ் கருத்துகளை எடுத்துக் கையாண்டார் என்று கூறப்படுவதை ஆராய்வது வீண் செயலாகும். 'லாசல்லி' (Lassalle, 1825—1864) தலையாய மூவர்களில் மூன்றுமவ ரான் ஒரு கிளர்ச்சிக்காரர் என்பது குறிப்பிடத்தக்கது; அவர் நாவன்மைமிக்க சொற்பொழிவாளர்; புயல் சூழ்ந்த வாழ்க்கையில் ஈடுபட்ட அவரது மறைவும் பயங்கரமானதாகும். 'ஜார்ஜ் மெரிடித்தின் நாவல்' ஒன்றில் அவர் வாழ்வு ஓர் உணர்ச்சிக் காவியமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதை ஆங்கில இலக்கியம் படிப்போர் அறிவர்.

ஆனால், மார்க்ஸோ அறிவியல் சோஷலிசத்தின் தூணாக அழியாமல் நின்றார். மூலத்தைக் காண விழையும் தொல்பொருள் ஆராய்ச்சியாளனுக்கு மார்க்ஸ் வேறு விதமாகத் தோன்றலாம். ஹாட்ஸ்கின் (Hodgskin), தாம்சன், பிரே போன்ற முற்பட்ட ஆங்கில சோஷலிஸ்டுகளிடமிருந்துதான் மார்க்ஸ் தம் உணர்ச் சியை, உந்திய கருத்துகளைப் (பெரும்பாலும்) பெற்றார் என்று தவறான தேசீயக் கண்ணோட்டத்தில் வளர்ந்தவர்கள் பொறுமை காரணமாகக் கூறலாம். இதனால் ராட்பர்ட்டஸ் சீடர்கள் தங்கள் தலைவரின் தலையாய பெருமை மழுங்க வழிக்கப்பட்டதாகவும் கதறக்கூடும். இவை அலட்சியப்படுத்தப்படவேண்டியவையா கும். இவைகளில் நேர்மையை எதிர்பார்க்க முடியாது. ஐயந்திரி பற்ற உண்மையென்னவெனில், அவரைத் தொடர்ந்து எழுந்த சோஷலிசத்தில் மார்க்ஸ் பெரிதும் ஆட்சி செய்கிறார். அவருக்குப்

பின்னால் வந்த சோஷலிசவாதிகள் அவரை மறுதலித்துக் கைவிட்டுவிட்டாலும், அவர்கள் மார்க்ஸின் கருத்துகளின் மீதே கொள்கை அமைத்திருக்கின்றனர். ஆகையினால், இந்த அத்தியாயத்தை மார்க்ஸிற்குமட்டுமே ஒதுக்குவதென்பது அனுமதிக்கக்கூடியதொன்றுகும்.

மிகப் பெரும்பான்மையான எழுத்தாளர்களைக் காட்டிலும் மார்க்ஸைப் புரிந்துகொள்ள அவரது வாழ்க்கையையும் குணநலத்தையும் அறிந்துகொள்வது அவசியமாகும். மாணவப் பருவத்திலிருந்து அவர் தம் முப்பதாவது வயதுவரை புரட்சியாளராகவும் உட்கிளர்ச்சியாளராகவும் வாழ்ந்தார். எல்லா அரசாங்கங்களோடும் தகராறு கொண்டு வாழ்ந்தார். அவர் ஆசிரியராக அமர்ந்த பத்திரிகைகள் அனைத்திற்கும் தடை விதிக்கப்பட்டன. அவ்வப்போது நிலைமைகளின் போக்கிற்கு ஏற்ப நாடுவிட்டு நாடு ஓடத் துன்பமும் அவரைத் துரத்திற்று. அவரது முப்பதாவது வயதிலிருந்து, அதாவது 1848-ல் ஏற்பட்ட புரட்சியை அடுத்து, 1849ஆம் ஆண்டில் மார்க்ஸ் வாழ்க்கையின் இரண்டாவது பகுதி துவங்கியது. அவர் லண்டனில் அடைக்கலம் புகுந்தார். பிறகு (1883-ல்) காலமாகும்வரையில் அங்கேயே தங்கிவிட்டார். ஐரோப்பாக் கண்டத்தில் சில இடங்களுக்கு எப்போதாவது அவர் சென்றுவர வேண்டியிருந்தபோதிலும், பல்வேறு புரட்சிகரமான செயல்களில் ஈடுபட்டிருந்தபோதிலும், இந்த நீண்ட காலப்பகுதியில் முக்கியமாகத் துறவியை ஒத்த வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தார். அந்நாட்களில் விழித்திருந்த நேரமெல்லாம் இங்கிலாந்துப் பொருட்காட்சி நூல்நிலையத்தில் சட்டமன்ற அறிக்கைகளைத் துருவித் துருவிப் பயின்றார். அரசியல் காரணத்தால் நாடுகடத்தப்பட்ட நிலையால் ஏற்பட்ட மிகுந்த பொறுப்புகளும், வறுமையும், துன்பங்களும், பொறுமையும், சந்தேக நோக்கும் ஆகியன நிறைந்த கலக்கமான வாழ்க்கையினின்று பிரிக்க முடியாத மார்க்ஸின் எண்ணத்தையும், அவரது எழுத்தோவியங்களையும், இயற்பொருள்வாத வரலாற்று நோக்கையும் ஆராய்வோம்.

இவரது எழுத்தோவியங்களைப் பொறுத்தவரையில், உயிர் வாழும் மனிதன் எவனும் அவற்றைப் படித்திருப்பானு என்பதும், படிப்பானு என்பதும், படிக்கவேண்டியது அவசியந்தானு என்பதும் கேள்விக்குரியனவாகும். மார்க்ஸ் இயற்கையாகவே பெரும் புத்தகங்கள் வெளியிடுவதில் பழக்கப்பட்டவர். அவரது ஏடுகளில் பெரும்பகுதி துண்டு வெளியீடுகளே. அவற்றில் அவர் கடிதங்களும் உண்டு. ஆனால்,

ஒரு சாதாரண மனிதனுக்கோ, ஒரு புத்திசாலித்தனமான பெண்ணுக்கோ மூன்று வெளியீடுகள் போதுமானவை. எனினும், இம் மூன்றிலுள்ள எல்லாக் கருத்துகளும் தேவையல்ல. முதற் கண், 1859 ஆம் ஆண்டில் பதிவான 'அரசியல் பொருளாதார ஆய்வுக் கட்டுரை' என்னும் ஏடு, 'மூலதனம்' என்னும் நூலுக்கு முன்னோடியாக, வரைவு நூலாக அமைந்தது எனலாம். மிகவும் சிறப்பு வாய்ந்த 'கம்யூனிஸ்டுப் பிரகடனம்' என்ற ஏடு 1848-ல் வெளியிடப்பட்டது. இது அவரது அருமை நண்பர் ஏங்கல் சுடன் கூட்டுச் சேர்ந்து எழுதப்பெற்றது. இதில் உள்ள போலிப் பொருளாதாரம், விஞ்ஞானப் பகட்டுக் குறிப்புகள் இவற்றை விட்டுவிட்டால் மார்க்ஸியக் கோட்பாடுகளின் முக்கியக் கூறுகள் அந்நாளில் முழுதும் தெளிவுறுத்தப்பட்டிருப்பதை இது தெற்றென விளக்கும். மூன்றுவதாக, மார்க்ஸின் கொள்கைகள் முழுமையாகவும், உணர்ச்சி பொங்கும் விளக்கமாகவும் அமைந் துள்ள ஓர் ஏடு 'மூலதனம்' ஆகும். இதில் முதல் பாகம் 1864-ல் வெளியிடப்பட்டது. மற்ற இரண்டு பாகங்களும் மார்க்ஸின் காலத்தில் வெளிவரவில்லை. பின்னர் மற்ற இரண்டு பாகங்களையும் தொகுத்துப் பதிப்பித்தவர் ஏங்கல்ஸ்; இவர் மார்க்ஸின் சிறு சிறு நூல்களையும் எழுத்தோவியங்களையும் தொகுத்துவைத்துச் சிறப்புப் பெற்றவர். 'மூலதனம்' என்னும் நூலின் முதல் பாகத்தை ஒவ்வொருவரும் படிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இரண்டாம், மூன்றும் பாகங்களைப் படிப்பதில் தோல்வி கண்டதை ஒப்புக்கொள்வதில் யாரும் வெட்கப்படத் தேவையில்லை.

மார்க்ஸின் கொள்கைகளின் சாராம்சத்தைப் புரிந்துகொள்வ தற்குத் துணையாக அவருடைய கோட்பாடுகளைப் பல பகுதி களாகச் சுருக்கிக்கொள்வது நன்றாகும். ஆனால், அவர் சொன்ன தையே திரும்பச் சொல்லும் தவறான பழக்கம் உடையவராக இருக்கிறார். சமுதாயத்தைப்பற்றி மார்க்ஸின் இடைநிலைக் கொள்கைகளை விட்டுவிடலாம். அவற்றில் ஒன்றான புரட்சி வந்ததற்குப் பின் அமையும் சமுதாய வகுப்புப் பற்றிய கருத் தானது அரசியல் சார்புடையதே யன்றிப் பொருளாதாரம் பற்றியதல்ல. ஆகவே, நம் வரையறைக்கு அப்பால் மார்க்ஸ் கொள்கை மதிப்புக் கோட்பாடு இலாப (சுரண்டல்) நோக்கக் கோட்பாடு என்றளவில் நிற்கும். ஆகவே, மார்க்ஸ் கோட்பாடு நிலவிவரும் முதலாளித்துவ முறையைத் தலைகீழாகக் கவிழ்க்கவே வரலாற்றில் வேர்விட்டிருப்பதாகக் கொள்ளப்படும். ஆகவே, பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தின்மீது கட்டப்பட்டுள்ள கோட் பாடுகளை இந்த அத்தியாயத்திற்கு உகந்ததன்று என்று தள்ளி

விடலாம். எனவே, மார்க்ஸின் சித்தாந்தங்களை ஆறு கருத்துரைகளாகப் பகுக்கலாம். ஆனால், கருத்துரைகள் மார்க்ஸைப் பொறுத்தவரையில் தேவையில்லாததால் ஆறு அழகிய சொற்களில் விவரித்ததே நியாயமானது. அவற்றில் இரண்டு, வரலாற்றிற்குத் தந்த புதிய விளக்கமாகும். இரண்டாவது, பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்புக் கோட்பாட்டையும் அவற்றினின்று பெறப்படும் கருத்தையும் விளக்குவதாகும். மீதமுள்ள மற்ற இரண்டோ எதிர்காலத்தைப்பற்றி வரும் பொருளுரைக்கும் வகையில் உள்ளவையாகும்.

முதலாவதாக, வரலாறுபற்றிய பொருள் முதல் வாதம் தழுவிய காரண காரியக் கண்ணோட்டம்; அதன்படி எல்லாவற்றிலும் பெரிதும் இடம் பெற்றிருப்பதும், செயல்களுக்கெல்லாம் காரணமாயிருப்பதும் பொருளாதார நோக்கமேயாகும்.

இரண்டாவதாக, இயற்பொருள் வாதக் கண்ணோட்டத்தோடு அமைந்த வரலாறு இடைவிடாத வகுப்புப் போரை வெளிப்படுத்துகிறது; வரலாறு என்பது வகுப்புப் போர்களின் பதிவேடே; ஒரு வகுப்புப் போர் முடிவடையும்போதே மற்றொன்று உருவாகிறது. மார்க்ஸின் கொள்கைக்குச் சமுதாய இயல் அடிப்படை அமைத்துக் கொடுத்ததே வரலாறுபற்றிய பொருள் முதல்வாதக் காரண காரியக் கண்ணோட்டமும் வகுப்புப் போரும் ஆகும்.

இனி, மூன்றுவதாகப் பொருளாதாரத்திற்கு வருவோம். மார்க்ஸின் மதிப்புக் கோட்பாடு மனிதனுடைய உழைப்பின் அளவேதான் ஒரு பண்டத்தின் மதிப்பையும் உண்டாக்குகிறது என்று சொல்லலாம். அதாவது, சமூக நலனுக்கு அவசியமான உழைப்பு மறைந்திருக்கிறது.

நான்காவதாக, இதன்மூலம் உபரி மதிப்புக் கொள்கை விளங்கும். உழைப்பாளி தன் உழைப்புச் சக்தியை விற்கிறான்; அந்த உழைப்பாளிக்கு அளிக்கப்படும் கூலியைவிட அவனது உழைப்பின் மதிப்பு அதிகமாக இருக்கிறது. உழைப்பாளியின் உழைப்பின் மதிப்பு அதிகமாகவும், அவனுக்குக் கிடைக்கும் கூலி குறைவாகவும் இருப்பதால் இவ்விரண்டு தொகைக்குமுள்ள வேறுபாடுதான் உபரி மதிப்பு; இந்த உபரி மதிப்பை முதலாளி தன்னுடையதாக ஆக்கிக்கொண்டு இலாபமடைகிறான்; இதன்மூலம் உழைப்பாளியின் உழைப்புச் சுரண்டப்படுவதாக அமைகிறது. இங்குதான் முதலாளிக்கும் தொழிலாளர் வர்க்கத்திற்கும் இடையே ஏற்படும் வகுப்புப் போருக்கு வழியமைக்கப்படுகிறது. இறுதியில்

குறிப்பிட்ட இவ்விரண்டு கருத்துரைகளும் சேர்ந்து மார்க்ஸியப் பொருளாதாரத்தின் ஆணிவேராக அமைகிறது.

ஐந்தாவதாக, வரும்பொருளுரைக்கிறார். எந்தெந்த வழி களில் முடியுமோ அவற்றிலெல்லாம் உபரி மதிப்பை அதிகரிக்க விரும்பும் முதலாளிகளுக்கு உள்ள தணியாத ஆர்வம், தொழி லாளர் வர்க்கத்தினை அளவிடமுடியாத துயருக்கும், சகிக்கமுடி யாத தாழ்வு நிலைக்கும் ஈர்த்துச் செல்கிறது; இந்நிலை வேலையற் ரேரையும், காலத்தால், நிலையால் வேலை குறைவுடையோரையும் நாளும் அதிகரித்துத் தொழிற்சாலைக்குத் தேவையான தொழி லாளர் ரிசர்வ் படை (தனிப்படை) அமைவதற்கான நிலையை உருவாக்குகிறது. கடைசியாகக் கூறப்படும் ஆருவது கருத்து முதலாளித்துவ மூலதனத் திரட்சி பற்றிய விதியாகும். பெரிய முத லாளி சிறிய முதலாளியை விழுங்குகிறான்; இதனால் பொருளாக்க சாதனங்கள் (உற்பத்தி) குறிப்பிட்ட சிலரின் கைகளில் எப் போதும் அகப்பட்டுக் கொள் கின்றன. சமுதாயம் நாளும் பொருளா தார வணிகச் சிக்கல்களினால் சீரழிகிறது. கொள்ளை இலாபம் பெறுவோரின் சுரண்டல் இயந்திரம் பறிமுதல் செய்யப்பட்டு உரிமையிழக்கத் தொழிலாளி வர்க்கம் வழிவழி உரிமைபெற அடியெடுத்து வைக்கும் பொன்னாள் உதயமாகிறது.

மார்க்ஸினுடைய ஆறு கருத்துரைகளை விளக்கி இதுவரை தரப்பட்ட எளிய வாதங்கள் போதுமென்றாலும், அவற்றில் முக்கிய மான மூன்றை மேலும் விளக்குவது அவசியமாகும். முதலாவதாக மார்க்ஸின் தனிச் சிறப்புக்கே காரணமானது 'மூலதனம்' என்ற ஒரு புத்தகம்தான் என்றாலும், மனித சமுதாயம் உருவாக்கிய நூல் களில் மிகவும் ஆச்சரியப்படத்தக்க அதிசய நூலாகும் அது. அதன் மூலம் அவர் காண முற்பட்ட முடிவுகள் அந்நூலை அவர் எழுதுவ தற்கு முன்னாலேயே அவர் கொண்டுவிட்ட முடிந்த முடிவுகளாம். 'பொதுவுடைமைப் பிரகடனத்தை'ப் படித்தாலே இதை நன்கு உணரலாம். அவர் திறந்த உள்ளத்தோடு அந்நூலை எழுதி யிருப்பாராயின் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும். ஆனால், மார்க்ஸோ தம்முடைய முடிவுகளின்மீது கொண்டுள்ள அழுத்த மான நம்பிக்கையால், காரணங்காட்டி வாதிப்பதில் கவனம் செலுத்தவில்லை. இன்னும் சில இடங்களில் அவருடைய வாதங்கள் உண்மையை மறைப்பதற்காகச் செய்யப்படுகின்ற சொற்சிலம்பமோ என எண்ணத்தோன்றுவதை நாம் தடுத்துக் கொள்ளமுடியவில்லை. கற்றதைப் புலப்படுத்துவதில் கைவரிசை யைக் காட்டுகிறார்; கணக்கியல் வாய்பாடுகளை வாரி வாரி வழங்கு கிறார்; அறிவுக்கூர்மையால் சில இடங்களில் பொய்யை

மெய்யாக்கும் போலி வாதத்தை மேற்கொள்கின்றார். வெற்றுத் தொப்பியிலிருந்து நூற்றுக்கணக்கான முயல்களையும், முயற்குஞ்சுகளையும் வரவழைக்கும் சக்தியுள்ள மாயாவாதியான ஒரு செப்பிடு வித்தைக்காரன் தன்னைச் சூழ்ந்திருக்கிறானே என்று ஒரு வாசகன் கருதுகிற வகையில் மார்க்ஸ் எழுதிக் குவித்துள்ளார்.

ஏறக்தாழ 2,500 பக்கங்களைக் கொண்ட புத்தகம் ஒன்றை எழுத வந்த ஆசிரியர், தாம் கூறவந்த கருத்துகளை எடுத்துச் சொல்லி அதன் பொருளைத் தெளிவாக விளக்க வேண்டுமான அளவு இடம் அந்நூலில் உள்ளது. மிக முக்கியமான சில அத்தியாயங்கள் வேண்டத்தகாத அளவுக்குச் சுருக்கம் பெற்றுப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்குக் கொண்டுசெல்லப் பெற்றுள்ளது. முதல் புத்தகத்தின், சிறப்பாக முதல் பதினைந்து பக்கங்களிலேயே விளக்கப்பட்டுவிட்ட உழைப்பளவு மதிப்புக் கோட்பாடே இம் மூன்று புத்தகங்களிலும் பின்னரும் விவரிக்கப் பட்டுள்ளது.

அச்சேறிய எந்தப் புத்தகத்திலும் இத்தகைய கருத்துக் கொலையையோ, கொள்கைக் குழப்பத்தையோ காண இயலாது. மேற்குறிப்பிட்ட பதினைந்து பக்கங்களுக்கு மேலும் மார்க்ஸ் வாசகர்களின் பாராட்டுதலைப் பெறுகிறார். இப் பாராட்டுதல் அறிவு விளக்கத்தைக் கொண்டு தரப்பட்டதல்ல. இனி இதைப் படித்தல் இயலாது; விட்டது தொல்லை; வேறு நல்ல வேலை பார்ப்போம் என்ற எண்ணத்தில்தான் அந்தப் பாராட்டு மலர்கிறது.

இரண்டாவது குறிப்பு மார்க்ஸின் இளமைக் காலத்து வாலிபர்களின் மனத்தைச் சுண்டி இழுத்த 'ஹீகல்' (Hegel) செல்வாக்குப் பற்றியதாகும். மார்க்ஸோ குருவுக்கு மிஞ்சிய சீடரானார். ஹீகல் கருத்துகளுக்குத் தம் வாதமுறைக் கருத்து நேர் எதிராகும் எனச் சொல்லாமல் சொன்னார். தமக்குத் தஞ்சம் தந்த ஹீகலது கருத்துகளின் உச்சியில் ஏறிநின்று பேசத் தொடங்கினார். ஆயினும், அவரால் ஹீகலது கருத்துச்சியில் ஏற முடிந்ததேயன்றி இறங்க முடியவில்லை. ஹீகலை விட்டுத் தம் வாதத்தில் அவரால் ஓர் அடி நகர முடியவில்லை. ஹீகலுக்கோ, 'முன்னேற்றம்' அடிப்படை நோக்கமாகும். ஒவ்வோர் உடன்பாடும் ஓர் எதிர்மறையை உண்டாக்குகிறது. அடுத்து, எதிர்மறைக்கு ஓர் எதிர்மறை தோன்றுகிறதெனினும், இந்த இரண்டாவது எதிர்மறை முதல் உடன்பாடன்று. ஆனால், முதலாவது உடன்பாடு

எதிர்மறை இரண்டையும் இணைப்பதாகும். ஒரு கோட்பாடு உருவானவுடனே மாற்றுக் கோட்பாட்டையும் உருவாக்குகிறது. மேலும், இவை இரண்டும் இணைந்து ஒருகோட்பாடு உருவாகிறது. அதில் எதிர்மறைக் கோட்பாடுகள் உள்ளடங்கிவிடுகின்றன.

மார்க்ஸின் வெறும் தத்துவவாதம் யாரையும் எதுவும் செய்து விட முடியாது. ஆனால், 'மூலதனத்தை' மறுமுறையும் படித்துப் பார்த்தால் தெளிவாகத் தெரிவது அவரது தத்துவ முடிவுகள் எப் போதோ உருவாகிவிட்டன என்பதே. அதற்கேற்றாற்போல் உலக நடைமுறைகளை விளக்க முற்பட்டிருக்கிறார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெரிகிறது. வகுப்புப் போராட்டம் என்பதே ஒரு கோட்பாடும் மற்றொரு கோட்பாடும் மோதிக்கொண்டதில் உருவானதே. மேல் நிலை வகுப்பு விழுங்கப்பட்டவுடன் ஒரு புதிய இரண்டுங்கெட்டான் வகுப்பு பிறக்கிறது என்கிறார். மார்க்ஸை சர்வ ஞானி என்று கூறமுடியாவிட்டாலும், அவருக்கு இருந்த உலக அறிவில் ஒருசிறிதும் 'மூலதனத்தில்' காணப்பட வில்லை. தமது காலத்தில் வாழ்ந்தவர்களைப் பற்றியும், அவர்களது எண்ணங்களைப் பற்றியும் ஒருசிறிதும் அறியாமலேயே அவர் காலத்தைக் கடத்தியிருக்கிறார். பாவம்! அவருடைய காலத்தில் பெரும்பகுதி பிரிட்டிஷ் மியூசியத்திலேயே கழிந்துவிட்டது. அப்போது ஒருசிறிது நேரம் எப்சம் குதிரைப் பந்தயம் நடை பெறும் நாளில் அந்த மைதானத்திற்குச் சென்றிருப்பாரானால் பல பிரச்சினைகள் அவருக்குப் புரிந்திருக்கும். நாம் மூலதனத்தை எவ்வளவுக்கெவ்வளவு பெருக்குகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அவர் விவரிக்கின்ற முதலாளித்துவப் போக்கும், பாட்டாளிகளின் நிலையும் அர்த்தமற்றவை என்பது விளங்கும். இந்த இருவேறு பட்ட வர்க்கங்களும் மார்க்ஸின் தத்துவக் கோட்பாட்டை உண்மையாக்கி, மார்க்ஸ் கூறும் முடிவை அடைவதற்கென்றே போராடுவதுபோல் தோன்றுகிறது.

மூன்றாவது, தொன்மைப் பொருளாதார வாதிகளான ஆடம் ஸ்மித் (Adam Smith), ரிகார்டோ (Recardo) ஆகியவர்களுக்கும் மார்க்சுக்கும் உள்ள ஒட்டுறவு பற்றியதாகும். அவர்கள் எழுதியதைப்பற்றி 'இழிதகைமைப் பொருளாதாரம்' என்று மார்க்ஸ் குறிப்பிடுவதே அவரின் வயிற்றெரிச்சலைக் காட்டப் போதுமான சான்றாகும். இந்தக் கேலிச் சொல் ஒருவகையில் உண்மையே. காரணம், தொன்மைப் பொருளாதார வாதிகளின் வரிசையில் கடைசி ஆள் மார்க்ஸ் ஆவர். உழைப்பை அளிக் கின்ற மதிப்புக் கோட்பாட்டைப் பொறுத்தவரையில் எப்படியோ 'ஸ்மித்தும்' 'ரிகார்டோவும்' ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர்.

கொஞ்சங்கூட வெட்கமின்றி இவர்களின் உழைப்பளவு மதிப்புக் கோட்பாட்டை மார்க்ஸ் ஏற்றுக்கொண்டு அதை நிரூபிக்கவும் முயன்றுள்ளார். எல்லா வழிகளிலும் 'ரிகார்டோ' பெருந்தன்மை உடையவர்தாம். கூலி நிர்ணயக் கோட்பாடு பற்றி ரிகார்டோ தந்த கருத்துகள்தாம் அறிவியல் சோஷலிசம் என்ற மாளிகையைக் கட்டப்பயன்பட்ட செங்கற்களாகும். யாரை இழிவான பொருளாதார வாதிகள் என்று தாக்கிப் பேசினரோ அவர்கள் உடுத்தியுடுத்திக் கிழிந்த கந்தற்கூளமான உடையைத் தாம் கோமாளிபோல் எடுத்து அணிந்துகொண்டு வீரப்பிரதாபம் பேசுகிற மார்க்ஸின் போக்கு திகைக்கத்தக்கதும் பரிதாபத்திற் குரியதுமாகும்.

மார்க்ஸினுடைய எழுத்தோவியங்களில் மிகவும் போற்றப் படுகிற 'கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரகடனத்'தை அலசிப் பார்ப்பது மிகவும் பொருந்தும். 1848-ல் மிக உயர்ந்த நிலைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படும் 'மார்க்ஸீய சித்தாந்தத்தின்' நிலைமையைக் கொஞ்சம் பார்ப்போம். இவ்வேடு சுருங்கச் சொல்லி விளங்கவைக்கின்ற அந்த ஒரு முறையில் 'மூலதனத்தின்' குறைபாடு அற்றது. முந்திய நூலின் வரட்சியின் திரட்சியைப் பார்க்கும்போது, கனல் கக்கும் இவ்வேட்டின் இருபத்திரண்டு பக்கங்கள் சூடும் சுவையும் மிக்கவைதாம். அதன் நான்கு பிரிவு களில்[1] முதலாவதான 'பூர்ஷ்வாசிகளும் பாட்டாளிகளும்' என்ற தலைப்பு மார்க்ஸீயக் கோட்பாட்டிற்குப் பொருத்தமான ஜோடி யாகும். இப் பிரகடனத்தின் முதல் சொற்றொடரோ சம்மட்டி அடி போன்று திகைக்க வைப்பதாகும். 'இதுவரை வளர்ந்த சமுதாய வரலாறு வகுப்புப் போராட்டங்களின் வரலாறேயாகும்.' இதன் விரிவான கருத்து கீழுள்ளது:

'அடிமையும் சுதந்திர மனிதனும், பெட்ரீசியனும் பிளீபி யனும் (ரோமானிய உயர் வகுப்பினரும் தாழ் வகுப்பினரும்), நிலப் பிரபுவும் பண்ணையாளும், தொழில் தலைவனும் தொழில் பயிலும் பணியாளும்; இவர்களோ ஒரே வார்த்தையில் சொல்வ தானால், கொடுமை செய்வோரும், கொடுமைக்கு எப்போதும் ஆளாவோரும் ஆவர். இடைவிடாத போர்க்களத்தில் எதிர்

[1] பிரிவு 1: 'பூர்ஷ்வாசிகளும் பாட்டாளிகளும்' என்ற தலைப்பில் மார்க்ஸீய சாராம்சமே அடங்கியுள்ளது. பிரிவு 2: 'பாட்டாளிகளும் கம்யூனிஸ்டுகளும்' என்ற தலைப்பு கம்யூனிஸ்டுகளின் செயல்முறைப் போக்கை விளிம்பிட்டுக் காட்டுவதாகும். பிரிவு 3: 'சோஷலிஸ்டுகளும் கம்யூனிஸ இலக்கியங்களும்' என்ற தலைப்பில் அனுவசியமாகப் பழைய சோஷலிச இலக்கியங்களைத் தாக்கியுள்ளார். பிரிவு 4: முடிவுரையன்றி வேறொன்றில்லை. பாட்டாளிகள் 'இழப்பது எதுவுமில்லை; இழந்தால் தலைகளை இழப்பர். பெற்றுல் பெறவேண்டியதோ இவ்வுலகம்!'

எதிராக வெளிப்படையாக நின்றும், மறைந்து நின்றும் போராடு கின்றனர். இந்தப் போராட்டம் ஒன்று அடியோடு சமுதாயத் தையே மாற்றியமைத்திருக்கின்றது; அன்றித் திருப்தியான வகுப்பின் அழிவில் முடித்திருக்கின்றது.'

இக் கூற்றைத் தொடர்ந்து பூர்ஷ்வாசியின் செயல்கள் குறித்தும், நடைமுறை அமைப்பின் போக்குக் குறித்தும் விரிவாக விவாதித்துள்ளார். மிருகத்தன்மையான போக்குடைய பூர்ஷ் வாசியால் எந்தப் பயனும் இல்லையென்று கூறிவிட முடியாது. பிரபுத்துவத்தை ஒழிப்பதில் அது தன் வேலையைச் செய்து முடித்துள்ளது. உற்பத்தியிலும் நுகர்ச்சியிலும் உலகப் பொது நோக்கை ஏற்படுத்துவதில் அது வெற்றிபெற்றுள்ளது. பிரகடனம் கூறுகிறபடி 'பிற்போக்காளார்கள் நம்பிக்கை இழந்து ஏக்கங்கொள்கிறவகையில்', அது தொழிலுக்கான தேசீய அடிப்படையையே அறுத்து எடுத்துவிட்டது. ஆகவே, தேசீயக் கண்ணோட்டத்தில் எழும் தனித்து உருவாகிய போக்கு நாளுக்கு நாள் பயன்படாத அழுகிய பண்டமாகி வருகின்றது. மேலும், மக்களில் பெரும் பகுதியினரை நாட்டுப்புற வாழ்க்கை யென்னும் ஆழமான உளைச் சேற்றிலிருந்து கைகொடுத்து விடுவித்துள்ளது. எவ்வாறு 'படைமானிய நிலப் பிரபுத்துவ முறை' பல தடைகளை உற்பத்தித் துறையில் ஏற்படுத்தி அதனுலேயே அடிபட்டு அழிந்ததோ, அதைப் போன்றே பூர்ஷ்வாசியின் கதியும் முடியப்போகிறது.

படைமானிய நிலப்பிரபுத்துவ முறையை ஒழிக்க எந்தக் கொலைக்கருவிகளை பூர்ஷ்வாசி முறை பயன்படுத்தியதோ, அதே கருவிகள் இப்போது அதன் தொண்டையை நெருக்கிக் கொண்டிருக்கின்றன. பூர்ஷ்வா வகுப்பினரோ அந்தக் கருவி களைச் செய்வதோடு நிற்கவில்லை. இந்தக் கருவிகளைப் பயன் படுத்துவதற்குப் பயங்கர மனிதர்களையும் சிருஷ்டித்துள்ளனர்— அவர்கள் தாம் இற்றைநாள் பாட்டாளிகள் (புரலிடேரியன்ஸ்).

அடுத்த பகுதியில் சுரண்டல்பற்றிப் பிரகடனம் கூறுகிறது ஆனல், உழைப்பு சக்தி, மதிப்பு, எச்ச மதிப்புக் கோட்பாடு களில் பின்னுல் ஏற்பட்ட மாற்றங்கள் இதில் இல்லை. 'வாணிபப் பண்டங்கள்போல் இத் தொழிலாளிகள் தங்களைத் தாங்களே விற்றுக்கொள்கிருர்கள். தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், உயிர்வாழவும், தன் பின்சந்ததிகளை உற்பத்தி செய்யவும் போதுமான பிழைப்பு மட்ட அளவிற்கு ஒரு தொழிலாளியின் உற்பத்திக் கூலி குறைந்துவிடுகிறது.' ஒரு தொழிலாளியின்

உழைப்பின் மதிப்பு ஒரு பொருளின் உற்பத்திச் செலவுக்கு சமமாக்கப்படுகிறது.

'வெறும் பணக்கூலி'யை நம்பி வாழும் தொழிலாளி சுரண்டலுக்குப் பலியாகிறான். அவனது வேலைச் சுமையோ நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. வேலை நேரம் நீளுகிறது. இயந்திரத்தின் ஓட்ட வேகம் முடுக்கிவிடப்படுகிறது; பெண்களும் பால்மணம் மாறுக் குழந்தைகளும் வேலையில் அமர்த்தப்படுகின்றனர் (இன்னென்ன காரணங்களால் சுரண்டல் அளவு நாளும் வளர்கிறது என 'மூலதன'த்தில் பின்பும் குறிப்பிட்டுள்ளார்).

எதிர் எதிரான முகாம்களில் சமுதாயம் இரு பெரும் வகுப்புகளாகப் பிரிந்துசெல்வது நாளும் வளர்கிறதெனப் பிரகடனத்தில் எடுத்துச் சொல்லப்படுகிறது; ''சிறிய நடுத்தர வகுப்பினர், சிறிய கடை உரிமையாளர், வணிகர்கள், நிலவுடைமையாளர்கள் கைத்தொழில் விற்பன்னர்கள், விவசாயிகள் முதலிய அனைவரும் 'புரலிடேரியட்' என அழைக்கப்படும் பாட்டாளி வர்க்கத்தில் சேர்வர். ஏனெனில், அவர்களின் சிறிய மூலதனம் புதிய காலத் தொழில்களுக்குப் போதுமானதல்ல. அதுவும் பெரிய முதலாளிகளின் போட்டிக்கிடையில் சிக்கின் சின்னுபின்னமாகிவிடுவர். மேலும், புதிய உற்பத்தி முறைகளினுல் அவர்களின் சிறப்புப் பயிற்சி மதிப்பற்றுப் போய்விடுகிறது. இவ்வாருகப் பாட்டாளிகள் மக்கள் சமுதாயத்தின் எல்லா வகுப்புகளிலிருந்தும் தோன்றுகின்றனர்.'' 'மூலதன' நூலில் விவரித்துள்ளதைவிட இதில் பாட்டாளிகளின் சகிக்கமுடியாத வளரும் துன்பத்தை விளக்கியுள்ளார். 'புதிய காலத் தொழிலாளி தொழில் முன்னேற்றத்தோடு செல்ல முடியாமல், மாருகப் பின்னடைந்து தன்னுடைய வகுப்பின் சமுதாய நிலைக்குங் கீழ்ப்பட்டு ஆழ அழுந்தி அல்லலுறுகிறான். தொழிலாளி பிச்சைக்காரனுகிறான். செல்வமுடைய மக்கள் வளர்ச்சியைவிட இரப்போர் எண்ணிக்கை கடிதில் வளர்கிறது.' இதன் பொருள் யாதெனில், பூர்ஷ்வா வகுப்பு அடிமைத் தனையின் கீழே அடிமைகளுக்குக்கூட வாழ்வளிக்க இயலாது; ஆகவே, சமுதாயம் அதன்கீழ் அல்லலுறுதல் ஆகாது. 'அதுவே அதற்கான புதைகுழி வெட்டுவோரைத் தயார் செய்துகொள்கிறது' என்ற சொற்றொடர் மிகமிகப் பொருந்தும்.

கம்யூனிஸ்டுப் பிரகடனத்தைப் பற்றி அளவுக்கு மீறி ஆராய்ந்துள்ளோம். மார்க்ஸின் முக்கியக் கோட்பாடுகளை ஒரு சில பக்கங்களில் படித்தறிய இது பயன்படுகிறது. 'மூலதன'த்திலோ பொருளாதார இருட்டில் கணக்கியல் பாறைகளில்

அடிக்கடி முட்டி மோதிக்கொள்ள வேண்டியிருக்கும். இங்கே, 1848-லேயே வகுப்புப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வரவேண்டிய அவசியத்தைச் சுட்டிக்காட்டியிருப்பதைக் காண்கிறோம். இரு வேறு வகுப்பிற்குமுள்ள வேறுபாடும் தெரிகிறது. தாழ்ந்த வகுப்பிலோ, ஒருசிலரைத் தவிர அனைவரும் அழுத்திச் சேர்க்கப்பட்டுள்ளனர். பாட்டாளியைச் சுரண்டுவது பற்றிய விளக்கமும் உள்ளது. ஒரு சில கூற்றுகள் வரையறுக்கப்படாமலிருக்கலாம். கடைசியாக வரலாற்றின் வேகமான மாற்றப் போக்குக் காட்டப்பட்டுள்ளது. அதன்மூலம் முதலாளித்துவம் தன் தலையில் தானே தீயை வைத்துக்கொள்ளும் நிலையை விளக்கியுள்ளார். இவையெல்லாம் மார்க்ஸீய தத்துவங்களை நிலைக்கண்ணாடிபோல் காட்டுவன. (மதிப்பு, எச்ச மதிப்புப் பற்றிய) போலி அறிவியல் விளக்கங்கள் சிலவற்றைத் தவிர மார்க்ஸீயத்தின் முழு உருவைப் பிரகடனத்தில் காணலாம்.

'கம்யூனிஸ்டுப் பிரகடன'த்தில் கூறப்பட்ட மார்க்ஸீயக் கோட்பாடுகளை, ஏன், அதன் கோட்பாடுகளைக்கூடப் பார்த்து விட்டோம். இனி, முன்னர் சுருக்கிக் கூறிய மார்க்ஸின் ஆறு சித்தாந்தங்களையும் காண்போம். முதலிரண்டு கருத்துகள்— வரலாற்றுப் பொருள்முதல் வாதமும், வகுப்புப் போராட்டமும் ஆகும். பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரையில் அவை இரண்டும் ஒரு கணியமரத்தில் கட்டப்பட்ட இணைமாடுகளே. புதிய ஒருவன் மார்க்ஸை அறியப் புகுங்கால் பொருள்முதல் வாதக் கண்ணோட்டங் கொண்டு வரலாற்றைக் காணல்வேண்டும் என்ற அவரின் கருத்துக்கு விளக்கம் காண முயல்வான். அவர் ஏடுகளில் தேடித்தேடிக் காணமுடியாத ஒன்றுக அது இருக்கிறது. இங்கொன்றும் அங்கொன்றுமாக மார்க்ஸ் விளக்கம் என்ற பெயரில் ஏதோ எழுதியுள்ளார். உண்மையான விளக்கம் 'ஏங்கல்ஸ்' எழுதியுள்ளார். 'அரசியல் பொருளாதார ஆய்வு' (Critique of Political Economy) என்ற நூலிற்கு மார்க்ஸ் எழுதியுள்ள முன்னுரையில் இதுபற்றிக் குறிப்பான கருத்தைக் காணலாம்.

'பொருள் முதல் உலக வாழ்வில் உற்பத்தி முறைதான் சமுதாய, அரசியல், ஆத்மீக வாழ்க்கை முறைகளை நிர்ணயிக்கிறது. மனிதனது மனச்சாட்சி அவனது வாழ்வு அமைப்பை உருவாக்கவில்லை; மாறுக வாழ்வு அமைப்புமுறைதான் மனச்சாட்சியை உருவாக்குகிறது.'[1]

[1] பக்கம் 11: மார்க்ஸ் இறந்தபின் கம்யூனிச பிரகடனத்துக்கு ஏங்கல்ஸ் எழுதிய முன்னுரையில் குறிப்பிட்ட வாசகம் பிரசித்தி பெற்றதாகும். 'இப் பிரகடனத்தின்

இதன் முழுப் பொருள் என்ன? ஏங்கல்ஸின் கருத்தின்படி 'அரசியல் புரட்சிகளுக்கும், சமுதாய மாற்றங்களுக்கும் முடிந்த காரணங்களாக உள்ளவை மனித மூளையினிடத்தில் தோன்றியவையல்ல; அல்லது மனிதனின் உள்ளுணர்ச்சியினுல் உந்தப்பட்ட அசைக்கமுடியாத உண்மையும் நீதியும் தந்த வரப்பிரசாதமும் அல்ல; ஆனுல், அது உற்பத்தி முறையிலும் பரிவர்த்தனையிலும் ஏற்படும் மாற்றங்களின்பாற்பட்டது.'[2]

ஒவ்வொரு சமுதாயத்திலும் ஏற்படும் மிக முக்கியமான மாற்றங்கள் வெறும் தத்துவ வாதத்தால் நிகழவில்லை. பொருளாதாரச் சூழ்நிலைகள்தாம் மாற்றங்களை விளைவிக்கின்றன. ஆகவே, கலை, சமயம், சட்டம் முதலியவைகளினுல் பொருளாதார மாற்றங்கள் உருவாக்கப்படவில்லை. மாருக, அவைகளோ பொருளாதார இயக்கத்தினுல் உருவானவையாகும். பொருள் முதல் வாதத்தை அடிப்படையாகக்கொண்ட வரலாறுபற்றி நாம் இங்கு ஆயத் தேவையில்லை. இப் பொருள் முதல்வாதம் கவைக்குதவாக் கருத்தாகும். 'ஏங்கல்சும் இதைக் கூர்மைப்படுத்திய பின்புதான் பயன்படுத்த முடிந்தது. இவ் வரலாறு ஏற்புடைத்தாக வேண்டுமானுல் அடுக்கான அறைபற்றிய கருத்துகளையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அப்போது இதை யாரும் மறுக்க மாட்டார்கள். உண்மையில் வரலாறு வெறும் பொருளாதார மாற்றங்கள் மாத்திரமன்றி மற்றப் பலவற்றையும் கொண்டதாகும். மனிதன் வயிற்றை நிரப்புவதே வாழ்க்கையின் நோக்கம் எனக் கொள்ளவில்லை. பற்று, பந்தம், பாசம், எழுச்சி, இனிய உணர்ச்சி, அன்பு, அருளுடைமை இவையெல்லாம் மனிதனைப் பல்வேறு செயல்களில் செலுத்துகின்றன. இவை பொருளாதாரச் சார்புடையவையாக இல்லாமலிருக்கலாம். ஆனுல், இவைகள் பொருளாதாரச் சூழ்நிலைகளை மாற்றியமைக்கத் தக்க சக்தி வாய்ந்தவைகளே. ஒரு மனிதனின் மனத்திற்கும், மற்றொரு மனிதனின் மனத்திற்குமிடையில் நடைபெறும் எண்ண ஓட்டங்கள் எத்தனையோ நிகழ்ச்சிகளை உருவாக்குகின்றன. இதற்குப் பொருளாதார விளக்கம் கொடுப்பது இருட்டில் கறுப்புப் பூனையைத் தேடுவதாகும். 'டார்வின்', 'முகமது', 'கால்வின்', 'மார்க்ஸ்', 'லாயிட் ஜார்ஜ்', 'ஜார்ஜ் ராயே'

முக்கியப் பரந்த அடிப்படையாவது, ஒவ்வொரு வரலாற்றுச் சகாப்தத்திலும் அமையப் பெற்ற பொருள் உற்பத்தி முறையும், பரிவர்த்தனையும், அதைத் தொடர்ந்து ஏற்படுகிற சமூக அமைப்பை அடிப்படையாகக் கொண்டுதான் கட்டப்படுகிறது. இதைக் கொண்டுதான் அச் சகாப்தத்தின் அரசியல் அறிவுத்துறை வரலாற்றை விளக்கிக் கூற இயலும். இந்த விளக்கம்தான் மனித சமுதாய முழு வரலாறுக அமைகிறது. மேலும், உன்னிப்பாக நோக்கின், இது வர்க்கப் போராட்டங்களின் வரலாறே என்பது தெரியவரும்.'

2. சோஷலிசம், கற்பனைக் கருத்தியலும் அறிவியலும், பக்கம் 45.

ஆகிய பெரியவர்கள் ஆற்றிய அருந்தொண்டுகள் எவ்வாறு உருவாயின? இவற்றை அவர்கள் செய்ய நிகேத்தபோது செய்தார்கள் என்றுகூடச் சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம். ஏன், எப்படி, எதற்காக அவைகளை அவர்கள் மாத்திரம் செய்யவேண்டும்? என்ற கேள்விக்கு விடையிறுப்பது மிகமிகக் கடினம். கால்வினுக்கு ஒரு நாக்ஸ் (Knox) கிடைக்காமலிருந்திருந்தால், மார்க்ஸைப் பின்பற்ற ஒரு லெனின் தோன்றுமலிருந்திருந்தால், உலகில் என்ன நடந்திருக்கும்? ஒவ்வொரு பெரியாருக்கும் அவரவர் கொள்கையை நடத்திச் செல்லும் மாவீரர்கள் எவ்வாறு கிடைக்கிறார்கள் என்று விளக்குவது இன்னும் கடினமானதாகும். வரலாற்றை விளக்கிப் பொருள் கூறுவதில் தூய்மையோடும், ஒரு கருத்துச் சார்பற்றும் துறவிபோல் இருத்தல் நன்று. ஏனெனில், வரலாறு பல்வேறு காரணிகளால் உருவாகிறது. அவற்றில் ஏதோ ஒன்று பொருளாதாரமாகும். அதுவே ஒருமனதான காரணமாகும் என வாதிடுவது அறிவுடைமை அன்று.

வகுப்புப் போராட்டம் என்பது உண்மைக்கு அப்பாற்பட்ட அப்பட்டமான அநீதிக் கோட்பாடாகும். வகுப்புப் போராட்டம் ஏற்படுவதற்கே காரணம் பொருள் முதல்வாத அடிப்படையில் வரலாறு அமைந்திருப்பதனாலாகும் என்று மார்க்ஸீய முறை வாதிடுகிறது. ஏங்கல்சும் இதுவே காரணமெனக் கூறுகிறார். ஆனால், அது ஒருசிறிதும் பயனற்றதாகும். பொருளாதாரக் காரணி வர்க்கப் போராட்டத்தில்தான் வரவேண்டுமென்றில்லை. வேறு உருவிலும் வரலாம். தங்களது பொருளாதாரப் பற்றுக் கோடுகளை உணர்ந்தவர்கள், பொருளாதார விருப்பங்களின்படி செயற்படுகிறவர்கள் பெரும்பாலும் எங்கும் நிறைந்திருப்பார்களானால், வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய கருத்தை அறிவுக் கண் கொண்டு பார்க்காமலே ஏற்றுக்கொள்ளலாம். பழம்பசலி வார்த்தையில் சொல்வதானால் அதிமேதாவித்தனமான சுயநலம் எல்லோருக்கும் இருப்பதாக நாம் கொள்ளவேண்டும். ஐயகோ! மனிதர்கள் பெரும்பாலும் பல்வேறு உணர்ச்சிகளினால் உந்தப்பட்டு உலக வாழ்வு என்னும் ஊஞ்சலில் ஆடுகின்றனரே! நாட்டுப் பற்று, சமயப்பற்று, கொள்கைவெறி, சுதந்திர வேட்கை இவைகளெல்லாம் அவர்கள் உள்ளத்தை உலுக்குகின்றன. இவ்வுணர்ச்சிகள் தங்களுக்கும், தங்கள் வர்க்க நலனுக்கும் கெடுதல் விளைவிக்குமென்றாலும் வாழ்நாள் முழுவதும் போராடிப்போராடிச் சாகத் தயாராக இருக்கின்றனரேயன்றி ஓய்வுகொண்டாரில்லை. வர்க்கப் போராட்டம் கேள்விக் கணைகளிலிருந்து தப்ப முடியாது. சமுதாயப் பிரிவுகள் பற்பலவாதலால், தனி மனிதன் தான் சார்ந்திருக்கும் வர்க்கம்பற்றி எண்ணுவதே இல்லை. ஒரு வர்க்கப்

போராட்டம் நடைபெறத் தொடங்கினால், அப்போது அவன் தன் வர்க்கம் எது என்பதை அறிந்து ஒன்றுசேர்கிறான். ஒன்றுசேர்ந் திருப்பதாலேயே வர்க்க உணர்ச்சி ஏற்பட்டுவிடாது. வர்க்கப் போராட்டம் அவர்களை ஒன்றுசேர வைக்கிறது. இதை மார்க்ஸ் கூறுகிறார். இவ்வாறு ஒன்றுசேரப் பொருளாதாரக் காரணம்தான் இருந்துதீரவேண்டுமென்ற அவசியமில்லை. உலகம் ஒப்பிய, தவிர்க்க முடியாத அனைவரையும் தழுவிய தொழிலாளர் வர்க்க ஒற்றுமை உணர்ச்சி என்பது ஏமாற்றமளிக்கும் மயக்கு மொழி யாகும். ஒரு தொழிற்சாலையில் வேலைபார்க்கும் வெவ்வேறு நிலைத் தொழிலாளர்களிடை முரண்பட்ட தனிநலன் போட்டி தலை தூக்கவே செய்கிறது. ஒரு நாட்டிற்குள் வெவ்வேறு தொழிற் சாலைகளில் ஈடுபட்ட பாட்டாளிகளிடையேயும் இது இருக்கிறது. நாடுகள் வேறுபட்டால் நலன்கள் இன்னும் முரண்படுகின்றன.

இதில் 'மார்க்ஸ்' செய்த குற்றம் இரண்டாகும். முதலாவது, மார்க்ஸ் ஓர் இலட்சியத் தொழிலாளியைச் சிருஷ்டிக்கிறார். அப்படி ஒருவரும் எங்கும் இருந்ததில்லை; இருக்கப்போவதுமில்லை. இரண்டாவது, அவ்வாறு எல்லாக் குணங்களும் ஒன்றிய பாட்டா ளியைப் 'புத்திசாலியான பொருளாதார மனிதனை'ப் பாவிக்கிறார். தொன்மைப் பொருளாதாரவாதிகள் கடித்துத் தின்றுவிட்டுச் சென்ற எலும்புக்கூடுகளை மடியில் எடுத்து வைத்துக்கொண்டு, பிரிந்து சென்ற ஆவியையும், அதன் இரத்தச் சோகைப் பேய் களையும் இந்த எலும்புக்கூடுகளுக்குள்ளே செலுத்தி ஒரு மனித இனத்தையே தோற்றுவிக்க முயல்கிறார். இது நடக்காத காரியம். 'கம்யூனிசப் பிரகடனத்தின்' வரலாற்று விளக்கமென்ற முரசொ லிக்குச் சரியான அடி தேவைதான். 'அகில உலகத் தொழி லாளர்களே ஒன்றிணையுங்கள்' என்ற கூப்பாடு ஏன் ஏற்பட்டது? பிரிந்திருந்ததால் அல்லவா ஒன்றுசேர அழைக்கவேண்டி வருகிறது. அதை மறந்து, ஒன்றிணைந்த, பிரிக்கமுடியாத பாட் டாளி வர்க்கம் என்று வரலாற்று விரிவுரை நடத்துவதில் பய னென்ன? இதற்கு முன்பேயே உலகப் பாட்டாளிகள் பிரிந்து சின்னபின்னமாகக் கிடக்கிறார்கள் என்றுதானே பொருள்! இதற் குக் காரணம் என்ன? மதத்தாலும், தேசீயப் பற்றாலும், முரண் பட்ட தன்னல வேட்கையாலும் எழும் பிரிவினை உணர்ச்சியை எவராலும் அடக்கிவிட முடியாது. மார்க்ஸின் பொருளாதாரக் கருத்துகளை ஆராய்வதாயின் மதிப்புக் கோட்பாடு என்பது ஒரு பண்டம் செய்வதற்குத் தேவையான உழைப்பு என்றுகிறது. இது 'ரிகார்டோ' சொன்னதன் வெறும் நகல்தான். ஆனால், ரிகார்டோவோ அறிஞராதலால் அக் கொள்கையை முடிந்த முடிபு ஆக்காமல் மாற்றத்திற்கு உரியதாக அமைத்துள்ளார்.

மார்க்ஸோ வெட்டியெடுக்கப்பட்ட கருங்கற் சிலைபோல் மாற்றக் கூடாத ஒன்றாக, சுரண்டல் கொள்கைக்குக் காவலனாக இந்த மதிப்புக் கோட்பாட்டைப் பயன்படுத்துகிறார். ரிகார்டோ இக் கொள்கையை அறிஞரின் ஆராய்ச்சிக்கு விட்டிருக்கிறார். மார்க்ஸோ கச்சைகட்டிக்கொண்டு நிரூபிக்க முயன்று, சுமக்க முடியாத பளுவான மூன்று புத்தகங்களின் இடையில் அக் கோட்பாட்டைத் திணித்துள்ளார்.

'மூலதன' நூலின் முதல் அத்தியாயத்தின் முதல் பிரிவிலேயே பல வாசகர்கள் மேல்மூச்சு வாங்க அலுத்துக் களைத்து அமரக் காரணமாக அந்தக் கோட்பாடு அமைந்திருக்கிறது. சுருக்க மாகக் கூறுமிடத்து, பண்டங்களின் இடைவிடாச் சேர்க்கையே செல்வமாகும். பண்டம் என்பதோ மனிதனுக்கு நுகர்ச்சியில் திருப்தி தருவதாகும். பயன்படுவதற்குரிய எல்லாப் பொருள் களும் பலவற்றின் கூட்டுச் சேர்க்கையேயாகும். இதனால் பலனே பல்கிப் பெருகுகிறது. ஒரு பொருளுக்குப் பயன் இருப்பின் அது உபயோக மதிப்புப் பெறுகிறது. அது பரிவர்த்தனை மதிப் பையும் பண்டங்களுக்கு உண்டாக்குகிறது. பரிவர்த்தனை மதிப்பு ஒரு பொருளின் அளவைப் பொறுத்தது. ஆ அளவு கறுப்புத் துணியும், ஏ அளவு பட்டும், ஓ அளவு பொன்னும் ஆகிய பொருள்களை ஒன்றோடொன்று பரிவர்த்தனை செய்துகொள்ளக் கூடுமாயின் எல்லாம் ஒரே மதிப்புடையனவாகும்.

ஒரு ஷில்லிங்கு விலையுள்ள வெண்ணெய்க்கும், ஒரு ஷில்லிங்கு விலையுள்ள டின் உணவிற்கும் உள்ள மாற்றம்தான் என்ன? முதற்கண் அது கணக்கியலோ, இரசாயனமோ அடங்கிய மாற்ற மல்ல. பண்டங்களின் பயன் தடுக்க முடியாததாகும். அது பண்டங்களுக்குள்ள ஒரே தன்மை. அவற்றின் பயன்களைப் பாதிக்க முடியாது. பண்டங்களின் பரிவர்த்தனை என்பது ஒரு பொருளின் உபயோக மதிப்பில் இல்லை. ஏனெனில், ஒவ்வொரு பண்டத்திற்கும் வெவ்வேறு விதமான உபயோக மதிப்பு பரிவர்த் தனையில் ஏற்படுவதாகும். டின் உணவிற்கும் வெண்ணெய்க்கும் உள்ள பயன்கள் யாரும் அறிந்ததே. 'ஆகவே, நாம் காணும் பண்டங்கள் எல்லாவற்றிலும் ஒருசேர இருப்பது உழைப்பு ஒன்றே' என்று மார்க்ஸ் மார்தட்டிப் பேசுகிறார். பண்டங்களுக் குப் பரிவர்த்தனை மதிப்பு சமமாக இருக்கிறதென்றால், அந்தப் பண்டங்களின் உள்ளும் புறமுமாய், நீங்காததாய், அப் பண் டங்கள் உருவாகக் காரணமாய் அமைந்துள்ளது மனித உழைப்பு ஒன்றேயாகும்.[1]

[1] மூலதனம், தொகுதி I, அதிகாரம் I, பிரிவு 1, பக்கங்கள் 41-44, சிகாகோ, கெர் வெளியிட்டது. எல்லா வெளியீடுகளிலும் பக்க அமைப்பு ஒரேமாதிரி யில்லை.

அவசியமற்ற, திகைக்கச் செய்யும் மாயாவாதங்களை மறந்து விடுவோமாயின், மார்க்ஸின் உழைப்பு மதிப்புக் கோட்பாட்டின் சாரம் இவ்வளவுதான். மந்தமதி படைத்தவனையும் திகைக்கச் செய்யும் சில கருத்துகளையும் மார்க்ஸ் கொட்டி முழக்குகிறார். முதற்கண் மதிப்பு உடையது எதுவானாலும், அதெல்லாம் மனித உழைப்பின் விளைவே என்று மார்க்ஸ் கொள்கிறார். சமமான பரிவர்த்தனை மதிப்புள்ள இரண்டு பொருள்களுக்கு இடையிலுள்ள ஒரே தன்மை இதுதான் என்று அடித்துப் பேசுகிறார்.

'இயற்கையான புல்வெளிகள், பயிரே செய்யப்படாத செழிப்பான நிலம்' இவைகள் 'உபயோக மதிப்பு' உடையவை; ஆனால், தனி 'மதிப்பு' அற்றவை என மார்க்ஸ் வாதாடுகிறார். இது பாதிப் பிரச்சினையைக் காணுமலிருக்கக் கண்ணைக் கட்டி விடும் விளையாட்டாகும். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உழைப்பினால் உருவாகாத இயற்கையான பொருள்கள் பலவும் பரிவர்த்தனை மதிப்பு உடையனவே. மதிப்பின் காரணத்தையும் அர்த்தத்தையும் பொறுக்கி எடுக்கவேண்டும் என்ற போக்கில் கண்டும் காணாததுபோல் தான் விரும்பாத கருத்துகளை முறத்தி லிருந்து புடைத்துத் தள்ளுகிறார் மார்க்ஸ். 'புதையல் எடுக்கப் போகிற ஒருவன், தான் எடுக்கும் புதையலில் முத்தும் பவளமும் தாம் இருக்கும் என்று கூறி, அவற்றையே தாழியில் போட்டுப் புதைத்துவைத்துப் பின் எடுப்பவன் நிலையிலே கரகமாடிப் பார்க்கிறார் மார்க்ஸ்' என்று 'போம் பாவார்க்' (Bohm-Bawerk) அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

மார்க்ஸின் கருத்தாட்டத்தின் இரண்டாவது குறிப்பிடத் தக்க அம்சம், அது நியாயவாதத்தின் அடிப்படையில் அமைந் தாலும், சில கருத்துகளைப் பிரித்தெடுத்துக் குழிதோண்டிப் புதைத்துவிடும் ஆயத்தமான போக்காகக் காணப்படுகிறது. ஒரு பண்டத்தினுள்ளே மறைந்து கிடப்பது உழைப்பு ஒன்றே என்ற வாதத்தை நிலைநாட்டத்தக்க நிரூபணம் எதுவுமே இல்லை. இந்த முடிவு காட்டப்படுவதற்குக் காரணமே மற்ற வழிவகைகளைக் கோணிப்பையில் கட்டி எண்ணெய் ஊற்றி எரித்து மறைத்து விட்டதேயாகும். துப்பறியும் நாவல்களைப் படிப்பதில் ஆர்வங் காட்டும் இந்தத் தலைமுறையினர் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட சான்று, மறைக்கப்பட்டுவிட்ட கொலையைச் செய்த ஒருத்தியை நல்ல யோசனையுடைய ஒரு நீதிபதி, தண்டிக்க முடியாமல் தடுமாறுவார். அந்தப் படுகொலை நடந்த அன்று இரவே அங்கு இருந்ததாகக் கருதப்படும் அத்தனை

பேருடைய கைகளும் கறையின்றி இருக்கின்றன, கைரேகையும் எங்கும் பதியவில்லை என்பதால், அந்த ஒருத்தியை, கதாநாயகியைத் தூக்கிலிட்டுவிட முடியாது. உறுதியாக அவள்தான் கொலையைச் செய்தாள் என்றும் நீங்கள் சொல்லிவிட முடியாது. துருவித் துருவி ஆராய்ந்தால் திரைக்குப் பின்னுல் இருந்த சமையற்காரனே, சோபாவிற்கு அடியில் படுக்கையறையில் பதுங்கியிருந்த கைவேலை செய்யும் பையனே இக் கொலையைச் செய்திருப்பான் என்பது தெரியவரும். மார்க்ஸோ கண்ணை மூடிக்கொள்கிறார். கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் பையன்கள் அங்குள்ள பகட்டான நாற்காலிகளில் கால்மேல் கால் போட்டுக்கொண்டு இளவரசர்கள் போல் வீற்றிருக்கிறார்கள். இவர்களைக் காண மறுக்கிறார் மார்க்ஸ். தம் சொல் கேட்டுத் தாமே கொலைஞன் என்று எண்ணுகிறார் போலும். மனித விருப்பங்கள் நிறைவேற முடியாத அளவுக்குக் கிடைப்பருமையாக (scarcity) உள்ளன. மனிதர்கள் பண்டத்தைத் தங்களதாக்கிக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிற விருப்பங்களின் விகிதாசார அளவுக்கு மதிப்பு உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானுல், மார்க்ஸ் மனித சமுதாயத் தேவையையே மறந்துவிட்டார். அளிப்பு ஒன்றினையே கருத்தில் கொண்டு மதிப்பை அளவிடுகிறார். படுக்கையிலிருந்த மூட்டைப் பூச்சிகள் அத்தனையையும் நசுக்கிவிட்டதாகக் கருதிப் படுத்துக் கடிக்கு ஆளாவோர்போல் மார்க்ஸ் முழுதையும் போக்கமுடியாமல் போக்கிவிட்டதாக எண்ணி மனமகிழ்கிறார். இருப்பதை இல்லையென்று எண்ணிக்கொள்கிறார்.

மூன்றுவதாக, மார்க்ஸின் பயன்பாட்டின் மூலம் நம்மை மயங்கச் செய்கிறது. உபயோக மதிப்புப் பொருளுக்குப் பொருள் வேறுபடுகிறது. கறுப்புப் பாலிஷின் உபயோக மதிப்பும், பட்டின் மதிப்பும் ஒன்றல்ல. ஒவ்வொரு பண்டமும் வெவ்வேறு உபயோகம் உடையதனுல்தான், இப் பொருள்கள் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. இப் பொருள்கள் தங்கள் பயனைப் பரிவர்த்தனையினுல் இழந்துவிடவில்லை என்பது உறுதி. மார்க்ஸ் இதற்கு முரணன கருத்தை வலியுறுத்தவில்லை. அவருடைய மிக முக்கியக் கோட்பாட்டை நிரூபிக்கும்போதும், பயன் கோட்பாட்டை உள்ளே வைத்திருப்பது மிகத் தொல்லையானதாகும். ஆகவே, முன்வாசல் வழியே அதை மூட்டைகட்டித் தூக்கியெறிகிறார். உள்ளே அவரது உழைப்பு மதிப்புக் கோட்பாடு நிரூபிக்கப்பட்டவுடன், அதைப் பின்வாசல் வழியே உள்ளே அனுமதிக்கிறார். அந்தப் பகுதியின் கடைசியில் அவரே இதை ஒப்புக்கொண்டு சொல்கிறார். 'இறுதியாகப் பயன் இல்லாத எந்தப் பொருளுக்கும் மதிப்பு இருக்கமுடியாது.' இந்தப் போற்றத்தக்க விளக்கத்தை

நாம் பாராட்டுவதற்கு முன்னுல் வேருெரு பொருந்தா விளக்கமும் தருகிருர்.

ஒன்றையொத்த பொருள்கள் பல அளவுள்ள உழைப்பினுல் தான் உருவாகின்றன என்ற கருத்திற்கு நியாயமாகப் பொருள் சொல்ல விழைகிருர் மார்க்ஸ். அவர் கருத்தாவது : 'இவனே அவனே தருகின்ற உழைப்பினுல் மதிப்பு நிர்ணயமாகவில்லை (ஒரு தொழிற்சாலையில் கிடைக்கும் சாதனங்களைப் பொறுத்தே உழைப்பு அமைந்து கிடக்கிறது). மிகவும் ஏற்கப்பட்ட உண்மை யாதெனில், ஒரு பொருளை உற்பத்தி செய்யச் சமுதாய ரீதியாகத் தேவையான உழைப்புக் காலத்தைக் கொண்டே ஒரு பொருளின் மதிப்பை எடைபோட முடியும். இது எவற்றின்பாற்பட்டதெனின், உற்பத்தியாகும் நேரத்தே உள்ள உகந்த சூழ்நிலைகளும், சராசரித் திறமை அளவும், உழைப்பின் உத்வேகமும் ஆகும்.[1] ஆனுல், பொருள்கள் பழைய கால பட்டுப்போன முறைகளின்படி உற்பத்தி யாக்கப்படுமாயின், அதற்கு ஏதுவான உழைப்பின் அளவினைக் கொண்டு அப் பொருளின் மதிப்பைக் கணக்கிட இயலாததாகி விடுகிறது. ஏனெனில், இவ்விதமான முறையில் (சமுதாய) தேவைக்கு அதிகமான உழைப்பு செலவிடப்படுகிறது. இந்தக் கோட்பாட்டை உண்மைகளோடு பொருத்திப் பார்க்க இதனை மேலும் ஒழுங்குபெறச் செய்வது மறுப்பை அதிகமாக்கவே காரணமாகிறது. பயன்பாடு என்பது மதிப்பைப் பெற மிகவும் அவசியமானது என்ற கருத்து தயக்கத்தோடு ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. பொருள்கள் பயனற்றுப் போய்விடின் அவ்வாறே அதற்குச் செலவிட்ட உழைப்பும் வீணுகிறது.[2] மார்க்ஸ் அமைதி யாகக் கூறுவதுபோல், 'உழைப்பு உழைப்பாகக் கணக்கிடப்படுவ தில்லை.' தொழிலாளியை இவ்வுண்மையை ஏற்கும்படி-அதுவும் சம்பளம் வாங்கும்போது-செய்வது மிகக் கடினமாக இருப்பினும், இது உண்மையே. சமுதாய ரீதியாகத் தேவைக்குமேல் அதிக நேரத்தைச் செலவிடுவது இதனை நிரூபிக்கிறது. பொதுவாகக் கூறின், எதன்மீது செலவிடப்பட்ட உழைப்பும் 'பலருக்குப் பயன் படக்கூடிய உருவத்தில் அமைந்திருந்தால்தான் அந்தச் செலவிட்ட உழைப்பு மதிப்புப் பெறுகிறது.'[3] இவ்வாறே பலவித மான தரமுடைய உழைப்புகளையும், திறனுள்ள திறனற்ற உழைப் பையும், அதற்குள்ள வேறுபாடுகளையும் அவர் ஆராய்கிருர். மார்க்ஸ் எல்லா உழைப்பையும் 'தத்துவ ரீதியான மனித உழைப் புக்கோ' அல்லது 'சாதாரண சராசரி உழைப்புக்கோ' சமமாக்கிக்

[1] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 46. [2] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 48.
[3] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 97-98.

காணமுடியும் என்று எண்ணுகிறார். இது ஒரு விந்தையான கதையாகும். தையல் தொழிலாளியின் உழைப்பும், நெச வாளி அல்லது வேறு குறிப்பிடத்தக்க தொழிலாளியின் உழைப்பும் உழைப்புப் பட்டியலில் எந்த இடமும் பெறாது. யாவ ராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க முறையில் உழைப்பில் பலவிதத் தரங்கள் இருப்பின், முடிவாகச் சாறு இறுக்கப்பட்ட உழைப்பின் அளவில் அவற்றை எவ்வாறு எடுத்துக் கூற முடியும்? இதற்கு ஒளியூட்டும் மார்க்ஸின் விளக்கம் இதுதான் :

'தீவிரமாக்கப்பட்ட சாதாரண உழைப்பே திறனுழைப் பாகும்; அல்லது அது பெருக்கப்பட்ட சாதாரண உழைப் பாகும். ஓர் அளவுள்ள திறனுழைப்பு மிக அதிக அளவுள்ள சாதாரண உழைப்புக்குச் சமமாக எண்ணப்படுகிறது. இத்தகைய சுருக்கமான சமன்பாடு அடிக்கடி கொள்ளப்படுவதை அனுபவம் காட்டும்...பல்வேறு வீதங்கள், பல்வேறு விதமான உழைப்புகள் திறனற்ற உழைப்பை ஓர் அளவாகக் கொண்டு கணக்கிடப் படுகின்றன. இது ஒரு சமூக முறையின்படி அமைகிறது. இது உற்பத்தியாளர்களுக்கும் ஏற்ற வகையில் இயங்குகிறது. பழக்க வழக்கத்தால் நிர்ணயிக்கப்பட்டது போலவும் தோன்றுகிறது.'[1]

இந்த விஷச்சூழலில் இதை ஆராய்வதாயின், குழப்பமான சமூக முறையால் உருவாவதும், உற்பத்தியாளர்களின் பின்னால் போவதும், அங்காடி இடத்தின் அவசரமான முடிவுகளின் விளைவே யாகும். உலகத்தின் முரடான கட்டைவிரலால் உருவாகின்ற உற்பத்திப் பொருள்களை அ, இ என்று கொள்வோமாயின், அவை 5:4 என்ற விகிதத்தில் பரிமாறப்படும். அதன்மீது மார்க்ஸ் கூறுகிறார். 'இ'யின் உழைப்பு 'அ'வின் உழைப்பைவிட $1\frac{1}{4}$ பங்கு அதிகமாகும் என்று கணக்கிடப்படுகிறது. அங்காடி மாற்று விகிதத்தில் 10:9 என்று மாறுமாயின், அதே விகிதத்தில்தான் தொழிலாளியின் உழைப்பு வீதமும் கணக்கிடப்படுகிறது. ஆனால், உண்மையில் நடைமுறைக்குப் பொருந்தும் கருத்துகளை ஒரு விளக்கமாகத் தொகுத்துக் கூறினும், மக்கள் கூடும் அங்காடியில் ஏற்கப்படுவதில்லை. அதைக் கோட்பாட்டோடு பொருத்திப் பார்க்கும்போது அது உண்மையோடு அமைகிறது. ஆனால், மார்க்ஸ் இதையே முதலிலிருந்து கடைசிவரை கடைப்பிடிக் கிறார். உழைப்புதான் மதிப்பை நிர்ணயிக்கிறது. இது எந்த அளவுக்குத் தவருகப் பிரயோகிக்கவோ பயன்படுத்தவோ படுகிறதோ அந்த அளவுக்கோ, அதற்கு மேலாகவோ அது

[1] அதே ஏடு, தொகுதி I, பக்கங்கள் 51–52.

உழைப்பாகக் கணக்கிடப்படுவதில்லை; அல்லது. அது தரம் தாழ்த்தப்படுகிறது. பல்வேறு விதமான உழைப்புச் சாதாரண உழைப்பின் பெருக்கம் என்று கருதப்படவேண்டும். எந்த அளவுக்கு எந்தவிதமான உழைப்பு பெருக்கப்பட வேண்டும் என்று கேட்கப்படுமாயின், அதற்குச் சரியான பதில் அங்காடி தான் (மார்க்கெட்டு) தரும். இதனின்று பெருக்கக் காரணியைப் பெறலாம். இவ்வாறு எங்கே தேவையோ அங்கே உழைப்பினை அலட்சியம் செய்து, நிலைமைக்கு ஏற்றவாறு அதன் தரத்தை உயர்த்தியோ தாழ்த்தியோ செய்தோமானால், உண்மையும் கருத்துக் கோட்பாடும் ஒன்றோடொன்று இணைந்து தழுவி மணம் வீசும்.

'மிச்ச மதிப்பு' என்பதன் விளக்கமானது திரைபோட்டு மூடி மறைக்கப்பட்ட 'இயற்கைத் தத்துவம்' என்ற குப்பையில் கலந்து கிடக்கிறது. இந்தக் கருத்தின் மூலத்தை அறிந்துகொள்ளக் கூடியது எளியதாயில்லை. இந்தப் பிரச்சினையில்தான் மூலதனத்தைப் பெருக்கவல்ல இரகசியமும் அடங்கியுள்ளது. பொருள்கள் புழக்கத்திலிருப்பதனால் மார்க்ஸ் இரண்டு சூத்திரங்கள் மூலம் விளக்குகிறார். பொ-ப-பொ (எங்கே ஒரு பொருள் பணத்திற்குப் பரிவர்த்தனை செய்யப்பட்டு மறுபடியும் பொருளுக்கு மறுபரிவர்த்தனை செய்யப்பட்டது) அல்லது வேறுவிதமான சுற்றுமுறை ப-பொ-ப (பணத்தின் மூலம் ஒரு பொருளை வாங்கி அதைப் பணமாக மாற்றல்). ஆனால், பணக்காரன் பணத்தின்மீது பேராசை கொண்டு அலைவதால், சூத்திரம் இவ்விதமாக இருப்பது மிகவும் பொருந்தும். ப-பொ-ப (அங்கே $ப^1 = ப + δப$). அறிவும் ஆய்வுத் திறனும் பொருந்திய வாசகர், மூன்று விஷயங்களில் ஒரே மாதிரி அமைந்துள்ள சூத்திரங்களைத் தள்ளியே வைப்பர். ஒன்றுக்கொன்று மாறுபாடாக அமைந்துள்ள ஒன்பதையும் நிராகரிப்பர். முதல் சூத்திரத்தில் (பொ-ப-பொ) பெருக்கத்திற்கு இடமில்லை. ஏனெனில், மாற்றிக்கொள்ளப்படுபவை சம மதிப்பையே உடையனவாய் இருக்கின்றன. தம் புத்தகத்தின் முதல் பகுதியில் மார்க்ஸ் குறிப்பிட்டுள்ள அளவுக்காவது மார்க்ஸின் மதிப்புக் கோட்பாட்டின் மூர்க்கத்தனத்தைச் சுருக்கி ஒரே வாக்கியத்தில் கூறுவோமாயின், 'ஒரு பொருளின் மதிப்பு, புழக்கத்திற்குப் போவதற்கு முன்னாலேயே அதன் விலையின்மூலம் கணக்கிடப்படுகிறது. ஆகவே, மதிப்புப் புழக்கத்தின் பின் ஏற்படுவதல்ல. புழக்கத்திற்கு வருவதற்கு அவசியமான அடிப்படையே மதிப்பு ஆகும்.'[1] அவைகளின் மதிப்பைவிட அதிகமான விலைக்கு

[1] அதே ஏடு, தொகுதி 1, பக்கங்கள் 175–176.

அவைகளை விற்கிற காரணத்தாலேயே மிச்சம் ஏற்படுவதாகக் கூறமுடியாது. ஏனெனில், அவ்வாருன பொருள்களில் புழக்கத்தில் ஒருவர் பெறுகிற இலாபம் மற்றவரின் நஷ்டமாகிவிடுகிறது. மேலும், பலவித மாற்றம் செய்த பிறகே அவர் முடிவுக்கு வருகிறார். செல்வ வளர்ச்சிக்கு மூலகாரணத்தைப் ப-பொ-ப என்ற சூத்திரத்தின் முதல் பகுதியிலிருந்தே பெறவேண்டும். முழு மதிப்பையும் கணக்கிட்டு விலை கொடுத்து வாங்கியபின், பொருளின் மதிப்பு அதன் உபயோகத்தையே சார்ந்திருக்கிறது. மார்க்கெட்டில் எங்கோ ஓரிடத்தில் ஒரு புதிரான பொருள் இருக்க வேண்டும். 'அதன் உபயோக மதிப்பு, மதிப்பின் மூலகாரணத்தை உடையதாய் இருக்கவேண்டும். அதன் நுகர்ச்சியே உழைப்பாக உருக்கொள்கிறது. அதன் காரணமாக மதிப்பு உருவாகிறது.'[1] இந்த மாயமான பொருள் உழைப்பின் சக்தியேயாகும். இச்சக்தி அவர் வேரோரிடத்தில் குறிப்பிடுவதுபோல 'மதிப்பின் மூலம் மாத்திரமல்ல, அதைவிட அதிக மதிப்பைத் தன்னகத்தே உடையதாகும்.'[2]

அதன்மீது போடப்பட்டுள்ள திரைகளைக் கிழித்துவிட்டுப் பார்த்தால், மிச்ச மதிப்புக் கோட்பாடு தெளிவாக விளங்கும். மற்ற எவற்றினையும்போல், உழைப்பு சக்தி தனக்கென்ற தனி மதிப்பை உடையதாகும் (ரிகார்டோவின் தெளிவற்ற கருத்திற்கே செல்வோம்); 'தொழிலாளி தான் உயிர்வாழத் தேவையான பொருள்களின் மதிப்பைப் பொறுத்தே உழைப்பின் மதிப்பு அமைகிறது.'[3] இதை நடைமுறையில் பயன்படுத்தும்போது உழைப்பின் சக்தியைவிட அதிகமாகவே உற்பத்தி இருக்கும். ஒரு தொழிலாளியின் உயிர்வாழ்வுக்கு ஐந்து மணி நேர உழைப்புப் போதுமாயின், அவன் ஒரு நாளில் பத்து மணி நேரம் உழைப்பானுயின், மீதி ஐந்து மணி நேர அதிகப்படியான மிச்ச உழைப்பு சக்தி மிச்ச மதிப்பை அளிக்கிறது. மார்க்ஸின் இக் கோட்பாட்டை இரண்டே வாக்கியங்களில் கூறிவிடலாம். முதலாவது, எல்லா மதிப்பும் உழைப்பிலிருந்தே உருவாகிறது. ஆனுல், இரண்டாவதாக, உயிர் வாழ்விற்குத் தேவையானவற்றை மட்டுமே உழைப்பு பலனுகப் பெறுகிறது. இவ் வேறுபாடு மூல தனத்தினுல் ஏற்படும் சுரண்டலாகிறது.

உழைப்பினுல்தான் மதிப்பே உருவாகின்றது என்ற கருத்து மார்க்ஸால் பெரிதும் வலியுறுத்தப்படுகின்றது. இறுதியில்

[1] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 186. [3] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 190.
[2] ,, ,, ,, I, பக்கம் 216.

இதுவே அவரது கருத்தைத் தரமற்றதாகத் தாழ்த்துவதற்குங் காரணமாகிறது. நிலையான மூலதனத்திற்கும், நிலையற்ற மூல தனத்திற்கும் உள்ள முக்கியமான வேறுபாடே இதுதான். நிலையான மூலதனம் என்பது உழைப்புக்குத் தேவையான உப கரணங்கள், உற்பத்திக்கு ஏதுவாகும் பொருள்கள் ஆகியவை யாகும்; இதனை இயந்திரம் எனப் பொதுவாகக் கூறிவிடலாம். நிலையற்ற மூலதனம் எனப்படுவது உழைப்பு சக்தியின் பிரதிநிதி யாக விளங்கும் ஊதியத் தொகை 'கூலி' ஆகும். ஆதலினால், மூலதனம் பல்வேறு வித அளவுக் கலவையாக மிகுந்தோ குறைந்தோ இருக்கலாம். நிலையான மூலதனமும் நிலையற்ற மூல தனமும் கலந்த கலவையே மூலதனமாக அமைகிறது. மார்க்ஸின் கருத்தின் சாராம்சம் யாதெனில், மிச்ச மதிப்பு என்பது நிலையற்ற மூலதனத்தில் அடங்கியுள்ளது என்பதாகும். ஓர் இயந்திரம் எத்தனை ஆண்டு வேலை செய்திருப்பினும், அது உற்பத்தி செய்யும் பொருள்களின்மீது அதன் மொத்த மதிப்பு ஏறுகிறது.[1] 'உற் பத்தியான பொருளின் மதிப்பில் அது அவ்வாறு உருவாகக் காரணமாக இருந்த உபகரணங்களின் மதிப்பும் கலந்து காட்சி தருகிறது.'[2] ஆனால், மறுமுறையும் இவ்வாறு கலந்து காட்சி தருவதில்லை. 'ஆதலால் இயந்திரம் ஏனைய நிலையான மூலதனங் களின் சாதனங்களைப்போலப் புதிய மதிப்பை உருவாக்குவ தில்லை. அது உருவாக்கும் பொருள்களுக்குத் தன்னுடைய மதிப்பையே அளித்துவிடுகிறது.'[3] இக் கருத்தின் விளைவால் எல்லா மிச்ச மதிப்பும், அஃதாவது எல்லா ஆதாயமும் நிலை யற்ற மூலதனத்திலிருந்து மட்டுமே வெளியாகிறது. இதைப் பின்பு மிக நன்கு ஆராய்வோம்.

'மிச்ச மதிப்பு இவ்விதம் இருக்க, மூலதனம் உயிர்நாடியாகப் பொருள்களுக்கு மதிப்பையும் மிச்ச மதிப்பையும் உருவாக்குகின்ற ஒரு வேலையையே உடையதாக இருக்கிறது.'[4] முதலாளித்துவ இயந்திரம் ஒரு முறை வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டால், மிச்ச மதிப்பின் உச்ச கட்டத்தை அடையவே முனையும். மிகவும்

தெளிவாக அது பின்பற்றும் முறை யாதெனில், உழைப்புக் கால அளவை அதிகப்படுத்துவதேயாகும். அஇ என்பன அவசிய மான உழைப்புக் 'காலமானால்' அஉ விலிருந்து அஉ¹—க்கு

[1] அதே ஏடு, தொகுதி I, பக்கங்கள் 226-227.
[2] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 231.
[3] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 423.
[4] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 257.

வேலைநேரத்தை நீட்டிஞல், அது மிச்ச மதிப்பை அதிகமாக்கும். இதைப்போல் அஇ-லிருந்து அஇ[1]-அளவுக்கு வேலை நேரத்தைக் குறைத்தால் மிச்ச மதிப்பும் குறையும். இதஞல் தான் 'மூல தனத்தின் ஓர் அமிசமாக உழைப்பின் ஆக்க சக்தியை உயர்த்துவது பொருள்களின் விலையைக் குறைப்பதற்காக எனின், அதன்மூலம் தொழிலாளியின் மதிப்பே குறைந்து போய்விடு கிறது.'[1] தொழிலாளியின் உணவு நேரத்தைக் (இடை வேளை) குறைத்தும், இரவு பகல் உழைக்குமாறு வற்புறுத்தியும், தொடர்பு விடாமல் வேலை செய்யுமாறு செய்தலும், சிறுவர்களையும் பெண்களையும் உழைக்கச் செய்து கொடுமைப்படுத்துவதும் மிச்ச மதிப்பை மிகவும் அதிகப்படுத்தும். 'இவையெல்லாம் தொழிலாளியின் உழைப்பென்னும் இரத்தத்தை உறிஞ்சும் வெறிக்குணத்தையே காட்டும்.'[2]

மேலே குறிப்பிட்டுள்ளவற்றில் உள்ள குறைபாடுகள் மிகவும் தெளிவாகத் தெரிகின்றன; இவை மார்க்ஸுக்கே உரியனவாகும். நாம் மார்க்ஸிடம் பொதுவாகக் காண்பது யாதெனில், அவர் காலத்தின் சிறப்பை அவசியமற்றதென முழுதும் ஒதுக்கித் தள்ளி

[1] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 351.

[2] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 282. மார்க்ஸ் புத்தகத்திலிருந்து ஓர் அழகிய அத்தியாயத்தை எடுத்து இங்குக் கூறுவது பொருத்தமாகும். 'ஆஞல், மிச்ச மதிப்பின் மீது கொண்ட ஒநாயின் பசியின் காரணமாகக் குருட்டுத்தனமான கட்டுக்கடங்காத வெறித்தன்மையில் மூலதனம் ஒழுங்கையெல்லாம் மீறி ஒரு நாளில் நியாயமாக வேலை செய்யக் கூடிய மனித உடலின் சக்தியை மிக அதிக அளவுக்குப் பயன் படுத்தும் போக்கைக் காண்கிறோம். உடலை ஆரோக்கியமாகவும், வளர்ச்சிக்குரிய முறையிலும், செழிப்போடும் பாதுகாத்துக்கொள்வதற்குரிய நேரத்தை அது விழுங்கி விடுகிறது. நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் உலாவித் தூய்மையான காற்றை உட்கொள்ளவும், நிறைந்த வெளியில் சூரிய ஒளியில் உலாவவும்வேண்டிய நேரத்தை அது அபகரித்துக்கொள்கிறது. உணவு உண்ணும் நேரத்தில் உள்ளே நுழைந்து தொல்லை செய்கிறது. இத்தனைக்கும் இயந்திரத்திற்குத் தரப்படுகின்ற எண்ணெயையும் மெழுகையும்போல், கொதிகலனுக்குத் தேவையான நிலக்கரியைப் போல், தொழிலாளி உழைப்பதற்கு அவசியமான—உற்பத்தி செய்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருளை உட்கொள்ளுவதற்குக்கூட முதலாளித்துவம் நேரம் தரவில்லை. இழந்த சக்தியைப் பெறவும், புதிய உற்சாகத்தில் உடல் பூரிக்கவும், உள்ளத்தில் மகிழ்ச்சி தோன்றவும் அவசியமான தூக்கத்தைக் குறைப்பதற்கும் அது காரணமாகிறது. மேலும், நாளெல்லாம் உழைத்து அலுத்து ஓய்ந்துபோன உடலின் கூறுகள் புத்து ணர்ச்சி பெறத் தேவையான தூக்கம் தடைபடுத்தப்படுகிறது. வேலை நாளின் தேவையான உழைப்பு சக்தி நீலைநிறுத்தப்படுவதற்குக்கூட வசதி தரப்படவில்லை. தொழிலாளி உழைக்கும் காலத்தில் என்னதான் நேரயுற்ருலும், எவ்வளவுதான் வலியினுல் வருந்தினுலும் கட்டாயமாகச் செய்துதீரவேண்டிய உழைப்பை அது கணக்கிட மறுக்கிறது.

மூலதனம், உழைப்பு சக்தியின் காலம் நீட்டப்படுவது குறித்து ஒருசிறிதும் கவலைப்படுவதில்லை. அது கவலைகொள்வதெல்லாம் உழைப்பு சக்தி ஒரு வேலை நாளில் எவ்வளவு அதிகமாகவும் எளிதாகவும் தரப்படுகிறது என்பது குறித்துத்தான். பேராசை கொண்ட குடியானவன் அதிக உற்பத்தி செய்யவேண்டுமென்ற ஆசையில் நிலத்தினின்று அதனுடைய வளத்தை வேகமாகச் சுரண்டிவிடுவதுபோல் இதுவும் தொழிலாளியினுடைய வாழ்க்கையைக் குறைத்துவிடுவதற்குக் காரணமாகிறது.' தொகுதி I, பக்கங்கள் 291-292.

விட்டதுதான். இது வட்டியின் நியாயமற்ற போக்கினை எண்ணியே கூறப்பட்டதாகும். இவ்வாறு வட்டியைப் பற்றி அவர் கூறியுள்ளது போதுமான ஆராய்ச்சியின்மையையே காட்டும். எங்கே தெளிவாகக் கூறவேண்டுமோ அங்கே அலட்சியமாகக் குறிப்பிடுகிறார். 'வட்டி என்பது மிச்ச மதிப்பின் ஒரு சிறு பகுதிதான்'[1] என்ற மார்க்ஸின் கண்ணோட்டத்தில் பணம் பயனற்றதாகும். அரசாங்கத்தின் பொதுக் கடனுக்கு அவர் தெரிவிக்கும் எதிர்ப்பே, 'பொதுக் கடன் பயனற்ற பணத் திற்குப் பெருக்கெடுக்கும் ஆற்றலைத் தந்து மூலதனமாக உருவாக்கிவிடுகிறது'[2] என்பதுதான். இதைப் போன்றே நிருவாகத் துறையின் பணிகளும், ஆலோசனை நல்கும் துறை களும் குறிப்பிடாமல் விடப்பட்டிருக்கின்றன.[3] இரண்டு விதமான வியாபாரத்தில், ஒரே அளவு உழைப்பு சக்திகளைக் கொண்டு செயலாற்றினாலும் ஒன்று மிகவும் நல்ல முறையில் பணம் குவித்து ஆதாயம் நல்கும். மற்றொன்று பல நஷ்டங்களை அடைந்து மூழ்கவும் நேரும். இந்தக் குறைபாடுகளைத் தவிர மார்க்ஸின் தத்துவம் வேறு இரண்டு முரண்பாடுகளை உள் ளடக்கி யிருப்பதால் (அல்லது ஒரே முரண்பாட்டின் இரண்டு கோணங்களால்) அவதியுற்றுத் தப்பமுடியாமல் தவிக்கிறது. முடிவாக மூன்றாவது பகுதியில் மோதி உடையும் கப்பலைப்போல் சுக்குநூறாகிறது. முதலாவது, எல்லா இலாபங்களும் நிலையற்ற மூலதனத்தினால்தான் கிடைக்கிறது என்றால், அது இயந்திரத் தினால் ஒருசிறிதும் கிடைப்பதில்லை என்பதை ஒப்புக்கொண்டால், இயந்திரத்தை உபயோகிப்பது வடிகட்டிய முட்டாள்தனம் ஆகிறது. முதலாளி தான் செய்வது என்னவென்று அறியாமல் திகைக்கிறான் என்று குறிப்பிடுவது பரிதாபத்திற்குரிய விளக்க மாகும். இயந்திரத்தைப் பயன்படுத்துவதன், 'உள்ளடங்கிய முரண்பாட்டின்'[4] இடையூறுகளை உணர்கிறார் மார்க்ஸ். குரைக் கின்ற நாய் குரைப்பதோடு நிறுத்திவிடுவதுபோல், வாசகர்களுக்கு உணர்த்தவேண்டியதைத் தெளிவாக உணர்த்தவில்லை. மார்க் ஸீயக் கருத்துப்படி மூலதனம், நிலையான மூலதனமாக வளர

[1] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 644.

[2] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 827.

[3] கூட்டுறவு அதிகாரத்தின்கீழ் ஏதோ ஓர் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது: கூலி பெறும் தொழிலாளர்கள் அதே முதலாளி தொடர்ந்து வேலைக்கு அமர்த்திக்கொள்ளா விட்டால் கூட்டுறவுடன் ஒத்துழைப்பது இயலாதாகிவிடும். ஆகவே, 'போர்க் களத்தின் ஓர் இராணுவத் தளபதியின் கட்டளைகள் ஏற்படுத்தும் கட்டுப்பாடுகள் எவ் வளவு முக்கியமானதோ அவ்வளவு அவசியமானது ஒரு முதலாளி உற்பத்தித் துறையில் கட்டுப்பாட்டுடன் நிருவகிப்பதும் ஆகும்.' (தொகுதி 1, பக்கங்கள் 362-363). இதைக்கொண்டு அவர் எதையும் சொல்லவில்லை. சொல்லப்பட்ட ஒவியைக் கேட்கும் பொழுது மார்க்ஸின் நாக்குத் தாடையோடு ஒட்டிக்கொண்டதுபோல் தோன்றுகிறது.

[4] அதே ஏடு, பகுதி I, பக்கம் 445.

வளர இலாபத்தில் குறைவு ஏற்படும். காரணம், இலாபமானது உழைப்பிலிருந்தே உருவாகி வெளிப்படுகிறது. இது மொத்த மூலதனத்தின் பகுதியாகக் குறைந்துசெல்கிறது. முதலாளி மேலும்மேலும் இலாபம் பெறச் செய்யும் முயற்சி அவன் அழிவுப் பாதையை நோக்கி எடுத்துவைக்கும் அடிகளாகும். பெருவாரியான எண்ணிக்கையில் மிகுந்த தொழிலாளர்களால்தாம் அல்லது அவர்களிடமிருந்துதான் மிச்ச மதிப்பு உருவாகின்றது. மார்க்ஸின் ஆராய்ச்சி நமக்குத் தெளிவுறுத்துவது யாதெனில், இயந்திரத்தினுல் வேலை இழப்போரின் தொகை படை படையாகப் பெருகின், ஒருசிறிது இலாபமும் பெறமுடியாத நிலை உருவாகி விடும். மற்றொரு மாபெருந் தவறு யாதெனில், அது இதிலிருந்தே எழுந்ததாகும். இதைவிட அழிவுக்குமுரியதாகும். இலாபமானது வேலையிலுள்ள தொழிலாளியின் உழைப்பின்மூலம் மட்டுமே கிடைக்கிறது என்ருல், நிலையான மூலதனம் இலாபம் ஈட்ட எவ்விதத்திலும் பயன்படுவதில்லையெனின், தொழிற்சாலைகளின் நிலையற்ற மூலதன அளவு அதிகமாகவோ அன்றிக் குறைவாகவோ இருப்பதைப் பொறுத்தே இலாபவீதம் மாறுகின்றது. எங்கே நிலையற்ற மூலதனம் அதிகமாக இருக்கின்றதோ அங்கே (நாகரிகமற்ற முன்னேற்றமடையாத தொழிற்சாலைகளில்) இலாப வீதம் அதிகமாக இருக்கும். இயந்திரத்தை அதிகமாகப் பயன் படுத்தும் தொழிற்சாலைகளில் இலாபவீதம் குறைந்தே இருக்கும். மார்க்ஸும் புகழத்தக்க வகையில் மிகவும் வெளிப்படையாகத் தாம் கூறிய உண்மைகள் அனைத்தும் நடைமுறைக்கு முரண்பட்டிருக்கின்றன என்பதை மறுக்காமல் ஒப்புக்கொள்கிறார்.

'இந்தச் சட்டம் உண்மையைச் சார்ந்திருக்கும் பல அனுபவங்களை மறுக்கிறது. நூல்நூற்கும் இயந்திரசாலைத் தொழிலாளி தான் கொண்டுள்ள மூலதனத்தினைக் கணக்கிட்டால், அதிகமான சதவீதம் நிலையான மூலதனமும், குறைந்த அளவு நிலையற்ற மூலதனமும் உபயோகப்படுத்துகிருன் என்பது தெரியும். இதனுல் இந்த நெசவாளி குறைவான இலாபத்தையோ, அன்றிக் குறைவான மிச்ச மதிப்பையோ அடைவதில்லை. இவ்விஷயத்தில் ரொட்டி தயாரிக்கும் ஒரு தொழிலாளி, அவன் நிலையற்ற மூலதனத்தைப் பெருவாரியாக உபயோகப்படுத்தினுலும், இயந்திர நெசவாளியின் இலாபம் ரொட்டித் தொழிலாளியைவிடக் குறைந்ததல்ல என்பதை யாவரும் அறிவர். இந்த ஒரு தெளிவான முரண்பாட்டினைத் தீர்த்து முடிவுகாணப் பலவித இடைவழிகளைக் காண வேண்டியிருக்கிறது. அடிப்படை அல்ஜிப்ராவின் சட்டப்படி பலவித முறைகளை நாம் மேற்கொண்டு % என்பது ஒரு நிச்சய

அளவைக் குறிக்கிறது என்று நிரூபிக்கவேண்டியிருப்பதுபோல் அதையும் காணவேண்டும்.'[1]

பிரச்சினைக்குரிய இக்கருத்துக் குழப்பத்தைத் தொடர்ந்து வந்த வரலாறு பொருளாதார வேடிக்கையும் கோமாளித்தனமும் நிறைந்ததாகும். வாக்களிக்கப்பட்டபடி பிரச்சினைகளுக்குத் தீர்வு இரண்டாவது பகுதியில் இல்லை. ஆனால், இது சம்பந்தமாக 'ஏங்கல்ஸின்' முன்னுரை பரவலாக விமர்சிக்கிறது. அது மாத்திரமல்ல ; 'ராட்பர்ட்டஸை' எதிர்த்துச் சவால்கூட விடப்பட்டிருக்கிறது. ராட்பர்ட்டஸை மிகவும் குற்றஞ்சாட்டினர் மார்க்ஸ். ஆனால், இப்பொழுது ராட்பர்ட்டஸைத் தலைமையாகக் கொண்டவர்கள் அவரது கருத்துகள் புதிரை அவிழ்க்கும் புனிதச் சொற்கள் என ஏற்றுக்கொள்பவர்கள். அதுவும் ராட்பர்ட்டஸிட மிருந்து மார்க்ஸ் கருத்துத்தானம் பெற்றுள்ளது உண்மையானால், உடனே மூன்றுவது தொகுதி வெளிவருவதற்கு முன்னால் தீர்வுகாண வேண்டும். இதில் விஞ்ஞதம் யாதெனில் பல சோஷலிஸ்டுகளும், பொருளாதார நிபுணர்களும் மார்க்ஸின் தீர்வு எவ்வாறு அமையவேண்டும் என்று ஆராய்வதில் பலத்த போட்டியுடன் பங்குகொண்டார்கள். ஆனால், தெளிவாகத் தெரியவேண்டிய உண்மை யாதெனில், ஒன்றுசேர முடியாதவைகளை ஒன்றுசேர்க்க முடியாது என்பதும், முரண்பாடான இரு கருத்துகளுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்த முடியாது என்பதும் ஆகும். இது மிகவும் உறுதியாக முரண்படும் இரு கருத்துகளில் ஒன்றினைத் தூக்கி எறிந்தாலன்றி உடன்பாடு காணமுடியாது. 'ரஷ்யாவின் அழிவுமுகாம்' பற்றி நன்கு சிந்தித்தவரும், அதனை உருவாக்கியவருமான 'ஏங்கல்ஸும்' மார்க்ஸை வெறியோடு பின்பற்றுபவரான 'லோரியா' என்பவரும் கூறுவதாவது: 'மார்க்ஸ் தொகுதி இரண்டையும் மூன்றையும் முடிப்பதில் இருந்த தாமதம் அவர் தமது வாழ்விலே மேற்கொண்ட இம் முயற்சியின் தோல்வியை நன்கு உணர்த்துவதே. 'மார்க்ஸ் தம்முடைய கருத்துகளை நன்கு உறுதிப்படுத்தி நிரூபிக்கும் இதை வெளியிடத் தயங்கியதைக் காண வியப்புறக் காரணமே இல்லை. அவரது கரங்கள் எழுத நடுங்கியதையோ, அழிவுக்கான இப் பாதையை வகுப்பதில் அவரது உணர்ச்சி மங்கியதையோ அறிய நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.'[2]

புரியாத இக்கருத்திற்கு மூன்றுவது பகுதியில் அவர் தந்த விளக்கமெல்லாம் ஒரே அளவான இலாபவீதம் கிடைக்கிறது

[1] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 335. [2] லோரியா, 'மார்க்ஸ்', பக்கம் 78.

என்பதாகும். இதை விளக்கித் தீர்வு காண முற்படுகையில், அவர் அதனைக் கணித முறையில் ஆராய்கிறார். சுருக்கமாகக் கூறினால் அவர் விளக்குவதாவது: 'முதலாளிகளைத் தனியே கொண்டு ஆராய்வதில் பலனில்லை. நிலையான, நிலையற்ற மூல தனங்கள் பலவிதப் பங்குகளுடன் இயக்கப்படுகின்ற பலவிதத் தொழில்களுக்குப் பதிலாகக் கற்பனைத் தொழில் ஒன்றினை உருவாக்கி, அதில் சமுதாயக் குழுவின் அங்கத்தினர்கள் அனைவரின் மொத்த மூலதனத்தினை இடவேண்டும். இத்தகைய முறையினை எல்லையில்லாமல் மேற்கொள்ளலாமாகையால், இதனால் எல்லா முதலாளிகளும் ஒரு கூட்டத்தினர் என்றே கொள்ளல் வேண்டும். மேலும், இதில் கிடைத்த மிச்ச மதிப்பானது அனைவருக்கும் சமமாகப் பங்கிடப்படல் வேண்டும். இவ்விதமாக ஒரே வித இலாப வீதம் உருவெடுக்க இச்செயல் ஏதுவாகிறது. ஆனால், இதற்கும் ஓர் அளவுள்ளது. சில பொருள்கள் அவற்றின் உண்மையான பெறுமானத்தைவிட அதிக மதிப்புடன் விற்கப்படுகின்றன. அதேபோல் சில பொருளானது அதனுடைய உண்மை மதிப்பை விட மிகவும் குறைவாகவே விற்கப்படுகின்றது.[1] பலத்த போட்டியின் காரணமாக ஒரே சீரான இலாபவீதம் ஏற்படுகிறது. முதலாக உள்ள மூலதனம் இவ்வாறு சராசரி இலாபத்தையே குறிக்கோளாகக் கொள்கிறது. இவ்விதமாக மதிப்புக்கும் விலைக்குமிடையே வித்தியாசம் எழுகிறது. இது மிகவும் அரிதாக எதிர்பாராதவகையில் சில நேரங்களில் ஏற்படும். எந்தத் தொழிற் சாலையின் ஒரு பகுதியிலும் உண்மையாகவே மிச்ச மதிப்பு உருவாகுமானால், அது அப்பொருளின் விற்பனையில் கிடைக்கும் இலாபத்துடன் சமமாக இருக்கும். எல்லா மூலதனத்தின் கூட்டுத்தொகையின் சராசரிக்கு (எங்கெல்லாம் நிலையற்ற, நிலையான மூலதனங்கள்) சமமாக இருக்கின்றனவோ, அவ்வாறு இருப்பது எதிர்பார்க்கமுடியாத ஒன்றாகும்.

மற்றப்படி தொழிற்சாலையின் உற்பத்திப் பொருள்களை அதன் உண்மை மதிப்பிற்குச் சற்று அதிகமாகவே விலைவைத்து விற்பனை செய்வார்கள். இத்தகைய தொழிலகங்கள் சராசரிக்கு அதிகமான நிலையான மூலதனத்தின் பகுதி கொண்டு இயங்குவன. இவ்வாறு இல்லாத தொழிலகமானது தனது பொருளின் உண்மை மதிப்பிற்குக் குறைவாகவே தனது உற்பத்திப் பொருள்களை விற்கின்றது. இவ்விதமாக விரும்பிய அளவு ஒரே சீரான இலாப வீதம் நிலைநிறுத்தப்படுகிறது. இந்த ஒரு தீர்வுகாண, இதற்கென்றே 'மூலதனம்' புத்தகத்தின் முதற்பகுதி முழுவதும் தியாகம்

[1] Capital, தொகுதி III, பக்கம் 186.

செய்யப்பட்டுள்ளது. ஏனெனில், இந்த முதல் புத்தகத்தின் உணர்ச்சி மிக்க கருத்துகளில் பொருள்கள் தாங்கள் உருவாகக் காரணமாயிருந்த உழைப்பை உள்ளடக்கிவைத்துள்ளன என்றும், அதன்பிரகாரம் அவை பண்டமாற்றப்படுகின்றன என்றும் விவாதிக்கப்பட்டுள்ளன. ஆயின், இக்கருத்துகள் பின்பு மிகவும் நகைப்புக்கு இடமாகும் வண்ணம் அதிகக் கண்டனங்களுக்கு ஆளாயின. இந்த மதிப்பிற்குரிய மறைபொருளைப்பற்றித்தான் 'லோரியா' மிகவும் பேசியுள்ளார். உண்மையில் மார்க்ஸ் முதல் பகுதிக்குப் பதிலாக உற்பத்தியின் செலவுக் கோட்பாட்டைத்தான் எழுதியுள்ளார். இச் செயல் மிகவும் கொச்சையான பொருளாதார நிபுணர் 'ஆடம் ஸ்மித்' தம்முடைய இழிவான அறிவழிந்த நாள்களில் எழுதக்கூடிய கருத்துகளுக்கு ஒப்பாகவே இருக்கிறது. பொருள்கள் ஒன்றேடொன்று உற்பத்திச் செலவை அடிப்படையாகக் கொண்டு மாற்றிக்கொள்ளப்படுகின்றன (சாதாரணமாக இதன் அடிப்படையில் மிதமான இலாப அளவும் அடங்கியுள்ளது).[1] இப் பொழுதும் அவைகள் விலையோடு பொதுவாக மாறுபடுகின்ற ஒன்றாக இருப்பதாக, இதில் அனைவருக்கும் எந்தவிதச் சிரத்தையோ, அறியவேண்டுமென்ற அவாவோ இல்லை. தொழிலகத் தேவைத் தயார்ப்படை, குவியும் மூலதனவிதி ஆகிய இக்கருத்துகளிலும் மார்க்ஸின் தீர்க்க தரிசனமே பெரிதும் அடிப்படையாக உள்ளது. பொருளாதார ஆய்வு இதில் பெரிதும் இடம் பெறவில்லை. ஆதலின், அதனை மிகவும் சுருக்கமாகக் கவனிப்போம். தொழிலக அவசரகாலத் தேவைப்படையானது இயந்திரத்தை அதிகமாக உபயோகிப்பதனால் ஏற்பட்ட விளைவாகும். இந்த விஷயத்தில் மார்க்ஸ் கூறும் கருத்தில் பல குறைபாடுகள் இருப்பதை அவராலேயே உணரமுடிகிறது. அவரது கருத்தாவது: இயந்திரத்தினால் இலாபமே ஏற்படுவதில்லை. பெருவாரியான இயந்திர உபயோகம் மிச்ச மதிப்பையும் பெரிதும் குறைக்கிறது. மூலதனமே யாவற்றிற்கும் ஆதாரம் என்கிற பேராசை பிடித்த கொள்கையினை ஏற்றுக்கொண்டால், உழைப்பின் அளவை அதிகமாக்கினாலோ, அன்றி ஒரு தொழிலாளியின் வாழ்விற்கு உணவளிக்கப் போதுமான உழைப்புக் காலத்தைக் குறைத்தாலோ மிச்ச மதிப்பை அதிகப்படுத்தலாம்.[2] முன்பு கூறியபடியே உழைப்பின் உற்பத்தி சக்தியைப் பெருக்குவதே மூலதனத்தின் தலையாய நோக்கம் என்று அறியவருகிறோம். இதனால் உழைப்பாளியின் மதிப்பும் மலிந்து

[1] உற்பத்தியில் முதலீடு செய்யப்பட்ட மொத்த மூலதனத்தின் சராசரி இலாபப் பங்கும், அதனோடு செலவுக்குச் சமமான விலையும் சேர்ந்த ஒரு பண்டத்தின் விலை அதன் உற்பத்தி விலையாகும் (தொகுதி III, பக்கம் 186).

[2] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 351.

விடுகிறது. தொழிற் பிரிவினை உற்பத்தியின் அளவைக் குறிப்பிடத்தக்க அளவு பெருக்க முற்படுகிறது என்பதும் விளங்குகிறது. அதனால், மிகவும் குறைந்த அளவு மூலதனமாயிருப்பினும், அது நாளாக ஆக அதிகப்படுத்தப்படவேண்டும்[1] என்றும் கொள்ளவேண்டியுள்ளது. ஆனால், ஒரு முறை இயந்திரம் நன்கு ஆளுகைக்கு வந்தவுடன் அதுவே பெருவாரியாக உபயோகத்தில் வந்துவிடுகிறது. முதலாளியும், இயந்திரத்தை ஒரு நாளில் எவ்வளவு அதிகமாக உபயோகப்படுத்த முடியுமோ அவ்வாறு செய்யப் பெரிதும் நாட்டங்கொள்கிறார்.[2] கால அளவை அதிகமாக்குவது ஒருபுறமிருப்பினும், இதைப்போன்றே மற்றொரு தூண்டுதல் உண்டு என்பதை மனத்தில் கொள்வது அவசியமாகின்றது.

'ஒரு முதலாளி அநேக முதலாளிகளை அழிக்கிறான்.'[3] படைகளின் மோதுதலில் மார்க்ஸ் கொண்டுள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது. போட்டி என்னும் போர் நிகழ்வதற்குக் காரணம் பண்டங்களின் விலை மலிவு ஆகும். ஆனால், மலிவு உற்பத்தி சக்தியினைச் சார்ந்தே இருக்கின்றது. உற்பத்தி சக்தி உற்பத்தி அளவைப் பொறுத்திருக்கிறது. 'ஆதலினால், செல்வம் மிகுந்த முதலாளி குறைந்த மூலதனமுள்ள முதலாளியை அடிமை கொண்டு ஆட்சி செலுத்துகின்றான். போட்டியானது சிறு சிறு முதலாளிகளின் அழிவுக்கு வழிகோலுகிறது. இதனால், சிறு முதலாளிகளின் மூலதனத்தின் ஒரு பகுதி இவர்களை வெற்றி கொள்ளும் பெரு முதலாளிவசம் சிக்கவும், மறு பகுதி மறைந்தும்விடுகிறது'[4] இவ்விதம் இயற்கையின் சூழலில் சம்பவங்கள் நிகழ்ந்து அவை ஆராயப்படுகின்றன. இறுதியில், குளத்து நீரில் வாழும் பெருமீன்கள் சிறியவற்றை விழுங்கிவிடுவதுபோல் பெரிய முதலாளிகள் சிறியவர்களை அழித்துவிடுகிறார்கள். பெரிய முதலாளிகள் பலத்திலும் வலிமையிலும் கொழுக்க, சிறு முதலாளிகள் எண்ணிக்கையில் மிகவும் குறைந்துவிடுகின்றனர். மற்றொரு துருவத்தில் தொழிலகத் தேவைப் படை வேலையற்றும், இடையிடையே வேலையின்றியும் முடிவற்ற துயரத்தில் ஆழ்கின்றது—ஒரு துருவம் செல்வக் குவியலினால் செழிக்கிறது; மறு துருவத்தில் துயரம் மலைபோல் நிற்கிறது; வேதனையின் சிகரம் காணப்படுகிறது. அடிமைத்தனம், அறியாமை, கொடுமை, மன அழிவு போன்றவை இதன் விளைவுகளாக இருக்கின்றன.

[1] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 395
[2] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 441
[3] அதே ஏடு, தொகுதி I, பக்கம் 836.
[4] அதே ஏடு, தொகுதி I, பக்கங்கள் 686—687.

ஆகவே, வளருகின்ற இந்த இறுதித் துன்பத்தின் எல்லையை மார்க்ஸின் சொற்களில் அறிவது பொருத்தமுடையதாகும்.

ஈர்க்கும் சக்தி படைத்த முதலாளிகளின் தொகை தொடர்ந்து குறைந்துவர அம்முதலாளிகள் பிறவற்றை உரிமைகொண்டு அடிமையாக்கி, மாறுதலின் விகிதவால் நிகழும் அனுகூலங்களையும் பயன்களையும் துய்க்கின்றனர். ஆனால், அதனுடனே துன்பமும், துயரமும், அடிமைத்தனமும், இழிந்த நிலையும், பிறரின் உரிமைகளை ஆக்கிரமித்தலும், தாழ்வுபடுத்தலும், சுரண்டலும் இன்னோரன்னவைகளும் வளர்ந்தன. மேலும், இதனுடன் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சி மனப்பான்மையும் வளர்கிறது. இந்தத் தொழிலாளி வகுப்பான்து எண்ணிக்கையில் வளர்ந்து, ஒழுங்கிலும், ஒற்றுமையிலும், அமைப்பு முறையிலும் சிறந்து முன்னேறி வளர்ந்ததாகும். ஆனால், இவை யாவும் முதலாளித்துவ உற்பத்தியின் அமைப்பினாலேயே உருவானவையாகும். மூலதனத்தின் முற்றுரிமை ஆதிக்க ஆட்சியானது உற்பத்தி முறையோடு செழித்து வளர்ந்ததாயினும், அதன் அடிக்கூருக இருப்பினும் முடிவில் அதன் தளையாகிவிட்டது. உற்பத்தி உபகரணங்களை ஒரே இடத்தில் குவிப்பதும், உழைப்பைச் சமுதாய உடைமை ஆக்குவதும், இறுதியில் ஓர் எல்லையை அடைந்து, அங்கு இவை இரண்டும் முதலாளித்துவம் என்னும் மேலுறையுடன் முரண்பாடு கொள்கிறது. மேலுறை இறுதியில் வெடித்துத் தூள் தூளாகிறது. தனியார் சொத்துரிமையில் எழுந்த முதலாளித்துவத்தின் சாவுமணி கேட்கிறது. சுரண்டலையே தம் வேலையாகக் கொண்ட முதலாளித்துவ வெறியர்கள் சுருண்டு வீழ்ந்துபடுகிறார்கள்.[1]

மார்க்ஸ் எந்த அளவு இக் கருத்துகளில் ஓர் உயர்ந்த தீர்க்கதரிசியாகத் திகழ்கிறார் என்பதையோ, அன்றி எவ்விதத் தெளிவுரைகளால் அவரை இவ்வாறு உயர்ந்தவராக்கிக்கொள்ள முடிகிறது என்பதையோ ஆராய்வது இங்கு அவசியமற்றதாகிறது. தொழிலக அவசியகாலத் தேவைப்படை என்னும் கருத்துக்கு மார்க்ஸ் எழுதிய பொருள் பிந்தைய வரலாற்றில் நடைபெறுத ஒன்றாகவே இருந்தது. தொழிலாளி வர்க்கம் நாளுக்கு நாள் தாழ்ந்தும், இழிந்த நிலை நோக்கிச் சென்றுகொண்டுமிருக்கின்ற நிலைபற்றி மார்க்ஸ் குழப்பமான கருத்தையே தந்துள்ளார். மார்க்ஸின் கருத்துகள் 1848-க்கு முன்னரே முழு உருப்பெற்று விட்டன என்பது அவர்மீதுள்ள குற்றச்சாட்டைக் குறைக்கின்றது.

[1] அதேஏடு, தொகுதி I, பக்கம் 837.

அதன்பின் இவர் தம் நேரத்தைத் தொழிற் புரட்சிபற்றி அறிவதி லும் ஆராய்வதிலும் செலவிட்டார். அக்காலத்தே தடையற்ற தனியார் சுதந்திரம் கொடிகட்டிப் பறந்தது. அமைதியும் நிறைந் திருந்தது. தொழிற் சங்கங்களின் நடவடிக்கைகளும் அரசாங்கத் தின் நற்பணியும் மார்க்ஸின் கருத்தோட்டத்தில் இடம்பெற வில்லை. முதலாளித்துவ ஆதிக்கக் குவிப்பின் நியாயம் பற்றி இதைவிடச் சிறந்த முறையில் நாம் விளக்கலாம். என்னவோ குவிப்பு என்பது இருக்கத்தான் செய்தது. அது தொழிலகச் சொந்தக் குவிப்பல்ல; அது வெறும் கட்டுப்பாடு மட்டுமே ஆகும்.

தொழிலக உடைமைக் குவிப்பே கோட்பாட்டின் சாரமென மார்க்ஸின் கருத்துத் தெரிவிக்கிறது. ஆகவே, இவ்விரண்டு நேர்மாறான முடிவுகளுக்கிடையே மார்க்ஸின் கருத்து நிறை வைப் பெறமுடியவில்லை. மக்களும் இரு எதிர் எதிரான பிரிவுகளாகப் பிரிந்து ஒன்றுசேரவே முடியாதவர்களாகிவிட் டனர். இவ்விரண்டிற்கும் இடையே மத்திய தரத்தினர் இருந்து வரிகளைச் செலுத்திக்கொண்டே இன்றும் ஒருவாறு வாழ்ந்துகொண்டுதான் வருகின்றனர்.

ஆனால், மார்க்ஸ் காண விரும்பும் சமுதாயமே மிகவும் வியப்புக்குரியதாகவும், வினோதப் பொருளாகவும் காட்சியளிக் கின்ற காரணத்தால், மார்க்ஸிய தீர்க்கதரிசனம் நியாயமா என்ற ஐயம் எழும்புகிறது. வேலையற்றோர் பட்டாளமே நிரம்பி வழியும் ஒரு சமுதாயத்தில் (இன்ஷூரன்ஸ் சட்டமும் நிறைவேற்றப் படுவதற்குமுன்) பெரும் அளவில் இயந்திரத்தின் உதவியை நாடித் தொழில் செய்கின்ற ஒருசில முதலாளிகளையே சார்ந்திருப் பது என்பதும் முரண்பாடுகளுக்கே வழிகோலுவதாகும். அவ் வாறுனால், யாருக்காகப் பெரும் பூத ராட்சச கணங்கள் போன்ற பிரமாண்டமான இயந்திரங்கள் பண்டங்களை வெளிக்கொணர் கின்றன? நிச்சயமாக இவ்வியந்திரங்கள் தொழிலக அவசரத் தேவைப்படைக்காக இயக்கப்படுவதில்லை. ஏனெனில், இக் கூட்டத்தினரின் வீடும் வாசலுமே தொழிற்சாலைதான். அவர் களுக்கு எதையும் வாங்கும் சக்தியும் கிடையாது. முன்பு போலவே மார்க்ஸ் தேவை என்னும் கருத்தினை முழுதும் அறியாமல் ஒதுக்கிவிடுகிறார். மார்க்கெட்டு இல்லையேல் உற் பத்தியானது முடிவில்லாமல் போய்க்கொண்டிருக்க முடியாது. ஏனெனில், அங்காடியில் அவ்வுற்பத்திப் பொருளுக்கு இருக்கும் அவசியத்தைப் பொறுத்தே உற்பத்தியின் அளவும் மாறுபடுகிறது. தொழிலக அவசியத் தேவைப் படையில் மக்கள் தொகையின் ஒரு பகுதி மக்கள் இங்குமங்குமாகச் சிதறியிருக்க, மற்றொரு பகுதி

இடைவிடாத துயரத்தில் மூழ்கியிருக்க, அங்காடியில் பொருள் கஸ வாங்குபவர்கள் யார்தாம் இருக்க முடியும் என்ற வினு எழு கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் புரிந்துகொள்ள முடியாத புதிராக மார்க்ஸ் இருந்தார்; அவ்வாறே இப்போதும், எப்போதும் இருப்பார்போலும். காரணங்கள் யாவும் மிகவும் 'விஞ்ஞான ரீதியில்' அமைந்திருக்கின்றன. எவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் தொடர்புடையனவாக அமைந்துள்ளன எனத் திறனுய் வாளர்கள் கூறுமாறு அவர் நூல் எழுதியுள்ளார். மிகவும் அரிய முறையில் யாவற்றையும் ஒன்ருேடொன்று இணைத்து அழகு படவும் ஒழுங்கு படவும் விளக்குகிருர். ஆனுல், எவ்விதக் கருத் துக்கோவையும் மார்க்ஸினுடையதுபோல் உண்மைக்கு முழுக்குப் போட்டதில்லே. ஏங்கல்ஸ் (Engels) இவரது வரலாறுபற்றிய தத்துவத்தை ஏற்றதும் இல்லே; உடன்பாடும் கொண்ட தில்லே. இவரது பொருளாதாரக் கருத்துகள் வெளிப்படையான கண்டனங்களுக்கு இலக்காயின. இவரது கருத்தின் தவறுகள் உடனுக்குடன் யாவருக்கும் புலப்படுத்தப்பட்டன. ஆகவே, இவரது தத்துவம் தேர்வில் திருப்தியான கேள்வி கேட்பதற்குக் கூட உதவாமல் போய்விட்டது. இவர் கண்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்படாமல் மறுத்துரைக்கப்பட்டன. இத்தகைய மறுப்புகள் இவரைப் பெரிதும் மதிப்பவர்களால்கூட ஏற்றுக் கொள்ளப்பட்டன. உதாரணமாகத் திரு. 'பீர்' என்பவர் கூறுகிருர்: 'மார்க்ஸின் மதிப்புப் பற்றிய கருத்தும், உபரி மதிப்புக் கோட்பாடும் பொருளாதார உண்மைகள் என்பதைவிடச் சமூக அரசியல் முழக்கம் என்ற அளவிலேயே மதிக்கப்படுகின்றன.'[1] திரு. 'லாஸ்கி' கூறுவதாவது: 'மார்க்ஸின் மதிப்புக் கோட்பாடு திருஞய்வின் முன் தலேநிமிர்ந்து நிற்க இயலாததாயும், உண்மைக்கு மாறுபட்டதாயும், கொடுக்கப்பட்ட விளக்கம் புரியாததாயும் போதாததாயும் உள்ளது. இத்துணேக் குறைபாடுகள் நிரம்பி யிருக்கும் மார்க்ஸ் ஒரு திண்மையான சக்தி கொண்டே காட்சி யளிக்கிருர்; காட்சியளிப்பார். உண்மையிலே எவ்வாறு பல எழுத்தாளர்களுக்கு எதிர்ப்புகள் எருவாகவும், அவர்களே அசைக்க முடியாதவர்களாகவும் ஆக்குகின்றனவோ அவ்வாறே மார்க்ஸும் ஆகியுள்ளார்.' இவரே ஒரு புலனுகாத பழங்கதையாவார். எவருக்கும் விளங்காத புதிர்களே அணவருக் கும் தெளிவுறுத்த இவர் முற்படுகிருர். இப்புதிர்கள் உண்மைக்குச் சம்பந்தமற்றவை. இந்தக் கட்டுக் கதைகள் ஒருவர் விரும்பி

[1] Beer, The Life and Teaching of Karl Marx, பக்கம் 129.

நம்பும்வரையிலும், அந்த நம்பிக்கை நடைமுறையில் செயற் படும்படி தூண்டும் சக்தியை உடையதாயிருக்கும்வரையிலும், இவைகளுக்கு மதிப்பு உண்டு. இதனையே மிகவும் போற்றுதற்குரிய முறையில் திரு. பீர் எதற்கும் கவலைப்படாமல் கூறியுள்ளார். மார்க்ஸின் பொருளாதாரம் வெறும் 'அரசியல் முழக்கம்' என்று அடித்துக் கூறுகிறார். 'இத்தகைய வெறியூட்டும் தத்துவங்கள் உண்மைகளாக இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. அவைகள் துன்பத்தில் உழலும் உழைப்பாளிக் கூட்டத்தினரின் உணர்ச்சிகளுடன் ஒத்துப்போனால் அதுவே போதுமானது. மார்க்ஸின் கருத்துகள் மக்களைப் பொறுத்தவரை உண்மையான தீவிரத்தைப் பெற்றிருக்கின்றன. ஆதலின், மக்களை உணர்ச்சி வசப்பட்டவர்களாகச் செய்யும் சக்தியினையும் இது தன்வசம் கொண்டுள்ளது.[1] ஆனால், இவைகள் யாவும் மார்க்ஸை ஒரு புனிதத் தன்மையுடைய பொய்யராகவே சித்திரித்துக் காட்டு கிறது. அவரது கூற்றுகளிலுள்ள குறைபாடுகளைச் சிலர் அறிவர். இது மற்றவர்களைத் தவருன பாதையில் அழைத்துச் செல்லும்வரையில் அதன் நோக்கம் நிறைவேறும்.

'ஆனால், முழுதாக இவரது கொள்கைகளை ஆதரிக்க வேறு வழிகளும் உள்ளன. அவைகள் யாவெனின், மார்க்ஸ் அறியாமை யால் தவற்றை உணராமல் இருக்கிறார் என்பதும், அவர் உலக மார்க்கெட்டின் நிலையை ஆராயவில்லை என்பதும், முதலாளி-தொழிலாளி வர்க்கம் வாழும் நடைமுறை உலகத்தை அவர் அறியவில்லை என்பதும், தமக்குள்ளே கற்பனை செய்துகொண்ட ஒரு விசித்திர உலகிலேயே அவர் உலாவுகிறார் என்பதுமாகும்' என்று 'கிராஸ்' (Croce) கூறுகிறார்.

'மார்க்ஸ் ஆராயும் முதலாளித்துவ சமூகம் பிரான்ஸிலோ, இங்கிலாந்திலோ, அன்றிப் புதிய கால முன்னேற்றப் பாதையில் வீர நடைபோடும் நாடுகளான மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா போன்றவைகளிலோ, மற்று இங்கோ, அங்கோ, எங்கோ வரலாற்றுப்படி உள்ள சமூகமல்ல; இது ஓர் இலட்சிய சமூகம்; பேருக்காக மார்க்ஸால் கற்பனை செய்து அமைக்கப்பட்டு எழுதப் பட்ட ஒரு சமூகம்; இவை போன்ற சமூகங்கள் உண்மையில் வரலாற்றின் ஊடே எங்கும் ஏற்பட்டனவாகத் தெரியவில்லை.'

மிகவும் சிறப்பான செய்தி யாதெனில், கிராஸ் அபிப் பிராயம் கொள்ளுவதுபோல், மார்க்ஸ் தமது வேடிக்கையான

[1] Beer, பக்கங்கள் 130–131.

ஆராய்ச்சியின் உண்மையினையும், அதன் விசித்திரப் போக்கினையும் குறித்து ஒரு சிறிதும் உணர்ந்தவராகக் காணப்படவில்லை என்பதுதான். முதல் தொகுப்புக்கும் மூன்றுவது தொகுப்புக்கும் இருந்த முரண்பாட்டால் எழுந்த கோணலும் குறையும் தெள்ளத் தெளிவாகத் தெரிவனவாகும். அவர் கண்ட இலட்சிய சமுதாயம் வரலாற்றுப் போக்கில் எந்தக் காலத்தும் எவ்விடத்தும் இருந்ததில்லை என்னும் உண்மை அவருக்குச் சொல்லப்பட்டிருந்தால், உண்மையில் மார்க்ஸ் ஆச்சரியப்பட்டே இருப்பார். மேலும், தெளிவான உண்மை யாதெனில், மார்க்ஸிடம் நன்மதிப்புக் கொண்டிருந்தவர்கள் அவரது விசித்திர ஆராய்வு முறையைப் பின்பற்றியமையால் அவரது தோல்விகளிலும் பெரும் பங்கு கொண்டனர். மார்க்ஸின் விஞ்ஙாத, விளக்கமுடியாத புதிர்பற்றி என்ன நிணைத்தாலும், அவர் சோஷலிச வளர்ச்சி வரலாற்றில் ஒரு சிறந்த உயர்ந்த சக்தியாக இயங்கினர் என்பதில் யாதோர் ஐயமுமில்லை. இவரது சக்திகள் சமுதாயத்திற்கு நன்மை அளித்தனவா இல்லையா என்பதுபற்றி ஐயப்பாடுகள் நிறைந்திருந்தாலும், மிகவும் தெளிவாகத் தெரியும் உண்மை யாதெனில், சோஷலிச வண்டியைத் தவருன பாதையில் செலுத்தி, அதனுல் சோஷலிச இயக்கத்திற்குக் குற்றம் நிறைந்த மாசு கற்பிக்கப்படுவதற்கு அவரே காரணமாகிவிட்டார்.

Delivrons - nous du Marxisme என்ற சிறந்த தலைப்புடைய புத்தகம், திரு. டிமான் (De Man) என்பவரின் தெளிந்த சிந்தனையில் உருவாகியதாகும்.[1] அது மார்க்ஸின் நிலையற்ற சோஷலிச கருத்துகளுக்கு எதிராகச் சோஷலிஸ்டுகளே எழுந்ததைக் காட்டும். சோஷலிஸத்திற்கு மார்க்ஸ் செய்த தொண்டு மூன்று கோணங்களில் காணமுடியும். முதலில் அறிவியல் முறையில் சோஷலிசத்தைக் காணவேண்டி, ஒழுக்க முறையினையும் நீதி அடிப்படையினையும் அவர் ஒதுக்கினர். மார்க்ஸ் இதில் எதையும் இலட்சியம் செய்யவில்லை. உருவாகும் சோஷலிசம் அறிவியல் முறையில் அனைவருக்கும் எடுத்துரைக்கப்பட வேண்டும். ஆனுல், ஒழுங்கு முறைகள் அவசியமற்ற கண் மூடித்தனமான உணர்ச்சிக் குவியல் என்று ஒருபுறம் ஒதுக்கப்பட்டவுடன், அறிவியல் நிரூபணங்கள் யாவும் நிலை குலைந்து போய்விட்டன. சோஷலிசம், அதன் நியாய அடிப்படையை மார்க்ஸிஸம் மூலம்தான் பெறமுடியும். இரண்டாவது கண்டனம் 'மாஜினி'யால் மிக நீண்ட காலத்திற்கு முன்னதாகவே எழுதப்பட்டதாகும். 'மார்க்ஸின் பொறுப்புணர்ச்சி அவரின் இதயத்தில்

[1] 'Psychology of Socialism' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எழும் அன்புணர்ச்சியினை மதிப்பற்றதாக்கிவிடுகிறது' என்கிறார் மாஜினி. முந்திய நாள் சோஷலிஸ்டுகள் இதயம் நிறைந்த அன்பால் வசப்பட்டு நின்றனர். மார்க்ஸ் அளிக்கும் செய்திகள் வெறுப் புணர்ச்சியையும், பொருமையையும், எரிச்சலையும் தூண்டிவிடுவனவாகும். வகுப்புப் போராட்டத்தை மையப் பிரச்சினையாக்கி இழிந்த, தீய உணர்ச்சிகளுக்குப் பெரிய இடம் அளித்துவிடுகிறார் மார்க்ஸ். தொடர்ந்து மார்க்ஸ் தாழ்ந்து நோக்குகிறார்; உயர்வுள்ளல் இல்லவே இல்லை. இதைப் போன்ற மூன்றாவது கண்டனம் யாதெனில், மார்க்ஸின் சோஷலிசம் ஒரு வகுப்புக்குரியதாகவே இருக்கிறது. பழைய கால சோஷலிசக் கருத்துகள் உயர்ந்த பரந்த நோக்கம் உள்ளவை. அவர்கள் கண்ட சமுதாயம் அனைவரும் நுழையக்கூடிய சொர்க்கமாகத் திகழ்ந்தது. ஆனால், மார்க்ஸின் சொர்க்கம் பிரிவு நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டு ஆதிக்கம் செலுத்தவெனச் சிலருக்குப் பயன்படவே எழுந்ததாகும். மார்க்ஸ் சோஷலிச இயக்கத்திற்கு விட்டுச்சென்றிருப்பது இதுதான்: அவர் சோஷலிசத்தின் இலட்சியத்தையே அழித்துவிட்டார். அதனை ஒன்றுக்கும் உதவாததாக்கியும் விட்டார்; சோஷலிசத்திற்குள் சகிக்கமுடியாத வெறுப்புணர்ச்சியையும், எவரும் வாழ இயலாது என்கிற நிலையையும் நம் கண்முன் அவர் சித்திரித்துக் காண்பிக்கிறார். அது உலகத்தோடு ஒத்ததொன்றாகவும் இல்லாமல் சோஷலிசத்தின்மீது உயிரை வைத்து ஆராதிப்பவர்கள் மார்க்ஸியத்திலிருந்து விடுதலைபெறப் பிரார்த்திக்கும் அளவுக்கு குறைபாடுகள் மலிந்துள்ளன. இந்தத் தீய சக்திகள் யாவும் எதுவரை மார்க்ஸின் உண்மையான பண்பின்மீது மூடப்பட்டிருக்கும் திரையினை ஒதுக்கி நமக்கு மிகவும் சுவையான செய்திகளை அறிய வாய்ப்பளிக்கும் என்பது தெரியவில்லை. மேலும், பல உண்மைகளை அறிய விரும்புகிறவர்கள் திரு. 'ருகலி' (Mr. W. Ruhle) என்பவரால் மிகவும் உணர்ச்சியோடு எழுதப் பெற்ற சுயசரிதையினைப் படித்து அறிந்துகொள்ளலாம்.

12. ஆஸ்திரியக் கருத்துப்பள்ளி; இறுதிநிலைக் கோட்பாடு

இப்பிரிவு, ஆஸ்திரியக் கருத்துப் பள்ளியின் உறுப்பினர்களைப் பற்றி ஓரளவு எடுத்துக் கூறுவதாகும். பல்வேறு கிளைகளாகப் பல்கிப் பிரிந்த 'இறுதிநிலை'க் கோட்பாட்டை உருவாக்கியவர்கள் இக்கருத்துப் பள்ளியினர் ஆவர். இந்த ஆஸ்திரியக் கருத்துப் பள்ளியினரை அவர்களுக்கு முற்பட்டவர்களின் கருத்திலிருந்து பிரித்துப் பார்ப்பது நன்றன்று. ஆகவே, இப்பிரிவில் முந்தைய தலைப்புகளில் தலைமைப் பொருளாதார நிபுணர்களைப்பற்றி மாத்திரம் ஆராய்ந்ததுபோல் செய்யாமல் காலத்தால் முற்பட்டவர்களையும் விவரிக்க முனைவோம். இந்த ஆஸ்திரியர்கள் வரையறுக்கப்பட்ட ஒரு சிந்தனையோட்டத்திற்கு தலைமை தாங்கினர். ஆனாலும், ஆஸ்திரியர்கள் அக்கொள்கையை எண்ணிய அதே காலத்தே அவர்களோடு ஒருசிறிதும் தொடர்பின்றி இருந்த ஆங்கில நாட்டு ஜெவான்ஸும், லாசனியைச் சேர்ந்த இளைய வால்ரஸும் அதே கருத்தை வெளியிட்டது ஆச்சரியத்திற்குரியதாகும். ஆகவே, இந்தப் பிரிவில் நாம் விரிக்கும் வலை மிகவும் பரந்ததாக இருக்கவேண்டும். அதிலுள்ள வலைக்கண்கள் சில மீன்கள் தப்பவும் இடந்தருவதாய் அமைதல் வேண்டும். ஆஸ்திரியக் கருத்துப் பள்ளியின் கோட்பாடுகளை அது அடைந்த மாற்றங்களைக் கொண்டு மிகச் சாதாரணமாகச் சுருங்கக் கூறின், மூன்று முக்கியக் குறிப்புகளில் அடக்கிவிடலாம். முதலாவதாக, உற்பத்திச் செலவைச் சேர்ந்த மதிப்புக் கோட்பாடுகளுக்கு மறுப்பாக, அவர்கள், மதிப்பு என்பதே ஒரு பொருளின் பயனைப் பொறுத்தே அமைகிறது என்றனர். அப்பயன் ஒரு மனிதன் தன் மனத்தில் ஒரு பொருளின் பயன் குறித்துக் கொண்டுள்ள எண்ணத்தின் பாற்பட்டது. இரண்டாவதாக, இந்த மதிப்பு இறுதிப்பாட்டின்மூலம் நிருணயிக்கப்படுகிறது. அதாவது,

தொடர்ந்துவரும் பொருளின் பயன் குறைந்துகொண்டே செல்கிறது. எந்தப் பயன் அதன் மதிப்பை நிருணயிக்கிறதோ அந்தப் பயன் மிகக் குறைந்த நிலையிலுள்ள இறுதிநிலைப் பயனுகும். மூன்ருவதாக, மதிப்பு என்பது நுகரப்பட்ட பொருள் களிலிருந்து வெளிவருகிற மதிப்பாகும். இந்த மதிப்பு இதை உற்பத்தி செய்யும் சாதனங்களுக்குப் போய்ச்சேருகிறது. அதாவது, மதிப்பு என்பது செலவை நிருணயிக்கிறது: செலவு மதிப்பை நிருணயிக்கவில்லை.

முந்தைய நாள் கருத்துகள்

ஆஸ்திரியக் கருத்துப் பள்ளியின் தோற்றத்திற்கு முன்னுல் இந்தக் கருத்துகள் அடிக்கடி சொல்லப்பட்டு வந்தவைகள் தாம். ஆனுல், அவை ஏதோ ஒரு காரணமாகச் சொல்லப்பட்டு வந்தனவே தவிர, முழுப் பொருளும் உணர்ந்து மொழியப்பட்டு வந்தவை அல்ல. பிரிவு 10-ல் சே சொன்னதாக இந்தக் கருத்தில் சொல்லப்பட்டுள்ளன. மதத்தலைவர் 'வாட்லி' குறிப்பிட்டது போல் முத்துக்கு மதிப்பு மனிதன் மூழ்கி எடுப்பதால் ஏற்பட வில்லை; முத்து மதிப்புள்ளதால் மூழ்கி எடுக்கப்படுகிறது. அறிந்தோ அறியாமலோ ஆஸ்திரியக் கருத்துப் பள்ளியின் சுவை மிக்க எண்ணமொன்றை அவர் எடுத்துச்சொல்லியுள்ளார். முந்தைய எழுத்தாளர்களில் சிற்சிலர் ஆஸ்திரியக் கருத்துப் பள்ளியின் நிழலோட்டத்தைக் கொண்டவராக இருந்தனர். அவர்களில் 'காண்டிலக்' (Condillac, 1714—1780) முக்கிய மானவர். அவர் எழுதி 1776-ல் வெளியிடப்பெற்ற 'அரசாங்க வாணிப இயல்' என்ற நூலில், பொருள்களின் மதிப்பு அதன் பயனில் அடங்கும்; அதே பொருளுக்கு ஏற்படும் மதிப்பு நம் தேவையைப் பொறுத்து அமைகிறது. அதுவும் அந்தப் பொருள் நமக்குத் தரும் பயனைப் பொறுத்துள்ளது. அது மாத்திரமன்று; பொருள்களின் மதிப்பு கிடைப்பதற்கு அரிதான பொருளாயின் மிகவும் அதிகரிக்கிறது. அதிகமாகக் கிடைப்பின், மதிப்புக் குறைகிறது. அளவின்றிக் கிடைப்பின், மதிப்பற்ற நிலையும் உருவாகும். அதன்பின் 'அகஸ்டஸ் வால்ரஸ்' தம் கொள்கை யைப் பொருளின் அருமை குறித்து மேற்கொண்டார். அரிதின் அளவு குறித்தல் இயலுமோ? 'பயன் மாறுபடாதபோது ஒரு பொருளின் மதிப்பு உயர்வதும் தாழ்வதும் அதன் கிடைப்பருமை குறித்தே அமைகிறது. இதைத் துல்லியமாக நிருணயிப்பது மிகவும் கடினம்.' இதை மனித மனத்தால் அளவிடுவது மிகவும் கடினமாகும். இதனுல் பற்ருக்குறை ஏற்படும் நேரம் அதை

மிகைப்படுத்திக் கூறுதல் மனித மனத்தின் வழக்கமாவதைக் காண்க. ஆகவே, 'உண்மை மதிப்பு' அறியவொண்ணு ஒன்றாயிற்று. ஒரு பொருளுக்குள்ள மாறுப் பயனை நோக்குமிடத்து, அதன் மதிப்பு கிடைப்பருமை காரணமாகவோ, அபரிமிதத்தினாலோ அமையவில்லை. அதைப் பற்றி நாம் எண்ணுவதைப் பொறுத்தே அமைகிறது. இம்முறையில் 'காண்டிலக்' முழுதும் அகநோக்கு மதிப்புக் கோட்பாடு ஒன்றை நிறுவ முயல்கிறார்.

ஆங்கில நாட்டை நோக்குவோமாயின், இடைநிலைக் கோட்பாட்டின் முந்தைய நாள் தந்தையர்களில் முக்கியமானவர் 'ஆக்ஸ் போர்டு' பல்கலைக்கழகப் பேராசிரியர் (1832—1837) டபிள்யூ. எப். லாயிடு (1794—1853) ஆவார். அவர் ஆண்டிற் கொருமுறை செய்த விரிவுரையை நூலாக வெளியிட்டார். 1833ஆம் ஆண்டு விரிவுரைத் தலைப்பே 'மதிப்பின் நோக்கு' என்பதாகும். அது ஆஸ்திரியக் கருத்தின் முன்னோடியாகும். ராபின்சன் குருசோவின் வீட்டுத் தொல்லைகள் இங்கு விரிவாக விளக்கப்பட்டுள்ளன. ஓரிரண்டு கவளச் சோற்றைப் பெறும் பசித்த மனிதனைக்கொண்டு 'லாயிடு' இக்கோட்பாட்டை விளக்குகிறார். ஓரிரு கவளமே உணவாகக் கொடுக்கப்பட்ட மனிதன் ஒரு கவளச் சோற்றைப் பெரிதாக மதிப்பான். அதன் மதிப்பு அவனைப் பொறுத்தவரையில் மிக அதிகமாகும் மேலும், அவ்வுணவை அதிகமாகத் தரின், ஒரு கவளம் அவனுக்குப் பெரிதாகத் தோன்றாது. அதாவது ஒரு கவளச் சோற்றின் மதிப்பு படுமோசமாகக் குறைந்துபோகிறது.

பயனுக்கும் மதிப்புக்கும் உள்ள வேறுபாட்டை அவர் விளக்குவது இன்னும் சுவைவுடையதாகும். அவர் கூறுவதாவது: 'ஒரு பொருளின் பயன் எது என்பதை உணர்ந்து கொள்ள ஒன்றைக் கற்பனை செய்து பார்த்தல் வேண்டும். அப்பொருளும், அதன் சார்பான பொருள்கள் அத்தனையும் அழிந்துவிடுமாயின், நாம் எத்தகைய துன்பத்திற்கு ஆளாவோம் என்பதிலிருந்து ஒரு பொருளின் பயனை உணரலாம். நீரைப் பொறுத்தவரையில் ஒரு குடம் தண்ணீரைக் கொட்டிவிட்டால் நிரப்பிக் கொள்ளலாம். ஆனால், தண்ணீர் ஒரு துளியுமின்றி உலகெங்கும் வற்றிவிடுமாயின் ஏற்படும் நிலையென்ன? இது 'பயன்' பற்றியதாகும். ஆனால் 'மதிப்பு' என்பது வேறு. அது நம்மிடை உள்ள ஒரு பொருள் பற்றியது. ஆகவே, அது அளவின்றி இருத்தல் இயலாது. கீழே வீழ்ந்துவிட்ட ஒரு குடத் தண்ணீரின் மதிப்பு அந்நீர் எதற்குப் பயன்படவேண்டுமோ அதற்குப் பயன்படாததால் ஏற்பட்ட தொல்லையில் அடங்கும்; அல்லது கிணற்றி

லிருந்து அக்குடத்தண்ணீரை மொண்டுகொண்டு வந்து சேர்ப் பதிலுள்ள தொல்லையின் மதிப்புக்குச் சமமானதாகும். சேர்த்து வைக்கப்பட்ட ஒரு பண்டத்தின் கடைசிப்பகுதி அழிந்துவிடு மாயின், அதைப் பெற ஏற்படும் தொல்லையினின்று மதிப்பு நிருணயிக்கப்பட்டுள்ளது. இங்கே மொத்த மதிப்பும் இறுதிநிலை மதிப்பும் விளக்கப்பட்டுள்ளன.

அகஸ்டஸ் வால்ரஸ்

இதே காலத்தில்தான் பிரான்சு நாடு தந்த சிந்தனையாளன் 'அகஸ்டஸ் வால்ரஸ்'[1] (1801—1866) தோன்றினார். இறுதி நிலைக் கோட்பாட்டினர் கொண்டிருந்த கொள்கையின் சில சிறப் பான கருத்துகளைச் சீரிய முறையில் தந்தவர் இவர். இவர் எழுதிய ஏட்டின் பெயர் De la Nature de la Richesse et de l' Origine de la Valeur. பிரான்சு நாட்டவர்க்கே உரிய தெளிவை இவ்வேட்டில் காணலாம் (இவ்வாசிரியருக்கே உரிய திரும்பத் திரும்பச் சொல்லும் போக்கையும் காணலாம்).

மற்ற அறிவுத் துறைகளைத் துருவி ஆராயப் புகுந்ததே பொருளியலுக்கு அவரை இழுத்துவந்தது. காரணம், அவர் 'இயற்கைவழி', 'சொத்துக் கோட்பாடு' இவைகள்பற்றி அறிய விரும்பினர். 'செல்வம்' என்பதன் பொருள் அறியப் பொருளா தார எழுத்தாளர்களின் நூல்களைப் படித்தார். அவர் கண்டதோ குழப்ப வாதங்கள்! கறிக்குதவா ஏட்டுச் சுரைக்காய்! சில பொருள்களின் அளவை உற்றுநோக்கின் செல்வமும் சொத்தும் ஒரே தோற்றமுடையன என்பது தெரியவரும். இந்த வரை யறைதான், கிடைப்பருமைதான் பொருள்காட்சி 'மதிப்பு' நல்குகிறது. இதுதான் சொத்தைப்பெற ஆர்வமூட்டுகிறது.

ஆகவே, 'மதிப்பு' என்பது சொத்திற்கு முற்பட்டதும் ஒரு கலப்படச் சேர்க்கையுமாகும். இது மற்றப் பொருள்களோடு தொடர்புபடுத்திப் பார்ப்பதில் தோன்றி, அதன் பரிவர்த்தனையில் முடிவடைகிறது. பரிவர்த்தனை என்றால் சொத்து என்றாகிறது. சொத்தோ வரையறை உடையது. எல்லாத் தேவையான

[1] 1801-ல் மான்ட்பெல்லியரில் பிறந்தார். 1831-ல் இவர்க்சீ என்ற ஊரில் சொற்பொழிவு நுண்கலைப் பேராசிரியராகப் பணியாற்றினர். 1835-ல் பாரிசில் அதனி கல்விக்கூடத்தில் அரசியல் பொருளாதாரப் பேராசிரியர் ஆனர். பின்பு 'கயனில்' தத்துவப் பேராசிரியராக இருந்தார். அவருடைய மகன் அவர் வழியில் மிகச் சிறந்தவனாகத் திகழ்ந்தான் என்று சொல்லப்படுகிறது.

பொருள்களும் வரையறையின்றி இரும்பின் சொத்து என்ற ஒன்றே இருக்காது. ஆகவே பரிவர்த்தனையும் இருக்காது.[1]

வால்ரஸோ மதிப்பின் ஊற்றுக் கண்ணையும் தோற்றத்தையும் பற்றிய அன்றைய கருத்துகளை அறிவுக் கல்லில் தீட்டிப்பார்க்க விரும்புகிறார். இவை இரண்டு கருத்துப் பள்ளியினரைச் சார்ந்த தாகும் என்று அவர் கருதினார். உழைப்பு அல்லது உற்பத்திச் செலவுக் கோட்பாடு ஆங்கிலப் பொருளாதார வாதிகளைச் சார்ந்த தென்றும், பயன் குறித்த கோட்பாடு பிரெஞ்சு எழுத்தாளர்களைச் சாருமென்றும் அவர் கூறினார்.[2] பயன் கோட்பாட்டைக் கொள்வதாயின் எங்கெங்கே மதிப்பு உள்ள பொருள் உண்டோ அதனிடத்துப் பயன் இருக்கும். கதிரவனின் ஒளியும் வான்மழையும் இக்கருத்தை இல்லை, இல்லை என்று மறுக்கின்றன. அளவின்றி அவைகள் கிடைப்பதால், ஒருவனுக்கில்லை மற்றொருவனுக்குண்டு என்ற மாறுபாடின்றி 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற முறையில் அவற்றைத் துய்க்க முடிகிறது. மற்றப் பொருள்களைப் பொறுத்தவரையில் எல்லாம் மாறுபாடுதான். சிலரிடம் உண்டு; சிலரிடம் இல்லை என்ற நிலை[3] இதுதான் எல்லாச் செல்வத்தையும் பற்றிய நிலை, இவையெல்லாம் 'மதிப்பு'ப் பெற்றவை. இவற்றின் இருப்பும் அளவும் வரையறுக்கப்பட்டதாகும். இப் பொருள்களைக்கொண்டே இக்காரியங்களைச் செய்யமுடியும் என்ற மொத்தத் தேவைக்கும், மொத்தமுள்ள பொருள்களுக்கும் உள்ள விகிதாசாரம் இயற்கையாக மாறுபட இந்த வரையறை காரணமாகிறது.[4] இதுதான் 'கிடைப்பருமையை' ஏற்படுத்துகிறது. வழக்காற்றில் உள்ள சொல் இதுவானாலும் நாம் கொள்ளும் பொருள் வேறு. தேவையத்தனையையும் பூர்த்தி செய்யமுடியாத விநியோகப் பற்றுமை குறிப்பதே இங்கே 'கிடைப்பருமை'ச் சொல்லின் பொருளாகும். மதிப்பு என்பது எதுவானாலும், எப்படிப்பட்டதானாலும் கிடைப்பருமைக் கோட்பாட்டில் உள்ளடங்கும் ஆமைநிலைதான் அதற்குண்டு. பயன் தேவையான சூழ்நிலையை உள்ளடக்கி இருக்கலாம். ஆனால் (மதிப்பு உருவாக) அது காரணமாகாது.[5] கிடைப்பருமைபற்றி வால்ரஸ் இவ்வளவு விளக்கிச் சொல்லியானபின் நயமுடன் ஒன்றினை நல்குகிறார். அரசியல் பொருளாதாரத்தை 'செல்வாதார' இயல் என்று சொல்ல அஞ்சி, சிலர் போதாமை இயல் என அழைக்கக்கூடும் என்பதுதான் அது.[6]

[1] De la Nature de la Richesse, பக்கங்கள் 18–19.
[2] அதே ஏடு, பக்கம் 21
[3] அதே ஏடு, பக்கங்கள் 37–38
[4] அதே ஏடு, பக்கம் 41
[5] அதே ஏடு, பக்கம் 44
[6] அதே ஏடு, பக்கம் 81

மற்றைய விளக்கத்திற்குச் செல்வோம். உற்பத்திச் செலவுக் கோட்பாட்டின் எடுகோள் இதுவென வால்ரஸ் சுட்டிக் காட்டுகிறார். எல்லா மதிப்புடையனவும் செய்பொருள்கள் ஆகும். எந்தப் பொருளின் மதிப்பும், அந்தப் பொருள் செய்யச் செலவிட்ட காலம், உழைப்பைப் பொறுத்ததாகும். அதைப் போன்றே உற்பத்தித்துறையின் பொருள்கள் அத்தகையையும் உழைப்பில் விளக்கலாம். இக்கருத்து எல்லாவற்றையும் விளக்கிவிட்டதாகக் கொள்ளமுடியாது. 'உற்பத்திப் பொருள்களின் மதிப்பு' பொருள் உற்பத்தித் துறைகளின் மதிப்பைப் பொறுத்திருக்கிறது. காரணம், பொருள் உற்பத்தித் துறைகளுக்கு மதிப்பு இருப்பதால் அதன் பொருள்களுக்கும் மதிப்பு இருக்கிறது. நமக்குத் தெரியவேண்டியது எதுவென்றால், உற்பத்தித் துறைகள் ஏன் மதிப்புப் பெற்றிருக்கின்றன? அவ்வாறானால், உற்பத்தித் துறைகள் என்பது வெறும் உழைப்புத்தான் என்றால், ஏன் உழைப்பு மதிப்புப் பெறக் கூடாது?[1] இந்தக் கடைசிக் கேள்வியை ஆடம் ஸ்மித் நினைத்துப் பார்க்கக்கூடவில்லை என்று வால்ரஸ் சொல்கிறார்.

உழைப்பின் மதிப்பு 'கிடைப்பருமை'யினால் ஏற்பட்டது என்பதை நிரூபிப்பது கடினம். அது வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்திருக்கும் இற்றை நாட்களில் ஒப்புக்கொண்டாலும், இதைப்போன்றே அமைந்திருந்த வால்ரஸ் காலத்தில் இக்கருத்து நிறைக்கு நிற்காது. சுமக்கமுடியாததைச் சுமந்துசென்று படுகுழியில் விழ இருந்த வால்ரஸ், காலத்தின் தலையில் சுமையைப் போட்டுவிட்டுத் தப்பப்பார்க்கிறார். 'காலமும் சூழ்நிலையும் கைகூடாமல் எந்தப் பணியையும் செய்யமுடியாது. காலங்கருதி இடத்தால் செய்யின் ஞாலமும் கைகூடும். காலமோ வரையறையற்ற பண்டமல்ல. வாழ்வோ, சிறிது நாட்களோ எண்ணிவிடக்கூடியவை. காலம் நமக்குக் கிடைத்தற்கரிய அருஞ்செல்வமாகும். காலத்தோடும் இன்னல் நிறைந்த பொறுப்போடும் 'உழைப்பு' செயல்படுவதால், அது 'மதிப்பு' உடையது என்பது பெறப்படுகிறது.'[2]

அவ்வாறே மற்ற உற்பத்திச் சாதனங்களைப்பற்றியும் கொள்ள வேண்டும். நிலமும் மூலதனமும் அதுபோன்றே வரையறுக்கப் பட்டது. ஆகவே, இரண்டும் மதிப்புடையன. அவைகளின் பணிகளுக்கும் ஒரு விலை மதிப்பு உண்டு. அந்த விலை மதிப்பு அவைகளின் வரையறை அல்லது கிடைப்பருமையால் இயற்கையாக ஏற்படும் விளைவேயாகும்.[3] இக்கொள்கை 'காசல்' உடைய

[1] அதே ஏடு, பக்கம் 166.
[2] அதே ஏடு, பக்கம் 167
[3] அதே ஏடு, பக்கம் 177.

கிடைப்பருமைக் கோட்பாட்டுடன் ஒட்டுறவு கொண்டாடு வதைக் காணலாம். தேவை அளிப்புக் கோட்பாடுதான், தாம் தந்த கொள்கையில் மாற்றுருக்கொண்டு விளங்குகிறதென வால்ரஸ் வாதாடுகிறார். ஏனெனில், உற்பத்தியின் அளவோ அல்லது மொத்தமோ அளிப்பு ஆகிறது. திருப்தி அளிக்கிற அவ சியத் தேவைகளின் கூட்டுமொத்தமே 'தேவை' என்றுகிறது. இவை இரண்டிற்குமிடையிலுள்ள தொடர்பே 'கிடைப்பருமை' யாகும். இதன் அடிப்படையை நோக்குமிடத்து, ஒரு பொருள் தேவைதான் என்றுயின், அதன் அளவு வரையறையுடையதாக இருக்கவேண்டும். ஒரு பொருள் எரிக்கப்பட்டுத்தான் ஆக வேண்டுமென்றல் அதுவும் அவ்வாறே 'கிடைப்பருமையை' அனுமானித்துக் கொள்வதாலேயே மார்க்கெட் இயங்குகிறது.

ஆஸ்திரியக் கருத்தமைப்பில் முக்கிய இடத்தைப் பிடித்த மதிப்புக் கொள்கையின் ஒரு போக்கை விளக்குவதில் வால்ரஸ் விடாக்கண்டராக இருக்கிறார். அதில் அவர் ஆற்றலின்மையும் தெரிந்துவிடுகிறது. கிடைப்பருமைக் கருத்தை அவரால் ஐயந்திரி பற விளக்கமுடியவில்லை. நாளும் வளரும் 'கிடைப்பருமை'க்கும் மதிப்பிற்கும் உள்ள தொடர்பு குறித்து அறியாமல் வீழிக்கிறார். பொருளுக்கும் பொருள் தேவைக்குமுள்ள ஒத்துவராத வீதா சாரத்தைக் 'கிடைப்பருமை'யின் விளக்கமென எண்ணி இடர்ப் படுகிறார். பல்வேறு நிலையுள்ள 'கிடைப்பருமை' மதிப்போடு கொண்ட தொடர்பென்ன என்ற கேள்விக்கு மௌனத்தை மேற் கொள்கின்றார்.

கோஷன்

மேற்கண்ட தொடர்பற்ற விளக்கங்களை விட்டுவிட்டு, இறுதி நிலைக் கோட்பாட்டைக் காரண காரியங்களோடு ஒழுங்காக விளக்கியவர் யாரெனில், அவர்தாம் ஹெர்மன் ஹென்ரிக் கோஷன்[1] (Hermann Heinrich Gossen, 1810—1858) ஆவார். 1854-ல் அவர் வெளியிட்ட மிகச் சிறப்புக்குரிய நூலில்[2] இவ்விளக்கம் உள்ளது. பொருளாதார இலக்கியத்தி லேயே இப்புத்தகம் வெளிவந்த வரலாறு வியப்புக்கும் விந்தைக் கும் உரியது. அச்சேறிய இவ்வேட்டினை வாங்குவார் யாருமின்றி

[1] டியூரனில் (Duren) 1810-ல் பிறந்தார். சிறப்பின்றி அரசாங்கப் பணியி லிருந்தார். 1847-ல் ஓய்வுகொண்டார். தமது புத்தகம் எழுதுவதில் முழு ஆர்வம் செலுத்தினார்.

[2] (ஜெர்மன் மொழியில் உள்ளது) பெர்லினில் பிரேகர் வெளியிட்ட சமீபகால நூலின் குறிப்பில் காணலாம்.

அடுக்கப்பட்டிருந்தது. அந்த, விற்கப்படாத ஏடுகளே (அநேகமாக வெளியிடப்பட்ட அத்தனை நூல்களையும்) ஏக்கமும் ஏமாற்றமும் அடைந்த ஆசிரியர் 1858-ல் சாவதற்குக் கொஞ்சக் காலத்திற்கு முன்னால் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. 'காட்ஸ்' எழுதிய நூலின் அடிக்குறிப்பில் இந்நூலின் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. ஒரு தலைமுறைக்குப் பின்னால் வந்த பொருளாதார வாதிகள் அடிக்குறிப்பைக் கண்டு, வேட்டை நாய்போல் அடிச்சுவட்டைத் தேடி அலைந்து இப்புத்தகத்தைக் கண்டு அறிவித்தனர். அப்பொழுதிருந்து அதன் மறு பதிப்புக்கள் பல வெளிவந்துள்ளன. ஆனால், அதன் இருநூற்று எழுபத்தேழு பக்கங்களைத் தன்னறிவோடு படித்தவர்களிலே எத்தனை பேர் உருப்படியான பலனைப் பெற்றார்கள் என்பது கேள்விக்குரியதாகும்.

படித்துத் தீரவேண்டிய அவசியமற்ற புத்தகங்கள் பல உண்டு. அவற்றில் ஒன்று கோஷன் புத்தகம். ஏடு முழுவதும் ஒரே கணக்குமயம். எண்களும் குறியீடுகளும் முட்செடிகள் போல் பக்கத்திற்குப் பக்கம் மலிந்திருக்கின்றன. அதிலும் ஒரு ஒழுங்கில்லை. அதைப் படிப்பவன் எவனும் தன்மீது கொட்டும் தேனீக்களை ஆசிரியர் விரட்டிவிடுகிறார் என்ற எண்ணத்திலிருந்து தப்பமுடியாது. 1854-ல் புத்தக மதிப்புரை செய்வோர். கோஷனது ஏட்டை 'கிடைக்கப் பெற்றன' என்ற தலைப்பில் வெளியிட்டு வஞ்சம் தீர்த்துக்கொண்டிருப்பரேல் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதுவரை ஒப்புக்கொள்ளப்பட்ட பல்வேறு கோட்பாடுகளின் அடிப்படையில், மனித சமுதாயச் செயல் தொடர்புச் சட்டங்கள்[1] (The Laws of Human Intercourse) என்ற கோஷன் புத்தகத்தைப் பார்ப்போமானால் அது ஒரு சிறந்த புத்தகம் என்பது தெரியவரும். பயன் கோட்பாட்டு அடிப்படையிலேயே அவர் செல்கிறார். வாழ்க்கையின் இலட்சியம் வாழ்வில் எவ்வளவு இன்பங்களை அனுபவிக்க முடியுமோ அவ்வளவையும் அனுபவிப்பதுதான். இதில் அவர் பென்தாமையே (Benthame) தோற்கடித்து விடுகிறார். இன்பக் கேளிக்கையில் ஒருசிறிதும் துன்பமின்றி ஈடுபடுவது கடினம். இன்பத்தைத் தொடர்ந்து பல்வேறு விளைவுகள், ஏமாற்றங்கள் ஏற்படும்; இன்பம் துன்பமாகவும் முடியலாம். ஆகவே, மனிதன் தன் நடவடிக்கைகளின்மூலம் அதிகபட்ச இன்பத்தைப் பெற முயலுதல் வேண்டும். இதுவோ, ஆண்டவனின் செயல் என கோஷன் அங்கலாய்க்கிறார்.[1]

[1] Entwicklung der Gesetze des menschlichen Verkehrs, பக்கம் 3.

நம்முடைய இன்பங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தைத் தேடும்போது ஆண்டவனின் திருவுள்ளப்படியே எல்லாம் நடைபெறும் என்பதை அறிகிறோம். இன்பங்களோ இருவகைப்படுகின்றன. முதலாவது இன்பங்களின் வளர்ச்சியோ ஒரு கட்டத்தில் திருப்தி காரணமாகத் தெவிட்டுவதால் தடைபடுகிறது. ஒரேவித இன்பங்களைத் திரும்பத் திரும்பப் பெறுவோமாயின் இன்ப மகிழ்ச்சி குறைந்துவிடுகிறது. இதில் முதலில் திருப்தி குறைவது மாத்திரமல்ல. அதனுடைய நேரமும் குறைந்துவிடுகிறது. இந்த இரண்டுவிதக் குறைவும் மிகவும் குறிப்பிடத்தக்க முறையில் நிகழ்கிறது. திரும்பப் பெறுதல் எவ்வளவு வேகமாக நடைபெறுகிறதோ, அவ்வளவு வேகமாகக் குறைகிறது. வழக்கமான இரண்டு உதாரணங்களைக் கோஷன் தருகிறார். முதல் முறை சுவைக்கும்போது மிகமிக நன்றாக இருக்கிறது. இரண்டாம்முறை அதைவிடச் சுவையில் சிறிது குறைகிறது. மூன்றாம் முறை மிக அதிகமாகக் குறைகிறது. இரண்டாவது கோட்பாடு விளக்கப்பட்டிருக்கின்ற உதாரணமும் இதுதான். வாரத்தின் ஒவ்வொரு நாளும் வறுக்கப்பட்ட இறைச்சியைப் பெறுகின்ற செல்வனைவிட ஞாயிற்றுக்கிழமை ஒருநாள்மட்டும் அந்த உணவைப் பெறுகின்ற ஏழை அடைகின்ற திருப்தி மிக அதிகமாகும்.

இன்பங்கள் பற்றிய ஆராய்வின்மூலம் கோஷன் மூன்று அடிப்படைக் கோட்பாடுகளைத் தருகிறார். அவை அவருடைய மகிழ்ச்சியும் துன்பமும் பற்றிய தத்துவத்தை விளக்குவனவாம். சிறிது சுருக்கமாயினும் சாரம் இதுதான் :

1. ஒவ்வோர் இன்பத்திலும் இன்ப நுகர்ச்சி முறை ஒன்று இருக்கிறது. அது திரும்பப் பெறுகின்ற அளவின் வேகத்தில் அமைந்துகிடக்கிறது. அது அதன் கூட்டுத் தொகையை உச்சகட்டத்திற்குக் கொண்டுசெல்வதாகும். இந்த உச்சகட்டம் அடையப் பெற்றவுடன் மறுமுறை பெறுவதன் அளவு வேகம் அதிகமாவதாலோ, குறைவதாலோ மொத்த இன்பமும் குறையும்.

2. பல்வேறு இன்பங்களுக்கிடையே தேர்ந்தெடுக்கும் வழி இருப்பினும், எல்லாவற்றையும் முழுதும் இன்ப நுகர்ச்சி கொள்ளப் போதுமான நேரம் இல்லாதபோது, இதிலுள்ள இன்பங்களிலேயே உயர்ந்தது வீணுகிப் போய்விடுவதற்கு முன்னால், எல்லாவற்றையும் பகுதி பகுதியாக இன்பம் துய்த்தால்தான் உச்ச இன்பத்தைப் பெறமுடியும். இன்ப நுகர்ச்சியை நிறுத்தும்போது, ஒவ்வொன்றிலிருந்தும் கிடைக்கப்பெற்ற இன்பம் சமமாக இருத்தல் வேண்டும்.

3. மூன்றுவதாக, ஒருவிதமாக ஒரு புதிய இன்பம் (எவ்வளவுதான் சிறியதாயினும்) கண்டுபிடிக்கப்பட்ட போதெல்லாம் அல்லது உள்ள இன்பம் விரிவாக்கப்பட்ட போதெல்லால் இன்பங்களின் கூட்டுத் தொகையை அதிகரிக்க வழி இருக்கிறது என்று தெரிகிறது. புதிய மகிழ்ச்சி ஒன்றைக் கண்டுபிடிப்பவன் பாராட்டுதலுக்குரிய வன் ஆவான்.[1]

கோஷனுடைய மதிப்புக் கோட்பாட்டுடன் குறைவுத் திருப்திக் கோட்பாடு இறுகப் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கிறது. பொருளாதாரக் கோட்பாட்டில் உள்ள குழப்பம் மதிப்புப்பற்றிய பல்வேறு கருத்துகளிலுலேயே ஊற்றெடுத்துப் பெருகியதாகும் என்று அவர் வாதிக்கிறார். 'கலப்பற்ற மதிப்புப்பற்றிய கட்டுக் கதை'யைப் போன்று வேறு எதுவும் பரிதாபத்துக்குரிய முடிவு களுக்குக் கொண்டுசெல்லவில்லை. இந்த வெளி உலகத்தில் கலப்படமற்ற மதிப்புடையதாக எதுவும் இல்லாதது மாபெரும் உண்மையாகும். வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு எவ்வளவு உதவுகிறதோ அந்த அளவுதான் புறப்பொருள்கள் நம்மைப் பொறுத்தவரையில் மதிப்புடையனவா கும். பயன்பாடுபற்றிய மொழியில் கூறவேண்டுமானுல், ஒரு பொருள் எந்த அளவிற்கு மகிழ்ச்சியையோ திருப்தியையோ அளிக்கிறதோ அதுதான் அந்தப் பொருளினுடைய மதிப்பின் அளவாகும். இதன்மீதுதான் இறுதிநிலைக் கோட்பாட்டை இயற் றுகிறார். நுகர்விற்குரிய பண்டத்தின் தனித்தனிக் 'கூறுகளும்' (Atoms) வெவ்வேறுவித மதிப்புகளை உடையனவாகும். மேலும், எவனுக்கும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை உள்ள கூறுகள்தாம் மதிப்புடையனவாயிருக்கின்றன. இதற்குமேல் அதிகமாயின் அது மதிப்பற்றதாகிவிடுகிறது. பல்வேறு விதமான அளவுகளுக் கிடையில் அது மாறிமாறிச் சென்ற பிறகுதான் இந்தத் தொடர்ந்து வரும் கூறுகள் மதிப்புள்ள நிலைமையிலிருந்து மதிப்பற்ற நிலைமையை அடைகின்றன. முதற்கூறு மிக அதிக மதிப்புடை யது; அதிகரிக்கும் ஒவ்வொரு கூற்றின் மதிப்பும் குறைந்து கொண்டே சென்று, ஒரு துளியும் மதிப்பில்லாத நிலை உருவாகி விடுகின்றது.[2]

மென்ஜர் பிற்காலத்தில் உருவாக்கி வளர்த்த முறைக்கு உதவியாகக் கோஷன் மதிப்புப்பற்றிய ஆய்வில் பண்டங்களைத் தரவாரியாகப் பிரித்தார். மதிப்பை நிருணயிக்கும் பிரச்சினையில்

[1] அதே ஏடு, பக்கங்கள் 11, 12, 21, [2] அதே ஏடு, பக்கங்கள் 31, 33.

வகைப்படுத்தும் முறையை அவர் கையாண்ட விதம், அவரை, வொய்சரின் தூண்டிலில் சிக்கிய மீனாக ஆக்கிற்று. பண்டங்களை அவர் மூன்று வகையாகப் பிரிக்கிறார். முதலாவது நுகர்ச்சிப் பண்டங்கள் (Genussmittel), இதற்கும் மேற்பட்டவைதாம் இரண்டாவது மூன்றாவது வகைப்பண்டங்கள் ஆகும். இரண்டாவது வகைப்பண்டங்கள் குறை நிரப்பும் இணை நிறைவுப் பொருளாகும். புகைபிடிக்கும் குழாயும் புகையிலையும், அடுப்பும் நிலக்கரியும், வண்டியும் குதிரையும் முதலியவையாகும். இவை மூன்றாவது வகை உற்பத்திப் பண்டங்களைச் சார்ந்தனவாகும். இவைகள் நுகர்ச்சிப் பண்டங்களைத் தயாரிக்கும் பொருள்களாகும். இரண்டாவது மூன்றாவது வகைப்பண்டங்களின் மதிப்புப் பற்றி விவாதிக்கும்போது, இவற்றைக் கோஷன் பகுதி பகுதிகளாகப் பிரித்துக் காண்கிறார். ஆனால், வொய்சர் இதில் மகிழ்வுடன் ஈடுபட்டதுபோல இவர் தம்மை முழுதும் ஈடுபடுத்திக்கொள்ளவில்லை. குறை நிரப்புப் பொருள்களைப் பொறுத்தவரையில் திருப்திபெற ஒரு வழி வகுக்கின்ற காரணத்தால் மதிப்பு ஏற்றிச் சொல்லப்படவேண்டியுள்ளது. மதிப்பு எவ்வாறு சாட்டப்படுகிறது என்று நிருணயிப்பது மிகக்கடினமாகும். பண்டங்களின் ஒன்றிணைந்த மதிப்பு, அவைகள் ஒன்றிணைவதால் கிடைக்கும் திருப்தியைப் பொறுத்ததாகும். இதற்கு மேலும் கூர்மையாகக் கணக்கிடல் இயலாது. ஏனெனில், பொருள்கள் ஒன்றிணையும் போதுதான் அவைகளுக்குரிய மதிப்பு உருவாகும். 'இழந்த பகுதிகளை (அலகுகளை) மீட்கும் நிலை இருந்தால்தான்' தனிப் பண்டங்களுக்கு மதிப்பு ஏற்படும். மூன்றாவது வகைப் பண்டங்களைப் பொறுத்தவரையில் மதிப்புத் 'தீர்வுகாண' வேண்டிய ஒன்றாகும். நுகர்ச்சிப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் துணையாக இருக்கும்வரையில்தான் அவற்றின் மதிப்பு ஏற்றிக் கூறப்படும். அவைகளை உற்பத்தி செய்ய அவைகள் தரும் உதவியைப் பொறுத்துத்தான் அவைகள் மதிப்பு உயரும். இங்கே கோஷன் 'zuschreiben' என்ற வார்த்தையையும், வொய்சர் 'zurechnen' என்ற சொல்லையும் பயன்படுத்துவதைத்தவிர, மற்றவையெல்லாம் வொய்சரின் உற்பத்தி பற்றிய கருத்தாகும்.

மற்ற இரண்டு வகையில் கோஷனுடைய எதிர்காலம்பற்றிய முன்கருத்துக் குறிப்பிடத்தக்கதாகும். அவருடைய நீண்ட விசித்திரமான வேலையைப்பற்றிய கோட்பாடு நம்மை அணுவசியமாக இங்கு நிறுத்தத் தேவையில்லை. ஆனால், 'வேலை' என்பதற்கு 'இடையூறு' என்று கொண்ட கொள்கையும், இடையூற்றைப் பயன்பாடு கொண்டு சமமாக தாக்கித் தகர்க்கவேண்டும்

என்பதும் வெளிப்படை. எதிர்மறை சமநிலை ஏற்படுகிற வரையில் வேலை நீடிக்கப்படுதல் வேண்டும். வேலையென்பது திருப்தியான நிறைவு ஏற்படுவதற்குச் செய்யப்படும் ஒன்றாகும். அஃதாவது, மதிப்புடைய ஒன்றை உருவாக்க வேலைமூலம் வாழ்க்கையின் இன்பங்களின் கூட்டுமொத்தத்தை உருவாக்கச் செய்யப்படுவதாகும். இது வேலையால் ஏற்படும் இடையூற்றை விட, வேலையின் முடிவில் கிடைக்கும் திருப்தி நிறைவு அதிகமாக இருக்கும்வரையில் நடைபெறும்.[1]

இவ்வாறே, பரிமாற்றத்தைப் பொறுத்தவரையிலும்—பரிமாற்றம் இலாபத்தோடு நடைபெறுகிற நிலைமைக்கு—சமன்பாட்டு இறுதிநிலைக் கோட்பாட்டையும், இறுதிநிலை இயந்திரத்தையும் பயன்படுத்துகிறார். ஒருவனுக்கு அவன் விரும்பும் பொருளின் கடைசிக் கூறு சமமதிப்பு உடையதாய் இருக்கிறவரையில் பரிமாற்றம் பயனுடையதாய் இருக்கும்.[2] மேற்கண்ட விளக்கங்களைக் கொண்டு, நீண்டகாலம் அலட்சியத்திற்குள்ளான கோஷனின் நூற்களில் ஆஸ்திரியக் கருத்துப் பள்ளியினரின் முறையும், வகையும், சாரமும் அடங்கிக் கிடக்கிறது என்று சொல்லின் அது மிகையாகாது.

ஜெவான்ஸ்

வில்லியம் ஸ்டான்லி ஜெவான்ஸ்[3] (William Stanley Jevons, 1835 — 1882) ஆஸ்திரியப் பள்ளிக் கருத்துகளை உருவாக்கிய அதே காலத்தில் அதனோடு இணைந்ததும் தனியானதுமான பல கருத்துகளை விளக்கினர். அன்னார் விளக்கிய கருத்துகள் ஆஸ்திரியப் பள்ளி உருவாக்கிய அடிப்படைக் கருத்துகளோடு முற்றும் ஒன்றுபட்டுக் காணப்பட்டன. இக் காரணத்தாலேயே ஜெவான்ஸ் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். இதனால் அவரை இறுதிநிலைக் கோட்பாட்டிற்கு[4] வித்திட்டவர்களில் ஒருவராகவும் கருத இடமுண்டு. மென்ஜர் எழுதிய

[1] அதே ஏடு, பக்கம் 38.

[2] ஜெவான்ஸ் 1835-ல் லிவர்பூலில் (Liverpool) பிறந்தார். ஆஸ்திரேலியப் பணச்சாலையில் சிலகாலம் பணியாற்றினார். 1866-1875-ல் மான்செஸ்டரில் ஓவன்சு கல்லூரியில் தர்க்க, மனோதத்துவ, ஒழுக்க இயல் பேராசிரியராகவும், அரசியல் பொருளாதார விரிவுரையாளராகவும், 1875-1880-ல் லண்டனில் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

[3] ஆஸ்திரியக் கருத்துப்பள்ளியை திறுவியவர்களில் அதைச் சாராதவர்களில் ஒருவர் லியோன் வால்ரஸ் ஆவார். (அவர் அகஸ்டஸ் வால்ரஸ் மகனுவார்). அவரைத் தனியே காண்பதுதான் நல்லது. அவருடைய புத்தகம் 'Elements d' Economie politique Pure' 1874-ல் வெளிவந்தது. ஆகவே, அவர் மென்ஜருக்கும் ஜெவான்சுக்கும் பிற்பட்டவர் ஆவார்.

[4] அதே ஏடு, பக்கம் 84.

'Grundsatze' நூல் வெளிவந்த அதே ஆண்டில் (1871) ஜெவான்ஸ் எழுதிய 'அரசியல் பொருளாதாரத்தின் கோட்பாடு (Theory of Political Economy) என்ற நூலும் வெளிவந்தது. சாதாரணமாகக் கோட்பாடுகளின் அதிகாரபூர்வமான எழுத்தாளர்கள் அரசியல் பொருளாதாரத்தினைக் குறித்து எழுதுகையில் அதன்மீது மிகுந்த தன்னிச்சையாக மேலாதிக்கத்தைச் செலுத்துவதுண்டு. இத்தகைய அபரிமிதமான அதிகாரம் அஞ்சுதற்குரியதாகும். ஜெவான்ஸின் மேற்குறிப்பிட்ட பொருளாதார நூலில் தொடக்கம் முதல் இறுதிவரை அவரிடம் அச்சமும் அடக்கமும் ஊடுருவி நிற்கக் காண்கிறோம். அவருடைய நூலில் அறிவுமிக்க தலைவர்களுக்கு எதிராக ஒரு சிறிதளவு எதிர்ப்புணர்ச்சியையும் காணமுடியவில்லை. முறைகளைப் பொறுத்தமட்டில், அவர் கணக்கியல் முறையில் பொருளாதாரம் சிறக்க வேண்டும் என்பதில் உறுதிப்பாட்டுடனே நின்றார். 'பொருளாதாரம், அதுவும் ஒரு விஞ்ஞானமாகக் கருதப்படின் நிச்சயமாக அது கணக்கியல் விஞ்ஞானமாகவே இருத்தல் வேண்டும்'[1] ஏனெனில், அளவில் பெரியதும் சிறியதுமான பொருள்களின் அளவுகள் குறித்து அது ஆராய்வதால், அது ஒரு கணக்கியல் விஞ்ஞானமாகவே இருத்தல் வேண்டும். வகையீட்டு நுண்கணிதத்தைப் (differential calculus) பயன்படுத்தாத உண்மையான அரசியல் பொருளாதாரக் கோட்பாடு எதுவும் இருக்கமுடியாது. சிறந்த பயன்பாட்டுக் கோட்பாடுகளை ஒப்புக்கொண்டால் அரசியல் பொருளாதாரம் என்பது துன்பங்களையும் மகிழ்ச்சிகளையும் நுண்கணிப்புச் செய்கின்ற ஒன்றாக ஆகிறது. ஜெவான்சுக்கு இவ்வாறு மகிழ்ச்சியையும் துன்பத்தையும் கோடிட்டு அளவு காண்பதில் ஏதேனும் ஐயம் வருமாயின், தனி மனிதனது மூளை துலாக்கோல்போல் இவைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் திறனுடையது என்று எண்ணி மகிழ்கிறார். நம்மால் மதிப்பீடு செய்ய முடியவில்லை என்றாலும் ஒப்பிட்டுப் பார்க்க இயலும்; ஏனெனில், இன்பங்கள் என்பன மனிதன் மதிப்பிடுவதைப் பொறுத்தே அமைவதாகும்.[2] உடனடிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அளந்து பார்ப்பதை விட ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் அவசியமானதாகும்.

ஜெவான்சுடைய முதன்மையான கோட்பாடு அவரே தம் புத்தகத்தின் முதற்பகுதியில் அறைகூவல் விடுவதுபோல் வெளியிட்டிருக்கிற 'பயன்பாடு மீதே முழு மதிப்புச் சார்ந்திருக்கிறது' என்ற புத்தம் புதிய கொள்கை[3] என்று அவரே அழைப்ப

[1] Theory of Political Economy, அரசியற் பொருளாதாரக் கோட்பாடு, பக்கம் 3.

[2] அதே ஏடு, பக்கம் 10.

[3] அதே ஏடு, பக்கம் 2.

தாகும். 'நம்மிடத்தில் உள்ள பண்டங்களின் அளவைக் கொண்டு' பயன்பாடு வேறுபடுவதன் இயற்கையான விதிகளை ஆய்ந்துகொள்வதன்மூலம் (தேவை, அளிப்பு விதிகளின் விளைவாகவும்) திருப்தியான பரிமாற்றக் கோட்பாடு ஒன்றை அடைவது இயல்வதாகும் என்று அவர் கூறிக்கொள்கிறார். இதுதான் கோஷனுடைய கருத்தின் கருவும், இறுதிநிலைக் கருத்துப்பள்ளியின் இதயமுமாகும். பயன்பாடு என்பது உள்ளிட்ட தன்மையுடையதன்று. 'மனிதனுடைய தேவைகளுக்கு அவைகள் கொண்டுள்ள தொடர்பும் சூழ்நிலையுமே' பயன்பாடாகிறது. ஆகவே, அது தன்னகத்தே கொண்டுள்ள பருப்பொருளே. யாருமறிந்த உதாரணமான தண்ணீரை எடுத்துக்கொண்டால், ''தண்ணீர் ஓரளவுவரையில் மிக மிகத் தேவையாகும். அதன் பின் கிடைக்கின்ற அளவுகள் பல்வேறு விதமான பயன்பாடுகள் உடையன. ஓரளவுக்கு மேல் 'பயன்பாடு' எதுவுமின்றி நீன்றுவிடுகிறது.'' அதே கோட்பாடு பொதுப்படக் கூறப்படுமாயின், ஒரே பண்டம், நாம் அதற்கு முன்பு அப்பண்டத்தை அதிகமாகவோ குறைவாகவோ கொண்டிருப்பதன்மூலம் அதன் பயன்பாடு வேறுபடுகிறது.

இவ்வாறு ஜெவான்ஸ் யாருமறிந்த வகைவுக் கோடுகளின் உதவியுடன் விளக்கியுள்ளார். மொத்தப் பயன்பாடு அளந்தறிய முடியாத அளவுக்கு மிகப் பெரியதாகும். உயிர்வாழ்வைக் காப்பாற்றவேண்டிய அவசியம் ஏற்படும்போது மொத்தப் பயன்பாடு அளவிடற்கரியதாகும். ஒரு தனிப் பகுதியின் பயன்பாடு அதன் அளிப்பு அதிகரிக்க வல்லதாயின் மிகமிகக் குறைந்துவிடும். அந்தக் கடைசிப் பகுதியின் பயன்பாட்டை ஜெவான்ஸ் 'பயன்பாட்டின் முடிந்த அளவு' என்று அழைக்கிறார். கடந்தகாலத்தில் இதுபற்றிய குழப்பம் நிறைய இருந்தது. அதன் காரணம் மொத்தப் பயன்பாட்டிற்கும், முடிவு அளவு உள்ள பயன்பாட்டிற்கும் உள்ள வேறுபாட்டை அறியாததுதான். பண்டத்தின் மொத்தப் பயன்பாடு என்பது மிகமிக உயர்ந்தது. 'பயன்பாட்டின் முடிவு அளவு' என்பது அளவிடற்கரிய முறையில் குவிந்துகிடக்கின்ற காரணத்தால் அதைப் பூஜ்ய நிலைக்கும் குறைக்கலாம்.[1] இரும்பும் பொன்னும், நீரும் எண்ணெயும் போன்ற ஒப்புமை காட்டப்படுகின்ற உதாரணங்கள் எல்லாம் 'மதிப்பு' என்ற வார்த்தையைப் பெரிய குழப்பத்தில் ஆழ்த்துகின்றன. தண்ணீரைப்பற்றி நாம் உபயோக மதிப்பு மாத்திரம் எண்ணிப் பேசுவோமாயின் அதனுடைய மதிப்பு

[1] அதே ஏடு, பக்கங்கள் 58-61.

அளவிடற்கரியதாகும்; ஆசிமொழிக்கு எதிராகச் சொட்டுச் சொட்டாக நீரின் பரிமாற்ற மதிப்பை நிறுத்தெடுப்போமாயின், நீர் ஒரு சிறிதும் மதிப்பற்றதாகக் காணப்படும். நமக்கு மொத்தப் பயன்பாட்டிற்கும், முடிவு அளவு பயன்பாட்டிற்கும் இடையே குழப்பம் இருக்கும் காரணத்தால் அது மயக்கம் தருவதாகக் கூறுகிறார் ஜெவான்ஸ்.

இங்கேதான் 'பொருளாதாரப் பிரச்சினைகள் அனைத்தும் மிக முக்கியமானதாக' ஜெவான்ஸுக்குத் தோன்றுகிறது. அஃதாவது, 'கடைசி அளவுப் பயன்பாடு என்பது பண்டங்களின் அளவோடு மாறுகிறது. பண்டங்களின் அளவு அதிகரிக்கும்போது பயன் பாடு குறைந்துவிடுகின்றது.' இதே கோட்பாடு பல்வேறு உபயோகத்திற்கு ஒரு பண்டத்தைப் பயன்படுத்தும்போதும் ஏற்படுவதாக ஜெவான்ஸ் கருதுகிறார்: இது தொன்மைக் கருத்தாயினும் ஆஸ்திரியப் பள்ளியின் கருத்தாகவும் கொள்ளப் பட்டிருக்கிறது. பார்லியை பீர் செய்வதற்கும், சாராயத்திற்கும், ரொட்டிக்கும், கால்நடைகளின் உணவாகவும், மற்றப் பல்வேறு வகைகளிலும் பயன்படுத்தலாம். பயன்பாட்டுக் கோட்பாடு கூறுவதாவது, கடைசி அளவுப் பயன்பாடு பல்வேறு வகைகளில் உபயோகிக்கப்படும்போது சமமாக இருக்குமாறு பல்வேறு உபயோகங்களை அமைத்தல் வேண்டும்.[1]

இந்தக் 'குறைந்துசெல் பயன்பாட்டுக் கோட்பாட்டினைக் கொண்டு ஜெவான்ஸ் பரிமாற்றக் கொள்கையினை உருவாக்கு கிறார். 'மதிப்பு' என்ற சொல் பல்வேறு குழப்பங்களுக்கும் காரணமாக இருப்பதால் அதைத் தள்ளிவிட்டுப் 'பரிமாற்ற வீதம்' என்ற சொல்லைப் பயன்படுத்த விரும்புகின்றார். பழக்க வழக்கத்தின் முன்னால் இக்கருத்து எடுபடாமல் போயிற்று. இந்த 'ஆபத்தமான சொற்றொடரில்' ஒரு பண்டத்தின் மதிப்பைக் கூறவேண்டுமாயின் அதை மொத்தப் பயன்பாட்டின்மூலம் கூற இயலாது; ஆனால், அதை நமது தேவையின் அளவைப் பொறுத்தே கூறவேண்டும். இன்னும் சுருக்கமாகக் கூறின், 'பரிமாற்ற மதிப்பைப் போக்கும் மதிப்பு' என்று கூறவேண்டும். மேலும், பரிமாற்றக் கோட்பாட்டைப் பார்ப்போமாயின் பரிமாற்றத்தின் விளைவு எல்லாப் பண்டங்களும் ஒரே அளவுப் பயன்பாட்டில் மூழ்கவேண்டியது இருக்கும். கடைசி அளவுப் பயன்பாட்டு அளவே எல்லாப் பயன்பாடுகளுக்கும் அமையும்.

[1] அதே நூல், பக்கங்கள் 68-70.

உழைப்பினுல்தான் மதிப்பு உருவாகிறது, அல்லது மதிப்பு உழைப்பின் விகிதாசார அளவு அமைகிறது, என்ற எதிர்க் கருத்தை 'ஒரு வினுடிகூட நிற்க முடியாத ஒன்று'[1] என்று எடுத் தெறிகிருர். ஒருமுறை செலவழிக்கப்பட்ட உழைப்பானது எந்தப் பண்டத்தினுடையவும் எதிர்கால மதிப்பை நிருணயிக்கமுடியாது. இவ்வுலகத்தில் இழந்தவைகள் இழந்தவைகள்தாம்.[2] உழைப்பின் மதிப்பு உற்பத்தியின் மதிப்பால் நிருணயிக்கப்படுகிறது என்று அவர் சொன்னுலும், உழைப்பினுல் உற்பத்தியின் மதிப்பு நிருண யிக்கப்படவில்லே என்றே அவர் மொழிந்தார். உழைப்பு மதிப்பின் காரணமாக இருக்கமுடியாது என்ருலும், மதிப்பை நிருணயிக்கும் சூழ்நிலேயாக இருக்க முடியும். தம்முடைய கோட்பாட்டிற்குத் துணேயாக அதிகமாகவோ, குறைவாகவோ உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களேப் பொறுத்தவரையில் அதே அளவு உழைப்பால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் அளவோடுதான் (விகிதாசாரத்தோடுதான்) பரிமாற்றம் நடை பெறும். இந்த வழியில் ஜெவான்ஸுடைய கருத்தைப் பார்ப்போ மாயின், அது உழைப்பு மதிப்புக் கோட்பாட்டின் தவருே, அல்லது உண்மைக்கு விரோதமானதோ என்பதல்ல ; ஆனுல், அது அறைகூவுகின்ற உண்மைக்குத் தவருன காரணத்தைக் கற்பித்ததாகும். முந்திய கருத்தினரிடமிருந்து இவரைப் பிரித்துப் பார்த்தால், ஜெவான்ஸும் வியான்வால்ரசும் (நம்முடைய வணக்கத்திற்குரியவர்கள்) ஆஸ்திரியக் கருத்துப் பள்ளியின் வட்டத்திற்கு உட்படாத விஷயங்களே நிலேநிறுத்தியவர்கள் என்று கொள்ளலாம். இவர்கள் இப்போது ஓரளவுக்குக் கவனிக் கத்தக்கவர்களாவார்கள். இந்தக் குழுவின் தன்னிகரற்ற தலேவர்கள் மென்ஜர், வான்ஒய்சர், போம்-பாவர்க் ஆகியோரும் மற்றும் பின்பற்றுவோர்களில் தலேசிறந்து விளங்குபவர் என்ற சொல்லுக்கு அருகதையுடையவரான 'சாக்சு'ம் ஆவர்.

மென்ஜர்

இவர்களில் காரல் மென்ஜர் (Karl Menger)[3] என்பவர் இந் நாட்டில் மிகக் குறைவாகத் தெரிந்தவராயினும், காலத்தால் முந்தியவர் ஆவார். பொருளாதார இலக்கிய சம்பந்தமாக மிகக்

[1] அதே ஏடு, பக்கம் 157. [2] அதே ஏடு, பக்கம் 159.

[3] காலிசியாவில் நியூசாண்டசு (Neu Sandez in Galicia) என்ற ஊரில் 1840–ல் பிறந்தார். பிரேகு, வியன்னு, கிராகௌ ஆகிய இடங்களில் பயின்ற மாணவர் ; 1873-ல் வியன்னுவில் பொருளாதாரப் பேராசிரியராக இருந்தார். ஆஸ்திரிய நாட்டு இளவரசரின் ஆசிரியர். கல்வித் துறைப் பணியினின்றும் இறுதியாக 1903ஆம் ஆண்டு ஓய்வு பெற்ருர். ஆஸ்திரிய மேற்சபை வாழ்நாள் உறுப்பினராகவும் 1900ஆம் ஆண்டில் நியமனமானுர்.

குறைந்த அளவே எழுதியிருப்பவராயினும், இக்குழுவில் அவர் எப்படியோ அதிகச் செல்வாக்குள்ளவராகத் திகழ்ந்தார். 1871-ல் வெளியான அவருடைய 'Grundsatze der Volkswirthschaftslehre' என்ற நூல் உண்மையில் அந்தப் பள்ளியைத் துவக்கக் காரணமாயிருந்தது. விஸ்னக்கும் பயனுக்கும் உள்ள பொதுத் தன்மையை மென்ஜர் துணிச்சலுடன் வலியுறுத்தத் துவக்குகிறார். மற்ற ஒவ்வொன்றையும் போலவே தேவையினால் ஏற்படும் இன்மைநிலையில் இருந்து போதிய தேவை திருப்திசெய்யப்பட்ட நிலைக்கு மாறிய மாற்றம் காரணகாரியத் தொடர்பின் பயனாக ஏற்படுகிறது. இங்கே அவருடைய பாகுபாட்டின் திறன் தெற்றென விளங்குகிறது. அவைகள் காரணகாரியத் தொடர்பில் மனித தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய திறனுடைய வைகள் 'பயன்பாடுகள்' என்று அழைக்கப்படுகின்றன. இவ்வாறு அவைகளை இந்தத் தொடர்பில் இருத்திவைக்கும் சக்தி நமக்கு இருக்குமாயின், அவைகள் 'பொருள்கள்'[1] என்று அழைக்கப்படும்.

ஒரு பொருள் பண்டமாக இருப்பதற்கு நான்கு நிபந்தனைகள் பொருந்தி வரவேண்டும். முதலாவது மனிதனுக்குத் தேவை என்று ஒன்று இருக்கவேண்டும். அந்தப் பொருள் விருப்பங்களைப் பூர்த்திசெய்யும் குணங்களை உடையதாகவும் இருக்க வேண்டும். இத்தகைய காரணத் தொடர்புகள் அங்கீகரிக்கப் படுதல் வேண்டும். கடைசியாக விருப்பத்தைத் திருப்தி செய்யும் வகையில் பொருள்களை விற்பனைசெய்யும் சக்தியும் இருக்க வேண்டும். இவையெல்லாம் முக்கியமானவை. இந்நான்கில் ஏதாவது ஒன்று குறைந்தால் அந்தப் பொருள் பண்டமென்ற தகுதியை இழந்துவிடுகின்றது. இது மிகவும் புரியாத ஒன்று போல் தோன்றுகிறது; ஆனால், இது விவாதத்தைத் தொடர்வதற்கு மிகவும் பயன்படும் முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

அவ்வாருனால், தேவைகளைப் பூர்த்தி செய்வதென்பது முதன்மையானதொன்றுகிறது. மென்ஜரைப் பொறுத்தவரையில் அதுவே முதல் அடிப்படைக் கருத்தாகத் தோன்றுகிறது. தேவைகளைப் பூர்த்திசெய்ய ரொட்டிபோல் உபயோகப்படக் கூடிய பொருள்களும் இருக்கின்றன. அவற்றை அவர் 'முதல் வகைப் பொருள்கள்' என்கிறார். ஆனால், இவற்றிற்கு அப்பாலும் 'பொருள்கள்' என்று அழைக்கத்தக்க வகையில் பல இருக்கின்றன. ஆனால், அவைகள் அவ்வாறு இருந்தபோதிலும்

[1] Grundsatze, பக்கங்கள் 1-2.

விருப்பங்களை உடனடியாகப் பூர்த்திசெய்யத்தக்கனவாய் காரண காரியத் தொடர்போடு இருக்கவில்லை. பயன்படுகின்ற பொருள்களை உற்பத்தி செய்வதே அவைகளின் வேலையாகும். இந்தப் பொருள்கள் இரண்டாம் வகையைச் சார்ந்தவை. இவைகள் முதல் வகைப் பொருள்களை உற்பத்தி செய்யும் இடைநிலைப் பொருள் ஏதுமின்றி நேரிடையாக நம்முடைய விருப்பங்களைப் பூர்த்தி செய்கின்றன. இவற்றிற்கும் அப்பால் மூன்றும் வகைப் பொருள்கள் இருக்கின்றன. அவைகள் இரண்டாம் வகையை உற்பத்தி செய்கின்றன. இவ்வாறே மனிதனுடைய மதிநுட்பம் செல்லும் வரையில் செல்லலாம். ரொட்டிக்கு முன்னுல் மாவு; மாவுக்கு முன்னுல் தானியம்; தானியத்திற்கு முன்னுல் விளைநிலமும் ஏர்க்கலப்பையும்; ஏர்க்கலப்பைக்கு முன்னுல் இரும்பும் இருக்கின்றன. இவ்வாறு இருக்குமாயின், ஒரு பொருள் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் காரண காரியத் தொடர்போடு அமைந்திருக்கவேண்டும்; இது நேரிடைத் தொடர்பாக இருக்க வேண்டுமென்பதில்லை.[1] மென்ஜர் பண்டங்களின் வகை பற்றிய கோட்பாட்டை, இறுதிநிலைக் கோட்பாட்டின் ஆதாரத்தை மறைத்துவிடுவதற்கு ஒரு வகையில் முயற்சி செய்கிறார். தாழ்ந்தவகைப் பொருள்களை உற்பத்தி செய்ய உயர்ந்தவகைப் பொருள்கள் பலவற்றின் ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது. ரொட்டி தயாரிக்க மாவும் கறவைப்பாலும் இருந்தால் மட்டும் போதாது; நீரும், ரொட்டி சுடுவோரின் உபகரணங்களும், எரிபொருளும், மற்றும் வேறு என்ன என்ன தேவை என்பதையும் ரொட்டி சுடுவோன்தான் அறிவான். இவையெல்லாம் நிரப்புப் பொருள்களாகும். இவற்றைப் பொறுத்தவரையில் மென்ஜர் இரண்டு கருத்துரைகளைத் தந்துள்ளார்; அவைகள் முக்கியமானவையும், உண்மையாக இருக்கக்கூடியவையும் ஆகும். முதலாவது உயர்ந்தவகைப் பொருள்கள்; அவைகள் தம்மோடு தொடர்புடைய நிரப்புப் பொருள்களை நீக்கிவிட்டால் பொருள்கள் என்ற ஒரு நிலைமையையே உடைத்தாயிருக்கின்றன. ஆயினும், உற்பத்திக்குத் துணைசெய்யும் வகையில் உள்ள மற்றப் பொருள்களைப் பொறுத்தவரையிலும் இதே குணத்தையே அவைகளும் கொண்டு இலங்குகின்றன. இவ்வாறு புகையிலை விளைவு முழுதும் அழிந்தவுடன் புகைக்கும் குழாய்கள் பொருள்கள் என்ற நிலையை இழந்துவிடுகின்றன. ஆயினும், அவைகள் சோப்புக் குமிழிகளை உற்பத்தி செய்யும் வேலையைப் பொறுத்துப் பொருள்களாகக் கருதப்படலாம். இரண்டாவது கருத்துரை எதுவெனின், தாழ்ந்த வகைப் பொருள்கள் தம் தன்மையை இழக்காமல் இருந்தால்தான்

[1] அதே ஏடு, பக்கம் 3.

அவைகளை உற்பத்தி செய்யும் பொருள்கள் பொருள்களாகக் கருதப்படும். கோல்ப் விளையாட்டு நாகரிகமற்றுப்போய்விடின், கோல்ப் கழகங்கள் பயனற்றுப்போய்விடுவது மாத்திரமல்ல, கோல்ப் கழகத்திற்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்கின்ற தனித்திறமை பெற்ற சிறப்புக்குரிய இயந்திரங்கள் எல்லாங்கூடப் பொருள்கள் என்ற நிலையை இழக்கின்றன.[1]

மென்ஜர் எந்த நிலையை நோக்கிச் செல்லுகிறார் என்பதைப் பார்ப்போம். நுகர்வோனுக்குரிய மிக அருகிலுள்ள பண்டங்களே, அஃதாவது, முதல்வகைப் பண்டங்களே தீர்மானிக்கும் இடத்தைப் பெற்றிருக்கின்றன. மற்றவைகளெல்லாம் இதிலிருந்தே தமது முக்கியத்துவத்தைப் பெறுகின்றன; இவைகளில்தான் அவைகளுடைய எண்பிக்கும் நிலை உள்ளது. தாழ்ந்தவகைப் பொருள்களினுல் அவை மதிக்கப்படும்வரையில்தான் பொருள்களாக உயிர்வாழமுடியும்.

இரண்டாவது சிறப்புக் கருத்தாக மென்ஜர் கருதுவதாவது, பொருளியல் சார்புடைப் பண்டங்கள், பொருளியல் சாராப் பண்டங்கள் ஆகிய இவற்றிற்கு இடையிலுள்ள வேறுபாடும், அதிலிருந்து பெறுகின்ற கருத்துகளும் ஆகும். உயர்ந்த வகைப் பொருள்களிலிருந்து தாழ்ந்தவகைப் பொருள்கள் செய்யக் காலம் தேவைப்படுகின்றது. பொருளாதாரக் கோட்பாடுகளின் படி வாழ்க்கையை அமைத்துக்கொண்ட மனிதன் கிடைக்கின்ற பொருள்களின் அளவுக்கேற்ப விருப்பங்களைச் சரிசெய்வதோடு எதிர்காலத்தையும் எண்ணியுள்ளான். இதிலிருந்து மூன்று நிலைகள் எழலாம். விருப்பம் அல்லது தேவை அளிப்பைவிட அதிகமாகவன்றிக் குறைவாக அல்லது சமமாக இருக்கலாம். முதலாவது நிலை முக்கியமானது ஆகும். இந்நிலை உருவாகும் போது இதற்கு முன்னுல் சரியான முறையிலுள்ள தேவையைத் திருப்திசெய்யாமல் விட்டுவிடுவோமானுல், அளிப்பின் எந்தப் பகுதியையும் திரும்பப்பெற இயலாது.

இதனுல் பல்வேறு பின்விளைவுகள் ஏற்படுகின்றன. உடைமையாளன் தொடர்ந்து திருப்தியளித்துவருகிற மிக முக்கியமான தேவைகளிலிருந்து, திருப்தியில்லாமல் விடப்படுகின்ற நிலையில் அலட்சியத்திற்குரிய, அவசரப்படாமல் உள்ள தேவைக்கும் இடையில் தேர்ந்தெடுக்க வேண்டும். வேறு விதத்தில் சொல்லவேண்டுமாயின், அளிப்பினுல் கிடைக்கின்ற

[1] அதே ஏடு, பக்கங்கள் 11, 17.

பொருள்களை உபயோகப்படுத்திக்கொள்ளும் வகையில் அவன் திட்டமிட்டுக்கொள்ளவேண்டும். இதுதான் பொருளாதாரத்தின் பொருளாகும். இவைகள்தாம் பொருளாதாரப் பண்டங்களாகும்.[1] பொருளாதாரப் பண்டங்கள் எவையெனில் அளிப்புப் போதுமானதாக இல்லாத காரணத்தால் நாம் சிக்கனம் செய்ய வேண்டியிருக்கின்ற பொருள்கள் எவையோ அவைகள்தாம். சில காரியங்களுக்கு அவைகளைப் பயன்படுத்துவது குறித்தும், வேறு சிலவற்றிற்குப் பயன்படுத்தாமல் இருப்பதைக் குறித்தும் நாம் முடிவு செய்யவேண்டும். பொருள் இயல்பில்லாப் பண்டங்களைப் பொறுத்தவரை வேறு வகையில் தேவைக்குமேல் அளிப்பு இருக்குமாயின், அதனுடைய பயன்களை வரிசையாக உபயோகக் குறைவு நோக்கி எழுதுவதோ, அல்லது கிடைக்கின்ற அளிப்பைத் திறமையான முறையில் பயன்படுத்துவதற்குத் திட்டமிடுவதோ இயலாததாகும்.

இதிலிருந்து ஒரு பொருளின் பொருள்வயநிலையும், பொருள் இயல்பற்ற நிலையும் உள்ளிட்டிருக்கிற மாற்றமுடியாத அமைப்பு அல்ல என்று தெரிகிறது. விருப்பமோ, தேவையோ கிடைக்கின்ற அளவே இவைகளுக்கிடையேயுள்ள விகிதாசாரத்தான் அதனைத் தருகிறது. சுருக்கமாகக் கூறின், இது அகஸ்டஸ் வால்ரஸின் 'கிடைப்பருமையை'க் ('rarete') காட்டுவதாகும். இவ்வாருக இந்த விகிதாசாரத்தில் ஏற்படும் மாறுபாடு காரணமாகப் பொருள்கள் ஒரு வகுப்பிலிருந்து மற்றொன்றிற்கு மாறக் கூடும் என்று தெரிகிறது. மக்கள் தொகை அதிகரிப்பு, விருப்பங்களின் வளர்ச்சி, தங்கள் நலத்திற்கு எது தேவையென்று அறிந்துகொள்ளும் அறிவில் மனித முன்னேற்றம் இவையெல்லாம் அல்லது இவைகளின் ஏதாவதொன்று பொருளின் குணத்தை மாற்றி அமைக்கலாம்.[2]

இக் கருவிகள் நம்மிடம் இருப்பதால் மதிப்புக் கருத்தை நாம் இப்போது சந்திக்கலாம். 'பொருள் வயப்பட்ட பண்டங்கள்' என்ற தன்மையைச் சில குறிப்பிட்ட பண்டங்களுக்குத் தருவதற்கான காரணங்களே மதிப்பு எழுவதற்குரிய காரணங்களுமாகும். அது விருப்பங்களுக்கும் அளிப்புக்கும் உள்ள தொடர்பிலிருந்து வருகிறது. பொருள்வயப் பண்டங்களின் அளிப்பின் குறைவு விருப்பத்தைப் பூர்த்திசெய்யமுடியாத நிலைமைக்கு இட்டுச் செல்கின்றது; அல்லது ஒரு விருப்பம் முன்னதைவிடக் குறைவாகவே திருப்திசெய்யப்படுகிறது. பொதுவாகக் கூறுவோ

[1] அதே ஏடு, பக்கங்கள் 52-53.

[2] அதே ஏடு, பக்கம் 62.

மாயின், நம்முடைய தேவைகளின் திருப்திக்காக, அவைகளின் அளிப்புக்காக நாம் காத்திருக்கிறோம் என்பது, நாம் அவைபற்றிக் கொண்டிருக்கின்ற முக்கியத்துவத்தைக் காட்டுவதாகும். ஆகவே, மதிப்பென்பது மனம் செய்கின்ற முடிவாகும்; அது தனித்தன்மை வாய்ந்ததோ அன்றி உள்ளிட்ட பொருள்தன்மை யினால் ஏற்படுவதோ அல்ல.[1]

பல்வேறு தேவைகள் பல்வேறு முக்கியத்துவத்தை உடையன. சில உயிர்வாழ்வைப் பாதுகாப்பன. சில வசதிகளை அளிப்பன. சில வெறும் போகப்பொருள்கள் ஆவன. அப்படி யிருப்பினும், அடிப்படையானவற்றை எடுத்துக்கொள்வோ மாயின், உணவு விருப்பத்தைத் திருப்திசெய்ய நடைபெறும் உருப்படியான செயல்களின் முக்கியத்துவம் எவ்வளவோ ஒன்றுக்கொன்று வேறுபடுகிறது. ஓரளவு வரையில் அது உயிரைக் காக்கிறது. அதன்பின் வெறும் மகிழ்ச்சிக்குக் காரண மாகிறது. மேலும், தொடர்ந்தால் (தீமை தீர்க்க தரிசனம்!) துன்பம் தருவதோடு உடலாரோக்கியத்திற்கும் உயிர்வாழ் விற்கும் உலைவைத்துவிடுகிறது. யாரும் அறிந்த இந்த விளக்கம் தரப்பட்டதன் நோக்கம் பல்வேறுபட்ட தேவைகளின் முக்கியத் துவத்தின் அளவை விவரிப்பதற்குத்தான். புகையிலையின் தேவையைவிட ரொட்டியின் தேவை முக்கியமான பணியைப் பூர்த்திசெய்கிறது. குறைந்தது அது உயர்ந்த முக்கியத்துவத் தோடு தொடங்குகிறது. ஆனால், புகையிலையின் முதல் நிலைத் திருப்திகளைவிட ரொட்டியின் கடைசி நிலைத் திருப்திகள் குறை வானவையாகவே இருக்கின்றன. குறிப்பிட்ட நேரம் சாப்பிட்ட பின் பொருளாதாரப்படி புகைப்பது புத்திசாலித்தனமே.[2]

எவ்வாறாயினும் மதிப்பு நிருணயிப்பதைப்பற்றிய குறிக்கோள் பற்றி ஆராய்வோமாயின் அது மிகவும் சிக்கலானது என்பது தெரியும். ஏனெனில், பல்வேறு கோணங்களில் செலுத்தப்பட்ட பல்வேறு பகுதிகள் உள்ள பண்டத்தின் ஓர் அளவு வைக்கப் படுமாயின் அவைகள் முற்றிலும் வெவ்வேறான திருப்திகளைத் தான் அளிக்கும். மென்ஜர் இதற்கு ஒரு குடியானவனை உதார ணமாகத் தருகிறார். அக்குடியானவன் போதுமான அளவு தானிய அளிப்பை வைத்துக்கொண்டு அறுவடைக்குப் பின்னால் பல்வேறு பகுதிகளாகப் பிரித்து மனத்திற்குள்ளே பல்வேறு காரியங்களுக்கு ஒதுக்குகிறான். இது முதலாவது தன்னுடைய குடும்பத்தினர் உயிர்வாழ்வுக்காக சேமித்துவைத்தல், அடுத்த

[1] அதே நூல், பக்கங்கள் 78-86. [2] அதே நூல், பக்கம் 91

ஆண்டிற்காக விதையைச் சேமித்து வைத்தல், பீரும் பிராந்தியும் செய்யப் பயன்படுத்தல்; கடைசியாக மென்ஜர் மகிழ்ச்சியோடு சொல்கிற 'luxus-thieren'-உல்லாச விருப்பத்திற்கும் அளித்தல் என்பதில் முடிகிறது.[1] இதைவிட எல்லாரும் அறிந்த உதாரணம் இராபின்சன் குரூசோ, அவனுடைய ஆள் பிரைடே, அவனுடைய நாய், அவனுடைய புரு இவைகளைச் சூழ்ந்துள்ள மாற்றங்களாகும். இந்தச் சூழ்நிலைகளில் ஓர் அலகாக நாம் எடுத்துக் கொள்கிற தானியத்தின் அளவிற்குரிய மதிப்பென்ன? இதற்குப் பதில் மற்றொரு கேள்வி கேட்பதில் அடங்கியிருக்கிறது. கேள்விக்குரிய கடைசிப் பகுதியை இழப்பதாலோ அல்லது அழிந்துபோய்விடுமானாலோ, எந்த விருப்பம் திருப்தியுறுமல் தங்கும்?[2] மேற்கண்ட நிலைகளில் குடியானவன் ஆடம்பரப் பொருள்களை ஒதுக்கிவிடுவான். இராபின்சன் குரூசோ தன் புருவின் கழுத்தை நெரித்துவிடுவான். முன்னியதைப்போலவே மற்றத் தேவைகளெல்லாம் திருப்திசெய்யப்படும். மேலும், அப் பண்டத்தின் எல்லாப் பகுதிகளும் ஒரே அளவில் மாற்றத்தக்கனவாய் இருக்கின்ற காரணத்தால், ஒரே மதிப்பு உடையனவாக இருத்தல் வேண்டும். எந்த மூட்டைத் தானியமும் கடைசிப் பகுதியாக இருக்கலாம். ஆடம்பர வாழ்வால் தரும் மகிழ்ச்சி ஓரளவு தானியத்தின் அளவால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது மென்ஜர் மேற்கண்ட போக்காகும். இதன்மூலம் மதிப்பு நிருணயிக்கப்படுவதைப் பெறுகிறோம். பண்டங்களின் எந்தப் பகுதியின் மதிப்பும் அளிப்பு இருக்கும்போது அந்தப் பகுதி மிகக் குறைந்த உபயோகத்தில் இருப்பதைக் காட்டுகிறது.[3]

நுகர்வோரோடு நேரடியாகத் தொடர்புள்ள பண்டங்களைப் பொறுத்தவரையில் (முதல் வகைப் பண்டங்கள்) மதிப்பு நிருணயிப்பு ஒரு பிரச்சினையாகும். ஏனெனில், அது பலவற்றை உட்கொண்டிருக்கிறது. முன் சொன்ன பாராவின் கருத்தை வேறு உருவில் தெரிவிப்பதாயின், அளிப்பு வெட்டப்படும்போது எது முதலிலே தியாகம் செய்யவேண்டும் என்று நிருணயிப்பதன் மூலம் மதிப்புக் கணக்கிடப்படுகிறது. அளிப்பை மேலும் மேலும் குறைப்பதன்மூலம் மதிப்பை உயர்த்தலாம். குரூசோ தன்னுடைய ஆறு பை தானியங்களைக்கொண்டு புருக்களோடு பேசுவதன்மூலம் தான் பெறுகின்ற மகிழ்ச்சியைக் கணக்கிடுகிறான். எலிகள் ஒரு பை தானியத்தைத் தின்றவுடன் அவன்

[1] அதே ஏடு, பக்கம் 96.

[2] அதே ஏடு, பக்கம் 99. அவருடைய வார்த்தைகளிலே தரவேண்டுமாயின் அது மிக நீளமானது. மென்ஜருடைய வாக்கியங்களையும் பாராக்களையும் (அவற்றின் வேறுபாட்டை) கண்டுபிடிப்பது கடினம். வெடிமருந்துகள்தாம் அவர் வாக்கியங்களை உடைக்க முடியும்.

[3] அதே ஏடு, பக்கம் 98.

உணவுப் பொருள் மிகவும் குறைந்துவிடுகிறமையால் புருவை நெருப்புக்கணப்பில் இருக்கும் தட்டில் வறுத்து உண்ண விரும்பு கிறான். ஒவ்வொரு பை தானியமும் ஒரு நாயின் மதிப்பைப் பெறு கிறது. இவ்வாறுக நிலைமைகள் வளர வளர அங்கே ஒரே ஒரு ஆள்தான் மிச்சமாக இருக்கிறார். அவர்தாம் குரூசோவுக்கு மிகுந்த மதிப்பைத் தருகின்ற இராபின்சன் ஆவார்.

உயர்வகைப் பண்டங்களுக்கு நாம் வரும்போது பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாகிறோம். எவ்வளவோ முயன்றும் அறிவுத் திறனையெல்லாம் பயன்படுத்தியும் ஆஸ்திரியப் பள்ளியினர் திருப்தியான முறையில் முடிவு காண முடியவில்லை. உற்பத்திப் பொருளோடு மதிப்பைச் சேர்க்கின்ற தவருன உற்பத்திச் செலவுக் கோட்பாட்டிற்கு எதிராக ஆஸ்திரியக் கருத்தினர் மதிப்பைத் திரும்பப் பெறுகின்ற ஒன்றுகக் கூறியுள்ளனர். ஏனெனில், மதிப்போடு கூடிய பண்டங்கள் உற்பத்தியில் நுகரப்படுவதும், செலவழிக்கப்படுவதும் காண்கிறோம். இவ்வாறுகத் தாழ்ந்த வகையைச் சார்ந்த பண்டங்கள், உயர்ந்தவகையைச் சார்ந்த பண்டங்களிடம் முன்பே அமைந்துகிடப்பதாகக் கொள்ளப்படு கின்றன. மென்ஜர் கூறுவதுபோல், 'உயர்ந்தவகைப் பண்டங் களின் மதிப்பு விதிவிலக்கின்றி அனைத்தும் தாழ்ந்தவகைப் பண்டங்களை உற்பத்தி செய்யவேண்டியிருப்பதனால், அவற்றிற்கு அடிமைப்பட்டுத் துணையாக இருக்கவேண்டியிருக்கிறது.[1] காலத்தின் கூறு தலையிட்டால் மேலும் சிக்கல் அதிகமாகிறது. அதனால் உயர்ந்தவகைப் பொருள்களின் மதிப்பு இன்றைய தினம் அவைகள் உற்பத்தி செய்கின்ற பண்டங்களின் உயர்ந்த மதிப்பைக் காட்டுகிறது.[2]

உயர்ந்தவகைப் பண்டங்கள் ஒவ்வொன்றும் உற்பத்தி செய்த பொருளின் மதிப்பில் எவ்வளவு பெறுகிறது என்று நிருண யிப்பது அவ்வளவு எளிதல்ல. நிச்சயமாக மென்ஜர் காட்டும் வழி ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. அதிலே உள்ள சிக்கல்கள் பளிச்செனத் தெரிகின்றன. ஒவ்வொரு பொருளும் பல்வேறு வகை உயர்ந்த பெரிய பொருள்களின் (கூட்டு முயற்சியால் உற் பத்தியாகின்றன. அவ்வாறு உற்பத்தியாகின்ற) ஒவ்வொரு பொரு ளும் முக்கியமானதாக இருக்க முடியாது. நிலம், ஏரு, விவசாயக் கருவிகள், உழைப்பு இவை போன்ற பலவும் ஒன்றுசேர்ந்து தான் தானியம் உற்பத்தி செய்யப்படுகிறது.[3] எருவைப் பயன்

[1] அதே ஏடு, பக்கம் 124.
[2] அதே ஏடு, பக்கம் 138.
[3] அதே ஏடு, பக்கம் 139.

படுத்துவது அளிப்பை அதிகரிக்கும் என்றாலும், எரு இல்லாமல் தானியக் கதிர் விளையாமலே போய்விடாது. எரு இன்மை உழைப்பை வேறுபல வழிகளில் அதிகரிப்பதன் மூலம் சரிப்படுத்திக்கொள்ளக்கூடியதொன்றாகும். மேலும், நிரப்புப் பண்டங்களைப் பொறுத்தவரையில் பல சிக்கல்கள் உள்ளன. ஒரு கூட்டு உற்பத்தியில் ஒருவிதமான பண்டத்தை உற்பத்தி செய்கின்ற அது, முற்றிலும் வேறுபட்ட வேறு ஒரு கூட்டில் முற்றிலும் வேறுபட்ட தாழ்ந்தவகைப் பொருளையே உற்பத்தி செய்யும். பல்வேறுவிதமான விவசாயப் பொருள்கள் வெவ்வேறு விதமான மதிப்புடையனவாக இருக்கின்றன. இத்தகைய நிலையற்ற நிலையில் தானியத்தின் மதிப்பிலிருந்து எரு எவ்வளவு மதிப்பைப் பெறுவதற்கு நாம் அனுமதிக்க முடியும்? அது உற்பத்தி செய்கின்ற பொருள் தருகின்ற திருப்திக்கு உயர்ந்த வகைப் பொருளின் மதிப்புச் சமமாக முடியாது என்று மென்ஜர் கூறுவது சரியே. உயர்ந்தவகைப் பண்டத்தின் மதிப்பென்பது ஒரு குழுவிலிருந்து அந்தப் பொருளை விலக்கி எடுத்துவிடுவதனால் ஏற்படுகின்ற இழப்பிற்கும், அது விலகாமல் இருப்பதனால் ஏற்படுகின்ற பயனுக்கும் உள்ள வித்தியாசமேயாகும்.[1] இது எப்படி இருப்பினும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. நிலத்தை அழிப்பதாலோ, அல்லது ஒதுக்கிவிடுவதாலோ விவசாயத்திற்கு ஏற்படுகின்ற பேரிழப்பைக் கணக்கிடக் கூட்டல் கணக்குத் தேவையில்லை. ஆகவே, மென்ஜருடைய கோட்பாடுகளின்படி உற்பத்தியின் முழுமதிப்பும் நிலத்திற்கே உரியதாக வேண்டும். ஆயினும், விவசாயக் கருவிகள், எரு இவைகளினால் கிடைக்கின்ற பலனை மறுத்துவிடல் இயலாது. ஆகவே, சாதாரண மனிதனுக்கும் மென்ஜருடைய கருத்துகள் புரியக் கூடியவையே. உயர்ந்தவகைப் பண்டங்கள் இயற்கையாகப் பெற்றுள்ள மதிப்பைவிடத் தாழ்ந்தவகைப் பண்டங்கள் செயற்கைக்கூட்டால் பெறுகின்ற மதிப்பு அதிகமாகும். மென்ஜர் இதைவிடச் சிறிய விவாதத்தின் மூலம் இதே கேட்பாட்டைக் கூலித் தொகை நிருணயிப்பதற்குப் பயன்படுத்துகிறார். ஆகவே, ஒரு குறிப்பிட்ட நிலையில் உழைப்பின் மதிப்பு, அவ்வுழைப்புப் பின் வாங்கப்பட்டதால் ஏற்படுகின்ற இழப்பிற்குச் சமமாகும். (நம் முடைய பிரச்சினைகளுக்கு) இறுதியாக மென்ஜர் பொதுக்கோட்பாடுகள் பரிமாற்றத்தைத் தூண்டவும் ஊக்கமூட்டத் தேவையான காரணங்களை ஆராயவும், அவை எவ்வளவுதூரம் பரிமாற்றம் செய்யப்படுவதற்குப் பயன்படும் என்பதை முடிவு செய்யவும் உபயோகிக்கிறார். 'ஆடம் ஸ்மித்' தினுடைய புதுமை

[1] அதே ஏடு, பக்கங்கள் 153–154

வாய்ந்த சொற்றொடரை (Propensity to truck) பண்டமாற்று வாணிபம் செய்வதில் உள்ள பற்றுகை[1] என்பதை உபயோகிக் கிறார். இதன்மூலம் பரிமாற்றம் சாதாரணத் தனிப்பட்ட தூண்டு தலினால் தேவைகளின் முழுத்திருப்திகளை நோக்கி மனிதனைச் செலுத்துகிறது. அ என்பவன் பண்டத்தின் சில அளவுகளை உடையவனாக இருந்தால், இ வைத்திருக்கின்ற பண்டங்களின் சில அளவுகளைவிடக் குறைந்த மதிப்புடையதாகும் (இதனு டைய மாற்றிய நிலைமை மற்றவருக்குப் பயன் தருவதாம்). பரி மாற்றம் இருபாலும் நன்மை பயப்பதாம்; அ வைத்திருக்கின்ற ஆறு பசுக்களும் ஒரு குதிரையும், இ வைத்திருக்கின்ற ஆறு குதிரைகளும் ஒரு பசுவும், அ, இ இருவருடைய நோக்கத்திலும் அதிகப்படியாகின்ற ஒவ்வொரு குதிரையும் பசுவும் குறைந்த (குறைவு) மதிப்புடையதாக இருக்கின்ற காரணத்தால் எந்த அளவில் பரிமாற்றம் செய்துகொள்ளலாம் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். இதை 'பாம்பாவர்க்' மிகச் சிறந்த முறையில் விளக்கியிருக்கின்ற காரணத்தால் இதை இங்கே குறிப்பிட்டாலே போதுமானதாகும்.

மென்ஜரைப்பற்றிச் சொல்லி முடிப்பதற்கு முன்னால் ஒன்று கூறவேண்டும். 'வான்துனன்' தம் நூல்களில் எந்த வார்த் தையை மிக அதிகமாகக் கையாண்டாரோ அச்சொல்லை (இறுதி நிலை) இவர் உபயோகிக்கவேயில்லை. இவர் கடமைப்பட் டிருப்பது வொய்சருக்குத்தான். ஆனால், மென்ஜர் இவரைக் 'குறைந்த அளவே' பயன்பட்டார் என்று கூறுவது நேர்மை யன்று.

வொய்சர்

நாம் இங்கு ஆஸ்திரியப் பள்ளியின் பொதுக் கருத்துகளை மட்டும் பார்ப்பதால் மற்ற மிக முக்கிய உறுப்பினர்கள் வெகு தாராளமாக விலக்கப்படவேண்டும். மென்ஜர் (Menger) கொள்கைகளின் புரந்த போக்கினைத் தந்தார்; மற்றவர்கள் அதனை விரித்து விளக்கினார்கள்; அந்த விளக்கம், அறிவின் ஆற்றலையும் சிறப்பையும் காட்டியது. ஆனால், புதியன ஏதும் கண்டு தரப்படவில்லை. மென்ஜரைப் பின்பற்றிய பிரடரிக் வொன் வெய்சர்[2] (Friedrich VonWieser) முதல் நூல்களிலும்,

[1] அதே ஏடு, பக்கங்கள் 153-154.

[2] இவர் 1851-ல் பிறந்தார். வியன்னாவில் கல்வி பயின்றார்; சிறிது காலம் அரசாங்கப் பணிபுரிந்தார்; பிறகு வியன்னாவிலும் பராகுவிலும் உள்ள பல்கலைக் கழகங்களில் ஆசிரியப் பணிபுரிந்தார். பராகுவில் மென்ஜருக்குப் பிறகு இருந்தார். 1817-ல் வர்த்தகத் துறை அமைச்சரானார். அதன் பின் ஓய்வு பெற்றார். 1926-ல் காலமானார்.

அவருடைய கடைசி நூலான 'இயற்கையின் மதிப்பு' (Natural Value—1889) என்பதிலும் ஆஸ்திரியக் கொள்கையின் சிறப்பான அமிசங்களைத் தந்துள்ளார். கோசென்சின் குறையும் நிறைவு (திருப்தி) விதியைச் சார்ந்து அவர் இறுதிநிலைப் பயன் பாட்டுக் கோட்பாடு பற்றிச் சிறந்த முறையில் சுருக்கமாக விளக்கியுள்ளார். அதற்கு இப்பொழுது சம்மதிக்கப்படுகிற 'கரென்ஸ் னியூட்டுசென்' (Grenznutzen) என்ற பெயரை அவர் தந்தார். அவர் கூற்று கட்டாயமாக உளவியலைச் சார்ந்ததாகும். நம் முடைய முதல் நோக்கம் நிறைவுபடுத்திக்கொள்வதில் உள்ளது; ஆனால், சில விதிகளின்கீழ் முதலாவதாகப் 'பொருள்கள் விநியோகத்தின்' வரையறையும், அந்த விநியோகப் பெருக் கத்தை மாற்றியமைக்கும் சக்தியுமீ தேவைப் பொருள்களின்றும் திருப்தியளிக்கும் பொருளுக்கு எண்ணத்தை மாற்றுகின்றன. இவ்வாருக அது 'மதிப்போடு' (value) சேர்க்கப்படுகிறது. வொய்சரின் உயர்ந்த படைப்பு அப்பள்ளிக்கு அவர் வழங்கிய 'சுரேசனங்' (Zurechnung) கொள்கையிலே இருக்கிறது. அது 'இயல்பு நிலை' (attribution) என்றே, 'சார்பு நிலை' (imputation) என்றே அழைக்கப்படும். அப்பள்ளியின் சிறப்புக்குரிய கொள் கைகளிலே ஒன்று மதிப்பு என்பது முதலாவதாகவும் உறுதியாக வும் முதல்தரப் பொருள்களிடத்தில் அமைந்திருக்கிறது என்பதா கும். அதாவது, நுகர்வாளருக்கு (consumer) உடனடியாக உத வுவதால் அவைகளின் 'இறுதிநிலைப்' பயன் மூலம் (marginal utility) நேரடியாக மதிப்பைப் பெறுகிறது. எல்லா உயர்ந்த பொருள் களிலும் அஃதாவது, உற்பத்திப் பொருள்களிலும் மதிப்பு பிரதி பலிக்கிறது. காலுறையின் மதிப்பால் ஊசி மதிப்பைப் பெறுகிறது; இறுதியாக, உழவு உணவான ரொட்டியிலிருந்து தன் மதிப்பைப் பெறுகிறது. இவ்வாறெல்லாம் இங்குதான் 'சார்பு நிலை' (imputation) எழுகிறது. ஒரு முறையில் உயர்ந்த பொருள்கள் மீது மதிப்பு சாட்டப்பட்டு ஏற்றப்படும் வரையில் அவை மதிப்பைப் பெறுவதில்லை; ஆனால், எந்த அடிப்படையில் மதிப் பின் ஒரு பங்கு உயர்ந்த பொருள்களுக்குக் கொடுக்கப்பட வேண் டும்? வொய்சரின் குறிப்புகளிலே இரண்டு ஈண்டுக் குறிப்பிடத் தக்கன. முதலாவதாக, வொய்சரின் கோட்பாடே சார்பு நிலை அல்லது சாட்டுநிலை முறையின் மீதே முழுதும் சார்ந்திருக்கிறது என்பதை இவண் கூறுவது மிகையன்று. இரண்டாவதாகச் சிறப் பில் மிகமிகக் குறைந்த பொருளின்மீது எவ்வாறு மதிப்புப் பிரதிபலிக்கிறது, 'சாட்டப்படுகிறது' (imputed) என்பதைக் காண வேண்டும். இப்போது ஒன்றை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். தொகுப்பிலிருந்து (combination) பொருள்கள் திரும்பப் பெறும்போது அவைகள் இழக்கும் மதிப்பைக் கொண்டு

தான் மதிப்பின் தரம் நிருணயிக்கப்படவேண்டும். தொடர்ச்சியான அத்தியாயங்களிலே மேன்ஜருக்கு எதிராக வொய்சர் விவாதிக்கிருர். பலதரப்பட்ட பொருள்களின் கூட்டு மொத்தத்திலிருந்து, ஒன்று அகற்றப்படும் பொழுது, மற்றவைகள் அதே நேரத்தில் தம் பலனில் ஒரு பகுதியை இழக்கின்றன. அடுத்தாற்போல் இதைத் தீர்மானிப்பது எதுவெனில், ஒருபொருளின் இழப்பால் ஏற்படும் மதிப்பு இழப்பினுல் அல்ல என்பதே. ஆனுல், இது இருப்பிலே இருப்பதனுல் ஏற்படும் மதிப்பைக் கொண்டே அது தீர்மானிக்கப்படும். வொய்சரின் சொந்த நோக்கம் ஒரு தொடர்ச்சியான சமப்படுத்தும் முறையிலே (method of equation) உற்பத்திப் பங்களிப்பைக் (productive contribution) காண்பதாகும்; இவர் பொருள்களைப் பல்வேறு பட்ட முறையில் கூட்டி முடிவுகாண விழைகிருர்.

பாம்பாவர்க்

உயர்ந்து சிறந்த ஆஸ்திரியக் கருத்தினரில் மூன்ருமவராகத் திகழ்கிற பாம்பாவர்க்[1] (Bohm-Bowerk—1851—1914) இந்நாட்டில் நன்கு அறியப்பட்டவராவர். வட்டி பற்றிய கோட்பாடுகளைக் காரண காரியத்தோடு விளக்கியதாலும், மார்க்ஸீய முறையினை எதிர்த்துத் திறம்பட வாதிட்டதாலும் இவர் சிறப்பான இடத்தைப் பெறுகிருர். நமக்கு உடனடியாகத் தெரிய வேண்டியது யாதெனில், சிந்தனையைத் தூண்டும் அவரின் இரண்டு சிறப்பான நூல்களாகும். நல்ல காலமாக அவைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவை 'மூலதன வட்டி' (Capital Interest), 'மூதனம் பற்றிய இயல்புரைக் கோட்பாடு' (The Positive Theory of Capital) என்பனவாகும். முதலாவது நூல் முந்திய வட்டி பற்றிய எல்லாக் கோட்பாடுகளையும் பற்றி விரிவான திறனுய்வை ஆராய்ந்து தந்துள்ளதாகும். இதனுல் இவரது நூல் பொருளாதாரக் கோட்பாட்டின் வரலாற்றைச் சிறந்த முறையில் நுணுக்கமாக ஆராய்ந்த நூலாகத் திகழ்கிறது. ஆனுல், இந்நூல் குற்றங் குறைகளையே கண்டு பழைய கோட்பாடுகளை அழிக்க முயல்கிறது. இப்புத்தகம் இவ்வாசிரியரின் கருத்துகளை எழுதும் முறையில் வழியமைத்திருந்தாலும்,

[1] 1851-ல் மொரெவியாவில் (Moravia), புரூன் (Brunn) என்னுமிடத்தில் பிறந்தார். வியன்னுவில் கல்வி பயின்ருர். மாட்சிமை தங்கிய பேரரசின் நிதி இலாகாவில் பணிபுரிந்தார். கல்விப் பணிக்குச் சென்று, வியன்னுவில் பேராசிரியரானுர். 1890-ல் நிதி இலாகா அமைச்சரகத்து ஊழியரானுர். 1909 வரை அரசாங்க ஊழியராகவே இருந்தார். அதன்பின் மறுபடியும் வியன்னுவில் பேராசிரியரானுர்.

உண்மையில் அவ்வாசிரியரின் கருத்துரை எதுவுமில்லாமல் முடிந்துவிடுகிறது. இதனுடன் எழுதப்பட்ட நூலான மூலதனம் பற்றிய இயல்புரைக் கோட்பாடுகள் என்பதைப் பார்த்தால்தான் உண்மையில் ஆஸ்திரியக் கோட்பாட்டிற்கு இவ்வாசிரியர் ஆற்றியுள்ள அரும்பணியை அறிதல் முடியும்.

பொதுவான அவரது அறிவுப் பணியைக் காணின், பாம்-பாவர்க் வட்டி பற்றிய விவாதத்தைத் தவிர்த்து மற்றவைகளில் தமது முன்னோடிகளின் (மென்ஜர், வொய்சர்) பாதையையே முழுதும் பின்பற்றியுள்ளார். ஆனால், நம் இப்போதைய பணிக்கு பாம்பாவர்க் தந்த கருத்தின் முழு விவரங்களோ ஆராய்ந்தறிவது அவசியமற்றதேயாகும். ஆயினும், பாம்பாவர்க்கின் கருத்துகளில் அடிக்கடி அனைவராலும் எடுத்தாளப்படும் இரு முக்கியக் கருத்துகளை இங்கே குறிப்பிடுவோம். அவர் கூறும் ஒரு கோட்பாடாவது, 'இறுதிநிலை இணைகள்' (Marginal pairs) பற்றியது ஆகும். இந்த 'இறுதிநிலை இணைக'ளே விலையை நிருணயிப்பதாக அவர் கூறுகிறார். மற்றொரு கோட்பாடு வட்டியைப் பற்றிய அவர் கருத்துகளைச் சார்ந்ததாகும். வட்டியினை அவர் தம்முடைய பெரும்பணியில் இல்லாத ஒரு பாகம் (heavy part) என்றும் குறிப்பிடுகிறார்.

'இறுதிநிலை இணைகள்' என்று அழைக்கப்படுகின்ற கருத்தின் உதவியால், விலையை[1] நிருணயிக்கும் கோட்பாடானது அவரது விவாதத்தின் இறுதிப் பகுதியில் அமைந்துள்ளது. இதில் அவர் தமது சிக்கல் நிறைந்த வாக்கியங்களினால், சிறு பகுதியையும், தெளிந்த உண்மையினையும் திரையிட்டு மறைத்து விடுகிறார். தனிப்பட்ட மாற்றலில்[2] விலையானது, வாங்குபவர் அப்பொருளின் அகப்பொருளின்மீது விருப்பங்கொண்டு மதிப்பிடும் உயர்ந்தபட்ச நிலையினுக்கும், விற்பவர் அப்பொருளின் அகப்பொருள் மதிப்பின் குறைந்தபட்ச நிலையினுக்கும் உள்ள வித்தியாசத்தில் அமைகிறது. அதையே நடைமுறை மொழியில் சொல்வதானால், தனிப்பட்ட பரிமாற்றத்தில் வாங்குபவன் அப்பொருளை எந்த அளவில் மதிப்பிடுகின்றானே, அதற்கு மேல் ஒரு சிறிதும் விலை தரமாட்டன். அதே போல் விற்பவர் தமது பெருளின் மதிப்பு எவ்வளவு பெறும் என்று தீர்மானித்ததற்குக் குறைவாகப் பணம் பெறமாட்டார். ஆகவேதான் இவ்விரண்டு எல்லைகளுக்கும் நடுவே விலையானது தீர்மானிக்கப்படுகிறது. அடுத்து, இவர் ஒரு சார்புடைய போட்டியினை வாங்குவோரிடையே[2] உண்டாக்குகிறார். மறுமுறையும் நமக்குத்

[1] Positive theory of Capital, நூல் IV.
[2] அதே ஏடு, நூல் IV, அதிகாரம் 2.

தெளிவாகும் உண்மை யாதெனில், யார் அதிகப் பணம் கொடுத்துப் பொருளை வாங்குகிறாரோ அவரே அப்பொருளின் உடைமையாளராகிவிடுகிறார். அவரை 'மிகத் திறமையான போட்டியாளர்' என அழைக்கலாம். இவ்விதம் விலையானது வாங்குவோரின் மதிப்பிற்கும் அவரிடம் போட்டியிட்ட ஏனை யோரின் மதிப்பிற்கும் இடையே தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே, இவ்விலை, அவனுடைய மதிப்பீட்டிற்கும் 'எந்த அளவிற்கு விற்பவன் உயர்த்த விரும்புகிறானை அந்த விலைக்கும்' 'மிகத் திறமையான (வெற்றி பெறுத போட்டியாளர்கள் கணக் கிடுகிற) மதிப்பீட்டிற்கும்' இடையில் அமைகிறது. ஏலத்தில் வாங்குபவரே அதிகப் பணம் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். ஆதலின், விலை கூறுபவன் எதிர்பார்க்கும் எல்லையைத் தாண்டி வெகுதூரம் செல்கிறார் இவர். இவை யாவும் உண்மையே. இவற்றினை விளக்க ஆஸ்திரியக் கருத்தினர் எவரும் தேவை யில்லை.

பாம்பாவர்க் இருதலைப்பட்ட போட்டி[1] பற்றிக் குறிப்பிடும் போது, 'இறுதிநிலை இணைகள்' என்னும் சொல் முதன்முதலாக வெளிவருகிறது. இதனைத் தெளிவாக உணர்ந்துகொள்ள இவருடைய உதாரணத்தையே நாம் எடுத்துக்கொள்வோம். ஒரு குதிரை வாங்கப் பத்துப் பேர் ஒரு சந்தைக்கு வருகின்றனர். அங்கு எட்டுப் பேரில் ஒவ்வொருவரும் ஒரு குதிரை விற்க மிக்க ஆவலுடன் நிற்கின்றனர். ஆயின், இங்கு வியக்கத்தக்கது யாதெனில், எட்டுக் குதிரைகளும் மதிப்பில் ஒன்றுடொன்று வேறுபாடின்றி உயர்ந்த குதிரைகளாகவே அமைந்திருக் கின்றன. வாங்க வந்தவர்களுள்ளும், விற்க வந்தவர்களுள்ளும் ஒவ்வொருவரும் எவ்வாறு குதிரைகளை மதிப்பிடலாம் என்று ஒரு கருத்தை மனத்தில் கொண்டவர்களாக இருந்தனர். பாம் பாவர்க்கின் விளக்கத்தில் மதிப்பு பின்வருமாறு அமைந்திருக் கிறது :

[1] அதே நூல், நூல் IV, அதிகாரம் 3.

வாங்குபவர்கள்		விற்பவர்கள்	
குதிரைக்குத் தரும் மதிப்பு		குதிரைக்குத் தரும் மதிப்பு	
$அ_1$	£ 30	$இ_1$	£ 10
(இதற்குக் கீழ் எந்த விலைக்கும் வாங்கத் தயார்)		(இதற்கு மேல் எந்த விலைக்கும் விற்கத் தயார்)	
$அ_2$	28	$இ_2$	11
$அ_3$	26	$இ_3$	15
$அ_4$	24	$இ_4$	17
$அ_5$	22	$இ_5$	20
$அ_6$	21	$இ_6$	21
$அ_7$	20	$இ_7$	25
$அ_8$	18	$இ_8$	26
$அ_9$	17		
$அ_{10}$	15		

இத்தகையதொரு நிலைமையில் நிகழக்கூடியதுதான் என்ன? $அ_1$ என்பவரே குதிரை வாங்க முழுத் தகுதியானவர். அவர்தாம் குதிரை வாங்குபவர். அவருக்கு அத்தகைய வசதி இருக்கிறது. இவர் மற்ற எட்டு விற்பனையாளர்களையும் தங்களுடைய குதிரையைத் தந்துவிடும்படி செய்யத்தக்க விலையைத் தரக்கூடியவர். இவ்வாறே இதே காரணங்களுக்காகவே $இ_1$-ம் தம் குதிரையை விற்கத் தயாராக இருக்கிறார். $அ_1$, $இ_1$ ஆகிய இருவரும் உண்மையில் வியாபாரம் செய்ய முன்வரவே செய்கிறார்கள். ஆனால், தங்களுக்குள் விற்று வாங்கிக் கொள்ள உறுதியாக முடிவு செய்யாமல் இருக்கலாம். இவர்கள் இருவரும் தனியிடத்தில் ஒருவரையொருவர் சந்தித்து வியாபாரம் செய்யும் நிலை நேர்ந்திருந்தால், விலையானது 10 பவுனுக்கு மேற்பட்டும், 30 பவுனுக்கு உட்பட்டும், இவ்விரண்டிற்கும் இடையேதான் தீர்மானிக்கப்பட்டிருக்கும். ஆனால், இவை யாவும் விலையைக் கூறும் திறனைப் பொறுத்து, வியாபாரியும் வாங்குவோரும் கொண்டுள்ள திறன் வேறுபாட்டைப் பொறுத்து அவற்றுக்குத் தக்கவாறு மாறுகின்றன. ஆனால், உண்மையில் நிகழ்வது

[1] அதே ஏடு, நூல் IV, அதிகாரம் 4.

யாதெனில், விலை நிருணயிக்கப்படும் எல்லைக் கோடானது வியாபாரியாலும் வாங்குபவராலும் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுக் குறைந்த அளவிலேயே நிற்கிறது. ஆதலினால் A_2-ம், B_2-ம் மிகவும் தயங்கிய நிலையில் உள்ள விற்பனையாளர், வாங்குபவரைப் பொறுத்தே தங்கள் வியாபாரத்தைச் செய்ய முன்வருகின்றனர். பட்டியலின் கீழே கொடுக்கப்பட்டுள்ளதைக் கவனித்தோமாகில், இறுதியாக வியாபாரம் செய்ய முற்படுபவர்கள் A_5-ம், B_5-ம் தாம் என அறிகிறோம். ஆனால், A_6-ம், B_6-ம் ஒரு துளி தவறி விடுகின்றனர். இவர்களைத்தாம் 'இறுதிநிலை இணைகள்' என்கிறோம். B_1 என்பவர் தம் குதிரையை 10 பவுனுக்கு விற்கத் தீர்மானிக்கிறார். அதனால் இவர் எந்த A-க்கும் விற்கத் தயங்கமாட்டார். அதனால் இறுதியாக வருபவர்கள் போகிறவர்கள் ஆகியவர்களாலேயே விலையின் எல்லைக் கோடானது வரையப்பட்டுத் தீர்மானிக்கப்படுகிறது. விலையானது இந்த 'இறுதி நிலை இணைகளில்' உள்ள மீதிப்பைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. இதில் நமது கவனத்திற்குரியவை அனைத்தும் இறுதிநிலை எண்கள் என்னும் கருத்திலேயே அடங்கி விடுகின்றன. இக்கருத்துப்படி நாம் இரண்டு உண்மைகளைப் பெறுகிறோம். ஒன்று (அங்காடி) மார்க்கெட் விலை யாவும் இறுதி நிலை விலையாகும். இரண்டாவது விலையானது ஒருவரின் அகத்தியல் மதிப்புகளைப் பொறுத்தே அமைகிறது என்னும் கருத்தாகும்.

பாம்பாவர்க்கின் மற்றொரு முக்கியக் குறிப்பிடத்தக்க கருத்து யாதெனில், அவரே தம்முடையதாக்கிக்கொண்ட தனித்தன்மையுடைய 'வட்டி' பற்றிய கொள்கையாகும். இதில் விளக்க வேண்டிய கருத்து ஒன்று உண்டு. அகவியல் நிலைப்படி இன்றைய பொருள்களின் மதிப்பு எதிர்காலத்தில் அதே அளவு எண்ணிக்கையுடைய பொருளைவிட உயர்ந்து காணப்படுவது ஏன் என்பதும், 100 பவுன் என்பது ஓராண்டு ஆனபிறகு 105 பவுனுகிச் சமமாகிறது என்பதை விளக்கும்போது 'வட்டி' எவ்வாறு உருவாகிறது என்பதும் தெரிகின்றன. இப்பிரச்சினை பற்றி மென்ஜரோ அன்றி வொய்சரோ ஒருசிறிதும் திருப்தியளிக்கும் வண்ணம் தெளிவுரை தரவில்லை. ஆனால், பாம்பாவர்க்கின் விளக்கம் உளவியலையே பெரிதும் சார்ந்திருக்கிறது. இவரின் கருத்து நாம் சரியானபடி எதிர்காலத்தைத் தள்ளிவிடுகிறோம் என்பதையே பெரிதும் சார்ந்திருக்கிறது. இதன்படி இதே போக்கில்[1] அவர்மூன்று முக்கியக் கோணங்களில் ஆராய முன்வருகின்றார். முதலாவதாக, நாம் எதிர்காலத்தில் நல்ல நிலைமையில்

[1] 'Positive Theory of Capital' என்ற நூலில் தொடர்பாக விளக்கியுள்ளோம். நூல் V, அதிகாரங்கள்-2, 3, 4.

வாழ்வோம் எனப் பெரிதும் நம்புகிற காரணத்தால், இன்றிருக்கும் ஒரு தொகையானது இப்போது அதிக இறுதிநிலை மதிப்பையும், சிறப்பான எதிர்காலத்தில் இதற்கும் குறைவான மதிப்பையும் தாம் பெறும். இக்கருத்து மிகவும் குழம்பிய நிலையில் பலவிதத் துன்பங்களில் தவிக்கும் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமே. இதேபோல் துன்பப் பாலையில் உழலும் பலருக்கும், எதிர்காலத்தில் நல்ல முறையில் சிறப்பான வாழ்வு பெற விழைவோர்க்கும் பெரிதும் வகை செய்கிறது. ஆனால், இக்கருத்து மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்குப் பொருந்தாது (அஃதாவது 40/80 அளவு பென்ஷன் பெற விழைவோர்). ஆனால், இங்கும் இன்றைய பொருள்கள் நாளைய எதிர்காலத்துப் பொருள்களுடன் ஒரே மதிப்பையாவது பெற்றுவிடும். ஏனெனில், அவைகள் பெற்ற மதிப்பை அவ்வாறே எதிர்காலத்திலும் உடையனவாய் இருக்கின்றன. ஆகவே, அவைகள் பாதுகாப்பு நிதியைப்போன்று அவசர காலத்துக்கு உதவுகின்றன. இதனால் சிலர் இன்றைய பொருளின் மதிப்பை விருப்பம்போல் மிக அதிகமாக உயர்த்துவர். அவர்கள் எதிர்காலத்துப் பண்டத்தின் மதிப்பைவிடச் சிறிது அதிகப்படுத்தியே இதன் மதிப்பைக் கூறுவர். நம்முன் எதிர் காலம் ஏன் மதிப்புக்குறைவாக எண்ணப்படுகிறது என்பதற்கு இதுவே முதற் காரணமாகும். மனித இதயத்திலிருந்து ஊற்றுப் போல் பெருக்கெடுக்கும் நம்பிக்கையானது எதிர்காலம் இப் போதையதைவிடக் குறைவான தொல்லையுடையதாகவே இருக் கும் என்ற உறுதியுடையதாயிருக்கிறது. இது உண்மையாகும்.

இரண்டாவது காரணம் யாதெனில், எதிர்காலத்தின் வழி முறைகள் நன்கு அமைந்திருக்கும் என்று நாம் சற்று மிகையாகக் கருதுவது போலவே, எதிர்காலத் தேவைகள் மிகக் குறைவாக இருக்கும் என்றும் (சற்று அதனைக் குறைத்தே) எண்ணுகிறோம். பல்வேறு காரணங்களால் இது ஒரு சிக்கலாகக் காட்சியளிக் கின்றது. ஏனெனில், நம்மிடம் சிந்தித்து முடிவு செய்யும் கற்பனைச் சக்தி மிகவும் குறைவே. நமக்கு எதிர்காலத்தில் என்னென்ன தேவைப்படும் என்பதே நமக்குப் புரியாததாயிருக் கின்றது. எத்தனை இன்பங்கள் நம்மால் நுகரப்பட நம்மிடம் எத்தனை மறுக்க இயலாத 'அழைப்புகள்' வரும் என்பதும் நாம் அறியாததேயாகும். காரணம், எதிலும் உறுதியான எண்ணத் துணிபு என்பது நம்மிடம் இருப்பதில்லை. நாம் பலமற்ற மனிதப் பிராணிகளே. நாம் மாத முதலில் கிடைக்கும் ஊதியத்தினைப் பெற்று இன்னும் முப்பது நாள்கள் இருக்கின்றனவே என்று எண்ணுது செலவிடுகிறோம். ஒவ்வொரு வாரமும் புதிய புதிய உறுதிமொழிகளை எடுத்துக்கொள்கிறோம். அவ்வாறு எடுத்துக்

கொள்ளும்போதே, அந்த உறுதிமொழிகளினால் பெருந் தொல்லை களுக்கு நம்மை நாமே ஆட்படுத்திக்கொள்கிறோம். இவ்வுறுதி மொழிகளின் காரணமாக நமது விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்திசெய்ய இடையூறுகளில் சிக்கிக்கொள்கிறோம். மேலும், காலம் வரும்போது தேவைகள் நாம் எண்ணியதைவிட அதிக மாக இருக்கக் காண்கிறோம். இவ்விதம் நமது நம்பிக்கை இரு பெருங் குறைபாடுகளை உடையதாகிறது. அஃதாவது, நம் எதிர் கால வளம் வளர்வதாகவும், தேவைகள் குறைவனவாகவும் எண்ணி நமது பணம் எதிர்காலத்திற்கு உறுதியாக உதவும் என்று மனக்கோட்டை கட்டுகிறோம். அப்பணத்திற்கு அதிக மதிப்புக் கிடைக்கும் என்றும் எண்ணத் தூண்டப்படுகிறோம். ஆனால், காலம் வரும்போது நாம் எதிர்பார்த்ததைவிட ஐயகோ! பணத் தின் 'இறுதிநிலைப் பயன்பாடு' குறைந்து நம்மைத் தொல்லைக்கு ஆளாக்குகிறது. ஆனால், காலம் மற்றோர் உண்மையை உணர்த்தக் காத்திருக்கிறது என்பதை நாம் பின்பு உணருவோம். நம் வாழ்வுக் காலம் மிகவும் குறுகியது, நிலையற்றது என்ற உண்மைகள் ஒரு புறமிருப்பினும், 'எதிர்காலப் பொருள்களின் இறுதிநிலைப் பயன்பாடு மிகவும் குறைந்து, தொலைநோக்கில் தெரிந்தது போலவே நாம் காண' முயன்றாலும், எதிர்காலம் என்ற ஒன்றே நமக்கு இல்லாமலும் போய்விடலாம்!

பாம்பாவர்க்கினால் விளக்கப்படும் வட்டியின் ஆரம்பநிலை பற்றிய மூன்றாவது காரணம் சிறிது மாறுபட்ட நீண்ட 'சுற்று வழி முறைகளினால் மேற்கொள்ளப்படும் உற்பத்தியின்' சிறந்த தன்மையை மூன்றாவது காரணம் விளக்குகிறது. சரியான அறிவுக் கூர்மையோடு தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாளித்துவ முறை யினால் நேரடியான துணையற்ற உற்பத்தி முறையால் தயாரிப்பதை விட அதிகமாகத் தயாரிக்கலாம். நீண்ட கால அளவில் பெரிய முறையில் தயாரிக்கப்படும் உற்பத்தி முறை அதிகமான விளைவைத் தருவதால், எதிர்காலப் பண்டங்களையும் நிகழ்காலப் பண்டங் களையும் ஒப்பிட்டுப்பார்ப்பின், நிகழ்காலப் பொருள்களையே முதலாளி பெரிதும் மதிக்கிறார். இத்தகைய நிலையினால் சுற்றுவழி உற்பத்தி முறைகளையே முதலாளி கையாண்டு, எதிர்காலத்தில் அதிகமான உற்பத்தியைப் பெறமுடியும் என்று எண்ணுகிறார். இது பல விவாதங்களின் மையப் புள்ளியாக அமைந்துள்ளது. சுற்றுவழி உற்பத்தி முறைக் கோணத்திலிருந்து பார்த்தால், நிகழ் காலத் தயாரிப்புப் பொருள்களே தொழில்நுட்பம் வாய்ந்தது என்ற உண்மையினை உணர்ந்தாலே போதுமானது.

மென்ஜர், வொய்சர், பாம்பாவர்க் இம்மூவரும் சேர்ந்து ஆஸ்திரியப் பள்ளியின் நடுநாயகமாகத் திகழ்கின்ருர்கள். ஆனுல், நான்காவதாக இன்னுமொரு பொருளாதார வல்லுநரை முதல் மூவருடனும் சேர்த்துக்கொள்ள நாம் மறுக்க முடியாது. இன்றைய நாளில் நமக்குத் தெளிவாக விளங்குவது யாதெனில், ஆஸ்திரியக் கருத்துத் தனியொரு மனிதனுக்கு மட்டுமன்றி ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கும் மிகவும் இன்றியமையாதது என்பதே. மேலும், தனி மனிதரும் அரசாங்கமும் மிகவும் நெருக்க மாகச் சந்திக்கின்ற வரிவிதிப்புக் கட்டத்தில் மக்களால் அளிக்கப் பட்ட வரியானது அரசாங்கத்திற்கு 'இறுதிநிலைப் பயன் பாட்டையே' அளிக்கின்றது. 'அரசாங்கம் அவசரமற்றவை களுக்குப் பயன்படுத்தும் பணம், மக்களிடம் விட்டுவைக்கப் பட்டிருக்குமாயின், மேலும் நல்ல காரியங்களுக்குப் பயன் பட்டிருக்கும் என்பது மிகப் பழங்காலக் கருத்தாகும். பார்ப் பதற்குக் கவர்ச்சி தராத பழமை என்கிற ஆடையால் இவ்வுண்மை உடுத்தப்பட்டிருந்தாலும், மிகப் புதிய கால முறை களின்படி (வியன்னு அழகுப் பொருள்களையும் கொண்டு) ஒப்பனை செய்யத்தக்க மதிப்புடையது இவ்வுண்மையாகும். கேள்விக் குரிய இப்பிரச்சினையைப் போன்ற விவாதம் ஒன்றை எமில் சாக்சு (Emil Sax) என்பவர் தம்முடைய Grundlegung der Theoretischen Staatswirthschaft (1887) ஏட்டில் ஆராய்ந்துள்ளார். இவர் ஆஸ்திரியக் கருத்தினை அரசாங்கப் பொருளாதாரத்திற்குப் பயன்படுத்தி, அதிலிருந்து வரிவிதிப்புக் கோட்பாடு ஒன்றையும் உருவாக்கியுள்ளார்.

முடிவுரை

ஆஸ்திரியக் கருத்துப் பள்ளியின் தலைமையினர் இருபதாம் நூற்றாண்டு தொடங்கிய பின்னும் வாழ்ந்தவர்கள் என்றாலும், அவர்களுடைய அறிவுத்திறனின் வெளியீடுகள் 1870 முதல் 1889 வரையில் உள்ள ஆண்டுகளோடு முடிவு பெற்றுவிட்டன. அப்பொழுதிருந்துதான் பொருளாதாரம் பற்றி நிறைய புத்தகங்கள் உருவாகின. பூவுலகம் தோன்றி வளர்ந்த பல்லாயிரம் ஆண்டுகளில் எழுதப்பட்டதைவிட 1880-க்குப் பின்தான் அதிகமாக நூல்கள் வெளிவந்தன. ஆஸ்திரியப் பொருளாதார வாதிகளின் வாதத்திற்குத் திரையை இழுத்து மறைக்க முயற்சி செய்வது அளவுக்கு மீறிய கோழைத்தனமாகும். இத்தகைய கோழைத்தனமான காரியத்துக்காக வேண்டுகோளும் மன்னிப்பும் கேட்டுக்கொள்வது அவசியமானதாகத் தோன்றலாம். பாடப்புத்தகத்தோடு பயன்படத்தக்க முறையில் தயாரிக்கப்படும் ஒரு புத்தகம் தருவது வரலாறுயின், அவ்வரலாற்றின் காலத்தை இன்றிருக்கும் நிலவரை கொண்டுவராமல் நேற்றுக்கு முந்திய நாளோடு நிறுத்திவிடுவது அறிவுடைமையாகும். இன்றைய தினம் அல்லது நேற்றைய தினம் உருவான பொருளாதாரக் கோட்பாடுகளோ, அல்லது சாதாரணப் பாடப்புத்தகத்தில் எழுதியிருப்பதையோ வகுப்பறையில் சொல்லிக்கொடுத்தால் போதும்; அது பயனளிப்பதாகும். பொருளாதாரக் கோட்பாடுகளை இன்று நடைமுறையில் உள்ள பழக்கப்படி விற்பனைப் பொருளாக (நூலாக) உருவாக்கினாலும் அல்லது தொடர்ந்த விரிவுரைகளின் மூலம் விளக்கினாலும், விளக்கியது உடனுக்குடன் மாயமாகப் பேச்சோடு மறைந்துவிடுகிற முறையில் இருந்தாலும், அவை கடந்த இருபது முப்பது ஆண்டுகளில் ஒலித்த கருத்துகளைப் பிரதிபலிக்கக்கூடியவையாகவும் விளக்கக்கூடியவையாகவும் அமைதல் வேண்டும். வரலாற்றில் இடம் பெறுத

எழுத்தாளர்களை இந்நூலின் பிற்சேர்க்கையில் சேர்த்துக் கொள்ளலாம்.

இளைஞர்களைப் பொருளாதார வழியில் திருப்பிவிட்டவர் களான சமீப காலத்தில் வாழ்ந்த மார்ஷல், நிகல்சன் ஆகியோ ரையும், 'பிகு' 'கீன்ஸ்' 'ஹராட்ரி' 'ராபர்ட்சன்' முதலியவர்கள் போன்ற இக்காலத்தைச் சேர்ந்த பலரையும், ஷும்பீடர், பரடோ, காசல், ஜே. பி. கிளார்க், விக்சல், நாப் போன்றவர் களையும், இன்னும் பலரையும் மறந்துவிடாமல் இடம் இருக்கும் வரையில் சேர்த்துக்கொள்வது அறிஞர்களின் கடமையாகும். நுணுக்கமான விளக்கங்களைக் கேட்பவர்களையும் திருப்தி செய்யும் முறையில் புதிய பொருளாதார நிபுணர்களையும் சேர்த்துக் கொள்வது நல்லதாகும்.

இரண்டாவதாக, மற்றொரு கோணத்திலிருந்து அதே கருத்தை வலியுறுத்துவது போலத்தான், நாம் ஆஸ்திரியக் கருத்துப் பள்ளியினரைப்பற்றிக் கூறுவதும் நம்மைப் பற்றி நாமே கூறுவதை ஒக்கும். காட்டில் மிக உயர்ந்த மரம் எது என்பது நுணுக்கமாக எறும்புக்குத் தெரியும். அக்காட்டில்தான் அவ் வெறும்பு தன் பொருளாதாரப் பணியில் ஈடுபட்டுள்ளது. வலிவு மிக்கவர்களை அவர்கள் ஆசனத்திலிருந்து கீழே தள்ளிவிடுதலும், எளியவர்களை மேல்நிலைக்குக் கொண்டுவருதலும் காலம் செய்யும் கோலமாகும். யார் மிக அதிகமாகச் சத்தம் போட்டார் களோ அவர்கள் வெறும் ஒலிபெருக்கிகள்தாம் என்பது தெரிந்துவிடும். கடந்த தலைமுறையில் மிகுந்த அறிவாளிகள் யார் என்பது பற்றி நாம் மிக நுணுக்கமாக ஆராய்ந்து சொல்ல முடியும். எனினும், நம்முடைய வழிமுறையினர் அவர்களைப் பற்றி ஆராயின், அவர்களை அழியாத உலகத்திலே வைத்துப் போற்றமாட்டார்கள். அங்கு வர அவர்களுக்குத் தகுதியுள்ளது என்றே கூறுவார்கள்.

நம் நிலையினின்று தாழ்ந்து எல்லாவற்றையும் விளக்குவது என்பது இயலாத ஒன்றென்றாலும், ஆஸ்தியர்கள் காலத்திலிருந்து இன்றுவரை ஏற்பட்ட மாற்றங்களைத் தெரிந்து கொள்வதும், இந்த இடைநிலைத் தலைமுறையினர் காலத்தில் பொருளியல் தத்துவம் இருந்துவந்த நிலை குறித்து அறிந்துகொள்வதும் நன்றும். கடந்த ஐம்பது ஆண்டுக் காலத்தில் பொருளாதாரத் துறையில் பல்வேறு கருத்துகள் ஆதிக்கம் வகித்தன. இக்கருத்துகளெல்லாம் , இறுதிநிலை'க் கோட்பாட்டிலும் ஆஸ்திரிய நோக்கிலும் அடங் கியவைதாம். இந்நாட்டில் தலைசிறந்து விளங்கியவர் ஆல்பர்ட் மார்ஷல்தான் (1842-1924) என ஐயமறக் கூறலாம்.

ஆஸ்திரியக் கருத்துகளுக்கு உரிய இடத்தைத் தருவதில் முயற்சி எடுத்துக்கொண்ட நிபுணர் அவர். ஆனால், ஆஸ்திரிய அதிமேதாவித்தனத்தில் தம்மை அமிழ்த்துக்கொண்டவர் அவர். பழைய அரசியல் பொருளாதாரத்தையும், புதிய ஆஸ்திரியக் கருத்துகளையும் இணைத்துப் புதிய வழிகாட்டியவர் இவர்தாம். கடந்த தலைமுறையில் இறுதிநிலைக் கோட்பாடு பல உயர்ந்த கருத்துகளைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்தது. எனினும், துவக்க காலத்தில் தோன்றியதுபோல் ஆஸ்திரியக் கருத்துகளை விட்டுவிட்டால் பொருளாதாரத்தில் வேறு தாரக மந்திரமில்லை என்ற நிலை இப்போது பிறக்கவில்லை.

அவ்வாறு தனிச் சிந்தனையோடு வளர்ந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர் ஜே. பி. கிளார்க் ஆவர். 'இறுதி நிலை' பொருளாதாரத்தில் ஓர் உறுதியான இடம் பிடித்துவிட்டது. அதன் பெயரை மாற்றினாலும், அக்கருத்தை விரட்டிவிட முடியாது. மனித சமுதாய எண்ண வளர்ச்சியில் எதற்கெடுத்தாலும் இந்தக் கோட்பாட்டின்மீது விளக்கம் தரப்பட்டதுபோல் வேறு எந்தக் கருத்துக்கும் விளக்கம் தரப்படவில்லை. வரையறுக்கப்பட்ட அளிப்பும், வெவ்வேறு அளவு திருப்தியைத் தரும் தேவைகளும் இருக்கிற வரையில் அவசியத் தேவைகளை முதலில் திருப்தி செய்வதுதான் பொருளாதாரத்தின் குறிக்கோளாகும். திருப்தியையோ, காரியத்தையோ எங்கோ ஓர் இடத்தில் சேர்த்துக்கொள்ளும்போது, வேறேர் இடத்தில் ஒன்று விடப்படுவது இயற்கையாகும். எங்கே வெட்டினாலும் விழுமோ அங்கேதான் இறுதி நிலை இருக்கும். அதை எந்தப் பெயரில் அழைப்பினும் பொருந்தும். மேகமண்டலத்தில் ஊடுருவியிருக்கும் ஆஸ்திரியக் கருத்துக் கோபுரங்களின் எந்தப் பகுதியிலும் பொருளாதார நிபுணர்கள் நிலையாகத் தங்குதல் இயலாது. அவ்வாறு இளமையில் நினைத்தது தவறென்று இப்போது புரிகின்றது. கோபுரத்தின் உச்சியில் அமைந்திருக்கும் தங்குமிடங்களுக்கு ஏறிச்செல்வது என்பது தேகப்பயிற்சியுடையோர்க்குத்தாம் முடியும். வகையீட்டு நுண்கணித முறையில் கூறியுள்ளபடி நாம் பொருள்களை நுகர்கிறோமா என்பது வினவுக்குரியதே; நுகர்ச்சி அநேகமாகத் தொடர்பற்ற செயலாகவும் இருக்கலாம். குறைவுப் பயன்பாட்டு விதியைப் பொதுப்படையாக எல்லாவற்றிற்கும் கேள்வி முறையின்றி ஏற்றுக்கொள்ளுதலும் தவறும்.

வறுமையால் வாடிப்போன வயிறு பசி பசி என்று துடிக்கும் போது அடிப்படைத் திருப்திகளை அலட்சியம் செய்தல் கூடாது. பசி வந்திடப் பத்தும் பறந்துபோம். ஆகவே, பசி சம்பந்தப்பட்ட

நுகர்ச்சி தெவிட்டும் நிலைக்கு உச்ச நிறைவை அடைவதற்கு எத்தனை வழிவகைகள் உண்டோ, அவ்வாறே தீர்க்கப்பட வேண்டிய பசிக்குத் தேவையான பொருள்களும் பலவாம்.

ஏதோ நடுவிதியான மனோதத்துவ அடிப்படையில் அமைந்துள்ளதாலும், வேறு பல காரணங்களாலும் இறுதிநிலை பற்றித் திறனாய்வு கொண்டு சொல்வதிலும், அதன் தூய்மையான போக்கிலும் ஒன்றுக்கொன்று வேறுபாடு அதிகமாயுள்ளது. சாதாரணக் கண்ணோட்டத்தில் பார்த்தால், இக்கோட்பாட்டை மாற்றிடும்வகையில் முன்னேற்றம் எந்தக் கோணத்திலும் இல்லை. பொருளாதாரம் இன்று விசித்திர நிலையில் உள்ளது. இதன் பேராசிரியர்கள் சந்தேக உலகில் சஞ்சரிப்பவர்கள்; ஆனால், பொருளாதாரத்திடம் நம்பிக்கையற்றவர்கள் அல்லர். இனி கேம்பிரிட்ஜ் கருத்துப்பள்ளியினரின் நம்பிக்கையையோ, நம்பிக்கையற்ற நிலையையோ காட்டும் (மார்ஷலின் கொள்கையை) கருத்தைப் பார்ப்போம்.

'உடனடியாகப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய முடிவுபெற்ற தீர்வுகளை உடையது அல்ல பொருளாதாரம். அதை ஒரு முறை என்று சொல்லலாமேயன்றி ஒரு கோட்பாடு என்று சொல்லுவது பொருத்தமன்று. இது மூளையின் ஒரு கருவி; ஒரு சிந்தனைப் போக்கு. இதை உடையவன் சரியான முடிவுகளுக்கு வரமுடியும்.' பொருளாதாரம் கோட்பாடு அல்ல; ஒரு வழி முறை என்று கூறுவது முடிந்த உறுதியான உண்மையல்ல என்பதும் உண்மை என்ற உலகைக் கண்டுபிடிக்க அழைத்துச் செல்லும் ஓர் இயந்திர வண்டி என்று கூறுவதுமே பொருளாதார உண்மைகள் அடையமுடியாதன என்று எளிதாகக் கூறிவிடுதற்கு வசதி தரும். ஆகவே, ஹும்பீடர் கடந்த பத்து அல்லது இருபது ஆண்டுகளை நோக்கியிருக்கும் நிலையை விளக்கியுள்ளார்.

மிகச் சிறந்த பொருளாதார மேதைகளும் பல காலமாக உள்ள பிரச்சினைகளை ஆராய்வதைத் தடுக்கும் முறையிலும், இதற்கு மேலும் தூய்மைப்படுத்துவது இயலாது என்ற போக்கிலும் மிக முக்கிய வேலை முடிந்துவிட்டதென்று உள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றனர். 'இன்றைய நெருக்கடிநிலை' என்ற அதிகாரத்தில் ஹோமன் அவ்வாறே குறிப்பிடுகிறார்; முரண்பாடுகளினூல் கனப்படைந்து புதிய கால வாழ்வின் சிக்கல்களுக்கிடையில் கருத்தியலை மேலும் சீர்திருத்துவதில் பலனில்லை என்று பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு முன்பே தங்களைச் சுற்றியுள்ள வாழ்வுபற்றி நேரிடையாக ஆராய ஆரம்பித்தனர்.

இவ்வாறுதான் கருத்தியலுக்கு எதிரான எண்ணம் என்று தாங்களே தங்களை அமைத்துக்கொண்ட 'நிறுவனம்' அமெரிக்காவில் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. இதை ஹம்பீடர், கோட்பாட்டைக் கற்சிலையாக்கும் தீவினைப் பயன் என்று குறிப்பிட்டார். கோட்பாட்டைக் கட்டுப்பாட்டில் வைத்தாலும், அதன்பின் உண்மைகளையும் பிரச்சினைகளையும் அலசியே தீரவேண்டியிருக்கும். அதன்பின் திருட்டுத்தனமாகச் சில கோட்பாடுகளை அதற்கென விட்டுவிடவேண்டிவரும். ஆனால், அதை இங்கே விளக்கத் தேவையில்லை. சமீப காலத்தில் நிறுவனக் கருத்துடையோர் பொருளாதாரத்தில் ஐயுறுத்தத்தக்க இடத்தை ஆக்கிரமித்துள்ளனர். ஆனால், அவர்கள் இப்போது மறைந்துகொண்டு வருகிறார்கள். என்றாலும் அது சகிக்க முடியாததுதான்.

இவ்வாறு ஐயுறவு நிலையும், தீர்மானமின்மையும் இருப்பதன் காரணம் இக்காலம் சமுதாய நீதியாகவும், அரசியல் நீதியாகவும் மாற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கும் காலமாகும். மிகப் பழங்காலப் பொன்மொழிப்படி 'மனித சமுதாயம் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.' பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரசியல் பொருளாதாரம் எந்தச் சூழ்நிலையில் உருவாகியது என்பதை அறியவேண்டுமாயின், அது கடும்போட்டி நிறைந்த நிலையில் இருந்ததாகவும், தனிமனித சுயநலத்தின் கட்டுப்பாடற்ற செயலில் உருவாகியதாகவும் அனுமானிக்கலாம். நிலவிலிருந்து இன்னும் முழுதும் மறந்துபோய்விடாத போட்டி நிலையும், தலையிடாக்கொள்கையும் இன்றும் இருப்பினும், விக்டோரியர்கள் காலத்தில் அவை இருந்ததுபோல் இன்றிருக்கவில்லை. மனிதர்கள் தனித்தனியாகப் பிரிந்து வாழும் நிலை இனி இல்லை. அவர்கள் குழுக்களில் சேர்ந்து வாழவேண்டிய கட்டாயநிலை இன்று உருவாகிவிட்டது. ஒன்றுசேர்க்கவும் ஒழுங்கு படுத்தவும் உள்ள இன்றைய சமுதாயத்தின் சக்தி, பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து மாறுபட்ட ஒரு சமுதாயத்தைச் சிருஷ்டிக்கக் காரணமாகும். கூட்டுச் சமுதாய அமைப்புக்கும், தனியார் உரிமைக் கொடி பறக்கும் சமுதாயத்திற்கும் இடைநிலையான ஒரு சமுதாய அமைப்பில் நாம் வாழ்கிறோம். நாம் அறியாக் குறிக்கோள் ஒன்றினை நோக்கி எவ்வளவு வேகத்தில் எவ்வளவு தூரம் போவோம் என்பது தெரியாமல் போய்க்கொண்டிருக்கிறோம். இவ்வாறு காற்றெனக் கடிதில் பறந்து மறைந்திடும் பொருளாதாரக் கோட்பாட்டின்மீது அதை எட்டிப் பிடிக்க முடியாதவர்கள் அதிருப்தி கொண்டனர். பொருளாதாரக் கோட்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்த எடுகோள்கள் பல உண்மைக்கு மாறுபட்டு இருந்தமையின்,

அவை ஏற்புடைத்தாக அமையவில்லை. ஒரு காலத்தில் விளக்க வுரை என்று புகழப்பட்டது, பின்பு அது விளக்குவதற்கான முதல் முயற்சியின் ஆரம்பம் என உணரப்பட்டது. ஆர்வமும் துடிப்பும் உள்ளவர்கள் இந்தக் கோட்பாடுகளின் போலித்தன்மையை எதிர்த்து வாதாடினர்.

ஆயின், இற்றை நாள் பொருளாதார நிபுணர்கள் பொதுக் கருத்துக் கோட்பாடுகளின் தரம் பற்றி மிகமிகப் புகழத்தக்க வண்ணம் மிதவாதிகளாக இந்நாட்டிலாவது ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பொருட்படுத்தாது ஒதுக்கி விடுவதாயிருந்தால், இத்தகைய எண்ணமே-உண்மையை அது தேடித்தேடிக் காண வேண்டிய தெய்வ அணங்காயிருப்பினும்—அதைக் காண ஒரு தீவிர சக்தியினைத் தரும். அடக்கமுடியாத உண்மையானது மனத்திற்கு எட்டாது ஓடி ஒளியும் இறைத்தன்மை பொருந்தி யிருப்பினும், அதனை நாடும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டனர். குறிப்பிட்டுக் கூறுவோமானால் போர்க் காலங்களிலும், அமைதி யான காலத்து அவதிகளின்போதும் அனைவரின் கருத்தும் எண்ணங்களும் பொருளாதாரம் குறித்தே செலவிடப்படு கின்றன. இத்தகைய நெருக்கடி நிலைமைகளில் அவை பற்றித் தனிக் கட்டுரைகள் எழுதுவதும் பெரிதும் அவசியமாகிறது. சித்தாந்தங்களை அழகான நடையில் கம்பீரமாக எடுத்துரைப்ப தும், தெளிவான உண்மையின் அடையாளச் சின்னத்தை உணர்த்துவதும்[1] எதைப் போன்றதெனில், எவராலும் எளிதில் அடையமுடியாத நிலத்திலிருந்து வீசும் குன்று ஒளியினை ஒத்ததாகும். இவ்வாறு எல்லையற்ற தொகைதொகையான பிரச்சினைகள் பல எழுந்து அவையனைத்தும் ஆயப்பட்டவாறு உள்ளன. இத்தகையவற்றைப் பற்றி சமீப காலத்தில் செய்யப் படும் திறனாய்வு ரிகார்டோ தம் அறிவுத் தெளிவின் உச்ச கட் டத்திலிருந்தபோது பொருமையையே விளைத்திருக்க முடியும். அத்தகையவற்றை இங்கே குறிப்பிடலாம். பணம் பற்றிய முழுக் கோட்பாடுகளும், பல்வேறு நாடுகளுக்கிடையில் உள்ள பரிமாற்ற விகிதப் பிரச்சினையும், வங்கிக் கோட்பாடுகளும், நடைமுறையும், முக்கியமாகத் தள்ளுபடியில் (கழிவில்) ஏற்படும் மாற்றமும், அதன் விளைவும்-இவை அனைத்தும் வணிகச் சுழற்சியை எவ்வாறு பாதிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்தகாலத்தில் பணக்கருத்தியல் கோட்பாடு நிபுணர்களை அரிதாகவே கவர்ந்தது என்பதைத் திரு. கெயன்ஸ் (Keynes) மிக நல்ல முறையில் கூறி

[1] திறமையான வாதங்கள் நிறைந்த கட்டுரைகளைத் திரு. கெயன்சினுடைய 'மார்ஷலின் சுயசரிதை' 'Memorials of Alfred Marshall' என்னும் புத்தகத்தில் காணலாம். பக்கங்கள் 95–96.

யுள்ளார். இதுபற்றித் தொகை தொகையாக விவாதங்கள் உலகப் போரின் பின்விளைவுகளாக எழுதிக் குவிக்கப்பட்டதில், இந்நாட்டில் திரு. கெயன்ஸ், திரு. ஹாட்ரி (Hawdrey), திரு. இராபர்ட்சன் (Robertson) ஆகியவர்கள் மிக உன்னதமான இடத்தைப் பெற்றவர்கள் ஆவார்கள். இவர்களால் பொருளாதாரத்தில் ஆழ்ந்தாராயும் புதிய முறை துவங்கியது என்று ஆணித்தரமாகக் கூறலாம். ஆனால், கடந்த காலத்தை எண்ணும்போது, பெருமூச்சை அடக்க முடியாமற்போகும் ஓர் உணர்வு ஏற்படுகிறது. பொதுவாகக் கூறின், சென்ற காலத்தில் பொருளாதாரம் (ஒருசில நேரங்களில் தவிர) ஓய்ந்திருக்கும் மனிதனுக்கும் அறிவாளிக்கும் உரிய நூலாகவே இருந்துவந்தது. எவரும் ஸ்மித், மால்தஸ் நூல்களைப் படிக்கமுடியும். ஒவ்வொருவரும் மார்க்ஸைப் படிப்பவராகக் கருதப்பட்டார் (ஆண்டவன் அவ்வாறே அருளட்டும்). புத்திசாலிகள் கரேயின் நூலில் மூழ்கிச் சிரமப்பட்டனர் என்றால், ஐயத்திற்கிடமின்றி அதே காரணத்தினால் அறிவுத்திறன் வாய்க்கப் பெற்றவர்கள் சர் சார்லஸ் கிராண்டிசனைப் (Sir Charles Grandison) படித்து முடிவு காணமுடியாமல் திணறினர்கள். ஆனால், ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமைந்த பேராசிரியர் ராபின்ஸ் கூற்று இதுதான்: 'எதிர்காலப் பொருளாதாரம் ஒவ்வொருவருக்கும் புரியக்கூடிய அறிவுத் தொகுதியாக இருக்காது என்பதாகும். திரு. கெயன்ஸின் 'பணம்பற்றிய ஆராய்ச்சி' (Treatise on Money) அல்லது பேராசிரியர் பிகுவின் 'தொழிலக மாற்றங்கள்' (Industrial Fluctuations) ஆகிய இரண்டு புத்தகங்களை எடுத்துக்கொள்வோமாயின், அறிவுத் திறனும், புதியன காண விழையும் ஆவலும் இருந்தால் மட்டும் போதாது; இவற்றுக்குத் தம்மைத் தயார்செய்து கொள்வதும் துணையும் தேவைப்படுகின்றன என்பது விளங்கும். ஆயின், பண்டைக் காலத்தில் பொருளாதாரப் போக்குக் குறித்து உண்மை என்றும் பொய் என்றும் எதிர்வாதங்கள் நடந்துவந்தமையின் பொருளாதாரக் கருத்து வரலாற்றை ஆராய இயலாத சூழல் அக்காலம் இருந்தது. கட்டுப்பாடுகள் மிகுந்த இக் காலத்தில் பொருளாதாரம் ஒரு கோட்பாடு என்பதைவிட ஒரு முறை என்று சொல்லப்படுமானால், அது அறிவின் ஓர் ஆய்கருவி என்று கருதப்படுமானால், அது சிந்திப்பதற்கான ஒரு துறைநுணுக்கமாயின், உண்மையைக் கண்டு அதன்மீது இலக்குப் பார்த்து எறிய வேண்டுமென்று நம்முடைய மூதாதையர் அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையால் நினைத்ததை நாமும் ஏன் கொண்டொழுக வேண்டும் என்பதே வினாவாக எழுகிறது. உண்மையாதெனில், இத்தகைய நாட்களில் பொருளாதாரக் கருத்து வரலாற்றை அறிய முற்படுவதென்பது மிகப் பயனளிக்கக் கூடிய

தாகும். மூன்றாவது, முக்கியமான பொருளாதாரப் பள்ளி இல்லாதபோதும், கருத்தியல்விடை காணவேண்டிய நிலையிலும், உண்மை தேடவேண்டிய ஒன்றாகவும், பல்வேறு கருத்துகள் ஒன்றோடொன்று முரண்பட்டும், ஒன்றோடொன்று கலந்தும் மக்கள் கருத்து சமைக்கப்பட்டது.

சமீப காலத்தில் டாக்டர் ஹான்ஸ் ஹோனிகர் (Dr. Hans Honegger) என்பவர் மிகவும் துணிவுடன் ஒரு சிறந்த புத்தகம் எழுதி, இப்போதைய பொருளாதாரச் சிந்தனைக் கருத்துகளை, அதுவும் ஜெர்மனியில் கருதுகிறபடி[1] உயர்ந்த முறையில் வெளியிட்டுள்ளார். ஆனால், இவரது 'Gedankenstromungen' என்னும் புத்தகத்தில் சிந்தனை யென்னும் சிற்றாறு பெருக்கெடுத்துக் குழப்பமிகுதியால் கடுஞ்சுழலாக மாறிவிட்டது. தனித்தன்மை வாய்ந்த பொருளாதாரக் கருத்துப் பள்ளிகளைத் தவிர்த்து, இன்னும் உள்ள பல பள்ளிகளை இவர் குறிப்பிடுகின்றார். உதாரணமாக, 'Neoliberalismus' 'Neomerkantismus', 'Neosorialismus' 'Neo-romantik'—இவை ஒவ்வொன்றும் தனிச் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இந்நூற்றாண்டின் கடந்த கால்பகுதியை நோக்குவோமாயின், இந்நாட்டிலும் எண்ண ஓட்டத்தில் பெருக்கெடுத்தோடிய அருவிகளை வகைப்படுத்துவோமாயின், அதே பலன்தான் கிடைக்கும். இக்கோணத்திலிருந்து நிகழ்காலக் கொள்கைகளை ஆழ்ந்து அறியக் கடந்த காலத்தைப் பற்றிய தெளிந்த அறிவு மிகவும் அவசியமாகிறது. இங்குப் புதிய மெர்க்கன்டலிஸ்டுகளைக்கூட (neo-mercantilists) நாமும் பெற்றிருக்கின்றோம். அவ்வாறே புதிய கருத்தினர்களையும் பழைய முற்போக்காளர்களையும் நாம் இங்குக் காணலாம். இருபத்தோராவது நூற்றாண்டினை எண்ணிப் பெருமூச்செறிகிற புது முறை ஓவியப் பாணிப் பொருளாதார நிபுணர்கள் ஒரு பக்கமும், பதினெண்காம் நூற்றாண்டு திரும்ப வராதா என்று ஆசைகொள்ளும் இன்றைய (இடைக்கால நிலையை விரும்பும்) பொருளாதார நிபுணர்கள் மற்றொரு பக்கமும் காணலாம். வெவ்வேறு வகையுடைய தனித்தன்மை வாய்ந்த தனியார் விருந்துகளும் நம்மிடையில் உண்டு. கால்நடைக் கண்காட்சியிலும் விவசாயிகளின் விருந்துகளிலும் பிசியோகிரட்டுகளின் குரல் கேட்கிறது. இந்நிலத்தில் ஒரு முறை ஒரு கருத்து வெளியிடப்பட்டுவிட்டால், அது எப்போதும் முழுவதும் அழிந்துபோய்விடுவதில்லை. மாற்றங்களே இலட்சியமாக உள்ள இற்றை நாட்களில் நமது செவிகளில் நம்முடைய மறைந்த முன்னோர்களின் தணிந்த பேச்சுக் குரல் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

[1] Volkswirtschaftliche Systeme der Gegenwart.

மேலும் படிப்பதற்கான குறிப்புகள்

(இக்குறிப்பை எழுதுவதன் நோக்கம் ஒரு விரிந்த நூற்குறிப்பு என்று இது கருதப்படுவதற்காக அல்ல. மேலும், படிப்பதற்கு ஏதோ ஒரு யோசனையைச் சொல்வதுதான். இங்கே கொடுக்கப் பட்டுள்ள புத்தகங்கள் வாங்கக்கூடியனவாகவோ அன்றிக் குறைந்த அளவில் கிடைக்கக்கூடியனவாகவோ இருப்பவை தாம்.)

பொது :

பொது வரலாறுகளாக மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய புத்தகங்கள் இரண்டு :

(1) Haney, A History of Economic Thought (Macmillan)

(2) Gide and Rist, A History of Economic Doctrines.

முந்தியது ஆங்கிலத்தில் ஒரு விரிந்த வரலாற்றைத் தரும் தகுதி யுடையதாகும்; ஆனால், முழு நிறைவு பெறவேண்டும் என்ற நோக்கத்தினால் சிறிது பழுதுபட்டுள்ளது. பிந்தியது தர முள்ள பிரெஞ்சு மொழி நூலாகும். அது 'பிசியோக்கிரட்சு' முதற் கொண்டு பொருளாதாரச் சிந்தனை வளர்ந்ததைப் பகுதி பகுதி யாகத் தொடர்ச்சியுடன் சிறப்பாகத் தந்துள்ளது. மிக அருமை யான மொழிபெயர்ப்பு (ஆங்கிலத்தில்) கிடைக்கிறது (Harrap). தரமான நூற்களில் மூன்றாவது Ingram, A History of Political Economy (Black) என்ற இவ்வேட்டிற்கு இணையாக எதுவுமில்லை என்று தோன்றுகிறது. கடைசி அத்தியாயத்திற்குச் செல்லும் போது அது பெயர்களின் அட்டவணையாகக் காட்சி தருகின்றது. Price's Short History of Political Economy in England (Methuen) ஆங்கில அரசியல் பொருளாதாரத்தின் மிக முக்கிய மானவர்களையே குறிப்பிட்டு, வாழ்க்கைச் சரித்திரத்தையும் திறனாய்வையும் அதனுடன் ஒன்று சேர்த்துள்ளது. ஜெர்மானிய மொழி தெரிந்த ஒரு மாணவனுக்கு Oncken, Geschichte der Nationalokonomie (Hirschfeld) என்ற ஏடு ஸ்மித்திற்கு முந்திய காலத்துச் சிறந்த அறிவு மிக்க கருத்துகளையெல்லாம் தருகிறது. இது பிசியோக்ரட்சு பற்றியும், இடைக்காலம் குறித்தும் பெரிதும் விளக்கம் தந்துள்ளது.

சமீப காலத்திய புத்தகங்களில் ஐந்து குறிப்பிடத்தக்கன. சமீபத்தில் (1930) Spann, Die Haupttheorien der valks

wirthschaftslehre என்ற புத்தகம் Types of Economic Theory (Allen and Unwin) என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இப் புத்தகத்தில் விரும்பிப் படிக்கத்தக்க பகுதிகள் இருப்பினும், புதிய ரொமாண்டிக் கருத்துப் பள்ளித் தலைவரால் எழுதப்பட்டிருப்பதால், ஓரளவு ஒருசார்புப் போக்கும், ஆசிரியருடைய உளப்பாங்குக்குச் சம்பந்தமில்லாத் தெளிவற்ற கருத்துகளும் உடையனவாக இருக்கின்றது. Gonnard, Histoire des Doctrines Economiques (Librairie Valois). இதனுடைய முதல் இரண்டு பகுதி (தொகுதி) ஏடுகள் பிரெஞ்சு முறை விளக்கத்தின் அறிவுத் தெளிவுக்கும், சிறப்பு அமைப்பிற்கும் புகழத்தக்க உதாரணங்களாகும். எங்ஙனமாயினும், மூன்றுவது பகுதி குறைந்தது ஓர் ஆங்கில வாசகருக்கு அவ்வளவு மகிழ்ச்சி தருவதன்று: Mombert; Geschichte der, National okonomie (Fischer, Jena)- இது ஓரளவு கடின சிந்தனைக்குரியதாயினும் இரண்டு நன்மைகளை உடைத்தாய் இருக்கிறது. ஒழுங்குபடத் திட்டமிட்டு வரலாற்றை விளக்குவது ஒன்று, ஒவ்வொரு பிரிவிற்கும் முழுப் புத்தக அட்டவணை தந்திருப்பது மற்றொன்று. Suranyi-Unger, Philosop hie in der Volkswirtschaftslehre (Fischer, Jena, two volumes): இது அரசியல் பொருளாதாரத்தின் வரலாறு என்றே அல்லது தத்துவ வரலாறு என்றே பறைசாற்றிக் கொள்ளவில்லை. ஆனால், உண்மையில் அதன் தெளிந்த ஓட்டத்தில் பொருளாதாரக் கோட்பாட்டு வரலாற்றின் எல்லாக் கோணங்களையும் அறிவுத் திட்பத்தோடும் திறனான விளக்கத்தோடும் தருகிறது. மிகப் பெரிய விளக்கம் தந்திருக்கிற காரணத்தால், அது ஓய்ந்து இருப்பவர்களுக்கோ அன்றி ஆய்ந்து காணுபவர்களுக்கோ சொல்லப்படத் தக்கது. கடைசியாக 'Grundriss der Sozialokonomik (Mohr, Tubingen)', இந்த நூலின் முதல் பகுதியாக 'ஷும்பீடர்' எழுதியதாவது: Schumpeter, Epochen der Dogmen-und Methodengeschichte; இது புகழத்தக்க சுருக்கமாகும். ஓரளவு அறிவு வளத்தோடு அணுகுபவர்க்கே இதனுடைய முழு மதிப்பின் பயனும் கிடைக்குமென்று தோன்றுமாறு எழுதப்பட்டுள்ளது. பொதுவாகப் படிக்கவேண்டுமென்ற ஆவல் உடையவர்க்கு இது போதுமானதாகும். மேலும் மேலும் படிக்க விரும்பும் மாணவர் ஹனே எழுதியுள்ள ஏட்டில் பழைய பொதுப் புத்தகங்கள் பற்றிய விரிந்த அட்டவணையைக் காணலாம். Monroe, Early Economic Tought (Harvard University Press)) and Gemahling, Les Grands Economistes, (Sirey). இவற்றில் வழிகாட்டும் தலைமைப் பொருளாதார நிபுணர்களில் சிறப்புக்குரியவர்களைக் காணலாம். முந்தியவர் ஸ்மித்துக்கு முற்பட்டவர்களைப் பற்றியே எழுதியுள்ளார். Petite Bibliotheq Economique (published by Guillaumin).

இந்தப் பகுதிகளில் (தொகுதிகளில்) எழுதப்பட்டுள்ள ஒவ்வோர் ஆசிரியரைப் பற்றியும் ஒரு பொது முன்னுரையும், வெவ்வேறு விதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகங்களும் காணலாம். இவற்றின் பழைய புத்தகங்கள் எளிதாகக் கிடைக்கின்றன.

சிறப்பு :

விரிபொருள் அகப்படுத்த வல்லனவும், பொதுமை மிக்கனவுமான மேலுள்ள நூல்களுக்குத் தவிர, தனித்தனிப் பிரிவுகளுக்குப் பொறுத்துச் சில குறிப்பு நூல்களும் இதனுடன் (இவண்) சேர்க்கப்பட்டுள்ளதைக் காண்க.

பிரிவு I. Laistner: Greek Economics.

பிரிவு II. O' Brien: An Essay on Medieval Economic Teaching; Tawney: Religion and the Rise of Capitalism; Ashley: An Introduction to English Economic History and Theory.

ஜெர்மானிய மொழி அறிந்த செயின்ட் தாமஸ் அக்வினஸ் புத்தகத்தின் மொத்தத்தைக் கண்டு மிரளும் மாணவன் அரசியல் பொருளாதாரக் கருத்துகளையெல்லாம் கீழ்க்கண்ட புத்தகத்தில் வெளிவந்திருப்பதைக் காணலாம். Ausgewahlte Schriften zur Staatstund Wirtschaftslehre des Thomas von Aquino. இதைத் தேர்ந்து திரட்டியவர்: Schreyvogl. வரிசை: Herdflamme (Fischer, Jena).

பிரிவு III. 'மெர்க்கன்டலிஸ்டு' கோட்பாடு பற்றி எதிர் பார்ப்பதுபோல் தேர்ந்து கண்ட நூல்கள் அவ்வளவாக இல்லை. 'Mun' சமீப காலத்தில் இரண்டு முறை மீண்டும் அச்சடிக்கப் பெற்றுள்ளது. (Macmillan and Economic History Society Reprints) Monroe's Early Economic Thought என்ற ஏடு கீழ்க்கண்ட ஆசிரியர்களின் கருத்துகளை தேர்ந்தெடுத்துள்ளது: 'Mun-Serra and Hornick. 'மெர்க்கன்டைல் முறை' பற்றிய Schmoller, உடைய அத்தியாயம், மாக்மில்லனுடைய 'Economic Classics' என்னும் வரிசையில் பொருளாதார இயக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

பிரிவு IV. Higgs: The Physiocrats. 'குவஸ்னே' எழுதியவை முழுதும் ஓங்கன் (Oncken) பதிப்பித்துள்ளது.

பிரிவு V. மிகவும் சிறப்புக்குரியவரான 'ஆடம் ஸ்மித்'பற்றிக் கூடத் தனித்த ஆராய்ச்சி மிக்க நூல்கள் இல்லை. அவருடைய வாழ்க்கை வரலாறுக எழுதப்பட்ட நூல்கள் கீழ்க்கண்டவர்களால் எழுதப்பட்டனவாகும்: J. Rae, F. W. Hirst, R. B. Haldane and H. C. MacPherson. ஆடம் ஸ்மித்தின் தத்துவங்களைப் பற்றி அறியக் கீழ்க்கண்ட நூல்களில் குறிப்பிட்டுள்ள அதிகாரங்களைக் காணலாம்: Halevy : The Growth of Philosophic Radicalism, Bonar : Philosophy and Political Economy in some of their Historical Relations.

பிரிவு VI. 'மால்தஸ்' எழுதிய *Essay*, 'ரிகார்டோ' எழுதிய *Principles*. இவைகள் Everyman's Library என்ற பதிப்பகத்தில் கிடைக்கின்றன; 'ரிகார்டோவினீ' மற்ற முக்கியமான கட்டுரைகளை Gonner வெளியிட்டுள்ளார். 'மால்தஸ்' நூலின் முதல் பதிப்பை Royal Economic Society மறுபடியும் வெளியிட்டுள்ளது. Bonar : Malthus and his Work என்ற நூலையும் காணலாம்.

பிரிவுகள் VII, VIII, IX and X.

இந்த அதிகாரங்களில் எழுதப்பட்டுள்ள தலைப்புகள் பற்றித் தலைப்புக்குரியவர்கள் எழுதிய நூலைத் தவிர சிறப்புக்குரிய நூல்கள் குறிப்பிடத்தக்க முறையில் இல்லை. Rae : The Sociological Theory of Capital: இப்புத்தகம் புதிய முறையில் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. Mao-Lan Tuan : Simonde de Sismondi as an Economist. சிஸ்மாண்டி பற்றிய இந்நூல் சமீப காலத்தில் வெளியிடப்பெற்றதாகும். முல்லருடைய முக்கியமான நூல்கள் 'Herdflamme Series' வரிசையில் வெளியிடப்பட்டுள்ளன. பெயர் : Sammlung Sozialwissenschaftlicher Meister (இரண்டு வரிசை நூல்களும்-Fischer, Jena). List எழுதிய System of National Economy மொழிபெயர்ப்புக் கிடைக்கின்றது. Margaret Hirst : Life of Friedrich List. பாஸ்டியாட் முக்கியத்துவம் பற்றி மாறுபாடான கருத்துகள் இருப்பதால், அவர் நூல்கள் எளிதில் கிடைக்கின்றன. கரேயோ இரண்டாந்தரமான புத்தக அட்டவணைகளில் சில நேரங்களில் காணப்படுகிறார்.

பிரிவு XI. மார்க்ஸ் பற்றிய நூல்கள் கணக்கிலடங்கா. அவரது 'மூலதனம்' (Capital) தவிர மற்ற நூல்கள் கீழ்வருமாறு : Beer : The life and Teaching of Karl Marx; Salter: Karl Marx and Modern Socialism; Nicholson : The Revival of Marxism; Loria : Karl Marx ; Laski: Karl Marx ; Lindsay: Karl

Marx's Capital ; Bohm-Bawerk : Karl Marx and the Close of the System; வாழ்க்கைச் சரித்திரம் அறியக் கீழ்க்கண்ட நூல்களைப் பார்க்கவும்: Mehring (தரமான ஜெர்மானிய நூல்), Ruble (ஆங்கில மொழிபெயர்ப்புக் கிடைக்கிறது). சோஷலிசம் பற்றி எழுதப்பட்டுள்ள நூல்கள் வேறு வழியின்றி மார்க்ஸிசம் பற்றியே குறிக்கின்றன; அவைகள் : Skelton : An Analysis of Socialism ; Hearnshaw : A Survey of Socialism. இவற்றில் இரண்டாவது நூல் ஒரு சார்பு கோடாமை கொண்டிருக்குமாயின், மிகச் சிறந்த திறனாய்வு நூலாகத் திகழ்ந்திருக்கும்.

பிரிவு XII. ஆஸ்திரியக் கருத்துப் பள்ளிக் கோட்பாடுகளுக்கு இரண்டு முகவுரை நூல்கள் குறிப்பிடத்தக்கன ; Smart : An Introduction to the Theory of Value; Weinberger: Die Grenznutzenschule. மூல எழுத்தாளர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு உண்டு : Wieser: Natural Value and Social Economics; Bohm-Bawerk : Capital and Interest, and The Positive Theory of Capital. 'ஸ்பான்' (Spann) கூறுகிறபடி, மென்ஜர் (Menger) தம்முடைய கோட்பாடுகளில் பின் நம்பிக்கை இழந்துவிட்டதால், தம்முடைய நாட்களில், தம் நூல் மொழிபெயர்க்கப்படவோ, மறு முறை பதிப்பிக்கப்படவோ அனுமதிக்கவில்லை. 'கோஷன்' (Gossen) நூல்களை 'பெர்லின்' Prager ஸ்தாபனம் மறுமுறை வெளியிட்டது.

முடிவுரை (Epilogue). நடைமுறை காலத்துப் பொருளாதார இலக்கியத்தைப் பற்றிய விளக்கம் தர இரண்டு எழுத்தாளர்கள் தைரியமாக முன்வந்துள்ளார்கள் ; Honegger, Volkswirthschaftliche Systeme der Gegenwart; Suranyi-Unger, Die Entwicklung der Theoretischen Volksuirchaftslehre imersten Viertel des zo Jahrhunderts. இவ்வுலகத்தில் வெளியிடப்பட்ட எல்லாப் புத்தகங்களைவிட இந்நூல் கலைச்சொல் அகராதியாய் விளக்கம் தந்தது. Homan's Contemporary Economic Thought என்ற நூல் கீழ்க்கண்டவர்களைப் பற்றி மாத்திரம் விமர்சிக்கிறது : J. B. Clark, Veblen, Marshall, Hobson and W. C. Mitchell. 'கெயன்ஸ்' (Keynes) எழுதிய 'மார்ஷல்' பற்றிய புத்தகம் வாழ்க்கை வரலாற்றின் சுருக்கமாகும்: Memorials of Alfred Marshall. Tugwell பதிப்பித்த The Trend of Economics என்ற நூல் அமெரிக்க இளைய சமுதாயத்தின் கருத்தினைத் தெரிவிப்பதாகும்.

சொல்லடக்க அகராதி

அக்வினஸ், அர்ச். தாமஸ் 32, 43 தொடர்ந்து; 56; அடிமைத்தனம் பற்றிய கருத்து 35-6; தனியார் சொத்தின் கோட்பாடு 37-42; செல்வம் 41; வறுமை, 41; நியாய விலைக் கொள்கை 41-3, 51; கூலி 43; மிகு வட்டித் தொழில் 47-8 தொடர்ந்து, வாணிபம் 49, 50-2; வணிகர்கள் 51-2; தன்னிறைவுள்ள அரசு 52.

அடிமைத்தன்மை: அரிஸ்டாடில் 14; இடைக்கால மனப் போக்கு 34, 35.

அடிமைத்தொழில்: பிளினி 29.

அமெரிக்கா: வெள்ளிச் சுரங்கங்கள் கண்டுபிடிப்பு 32, 61;

அரசியற் பொருளாதாரம்: 3, 161; சொற்றொடர் 71; நிறுவியவர் 88; ஏழ்மை பற்றிய அறிவியல் 330; தொன்மைப் பொருளாதார மரபு 81, 240; எதிர் நடவடிக்கை 181 தொடர்ந்து; பின்னைய வளர்ச்சிகள் 258 தொடர்ந்து; பல்வேறு கருத்துகள், கயர்ன்ஸ் 278-82; ஜீவான்ஸ் 336; ரிகார்டோ, 163; சே, 259-60; சீனியர் 265 தொடர்ந்து.

அரசு: அரிஸ்டாடிலின் கொள்கை 14, 19-20, 211 பிளாட்டோவில் 5-6 தொடர்ந்து; 13; ஆடம் முல்லர் 210-2; 218; தனிநபர் 211-2.

ஆதிபத்திய உரிமை, கொள்கை பற்றி 58.

ஆஸ்திரியக் கருத்துப் பள்ளி, 325 தொடர்ந்து, முன்னோடிகள் 325, 340; தனித்து நிற்க வல்ல தகுவர்கள், 340; மதிப்பை அறிவதற்கான முக்கியக் கருத்துகள்.

இசைந்த பொருத்தம் 201, 252, 255-7.

இத்தாலிய மெர்க்கன்டலிசம், 81.

இடைக்கால துறவறமும் செல்வப் பெருக்கும் 64.

இடைக் காலத்துப் போர்கள் 57, 61.

இடைக்கால பொருளாதாரக் கோட்பாடு, 'இடைக்காலம்' என்ற தலைப்பைப்பார்க்கவும்.

இடைக்காலம்: 31; பொருளாதார போதனைகள் 31-ல் பல, நிலப்பிரபுத்துவம் 32-3; தரம் 42, 43; வாணிபம் 32; பணத்தின் பற்றுக்குறை 32; மாதாகோவில் 32-3, 37; நாட்டுப் பற்றற்ற சூழ்நிலை

32-3, 56, 58; சிறப்பிற் குரிய செல்வாக்கு 34-6; பொருளாதாரக் கேள்விகள், 37; நியாய விலை 37, 41-4; மிகு வட்டித் தொழில் 37, 44-9; நீதியின் நோக்கு 36-44; தொழிற் பகுப்பு 49, 50; நிலை மாறு காலம் 56-ல் பல, 64; அடிப்படை எண்ணம், 43; வர்த்தகம் பற்றிய கருத்து 51; மேலும், அக்வினஸ், ஓரேஸ்மே பார்க்கவும்.

இயற்கை விதி 89-91.

இரவலர்க்களித்தல் 35, 41.

இரு உலோக நாணய முறை, ஓரேஸ்மே 52-3.

இலாபமும், கூலியும்: ரிகார்டோ 176-7, 180.

இறக்குமதி வரிகள் 67.

இறக்குமதிகள் 65-7; வணிகக் கொடுப்பு நிலை 65-7.

உழைப்பு, தொழிற் பகுப்பு 49-51, 116, 191-2; முல்லர் 216-17, பிளேட்டோ 5-7, 8, 116; ரே 191-2; ஆடம் ஸ்மித் 116, 117-8; ஃசெனோபன் 23, 116; பிளேட்டோவும் ஆடம் ஸ்மித்தும் ஒப்பு உவமை காட்டப் பட்டது. 6-7; அமித உற்பத்தி; சிஸ்மாண்டி 198; இறுதிநிலை உற்பத்தித் திறன் 236; பயன் தரு, பயன் தரா உற்பத்தி; பிசியோகிராடிக் கொள்கை 102-ல் பல, 108; ஆடம் ஸ்மித் 128-9, 261, 262, 263.

உற்பத்தி அடக்கவிலை 282-3.

எக்லிஸியாஸ்டிக்ஸ் 19.

எரிக்ஸியாஸ் 24.

ஏங்கல்ஸ் 292, 301, 315, 321.

ஏற்றுமதி 66; வாணிபக் கொடுப்பு நிலை பற்றி 66-7.

ஒப்பந்தம்: ரோம் 29-30.

ஓரேஸ்மே, நிக்கோலஸ் 51-4; பணம் 53-4; நாணயத் தரக் குறைப்பு 53, 54-5;

ஓவன், இராபர்ட் 287.

ஃபாஸெட், பேராசிரியர் 278.

ஃபோரியர் 247, 287, 288.

கயர்ன்ஸ், ஜான் எலியட் 182, 278 அடிக்குறிப்பு; அரசியல்-பொருளாதாரத்தினுடைய வேலையும் அதன் எல்லையும் 279-282. பொருளாதார விதிகளின் இயல்பு 281; மதிப்பு, 282 அடிக்குறிப்பு; உற்பத்திச் செலவு 283. 'போட்டியிடாப் பிரிவுகள்' 278, 283, 284-5. திறமை பெற்ற உழைப்பாளிகளின் ஊதியம் 285.

கரே, ஹென்ரி சார்லஸ் 159, 160, 195, 240 அடிக்குறிப்பு, 365, 369; உழைப்பு மதிப்புக் கோட்பாடு, 195, 241-42, 252; நிலத்தின் முதல் பற்றி 242, 244, 256, 257; ரிகார்டியன் வாரக் கோட்பாட்டின் திருத்தக் கருத்து 242, 243-244; குறைந்து செல் விளைவு விதி 243, 244, 252; மால்தஸுக்குப் பதில் 243, 244, 246-9, 252; காப்புகள், சுதந்திரவணிகம் முதலியவற்றின் கருத்துகள் 246, 250-52, 261; வர்க்கத்திற்கும், வியாபாரத்திற்கு முள்ள வேறுபாடு-250; உற்பத்திகளும், விவசாயமும், 251; வட்டி இணக்கக் கொள்கை, 243, 246, 252. பாராட்டுடைய - 251-252; உயர்வுப் பள்ளியின் சோர்வு மனப்பான்மைக்கெதிரான அவருடைய மறு நடவடிக்கை-182, 252.

கட்டுப்பாட்டு வாணிபமும் சுதந்திர வாணிபமும் 132;

பாஸ்டியாட் 253, 254; கரே, 250-1 லிஸ்ட்; 227-230 ஆடம்ஸ்மித், 132.
கடற்படைச் சட்டங்கள்; 68-9, 139.
கடுவட்டித் தொழில் 26 புறக் கணிப்பு (தடை) பற்றி 37, 44-7; இடைக்காலக் கோட்பாடு 44-9, 53; சர்ச்சுகளின் போக்கும் நோக்கும் 45; கோட்பாட்டு வளர்ச்சி, 48-9; தடை (புறக்கணிப்பின்) வீழ்ச்சி, 49; அக்வினஸ் 47-8; மேலும் பல. அரிஸ்டாடில், 17, 20, 44, 45.
கற்பனை உலக சோஷலிஸ்டுகள் 286-7, 289, 324.
காசல் 330, 360.
காட்வின் 147, 148, 149, 152, 159.
காட்ஸ் 332.
கால்பெர்ட் 93.
கால்வின் 63, 302.
காலுமெல்லா, 28, 29.
கான்டிலேக்: மதிப்புக் கொள்கை 326-27.
கான்டர் செட், 147, 148, 149.
கிரேக்கம், தொன்மைப் பொருளாதார எண்ணம் குறித்து 4-24, 37; அறமும் அரசியலும் 4, 5, 12, 13.
விவசாயப் பொருளாதாரம் 5, 6; வேலை பற்றிய கருத்துகள் 4, 5, 36; கைவினை ஞர் 12, 19; குடியுரிமை 12, 19.
கிரேஷாம் நியதி, 53.
கிரோஸ், மார்க்ஸைப் பற்றிக் கூறியுள்ளது 322.
கிறித்துவ சமதர்ம வாதிகள் 14.
கிறித்துவ மதம் இடைக் காலத்தில் பயந்த மதிப்பின் மாறுதல்கள் 34, 35.
கிளார்க் ஜே. பி. 360.
கீன்ஸ் ஜே. எம். 360, 364, 365, 366, 371.
குடியேற்ற நாடுகளுக்கு எதிர்ப்புக்கள் 61.
குடும்ப நிதி யுதவி 155.
குவஸ்னே, பிரான்காயிஸ் 87, 103; பொருளாதாரம் பற்றி 88, 90, 91, 92; இயற்கை விதியின் நாட்டம் 88, 89, 91; தடையிலாவாணிபம் 92; ஆடம் ஸ்மித்தோடு உள்ள ஒருமித்த கருத்துகள் 89, 1010, 101; விவசாயம் 93, 94, 95, 99, 102; உற்பத்தியாகின்றவைகள் 99, 100; விவசாயம் தொழில் முறை வாணிபம் இவற்றினிடையே உள்ள தனித் தன்மைகள் 94-95, 96, 102; வாணிப வகுப்புகள் 94, 95, 96; நிகர உற்பத்தி 95, 98, 103; கைவினைஞர் ஒரு பொருள் பயன்தராத உற்பத்தித்தொழிலாளி 96, 7; பொருளாதாரப் பட்டியல் 98; மேலும் பல; தடையிலா வாணிபச் சார்புரை 100-101; பணமும் செல்வமும் 100; வர்த்தகக் கொடுப்பு நிலுபற்றி மேற்கண்ட சில ஊகங்கள் பற்றிய ஆய்வுரை 100, 101, 262; வரி விதிப்பு 102, 103; கடன்கள் 102, 103; கூலி 103; மார்க்கெட்டுகளின் கோட்பாடு 261-62.
குறைந்து செல் விளைவுக் கோட்பாடு, கரே 243, 244, 252; மில் 271-72, 275; சீனியர் 267; ஃஸெனேபன், 21.
கூட்டமைப்பு, உரிமை மறுப்பு-இதுபற்றி டர்காட் 107-8; கூட்டமைப்பாளர்கள் 287.
கூட்டுறவு 287.
'கூட்டுறவுக் குழு' 288, 289.

கூர்னே 104, 105, 106.
கூலி இரும்புச் சட்டம் பற்றி 124, 174, 175, 176.
குவஸ்னே 103-4.
துர்காட்டின் 105-6.
கூலி : குவஸ்னே 103.
ரிகார்டோ 107; மேலும் பல: ஆடம் ஸ்மித் 123; மேலும் பல : வான்துனன் 238.
திறமைமிக்க உழைப்புப்பற்றி கயர்ன்ஸ் 285.
கூலி நிதி ஒதுக்கீட்டுக் கொள்கைகள் 124, 275, 278.
கூலிப் பெருக்கக் கொள்கைகள் 124.
கேட்டோ 28, 29, 71.
கைத்தொழில்கள் 32.
கை விஞ்ஞர்கள் 11, 19, 25 அடிக்குறிப்பு.
கொடுங்கோன்மை 58.
கோனர்டு, பொருளாதாரக் கோட்பாடுகளின் வரலாறு 368; காட்டப்பட்டது அல்லது எடுத்தாளப்பட்டது 142, 178 அடிக்குறிப்பு; மார்க்ஸிற்கும் ரிகார்டோவிற்கும் உள்ள ஒப்புமை 163.
கோஷன், ஹெர்மன், ஹெயின்ரிச் 331-36, 338; குறைவு திருப்திக் கோட்பாடு 332-4, 350; மனிதசமுதாய செயல் தொடர்புச் சட்டங்கள் 332-3; இறுதி நிலைக்கோட்பாடு-331, 334, 336; இன்பத் துய்ப்புகளின் ஆய்வு 332, 333; மதிப்புக் கோட்பாடு 334; பண்டங்களின் தரப்பிரிவு 334-35; 'வேலை' பற்றிய் கோட்பாடு 335; பரிமாற்றம் 336.
சரக்கு, தொடர்பு மதிப்பும் பண்டமாற்று மதிப்பும் 118.
சிக்கனம் 129, 295; சிசிரோடி; ஆபிசிஸ் 25-6; விவசாயம் 94.
சிஸ்மாண்டி 182, 195-6 பல, தடையிலா வாணிபம் 197, 200, 201; கட்டுப்பாடில்லாப் போட்டி 198; மிகை உற்பத்தி 198-9, 205, 206; வினியோகக் கொள்கை 109; மனிதனுடைய நோக்கம் 200; புதிய கண்டு பிடிப்புகள் 202-3, 206; மக்கள் தொகை 203-5; பாராட்டுரை 206-7 சமதர்ம எழுத்தாளர்களின் மீது உண்டான செல்வாக்கு 206; குறிப்பிடப்பட்டது 157, 179, 276.
சீர்திருத்தம் 56, 57, 63.
சீனியர், நாசு வில்லியம் 182; 264 மேலும்; பல அரசியல் பொருளாதாரத்தின் நோக்கமும் வழிமுறையும் 265 மேலும் பல; பொதுவான கூற்றுகள் 266-7; உற்பத்தியில் மூலதனத்தின் செயல் 265, 268; துய்ப்புத் தவிர்ப்பு 268-9; கூலிக்கான நிதி ஒதுக்கீடு 275; குறிப்பிடப்பட்டது 272, 278, 280, 283.
சுயதேவைப் பூர்த்தி : மான்ட்க்ரீடியன் 72-3; வான் ஹார்னிக் 85.
சுயநலம் : ஆடம்ஸ்மித் 130.
சுரண்டல் : சுரண்டலினுடைய கோட்பாடுகள் 286.
செயின்ட் சைமன் : 286-7.
செர்ரா, அந்தோனியோ 82-4; விவசாயத்தோடு ஒப்பிடப்படும் தொழிற்சாலை பற்றிய கருத்து 82-3; பண ஏற்றுமதி பற்றி 83-4.
செல்வம் : 23-4, 62, 115-6; பொருள் குவிப்பு பற்றிய மாறுபட்ட எண்ணங்கள் 63-4, அக்வினஸ் 41-2; அரிஸ்டாடில் 16-7; 19-

20, 71; லாடர்டேல் 184-186; மான்ட்கீரீடியன் 74-5; பிசியோக்கிராட்டுகள் 116; ரே 190 மேலும் பல; ஆடம் ஸ்மித் 116, 129; ஃசெனேபன் 20-1, 22.

செனேகா 25, 26.

ஃசெனேபன் 20-23; குறுகிய நோக்கங் கொண்ட கலைகள் குறித்த இகழ்ச்சி 1920-அடிக்குறிப்பு 2; செல்வம் 20-21-22; விவசாயம் 21, 94; நிலமும் உழைப்பும் 21; குறைவுபடு வரவு பற்றிய விதி 21; அரசுத்துறை நீதி யியல் 22; தொழிற் பகுப்பு 23; வெள்ளிச் சுரங்கம் பற்றிய கருத்துகள் 22; சைரோப்பாடியா 23.

சே, ஜீன் பாப்டிஸ்ட் 113, 157, 182, 258-ல் பல; 326. ஆடம்ஸ் மித்தினுடைய விமர்சனம் 259; அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய விளக்கச் சிறப்புரை 259-260; மார்க்கெட்டுகளின் கோட்பாடு 260-61; அயல் நாட்டு வாணிபம் 262; மெய் யுணர்வுப் பொருள்கள் கோட் பாடுகள் 262; மதிப்புப்பற்றிய கருத்துகள் 263-4; தடை யிலா வாணிபம் 263 அடிக் குறிப்பு.

சைல்டு, ஜோஷியா 81.

சொத்து, தனியார், ரோம் 29, 30, 40; அக்வினஸ் 38-42 முழுதும்; அரிஸ்டாடில் 13-4, 39; முல்லர் 212-13;

சோஷலிஸ்டுகள் முன்னோயர் 270, 286.

சோஷலிஸ அரசுத்துறை 69, 287.

சோஷலிஸம் 286; அரசு 69, 287; கற்பனை உலகம் 286-7, 289, 324; அறிவியலான 289-90; 323-4; ரிகார் டோவினுடைய கோட்பாடு கள் 180, 296; உழைப்பில் விளைந்த உற்பத்திப் பொருள் கள் அனைத்தும்பற்றிய கோட் பாடு 123.

டர்காட், அனி-ராபர்ட் - ஜேக் யூஸ் 104-ல் பல; பொருளா தாரக் கோட்பாடுபற்றி 104, 105; எலோக்டி கோர்னே 104, 105, 105. தடை யிலா வாணிபம் 105, 105; விவசாயம் 105-6, 131; பிரதிபலிப்பு மற்றும் 704, 105, 106; கூலிபற்றிய இரும்புச்சட்டம் 105-6; ஜுரேன்டர்கள் அழிவிற் கான கட்டளைப் பட்டியல் 106-7; தொழில் (வேலை) சுதந்திரம் பற்றி 106-7.

டானி. ஆர். எச். குறிப்பிடப் பட்டது 49.

டிமேன் 'சோஷலிஸத்தின் மனோதத்துவம்' 323.

டுபாண்ட் 98, 99.

தங்க நாணயத் திட்டம் 178.

தங்கம்: பிளினி 27.

தனியுரிமைக் கொள்கை 93; 105-8 முழுதும். லிஸ்ட், 223; மால்தஸ் 155, 157; பிசியோகிரட்டுகள், 93, 107-8; ரிகார்டோ 177; ஆடம்ஸ்மித் 131-44; முழு தும் ஏற்றுக் கொள்ளாமை; 182; ரே 192-3; சிஸ்மாண்டி 196, 200, 201.

தனி நபர் உரிமை, ரோம் 30.

தனித்த வரி 108.

தாம்சன் 290.

துய்ப்புத் தவிர்ப்பு 268-9.

தூனன், வான்தூனன் பார்க் கவும்.

தேவை, தேவை நெகிழ்ச்சி 186-7.

தொழில் கூட்டுறவுகள் 199.

தோட்டங்கள் 69.

தோரன்டன் 278.
நாக்ஸ், ஜான் 302.
நாப் 360; பணக்கோட்பாடு 18.
நாட்டுக்கடனும், காப்பும் 229.
நாட்டுச் செல்வமும், தனியார் மூலதனமும் 194.
நிக்கல்ஸன் 359.
நியாயக் கூலி 44.
நியாய விலை 37, 42, 43, 44, 50-1.
நிலப்பிரபுத்துவம் 32-3; அதனுடைய வீழ்ச்சி 57.
நிலையான அரசு, கூலி 124, 125, 126.
நீதி முறை 6, 37, 41-2.
பகிர்வு: ரிகார்டோ 176-7. சிஸ்மாண்டி 199.
பகிர்வு, விதிகள்; மில் 272-73.
பணத்தாள் 133, 219.
பணம் 32, 42; மதிப்புகளின் அளவு 42; பொருளாதார வட்டி 48-50; அரிஸ்டாடில் 18-9, 20, 48; ஹியூம், 110-1, 133; நாப் 18; ஒரேஸ்மே 53; பிளினி 28; ஆடம்ஸ்மித் 123; ஏற்று மதிபற்றி மன் 79, 80, 83; செர்ரா 83-4; பணப்பரிமாணக் கோட்பாடு 61; ரிகார்டோ 178.
பண - மாற்று, 53.
பயன்பாட்டுக் கொள்கை 338-40, 361.
பர்க் 211, 222.
பர்ட்டோ, 360.
பாஸ்டியட், பிரடெரிக் 182, 253; தொடர்ச்சி 373; காப்பு முறை பற்றிய கருத்துகள் 254-255; சோஷலிசம் 254-255; அரசமைப்பின் வரைமுறை 254; தலையிடாக் கொள்கையினரின் போக்கு 255; இசைவின் தத்துவம் 252, 255-7; மதிப்பும் பயன்பாடும் 256; நிலவுடைமைப் பாதுகாப்புக் கொள்கை 257.
பிகு, பேராசிரியர் 359, 364.
பிசியோகிராட்டுகள் 20, 46, 79-99, 109, 126, 29, 55, 88-108, 119, 131; உழவு 29, 1-18, 99, 105, 108, 121, 131; தனியுரிமை வாணிபம் 93, 107-8; மும்மடங்கு வகை வகுப்புகள் 92-5; பொருட் பயன் தராத உழைப்புகளிடையேயுள்ள வேறுபாடு 97-8, 108, 128; அயல் நாட்டு வாணிபம்பற்றி 101-21, 41; தலையிடாவாணிபத்தின் பரிந்துரை 101, 102, 140; ஆடம் ஸ்மித்தின் முன்னறிவிப்பு 100; செல்வத்தின் மூலம் 121; வரம் 127, 168, 173; மதிப்புரைத்தல் பற்றி 107-8, 112; குறைபாடு 122; இலக்குரை 21; குவெஸ்னே, டர்காட் ஆகியவற்றின் கீழும் பார்க்கவும்.
பிசியோகிராட்டுகளின் சிந்தகனியும் அரிஸ்டாடிலின் முன்னறிவிப்பும் 16.
பிராட்டஸ்டன்டுகளின் தத்துவம் 63, 64.
பிரே 296.
பிளேட்டோ 5-13; 'குடியரசு' 5-ல் பல நியதிகள் 6, 11-3; அரசு 6-ல் பல, 10-2; தொழிற் பகுப்பு 6, 8-9; மார்க்கெட்டின் பரப்பு 9; பொதுவுடைமையில் 9-13, 284; பாதுகாப்பாளர் 9-10, 11.
பிளினி 25, 25; நாணயம் 26; அடிமைத் தொழிலாளர் 27; பண்ணையின் பரப்பு 25.
புதிய உலகம், விலை மதிப்

பில்லா உலோகங்கள் கண்டு பிடிப்பு 32, 59, 61.
புதிய குடியேற்ற நாடுகள்— 126.
புதியன கண்டு பிடிப்பு: ரே 191; சிஸ்மாண்டி 202-4, 207.
பீர் அவர்கள் 'காரல் மார்க் ஸின் வாழ்க்கையும் போதனை யும்' 321, 322, 371.
புரியாத புதிரான முடிவுகள் 14, 136, 137, 142, 152, 200-1.
பெரிய அளவு உற்பத்தி 207.
பெருமளவு உற்பத்தி முறை 198.
பென்தாம் 272, 332.
பெஸஸ் குவேட் எடுத்துக் காட்டப்பட்டது 271.
பைபிள் 34.
பொது உரிமை 29.
பொதுவுடைமை: பிளேட் டோ 9-13, 286; அரிஸ் டாடில் 13-5; அரிஸ்டோ பேன்ஸ் 24; கிறித்துவப் பாதிரியார்களுடையது.
பொருளாதார அறிவியல், அதன் இயல்பு 3.
பொருளாதாரக் கோட்பாடுகள் அதன் இயல்பு 23, 56.
'பொருளாதார மனிதன்' 303.
பொருளாதார நிலைப்பட்டியல் (டேபுலு அக்னமிக்) 98-ல் பல, 108.
போட்டி கட்டுப்பாடற்றது 198.
போடின், ஜீன், 68, 69.
போம்-பாவர்க், யூஜென் வான் 340, 349, 351-3; வட்டிபற்றிய கொள்கை 351, 352 3; 'இறுதிநிலை ஜோடிகள் மூலம்விலை நிருண யம்' 352; காரல் மார்க்ஸ் பற்றிய 306, 371.
மக்கள் தொகையும் மெர்க் கன்டலிசமும் 69, 84.
மால்தஸ் 146-153; மில் 275; சிஸ்மாண்டி 203-4.
மன், தாமஸ் 75-80; வாணிபக் கொடுப்பு நிலை 77; மெர்க் கன்டலிசத் திட்டம் 78-80; பண ஏற்றுமதி பற்றிய நோக்கங்கள் 80, 81-83; அவருடைய நாட்டு மக் களின் சோம்பேறித்தனத்திற் குக் கண்டனம் 80; கூறப் பட்டுள்ளது 82, 84.
மன்ரேவின் 'ஆரம்ப காலப் பொருளாதார எண்ணங்கள்' 82 அடி 370.
மறுப்புக்கு மறுப்பு 139, 229.
மறுமலர்ச்சி 56, 57, 63.
மார்க்கெட்டுப் பரப்பும் தொழிற் பகுப்பும் 9.
மார்க்கெட்டுகள் கோட்பாடு 260.
மார்க்ஸ் காரல் 286, 288-89; மேலும் பல; வாழ்க்கை யும் குணநலனும் 163, 291, 295-6, 320, 324; ஹீகலின் மீது கொண்ட செல் வாக்கு 295; தொன்மைப் பொருளாதாரத் துறையின ரோடு உறவு 296, 303-4; அறிவியல் சோஷலிசம் 289, 290-1, 323-4; ராட் பெர்டஸ் 290, 315; எழு திய ஏடுகள் 291; 'மூல தனம்' 292, 294-6, 298, 299, 304, 315, 316; கம்யூனிசப் பிரகடனம் 292, 294, 296-7, 300; அடிக் குறிப்பு 304; கோட்பாடு களின் சுருக்கம் 292-3; பொருள் முதல் வாதம் தழு விய வரலாறு 293, 297-9, 321; வகுப்புப் போராட் டம் 293, 295, 297-8, 299, 302-4, 320; பூர்ஷ் வாசியும், புரோலிடேரியட்டும்

298-9, 303; உழைப் பளவை மதிப்புக் கோட்பாடு 166, 168; அடிக்குறிப்பு 321, 180, 293, 296, 300, 304-16 முழுதும், 321; உபரி மதிப்புக் கொள்கை 293, 300, 309 பல, 321; பிரித்தெடுத்தல் 305; பயன் பாட்டின் கூறு 304, 307; திறன் பெற்ற, திறன் பெறுத தொழில் 308; நிலையான மூலதனம், நிலை யற்ற மூலதனம் 310-11, 314-16, 318; வட்டி பற்றிய விவாதங்கள் 313; நிர்வாகப் பணிகள் 313; தொழில் ரிசர்வ் படை 179, 293, 317-8, 319, 320; மூலதன திரட்சி விதி 294-5, 317, 318-19, 320; சுரண்டல் 299, 300, 304, 311; வரும்பொருள் உரைப்பின் தொகுப்பு 320-24; ஆதரித்து 322; மற்றப் படி குறிப்பிடப்பட்டது 23, 161, 163, 164, 165.

மார்க்கெட்டுகளினுடைய கோட்பாடு 260-62.

மார்ஷல், ஆல்பிரெட் 359, 360, 362, 370.

மால்தஸ், டேனியல்: 147; தாமஸ் ராபர்ட் 146-ல் மேலும் பல; மக்கள் தொகை பற்றிய கட்டுரை 147, 148-ல் மேலும் பல; மக்கள் தொகை பற்றி சுருக்கம் 149-50; சிஸ்மாண்டினு டன் ஒப்பு 203, 204 (அடிக் குறிப்பு) நீதி ஒழுக்கம் 149, 150, 151 (அடிக் குறிப்பு கள்), 152; ஆடம் ஸ்மித்தின் கோட்பாட்டிற்கு நிரப்புக் கூறு 151-2, 153; சோர்வு நிலையும், தோல்வி மனப் பான்மையும் 153; நடை முறைத் தீர்மானங்கள் 153-4; வறுமை பற்றிய கருத்து கள் 154, 156; ஏழ்மைச் சட்ட ஒழிப்பு 153; சுதந்திர வணிகம் 154, 156 வாரம்; 157-8, 160 (அடிக்குறிப்பு), 169-70; போற்றுதல் 154-7; சொல்லப்பட்டது 161, 163, 197, 270, 271, 272.

மால்துஸியக் கோட்பாடுகள்: 146, 167, 267; அடிப் படை எடுகோள் 156.

மான்சிரிடீன்: அண்டாயின்-டீ: 70-5; விவசாயம் 71; நாட்டுத் தன்னிறைவுக் கொள்கை 72-73; உழைப் பிழ் கோட்பாடு 71-2, 75; குருட்டுத்தனமான 72; நாட்டின் தனிமை 73-74; வர்த்தகத்தைப் பற்றிய நோக் கங்கள் 74-5; செல்வம் 74-5; சுருக்கம் 75.

மான்டி வில்லி: 119; இறுதி நிலைக் கோட்பாடு 325, 326 மேலும் பல; காஸனின் கருத்து 330, 334, 336; வியசர் 350.

மாஜினி (எடுத்தாளப்பட்டது) 323-4.

மிக்ஸ்டர் டாக்டர் 'மூலதனத் தின் சமுதாயக் கொள்கை' 190 அடி.

மில், ஜேம்ஸ்: 269 அடி 2, 271.

மில், ஜான் ஸ்டூவர்டு 182, 269-ல் பல அரசியல் பொரு ளாதாரத்தின் வளர்ச்சி, அளவு 269-71; 'அரசியல் பொருளாதாரக் கோட்பாடு கள், 'அரசியல் பொருளா தாரத்தின் கொள்கைகள்' 269, 270, 271; கொள் கைகளும் நடைமுறைகளும் 271, 272; அயல் நாட்டு வர்த்தகம் 271; உற்பத்திக் கோட்பாடுகளுக்கும் பங்கீட் டுக் கோட்பாடுகளுக்கும்

உள்ள வேறுபாடு 272; சோஷலிஸம் 273-4; உயிலும் வாரிசுரிமையும் 272 - 274; வளர்மீத வரி 274; மக்கள் தொகைப் பிரச்சினை 153, 275, 276; குறைந்துசெல் விளைவு விதி 275; மதிப்பின் விவாதம் 276; நிலையான அரசாங்கக்கொள்கை 276-7; கூலி நிதியின் கோட்பாடு 275-6, 278-9; ஆக்கச் செலவின் ஆராய்வு 282-3; உழைப்பு உற்பத்தித் திறன் எடுத்தாளப்பட்டது 129 அடி.; காப்புவிதி; கரேக்கு பதில் 251.

மீராபூ (பெரியவர்) 98-9, 147.

முதல் சர்வதேச (தொழிலாளர்) சங்கம் 289; அடிக்குறிப்பு.

முல்லர், ஆடம் 182, 209-ல் பல; 219, 220; அரசியல் பின்னணி 210-12; ஆடம் ஸ்மித்திற்கு எதிரான போக்கு 143, 210; நாடும் தனி மனிதனும் 210, 211-2, 218-9; நிலப்பிரபுத்துவம் 30, 212, 213; பணக் கோட்பாடு 218-9, 216-7; தனியார் சொத்து 212-3; தொழிற் பகுப்பு 216-7; இங்கிலாந்தைப்பற்றி 217-8; கொடுக்கப்பட்டுள்ளது 223, 231, 243.

மூரின் 'கற்பனை உலகம்' 286.

மெர்க்கன்டலிசம்: 56-ல் பல, 76-7, 81, 112, 115-6; மேற்போக்கான செய்திகள் 64-ல் பல; ஒரு சார்புக் குணநலன் 84; நடைமுறையில் வேரூன்றியது 65-71; அடிப்படைகள் 65-7; அரசு உருவாக்கியது 60; வாணிபக் கொடுக்கல் நிலை 66, 67, 115.6; அரசாங்க அலுவல்கள் 68-69; மக்கள் தொகை 69; தங்கக் கட்டி பற்றி 65-6, 77; பாராட்டும் விமர்சனமும் 69-71, 112; நான்கு சிறந்த மெர்க்கன்டலிசக் கொள்கையினர் 70 பல; விலகிப் போதல் 81; எதிர்த்து 93.

மெக்கிய வல்லி 58,59.

மென்ஜர், கார்ல் 334, 340-50,359,370; கிரண்சாட்ஸ் 337, 330, 'பண்டங்க'ளின் வகைகள் 341-2; பொருளியல் சார்புடைப் பண்டங்கள் பொருளியல் சார்பிலாப் பண்டங்கள் 343-4; மதிப்புக் கோட்பாடு 344-9, 341; பரிமாற்றம் 349, கூறப்பட்டுள்ளது 343, 345.

முதலாளித்துவம் 63.

மூலதனம், மூலதனத்தின் குறைந்துசெல் செயல், 236-7.

மொசாயிக் விதி 2, 2.

ரபிலியாஸ் 63.

ராபர்ட்ஸன் 360, 364.

ராபின்ஸ், பேராசிரியர் 364.

ரிகார்டோ, டேவிட் 161-ல் பல; 'அரசியல் பொருளாதார உள் நெறிகள்' 162, 164; கருத்தியற் காரண விளக்கம் 162, 233; அரசியல் பொருளாதார முக்கியத்துவம்பற்றி 163; உழைப்பு முதல் மதிப்புக் கோட்பாடு 164-171, 170, 173, 178, 263, 264, 296, 304, 310; அடிப்படைக் குறைபாடு 165, 170; வாரக் கோட்பாடு127, 157, 160; கீழ்க் குறிப்பு 168, 173, 180, 235; கூலி 173, 177, 296; வினியோகம் 164, 176, 182; இலாபமும் கூலியும் 176, 182, 180; தடையிலா வாணிபம் 177; நாணயப் பிரச்சினைகள் 3, 178; அவர் கோட்பாடுகளை

இழித்துரைத்தலும், தவருன மேற்கோள் காட்டுதலும் 164, 180, 296; பாராட்டுரை 178, 186; கரேயின் விமர்சனம் 243-4; எடுத்தாளப்பட்டது. 98, 237, 259, 260, 263, 270, 271.

ரே, ஜான் 182, 183, 190-ல் பல. 270; புதிய கண்டுபிடிப்புகள் 191; தொழிற்பகுப்பு 191; தடையிலா வாணிப மறுப்பு 192-3; தேசிய செல்வமும் தனியார் முதலும் 190, 191, 192, 194.

ருக்லி 324.

ரூஸோ 28.

ரோட் பெட்டஸ்; 290, 315.

ரோமான்டிக் இயக்கம் 210. (புத்துணர்வு இயக்கம்)

ரோமானிய விதி, 29, 29.

ரோம் புராதனப் பொருளாதாரக் கொள்கையில் அதன் பங்கு 24-30; விவசாயம் பற்றிய எழுத்தாளர்கள் 28-9; ஜுரிகள் 29; 'ஜஸ்ட் ஜென்டியம்' 30.

ரோஷர், 24, 53, 238.

லாஞ்சு 278.

லாடர்டேல் (ஜேம்ஸ், மேட்லண்ட்) உடைய கோமகன் 182, 183; மேலும் பல 190, 214, 270; பொது மக்களின் செல்வமும் தனியார் செல்வமும் 184-5, 189; மதிப்பு 184, 186,-7; செல்வம் பெருக்குதலில் மூல தனத்தின் வேலை 187, 8; கையிறுக்கத் தன்மையின் கொள்கை 129, 188, 214.

லாஸ்கி 'கார்ல் மார்க்ஸ்' 321, 371.

லாஸல் 174, 290.

லாயிடு, டபிள்யூ, எப். 327; பயன்பாடும் மதிப்பும் 327.

லிஸ்ட் பிரடரிக் 182, 195; 220 மேலும் பல; 'அரசியல் பொருளாதாரத் தேசியத்திட்டம்' 221: மதிப்புக் கோட்பாடும் உற்பத்தித்திறன் கோட்பாடும் ஒப்பிட்டுப் பார்த்து 222; சுதந்திர வணிகம் 224; விவசாயமும் உற்பத்தியும் 225-6, 25, 26; தேசீய முன்னேற்றம் 227-8; காப்பு விதிகளுடைய நோக்கு 227-230. தடையிலா வாணிபம் 227-8; 230; சிறுமாகாணங்கள் 228-9; பழிக்குப்பழி 229; அகில ஜெர்மானியக் கொள்கை 230; முரண்பாட்டில் 229-30. உலக ஒப்புரவாண்மையின் தத்துவம் 230; சொல்லப்பட்டுள்ளது 144, 231, 250.

லெனின் 161, 302;

லோரியா, 'கார்ல் மார்க்ஸ்' 315, 316, 371.

வணிக சுதந்திரம், 93, 132, 26; இயற்கை வாதிகளின் 100 - 101; ஆடம் ஸ்மித் 132; லிஸ்ட் 226-7, 230; கரே 250-51.

வணிகர்கள் 51, 52.

வணிக சங்கங்கள் 32.

வர்த்தகக் கூட்டுக் குழு 69.

வட்டி 47 - 9; ஆடம் ஸ்மித் 125, 127; துர்கோ 106. போம்-பாவர்க் 351, 355-58.

வர்த்தகம், சமநிலைக்கோட்பாடு பற்றி 66, 67, 70; தொடர் விளைவுகள் பற்றி 67; மன் 77; குழந்தை 81.

வரி விதிப்பு, 61, 62; குவெஸ்னே 102, 103;

வருவாய் 61, 62.

வளங்கள் அல்லது சன்மானம் 61, 62.

வாட்லி, ஆர்ச் பிஷப் (எடுத்தாளப்பட்டது) 325-6.

வறுமை, அக்வினஸ் 41; மால்தஸ், 154, 156; பிளேட்டோ 11.
வாரம்: கரே 243, 245; மால்தஸ் 157, 160-ம் அடிக்குறிப்பும் 168; பிஸியோக்கிராட்டுகள் (நிகரஉற்பத்தி) 95, 98, 108, 127, 168, 173; ஆடம் ஸ்மித், 121, 127, 168; வான் துனன்; 234, மற்றையன ரிகார்டோவிலும் பார்க்க.
வாரிசுரிமை: 286.
வாரோ 28.
வால்ரஸ், அகஸ்ட் 325-6; விலை மதிப்பின் ஆய்வுரை 328-31, 336; அடிக்குறிப்பு 4-344; லியோன் 325, 328; கீழ், 336; கீழ் 4, 340-41.
வான்துனன்: ஜான்ஹென்ரிக் 182, 349; தேசீயத்தின் தேவைகள் 231; தனிப்படுத்தப்பட்ட அரசு 231-2; கருத்தியலான முறை 233; வாரத்தைப் பற்றிய சாரம் 234 - 236; வாரத்தின்மீது வரி 235-236; எல்லைக் கோட்டுக்கருத்துப்பள்ளியின் எதிர்நோக்கு 236 - 237; (மேலும் அடிக்குறிப்பு) உழைப்பின் எல்லைக்கோட்டு உற்பத்தி 236; மூலதனத்தின் குறைந்துசெல் ஆக்கம் 236-237; கூலிபற்றிய கொள்கை 246; உழைப்பாளியின் நிலைபற்றி 238-239.
வான்வைசர், வைசர் பார்க்கவும்.
வான்ஹார்னிக், பிலிப், டபிள்யூ. 84 - 86; மெர்க்கன்டலிசத்தின் நடைமுறைத் திட்டம் 84; சுய - தேவைப் பூர்த்தி முறையின் இலட்சியம் 85.
விக்சல், 360.
விப்ளன், தோரஸ்டின் 196-6, 371.
விலை மதிப்பு: அரிஸ்டாடில் 20; பாஸ்டியட் 256-7; கயர்ன்ஸ் 282; (மேலும் பல) கரே 194, 241-2. 251-2; கேரஷன் 334, 335; ஜீவான்ஸ் 338; லாடர்டேல் 184 மேலும் பல; டபிள்யூ. எப். லாய்டு 327; மார்க்ஸ் 304, மேலும் பல; மென்ஜர் 344, மேலும் பல மில் 276; ரிகார்டோ 164, மேலும் பல; சே 271, 264; ஆடம் ஸ்மித் 113, 127-32, 302.
வேலை: கிறித்துவ உட்கருத்து 35; இடைக்காலக் கருத்து 35; பயன்படாத் தன்மையாக 335.
வேளாண்மை: பண்டைய கிரீஸ் 4-2, 21, 92-3; பண்டைய ரோம் 24-5, 27 - 8; மெர்க்கன்டலிசக் கொள்கை 67; மெர்க்கன்டியன் 71; ஆடம் ஸ்மித் 131; மேலும் தொழிற்சாலையோடு ஒப்புமை காட்டப்பட்டது; சிரா 82; இயற்கைவாதிகள் குவெஸ்னே, துர்கோ ஆகியனவும் பார்க்கவும்.
வைசர், பிரடரிக் வான் 334, 335, 340-1, 349, 350-2, 355, 357; எல்லைக் கோட்டுப் பயன்பாடு 350; சூரக்னெங் (இயல்தன்மை) 335, 350.
ஜுடாயிசம் 34.
ஜெர்மனியின் இலட்சியக் கருத்துப் பள்ளியும் ஆடம் ஸ்மித்தும் 128.
ஜெர்மானிய வர்த்தக முறை 84.
ஜெவான்ஸ், வில்லியம், ஸ்டான்லி 325, 336-40; 'அரசியல் பொருளாதாரக் கோட்பாடு' 337; பயன்பாட்டு மதிப்புக் கோட்பாடு 337 - 9; உழைப்பளவை

மதிப்புக் கோட்பாட்டின் திறனாய்வு 340; குறிப்பிடப் பட்டது 282.

ஸ்கோமோலர் 59, 370.

ஸ்பான், டாக்டர் 143, 144; அடிக்குறிப்பு 209, 230, 233 அடி.

ஸ்மித், ஆடம் 5, 112, மேலும் பல 183; குவெஸ்னேயிடம் உள்ள ஒத்த தன்மைகள் 89, 100; பிசியோக்கிராட்டுகளுக்கு நம்முடைய கடப்பாடு 109, 112, 114, 131, 141; படிக்கப்பட்ட கூறுகள் பற்றி 114; பொது நோக்கம் 114-5; சமுதாயத்தினுடைய கருத்து 117, 118, 143; நாடுகளின் செல்வம் 5, 112-3, 114, 116; மேலும் பல 144, 145; செல்வத்தினுடைய உழைப்பு மூலம் 116, 143; விவசாய-வணிக முன்னேற்றத்திற்கான நோக்கு 116; தொழிற் பகுப்பு 56, 7-9, 116, 117-8, 217; மார்க்கெட்டின் பரப்பு 117; மதிப்பீட்டுக் கொள்கை 113, 118-22, 296; பணத்தின் மூலம் 118; உபயோகத்தினால் ஏற்படும் மதிப்பு 118-9; பரிமாற்று விலை மதிப்பு 118-9; வாரம் 121, 127, 168; கூலி 123-5; கூட்டுகள் 123-4; கூலியும் மக்கள் தொகையும் 124-5, 146; இலாபம் 125-6, 127; கூலியும் இலாபமும் 121 125-6; கூலி வேறுபாடுகள் 126; வட்டி 125-127; மூலதனம் 121, 127-8, பொருள் உற்பத்திதரும்-பொருள் உற்பத்தி தராத் தொழில் 128-9, 262, 263; சிக்கனம் செல்வச் சேர்ப்பின் அடிப்படையாக 129; சுயநலம் 130; பல்வேறு தொழில்களிடையே மூலதன வினியோகம் 130-1, 135; விவசாயம் 131, 142; தடையிலா வாணிபம் 131, 132; 136, 137, 143, 151-2; நன்னம்பிக்கையால் 153, 177; மறைந்துள்ள கை விஷ பற்றிய கொள்கை 13, 136, 137, 142, 153; சுதந்திர வாணிபமும் பாதுகாப்பும் 132, 135-9 143; பொன்னும் வெள்ளியும் வியாபாரப் பண்டங்களாக 132-5; அயல் நாட்டு வாணிபம் 134; சுதந்திர வாணிபத்திலுள்ள விதி விலக்குகள் 138-9; மெர்க்கன்டலிசம் பற்றிய கருத்துரைகள் 66, 68, 109-20, 132-133, 135, 140, 141, 142; வர்த்தகச் சமநிலை பற்றி 140-41; பிசியோ கிராட்டு அமைப்பு பற்றி 107 132, 141; பாராட்டுரை 143-4; விமர்சனம் 143, 182; மேலும் பல; ஐரோப்பியக் கண்டத்தில் உருவான தவருன எண்ணங்கள் 116, 143; மற்றப்படி குறிப்பிடப்பட்டுள்ளது 29, 55, 79, 111, 161, 261, 262, 271, 330.

ஸாக்ஸ், எமில் 340-1, 358.

ஷும்பீட்டர் 360, 362, 363, 369.

ஹட்சிசன் 114.

ஹம்முரபியின் விதித் தொகுப்பு பற்றி-2.

ஹாட்ரி, ஆர். ஜி 360, 365.

ஹியூம் டேவிட் 109-12, 112, 140, 260; பணம் 101-1, 143, மெர்க்கன்டலிச கருத்துகளின் திறனாய்வு 110-1.

ஹிஸ்டு பிராண்ட் 144.

ஹூகல், மார்க்சின் மீதுள்ள செல்வாக்கு 295.

ஹெசாய்டு 5.
ஹோமன் ஒரே காலப் பொருளாதார எண்ணங்கள் 371.
'ஹோர்ன்சோஷலிச மதிப்பீடு' 371; எடுத்தாளப்பட்டது 226; அடிக்குறிப்பு 4.
ஹோரனிகர், டாக்டர் ஹான்ஸ் 366, 370.
ஹாட்ஸ்கின் 290.
ஹர்சினிக், பி லிப், டபிள்யு. வோன் 84-6; மெர்க்கன்டலிச வேலைத்திட்டம் 84; தன்னிறைவின் இலட்சியம் 85-86.